தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு—2

# சரபேந்திரர் வைத்திய முறைகள்

## ( குன்ம ரோக சிகிச்சை )

பதிப்பாசிரியர்கள் :

ஸ்ரீ K. வாஸுதேவ சாஸ்திரி B. A.,

ஆராய்ச்சி ஆசிரியர், ஸரஸ்வதிமஹால்

Dr. S. வெங்கட்டராஜன், L. I. M. (Regd.)

ஆயுர்வேத பண்டிதர், ஸரஸ்வதி மஹால்

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக

கௌரவ காரியதரிசி

ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L.,

அவர்களால் வெளியிடப்பட்டது

பதிப்பகம் :

டொன் போஸ்கோ அச்சுக்கூடம், தஞ்சை.

1949

விலை: சாதா பைண்டு ரூ. 3—8—0

முழு காலிகோ ரூ. 4—0—0

# Introduction

Maharaja Serfoji who reigned in Tanjore from 1798 to 1832 is justly famous as a scholar-king. The Saraswati Mahal, with its multitudinous manuscripts and printed works on a wide variety of subjects, in a variety of languages, is a lasting tribute to his many-sided intellect and encyclopœdic knowledge. But the scholarship of Serfoji was not merely bookish. It assumed various practical forms. One of the far-reaching consequences of his in-exhaustible curiosity and research was the establishment of an institution in Tanjore, called the 'Dhanvantari Mahal.' In it, he had assembled distinguished physicians who pooled their knowledge and recorded their research in the shape of invaluable prescriptions. They carried on research by a comparative study of cures in various systems of medicine, and the result of their collaboration was recorded in the shape of these prescriptions.

Raja Serfoji was not content to set down the prescriptions as such. His ambition was to render the prescriptions capable of being easily memorised, according to the practice of his times. Consequently, he had these recipes composed in easy verses in Tamil. We have today, in the Saraswati Mahal, 18 volumes of these prescriptions. They are all palm-leaf manuscripts in Tamil, each containing a collection of prescriptions for individual and allied diseases.

In the present volume, we have edited and published one of these manuscripts dealing with all

kinds of stomach ailments. It is called in Tamil, 'Sarabendirar Gunma Chikichchai Muraigal' or 'Serfoji's treatment of stomach ailments.' The subjects covered by the other manuscripts in the series are as follows:—

(1) Treatment of the Eye (2) Ear, nose, throat and head diseases (3) Diseases of the lung (4) Diabetes. (5) Rheumatism, Paralysis, Lumbago, etc. (6) Maternity and Children's treatment. (7) Diseases resulting from fevers. (8) Treatment for fevers. (9) Anæmia. (10) Piles. (11) Leprosy (12) Venereal diseases. (13) Itches, ulcers, boils, etc. (14) Delirium. (15) Treatment of Poisons. (16) Purgatives, and treatment of Diarrhoea, & (17) Wounds, Injuries, cancers etc.

Besides the present work on stomach ailments, we have edited and made ready for publication the manuscripts on Eye-treatment, Maternity and Children's treatment, and Diabetes. We are also working on the other manuscripts. In editing these manuscripts we have had the invaluable expert assistance of Ayurvedic Doctors. The Manuscript on 'Eye-Diseases' has been edited by the ripe old Eye-doctor, Mr. T. S. Amirthalingam pillai, who has now been appointed Professor of Ophthalmology in the Government College of Indian Medicine, Madras.

It may be stated that all these prescriptions have been in use ever since the days of Raja Serfoji. Both contemporary records and subsequent accounts

speak of these cures as widely current. In fact, these prescriptions are called "அனுபோக வைத்திய முறைகள்" (recipes tested by experience). Even today, in many families in Tanjore, these prescriptions are used, and members of the Royal Family in Tanjore possess many of the medicines prepared in Dhanvantari Mahal by a special process called 'kattu' (கட்டு), by which the potency of the medicine is conserved for a long period of years. These special medicines in the shape of pills still have on them, the original seals indicative of the name of the medicines.

In the work on hand, we have given the verses of each recipe as we find them in the manuscript and also an analysis of the ingredients to enable practitioners to follow the verses easily. We have appended three appendices, one describing the properties of each drug referred to in the recipes, another on the methods of curing drugs, and the third, a glossary of the names of the drugs with their corresponding equivalents in Sanskrit, Telugu, Hindi, Latin and English. On studying the reaction to this publication, we propose to add, to further editions of this volume, English, Telugu, and Hindi translations of the prescriptions. These translations may become necessary, as the recipes will find favour not only in the Tamil-Nad, but in other parts of India as well, especially as the drugs are available and used all over India.

The Preface to this volume, written by our Research Pandit, Sri K. Vasudeva Sastrigal, with the assistance of Dr. S. Venkatarajan, L. I. M., contains a lucid account of the leading principles of Ayurveda, and without minimising the great importance of the

Allopathic system, sets out the inestimable value of Ayurvedic Pharmacopoeia and Treatment. It is hoped that this preface will be widely read with profit by Allopaths and Ayurvedic Physicians, as well as by the lay public.

Although we have been trying for some years with the idea of editing and publishing these and similar treasures lying buried in our library, still we have always been awed by the immensity of the task from the point of view of finance. Our library had been working for years together, on very slender resources. But the advent, of the popular Government in our country provided for us the opportunity for which we had long been waiting. We are grateful to the Madras Government for the timely financial help which has made this and other publications possible. Our thanks are especially due to the Hon. Sri O. P. Ramaswamy Reddiar, our Premier, and the Hon. Sri T. S. Avinasilingam Chettiar, our Education Minister, who showed their keen awareness of the immense worth of our Library and the urgent need to rescue the same from sheer extinction, by acting quickly and placing necessary funds at our disposal to carry on our useful work. Our debt to Sardar Vedaratnam Pillai, M. L. A., and Sri T. K. Srinivasa Iyer, Secretary, Tanjore District Congress Committee, is immeasurable as they have all along identified themselves with this great institution and have been sparing no pains to draw the attention of the public and the Government to the immense worth of the treasures in this library. We are equally indebted to Sri T. V. Satagopachariar Advocate, Tanjore, who ably presided over the proceedings, of the special committee appointed by

Government to make suggestions for the improvement of our library, and to the other members of the committee, namely, Sri R. Rengasami Iyengar, Advocate, Tanjore, P. D. Joshi, President, Madras Branch of the Brihan Maharashtra Mandal, and Srimant Rai Pratapa Simha Raja, Prince, and Life-Member of the Administrative Committee of Saraswati Mahal, for the keen interest in, and understanding of our needs and difficulties.

SARASWATI MAHAL,<br>Tanjore<br>15—1—49

**S. GOPALAN,**<br>*Hony. Secretary.*

# நூன்முகம்

ஸரஸ்வதி மஹாலிலிருந்து வெளியிடப்படும் இந்த வைத்ய நூல்களின் வரிசையில் "குன்மரோக சிகித்ஸை முறைகள்." முதலாவதாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஸரஸ்வதிமஹால் வைத்தியச் சுவடிகள் நெ. 54-ம், நெ. 80-ம் இப்பதிப்பிற்கு ஆதாரமானவை. ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவங்கள் கூடியவரையில் சுருக்கமாகவும், தெளிவாகவும் முகவுரையில் சொல்லப்பட்டிருக்கிறது. சிகித்ஸை முறைகளில் கண்டுள்ள மருந்துச் சரக்குகளின் குணங்கள் அனுபந்தம் Iல் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அனுபந்தம் தயார் செய்ய, 'பதார்த்தகுணசிந்தாமணி,' 'தன்வந்தரி நிகண்டு,' முருகேச முதலியாரால் இயற்றப்பட்ட 'குணபாடம்' (கவர்ன்மென்ட் பிரசுரம்), இவை எங்களுக்குப் பெரிதும் உதவி செய்தன. இந்நூல்களின் ஆசிரியர்களுக்கும் பிரசுரகர்த்தாக்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகும். ஸரஸ்வதி மஹால் ஏட்டுப் பிரதி நெ. 70 "சரக்கு சுத்தி முறைகள்" என்ற சுவடியிலுள்ளபடி, சுத்தி செய்யப்பட வேண்டிய சரக்குகளின் சுத்தி க்ரமங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. முறைகளில் உபயோகப்பட்டிருக்கும் சரக்குகளுக்கு ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம், லத்தீன் இப்பாஷைகளிலுள்ள பெயர்கள் கடைசி அனுபந்தமாக அச்சிடப்பட்டுள்ளது. இப்பிரசுரத்தின் அபிவிருத்திக்கான யோசனைகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும். இதில் கண்ட முறைகளைக் கையாளும் வைத்யர்களும், வியாதியஸ்தர்களும் தங்கள் அனுபவங்களை எங்களுக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸரஸ்வதிமஹால்
தஞ்சாவூர்
15—1—49.

S. கோபாலன்,
கௌரவ காரியதரிசி.

# பொருளடக்கம்

முகவுரை பக்கம்

1. சரபேந்திரர் வைத்தியமுறைகளின் வரலாறு ... i
2. குன்மம் — மேனாட்டார் நிதான சிகிச்சையும், நம்நாட்டு நிதான சிகிச்சையும் ... ii
3. ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவங்கள்:—
ஆயுர் வேதத்தின் பிரிவுகள் ... vi
ஆயுர் வேதத்தில் கூறப்படும் சரீர அமைப்பு:—
பஞ்சபூத இயற்கை அமைப்பு ... ix
அங்க விபாகம் ... xiii
பரிணும விபாகம் ... xxxii
உற்பத்தி விபாகம் ... LIX
ஆரோக்கிய வாழ்க்கை ... LXIV
வியாதிகளும் சிகிச்சைகளும் ... LXXII
நாணுத்மஜ வியாதிகள் ... LXXV
ஸாமான்யஜ வியாதிகள் ... XC
அனுபந்தம் — ஸம்ஸ்க்ருதத்திலுள்ள ஆயுர்வேத நூல்களின் வரலாறு ... CXII
சரபேந்திரர் குன்ம வைத்தியமுறைகளிலுள்ள மருந்துகளின் அட்டவணை ... [1]
குன்மத்தின் வகைகள் ... [11]
சரபேந்திரர் வைத்திய முறைகள் 1—134 ... 1
அனுபந்தம் 1. குணபாடம்:—
1. பச்சிலை வர்க்கம் 1—41 ... 183
2. வேர் வகை 42—93 ... 196
3. பட்டை வகை 94—111 ... 211
4. சாறு வகை 112—139 ... 216
5. கிழங்கு வகை 140—150 ... 222

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | வித்து வகை | 151—156 | ... | 225 |
| 7. | கடைச்சரக்கு வகை | 157—222 | ... | 227 |
| 8. | புஷ்ப வகை | 223— | ... | 248 |
| 9. | பழவகை | 224—229 | ... | 248 |
| 10. | காய் வகைகள் | 230—239 | ... | 250 |
| 11. | எண்ணெய் வகை | 240—242 | ... | 253 |
| 12. | பால் வகை | 243—250 | ... | 254 |
| 13. | ஜீவ வகை | 251—253 | ... | 256 |
| 14. | உலோக வகை | 254—274 | ... | 257 |
| 15. | உப்பு வகை | 275—279 | ... | 263 |
| 16. | க்ஷார வகை | 280—288 | ... | 264 |
| 17. | அனுபான வகை | 289—293 | ... | 265 |
| | அனுபந்தம் 2—சரக்கு சுத்தி முறைகள் | 1—62 | ... | 267 |
| | அனுபந்தம் 3—சரக்குகளின் பெயரகராதி | 1—246 | ... | 279 |
| | பிழை திருத்தம் | | ... | 326 |

குறிப்பு:— 1. இதன் முகவுரையில் 'உவர்ப்பு' என்ற வார்த்தை 'உறைப்பு' அல்லது 'கார்ப்பு' என்ற பொருளில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. 'உவர்ப்பு' என்ற வார்த்தைக்கு அகராதிகளில் (1) உப்புறைப்பு (2) உப்புச்சுவை (3) துவர்ப்பு, என்ற 3 பொருள்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால் இதன் முகவுரையில் 'உவர்ப்பு' என்ற வார்த்தை வரும் இடங்களில் அதை 'கார்ப்பு' என்று திருத்திக்கொள்ளவும்.

குறிப்பு :— 2. இதிலுள்ள முறைகளில் ஒரே சரக்கு இரண்டு தடவை சொல்லப்பட்டால் அதை இரண்டு மடங்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கொள்க.

# சரபேந்திரர் குன்ம ரோக சிகிச்சை முறைகள்

## முகவுரை

இதில் அடங்கிய முறைகள் தஞ்சை சரபோஜி II (1798-1832) மன்னரால் இந்தியாவிலும் அயல் நாட்டிலும் இருந்து வந்த பல வைத்திய நிபுணர்களின் ஒத்தாசையைக்கொண்டு திரட்டப்பட்ட அனுபவ சித்தமான முறைகள். சரபோஜி மன்னர் வைத்திய சாஸ்திரத்தில் அபார சிரத்தை கொண்டவர். மேல் நாட்டு வைத்திய முறைகளையும் நம் நாட்டு வைத்திய முறைகளையும் செவ்வனே ஆராய்ச்சி செய்தவர். அதற்கென்று "தன்வந்தரி மஹால்" என்ற வைத்திய ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நடத்திவந்தார். அவரால் சேகரிக்கப்பட்ட ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய பாஷைகளிலுள்ள வைத்திய நூல்களும், படங்களும் சேர்ந்த சுமார் 500 புத்தகங்களும், ஸம்ஸ்கிருதத்தில் அருமையான வைத்தியக் கிரந்தங்களும், தமிழில் அநேக பழைய சித்த வைத்திய நூல்களும் அவர்காலத்தில் கையாளப்பட்ட முறைகள் அடங்கிய நூல்களும், ஓலைச் சுவடிகளிலும், காகிதத்திலுமாக சுமார் 500 நூல்களும் இப்போதும் சரஸ்வதி மஹால் புத்தகாலயத்தில் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

அன்னார் பல நாட்டு வைத்தியர்களுடைய அனுபவத்தை ஒன்று திரட்டி அவர்கள் யாவராலும் அனுபவசித்தம் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட முறைகளை மட்டிலும் தமிழில் மொழி பெயர்க்கச் செய்து, தன் அரண்மனைத் தமிழ்ப்புலவர்களைக் கொண்டு எளிய நடையில் பாடல்களாகத் தொகுக்கச் செய்து அம்முறைகளை 18 சுவடிகளில் எழுதி வைத்திருக்கிறார். இந்த 18 சுவடிகளில் உள்ள முறைகளைச் சேகரிக்கவும் பரிசீலனை செய்யவும் வைத்தியர்களுக்குச் செய்யப்பட்ட சன்மானங்கள் முதலிய செலவுகள் அநேக லக்ஷங்களாகும். மேலும், மேல் நாட்டுப்பிரத்தியக்ஷ சாரீர சாஸ்திரத்தை நன்றாகக் கற்றறிந்த

சரபோஜி மன்னர் அதைக்கொண்டு நம் நாட்டு முறைகளை ஆராய்ந்து இவை உயர்ந்தவை என்று தீர்மானித்து இம்முறைகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

இப்படி வெகு சிரமத்துடனும் பணச் செலவுடனும் சேகரிக்கப்பட்ட அருமையான முறைகளை நம் நாட்டில் யாவரும் அறிந்து பயன் பெறுமாறு இப்போது அவை ஒவ்வொரு தொகுதியாக அச்சிட ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தொகுதியில் குன்ம ரோகத்தின் சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நம் நாட்டு வைத்திய முறையில் பல மருந்துகள் அநேக ரோகங்களைத் தீர்க்கக்கூடியவைகளாக இருக்கின்றன. அந்தப் பெருமையே தற்காலம் மேல் நாட்டு மருந்துகளை உபயோகிக்கும் சிலருக்கு நம் நாட்டு மருந்துகளில் நம்பிக்கைக் குறைவை உண்டாக்குகிறது. ஒரு மருந்து இவ்வளவு வியாதிகளைத் தீர்ப்பதென்பது சாத்தியமா! என்று நினைக்கிறார்கள். அவர்கள் நமது வைத்திய சாஸ்திரத்தின் அடிப்படைத் தத்துவங்களைக் கற்றவர்களிடம் ஒரு முறை கேட்டிருந்தால் இவ்வித சந்தேகம் அவர்கள் மனதில் எழுவதற்குக் காரணமே இராது. ஏனெனில் வியாதிகள் எல்லாவற்றிற்கும் மூல காரணம் வாதம், பித்தம், சிலேஷ்மம் என்ற மூன்று தோஷங்களின் சமமின்மையே என்பதை நமது சாஸ்திரம் மிகத்தெளிவாக விவரித்திருக்கிறது. ஆகவே வாத மிகுதியால் உண்டாகும் ரோகம் எதுவானாலும் அது வாதத்தை சமனப்படுத்துவதனால் குணமாகக் கூடியதாக இருக்கிறது. பித்த, சிலேஷ்ம ரோகங்களும் இப்படியே. ஆகையால் ஒரே முறையால் பல ரோகங்கள் தீர்க்கக்கூடியதற்குத் தக்க காரணங்களும் அனுபவமும் இருக்கிறபடியால் அது முற்றிலும் யுத்தி யுத்தமானதேயாகும். ஆகையால் இதில் கண்ட முறைகள் பலவற்றில் அவைபல வியாதிகளைத் தீர்க்குமென்று சொல்லியிருப்பது பொருத்தமானதென்பதை உணரவேண்டும்.

## குன்மம்

குன்மம் என்பது நாளடைவில் உண்டாகும் வியாதி. அதனால் ஏற்படும் தொந்தரவுகள் வயிற்று வலி, பசியின்மை, சாப்பிட்டபிறகு வாந்தி, தேக மெலிவு இவைகளாகும். இந்த

வியாதியில் விசேஷமான ஒரு அறிகுறி, வயிற்றில் புரளும் ஒரு கட்டி போன்ற பின்னல் முடிச்சாகும். 'குன்மம்' என்ற சொல் 'குல்மம்' ( = புதர் ) என்ற வடமொழியின் சிதைவு. இந்த வியாதியின் ஸ்தானங்கள் '[1]ஐந்து என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன :— 1. மூத்திரப்பை, 2. தொப்புள், 3. இருதயம், 4, 5. விலாப்பக்கங்கள்.

இந்த வியாதிக்கு மேல்நாட்டார் ஜீரணக் கோளாறு ( Dyspepsia ), வயிற்று வேக்காடு ( chronic gastritis ), வயிற்றுப்புண் (gastric ulcer ), வயிற்றுக் கட்டி ( gastric tumour ) க்ரஹணிப்புண் ( duodenal ulcer ), என்று பலவகைப் பெயரிட்டிருக்கிறார்கள். மேல் நாட்டு வைத்திய நூல்களில் இந்த வியாதியின் மூலகாரணத்தைப்பற்றி நிச்சயமாக ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை[2] என்றும், பொதுவாக வயிற்று நீர்ச்சுரப்பு அதிகமாவதாலும் குறைவதாலும் இந்த வியாதி ஏற்படுகிறதென்றும், அவ்விதச் சுரப்பு அதிகமாதல், குறைதல் இவைகளுக்கு நிச்சயமாகக் காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் சொல்லுகிறார்கள்.

ஆயுர்வேத சாஸ்திரப்படி, இந்த வியாதிக்குக் காரணம் வயிறு முதலிய அங்கங்களின் உள்பாகம் வறண்டு போவதேயாகும். வறட்சியினால் உள் புறத்தில் வலியும், கரடு முரடான முடிச்சுகளும், புண்களும் உண்டாவது ஸஹஜம். இப்படி வறட்சி ஏற்படுவதற்குக் காரணம், வறண்ட உணவுகளை ( அதாவது நெய், எண்ணெய், கொழுப்பு, திரவங்கள் சம்

---

1. சரகஸம்ஹிதை, சிகித்ஸா ஸ்தானம், 5-வது அத்தியாயம், ச்லோகம் 6 :—

" பஸ்தௌஹி நாப்யாம் ஹ்ருதி பார்ச்வயோர்வா
ஸ்தானானி குல்மஸ்ய பவந்தி பஞ்ச "

2. Vide Beaumont's Medicine, 2nd Edn. p. 30 :—

" Gastric Ulcer :— Etiology—The cause is unknown. "

Ibid. p. 41 :—

" Duodenal Ulcer :— Etiology—The underlying causes are the same as for gastric ulcer. "

பந்தப்படாத உணவுகளை ) அடிக்கடி அதிகமாக உண்பதும், பசிவேளையில் சாப்பிடாமல் பசியை அடக்குவதும், உடம்பில் வறட்சியைக் கொடுக்கக்கூடிய வேலைகளைச் செய்வதும், அப்படிப்பட்ட சீதோஷ்ணங்களில் அதிகமாகப் பழகுவதும், உடம்பிற்கு நைப்பு உண்டாவதற்கான பழக்கங்களாகிய எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல் போன்ற பழக்கங்களை விட்டு விடுவதும், சரீரம் பலஹீனமாக இருக்கும்போது வாயு பதார்த்தங்களை அதிகமாகச் சாப்பிடுவதும் ஆகும். உடம்பை நைப்பாகச் செய்துகொள்ளாமல் பேதிக்குச் சாப்பிடுவதும் பேதிக்குச் சாப்பிடுவதில் அளவு மீறுவதும் மிகக் குறைவதும், மல மூத்திர வேகங்களை அடக்குவதும் வலுவிலே அவ்வேகங்களை உண்டுபண்ண முயற்சி எடுப்பதும் இந்த வியாதியை உண்டாக்கும்.

இந்த வியாதிக்கு ஆதாரம் வறட்சி. அதற்கு ஆதாரம் வாதம். அதற்கு ஆதாரம் அக்னி பலத்தின் சம மின்மை, இவை மூன்றும் ஒன்றுக்கொன்று ஆதாரமானவை. ஆகையால் இந்த வியாதிக்கு சிகிச்சை செய்வதற்கு முதலில் செய்ய வேண்டியது உடம்பில் நைப்பு உண்டாக்குவதேயாகும்[3] பிறகு லகுவான ஆகாரத்தினாலும் அக்னி தீபனமான மருந்துகளாலும் அக்னியை ஸமமாகவும் பலமுள்ளதாகவும் செய்து கொண்டே வாயுவை சமனப்படுத்தக் கூடிய லவணம், க்ஷாரம் முதலியவைகளையும் கப, பித்த தோஷங்களும் சேர்ந்திருந்தால் அவைகளைச் சமனப்படுத்தும் மருந்துகளையும் கொடுக்க வேண்டும்.

மேல் நாட்டு முறையில் இந்த வியாதிக்கு (1) லகுவானதும் நைப்பை உண்டாக்கக்கூடியதுமான ஆகாரம், (2) நடமாட்டமில்லாமல் ஓய்வு கொடுத்தல் (3) இரைப்பைச் சுரப்பு அதிகமாயிருந்தால் ம்ருதுவான க்ஷாரங்களையும் (alkalies) சுரப்புக் குறைவாக இருந்தால் அம்லங்களையும்

3. மிகப் பழைய ஸம்ஹிதையாகிய 'காச்யபஸம்ஹிதை', சிகித்ஸாஸ்தானம், குல்ம சிகித்ஸாத்யாயம் சுலோகம் 20, 21 பின் வருமாறு :—

"குல்மினம் ப்ரதமம் வைத்ய ஸ்நேஹஸ்வேதோப பாதிதம் !

உள்ளுக்குக் கொடுத்தல் (4) புண் அல்லது கட்டி உண்டாயிருப்பதை எக்ஸ்ரே போட்டோவினுல் கண்டுபிடித்து அவசியமானுல் ஆபரேஷன் செய்தல் முதலிய முறைகளைச் சிகிச்சைகளாகச் செய்கிருர்கள். இந்த முறைகள் ஆயுர் வேதத்தில் சொல்லப்பட்ட சிகிச்சைகளுக்கு முரண்பட்டவைகள் அல்ல. ஆனுலும் மேல் நாட்டார் சிகிச்சையினுல் தற்கால சாந்தி ஏற்பட்டாலும் கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் அதே உபத்திரவங்கள் உண்டாகி விடுகின்றன. அதற்குக் காரணம் பின்வருமாறு :—

மேல் நாட்டார் நமது கண் முதலிய புலன்களால் அறியக்கூடிய பரீக்ஷைகளில் மட்டிலும் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள். குன்ம வியாதியில் கண்ணுக்குத் தெரியக்கூடிய அம்சங்கள்.

(1) இரைப்பைச் சுரப்பு

(2) புண்கள், கட்டிகள், இவைகளே.

கண்ணுக்குத் தெரியாததும் மகரிஷிகளால் யோக சக்தியால் கண்டு பிடிக்கப்பட்டுப் பல நூற்றுண்டுகளாக அனுபவ சித்தமாகக் கையாளப்பட்டு வருவதுமான 'வாதம்' என்ற தோஷத்தின் தன்மையும் அதை விருத்தி செய்யும் ஆகார வகைகளும் அதைக்குறைக்கும் மருந்துகளும், சரீரத்தில் அக்னி பலம் என்னும் சக்தியின் ஸ்தானமும் அதன் செய்கைகளும், ஸமம், விஷமம், மந்தம், தீக்ஷ்ணம் என்னும் அக்னியின் நிலைகளும் அவற்றை மாற்றும் முறைகளும் இந்த வியாதியை அற்றுப்

---

யதாஸ்வ தோஷ சமனை ரௌஷதைஸ் ஸமு பக்ரமேத் !! 20 !!

ப்ரும்ஹணஞ் சாதிகுல் மேஷு ப்ருசஞ்சாதி விரூக்ஷணம் !
அதிஸம் சோதனஞ் சைவ குல்மினும் நப்ரசஸ்யதே !! 21 !!

இவற்றின் பொருள் :—

குல்ம வியாதியுள்ளவனுக்கு முதலில் ஸ்நேஹம், ஸ்வேதம் செய்வித்துப் பிறகு, தோஷத்திற்குத் தகுந்தபடி மருந்து கொடுக்கவேண்டும். ஆனுல் கடுமையான போஷணையோ, மிகவும் வறளச் செய்தலோ, கடுமையான பேதியோ குல்மத்திற்காகாது.

போகும்படி சிகிச்சை செய்ய அவசியமானவை. இவற்றைச் செவ்வனே தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகையால் ஆயுர் வேதத்தின் அடிப்படைத் தத்துவங்களைச் சிறிது விவரிப்போம்.

---

## ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவங்கள்

### ஆயுர்வேதத்தின் பிரிவுகள்

ஆயுர்வேதம் (a) நமது சரீரம் மனது இவ்விரண்டிலும் உண்டாகும் வியாதிகளை வரவொட்டாமல் தடுத்து

(b) வந்த வியாதிகளை நீக்கி

(c) நீண்ட ஆயுளோடும்

(d) திடகாத்திரத்தோடும்

வாழும் மார்க்கத்தை போதிக்கும் நூல்.

இந்த நூலை 8 பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள் :—

(1) காயம் — பொதுவாக உடம்பைப்பற்றிய நோய்களை நீக்கும் முறை,

(2) பால ரோகம் — குழந்தைகள், தாய்மார்களின் வியாதிகளைப்பற்றியது,

(3) ஊர்த்வாங்கம் — கழுத்துக்கு மேற்பட்ட அங்கங்களின் நோய்களைப்பற்றியது,

(4) க்ரஹம் — சங்கைக்குணம் முதலிய வியாதிகள்,

(5) சல்யம் — உடம்பில் வேறு வஸ்துக்கள் புகுந்தோ தங்கியோ ஏற்படும் வேதனைகள்,

(6) தம்ஷ்ட்ரம் — விஷங்களின் சிகிச்சை,

(7) ஜரா — கிழ வயதிலும் திடகாத்திரத்தோடு இருக்கும் வழி,

(8) வ்ருஷம் — புருஷத்தன்மையை விருத்தி செய்தல்.

## ஆயுர்வேத நூல்கள்

இவ்வாறு பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவைப்பற்றியும் பெரிய நூல்கள் மகரிஷிகளால் வடமொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு ஸம்ஹிதைகள் என்று பெயர். இவைகளைத்தவிர ஸித்தர்களால் எழுதப்பட்ட நூல்களும் தந்த்ரங்கள் என்னும் ஆகமங்களில் காணப்படும் வைத்தியப் பிரிவுகளும், மந்திரம், யோகம், ரஸாயனம் இவற்றோடு கலந்ததாகக் காணப்படுகின்றன.

இதேபோல் தமிழிலும் அகஸ்தியர் முதலிய மகரிஷிகளும், சித்தர்களும், தன்வந்த்ரி முதலிய ஆசாரியர்களும் எல்லாப் பிரிவுகளைப்பற்றியும் விரிவான நூல்கள் இயற்றி யிருக்கின்றனர். தமிழ், வடமொழி இரண்டிலும் உள்ள நூல்களின் போக்கு ஒரேவிதமாகவே இருக்கிறது.

ஆனால் இப்படி எழுதப்பட்ட நூல்களில் பல கெட்டுப் போய்விட்டன. சிற்சில பாகங்களே கிடைக்கின்றன. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு நமது நாட்டின் மேல் ஏற்பட்ட படையெழுச்சிகளினால் நமது நாட்டுக் கலைச் செல்வங்களும் கலைஞர்களின் குடும்பங்களும் சிதறுண்டு போயின. அப்படிச் சிதறுண்ட கலைச்செல்வங்களில் வடமொழி நூல்கள் பதினான்காவது நூற்றாண்டில் விஜய நகர மன்னர்களாலும் வித்தியாரண்ணியர் என்ற மஹானின் முயற்சியாலும் ஒரு பாகம் தேடிச் சேர்க்கப்பட்டுப் புத்துயிர் அளிக்கப்பட்டன. ஆனால் தமிழ் நாட்டில் வித்தியாரண்ணியர் போன்ற பெரியார் ஒருவர் பிறக்கவில்லை. அதனால் சிதறுண்ட தமிழ்க்கலைச் செல்வங்கள் நஷ்டமாகவே போயின. [1] ஆகவே கெட்டுப்போன வைத்திய நூல்களில் தமிழ் நூல்களே மிகவும் அதிகம்.

இப்போது கிடைக்கின்ற நூல்களைக்கொண்டு தற்கால வைத்திய முறைகள் நடந்து வருவதால் ஏதோ வடமொழி நூல்களில் ஓஷதிகளைக்கொண்டும், தமிழ் நூல்களில் பஸ்ம ஸிந்தூரங்களைக்கொண்டும், வைத்தியம் விசேஷமாகச் சொல்லப்படுவதுபோல் ஓர் தோற்றம் ஏற்பட்டிருக்கிறது. வாஸ்தவத்தில் இரண்டு மொழிகளிலும் ஓஷதி, உலோகங்

கள் இவை இரண்டின் உபயோகங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. வடமொழியில் உலோகங்களைப்பற்றிய பழைய ஸம்ஹிதைகளில் பல கெட்டுப்போய் விட்டன. அப்படியே தமிழிலும் சல்ய சிகிச்சை, வஸ்தி முறைகள் முதலியவைகள் அடங்கிய விரிவான நூல்கள் இப்போது கிடைக்கவில்லை.

இப்போது கிடைக்கும் நூல்களில் மிகப் பழையவை, வடமொழியில் (1) ஆயுர்வேதஸூத்ரம். (2) சரக ஸம்ஹிதை (3) பேள ஸம்ஹிதை (ஒரு பாகம்) (4) காச்யப ஸம்ஹிதை (ஸமீபத்தில் நேபாளத்திலிருந்து அச்சிடப்பட்டது) (5) ஸுச்ருத ஸம்ஹிதை (6) தன்வந்திரி நிகண்டு ஆகிய ஸம்ஹிதைகளும், ரஸாயன நூல்களான (7) ரஸரத்ன ஸமுச்சயம் (8) ரஸஹ்ருதய தந்த்ரம் (9) ஆநந்த கந்தம் (ஸரஸ்வதிமஹால் B. No. 10776) முதலியவைகளும், தமிழில் அகஸ்தியர், தேரையர், கொங்கணர், சட்டமுனி, மச்சமுனி, போகர், யூகிமுனி, தன்வந்திரி முதலிய சித்தர் நூல்களும் உள்ளன. ஆனால் தமிழில் நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களில் எந்தநூலிலும் வைத்யம் ஆதியோடந்தமாகக் கிடைக்கவில்லை. அவைகள் சிதறுண்ட பலபாகங்களாகவே காணப்படுகின்றன. யோகம், வாதம், ஜாலம் முதலிய பலவிஷயங்கள் கலந்த நூல்களே பெரும்பான்மையானவை. வடமொழியில் கிடைக்கும் நூல்கள் அநேகமாக பூர்த்தியானவைகளாகவும் வைத்தியத்தின் பலபாகங்களையும் ஆதியோடந்தமாகக்கூறுவனவாகவும் இருக்கின்றன. ஆகவே ஒருவன் நமது புராதனவைத்திய நூல்களைக் கற்க விரும்பினால் தமிழ், ஸம்ஸ்கிருதம் இரண்டு பாஷைகளையும் கற்று அவைகளிலுள்ள நூல்களைப்படித்தல் வேண்டும்.

---

1. யாமளாஷ்டகம் என்ற கிரந்தத்தில் (ஸரஸ்வதி மஹால் B. No. 9335, 9336) உப வேதங்களாகிய வைத்யம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்த சாஸ்திரம் இவைகளிலுள்ள பழைய ஸம்ஹிதைகளின் விரிவான அட்டவணைகள் அடங்கியிருக்கின்றன. அதிலுள்ள வைத்ய ஸம்ஹிதைகளின் அட்டவணை இதன் அநுபந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பார்த்தால் நமது புராதன வைத்ய சாஸ்திரம் எவ்வளவு விரிவானதாக இருந்தது என்பதும் எத்தனை நூல்கள் கெட்டுப்போய் விட்டன என்பதும் விளங்கும்.

பிற்காலத்திய நூல்கள் வடமொழியிலும் தமிழிலும் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவை பெரும் பாலும் பழைய நூல்களின் ஆதாரத்தைக் கொண்டே ஏற்பட்டவை. குறிப்பாக, நாடிபார்க்கும் முறை, பஸ்ம ஸிந் தூரங்கள், சன்னிக்கு வைத்தியம், குழந்தைகளின் வைத்தியம் இவை [1] தமிழ் நூல்களில் விரிவாகவும், ஓஷதிகள் சேர்ந்த மருந் துகள், வஸ்திமுறைகள், சல்ய சிகிச்சை, இவை வடமொழி நூல்களில் விரிவாகவும் இப்போது நமக்குக் கிடைக்கின்றன.

இப்போதும் தமிழிலும், வடமொழியிலும் பல குடும்பங் களில் இரகசியமாகப் பல ஸம்ஹிதைகளைப் பிறருக்குக் காட் டாமல் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த பொரு ளுதவி செய்தால் அவர்களும் தங்கள் அரிய கிரந்தங்களை உல கத்திற்குக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள். பொருளுதவி செய்யாமல் வெற்று ஹிதோபதேசத்தால் ஒரு பயனும் ஏற் படமாட்டாது.

---

## ஆயுர் வேதத்தில் கூறப்படும் சரீர அமைப்பு

ஆயுர் வேதத்தில் நமது சரீரத்தின் அமைப்பும் அதில் தோன்றும் வியாதிகளின் காரணங்களும் யாவரும் எளிதில் உணரும்படி சொல்லப்பட்டிருக்கிறது.

உலகிலுள்ள பொருள்களின் குணங்களை நாம் ஆராய வேண்டின் அவைகளை ஒருவகையாகப் பிரித்துக்கொள்ளல் வேண்டும். மேல்நாட்டார் இந்த உலகத்தை (1) பொருள்கள் (matter) (2) சக்திகள் (energy) என இரு பிரிவுகளாகப்பிரித்துப் பொருள்களை (a) திட, (solid) (b) திரவ, (liquid) (c) வாயு, (gas)

---

1. ஸரஸ்வதி மஹால் M. நெ. 14 அகஸ்தியர் இரண்டாயிரம் என் னும் சுவடியில் வைத்தியத்தின் பல பகுதிகள் ஆதியோடந் தமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது கூடிய சீக் கிரம் வெளிவரும்.

பதார்த்தங்கள் என்றும், சக்திகளை (a) அசைக்கும் சக்தி (mechanical energy) (b) உஷ்ண சக்தி (heat) (c) ஒளிச் சக்தி (light) (d) ஒலிச் சக்தி (sound) (e) காந்த சக்தி (magnetism) (f) மின்சார சக்தி (electricity) என்று பிரித்திருந்தார்கள். சமீப காலத்தில் (g) வெளியுலகிலிருந்து வரும் கிரண சக்தி (cosmic rays) (h) அணுச் சக்தி (atomic energy) என்றவைகளை யும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆனால் மேனாட்டிலேயே சமீபகாலத்தில் அவர்கள் செய்த பிரிவினையாகிய 'பொருள்', 'சக்தி' என்ற பாகுபாட்டைப்பற் றிச் சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏனெனில் மின்சார சக்தி ஒரு சமயம் சக்தியைப் போலும் ஒரு சமயம் பொருளைப் போலும் வேலை செய்கிறது. மேலும், இரண்டுவித மின் சக் திகள் சேர்ந்து அணு என்னும் பொருளை உண்டாக்குகிறது. ஆகையால் பொருளே சக்தியாகவும், சக்தியே பொருளாகவும் மாறக்கூடும் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

நமது ஆயுர் வேதத்திலும், மகரிஷிகளால் இயற்றப்பட்ட மற்ற நம் புராதன சாஸ்திரங்களிலும் இந்த உலகத்தை ஆராய்ந்திருக்கும் விதம் இதைக்காட்டிலும் நேர்மையாகவும் எளிதாகவும் இருக்கிறது. அவ்வாராய்ச்சி பின் வருமாறு:—

இந்த உலகம் நமது புலன்களால் அறியப் படுகிறது. நமது புலன்கள் 5. அவையாவன:—

(1) சத்தத்தை அறிதல்

(2) ஸ்பர்ச உணர்ச்சி

(3) ஒளி யறிதல்

(4) சுவை யறிதல்

(5) நாற்ற மறிதல்

இவ்வைந்து புலன்களாலும் அறியப் படும் பொருள்களுக்கு ஐந்து பெயர்களைக் கொடுத்தார்கள் ;—

(1) செவிப் புலனால் அறியப்படும் பொருளுக்கு ஆகாயம் [1]என்றுபெயர். அதன் குணம் சத்தம்.

(2) ஸ்பர்ச உணர்வினால் உணரப்படும் பொருளுக்கு வாயு என்று பெயர். அதன் குணம் சத்தம், ஸ்பரிசம் என்பன.

(3) கட்புலனால் அறியப்படும் பொருளுக்குத் 'தேயு' என்று பெயர். அதன் குணம், சத்தம், ஸ்பரிசம், ரூபம் என்பன.

(4) சுவையினால் அறியப்படும் பொருளுக்கு 'அப்பு' என்று பெயர். அதன் குணம் சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம் என்பன.

(5) மூக்கினால் அறியப்படும் பொருளுக்கு 'ப்ருதிவி' என்று பெயர். அதன் குணம் சத்தம் ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம், என்பன.

இவ்விதமாக உலகத்தை ஐந்து விதங்களாகப் பிரித்து இவற்றிற்கு மூலப்பொருள்கள் அல்லது பூதங்கள் என்று பெயர் இட்டனர்.

இவ்வுலகத்தில் புலன்களால் அறியப்படும் பொருள்கள் யாவும் இந்த ஐந்து பூதங்களாலேயே உண்டாக்கப்பட்டிருக்கின்றன என்பது அடிப்படையான கொள்கை.

---

1. ஆகாயம் எப்படி செவியால் உணரப்படுகிறதென்பதைச் சற்று விளக்குவோம். ஒருவனுக்கு செவிப்புலனைத்தவிர மற்றப் புலன்கள் இல்லையென்று வைத்துக்கொள்வோம். அவன் காதின் உதவியால் ஒரு சத்தத்தைக் கேட்டு அது இத்தனை தூரத்திலிருந்து கேட்கிறதென்பதையும் எந்தத் திசையிலிருந்து கேட்கிறதென்பதையும் அறியலாம். நீளம் (length), திசை (angular distance) இரண்டும் அறியப்படின் ஆகாயம் (space) அறியப்படும்.

தவிர, இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் ஒவ்வொன்றை யும் சந்திர அம்சம், அக்னி அம்சம் என்ற இரண்டு அம்சங் களாகப்பிரித்து, சந்திர அம்சம் அதிகமாக இருக்கும் பொருளை சீதமானதென்றும், அக்னி அம்சம் அதிகமாக இருக்கும் பொருளை உஷ்ணமானதென்றும் பெயர் கொடுத்திருக்கிறார் கள். அக்னி அம்சத்தை சூரிய அம்சமென்றும் சிலர் அழைக் கிறார்கள்.

நமது சரீரத்தை எடுத்துக்கொண்டு அதன் கூறு பாட்டை அறிய வேண்டின் அதையும் பல பாகங்களாகப் பிரிக்கவேண்டும். மேல்நாட்டார் நமது சரீரத்தை (1) எலும் புக்கூடு (skeleton), (2) இரத்த கோசம் (circulatory system), (3) சுவாஸ கோசம் (respiratory system), (4) ஜீரண கோசம் (digestive system), (5) ரஸ கோஸம் (lymphatic system), (6) தசைக் கோசம் (muscular system), (7) நரம்புக் கோசம் (nervous system), (8) மல கோசம் (excretory system), (10) திரவ உற்பத்தி கோசம் (endocrines) என்ற பல கோசங் களாகப் பிரித்திருக்கிறார்கள்.

ஆயுர் வேதத்தில் சரீரத்திலுள்ள பாகங்களை 3 வகையா கப் பிரிவினை செய்திருக்கிறார்கள் :—

1. முதலாவது வகை 'அங்க விபாகம்'. இதில் நமது சரீரத்தில் வேலைசெய்யும் பற்பலஉறுப்புகளையும், தனித் தனியாகக் கணக்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

2. இரண்டாவது வகை 'பரிணாம விபாகம்'. இதில் நாம் உண்ணும் பலவித ஆகாரங்கள் முதலியன, நமது உடம் பின் பல அம்சங்களாக எப்படி மாறுகின்றன, என்பதை விவ ரித்திருக்கிறார்கள்.

3. மூன்றாவது 'உற்பத்தி விபாகம்'. இதில் நமது சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் கர்ப்பத்தில், எப்படி உண்டா கிறது என்பதை விவரித்திருக்கிறார்கள்.

# 1. அங்க விபாகம்

(*a*) மொத்தமாகப் பிரிக்கப்பட்ட அங்கங்கள் 6:—
1. தலை, 2. உடம்பு, 3. கைகள் 2, 4. கால்கள் 2.

(*b*) தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட அங்கங்கள்:—இவைகளை இரண்டு தொகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். (1) தெளிவாகப் பிரித்து அறியக்கூடியவை. (2) மிகச் சிறியவைகளாக இருப்பதினாலோ ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதினாலோ தனித்தனியாகக் கண்ணால் பார்க்கமுடியாதவை:—

(1) தெளிவாகப் பிரித்து அறியக்கூடியவை:—

1. தோல்கள் 6:— (7 என்றும் சிலர்)

(a) உதகதரா (நீர் உள்ளது)
(b) ரக்ததரா (இரத்தம் உள்ளது)
(c) சிரங்கு உண்டாகும் தோல்
(d) குஷ்டம் உண்டாகும் தோல்
(e) கட்டி உண்டாகும் தோல்
(f) காயப்பட்டால் அதிக வேதனையும் கண் இருட்டலும் உண்டாகும் தோல்.

2. எலும்புகள் 360

| | | |
|---|---|---|
| (a) | பல் உரல்கள் ... ... ... | 32 |
| (b) | பற்கள் ... ... .. ... | 32 |
| (c) | நகங்கள் ... ... ... ... | 20 |
| (d) | கால், கை, சலாகைகள் ... ... | 20 |
| (e) | கால், கை, விரல் எலும்புகள் . | 60 |
| (f) | குதிகால் ... ... ... ... | 2 |
| (g) | கை மணிக்கட்டு முன் பாகம் ... | 2 |
| (h) | கணுக்கால்... ... ... ... | 4 |
| (i) | மணிக்கட்டு ... ... ... | 4 |
| (j) | முழங்கால் ... ... ... ... | 4 |

(k) முழங்கை ... ... ... ... 4
(l) முழங்கால் சில்லு ... ... ... 2
(m) முழங்கைச் சில்லு ... ... ... 2
(n) துடை .. ... ... ... 2
(o) புஜம் ... ... ... ... 2
(p) அக்ஷம் (தோள் முன் எலும்பை புஜத் தோடு சேர்க்கும் முளை போன்றது) 2
(q) ஜத்ரு (காரை எலும்பு) ... ... 2
(r) பின்புறப் பட்டை ... ... ... 2
(s) தோள் பட்டை ... ... ... 2
(t) குறி ... ... ... ... ... 1
(u) ஆஸனம் ... ... ... ... 1
(v) முதுகுத் தண்டு (அடிப்பாகம் உள் பட) ... ... ... ... 36
(w) கழுத்து ... ... ... ... 15
(x) முகவாய்க்கட்டை ... ... ... 1
(y) முகவாய்க்கட்டை இணைத்திருக்கும் எலும்புகள் ... ... ... 2
(z) நெற்றி ... ... ... ... 2
(aa) மேல்வாய் (தாலு) ... ... ... 2
(bb) கண் எலும்பு ... ... ... 2
(cc) தாடை ... ... ... ... 2
(dd) மூக்கு ... ... ... ... 1
(ee) மார்புக் கூடு ... ... ... 48
(ff) மார்புக் கூடு படியும் எலும்புகள் 24
(gg) பொட்டு எலும்பு ... ... ... 2
(hh) தலை ஓடு ... ... ... ... 4
(ii) மார்பு ... ... ... ... 17

3. ஐம்புலன்களின் பொறிகள் 5:—

(a) தோல்
(b) நாக்கு
(c) மூக்கு
(d) கண்கள்
(e) காதுகள்

4. ஐம்புலன்கள் (உணரும் சக்திகள்)
   (a) ஸ்பர்ச உணர்ச்சி
   (b) உருசி உணர்ச்சி
   (c) நாற்ற உணர்ச்சி
   (d) பார்வை உணர்ச்சி
   (e) சத்த உணர்ச்சி

5. கர்மேந்திரியங்கள் (வேலைசெய்யும் சக்திகள்)
   (a) எடுத்தல்—கைகள்
   (b) நடத்தல்—கால்கள்
   (c) மலம் போக்கல்—பாயு
   (d) மூத்ர, ரேதஸ் விடுதல்—உபத்தம்
   (e) பேசுதல்—நாக்கு

6. சேதனன் (மனதோடுகூடிய ஆத்மா) உடைய இருப்பிடமாகிய இருதயம்.

7. உயிர் நிலைகள் 10:—
   (a) தலை
   (b) கழுத்து
   (c) இருதயம்
   (d) தொப்புள்
   (e) ஆஸனம்
   (f) மூத்திரப்பை
   (g) ஓஜஸ் (இருதயத்திலும் சரீர முழுவதும் வியாபித்திருக்கும் ஸர்வதாது ஸாரம்)
   (h) சுக்கிலம்
   (i) ரத்தம்
   (j) மாம்ஸம்

இந்த 10 உயிர் நிலைகளுள் முதல் 6, அதாவது, தலை, கழுத்து, இருதயம், தொப்புள், ஆஸனம், மூத்திரப்பை. இவைகள் மர்மஸ்தானங்கள். இவைகளுக்குக் கெடுதி ஏற்பட்டால் மரணம் ஏற்படக்கூடியவை.

8. கோஷ்ட (உடம்பினுட் பக்கத்திலுள்ள) அங்கங்கள் 15 :—

(a) நாபி (தொப்புள்)
(b) இருதயம்
(c) க்லோம அல்லது புப்புஸம் என்னும் நுரையீரல்
(d) மண்ணீரல்
(e) கல்லீரல்
(f) மூத்திரக் குண்டிக்காய்கள்
(g) மூத்திரப் பை
(h) மலந்தாங்கி (Transverse colon)
(i) ஆமாசயம் (வயிறு)
(j) பக்வாசயம் { க்ரகணி (Duodenum) / குடல் (Intestines) }
(k) சிறு குடல் — (Smaller intestines)
(l) பெருங்குடல் — (Ascending colon)
(m) உத்தரகுதம் — (Descending colon)
(n) அதரகுதம் (Rectum)
(o) வபாவஹனம் — (Peritoneum and Omentum).

9. ப்ரத்யங்கங்கள் 56. (சில்லறை அங்கங்கள்)

| | | |
|---|---|---|
| (a) | முழங்கால் ஆடு சதை … … | 2 |
| (b) | துடை ,, … … | 2 |
| (c) | பின்புறம் சதை … … | 2 |
| (d) | விரை … … … … | 2 |
| (e) | குறி … … … … | 1 |
| (f) | கக்கத்தின் பக்கங்கள் … … | 2 |
| (g) | துடை இடுக்குகள் … … | 2 |
| (h) | பின்புறம் மேல் பக்கம் … … | 2 |
| (i) | மூத்திரப் பையின் உச்சி .. … | 1 |
| (j) | வயிற்றின் சதை … … … | 1 |
| (k) | ஸ்தனங்கள் … … … | 2 |
| (l) | தோள்கள் … … … | 2 |

(m) பின்கை ஆடு சதைகள் ... 2
(n) முக வாய்க்கட்டை ... ... 1
(o) உதடுகள் ... ... ... 2
(p) கடை வாய்கள் ... ... 2
(q) ஈறுகள் ... ... ... 2
(r) மேல் வாய் (சுண்ணம்) ... 1
(s) உள் நாக்கு ... ... ... 1
(t) தொண்டைப் பக்கச் சதை 2
(u) நாக்கு ... ... ... 1
(v) தாடை ... ... ... 2
(w) காதுகள் ... ... ... 2
(x) காது ஓட்டைகள் ... ... 2
(y) கண்களின் கோளங்கள் ... 2
(z) கண் த்வாரங்கள் ... ... 4
(aa) கண்கள் சேரும் ஓரங்கள் ... 2
(bb) புருவங்கள் ... ... ... 2
(cc) பிடரி ... ... 1
(dd) உள்ளங்கால்கள் } உள்ளங்கைகள் } ... ... 4

*10.* பெரிய துவாரங்கள்,

கண் 2, காது 2, மூக்கு 2, வாய் 1, மலஜல த்வாரங்கள் 2. } 9

*11.* ஆசயங்கள் 7 :—

(1) ரத்தாசயம் — அதாவது இருதயம்.
(2) கபாசயம் — மார்பு.
(3) ஆமாசயம் — வயிறு.
(4) பித்தாசயம் — தொப்புளுக்கு மேலும் இருதயத்துக்குக் கீழும் உள்ள இடம்.
(5) வாதாசயம் — தொப்புளுக்குக்கீழ் உள்ள இடம்.
(6) பக்வாசயம் — சிறுகுடல்.
(7) மூத்திராசயம் — மூத்திரப்பை.

ஸ்த்ரீகளுக்கு அதிகமாயிருப்பது — கர்பாசயம்.

(2) தெளிவாகத் தனித்தனியாய்க் கண்ணுக்குப் புலப்படாதவைகள் :—

**(1)** பேசி என்னும் தசைகள் (muscles) **500**

அவைகளுள் :—

| | | | | |
|---|---|---|---|---|
| (a) கால் கைகளில் | ... | ... | ... | 400 |
| (b) உடம்பில் | ... | ... | ... | 66 |
| (c) கழுத்துக்குமேல் | ... | ... | ... | 34 |

விவரம் :—

(a) கால் கைகளில் :—

| | |
|---|---|
| ஒவ்வொரு காலிலும் விரல் 1-க்கு 3 வீதம் ... ... | 15 |
| முன் பாதம் ... ... ... ... | 10 |
| புறங்கால் ... ... ... ... | 10 |
| குதிகால், உள்ளங்கால் ... ... | 10 |
| குதிகாலுக்கும் முழங்காலுக்குமிடையே | 20 |
| முழங்கால் ... ... ... ... | 5 |
| துடை ... ... ... ... | 20 |
| துடை இடுக்கு ... ... ... | 10 |
| ஆ. கால் 1-க்கு ... ... ... | 100 |
| கைக்கும் அப்படியே- | |
| ஆ. ... ... ... ... ... | 400 |

(b) உடம்பில் :—

| | |
|---|---|
| ஆஸனம் ... .. ... ... | 3 |
| குறி ... ... ... ... ... | 1 |
| ஷி தையல் மேட்டில் (ஸேவனீ) ... ... . | 1 |
| விரை ... ... ... ... ... | 2 |
| பின்புறப்பட்டைகள் ... ... 5 + 5 = | 10 |
| மூத்திரப்பையின்மேல் ... ... | 2 |
| வயிறு ... ... ... ... ... | 5 |
| தொப்புள் ... ... ... ... | 1 |
| மேல் முதுகில் நீண்ட பேசிகள் 5 + 5 = | 10 |
| விலாக்கள் ... ... ... ... | 6 |
| மார்பு ... ... ... ... ... | 10 |
| தோள் ... ... ... ... ... | 7 |

| | |
|---|---|
| இருதயத்திற்கும், வயிற்றுக்கும் இடையே | 2 |
| கல்விரல், மண்ணீரல் மலதரா ... | 6 |
| ஆக ... ... ... ... ... | 66 |

(c) கழுத்துக்குமேல் :—

| | |
|---|---|
| கழுத்து ... ... ... ... | 4 |
| தாடைமுதல் பொட்டு வரையில் ... | 8 |
| குரல்வளை ... ... ... ... | 1 |
| அடித்தொண்டை ... ... ... | 1 |
| மேல் வாய் ... ... ... ... | 2 |
| நாக்கு ... ... ... ... ... | 1 |
| உதடுகள் ... ... ... ... | 2 |
| மூக்கு ... ... ... ... ... | 2 |
| கண்கள் ... ... ... ... | 2 |
| கன்னங்கள் ... ... ... ... | 4 |
| காதுகள் ... ... ... ... | 2 |
| நெற்றி ... ... ... ... | 4 |
| தலை ... ... ... ... ... | 1 |
| ஆக ... ... ... ... ... | 34 |
| ஸ்த்ரீகளுக்கு அதிகமாக இருப்பது :— | 20 |
| ஸ்தனங்கள் ... ... ... | 5+5=10 |
| குறி உள்ளே, வெளியே ... ... | 2+2=4 |
| பிரசவ மார்க்கம் ... ... ... | 3 |
| சுக்ர, ருது, மார்க்கங்கள் ... ... | 3 |
| ஆக ... ... ... ... ... | 20 |

இத்தசைகள் உடம்பிலுள்ள ரத்தக் குழாய்கள் முதலியவற்றை மூடிக்கொண்டு உடம்பிற்கு வலுவைக் கொடுக்கின்றன.

(2) ஸ்நாயு என்னும் தசை நார்கள் 900
அவைகளுள்

| | |
|---|---|
| (a) கால், கைகளில் ... ... | 600 |
| (b) உடம்பில் ... ... ... | 230 |
| (c) கழுத்துக்குமேல் ... ... | 70 |

விபரம் :—

(a) கால் கைகளில் :

ஒவ்வொரு காலிலும்

| | | | | |
|---|---|---|---|---|
| விரல் 1-க்கு 6 விதம் | | ... | ... | 30 |
| குதிகால் } உள்ளங்கால் } கணுக்கால் } | | ... | ... | 30 |
| முழங்கால் | ... | ... | ... | 30 |
| முழங்கால் முட்டு | | . | ... | 10 |
| துடை ... | ... | ... | ... | 40 |
| துடை இடுக்கு | ... | ... | ... | 10 |
| ஆக கால் 1-க்கு | ... | ... | 150 வீதம் | |
| 2 கால்களுக்கு | ... | ... | ... | 300 |
| அவ்விதமே 2 கைகளுக்கு | ... | ... | ... | 300 |
| ஆ ... ... | ... | ... | ... | 600 |

(b) உடம்பில் :—

| | | | | |
|---|---|---|---|---|
| இடுப்பு ... | ... | ... | ... | 60 |
| முதுகு ... | ... | ... | ... | 80 |
| விலாப்பக்கங்கள் | | ... | ... | 60 |
| மார்பு | | | | 30 |
| ஆக | | | | 230 |

(c) கழுத்துக்கு மேல்:

| | |
|---|---|
| கழுத்து | 36 |
| தலை | 34 |
| ஆக | 70 |

மேலே சொல்லப்பட்ட ஸ்நாயுக்கள் நான்கு வகை:—

(1) படர்ந்திருக்கும் ஸ்நாயுக்கள் :— இவை கால் கைகளிலும் சந்திகளிலும் உள்ளவை.

(2) திரண்டு உருண்டையானவை:—இவைகளுக்குக் கண்டரங்கள் என்று பெயர். இவை துடையிலிருந்து கால் விரல் நுனி நகம் வரையில் கால் ஒவ்வொன்றிலும் 2 வீதம் கால்களில் 4-ம், தோளிலிருந்து கைவிரல் நுனி நகம் வரையில் கை ஒவ்வொன்றிலும் 2 வீதம் கைகளில் 4-ம், தலையிலிருந்து கழுத்து இருதயம் வழியாகக் குறிவரையில் 4-ம், மார்பிலிருந்து முதுகு வழியாகப் பின்புறம் வரையில் 4-ம் ஆக 16 கண்டரங்கள் உள்ளன.

(3) ஒட்டையுள்ளவை:—த்வாரமுள்ள ஸ்நாயுக்கள் வயிற்றின் முடிவிலும், குடல்களின் முடிவிலும், மூத்திரப்பையிலும் இருக்கின்றன.

(4) பெருத்தவை:—இவை விலாப்பக்கத்திலும், மார்பிலும், முதுகிலும், தலையிலும் இருக்கின்றன.

இத்தசை நார்களே உடம்பிலுள்ள எலும்பு, தசைகள், ரத்தக்குழாய்கள், ஸந்திகள் இவைகளை ஒன்றோடொன்று பிணைக்கின்றன. ஆகவே எலும்பு முறிந்தாலும், தசைகள் வெட்டப்பட்டாலும், ரத்தக்குழாய்கள் அறுபட்டாலும் ஏற்படும் ஆபத்தை விட, ஸ்நாயுக்கள் அறுந்து போவதனால் ஏற்படும் ஆபத்துக் கடுமையானது.

3. ஸிரைகள் அல்லது ரத்தம் ஓடும் குழாய்கள் 700 :— இவை நாபி (தொப்புள்) யிலிருந்து முதலில் 40 பெரிய ஸிரைகளாகப் பிரிந்து கிளம்புகின்றன. அவை ஒவ்வொன்றிலும் ரத்தம், [1]வாதம், பித்தம், கபம் இந்த நான்கும் சேர்ந்தே செல்லுகின்றன. ஆனால் இவைகளுள் 10ல் வாதம் அதிகமாகவும், 10ல் பித்தம் அதிகமாகவும், 10ல் கபம் அதிகமாகவும், 10ல் ரத்தம் அதிகமாகவும் செல்லுகின்றன. இந்த நான்கு வகை ஸிரைகளும் நான்கு வித வர்ணங்களுடையனவாக இருக்கிறபடியால் வித்தியாசத்தை எளிதில் கண்டுகொள்ளக்கூடியதாக இருக்கிறது. வாத ஸிரைகள் அருணவர்ணம் அதாவது அருணோதய கால சூரியன் வர்ணம்; வாயு நிறைந்துமிருக்கும். பித்த ஸிரைகள் உஷ்ணமாகவும் நீல நிறமாகவும் இருக்கும். கப ஸிரைகள் சீதமாகவும் மஞ்சள் கலந்த வெண்மை நிறமாகவும் இருக்கும். ரத்த ஸிரைகள் நல்ல சிவப்பாக இருக்கும்[2].

---

1. வாதம், பித்தம், கபம் என்பவை நாம் உண்ணும் ஆகாரம் முதலியவைகளிலிருந்து உண்டாகும் பொருள்கள். அவற்றின் விபரம் இனி விவரிக்கப்படும்பரிணாமவிபாகத்தில் காண்க.

2. இதில் சொல்லப்பட்ட நான்குவித ஸிரைகளில் பித்த ஸிரைகளை மேல் நாட்டார் ( veins ) அசுத்த ரத்தக்குழாய்கள் என்றும், ரத்த ஸிரைகளை ( arteries ) சுத்த ரத்தக்குழாய்கள் என்றும் பெயரிட்டிருப்பதாகத் தெரிகிறது. வாத ஸிரைகள், கப ஸிரைகள் இவ்விரண்டும் தனியாகப் பிரிக்கப்பட்டுப் பெயரிடப்படவில்லையென்று தெரிகிறது.

நாபியிலிருந்து கிளம்பியபிறகு ஒவ்வொரு 10 ஸிரைகளும் 175 ஸிரைகளாகப்பிரிந்து சரீரம் முழுவதும் வியாபிக்கின்றன. இந்த 175ல் கால் கைகளில் 100ம், உடம்பில் 34ம் கழுத்துக்கு மேல் 41 மாகப் பரவி நிற்கின்றன.

ஆகையால் ஒவ்வொரு அங்கத்திலும் 4 வித ஸிரைகளும் சமமான எண்ணிக்கையுள்ளவைகளாகவே செல்லுகின்றன. இதில் பித்த ஸிரையின் கிளைகளில் ஒரு விசேஷமுண்டு. கழுத்துக்கு மேல் செல்லுகிற பித்த ஸிரைகளுள் கண்களில் 10ம், காதுகளில் 2ம் செல்லுகின்றன. மற்றவகை ஸிரைகள் கண்களில் 8ம் காதுகளில் 4ம் செல்லுகின்றன. இதற்குக் காரணம் கண்களின் பிரகாசம் பித்தத்தின் சக்தியால் ஏற்படுகிறது என்பதேயாகும்.

இந்த 700 ஸிரைகளில் கத்தி படக்கூடாதவை 98. இவற்றுள் கால்கைகளில் 16ம், உடம்பில் 32ம், கழுத்துக்கு மேல் 50ம் இருக்கின்றன. இவற்றின் விவரத்தை ஸுச்ருத ஸம்ஹிதை, சாரீரஸ்தானம், 7வது அத்யாயம், 21வது சுலோகத்திற்குப்பின் உள்ள உரைநடைப்பகுதியில் காண்க.

4. தமனிகள்[1] அல்லது வாயுவினால் நிரப்பப்படக்கூடியவை 200 :—

இவைகளையே தமிழில் நாடிகள் என்று வழங்குகிறோம். நாடி என்ற சொல்லுக்கு நாளம் என்னும் குழாய் போன்ற த்வார முள்ளது என்பது பொருள். இவைகளும் நாபியிலிருந்து 24 மூல தமனிகளாகக் கிளம்பி 10 மேல் நோக்கியும், 10 கீழ் நோக்கியும் 4 குறுக்காகவும் செல்லுகின்றன. மேலே செல்லும் 10 தமனிகளும் இருதய ஸ்தானத்திற்குச் சென்றதும் ஒவ்வொன்றும் மூன்றாகப்பிரிந்து 30 ஆகின்றன.

இந்த 30 கிளைகளுள் 8 கிளைகள் சத்தம், ரூபம், ரஸம், கந்தம், இவைகளை எடுத்துச் சென்று அவைகளை அறியும் சக்தியினிடம் உதவுகின்றன. 12 கிளைகள் மூச்சு விடுதல் மூச்சு உள்ளிழுத்தல், பேசுதல், கத்துதல், தூக்கம், விழித்தல், கொட்டாவி விடுதல், தும்மல், சிரித்தல், கண்ணீர் விடுதல்,

1. தமனிகளை மேல் நாட்டார் 'nerves' என்ற பெயரிட்டழைக்கிறார்கள்.

ஸ்திரீகளுக்குப் பால் சுரத்தல், புருஷர்களுக்கு சுக்கிரம் சுரத்தல் முதலிய வேலைகளைச் செய்விக்கின்றன. பாக்கி 10 கிளைகள் தொப்புளுக்கு மேலே உள்ள இடங்களில் வாதம், பித்தம், ச்லேஷ்மம், ரத்தம், ரஸம் இவைகளை அவைகளின் மார்க்கங்களில் செல்லும்படி செய்கின்றன. தமனிகள் இரட்டைகளாகச் சேர்ந்தே வேலை செய்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

கீழே செல்லும் 10 தமனிகளும் வயிற்றுக்கும் குடலுக்கும் இடையே ஒவ்வொன்றும் 3-ஆகப் பிரிந்து 30 ஆகின்றன. இவை பித்தாசயத்தை [1] அடையும்போது அங்குள்ள அன்னபான ரஸத்தை நன்றாகப் பக்குவம் செய்வித்து ரஸத்தை அதன் ஸ்தானத்துக்கு அனுப்புகின்றன. மேலே சொல்லப்பட்ட 30 பிரிவுகளில் 2 பிரிவுகள் குடலில் அன்ன பானாதிகளை நகரும்படி செய்கின்றன, 2 பிரிவுகள் அங்கிருந்து திரவமான கழிவுப்பொருளை மூத்திராசயத்துக்குச் செலுத்துகின்றன, சுக்ரத்தை 2 பிரிவுகள் சேர்க்கின்றன, 2 பிரிவுகள் சுக்ரத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த 4 பிரிவுகளே ஸ்திரீகள் சரீரத்தில் ருதுவை உண்டாக்கி வெளிப்படுத்துகின்றன. 2 பிரிவுகள் மலத்தை வெளிப்படுத்துகின்றன, 2 பிரிவுகள் மூத்திரத்தை வெளிப்படுத்துகின்றன. இப்படி வேலை செய்யும் 12 பிரிவுகள் போக பாக்கி 18 பிரிவுகளில் 8 பிரிவுகள் குறுக்கே செல்லும் 4 மூலதமனிகளிடத்தில் வியர்வையைச் சேர்ப்பிக்கின்றன. பாக்கி 10 பிரிவுகளும் தொப்புளுக்குக் கீழே உள்ள பாகங்களில் வாதம், பித்தம், கபம், ரத்தம், ரஸம் இவைகளை அவைகளின் மார்க்கங்களில் செலுத்துகின்றன.

குறுக்காகச் செல்லும் 4 மூலதமனிகளும் ஒவ்வொன்றும் நூற்றுக் கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் பிரிந்து சரீரத்தில் வியாபிக்கின்றன. அவற்றின் நுனிகள் மயிர்க்காம்புகளோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் சரீரத்தின் உள்ளும் புறமும் ரஸம் பரவுவதற்கு உதவுகின்றன. முக்கியமாக சரீரத்திலிருந்து வியர்வையை வெளிப்படுத்துகின்றன. இவைகளின் உதவியினாலேயே உடம்பின்மேலே தேய்க்கப்படும் எண்ணெ முதலிய பசையுள்ள பொருள்கள் உடம்பிற்

---

1. பித்தாசயம் = இருதயத்துக்கும் தொப்புளுக்கும் இடையே உள்ள ஸ்தானம்.

குள் செல்லுகின்றன. ஸ்பர்ச உணர்ச்சியை எடுத்துச் செல்வனவும் இவைகளே.

5. யோக வாஹி என்னும் மிக சூக்ஷ்மமான ஸ்ரோதஸ்கள் அல்லது நாடிகள் 22, இவைகள் யோகிகளுக்கே வசமாகக்கூடியவை. இவற்றின் விவரம் யோகசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

6. ஸ்ரோதஸ் என்னும் கால்வாய்கள் [1] :— இவை நமது சரீரத்திலுள்ள ரஸம், ரத்தம், மாம்ஸம், மேதஸ், எலும்பு முதலிய தாதுக்கள் [2] ஒன்று மற்றொன்றாக மாறும் போது அவற்றை எடுத்துச்செல்லும் கால்வாய்கள். உடம்பில் ஸிரைகள், தமனிகள், யோக வாஹிகள் தவிர மற்ற குழாய்கள் ஸ்ரோதஸ்ஸுகள் என்று கொள்ளலாம்.

இவைகளுள் 13 வகை உண்டு :—

(1) ப்ராணவஹம் — இவை ப்ராண வாயுவை எடுத்துச் செல்கின்றன — இதன் மூலம் : இருதயமும், மஹா ஸ்ரோதஸ் என்னும் அன்னபான மார்க்கமுமாகும்.

(2) உதகவஹம் — இவை சரீரத்திற்கு வேண்டிய நீரை எடுத்துச் செல்கின்றன. இவற்றின் மூலம் : மேல் வாயின் அடிப்பக்கமும் க்லோமம் என்னும் நுரையீரலும்.

(3) அன்னவஹம் — இது ஆகாரத்தை எடுத்துச் செல்கிறது. இதன் மூலம் ; வயிறும், இடது விலாவும்.

(4) ரஸவஹம் — இவை நம்முடைய ஆகாரத்தின் ஸாரத்தை எடுத்துச் செல்கின்றன. இவைகளின் மூலம் : இருதயமும், இருதயத்தின் வழியே செல்லும் 10 தமனிகளும்.

(5) ரத்தவஹம் — இவை ரத்தத்தை எடுத்துச் செல்கின்றன. இவற்றின் மூலம் : கல்லீரலும், மண்ணீரலும்.

(6) மாம்ஸவஹம் — இவைகள் மாம்ஸத்தை மேதஸ்ஸாக மாறும் இடத்திற்கு எடுத்துச் செல்வது. இதன் மூலம் : ஸ்நாயு என்ற தடித்த தசை நார்களும், தோலும்.

---

1. 'ஸ்ரோதஸ்ஸுகள்' என்பதை மேல்நாட்டார் 'ducts' என்று அழைக்கிறார்கள்.

2. தாதுக்களின் விவரத்தை மேலே பரிணாம விபாகத்தில் காண்க.

(7) மேதோவஹம் — இது மேதஸ் என்னும் கொழுப்பை எலும்பாக மாறும் இடத்திற்கு எடுத்துச் செல்வது. இதற்கு மூலம்: மூத்திரக் குண்டிக்காய்களும், வபாவஹனமும் [1]

(8) அஸ்திவஹம் — இது எலும்பின் சத்தை மஜ்ஜையாகச் செய்வதற்காக எடுத்துச் செல்வது. இதன் மூலம்: மேதஸ்ஸும், இடுப்பின் பின் புறமும்.

(9) மஜ்ஜவஹம் — இது மஜ்ஜையை சுக்ரமாகச் செய்யும் இடத்திற்கு எடுத்துச் செல்வது. இதற்கு மூலம்: எலும்புகளும், எலும்பு சேரும் ஸந்திகளும்.

(10) சுக்ரவஹம் — இது சுக்ரத்தை எடுத்துச் செல்வது. இதன் மூலம்: விரைகளும், குறியும்.

(11) மூத்ரவஹம் — இது மூத்திரத்தை எடுத்துச் செல்வது. இதன் மூலம்: மூத்திரப் பையும், துடையிடுக்குகளும்.

(12) மலவஹம் — இது மலத்தை எடுத்துச் செல்வது. இதன் மூலம்: பக்வாசயம் என்னும் சிறு குடலும், பெருங்குடலும்.

(13) ஸ்வேதவஹம் — இவை வியர்வையை எடுத்துச் செல்வன — இவற்றின் மூலம்: மயிர்க்காம்புக் குழிகள்.

வாதம், பித்தம், சிலேஷ்மம் இவை மூன்றும் மேலே சொல்லப்பட்ட எல்லா ஸ்ரோதஸ்ஸுகளின் வழியாகவும் தேக முழுவதும் வியாபிக்கின்றன.

மேலே சொல்லப்பட்ட ஸ்ரோதஸ்ஸுகளில் சில திரண்டு பெருத்தும், சில மிக மெல்லியதாகவும் சில நீண்டும் சில அகலமாகவும் இருக்கின்றன. இவைகளின் வர்ணம் தாம் தாம் எடுத்துச் செல்லுகிற தாதுவின் வர்ணமேயாகும். மேலே ஒவ்வொரு வித ஸ்ரோதஸ்ஸுக்கும் மூலம் என்ற சில இடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களில் ஸ்ரோதஸ்ஸுகள் ஆரம்பிக்கும் அல்லது முடியும் என்பதே அதன் பொருள்.

---

[1] வபாவஹனம் = peritoneum and omentum.

7. அஸ்திஸந்திகள் 210: இவைகள் எலும்புகள் சேரும் இடங்கள். இவைகளில் இருவகை: (1) அசையும் ஸந்திகள், (2) அசையாத ஸந்திகள்.

அசையும் ஸந்திகள், கை கால்களிலும், முகவாய்க் கட்டையிலும், இடுப்பிலும் இருப்பவை.

மற்றவை அசையாதவை.

மேலே சொல்லியப்படி 210-ல் கால் கைகளில் 68-ம், உடம்பில் 59-ம், கழுத்துக்குமேல் 83-ம் உள்ளன. ஸந்திகளின் உருவத்தைப் பொறுத்து அவைகளை 8 வகையாகவும் பிரித்திருக்கிறார்கள். இவற்றின் விவரங்களை ஸுச்ருதஸம்ஹிதை, சாரீரஸ்தானம் 5-வது அத்யாயத்தில் விரிவாகக் காண்க.

8. ஜாலங்கள், அதாவது வலையைப்போல இடுக்குகளோடு அமைக்கப்பட்ட அமைப்புகள். இவை 4 வகை:—

(1) மாம்ஸ ஜாலம்.
(2) ஸ்நாயு ஜாலம்.
(3) அஸ்தி ஜாலம்.
(4) ஸிராஜாலம்.

இந்நான்கு வகை ஜாலங்களும் ஒன்றுக்குள் ஒன்று புகுந்து இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை 2 மணிக்கட்டுகளிலும், 2 கணுக்கால்களிலும் ஆக 4 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

9. கூர்ச்சங்கள் 6. இவை மேலே சொல்லப்பட்ட ஜாலங்கள்போல் அஸ்தி, ஸிரா, ஸ்நாயு, மாம்ஸம் இந்நான்கும் சேர்ந்து நீண்டு ஒரு பக்கம் குறுகியிருக்கும் அமைப்புகள். இவைகள் கால், கைகளில் 4-ம், கழுத்தில் 1-ம், குறியில் 1-ம் இருக்கின்றன.

10. பெரிய மாம்ஸக் கயிறுகள் 4— இவைகள் முதுகுத் தண்டில் தசைகளைப் பிணிப்பதற்காக ஏற்பட்டவை. உள்ளே இரண்டும் வெளியே இரண்டுமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

11. தையல் மேடுகள் 7. இவை தலையில் 5-ம், நாக்கில் 1-ம் குறியில் 1-ம் அமைந்திருக்கின்றன. துணி தைத்த மேடுபோல் இருப்பன.

12. மர்மங்கள் 107. இந்த ஸ்தானங்களுக்குக் கெடுதி நேரிட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படுமாகையால் இவைகளுக்கு மர்மங்கள் அல்லது மரண அபாயத்தைத் தரும் ஸ்தானங்கள் என்ற பெயர் இட்டிருக்கிறார்கள் :—

இவைகளுள் :—

| | |
|---|---|
| மாம்ஸ மர்மங்கள் | 11. |
| ஸிரை மர்மங்கள் | 41. |
| ஸ்நாயு மர்மங்கள் | 27. |
| அஸ்தி மர்மங்கள் | 8. |
| ஸந்தி மர்மங்கள் | 20. |
| ஆ | 107. |

இவைகள் இருக்கும் இடங்கள் :—

| | |
|---|---|
| கால் கைகளில் | 44. |
| வயிறு மார்புகளில் | 12. |
| முதுகில் | 14. |
| கழுத்துக்குமேல் | 37. |

இவைகளுக்கு அபாயம் ஏற்பட்டு மரணம் உண்டாகும் காலவரையறையைப் பொறுத்து ஐந்து வகையாகப் பிரித்திருக்கிறார்கள் :—

1. உடனே மரணத்தைக் கொடுப்பது 19. இவைகளுக்குக் கெடுதி ஏற்பட்டால் உயர்ந்தது 7 நாட்களில் உயிருக்குக் கெடுதி ஏற்படும்.

2. காலக்ரமத்தில் மரணத்தைக் கொடுப்பது 33. இவைகளுக்குக் கெடுதி ஏற்பட்டால் சுமார் 15 நாள் முதல் 1 மாதத்திற்குள் உயிருக்குக் கெடுதி ஏற்படும்.

3. உள்ளே தைத்திருக்கும் ஆயுதம் முதலியவற்றை எடுத்தால் பிறகு மரணத்தைக் கொடுப்பது 3.

4. அங்கம் அல்லது இந்த்ரியத்தைக் கெடுப்பது 44.

5. வலியைக் கொடுப்பது 8.

இவற்றின் பூரா விபரத்தை மேலேகண்ட ஸுச்ருத ஸம்ஹிதையில் காண்க.

13. கலைகள் அல்லது மீதியான தாதுக் கசிவுகள் :—

நாம் உண்ணும் உணவு நமது சரீரத்தில் பல மாறுதல்களை அடைகின்றன. அவைகள் தாதுக்கள், தோஷங்கள் மலங்கள் என்ற மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ரஸம், ரத்தம், மாம்ஸம், மேதஸ், எலும்பு, மஜ்ஜை, சுக்லம், என்பன தாதுக்கள். வாதம், பித்தம், சிலேஷ்மம் என்பன தோஷங்கள். மலம், மூத்திரம் வியர்வை முதலியன மலங்கள்[1]. இவைகளுள் ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டான பிறகு அவ்விரண்டையும் பிரிப்பது போன்ற ஒரு கசிவு ஒன்று இடையே மிச்சப்படுகிறது. அது சவ்வுக்களாலும், ஸ்நாயுக்களாலும், சிலேஷ்மத்தாலும் மூடப்பட்டிருக்கும். இதற்குக் ‘கலை’ என்று பெயர். இது 7 வகை :—

1. மாம்ஸதராகலா—மாம்ஸத்தில் பரவும் ஸிரை, ஸ்நாயு, தமனி, ஸ்ரோதஸ் இவைகள் இந்தக் கலையின் வழியாகப் பரவுகின்றன.

2. ரத்ததராகலா—இது மாம்சத்திற்குள் ரத்தம் இருக்குமிடங்களிலும், ரத்தக் குழாய்களான ஸிரைகளிலும், ரத்தஸ்ரோதஸ்ஸின் மூலங்களான கல்லீரல், மண்ணீரலிலும் ரத்தத்தை தாங்கி நிற்பது.

3. மேதோதராகலா—இது மேதஸ் தங்கியிருக்கும் வயிற்றுச்சதையிலும், சிறிய எலும்பு[2]

---

1. இவற்றின் விவரத்தை மேலே பரிணாம விபாகத்திற் காண்க.

2. பெரிய எலும்புகளுக்குள் இருப்பது மஜ்ஜை. ஆனால் சிறிய எலும்புகளுக்குள் இருப்பது மேதஸ்ஸும் ரத்தமுமே.

களுக்குள் தங்கியிருக்கும் மேதஸ்ஸிலும், இருந்து மேதஸ்ஸை காப்பாற்றுகிறது.

4. சிலேஷ்மதராகலா—இது நமது கால், கை முதலிய அங்கங்களை மடக்கவும், நீட்டவும் எண்ணை போட்டதுபோல் ஒத்தாசை செய்யும் சிலேஷ்மத்தோடு சேர்ந்து சந்திகளில் இருந்து சிலேஷ்மத்தைக் காப்பாற்றுகிறது.

5. மலதராகலா—இது நமது உடம்புக்குள் மலம் சேகரிக்கப்படும் இடமாகிய பெருங்குடல், மல்தரா என்னும் பாகம் முதலான இடங்களில் இருந்து மலத்தை, அது தங்கும் இடத்தினின்றும் பிரிக்கிறது.

6. பித்ததராகலா—இது வயிற்றுக்கும் குடலுக்கும் இடையே உள்ள க்ரஹணியில் இருந்துகொண்டு வயிற்றில் ஆகவேண்டிய பக்வம் முடியும் வரையில் அன்னத்தைக் கீழே இறங்காமல் தாங்குகிறது. இதையே அக்கினிகலா என்றும் சொல்லுகிறார்கள்.

7. சுக்ரதராகலா—சரீரம் முழுவதும் வியாபித்திருக்கும் சுக்ரத்தைக்[3] காப்பாற்றுகிறது.

அங்க விபாகத்தைப் பிரத்தியக்ஷமாகப் பரிசோதிக்கும் முறை :—

(a) இறந்தவர்களின் தேகத்தை அறுத்துப் பரிசோதனை செய்தல்.

(b) அங்க ஹீனமில்லாமல் இறந்தவனுடைய சரீரத்தை தர்ப்பை, முஞ்சிப்புல் முதலியவற்றால் மூடி நன்றாய் இறுக்கிக்கட்டி, ஒரு துவாரமுள்ள பெட்டியில் வைத்து, ஓடுகிற ஆற்றில் அமுக்கி வைத்து ஏழு நாள்

3. சுக்ரமானது அதன் ஆசயத்தில் இருப்பதோடு சரீரம் முழுவதும் வியாபித்திருக்கிறது என்றும் ஸ்திரீ புருஷ ஸங்கம காலத்தில் அது சீக்கிரத்தில் சுரந்துவிடுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸுச்ருதம்-சரீர ஸ்தானம் அத்தியாயம் 4, ச்லோ. 23.

கழித்து எடுத்து, ஜாக்ரதையாக சரீரத்தைப் பிரித்து, மெல்லிய குச்சியால் தேகத்தின் தோல் முதலியவைகளைப் புறட்ட, ஒவ்வொரு பாகமாகத் தனியே பெயர்ந்து வரும். அவைகளைக் கவனித்தால் தோல் முதல் எல்லா அங்கங்களின் அமைப்பும் படிப்படியாகத் தெரியும்.

(c) இதிலும் விளங்காதவைகளை, யோக சக்தியால் மகரிஷிகள் கண்டு பிடித்து எழுதியிருக்கும் ஆயுர்வேத நூல்களின் ஒத்தாசையைக்கொண்டு அறியவேண்டும்.

ஆகவே நூலைக்கற்று, அவற்றிலுள்ளதைக் கூடுமான வரையில் சரீரப்பரீக்ஷையினால் பரிசோதித்து மனதில் நிச்சய ஞானத்தை அடையவேண்டுமென்பது ஆயுர் வேதத்தின் முறை.

(d) உடம்பிலுள்ள த்ரவம் முதலிய பதார்த்தங்களின் அளவுகள் :—

அடியிற்கண்ட அளவுகள் மேல் எல்லையாகக் கருதப்படவேண்டும். சரீரத்துக்குத் தக்கபடி இந்த அளவுக்குக் குறைவாகவும் இருக்கலாம்.

தன் இருகைகளையும் சேர்த்துக் கிண்ணிபோல் அமைத்து அளக்கும் அளவுக்கு 'அஞ்சலி' என்று பெயர். இவ்வித அஞ்சலிகளால் சரீரத்தில் உள்ள த்ரவம் முதலிய பொருள்களின் அளவுகள் பின் வருமாறு :—

(1) ஜலம்—அதாவது சரீரத்தில் இருந்து கொண்டு பேதிக்குச் சாப்பிடும்போது அல்லது வேறு காரணங்களால் பேதியாகும் போது வெளியே வரக்கூடியதும், மூத்திரம், ரத்தம் இவைகளைச் சிலசமயம் அதிகமாக்கக் கூடியதும், உடம்பு முழுவதும் பரவி மேல் தோலைத்தாங்கி வருவதும், தோலுக்குள் காயங்கள் ஏற்படும் போது அதிலி

ருந்து லஸிகா அல்லது ஊநீர்தண்ணீராக வெளி வருவதும், உஷ்ணத்தினால் மயிர்க் காம்புகளின் வழியாக வியர்வையாக வெளியே வரக்கூடியதுமான ஜலத்தின் பரிமாணம்— 10 அஞ்சலி.

| | | | |
|---|---|---|---|
| (2) | ஆகாரத்தினின்றும் அதன் முக்ய அம்சமாக உண்டாகும் ரஸம் என்னும் தாது (Chyle) | 9 | ,, |
| (3) | ரத்தம் | 8 | ,, |
| (4) | மலம் | 7 | ,, |
| (5) | ச்லேஷ்மம் (கபம்) | 6 | ,, |
| (6) | பித்தம் | 5 | ,, |
| (7) | மூத்திரம் | 4 | ,, |
| (8) | வஸை அதாவது சுத்த மாம்சத்தினின்றும் வெளி வரக்கூடிய நீர் | 3 | ,, |
| (9) | கொழுப்பு | 2 | ,, |
| (10) | மஜ்ஜை அல்லது எலும்புக்குள் உள்ள ஸாரம் | 1 | ,, |
| (11) | மூளை | ½ | ,, |
| (12) | சுக்லம் | ½ | ,, |
| (13) | ஓஜஸ் எனப்படும் ச்லேஷ்மம் | ½ | ,, |

(e) உடம்பிலுள்ள பஞ்சபூதங்களின் அம்சங்கள் :—

(1) பிருதிவி அம்சம் :— ஸ்தூலமாகவும், திடமாகவும், உருவமுடையதாகவும், கனமாகவும், வழுவழுப்பில்லாமலும், கடினமாகவும், உள்ள அங்கங்கள், அதாவது : நகம், எலும்பு, பல், மாம்சம், தோல், உடம்பின் உருவ அமைப்பு, மயிர், தடித்த மாம்ஸக் கயிறுகள், முதலியனவும், நாற்றமறியும் புலனும், நாற்றமும் பிருதிவி அம்சம்.

(2) அப்பின் அம்சம் :— திரவமாகவும், ஓடக் கூடியதாகவும், கடுமையில்லாததாகவும்,

எண்ணெய்ப்பசை யுள்ளதாகவும், மிருதுவாகவும், பசையைப்போல் ஒட்டிக்கொள்ளக் கூடியதாகவும், உள்ளபாகங்கள் அதாவது: ரஸதாது, ரத்தம், வஸை, கபம், பித்தம், மூத்திரம், வியர்வை, முதலியனவும் உருசி அறியும் புலனும், உருசியும் அப்பின் அம்சம்.

(3) தேயு அல்லது அக்னியின் அம்சம் — பித்தம், உஷ்ணம், சரீரத்தின் காந்தி, முதலியனவும், உருவத்தையறியும் புலனும், உருவமும் தேயுவின் அம்சம்.

(4) வாயுவின் அம்சம் — மூச்சு வாங்கிவிடுதல், கண் இமைத்தல், உடம்பைக்குறுக்கல், நீட்டல், செல்லுதல், நடத்துதல், தூக்குதல் முதலியனவும், ஸ்பர்சத்தை உணரும் புலனும் ஸ்பர்சமும் வாயுவின் அம்சம்.

(5) ஆகாச அம்சம் — இடைவெளிகளும், பெரிய சிறிய துவாரங்களும், சத்தத்தை அறியும் புலனும், சத்தமும் ஆகாச அம்சம்.

---

## 2. பரிணும விபாகம்

நாம் உண்ணும் உணவும் பருகும் பானங்களும் நமது சரீரத்திலுள்ள பல பாகங்களுக்கும் வளத்தைக் கொடுக்கின்றன. அந்த ஆகாரத்தில் ஏற்படும் பிசகினுலேயே பெரும்பாலும் வியாதிகளும் உண்டாகின்றன. ஆகையால் ஆகாரம் நமது உடம்பில் எவ்வித மாறுதல்களை அடைகின்றது என்பதை ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம்.

அதற்கு அடிப்படையாக நாம் உட்கொள்ளும் பொருள்களின் குணங்களையும் அவை ஒவ்வொன்றிலும் சேர்ந்திருக்கும் அம்சங்களையும் ஆராய்தல் வேண்டும். இதையே ஆயுர்வேதத்தில் த்ரவ்ய விஞ்ஞானம் என்று சொல்லுகிருர்கள் :—

1. த்ரவ்யங்களில் சேர்ந்திருக்கும் அம்சங்கள் :—

இம்முகவுரையின் ஆரம்பத்தில் கூறியபடி நமது அன்னபானுதிகள் உள்பட உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், என்னும் ஐந்து மூலப் பொருள்களாலேயே உண்டாக்கப்பட்டவை. இவ்வைந்தும் சேராத பொருள்களே கிடையாது. ஆனுல் சில பொருள்களில் பிருதிவியின் அம்சம் அதிகமாகவும், சில பொருள்களில் அப்பின் அம்சமும், வேறு சில பொருள்களில் முறையே தேயு, வாயு, ஆகாயம் என்ற மூலப் பொருள் அதிகமாகவும் இருப்பதனுல் பொருள்களை :—

(1) பார்த்திவ த்ரவ்யம்
(2) ஆப்ய த்ரவ்யம்
(3) தைஜஸ அல்லது ஆக்நேய த்ரவ்யம்
(4) வாயவ்ய த்ரவ்யம்
(5) ஆகாசாத்மக த்ரவ்யம்

என்று 5 வகையாகப் பிரித்திருக்கிருர்கள். அவைகளுக்கான சில அடையாளங்களையும் அவை நமது உடம்பில் செய்யக் கூடிய வேலைகளையும் தெளிவாகப் பிரித்துக் கூறியிருக்கிருர்கள் :—

| த்ரவ்யம் | அடையாளமான குணங்கள் | உடம்பில் செய்யும் வேலை |
|---|---|---|
| 1. பார்த்திவம் (ப்ருதிவி அம்சம் மிகுதியானது) | கனம்<br>சுறசுறப்பு<br>கடினம்<br>வேகமில்லாமை<br>அசையாமை<br>ஒட்டிக்கொள்ளாமை<br>இறுகியிருக்கும் தன்மை<br>புலனுக்கு எளிதில் புலப்படுதல்<br>நாற்றம் என்ற குணத்தின் மிகுதி | விருத்திசெய்தல்<br>இறுகச்செய்தல்<br>கனக்கச்செய்தல்<br>அசையாதிருக்கச் செய்தல் |

| | | |
|---|---|---|
| 2. ஆப்யம் (அப்பின் அம்சம் மிகுதியானது) | திரவம்<br>எண்ணெய் போன்ற நைப்பு<br>குளிர்ச்சி<br>வேகமில்லாமை<br>அசையுந்தன்மை<br>இடைவெளியில்லாமை<br>மிருது<br>ரசம் அல்லது உருசி என்னும் குணத்தின் மிகுதி | நனைத்தல்<br>எண்ணெய் போன்ற நைப்பு உண்டாக்கல்<br>பிணைத்தல்<br>இளகி ஓடச்செய்தல்<br>மிருதுவாக்கல்<br>மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தல் |
| 3. தைஜஸம் அல்லது ஆக்நேயம் | உஷ்ணம்<br>வேகம்<br>நுட்பம்<br>கனமில்லாமை<br>வறட்சி<br>ஒட்டிக்கொள்ளாமை<br>ரூபம் என்னும் குணத்தின் மிகுதி | எரித்தல்<br>வேகச் செய்தல்<br>உருவத்தைத் தெளிவுறக் காட்டல்<br>பளபளப்பைக் கொடுத்தல்<br>மேனியைக் கொடுத்தல் |
| 4. வாயவ்யம் (வாயு அம்சம் மிகுதியாக உள்ளது) | கனமில்லாமை<br>குளிர்ச்சி<br>வறட்சி<br>சுறசுறப்பு<br>ஒட்டிக்கொள்ளாமை<br>நுட்பம்<br>ஸ்பர்ச குணத்தின் மிகுதி | வறட்சியுண்டு பண்ணல்<br>அயர்வுண்டாக்கல்<br>மனதில் பற்பல எண்ணங்களைக் கொடுத்தல்<br>இடைவெளியுண்டாக்கல்<br>இலேசாகச் செய்தல் |
| 5. ஆகாசாத்மக (ஆகாய அம்சம் அதிகமாக உள்ளது) | மிருதுத் தன்மை<br>கனமில்லாமை<br>நுட்பம்<br>மழமழப்பு<br>சத்தம் என்னும் குணத்தின் மிகுதி | மிருதுவாக்கல்<br>த்வாரமுண்டாக்கல்<br>இலேசாகச் செய்தல் |

2. த்ரவ்யங்களின் குணங்கள்

இவ்வைந்துவகை த்ரவ்யங்களின் அடையாளங்களை ஒன்றுசேர்த்தால் 25 குணங்கள் கிடைக்கின்றன.

அவை :—

| | |
|---|---|
| கனம் | இலேசு |
| சுறசுறப்பு | மழமழப்பு |
| கடினம் | மிருது |
| மெது | வேகம் |
| அசையாமை | அசையுந்தன்மை |
| ஒட்டிக்கொள்ளாமை | ஒட்டிக்கொள்ளுந் தன்மை |
| இறுகியிருத்தல் | நெகிழ்ந்தோடுந் தன்மை |
| ஸ்தூலம் | நுட்பம் |
| நெய்ப்பு | வறட்சி |
| உஷ்ணம் | குளிர்ச்சி |

சத்தம்
ஸ்பர்சம்
ரூபம்
ரசம்
கந்தம்

ஆயுர்வேதத்தில் முக்கியமாக ஆராயவேண்டிய குணங்கள் :—

(1) ரஸம் :—

கடைசியாகச் சொல்லப்பட்ட 5 குணங்களில் ரஸம் என்ற உருசியை நாம் மிகவும் முக்கியமாக ஆராய்வேண்டும். ஏனெனில் த்ரவ்யங்கள் நமது உடம்பில் எவ்விதம் மாறுகின்றன என்பது அந்த த்ரவ்யங்களின் ரஸத்தையே பொறுத்திருக்கிறது. ரஸம் என்ற உருசியின் முக்யத்துவத்தைச் சிறிது விளக்குவோம். மேல்நாட்டார் த்ரவ்யங்களின் சேர்க்கையை chemical composition (ரசாயனச் சேர்க்கை) என்று அழைக்கிறார்கள். அவ்வித ரசாயனச் சேர்க்கையைப் பொறுத்து சேர்க்கை த்ரவ்யங்களை acid, alkali, salt (அம்லம், காரம்

உப்பு ) என்று 3 வகையாகப் பிரித்திருக்கிறார்கள். இம்மூன்றையும் எளிதில் அவைகளின் உருசியைக்கொண்டு கண்டுபிடித்துவிடலாம். ஏனெனில் acid ( அம்லம் ) என்பது புளிப்பு. Alkalis ( காரம் ) என்பது உவர்ப்பும் உப்பும். Salts ( உப்பு ) என்பது உப்பு. ஆகையால் த்ரவ்யங்களின் சேர்க்கையின் தத்துவத்தை அவைகளின் உருசியே தீர்மானிப்பதால் உருசியைக்கொண்டு த்ரவ்யங்கள் நமது உடம்பில் மாறுபடும் விதங்களைக் கண்டுபிடிப்பது இலகுவாகிறது.

ரஸம் என்னும் உருசி 6 வகை :—

| ரஸம் | | | பஞ்சபூத அம்சங்கள் |
|---|---|---|---|
| இனிப்பு | ( மதுரம் ) | — | ப்ருதிவி, அப்பு |
| புளிப்பு | ( அம்லம் ) | — | ப்ருதிவி, தேயு |
| உப்பு | ( லவணம் ) | — | தேயு, அப்பு |
| உவர்ப்பு | ( கடு ) | — | தேயு, வாயு |
| கைப்பு | ( திக்தம் ) | — | வாயு, ஆகாயம் |
| துவர்ப்பு | ( கஷாயம் ) | — | வாயு — ப்ருதிவி. |

(2) விபாகம். த்ரவயங்கள் நமது தேகத்தில் பக்குவமாகும்போது அவற்றின் ரஸங்கள் சில வேறு ரஸங்களாக மாறுகின்றன. இப்படி பக்குவமாகும்போது மாறுகின்ற ரஸத்திற்கு 'விபாகம்' என்ற பெயர் கொடுத்திருக்கிறார்கள். நாம் த்ரவ்யங்களை நாக்கினால் சுவைக்கும்போது ஏற்படும் உருசியை 'ரஸம்' என்றும் பிறகு பக்குவமாகும்போது மாறும் உருசியை 'விபாகம்' என்றும் சொல்லுகிறோம்.

6 ரஸங்களும் பக்குவமாகும்போது இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு என்ற மூன்றே ரஸங்களாக மாறிவிடுகின்றன. பொதுவாகக் கூறுமிடத்து

| | |
|---|---|
| இனிப்பு<br>உப்பு | இவை இரண்டும் இனிப்பாகவும் |
| உவர்ப்பு<br>கைப்பு<br>துவர்ப்பு | இவை மூன்றும் உவர்ப்பாகவும் |
| புளிப்பு | புளிப்பாகவும் |

மாறுகின்றன. ஆனால் இதற்கு விலக்குகளும் உண்டு. ஒரே விதமான ரஸம் வெவ்வேறு த்ரவ்யங்களில் இருக்கும் போது வெவ்வேறாகப் பக்குவம் ஆகின்றன. ஆகையால் ஒவ்வொரு த்ரவ்யத்துக்கும் அதன் ரஸம் என்ன, விபாகம் என்ன என்பதை நூல்களிலிருந்தும் அனுபவத்தைக்கொண்டும் நிச்சயிக்கவேண்டும்.

(3) வீர்யம் :— த்ரவ்யங்களை சந்திர அம்சம் அக்கினி அம்சம், என்று பிரித்து சில த்ரவ்யங்களை உஷ்ண ஸ்வபாவமுள்ளவை என்றும் சில த்ரவ்யங்களை சீதஸ்வபாவ முள்ளவை என்றும் பிரித்திருக்கிறார்கள் என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. சீதம், அல்லது உஷ்ணம் என்ற இந்த அம்சத்துக்கு 'வீர்யம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு த்ரவ்யத்தின் வேலை அதன் வீர்யத்தையும் பொறுத்திருப்பதால் அதையும் நாம் தெளிந்தறிதல் வேண்டும்.

(4) ப்ரபாவம் : ஒவ்வொரு த்ரவ்யமும் அதன் சிறப்பான அம்சங்களின் பயனாக ஒரு தனியான சக்திவாய்ந்ததாக இருக்கிறது. அது அதன் ரஸம், வீர்யம், விபாகம் என்ற குணங்களைக் கொண்டு நிச்சயிக்கக் கூடியதல்ல. இந்தத் தனியான சக்திக்கு 'ப்ரபாவம்' என்றுபெயர். ஆகவே, த்ரவ்யங்களின் குணங்கள் 20-ம், ரஸம், விபாகம், வீர்யம், ப்ரபாவம் என்பனவும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியவையாகின்றன

ஆகார பரிணாமம்.

த்ரவ்யங்களின் குணங்களைப் பற்றித் தெரிந்துகொண்ட பின்னர் அவைகளை நாம் உட்கொண்டால் எவ்விதம் மாறுகின்றன என்பதை ஆராய்வோம்.

நாம் உட்கொண்ட அன்னபானாதிகள் ஆமாசயம் என்னும் வயிற்றில் (stomach) போனதும் முதலில் அதின் இனிப்பான அம்சங்களும், இனிப்பாக மாறக் கூடிய அம்சங்களும் பக்குவமடைகின்றன. இதுவே ஜீரணத்தின் முதற்பகுதி. இதற்கு மதுரபாகம் என்று பெயர். இந்த மதுரபாகத்தில் மேலே நுரையாக மிதக்கும் பாகத்துக்கு சிலேஷ்மம் அல்லது கபம் என்று பெயர்.

பிறகு நமது ஆகாரத்திலுள்ள புளிப்பான அம்சங்கள் பக்குவமாகின்றன. இதுவே ஜீரணத்தின் இரண்டாவது பகுதி. இதற்கு அம்லபாகம் என்று பெயர்.

இந்த சமயத்தில் ஆமாசயத்தினின்றும் ஆகாரமானது இடது பாகத்தில் க்ரஹணி என்னும் வளைந்த குழாயின் வழியாகச் சிறு குடலுக்கு இறங்குகிறது. இறங்கும் தறுவாயில் இந்த அம்லபாகத்தின் மேலே வரும் பாகத்துக்குப் பித்தம் என்று பெயர். சிறு குடலில் இறங்கிய பிறகு ஜீர்ணத்தின் மூன்றாவது பகுதி நடக்கிறது. இப்போது நம் ஆகாரத்தின் உவர்ப்பான பாகங்களும் உவர்ப்பாக மாறக்கூடிய பாகங்களும் பக்குவமடைகின்றன. இதற்குக் கடுபாகம் என்று பெயர். த்ரவமான ஸாரம் அல்லது ரஸம் சிறு குடல் பெருங்குடலின் முதற் பகுதி இவைகளால் உறிஞ்சப்பட்டு, சக்கையான மலம் பெருங்குடலின் பிற்பகுதியான மலதாரா ( transverse colon ) என்னும் இடத்தில் தங்குகிறது. கடுபாகத்தில் வாயு என்னும் அம்சமும் வெளியாகிறது. ஆகவே, நமது ஆகாரம் ஜீரணமாகும்போது ஸாரமான ரஸமும், சக்கையான மலம் மூத்திரமும், சிலேஷ்மம், பித்தம், வாயு என்னும் அம்சங்களும் உண்டாகின்றன.

ரஸம் ரத்தமாக மாறுகிறது. அப்போது அதிலிருந்து மலரூபமாகக் கபம் வெளி வருகிறது. ஆகவே முதலில் ஆகாரத்தின் மதுர பாகத்தின்போதும் பிறகு ரஸம் ரத்தமாக மாறும்போதும் ஆக இரண்டு சமயங்களிலும் கபம் உற்பத்தியாகிறது.

ரத்தமானது மாம்ஸமாக மாறுகிறது, அப்போது பித்தம் மலமாக வெளிவருகிறது. ஆகவே ஆகாரமானது அம்லபாகம் ஆகும்போதும் ரத்தம் மாம்ஸமாக மாறும்போதும் ஆக இரண்டு சமயங்களிலும் பித்தம் உற்பத்தியாகிறது.

மாம்ஸம் மேதஸ்ஸாக (கொழுப்பு) மாறுகிறது. அப்போது மலமாக வெளிவருவது காது முதலிய த்வாரங்களிலுள்ள அழுக்கு. மேதஸ்ஸானது அஸ்தி (எலும்பு) யாக மாறுகிறது. அப்போது மலமாக உற்பத்தியாவது வியர்வை. அஸ்தியானது மஜ்ஜையாக மாறுகிறது. அப்போது மலமாக உற்பத்தியாவதே நகமும், மயிரும்.

மஜ்ஜையானது சுக்ரமாக மாறுகிறது. அப்போது மலமாக உற்பத்தியாவது சரீரத்தின் எண்ணெப்பசை. இந்தப் பசை கண்களிலும், மலத்திலும், தோலிலும் உண்டாகிறது.

**வாதம், பித்தம், கபம்,**:— ரஸம் முதலிய ஏழு தாதுகளும் நமது சரீரமுழுதும் பல பாகங்களிலும் இருப்பது நமக்கு வெளிப்படை. அவை செய்யும் வேலைகளும் நமக்குத் தெரிந்ததே. அவை:

ரஸம் — சந்தோஷம் கொடுத்தல்
மஜ்ஜை — எலும்புத்வாரத்தை அடைத்தல்
ரத்தம் — போஷணை
மாம்ஸம் — பருமன்
மேதஸ் — நைப்பு
சுக்ரம் — கர்ப்பம் உண்டாக்கல்
அஸ்தி — நிலைநிறுத்தல்

ஆனால் வாதம், பித்தம், கபம் என்ற பரிணமங்களைப் பற்றிய விவரங்களைக் கூறவேண்டியது அவசியம்.

(1) வாதம்:— வாதம் என்பது கண்ணால் பார்க்கக் கூடியதில்லை, காற்று எப்படி ஸ்பர்ச உணர்ச்சியால் அறியப் படுகிறதோ அப்படியே சரீரத்தில் உண்டாகும் வாதமும் அது செய்யும் வேலையினாலும் மற்ற குணங்களாலும் அறியப் படும்.

ஆரோக்கியமான உடம்பில் வாதம் செய்யும் வேலை:—

(1) வாக்கு, மனது, காயம், புலன்கள் இவற்றின் சேஷ்டைகள்.

(2) உத்ஸாஹம், மூச்சுவிடுதல்.

(3) ரஸம், ரத்தம் முதலிய தாதுக்களை உடம்பில் ஸமமாகப் பரவும்படி செய்தல்.

(4) வெளியே போகவேண்டிய மலமூத்திராதிகளை போகச் செய்தல்.

வாதத்தின் குணங்கள்.

(1) வறட்சி
(2) இலேசு
(3) குளிர்ச்சி
(4) சுறசுறப்பு
(5) நுட்பம்
(6) ஸ்திரமில்லாமல் சஞ்சரிக்கும் தன்மை.

(2) பித்தம் — இது பெரும்பாலும் கண்ணால் பார்க்கக்கூடிய மஞ்சள் நிறமான த்ரவரூபமாகவே இருக்கும். ஆனால் இதுவே கண்ணுக்குத் தெரியாத அக்னி முதலிய சக்தியாகவும் வேலை செய்கிறது.

ஆரோக்கியமான உடம்பில் பித்தம் செய்யும் வேலை :—

(1) உஷ்ணத்தைக் கொடுத்தல்
(2) பசி, தாகம் உண்டாக்கல்
(3) ஆகாராதிகளைப் பக்குவம் செய்தல்
(4) கண்கள் பார்க்கும் சக்திக்கு உதவுதல்
(5) உடம்பின் காந்தியையும் ம்ருதுத்தன்மையையும் கொடுத்தல்
(6) புத்தியின் தெளிவு (சாந்தி), புத்தி கூர்மை, சௌரியம், இவைகளைக் கொடுத்தல்.

பித்தத்தின் குணங்கள் :—

(1) நைப்பு
(2) இலேசு
(3) உஷ்ணம்
(4) வேகம்
(5) நாற்றம்
(6) அசையுந் தன்மை
(7) நெகிழ்ந்தோடுதல்.

(3) சிலேஷ்மம் (கபம்)

இது கண்ணால் பார்க்கக் கூடியது, பசையுள்ள த்ரவ ரூபமாக இருக்கும். இதன் வர்ணம் வெளுப்பு.

ஆரோக்கியமான உடம்பில் சிலேஷ்மம் செய்யும் வேலை :—

(1) நைப்புக் கொடுத்தல்
(2) உடம்புக்குக் கட்டு உண்டாக்கல்
(3) அசையாமல் இருக்கச் செய்தல்
(4) உடம்பை கனக்கச் செய்தல்
(5) பலத்தைக் கொடுத்தல்
(6) பொறுமை, தைரியம், அவாவின்மை இவைகளைக் கொடுத்தல்

கபத்தின் குணங்கள் :—

(1) நைப்பு
(2) கனம்
(3) குளிர்ச்சி
(4) அசையாமை
(5) வழவழப்பு
(6) பசையுள்ள தன்மை

வாத பித்த, சிலேஷ்மங்களின் ஸ்தானங்கள் :—

வாதம், பித்தம், சிலேஷ்மம் இம்மூன்றும் எல்லா ஸ்ரோதஸ்ஸுகள், ஸிரைகள், இவைகளின் வழியாக உடம்பின் எல்லா பாகங்களிலும் பரவி வேலை செய்கின்றன. அவை தேக முழுவதும் பரவவேண்டும் என்பதும், அவைகள் உடம்பிற்கு மிகவும் அத்யாவசியமான பல வேலைகளைச் செய்கின்றன என்பதும், அந்த வேலைகளை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும்.

அவைகள் தேக முழுவதும் பரவி வேலை செய்வதோடு சில இடங்களில் அதிக அளவில் தங்கியிருக்கின்றன. அவ்விடங்களை வாத, பித்த, கப, ஸ்தானங்கள் என்பார்கள். அவை பின் வருமாறு :—

(a) வாதத்தின் ஸ்தானங்கள் :—

(1) பக்குவாசயம் ( குடல் )
(2) இடுப்பு
(3) மூத்திரப்பை
(4) துடைகள்
(5) பாதங்கள்
(6) எலும்புகள்
(7) பொதுவாகத் தொப்புளுக்குக் கீழே உள்ள ஸ்தானங்கள்.

இவைகளில் முக்கிய ஸ்தானம் பக்குவாசயம்.

(b) பித்தத்தின் ஸ்தானங்கள் :—

(1) ஆமாசயம் ( வயிறு )
(2) ரஸதாது
(3) ரத்தம்
(4) ஊந்தண்ணீர்
(5) வியர்வை
(6) கண்கள்
(7) பொதுவாகத் தொப்புளுக்கு மேலும் இருதயத்துக்குக் கீழும் உள்ள ஸ்தானங்கள்.

இவைகளில் முக்யமான ஸ்தானம் ஆமாசயம்.

(c) சிலேஷ்மத்தின் ஸ்தானங்கள் :—

(1) மார்பு
(2) கழுத்து
(3) தலை
(4) கணுக்கள்
(5) மேதஸ் என்னும் கொழுப்பு
(6) ஆமாசயம்
(7) பொதுவாக இருதயத்துக்கு மேலே உள்ள இடங்கள்.

இவைகளில் முக்யமான ஸ்தானம் மார்பு.

வாத, பித்த, சிலேஷ்மங்களின் வகை :—

வாதம், பித்தம், சிலேஷ்மம் இவை ஒவ்வொன்றையும் 5 வகையாகப் பிரித்திருக்கிறார்கள். இந்தப் பிரிவினை அவை இருக்கும் இடத்தையும் செய்யும் வேலையையும் பொறுத்திருக்கிறது :—

(a) வாதத்தின் 5 வகை :—

1. ப்ராணன் : இது தலை, கழுத்து, இருதயம் இந்த ஸ்தானங்களில் சஞ்சரிப்பது. இது செய்யும் வேலை :

(i) புத்தி, இருதயம், புலன்கள், சித்தம் இவைகளுக்கு ஆதாரம்.
(ii) ஆகாரத்தை உள்ளே இழுத்தல்.
(iii) மூச்சு விடுதல், எச்சில் உமிழ்தல், தும்மல், ஏப்பம், இவைகளைச் செய்வித்தல்.

2. உதானன் : இது மார்பிலும், மூக்கு, கழுத்து, தொப்புள் இந்த ஸ்தானங்களிலும் சஞ்சரிப்பது. இதன் வேலை :

(i) பேச்சு
(ii) மனது, இந்த்ரியம் இவைகளை பொருள்களின்மேல் செலுத்துதல்
(iii) முயற்சி
(iv) சக்தி
(v) வலிமை
(vi) மேனி
(vii) ஞாபக சக்தி

3. வியானன் : இது இருதயத்திலும் தேகத்தில் எல்லா பாகங்களிலும் வெகு வேகமாக சஞ்சரிப்பது. இதன் வேலை:

(i) நடை
(ii) அங்கங்களை கீழும் மேலும் போகச் செய்தல்.
(iii) கண்மூடித் திறத்தல்
(iv) பொதுவாக எல்லா சேஷ்டைகளும்

4. ஸமானன் : இது வயிற்றுக்கும் குடலுக்கும் இடையிலுள்ள க்ரஹணி என்னும் இடத்திலுள்ள அக்னிக்குச் சமீபமாக இருந்துகொண்டு கோஷ்டம் என்கிற உடம்பின் உள்புற முழுவதும் சஞ்சரிப்பது.

இது செய்யும் வேலை :

(i) ஆகாரத்தை வாங்கி அக்கினியின் உதவியால் அதைப் பக்குவப்படுத்தல்

(ii) ஆகாரத்தை ஸாரமாகவும் சக்கையாகவும் பிரிப்பது

(iii) மல மூத்திராதிகளை அவற்றின் கோசங்களில் சேர்ப்பது.

5. அபானன்: இது மல மார்க்கத்திலும், பின்புறம், மூத்திராசயம், குறி, துடை, இந்த பாகங்களிலும் சஞ்சரிப்பது. இது செய்யும் வேலை :

(i) சுக்ரம், ருது, மலம், மூத்திரம், கர்ப்பம், இவைகளை வெளிப்படுத்துவது.

**பித்தத்தின் 5 வகை :—**

(1) பாசக பித்தம்—இது ஆமாசயம் என்னும் வயிற்றுக்கும், பக்வாசயம் என்னும் சிறு குடலுக்கும் இடையிலுள்ள க்ரஹணி என்னும் பாகத்தில் இருப்பது. இது தன்னுடைய த்ரவ ரூபம்மாறி அக்னியாக ஆகிவிடுகிறது. இதன் பலத்தையே அக்னிபலம் என்கிறோம்.

க்ரஹணியை அக்னி ஆசயம் என்றும் கூறலாம். தேகத்தின் பல முக்யமான அம்சங்கள் இந்த அக்னியைப் பொறுத்தே இருக்கின்றன. அவையாவன :—

(1) ஆயுள்
(2) வர்ணம்
(3) பலம்
(4) ஆரோக்யம்
(5) உத்ஸாஹம்
(6) தேகபுஷ்டி.

(7) காந்தி

(8) ஓஜஸ் என்னும் எல்லா தாதுக்களின் ஸாரம்

(9) தேக உஷ்ணம்

(10) தாதுக்கள் முதலியவைகளில் உள்ள அக்னி

(11) ஐந்து ப்ராணன்கள் என்று சொல்லப்படும் 5 வாயுக்கள்

அக்னியின் நிலைமைகள் : அக்னியானது ஸமம், விஷமம், மந்தம், தீக்ஷ்ணம் என்ற நான்கு நிலைமைகளை அடையக் கூடியது:

(a) ஸமம் : வாதம், பித்தம், சிலேஷ்மம் இவை ஸமமாகவும், ஸமானவாயு தன் ஸ்தானத்திலும் இருக்குமானல் அக்னி ஸமமாக இருக்கும். அப்போது ஆகாரங்களை அதன் யுக்தமான காலத்தில் பக்குவம் செய்வதோடு அக்னி பலத்தினல் தேகத்தில் நடக்கவேண்டிய எல்லா வேலைகளும் சரிவர நடைபெறும்.

(b) விஷமம் : ஸமானவாயு மாறுபாடடைந்து அளவுக்கு மீறினல் அக்னியானது சிலசமயம் கடுமையாகவும் சில சமயம் மந்தமாகவும் முறையின்றி மாறிக்கொண்டிருக்கும். இதற்கு விஷமாக்னி என்று பெயர்.

(c) மந்தம் : கபம் அதிகமானல் அது அக்னியின் பலத்தைக் குறைக்கும் அப்போது அதற்கு மந்தாக்னி என்று பெயர். மந்தமான அக்னியை பலப்படுத்தும் மருந்துகளுக்கு 'தீபன' மருந்துகள் என்று பெயர். நேராக அக்னியை பலப்படுத்தாமல் அக்னி செய்யும் வேலைகளில் ஒன்ருகிய ஜீரணத்தை மட்டில் விருத்தி செய்யும் மருந்துக்கு 'பாசக' மருந்து என்று பெயர். பெரும்பாலும் மருந்துகளில் 'தீபனம்,' பாசனம்' என்ற இரண்டு சக்திகளும் சேர்ந்து இருந்த போதிலும் இரண்டு சக்திகளும் வெவ்வேருனவை என்பது கவனிக்கத் தக்கது.

(d) தீக்ஷ்ணம் : சுபாவத்தினுலும், பித்தம் அதிகமாவதாலும் அக்னி கடுமையாகும். அதற்கு தீக்ஷ்ணுக்னி என்று பெயர். இவ்விதமாக பாசகபித்தம் என்னும் அக்னி 4 நிலைமைகளில் இருக்கக்கூடியது.

பாசக பித்தமாகிய அக்னியானது ஆகாரத்தைப் பக்குவம் செய்யும் வகை:

பாசகபித்தம் அக்னி ரூபமாக இருக்கும் இடம் வயிறு (ஆகாரப்பை)க்குக் கீழும் குடலுக்கு மேலும் உள்ள க்ரஹணி என்னும் ஸ்தானம். ஆகாரம் உள்ளே சென்றதும் வயிற்றில் தங்குகிறது. கீழே க்ரஹணியில் உள்ள அக்னி ஸமானவாயுவினுல் பலமாக்கப்பட்டு அடுப்பிலுள்ள நெருப்பு அதன் மேலுள்ள பானையின் சோற்றைச் சமைப்பது போல் பக்குவம் செய்கிறது. ஏற்கனவே சொல்லியபடி முதலில் மதுர பாகமும், பிறகு அம்லபாகமும் ஏற்படுகிறது. அவ்வித அம்ல பாகம் முடிகிற வரையில் இந்த அக்னியே ஆகாரத்தைக் கீழே இறங்காமல் தடை செய்கிறது. பிறகு முற்றிலும் பக்குவம் ஆவதற்காக ஆகாரம் க்ரஹணியின் வழியாகச் சிறு குடலுக்கு இறங்குகிறது. சிறு குடலுக்கு வந்த பிறகும் மேலே இருக்கும் அக்னி ஆசயத்தின் ஒத்தாசையைக் கொண்டே பக்குவம் பூர்த்தியாகிறது.

எனினும் ஆகாரத்தில் 5 மூலப் பொருள்களோடு அவற்றின் பஞ்சபூதாக்னி என்ற ஒரு சக்தியும் கூடவே இருக்கிறது. பக்குவம்ஆகும்போது இந்தப் பஞ்சபூத அக்னியானது சரீரத்தில் அக்னி ஆசயத்திலுள்ள அக்னியினுல் பலமாக்கப்பட்டுப் பக்குவத்தைச் செய்கிறது என்பதே ஆயுர் வேதத்தின் துணிபு.

அதே விதமாக ரஸம், ரத்தம் முதலிய 7 தாதுக்களிலும், மலம், மூத்ரம் முதலிய கழிவுப் பொருளிலும் இருக்கும் உஷ்ணமும் ஆகார பக்குவத்திற்கு ஒத்தாசை செய்கின்றது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

(2) ரஞ்ஜக பித்தம்—இது இருதயத்துக்குக் கீழும் தொப்புளுக்கு மேலும் உள்ள ஆமாசயத்தில் உள்ளது. அதாவது க்ரஹணிக்கு மேலே உள்ள ஸ்தானங்களில் உள்ளது. இது ரஸத்துக்கு வர்ணத்தைக் கொடுத்து ரத்தமாக மாற்ற உதவுகிறது. அதனுல் இதற்கு ரஞ்ஜகபித்தம் என்று பெயர் (ரஞ்ஜநம்=வர்ணம் கொடுத்தல்).

(3) ஸாதக பித்தம்—இது இருதயத்தில் உள்ளது. இது ஒருவன் நினைத்த வஸ்துவைப் பற்றி யோசிக்கவும், நிச்சயிக்கவும், அதை அடையும் முயற்சிகளைச் செய்யும்படி தூண்டவும் உதவுகிற புத்தி, ஞாபகசக்தி, அபிமானம், இவைகளுக்கு ஆதாரமாக இருக்கிறது. பொருள்களை அடைய ஸாதனமாக இருப்பதால் இதற்கு ஸாதகபித்தம் என்று பெயர்.

(4) ஆலோசக பித்தம்: இது கண்ணிற்குள் இருந்து உருவத்தை அறியும் சக்திக்குஉதவுகிறது.

(5) ப்ராஜக பித்தம்: இது தோலில் உள்ளது. தோலுக்குக் காந்தியைக் கொடுப்பது.

3. சிலேஷ்மத்தின் 5 வகை :—

(1) அவலம்பனம்: இது தன் சக்தியினால் முள்ளந்தண்டின் அடிப்பாகத்திலுள்ள முக்கூட்டெலும்பிற்கு ஆதரவாகவும், அன்ன ரஸத்தோடு சேர்ந்து இருதயத்துக்கு ஆதரவாகவும், உடம்பின் மற்ற பாகங்களில் உள்ள கபத்துக்கு ஆதரவாகவும் இருப்பது. இதன் ஸ்தானம் மார்பு.

(2) க்லேதகம்: இது ஆமாசயத்தில் (வயிற்றில்) இருந்து கொண்டு ஆகாரத்தை நெகிழச் செய்கிறது.

(3) போதகம்: இது நாக்கில் இருந்துகொண்டு உருசிபார்க்கும் சக்திக்கு ஆதாரமாக இருப்பது.

(4) தர்ப்பகம்: இது தலையில் இருந்து கொண்டு கண்களுக்குக் குளிர்ச்சியைத் தந்து போஷிக்கிறது.

(5) ச்லேஷகம்: இது ஸந்திகளில் இருந்து கொண்டு அவைகளுக்கு எண்ணெய் போட்டது போல் நைப்பை உண்டாக்கி அசைவுக்கு அநுகூலமாக இருப்பது.

## வாத, பித்த, கபங்கள் குறைதலும் கூடுதலும்.

வாத, பித்தம், கபம் இம்மூன்றின் குணங்கள் ஏற்கனவே விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவை மூன்றும் தத்தம் குணத்திற்கு விரோதமான குணங்களின் சேர்க்கையால் குறையும். அதே விதமான குணங்களின் சேர்க்கையால் கூடுதல் அடையும்.

கூடுதல் அடைவதில் இரண்டு வகையுண்டு :—

(1) அளவு அதிகரித்தாலும் தத்தம் ஸ்தானத்தை மீறுமல் இருக்கும் அதிகரிப்புக்கு 'சயம்' அல்லது கூடுதல் என்று பெயர்.

(2) தத்தம் ஸ்தானத்தை மீறும்படியான அதிகரிப்புக்கு, ப்ரகோபம் அல்லது 'கடுமையான அதிகரிப்பு' என்று பெயர்.

அதிகரித்தவை மறுபடியும் சரியான நிலைமைக்கு வருவதற்கு 'சமனம்' அல்லது 'அடங்குதல்' என்று பெயர்.

பொதுவாக வாத, பித்த, கபங்கள் பின்கண்ட காரணங்களினுல் கூடிக் குறையும் :—

(1) குணங்களின் சம்பந்தம் :—

(a) வாதம் :—

(i) சயம்—வாதத்தின் குணங்களாகிய வறட்சி முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் வாதத்தின் 'சயம்' என்ற கூடுதலை உண்டாக்கும்.

(ii) ப்ரகோபம்— வாதத்தின் குணங்களாகிய வறட்சி முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் வாதத்தின் 'ப்ரகோபம்' என்னும் கடுமையான அதிகரிப்பை உண்டாக்கும்.

(iii) சமனம்—வாதத்தின் குணங்களுக்கு விரோதமான நைப்பு முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் வாதத்தை சமனம் செய்யும்.

(b) பித்தம் :—

(i) சயம்—பித்தத்தின் குணங்களாகிய தீக்ஷ்ணம், வேகம், கடுமை முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் பித்தத்தின் 'சயம்' என்னும் கூடுதலை உண்டாக்கும்.

(ii) ப்ரகோபம்—பித்தத்தின் குணங்களாகிய தீக்ஷ்ணம் முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் பித்தத்தின் 'ப்ரகோபம்' என்ற கடுமையான அதிகரிப்பை உண்டாக்கும்.

(iii) சமனம்—பித்தத்தின் குணங்களுக்கு விரோதமான மந்தம் (மெது) முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் பித்தத்தை சமனம் செய்யும்.

(c) சிலேஷ்மம் :—

(i) சயம் — சிலேஷ்மத்தின் குணங்களான நைப்பு முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் சிலேஷ்மத்தின் 'சயம்' என்னும் கூடுதலை உண்டாக்கும்.

(ii) ப்ரகோபம் — சிலேஷ்மத்தின் குணங்களான நைப்பு முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் சிலேஷ்மத்தின் 'ப்ரகோபம்' என்னும் கடுமையான அதிகரிப்பை உண்டாக்கும்.

(iii) சமனம் — சிலேஷ்மத்தின் குணங்களுக்கு விரோதமான வறட்சி முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் சிலேஷ்மத்தை சமனம் செய்யும்.

2. கால பேதங்கள் :—

(a) வாதம் —

நல்ல வெயிற்காலத்தில் வாதம் சேர ஆரம்பித்து மழை காலத்தில் ப்ரகோபம் அடைந்து மழைக்குப் பின்னும் பனி காலத்துக்கு முன்னும் சமனம் அடையும்.

(b) பித்தம் —

மழைகாலத்தில் பித்தம் சேர ஆரம்பித்து, மழைக்குப் பின்னும் பனிக்கு முன்னும் ப்ரகோபம் அடைந்து, முன் பனிக் காலத்தில் சமனமடையும்.

(c) சிலேஷ்மம் —

பின்பனிகாலத்தில் சிலேஷ்மம் சேர ஆரம்பித்து, இளம் வெயிற்காலத்தில் ப்ரகோபம் அடைந்து கடும் வெயிற் காலத்தில் சமனம் அடையும்.

3. வயதுக்குத் தகுந்த மாறுதல் :—

குழந்தைப் பருவத்தில் சிலேஷ்மம் மிகுதியாகவும், வாலிபப் பருவத்தில் பித்தம் மிகுதியாகவும், வயோதிகப் பருவத்தில் வாதம் மிகுதியாகவும் இருக்கும்.

4. தினசரி மாறுதல் :—

அதிகாலையில் சிலேஷ்மமும், வெயில் அதிகரிக்கும்போது பித்தமும், வெயில் தணியும்போது வாதமும் மிகுதியாக இருக்கும். அவ்விதமே இரவிலும் இருக்கும்.

5. ஆகார பரிணாமத்தைப் பொறுத்த மாறுதல் :—

சாப்பிட்டவுடன் சிலேஷ்மமும், நன்றாக ஜீரணம் நடக்கும்போது பித்தமும், ஜீரணம் முடிந்தபின் வாதமும் அதிகமாக இருக்கும்.

6. ரஸங்களினால் ஏற்படும் மாறுதல் :—

| | | ப்ரகோபம் செய்வன | சமனம் செய்வன |
|---|---|---|---|
| (1) | வாதம். | உவர்ப்பு (கடு) | இனிப்பு (மதுர) |
| | | கைப்பு (திக்த) | புளிப்பு (அம்ல) |
| | | துவர்ப்பு (கஷாய) | உப்பு (லவண) |
| (2) | பித்தம். | உவர்ப்பு (கடு) | இனிப்பு (மதுர) |
| | | புளிப்பு (அம்ல) | கைப்பு (திக்த) |
| | | உப்பு (லவண) | துவர்ப்பு (கஷாய) |
| (3) | சிலேஷ்மம். | இனிப்பு (மதுர) | உவர்ப்பு (கடு) |
| | | புளிப்பு (அம்ல) | கைப்பு (திக்த) |
| | | உப்பு (லவண) | துவர்ப்பு (கஷாய) |

## உபதாதுக்கள்

ரஸம், ரத்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்ரம் என்ற 7 தாதுக்களும் அவை ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டாவதும் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 7 தாதுக்களில் ரஸம், ரத்தம், மாம்ஸம், மேதஸ் இவைகளிலிருந்து 4 உபதாதுக்களும், எல்லா தாதுக்களின் ஸாரமாக ஐந்தாவது உபதாது ஒன்றும் உண்டாகிறது. அவை பின் வருமாறு :—

1. ரஸ தாதுவிலிருந்து ஸ்திரீகளுக்கு முலைப்பாலும், ருதுவும் உண்டாகின்றன.

2. ரத்த தாதுவிலிருந்து, கண்டரங்கள் என்னும் தடித்த தசைக் கயிறுகளும், ரத்தம் ஓடுகிற ஸிரைகளும் உண்டாகின்றன.

3. மாம்ஸ தாதுவிலிருந்து வஸையென்னும் மாம்ஸ ஊந்தண்ணீரும், 6 விதமான தோல்களும் உண்டாகின்றன.

4. மேதஸ் (கொழுப்பு) ஸிலிருந்து ஸ்நாயுக்கள் என்னும் தஸைக் கயிறுகள் உண்டாகின்றன.

5. ஏழு தாதுக்களிலிருந்தும் அவைகளின் ஸாரமான ஓஜஸ் என்னும் உபதாது உண்டாகிறது. அதன் முக்ய ஸ்தானம் இருதயம். ஆயினும் தேக முழுவதும் பரவி தேகத்தைக் காப்பாற்றுகிறது.

## ரஸ, வீர்ய, விபாக, ப்ரபாவங்களின் செய்கைகள்

த்ரவ்யங்களுடைய ரஸத்தின் மகிமை அதன் விபாகத்தினுல் மாறுபடும். விபாகத்தின் மகிமை அதன் வீர்யத்தினுல் மாறுபடும். வீர்யத்தின் மகிமை ப்ரபாவத்தினுல் மாறுபடும். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அடியில் கண்ட ரஸம் முதலியவற்றின் செய்கைகளைக் கவனிக்கவேண்டும் :—

(1) ரஸங்களின் செய்கைகள் :—

(a) இனிப்பு —

(i) ஏழு தாதுக்களுக்கும் பலம்
(ii) குழந்தைகள், வயோதிகர், காயப்பட்டவர்கள், இளைத்தவர்கள் இவர்களுக்கு விசேஷ பலம்.
(iii) மேனி, தலை மயிர், புலன்கள், ஓஜஸ் இவைகளுக்கு விருத்தி.
(iv) உடம்புக்குப் பருமன்
(v) குரலுக்கு நன்மை
(vi) முலைப்பால் விருத்தி
(vii) ஆயுள் விருத்தி
(viii) நைப்பு
(ix) பித்தம், வாதம், விஷம் இவற்றை சமனப்படுத்த வல்லது.
(x) லகுவான ஆகாரத்தைச் சேர்ந்ததல்ல.

அமிதமாக உபயோகித்தால்:—

கொழுப்பு, கபம் இவற்றைச் சேர்ந்த வியாதிகளாகிய,

(i) உடம்பு ஸ்தூலம்
(ii) அக்னி மந்தம்
(iii) ஸந்யாஸம் என்னும் மூர்ச்சை
(iv) பிரமேகம்
(v) கழுத்தில் கட்டி, தொண்டைச் சதை வளருதல், இவைகள் உண்டாகும்.

(2) புளிப்பு :—

(i) அக்னி தீபனம்
(ii) ரைப்பு
(iii) இருதயத்துக்கு நன்மை
(iv) ஜீர்ண சக்தி விருத்தி
(v) அரோசகத்தைப் போக்கல்
(vi) உஷ்ண வீர்யம்
(vii) குளிர்ச்சியான ஸ்பர்சம்
(viii) மனதுக்கு ஏற்றது
(ix) மலத்தைப் பிரிப்பது
(x) லகுவான ஆகாரம்
(xi) கபம், பித்தம், ரத்தம் இவற்றை விருத்தி செய்வது.
(xii) தடைப்பட்ட வாதத்தைக் கீழ் நோக்கச் செய்வது.

அதிகமாக உபயோகிப்பதனால் :—

(i) விலவிலத்தல்.
(ii) கண் மறைப்பு.
(iii) மயக்கம்.
(iv) சொறி, பாண்டு, கொப்பளம், வீக்கம, வெடிப்பு.
(v) தாகம், ஜ்வரம்.

இவை உண்டாகும்.

(3) உப்பு :—

(i) கை கால் அசைவின்மை, மலச் சேர்க்கை, பிடிப்பு இவைகளைப் போக்கல்
(ii) அக்னி தீபனம்.
(iii) ரைப்பு.
(iv) வியர்வையுண்டாக்கல்.

(v) வேகமுள்ளது.

(vi) அரோசகத்தைப் போக்கல்.

(vii) மலத்தைப் பிரித்தல்.

அதிகமாக உபயோகித்தால்

(i) வாத ரத்தம் என்ற சருமரோகம்.

(ii) வழுக்கை, நரை, திரை.

(iii) தாகம், குஷ்டம், விஷக் கொப்பளம்.

(iv) பலத்தைக் குறைத்தல்

இவைகளை உண்டாக்கும்.

(4) கைப்பு :—

(i) உட்கொள்ள ருசிக்காதது, ஆனால் அருசியைப் போக்கவல்லது.

(ii) க்ருமி, தாகம், விஷம், குஷ்டம், மூர்ச்சை, ஜ்வரம், அயர்வு, எரிவு, பித்தம், கபம் இவைகளை ஜெயிக்கக் கூடியது.

(iii) ஈரம், கொழுப்பு, ஊந்தண்ணீர், மஜ்ஜை, மலம், மூத்திரம் இவைகளை சோஷிக்கச்செய்யும்.

(iv) லகுவான ஆகாரம்.

(v) ஞாபக சக்தியைக் கொடுப்பது.

(vi) குளிர்ச்சியுள்ளது.

(vii) வறட்சியுள்ளது.

(viii) முலைப்பாலை சுத்தமாகச் செய்யக் கூடியது.

(ix) தொண்டையை சுத்திசெய்யக்கூடியது.

அதிகமாக உபயோகித்தால் :—

(i) தாதுக்களின் க்ஷயத்தையும்.

(ii) வாத ரோகங்களையும்

உண்டாக்கும்.

(5) உவர்ப்பு :—

(i) தொண்டை வியாதிகள், மேகப்படை, குஷ்டம், வயிற்றுப் பொருமல், வீக்கம் இவற்றை ஜெயிக்கக்கூடியது.

(ii) புண்ணை ஆற்றக்கூடியது.

(iii) நைப்பு, கொழுப்பு, ஈரம் இவைகளை உலர்த்தக்கூடியது.

(iv) தீபனம், பாசனம்.

(v) ருசியை உண்டாக்குவது.

(vi) [1]தோஷங்களை வெளிப்படுத்துவது.

(vii) ஆகாரத்தின் த்ரவபாகத்தை உலர்த்தக்கூடியது.

(viii) மலக்கட்டைப் பிரிப்பது.

(ix) தேகத்திலுள்ள ஸ்ரோதஸ்ஸுகள் என்னும் வாய்க்கால்களை விசாலப்படுத்துவது.

(x) கபத்தைப் போக்கக்கூடியது.

அதிகமாக உபயோகித்தால்:—

(i) தாகம்.

(ii) சுக்ரம், பலம் இவற்றைக்குறைத்தல்.

(iii) மூர்ச்சை, முடக்கம், நடுக்கல்.

(iv) இடுப்பு, முதுகு முதலிய இடங்களில் தொந்தரவு.

இவற்றை உண்டாக்கும்.

6. துவர்ப்பு :—

(i) பித்தம், கபம் இரண்டையும் குறைப்பது.

---

[1] வாதம், பித்தம், கபம், இவை மூன்றுக்கும் தோஷங்கள் என்று பெயர். இவை அளவுக்கு மீறினால் தாதுக்களைக் கெடுக்கக்கூடியவைகளாதலால் இப்பெயர் பெற்றன.

(ii) [1]லகுவில்லாத ஆகாரம்.

(iii) ரத்த சுத்தி செய்யக்கூடியது.

(iv) வலியை உண்டாக்கக்கூடியது.

(v) புண்ணை ஆற்றக்கூடியது.

(vi) குளிர்ச்சியுள்ளது.

(vii) ஈரம், கொழுப்பு இவற்றை உலர்த்துவது.

(viii) மலத்தைக் கட்டக்கூடியது, மல பந்தத்தை உண்டாக்கக்கூடியது.

(ix) ஒடிந்த எலும்பு முதலியவைகளைச் சேர்க்கக்கூடியது.

(x) வறட்சியுள்ளது.

(xi) தோலுக்கு நன்மை செய்வது.

அதிகமாக உபயோகித்தால் :—

(i) மலபந்தம், பொருமல்.

(ii) இருதயத்தில் வலி.

(iii) தாகம், இளைப்பு.

(iv) ஆண் தன்மையைக் குறைத்தல்.

(v) ஸ்ரோதஸ்ஸுகளை அடைத்தல்.
இவைகளை உண்டாக்கும்.

2. விபாகங்கள் — ஏற்கனவே சொல்லியபடி 6 ரஸங்களும் ஜீர்ணமாகும்போது இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு என்ற 3 ரஸங்களாகப் பக்குவமாகித் தத்தம் பக்குவ ரஸங்களின் வேலைகளைச் செய்கின்றன. அடியிற் கண்டவை விபாக ரஸங்களின் விசேஷமான காரியங்களாகும் :—

---

[1] லகுவான ஆகாரத்தில் அக்னி, வாயு இவற்றில் அம்சம் அதிகம். அதனால் சீக்கிரம் பக்குவமாகும். அக்கினியை விருத்தி செய்யும். குருவா ஆகாரத்தில் ப்ருதிவி, அப்பு, இவற்றின் அம்சம் அதிகம். அதனால் சீக்கிரத்தில் பக்குவமாகாது. அக்கினியை மந்தமாகச் செய்யும்.

1. கடுவிபாகம் (பக்குவத்தில் உவர்ப்பு) :—

(i) வறட்சியான குணமாகையால் சுக்கிலத்தைக் குறைக்கும்.
(ii) மல ஜலத்தைக்கட்டும்.
(iii) வாதத்தை அதிகரிக்கச்செய்யும்.
(iv) லகுவான ஆகாரம்.

2. மதுர விபாகம் (பக்குவத்தில் இனிப்பு) :—

(i) நைப்பான குண மாகையால் மல ஜலத்தைக் கழிக்கச்செய்யும்.
(ii) கபத்தையும் சுக்லத்தையும் விருத்தி செய்யும்.
(iii) லகுவான ஆகாரமில்லை.

3. அம்ல விபாகம் (பக்குவத்தில் புளிப்பு) :—

(i) பித்தத்தை அதிகப்படுத்தும்.
(ii) மலஜலத்தைக் கழிக்கும்.
(iii) சுக்ரத்தைக்குறைக்கும்.
(iv) லகுவான ஆகாரம்.

(3) வீர்யங்கள் :—

(a) உஷ்ண வீர்யமுள்ள த்ரவ்யங்கள் செய்யும் வேலை :—

(i) மயக்கம்
(ii) தாகம்
(iii) அயர்வு
(iv) வியர்வை
(v) எரிவு
(vi) சீக்கிர பக்குவம்
(vii) வாதகப சமனம்.

(b) சீத வீர்யமுள்ள த்ரவ்யங்கள் செய்யும் வேலை :—

(i) சந்தோஷம்
(ii) உயிர்ப்பித்தல்
(iii) மறத்துப்போதல்
(iv) ரத்தத்தையும் பித்தத்தையும் தெளியச் செய்தல்.

4. ப்ரபாவங்கள் :—

இவை த்ரவ்யங்களின் சிறப்பான அமைப்பைப் பொறுத்த குணங்கள். ஒரேவிதமான ரஸ, வீர்ய, விபாகங்களையுடைய த்ரவ்யங்கள் வெவ்வேறு ப்ரபாவங்களையுடையனவானவாக இருக்கும். உதாரணம் :—

கொடிவேலி — சுவையில் (ரஸம்) உவர்ப்பு
— பிரிவில் (விபாகம்) உவர்ப்பு
— வீர்யத்தில் உஷ்ணம்
நேர்வாளம் — சுவையில் உவர்ப்பு
— பிரிவில் உவர்ப்பு
— வீர்யத்தில் உஷ்ணம்

ஆனல் நேர்வாளம் சிறிது அளவு உட்கொண்டாலும் பேதியை உண்டாக்குகிறது. கொடிவேலி அப்படி அல்ல.

அவ்விதமே விஷமான வஸ்துக்களும், விஷத்தைப் போக்கும் வஸ்துக்களும், வாந்தியை உண்டு பண்ணும் வஸ்துக்களும், தரிப்பதினல் நன்மை செய்யும் மணிகளும், ஏனைய விசேஷ சக்திகளும் ப்ரபாவங்களினலேயே வேலை செய்கின்றன.

குறிப்பு :— த்ரவ்யங்களின் ரஸ, வீர்ய, விபாக, ப்ரபாவங்களையும், த்ரிதோஷ செய்கைகளையும் தன்வந்திரி நிகண்டு, பதார்த்த குணசிந்தாமணி, குணபாடம் முதலிய நூல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

# 3. உற்பத்தி விபாகம்

## 1. கர்ப்பத்தின் அமைப்பு :—

கர்ப்பத்தின் அமைப்பில் தாயினிடமிருந்து சில அம்சங்களும். தகப்பனிடமிருந்து சில அம்சங்களும், ஆத்மாவினிடமிருந்து சில அம்சங்களும், பொருத்தமான ஆகாரம், செய்கை, காலஸ்திதி இவைகளிலிருந்து சில அம்சங்களும், உணவிலுள்ள ரஸங்களிலிருந்து சில அம்சங்களும், பூர்வ ஜன்ம வாஸனையினால் சில அம்சங்களும் சேர்ந்திருக்கின்றன. அவை பின் வருமாறு :—

### 1. தாயினிட மிருந்து :—

தோல், ரத்தம், மாம்ஸம், கொழுப்பு, நாபி (தொப்புள்) இருதயம், க்லோம (நுரையீரல்), கல் ஈரல், மண்ணீரல், மூத்திரக் குண்டிக்காய்கள், மூத்திராசயம், சிறுகுடல், வயிறு, வபை ( pertoneum and omentum )

### 2. தகப்பனிடமிருந்து :—

தலை மயிர், மீசை, நகம், உடம்பு மயிர், பல், எலும்புகள், ரத்தக்குழாய்கள், ஸ்நாயுக்கள், நரம்புகள், சுக்லம்.

### 3. ஆத்மாவினிடமிருந்து :—

ஜன்ம நிர்ணயம், ஆயுள், ஆத்ம ஞானம், மனது, இந்த்ரியங்கள், ப்ராண அபானங்கள், ப்ரேரணம் (மனது முதலியவைகளைத் தூண்டுதல்), தாரணம் (ஞாபக சக்தி), உருவம், குரல், நிறம், சுக துக்கம், விருப்பு வெறுப்பு, அறிவு, தைரியம் அகங்காரம், ப்ரயத்னம்.

### 4. பொருத்தமான ஆகாரம் முதலியவைகளால் உண்டாவன :—

ஆரோக்யம், சோம்பலில்லாமை, அல்ப ஆசையில்லாமை, புலன்களின் தெளிவு, குரல் நிறம் ஆண் தன்மை இவற்றின் குறைவின்மை, ஆனந்தம்,

5. ரஸங்களினுல் உண்டாவன :—

சரீரம் உண்டாதல், விருத்தியடைதல், பலமடைதல், திருப்தி, புஷ்டி, உற்சாகம்.

6. பூர்வ ஜன்ம வாஸனை :—

பக்தி, நல்ல குணம், சுத்தம், வெறுப்பு, ஞாபக சக்தி, மதிமயக்கம், ஈகை, அசூயை, சூரத்தனம், பயந்தசுபாவம், கோபம், படிப்பில் உற்சாகம், கடுமை, மிருதுத்தன்மை கம்பீரம், சஞ்சல சித்தம். மேலும் ஸத்வ ரஜஸ்தமோ குணத்தின் சுபாவத்தினுல் ஏற்படும் பலவித மாறுபட்ட குணங்கள் ஒரே மனிதனிடம் இருக்கலாம். ஆனுல் ஒரே காலத்தில் இராது. எனினும் முக்கிய குணம் தொடர்ந்து நிற்கும்.

2. கர்ப்பத்தில் அங்கங்களின் உற்பத்தி :—

| அங்கங்கள் — | எதிலிருந்து உண்டாகின்றன. |
|---|---|
| 1. தோல் | சுக்ல சோணிதம் சேர்ந்து பக்குவமாகும்போது ஆடை உண்டாவதுபோல் 7 வித தோல்களும் (6 என்பர் சிலர்) உண்டாகின்றன. |
| 2. கல்லீரல், மண்ணீரல் | ரத்தத்திலிருந்து. |
| 3. புப்புஸம் (நுரையீரல்) | ரத்தத்தின் நுரையிலிருந்து. |
| 4. உந்துகம் அல்லது மலதரா (transverse colon) | ரத்தத்தின் கிட்டம் என்னும் மலத்திலிருந்து. |
| 5. சிறு குடல்<br>6. குதம் என்னும் பெருங்குடலின் பாகம்<br>7. மூத்திரப்பை | ரத்தம், சிலேஷ்மம் இரண்டும் சேர்ந்து பித்தத்தினுல் பக்குவமாகும்போது அதில் வாயு புகுந்து உண்டாக்குகிறது. |
| 8. ஸ்ரோதஸ்ஸுகள் | வாயுவானது உஷ்ணத்தோடு சேர்ந்து வேண்டியபடி ஸ்ரோதஸ்ஸுகளை உண்டாக்குகிறது. |

| | |
|---|---|
| 9. நாக்கு | வயிற்றில் பக்குவம் அடைந்து வரும் கபம், ரத்தம், மாம்ஸம் இவற்றில் வாயு புகுந்து ஊது வதினுல் உண்டாகும் சிவந்த ஸாரம். |
| 10. தசைகள் | மாம்ஸத்தில் வாயு புகுந்து பல பாகங்களாகப் பிரிப்பதனுல் உண்டாகிறது. |
| 11. ஸிரைகள் (இரத்தக் குழாய்கள்) 12. ஸ்நாயுக்கள் (தசைக் கயிறுகள்) | கொழுப்பின் பசையைக் கொண்டு, மிருதுவான பக்கு வத்தினுல் ஸிரைகளும், கடின மான பக்குவத்தினுல் ஸ்நாயுக்க ளும் உண்டாக்கப்படுகின்றன. |
| 13. மூத்திரக்குண்டிக்காய் கள் | ரத்தம், கொழுப்பு இவற்றின் ஸாரத்திலிருந்து. |
| 14. விரைகள் | மாம்ஸம், ரத்தம், கபம், கொழுப்பு இவற்றின் ஸாரத் திலிருந்து. |
| 15. இருதயம் | ரத்தம், கபம் இவற்றின் ஸாரத் திலிருந்து. |
| 16. ப்ராணன் ஓடும் தமனி கள். | இருதயத்தோடு சேர்ந்து உண் டாகின்றன. |

குறிப்பு :— ரஸம், ரத்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்கிலம் என்ற 7 தாதுக்களும், அவற்றிலிருந்து உண் டாகும் உபதாதுக்களும், வாத, பித்த, கபம், என்னும் தோஷங்களும் ஆகார பரிணமத்தினுலேயே உண்டாகிறபடி யால் அவைகளுக்குத் தனியாக உற்பத்தி கூறப்படவில்லை.

3. கர்ப்பம் நாளடைவில் விருத்தியடையும் விவரம் :—

முதல் மாதம் — சிலேஷ்ம ரூபமாகவும் அங்க அவய வங்களின் வெளிப்படையான உருவம் இல்லாமலும் இருக்கும்.

2-ம் மாதம் — கெட்டியாகும்—அப்போது அது முடிச் சுப்போல இருந்தால் ஆண்; நீண்ட தசையைப்போல் இருந் தால் பெண்; திரண்டு உயர்ந்திருந்தால் அலி என்று அறிய வும்.

3-ம் மாதம் — எல்லாப் புலன்களும், எல்லா அங்க அவயவங்களும் ஒரே காலத்தில் உண்டாகின்றன[1]. பிறந்த பிறகு காலக்ரமத்தில் உண்டாகும் பல், ஆண் பெண்களுக் கான சிறப்பான அங்க அடையாளங்கள் முதலியவை இதில் சேர்க்கப்படவில்லை.

புலன்களும் அங்க அவயவங்களும் உண்டாகிற 3-ம் மாதத்திலேயே கர்ப்பத்துக்கு மனதில் சுகதுக்கம் அனுபவிக் கும் சக்தியும், முன் ஜன்ம வாஸனையினுல் ஏற்பட்டிருக்கும் விருப்பு வெறுப்பும் ஏற்பட்டு விருப்பமுள்ள வஸ்துக்களைப் பற்றி ஆவல் கொள்ளுகிறது. அந்தக் காரணம் பற்றியே கர்ப்பிணிகளை இரண்டு இருதயமுள்ளவர்கள் என்று கூறுவர். கர்ப்பத்தின் ஆவல் கர்ப்பிணியின் ஆவலாக வெளிப்படுவதால் கர்ப்பிணி ஆசைப்படும் பொருள்களை அவசியம் கொடுக்கிருர் கள். இல்லாத வரையில் ஆவலுக்குப் பங்கம் ஏற்படுவதினுல் வாயு ப்ரகோபம் அடைந்து கர்ப்பத்தின் ஒரு பாகத்தையோ அல்லது முற்றிலுமோ கெடுக்கக்கூடியது. இந்தக் காலத் தையே 'மசக்கைக் காலம்' என்பார்கள்.

கர்ப்பிணியின் சின்னங்கள் பின் வருமாறு:—

(1) ருது நின்று போதல்
(2) வாயில் ஜலம் ஊறல்
(3) அன்னத்தில் ஆசையில்லாமை
(4) வாந்தி
(5) அருசி
(6) புளிப்பில் ஆசை
(7) உயர்ந்ததும் தாழ்ந்ததுமான வஸ்துக் களில் விருப்பம்
(8) கண்ணில் அயர்வு
(9) சோம்பல்
(10) ஸ்தனங்களில் பால்

1. இதுவே சரகஸம்ஹிதையின் மதம். மற்ற அபிப்பிராயங்கள் அதில் கண்டிக்கப்படுகின்றன.

(11) உதடுகளிலும் ஸ்தன மண்டலங்களிலும், அதிகக் கறுப்பு

(12) பாதங்களில் சிறிது வியர்த்தல்

(13) நாபிக்குக் கீழிறங்கும் ரோமராஜி நன்ருக வெளிப்பட்டிருத்தல்

(14) குறி சற்று விரிவடைதல்.

4-ம் மாதம் — கர்ப்பம் ஸ்திரத்தன்மையை அடைகிறது. கர்ப்பிணியின் உடம்பு கனக்க ஆரம்பிக்கிறது.

5-ம் மாதம் — கர்ப்பத்தின் தசைகள், மாம்ஸம், ரத்தம் இவை மற்ற மாதங்களைக் காட்டிலும் இப்போது அதிகமாக விருத்தியடைகிறது. அதனுல் கர்ப்பிணியின் உடம்பு இளைக்கும்.

6-ம் மாதம் — கர்ப்பத்தின் பலம், நிறம் இவை விருத்தியடைகிறது. அதனுல் கர்ப்பிணியின் பலமும், நிறமும் குறையும்.

7-ம் மாதம் — கர்ப்பத்தின் எல்லா உறுப்புகளும் நன்ருக அமையப் பெற்று புஷ்டியை அடைகிறது. அப்போது கர்ப்பிணியின் அழகு மிகும்.

8-ம் மாதம் — எல்லாத்தாதுக்களின் ஸாரமாகிய ஓஜஸ் என்னும் த்ரவம் தாயிடமிருந்து கர்ப்பத்துக்கும், கர்ப்பத்தினிடமிருந்து தாய்க்கும் மாறிமாறிப்போய்க் கொண்டிருக்கும். அதனுல் தாயும், கர்ப்பமும் மாறிமாறி பலவீனமாக இருப்பார்கள். அப்படி ஓஜஸானது தாயிடம் மாறியிருக்கும்போது பிறக்கும் குழந்தை பிழைப்பதில்லை. அதனுலேயே 8-ம் மாதத்தில் பிறந்த குழந்தை பிழைப்பது நிச்சயமில்லை என்கிருேம். 8-வது மாதத்தைக் கணக்கிட்டு கர்ப்பிணிக்குச் சொல்வதுமில்லை.

9-வது மாதம் முதல் பிரஸவகாலம்.

# ஆரோக்கிய வாழ்க்கை

ஆயுர்வேதத்தின்படி ஆரோக்கிய வாழ்க்கைக்கான விதிகள் பின் வருமாறு :—

(a) ஆகாரம் :—

(i) முன் சாப்பிட்டது ஜீர்ணமான பிறகே மறுவேளை சாப்பிட வேண்டும். இடைவேளை உண்டிகள் 'ஆமம்' என்னும் ஜீர்ணமாகாத ரஸத்தை உண்டுபண்ணும். அது சேர்ந்துவிட்டால் எல்லா விஷத்திலும் இவ்வாம விஷம் மிகக் கொடியது. எல்லா வியாதிகளுக்கும் ஆதாரமானது.

(ii) ஸாத்மியம் அல்லது பழக்கத்தில் ஒத்துக் கொள்ளும் உணவையே சாப்பிட வேண்டும். ஸாத்மியம் நான்கு வகை :—

(1) தேக ஸாத்மியம்—இது பிரதி மனிதனுக்கும் வேறுபடும்.

(2) தேச ஸாத்மியம் — தேசத்துக்கு தேசம் சீதோஷ்ணத்தினாலும் பழக்கத்தினாலும் மாறுபடும்.

(3) கால ஸாத்மியம் — இது பருவத்திற்குப் பருவம் மாறுபடும். இது 'ருதுசர்யை' என்ற இடத்தில் பிந்தி விவரிக்கப்பட்டிருக்கிறது.

(4) வியாதி ஸாத்மியம் — இது ஒருவனுடைய உடம்பின் ஆரோக்யம், வியாதி இவற்றைப் பொறுத்தது.

(iii) அளவு : இது ஒருவன் அக்னி பலத்தை யும் அருந்தப்படும் ஆகாரத்தின் லகு, குரு குணத்தையும் பொறுத்தது. லகு வான ஆகாரத்தை அதிகம் சாப்பிட வேண்டும். குருவான ஆகாரத்தைக் குறைத்துச் சாப்பிடவேண்டும். அக்னி பலம் அதிகமுள்ளவன் அதிக ஆகாரம் சாப்பிடவேண்டும். எப்போ தும் நிறைவுக்குச் சற்றுக் குறைத்தே சாப்பிடுதல் ஆரோக்கியத்துக்கு நலம்.

(iv) ஆகாரத்தில் 6 ரஸங்களையும் சாப்பிடு தல் அவசியமெனினும் ரஸங்களைச் சேர்த்துச் சாப்பிடும்போது விரோத மில்லாத ரஸங்களையே சேர்த்துச் சாப்பிடவேண்டும். விரோதமுள்ள ரஸங்கள் பின் வருமாறு:—

| ரஸம் | விரோதமுள்ளது |
|---|---|
| 1. இனிப்பு | உவர்ப்பு |
| 2. புளிப்பு | கைப்பு<br>துவர்ப்பு |
| 3. உப்பு | கைப்பு<br>துவர்ப்பு |
| 4. உவர்ப்பு | இனிப்பு |
| 5. கைப்பு | புளிப்பு<br>உப்பு |
| 6. துவர்ப்பு | புளிப்பு<br>உப்பு. |

(b) தூக்கம் :—

(i) பொதுவாக முதுவேனிற்காலம் தவிர மற்ற காலங்களில் பகலில் தூங்க லாகாது. இரவில் விழித்தலும் ஆகாது.

(ii) குழந்தைகள், வயோதிகர்கள், ஸ்திரீ கள், இளைத்தவர்கள், காயம்பட்டவர் கள், வியாதியில் அடிபட்டவர்கள், வழக்கமாய் போதை சாப்பிடுபவர்கள், வண்டி, குதிரை, நடை முதலியவை களால் களைத்தவர்கள், பட்டினியாய் இருப்பவர்கள், கொழுப்பு, வியர்வை, கபம், ரஸம், ரத்தம் இவைகள் இருக்க வேண்டிய அளவுக்குக் குறைவாக உள்ளவர்கள், அஜீர்ணம் உள்ளவர் கள், ஆகிய இவர்கள் பகலில் ஒரு முகூர்த்தம் அதாவது சுமார் ¾ அல் லது 1 மணி நேரம் தூங்கலாம். அதிக தாகம் என்னும் ரோகம், வயிற்றுவலி, விக்கல், அஜீர்ணம், வயிற்றுப் போக்கு இந்த வியாதியுள்ள வர்கள் பகலில் தூங்கலாம்.

(iii) பகல், இரவு எக்காலத்திலும் தூங்கவோ விழித்திருக்கவோ பழக் கப்பட்டவர்கள் நினைத்த சமயத்தில் தூங்கலாம், விழித்தும் இருக்கலாம் கபம், கொழுப்பு, இவற்றின் மிகுதியா லும் விஷத்தாலும் உபத்திரவப்படு பவர்கள் ராத்திரியில் விழித்திருக்க லாம்.

(iv) தூக்கம் வராமைக்கு பித்தம், வாதம், மனக்கொதிப்பு, க்ஷயரோகம், அடி படுதல் இவைகள் காரணமாகும் இவைகளுக்கு சிகிச்சை செய்துகொண் டால் தூக்கம் வரும். அதாவது, எண்ணெய் தேய்த்துக்கொள்ளல், தலைக்குத் தைலம், எண்ணெய் தேய்த்து உடம்பு புரட்டிக்கொள்ளல், உடம்பு பிடித்துக்கொள்ளல், இனிப் பான ஆகாரம், பால், நெய், நைப் புள்ள ஆகாரம், சயன சுகம் இவை களால் தூக்கம் உண்டாகும்.

(v) அதிகத் தூக்கத்தைப் போக்குவதற்கு, வாந்தி முதலிய சோதன சிகிச்சைகளும், பட்டினியிருத்தலும், ரத்தத்தை வெளிப்படுத்தலும், மனோவிசாரமும் தகுந்த முறைகள்.

(vi) ராத்திரியில் அதிகமாக விழித்திருக்க நேர்ந்தால் அதற்குப் பரிகாரமாக விழித்திருந்த நேரத்தில் அரை பங்கு பகலில் தூங்கலாம்.

(c) புலன்கள், கர்மேந்திரியங்கள் முதலிய சக்திகளை உபயோகித்தல் :—

புலன் முதலிய நமது சக்திகளை அறவே உபயோகிக்காமல் இருப்பதும் கெடுதியை உண்டாக்கும். அமிதமாகவோ விபரீதமாகவோ உபயோகப்படுத்துவதும் கெடுதியை உண்டாக்கும். ஆகவே மிதமாக நமது ஸர்வசக்திகளையும் உபயோகித்தல் வேண்டும். இப்படி மிதமாக சக்திகளை உபயோகப்படுத்துவதில் தேகப் பயிற்சியும் சேர்ந்தது. அது அவசியமாயினும் தேகம் களைக்குமுன்னமேயே நிறுத்திக்கொள்ளல்வேண்டும். ஸ்திரீ ஸங்கத்துக்கும் இதே விதி பொருந்தும்.

(d) வேகங்களை அடக்குதல் :—

நமக்குள்ள வேகங்கள் இருவகை :—

(1) மனோ வேகங்கள் — காம க்ரோதம் முதலியன.

(2) சரீர வேகங்கள் — மலம், மூத்திரம், வாயு, கொட்டாவி, தும்மல் முதலியவைகள்.

மனோ வேகங்களை அடக்குவதனால் நன்மையே உண்டாகும். மனதுக்கு சாந்தியும் அதனால் ஆரோக்ய விருத்தியும் ஏற்படும். சரீர வேகங்களை அடக்கவும் கூடாது. வலுவிலே வேகங்களை வரவழைத்துக் கொள்ள முயற்சித்தலும் கூடாது. அப்படிச் செய்வதனால் வாத ரோகங்கள் முதலிய பல ரோகங்கள் உண்டாகும்,

(e) *தினசரியை :—*

தினந்தோறும் பின் கண்ட காரியங்களைச் செய்தல் வேண்டும் :—

(1) பல் துலக்கல்— உவர்ப்பு, கைப்பு, துவர்ப்பு இந்த மூன்று ரஸங்கள் உள்ள மரக்குச்சிகளாலோ இதர பதார்த்தங்களைக் கொண்டோ பல் துலக்கல்வேண்டும். கருவேல், வேம்பு, ஆலம் விழுது, நாயுருவி வேர், நீர்ப்பூலா உத்தமம். செங்கல்பொடி, மணல், கரி கூடாது.

(2) நாக்கு வழித்தல்— பல் துலக்கி முடிந்ததும் நார் அல்லது கம்பியால் நாக்கு வழிக்க வேண்டும். அதனால் கபம், அரோசகம் இவை குறையும்.

(3) அஞ்சனம்— ஸௌவீராஞ்சனம் (antimony sulphide) போன்ற மிருதுவான அஞ்சனத்தை தினந்தோறும் தீட்டிக்கொள்ளல்வேண்டும், ரஸாஞ்சனம் (Lead sulphide) போன்ற கடுமையான அஞ்சனம் 10 நாளைக்கு ஒரு முறை உபயோகப்படுத்தவேண்டும்.

(4) தூமம் : மருந்துச் சரக்குகளின் புகையை கண், மூக்கு, வாய் வழியாகப் பிடிக்கவேண்டும். இவற்றின் விபரம். அஷ்டாங்க ஹ்ருதயம் முதலிய நூல்களில் காண்க.

(5) எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல்— பழக்கப்படி எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதலோடு தினம் உச்சந்தலைக்கும் உள்ளங்காலுக்கும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும்.

(6) ஸ்நானம்— குளிர்ந்த ஜலத்திலோ, உஷ்ண ஜலத்திலோ தினம் ஸ்நானம் செய்தல் வேண்டும்.

(7) வஸ்த்ரம், கந்த, புஷ்ப, ஆபரணம் தரித்தல் ஆரோக்யத்தைத் தரும்.

(8) பாதரக்ஷை அணிதலும், குடை பிடித்துக் கொள்ளலும் கண்களைக் காப்பாற்ற அத்தியாவசியமானவை.

(f) ருதுசரியை: அதாவது காலத்தின் சீதோஷ்ணத்துக்குத் தகுந்த நடைமுறை:—

(1) முன் பனிக்காலம்:—

(i) அக்னி தீக்ஷ்ணமாக இருக்கும் காலம் ஆகையால் குருவான ஆகாரம்
(ii) தைலம் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம்
(iii) அடக்கமான நில அறையில் வாஸம்
(iv) கந்தம் ஸ்திரீ முதலிய போகம்
(v) லகுவான ஆகாரம், நேர் காற்று, வாயுவை அதிகரிக்கச் செய்யும் பதார்த்தங்கள், இவைகளை நீக்கல்.

(2) பின் பனிக்காலம்:—

(i) முன் பனிக்காலத்தின் முறைகள் எல்லாம் அதிகமாகப் பொருந்தும்.
(ii) குளிர் அதிகமாதலால் சீதமான அன்னபானங்களை விலக்கவேண்டும்.
(iii) உவர்ப்பு, கைப்பு, துவர்ப்பு இவைகளை நீக்கவேண்டும்.

(3) இளவேனிற்காலம்:—

(i) கபம் ப்ரகோபம் அடையும் காலமாகையால் முற்பகுதியிலேயே வமனம் (வாந்தியெடுக்கச் செய்தல்) முதலிய சிகிச்சைகளினால் தோஷங்களை வெளிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
(ii) குரு குணம், புளிப்பு, நைப்பு, இனிப்பு உள்ள ஆகாரங்களையும், பகலில் தூங்குவதையும் நீக்கவேண்டும்.

(iii) தேகப்பயிற்சி, எண்ணெ தேய்த்து உடம்புத் தசைகளைப் புரட்டுதல், அஞ்சனம், ஸ்நானம் இவைகள் இக்காலத்துக்கு உரிய விசேஷ விதிகள்.

(iv) உவர்ப்பு, துவர்ப்பு, க்ஷாரங்களோடு[1] கூடிய ஸூக உஷ்ணமான த்ரவ ஆகாரம் நன்மை தரும்.

(v) ஸ்திரீ ஸங்கம் இக்காலத்துக்கும் உரியது.

4) முது வேனிற்காலம் :—

(i) இனிப்பு, சீதம், நைப்பு உள்ள த்ரவமான ஆகாரம் — குளிர்ந்த ஜல ஸ்நானம்.

(ii) உப்பு, புளிப்பு, உவர்ப்பு, தேகப் பயிற்சி, ஸ்திரீ ஸங்கம் இவைகளை விலக்கல்.

(iii) பகலில் குளிர்ந்த இடத்தில் சிறிது தூங்கலாம். இரவில் காற்றுள்ள மாடியின்மேல் இருந்து சந்தனம் முதலிய சீதள வஸ்துக்களை உபயோகித்தல் வேண்டும்.

(5) கார் (மழை) காலம் :—

(i) வாதம் ப்ரகோபமடைந்து அதனால் பித்த, சிலேஷ்மங்களை அதனதன் ஸ்தானங்களை விட்டுவிட்டுக் கிளம்பும்படி செய்யும் காலமாகையால் வாத, பித்த, கபம் மூன்று தோஷங்களையும் சமனம் செய்யக்கூடியதும், தீபனமுள்ளதுமான த்ரவ்யங்களை உபயோகப்படுத்தல் வேண்டும்.

---

1. 'க்ஷாரம்' என்பது உவர்ப்பும், உப்பும் மிகுதியாக உள்ளதும், தேகத்தைக் கெல்லும் சக்தியுடையதுமான த்ரவ்யம். யவக்ஷாரம், ஸர்ஜ்ஜக்ஷாரம் இவை முக்யமான க்ஷாரங்கள். இவைகளை ஆங்கிலத்தில் 'Alkalis' என்பார்கள்.

(ii) வாதத்தைப் போக்குவதற்காக மழை கால ஆரம்பத்திலேயே கஷாய, தைலங்களால் வஸ்தி (enema) எடுத்துக்கொள்ளல்வேண்டும்.

(iii) பகலில் தூங்குதல், பனி, ஆற்று ஜலம், தேகப் பயிற்சி, வெயில், ஸ்திரீ ஸங்கம் இவைகளை விலக்கல்வேண்டும்.

(iv) தேன் சேர்த்துச் சாப்பிடுதல் நலம்.

(v) மேக மூட்டத்தினால் அதிகக் குளிருள்ள தினங்களில் உப்பு, புளிப்பு, நெய்ப்பு சேர்ந்த ஆகாரங்களைச் சாப்பிட வேண்டும்.

(vi) குளம், கிணறு இவற்றின் ஜலத்தைச் சூடு செய்து ஸ்நானம் செய்யவேண்டும். ஈரமில்லாத இடத்தில் வசிக்க வேண்டும்.

(6) கூதிர்ப் பருவம். (மழைக்குப் பின்னும் பனிக்கு முன்னுமுள்ள காலம்).

(i) பித்தம் ப்ரகோபமடையும் காலமாதலால் இனிப்பு, சீதம், லகு குணம், கைப்பு உள்ள த்ரவ்யங்களை உட்கொள்ளல் வேண்டும்.

(ii) கைப்பான த்ரவ்யங்கள் சேர்த்துக் காய்ச்சிய நெய்யை பானம் செய்தலும், பேதிக்குச் சாப்பிடுதலும், ரத்தத்தை சிறிது வெளிப்படுத்துவதும் உடல் நலனுக்கு உகந்தது.

(iii) தைலம், பனி, பகலில் தூங்குதல், கீழ் காற்று இவைகளை விலக்கல்வேண்டும்.

(iv) இக்காலத்தில் நீர் நிலையிலுள்ள ஜலம் அமிருதம் போன்றது. ஸ்நாபானத்திற்கு உத்தமம்.

(v) சுத்த வஸ்திரம், சரத் கால புஷ்பங்கள், நிலா, இவைகள் இக்காலத்தில் அனுபவிக்கத் தகுந்தவை.

(g) மனச்சாந்திக்கு ஆன பொது விதிகள் :—

(i) பெரியோர்கள், வழிபடும் தெய்வம், இவர்களிடம் மரியாதை, அன்பு.

(ii) நல்லோர் சேர்க்கை — தீயோர், நாஸ்திகர் முதலியோரோடு சேராதிருத்தல்.

(iii) ஈகை முதலிய நற்பழக்கங்கள்.

(iv) தன்னுயிர்போல் மன்னுயிரை மதித்தல்.

(v) ஞான விஞ்ஞான நூல்களைப் பயிலுதல்.

---

# வியாதிகளும், சிகிச்சைகளும்

நமது மனதிலும் தேகத்திலும் ஏற்படும் தொந்தரவுகள் யாவும் 'வியாதி' என்ற வார்த்தையில் அடங்கும்.

(a) வியாதிகளின் பொதுவான காரணங்களும் அவற்றை நீக்கும் முறைகளும் :—

**(1)** மனோ வியாதிகள் :— (a) காரணங்கள் :—

(i) ரஜோகுணமும் (ஆசை, கோபம், சுறுசுறுப்பு முதலியவற்றிற்குக் காரணமான குணம்)

(ii) தமோகுணமும் (அறியாமை, சோம்பல், தூக்கம் முதலியவற்றிற்குக் காரணமானகுணம்) மனோ வியாதிகளுக்குக் காரணங்களாகும்.

(b) மனோ வியாதிகளை நீக்குவதற்கான உபாயங்கள் :—

(i) ஞானம் (உலகிலுள்ள வஸ்துக்களைப் பற்றிய ஞானம்)

(ii) விஞ்ஞானம் (ஆத்ம ஞானம்).

(iii) தைரியம்

(iv) ஸ்மிருதி (மறக்காமல் இருக்கப் பழகுதல்)

(v) ஸமாதி (மனதை ஓரிடத்தில் நிலை நிறுத்தல்)

(2) தேக வியாதிகள் :— (a) காரணங்கள் :—

(i) ஆகந்துகம், அதாவது திடீரென்று தேகத்திற்கு வெளியிலுள்ள காரணங்களால் உண்டாகும் உபத்திரவங்கள் :—

(1) ஜந்துக்களின் நகம், பல் முதலியன.

(2) விழுதல், அடிபடுதல், கட்டுண்டல், நோவுண்டாக்கப்படல்.

(3) கயிறு, ஆயுதம் முதலியன.

(4) தீ, இடி, மின்னல், கொள்ளி விழுதல் முதலியன.

(5) பயம் முதலியன.

(ii) நிஜம் (= தனது) அதாவது தேகத்திற்குள்ளாகவே உண்டாகும் கோளாறுகள். இந்தக்கோளாறுகள் உண்டாகும் இடங்கள் பின் வருமாறு :—

(1) தாதுக்கள் :— ரஸம், ரத்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்லம்.

(2) உப தாதுக்கள் :— ஸ்தன்யம் (முலைப்பால்) ருது, கண்டரங்கள் ஸிரைகள், வஸை, 6 வகைத் தோல், ஸ்நாயு, ஓஜஸ்.

(3) மலங்கள் :— மலம், மூத்ரம், வியர்வை முதலியன.

(4) வாஹிகள் :— ஸ்ரோதஸ்ஸு-கள், தமனிகள், ஸிரைகள்.

(5) கோஷ்டாங்கங்கள் :— இருதயம், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், மூத்திரக் குண்டிக்காய், மூத்திரப்பை, இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் முதலியன.

(6) தோஷங்கள்:— வாதம், பித்தம், கபம்.

இவைகளுள் வாதம், பித்தம், கபம் இவைகள் மூன்றும் சரீரம் முழுவதும் பரவி பல முக்கியமான காரியங்களைச் செய்வதனாலும்; தாதுக்கள், உபதாதுக்கள், மலங்கள், வாஹிகள், கோஷ்டாங்கங்கள் இவைகள் சரியான ஸ்திதியில் இருக்கும்படி செய்ய ஆதாரமாக இருப்பதினாலும்; வாத, பித்த, கபங்கள் மிகுந்தாலும் குறைந்தாலும் தாது முதலியவைகளைக் கெடுக்கக்கூடியவைகளாக இருப்பதாலும்; கெட்டுப்போன தாது முதலியவைகளை, வாத, பித்த கபங்களைச் சமப்படுத்துவதனால் சரியான நிலைக்குக் கொண்டுவரக்கூடியதாக இருப்பதாலும், ஆயுர்வேதத்தில்

(1) வாத, பித்த, கபங்களின் மிகுதல் குறைதலினாலேயே வியாதிகள் உண்டாகின்றன என்றும்,

(2) வாத பித்த கபங்களை சமப்படுத்துவதினாலேயே எல்லா வியாதிகளும் குணமாகின்றன என்றும்,

(3) ஆகந்துகம் என்னும் வெளிக்காரணங்களினால் உண்டாகும் வியாதிகளிலும் முதற்காரணங்கள் வெளியிலிருந்து உண்டானாலும், பிறகு வாத, பித்த, கபங்களை மாறுபடச் செய்கின்றன என்றும், அந்தக்காரணத்தினால் அவ்வித ஆகந்துக வியாதிகளையும் வாத, பித்த கபங்களைச் சமப்படுத்துவதினால் குணப்படுத்தக்கூடும் என்றும் கூறுகிறார்கள். ஆகவே, ஆயுர்வேதத்தின் முக்கியமான நோக்கம் தேகத்திலுள்ள வாத, பித்த, கபங்களைச் சமப்படுத்துவதேயாகும்.

அதுபற்றியே நம் தேகத்திலுள்ள தாதுக்கள் புஷ்டியடைவதற்காக நாம் ஏற்றுக்கொள்ளும் உணவுப்பொருள்களையும், தினசரியை, ருதுசரியை, முதலியவைகளையும், வாத, பித்த, கபங்கள் சமமாக இருப்பதற்கு அனுகூலமாகவே அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

தேக வியாதிகளின் தொகுதி :—

மேலே சொன்ன காரணங்களினுல் வியாதிகளை வாத, பித்த, கபம் என்ற தோஷங்களைப் பொறுத்தே பிரிவினை செய்திருக்கிருர்கள். இப்பிரிவினை இரண்டு வகையாகச் செய்யப்பட்டிருக்கிறது :—

(1) தனித்தனியாக வாத, பித்த, கபங்களின் ப்ரகோபத்தால் ஏற்படும் வியாதிகள். இவைகளுக்கு 'நாஞத்மஜ' வியாதிகள் என்று பெயர்.

(2) வாதம், பித்தம், கபம் இவை மூன்றும் கூடிக் குறைவதினுல் உண்டாகும் வியாதிகள். இவைகளுக்கு 'ஸாமான்யஜ' வியாதிகள் என்று பெயர்.

அவற்றின் பெயர் முதலியவை வருமாறு :—

(1) நாஞத்மஜ வியாதிகள் :—

(a) வாத வியாதிகள் 80 :—

1. நகபேதம் (நகம்பிளத்தல்)
2. விபாதிகா (பாதம், உள்ளங்கை, வெடித்தல்)
3. பாதசூலம் (பாதத்தில் குத்துவலி)
4. பாதப்ரம்சம் (பாதத்தடுமாற்றம்)
5. பாதஸுப்ததா (பாதம் மறத்துப்போதல்)
6. வாதகுட்டதா (கணுக்கால் வளைவு)
7. குல்பக்ரஹம் (கணுக்கால் பிடிப்பு)
8. பிண்டிகோத் வேஷ்டனம் (ஆடு சதையைப் பிழிவது போன்ற வலி)
9. க்ருத்ரஸி (நரம்புக் குடைச்சல் வலி)
10. ஜானுபேதம் (முழங்காலில் பிளப்பது போன்ற வலி)
11. ஜானுவிச்லேஷம் (முழங்கால் மூட்டு நழுவுதல்)
12. ஊருஸ்தம்பம் (துடை ஸ்தம்பித்தல்)
13. ஊருஸாதம் (துடை வில்விலத்தல்)
14. பாங்குல்யம் (நொண்டி)
15. குதப்ரம்சம் (ஆஸனம் வெளிப்படுதல்)

16. குதார்தி (ஆஸனக்கடுப்பு)
17. வ்ருஷண க்ஷேமம் (விரை மேல்இழுத்துக் கொள்ளல்)
18. சேப ஸ்தம்பம் (குறி அசையாமை)
19. வங்க்ஷணஹம் (துடையிடுக்கில் வாயு சேர்ந்து வலி)
20. ச்ரோணிபேதம் (பின் பாகத்தில் பிளப்பது போன்ற வலி)
21. விட்பேதம் (மலம் அதிகமாக இளகிப்போதல்)
22. உதாவர்த்தம் (வாதம் தன் ஸ்தானமாகிய பக்குவாசயத்திலிருந்து மேல் நோக்கிக் கிளம் புதல்)
✓ 23. கஞ்சத்துவம் (தங்கித்தங்கி நடத்தல்)
✓ 24. வாமனத்துவம் (குறுகிய உருவம்)
25. த்ரிக க்ரஹம் (முள்ளந்தண்டின் அடிப்பாகத் தில் பிடிப்பு)
26. ப்ருஷ்டக்ரஹம் (முதுகுப் பிடிப்பு)
27. பார்ச்வ அவமர்தம் (விலாப்பிடிப்பு வலி)
28. உதரா வேஷ்டம் (வயிற்றைச் சுருட்டல்)
29. உன்மாதம் (வாதத்தினுல் ஏற்பட்ட பயித்தியம்)
30. ஹ்ருத்த்ரவம் (இருதயம் வேகமாக அடித்துக் கொள்ளுதல்)
31. வக்ஷோகர்ஷம் (இருதயத்தைத் தேய்ப்பது போன்ற வலி)
32. வக்ஷ உபரோதம் (மார்பு அடைப்பு)
33. வக்ஷ ஸ்தோதம் (மார்பில் குத்துவலி)
34. பாஹுசோஷம் (கை யுலர்ந்துபோதல்)
✓ 35. க்ரீவாஸ்தம்பம் (கழுத்து திருப்ப முடியா திருத்தல்)
✓ 36. மந்யாஸ்தம்பம் (கழுத்தின் ஸிரை ஸ்தம்பித்துச் சிந்தனு சக்தியைக் குறைத்தல்)
37. கண்டோத்வம்ஸம் (கழுத்தை பிளப்பது போன்ற வலி)
38. ஹனுபேதம் (தாடையில் பிளப்பது போன்ற வலி)
39. ஓஷ்டபேதம் (உதட்டில் பிளப்பதுபோன்ற வலி)
40. அக்ஷிபேதம் (கண்ணில் பிளப்பதுபோன்ற வலி)
41. தந்த பேதம் (பல்லில் பிளப்பது போன்ற வலி)
42. தந்த சைதில்யம் (பல் அசைதல்)

43. மூகத்வம் (ஊமை)
44. கத்கதத்வம் (தழதழத்துப் பேசுதல்)
45. வாக் ஸங்கம் (பேச முடியாமல் அடைப்பு)
46. கஷாயாஸ்யதா (வாயில் துவர்ப்பு)
47. முகசோஷம் (வாய் உலர்தல்)
48. அரஸஜ்ஞதா (ருசியறியும் சக்தியை இழத்தல்)
49. கர்ண சூலம் (காதில் குத்துவலி)
50. அசப்தச்ரவணம் (காது இரைச்சல்)
51. உச்சைச்ரவணம் (உரத்த சத்தம் மாத்திரம் காதில் விழுதல்)
52. பாதிர்யம் (முழுச் செவிடு)
53. வர்த்மஸ்தம்பம் (இமை யசையாதிருத்தல்)
54. வர்த்மஸங்கோசம் (கண் இடுங்கிப் போதல்)
55. திமிரம் (கண் மறைப்பு)
56. அக்ஷிசூலம் (கண்ணில் குத்துவலி)
57. அக்ஷி வ்யுதாஸம் (கண் பிதுங்கல்)
58. ப்ருவ்யுதாஸம் (புருவம் உயர்தல்)
59. சங்க பேதம் (பொட்டில் பிளப்பது போன்ற வலி)
60. லலாட பேதம் (நெற்றியில் பிளப்பது போன்ற வலி)
61. சிரோருக் (தலை வலி)
62. கேச பூமி ஸ்புடனம் (மண்டைத்தோல் வெடிப்பு)
63. அர்திதம் (முகம், கை, கால்களில் ஒரு பக்கம் வலியுடன் கோணும்படி செய்யும் வியாதி)
64. ஏகாங்க ரோகம் (வலது அல்லது இடது பக்கம் ஒன்றில் மாத்திரம் வலி முதலிய வாத சேஷ்டை)
65. ஆக்ஷேபகம் (உதறு வாதம்)
66. ஸர்வாங்க ரோகம் (வலது இடது இரண்டு பக்கத்திலும் வலிமுதலிய வாத சேஷ்டை)
67. தண்டகம் (கம்புபோல் உடம்பு முழுதும் விறைத்தல்)
68. ச்ரமம் (களைத்துப்போதல்)
69. ப்ரமம் (மயக்கம்)
70. வேபது (நடுக்கம்)
71. ஜ்ரும்பா (கொட்டாவி)

72. ஹிக்கா (விக்கல்)
73. விஷாதம் (உற்சாகமின்மை)
74. ப்ரலாபம் (பிதற்றல்)
75. க்லானி (அயர்வு)
76. ரௌக்ஷ்யம் (வறட்சி)
77. பாருஷ்யம் (உடம்பில் சுறசுறப்பு)
78. ச்யாவாருணபாஸதா (சரீரம், மலம் முதலியன கருமை கலந்த செம்மை நிறமாதல்)
79. அஸ்வப்தம் (தூக்கமின்மை)
80. அநவஸ்தித சித்தத்வம் (மனது ஓரிடம் தரிக்காமல் இருத்தல்)

மேலே கண்ட 80 வித உபத்ரவங்களும் முக்யமான வாத ரோகங்கள். இவைகளைத் தவிர, குறிப்பிட முடியாத பல சில்லரை உபத்திரவங்களும் வாத தோஷத்தின் ப்ரகோபத்தினால் உண்டாகக்கூடியது. அவைகளை அடியில் சொல்லப்பட்ட வாத ப்ரகோபத்தின் பொதுவான குணங்கள், சேஷ்டைகளைக்கொண்டு நிச்சயிக்கவேண்டும்.

வாத குணங்கள் :—

1. வறட்சி
2. குளிர்ச்சி
3. இலேசுத் தன்மை
4. ஒட்டிக்கொள்ளாத தன்மை
5. உருவமில்லாமை
6. சஞ்சரிக்கும் தன்மை
7. ஓரிடத்தில் ஸ்திரமாக நில்லாமை.

வாத சேஷ்டைகள் ;—

1. ஸ்தானத்தை விட்டு நழுவுதல்
2. ஸ்தானத்தை விட்டு வெகு தூரம் நகருதல்
3. பரவுதல்
4. அடைப்பு
5. பிளப்பது போன்ற வலி
6. மயிர்க் கூச்சல்
7. மலம் முதலியவைகளை உருட்சையாகச் செய்தல்
8. தாகம்

9. நடுக்கம்
10. உடம்புவலி
11. துடித்தல்
12. குத்து வலி
13. வலி முதலிய தொந்தரவு
14. நகருதல் உதறுதல் முதலியன்
15. சுறசுறப்பு உண்டாக்கல்
16. கடினம் உண்டாக்கல்
17. விலவிலக்கச் செய்தல்
18. த்வாரம் உண்டாக்கல்
19. செம்மை கலந்த கருமை உண்டாக்கல்
20. வாயில் துவர்ப்பும் அருசியும் உண்டு பண்ணு தல்
21. வேலையில் மூளை செல்லாமல் தடுத்தல்
22. குறுக்கல்
23. முடக்கல், முதலியன.

**வாத வியாதிகளின் சிகிச்சை :—**

வாத வியாதிகளுக்கு அடியில் கண்ட சிகிச்சைகள் குணம் தரும் :—

1. இனிப்பு, புளிப்பு, உப்பு, நைப்பு, உஷ்ணம் இந்த குணங்களுள்ள பிரயோகங்கள்.

2. ஸ்நேஹம் (அதாவது எண்ணெ, நெய், கொழுப்பு முதலியவைகளை உள்ளுக்குக் கொடுத்தோ, வெளிப் பிரயோகம் செய்தோ நைப்பு உண்டாக்கல்)

3. ஸ்வேதம் [மருந்துச் சரக்குகள் சேர்த்துக் கொதிக்க வைத்த நீராவி பிடித்தல், ஒத்தடம் கொடுத்தல், வெந்நீர் ஊற்றல், முதலியவைகளால் வியர்க்கச் செய்தல்]

4. ஆஸ்தாபன வஸ்தி.—[கஷாயங்களைக்கொண்டு வஸ்தி (enema) கொடுத்தல்], அனுவாஸனவஸ்தி [தைலங்களைக்கொண்டு வஸ்தி கொடுத்தல்]

5. நஸ்யம் [மூக்கில் போடும் மருந்து]

6. வாத ஹரமான ஆகாரம்.

7. அப்யங்கம் [எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்தல்]

8. ம்ருதுவான விரேசனம் [பேதிக்கு சாப்பிடுதல்]

9. வாதஹரமான சரக்குகள் சேர்த்துக் கொதிக்க வைத்த தண்ணீரில் நனைத்தல்.

10. உடம்பு பிடித்தல்.

11. பயமுறுத்தல்.

மேலே சொல்லப்பட்ட ப்ரயோகங்களை நோயாளிகளின் வயது, பலம், காலம் இவைகளைப் பொறுத்து அளவாக உபயோகப்படுத்தவேண்டும்.

இவைகளுள் 4-வதாகச் சொல்லப்பட்ட ஆஸ்தாபன வஸ்தி, அனுவாஸன வஸ்தி இவ்விரண்டும் வாத ரோகங்களுக்கு மிகச் சிறந்தது. ஏனெனில் அது அடி மரத்தை வெட்டுவதுபோல் வாதத்தின் முக்ய ஸ்தானமாகிய பக்வாசயத்திலுள்ள வாத ப்ரகோபத்தைப் போக்குகிறது. அதனால் கிளைகள் போன்ற மற்ற இடங்களிலுள்ள வாத ப்ரகோபங்கள் சமனத்தை அடையும்.

அடியிற்கண்ட மருந்தும் எண்ணெயும் வாத ரோகங்களுக்குப் பொதுவான சிறந்த முறைகள். இவை 'திரட்டு வாகடம்' (50 செய்யுள்) என்ற தமிழ் நூலிலிருந்து எடுத்து எழுதப்பட்டவை :—

(1) உள்ளுக்கு மருந்து :—

வாதந்தான் எண்பதாக வருகின்ற பக்க வாதம்
சீதமே நடுக்கு வாதம் சிறந்திடு முடக்கு வாதம்
சூதமே அசந்த வாதம் தோன்றிய முகத்தில் வாதம்
பேதமாம் வாதந்தீரப் பெருத்திடு மருந்து கேளே
மருந்து தான் சித்திர மூலம் வளருமாவிலங்கை
[கொன்றை

திருந்திய முருங்கை சங்கு சிறந்த வெள்ளறுகு [வேம்பு
பொருந்திய வெருகும் சுக்கும் புகழு திப்பிலி [மரீசம்
கருந்திற லவண மஞ்சும் காய மண்டலந்தான் [கொள்ளே.

இதன் பொருள் :—

சித்திர மூலம் (கொடிவேலி வேர் மேற்பட்டை)
மாவிலங்கை வேர்
கொன்றை வேர்
முருங்கை வேர்
சங்கம் வேர்
வெள்ளறுகு வேர்
வேம்பின் வேர்
மெருகன் கிழங்கு (வெருகு)
சுக்கு
திப்பிலி
மிளகு
சமுத்திர உப்பு
இந்துப்பு
வளையலுப்பு
அட்டுப்பு
உவர் மண் உப்பு
பெருங்காயம் (பொரித்தது)

} இவை சமஎடை

எடுத்துக் காயவைத்து இடித்து வேளை ஒன்றுக்கு வெருகடி வீதம் 45 நாள் காலையும் மாலையும் சாப்பிடவும்.

(2) மேலுக்குத் தைலம் :—

கொள்ளவே எண்ணெ அஞ்சும் குலவுதில்லம் பால் [கற்கம்
மெள்ளவே முருங்கை வாகை மிகுந்த மாவிலங்கை [மூலம்
கள்ளவிழ் காயமிந்து கடிய வெள்ளுள்ளி வசம்பு
முள்ள மாயெரித்துப் பின்னே உடம்பிற்றொக் [கடம் செய்வாயே.

இதன் பொருள் :—

| | |
|---|---|
| ஆமணக்கு எண்ணெய்<br>நல்லெண்ணெய்<br>புங்கு எண்ணெய்<br>இலுப்பை எண்ணெய்<br>வேப்பெண்ணெய் | இவை வகைக்கு 1 சேர் எடுத்து கலந்து அடுப்பி லேற்றி |
| முருங்கைப் பட்டை<br>வாகை வேர்<br>மாவிலங்கை வேர்<br>பெருங்காயம்<br>இந்துப்பு<br>வெள்ளைப்பூண்டு<br>வசம்பு | இவை வகைக்கு $1\frac{1}{2}$ பலம் எடுத்துக் கொண்டு தில்லம்பால் விட்டு அரைத்துக் கல்கமாக்கி |

அக்கல்கத்தை எண்ணெயில் குழப்பி எரித்துப் பதத்தில் இறக்கி எண்ணெயை வடித்து வைத்துக்கொண்டு உடம்பில் துவளையிடவும். இவ்வாறு பொதுவாக வாத ரோகங்களின் சிகித்ஸை சொல்லப்பட்டது.

(b) பித்த வியாதிகள் 40 :—

1. ஓஷம் (நெருப்பின் பக்கத்தில் இருப்பதுபோல் தேகம் முழுவதும் வியர்வையோடு உஷ்ணம் உண்டாதல்)
2. ப்லோஷம் (தேகத்தின் ஒரு பாகத்தில் வியர்வை யில்லாமல் உஷ்ணம் உண்டாதல்)
3. தாஹம் (முகம், உதடு, மேல்வாய் முதலியவை களில் எரிவு)
4. தூமகம் (தலை, கழுத்து, தொண்டை, மேல்வாய் முதலிய இடங்களில் புகைச்சல்)
5. தவது (கண் முதலிய பொறிகளில் எரிவு)
6. அம்லகம் (உள் எரிச்சல், இருதயத்தில் குத்து வலி, புளித்த ஏப்பம் முதலியவை)
7. விதாஹம் (உள்ளங்கை, உள்ளங்கால், தோள் முதலிய இடங்களில் எரிவு)

8. அந்தர் தாஹம் (தேகத்தின் உள் பக்கத்தில் எரிச்சல்)
9. அம்ஸ தாஹம் (தோளில் எரிவு)
10. ஊஷ்மாதிக்யம் (கடுமையான உஷ்ணம்)
11. அதிஸ்வேதம் (அதிகமாக வியர்த்தல்)
12. அங்க கந்தம் (உடம்பில் நாற்றம்)
13. அங்காவதரணம் (உடம்பில் வெடிப்பு)
14. சோணிதக்லேதம் (ரத்தம் கறுத்து துர் நாற்றம் அடைதல் அல்லது நீற்றுப்போதல்)
15. மாம்ஸக்லேதம் (மாம்ஸம் கறுத்து துர்க்கந்தமடைதல்)
16. த்வக்தாஹம் (தோலில் எரிச்சல்)
17. த்வகவதரணம் (மேல் தோல் வெடிப்பு)
18. சர்மாவதரணம் (மேல் தோல் கீழ் தோல் சேர்ந்து வெடிப்பு)
19. ரக்த கோடம் (ரத்தக் கட்டி முகமில்லாதது)
20. ரக்தவிஸ்போடம் (நெருப்புச் சுட்டதுபோன்ற ரத்தக் கொப்பளம்)
21. ரக்த மண்டலம் (தோலின்மேல் உண்டாகும் சிவந்த வட்டமான வர்ணம்)
22. ரத்த பித்தம்[1] (பித்த தோஷத்தினுல் மட்டும் ஏற்படும் ரத்த பித்தம் என்னும் வியாதி, இதில் ரத்தம் மேல்நோக்கி அல்லது கீழ் நோக்கி வெளிப்படும்)
23. ஹரிதத்வம் (உடம்பிலோ மலத்திலோ பச்சை நிறமுண்டாதல்)

---

ரத்த பித்தம் என்னும் வியாதி பித்தத்தினுல் மட்டும் உண்டாவது ஒருவகை, வாதம், கபம் இவைகளும் சேர்ந்து ஏற்படுகிற மற்ருெரு வகையும் உண்டு. அவை 'ஸாமான்யஜ' வியாதிகளின் தொகுதியில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்விதமே வேறுசில வியாதிகளும் 'நாணத்மஜ'த் தொகுதியிலும் 'ஸாமான்யஜ' த்தொகுதியிலும் காணப்படும்போது இவ்விதமாகப் பிரித்துப் பொருள் கொள்ளல் வேண்டும்.

24. ஹாரித்ரத்வம் (உடம்பில் மஞ்சள் நிறமுண்டாதல்)
25. நீலிகா (ரத்தம் நீல வர்ணத்தை அடைதல்)
26. கக்ஷா (தோள், கக்கம், விலா இந்த இடங்களில் வேதனையோடு கூடிய கறுத்த கொப்பளங்கள்)
27. காமலா (பித்தத்தால் உண்டாகும் மஞ்சட்காமாலை)
28. திக்தாஸ்யதா (வாயில் கைப்பு)
29. லோஹித கந்தாஸ்யதா (வாயில் ரத்தத்தின் நாற்றம்)
30. பூதி முகதா (வாயில் துர் நாற்றம்)
31. த்ருஷ்ணை திக்யம் (மிதமிஞ்சிய தாகம்)
32. அத்ருப்தி (சாப்பிடுவதில் திருப்தி ஏற்படாதிருத்தல்)
33. ஆஸ்யபாகம் (வாய்வேக்காடு)
34. களபாகம் (கழுத்துள் வேக்காடு)
35. அக்ஷிபாகம் (கண்வலி)
36. குதபாகம் (ஆஸன வேக்காடு)
37. மேட்ரபாகம் (குறிவேக்காடு)
38. ஜீவாதானம் (ஜீவனுக்கு ஆதாரமான ரத்தம் வெளி வருதல்—இது பேதிக்குச் சாப்பிடுவதில் உள்ள அளவு மீறுவதால் ஏற்படக் கூடியது)
39. தமப் ப்ரவேசம் (இருண்டு போதல்)
40. ஹரித ஹாரித்ர நேத்ர மூத்ர வர்ச்சஸ்த்வம் (கண், மூத்திரம், மலம் இவை பசுமை கலந்த மஞ்சள் நிறமாதல்)

மேலேகண்ட 40 உபத்திரவங்களும் முக்கியமான பித்த ரோகங்கள். இவைகளைத்தவிர, குறிப்பிட முடியாத பல சில்லரை உபத்திரவங்களும் பித்த தோஷத்தின் ப்ரகோபத்தினால் உண்டாகக் கூடியது. அவைகளை அடியில் சொல்லப்பட்ட பித்த ப்ரகோபத்தின் பொதுவான குணங்கள், சேஷ்டைகளைக் கொண்டு நிச்சயிக்க வேண்டும்.

பித்த குணங்கள் :—

1. உஷ்ணம்
2. கடுமை

3. நெகிழ்ந்தோடுதல்
4. அதிக நைப்பு இல்லாமை
5. நகருந் தன்மை
6. வெண்மை, செம்மை இவை நீங்கிய வர்ணம்
7. புளித்த ஏப்பத்தின் வாசனை
8. உவர்ப்பும் புளிப்பும்

பித்த சேஷ்டைகள் :—

1. எரிவு
2. உஷ்ணம்
3. வேக்காடு
4. வியர்வை
5. ரத்தம் முதலியவை நீர்த்தல்
6. அழுகிப் போதல்
7. கசிவு
8. சிவத்தல்
9. பித்த குணத்தில் சொல்லப்பட்ட வர்ணம், உருசி, நாற்றம் இவைகளை உண்டாக்கல்
10. அரிப்பு

பித்த வியாதிகளின் சிகிச்சை :—பித்தவியாதிகளுக்கு அடியில் கண்ட சிகிச்சைகள் குணம் தரும் :—

1. இனிப்பு, கைப்பு, துவர்ப்பு, குளிர்ச்சி இந்த குணங்களோடு கூடிய ப்ரயோகங்கள்
2. ஸ்நேஹம் (நெய் முதலியவைகளால் நைப்பு உண்டாக்கல்)
3. விரேகம் (பேதிக்குக் கொடுத்தல்)
4. சீத வீர்யமுள்ள சரக்குகளைக் கொண்டு பற்றுப் போடுதல் அல்லது பூசுதல்
5. பித்த ஹரமான ஔஷதங்கள் ஊறிய ஜலத்தில் நனைத்தல்
6. எண்ணெ தேய்த்து ஸ்நானம் செய்தல்
7. ஸ்நானம்

மேலே சொல்லப்பட்ட ப்ரயோகங்களை நோயாளிகளின் வயது, பலம், காலம் இவைகளைப் பொறுத்து அளவாக உபயோகப்படுத்த வேண்டும்.

இவைகளுள் 3-வதாகச் சொல்லப்பட்ட விரேகம் (பேதிக்குக் கொடுத்தலே) பித்த ரோகங்களுக்கு மிகச் சிறந்தது. ஏனெனில் அது ஆமாசயத்தில் உள்ள பித்தத்தின் முக்கிய பாகத்தின் ப்ரகோபத்தைப் போக்குகிறது. நெருப்பு அணைந்தால் அடுப்பு குளிர்ந்து போவது போல் மற்ற இடங்களிலுள்ள பித்த ப்ரகோபம் சமனத்தை அடைகிறது.

அடியிற்கண்ட மருந்தும் தலைக்குத் தைலமும் பித்த ரோகங்களுக்குப் பொதுவான சிறந்த முறைகள். இவை திரட்டுவாகடத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டவை:—

உள்ளுக்கு மருந்து:—

செய்யதோர் எண்ணஞ்சாகத்திரண்டிடும் பித்தங் கேளாய்
அய்யமாஞ்சித் தப்பிரமை அறிவிலா விறுமைசுற்று
நையவே நடுக்கல் வாந்தி நலத்திடு சுழற்றல் வாய்நீர்
தையலேயிது கட்கெல்லாம் சாற்றிய மருந்துகேளே
சாற்றிய மதுரம் கோட்டம் தருந்திரு கடுகு மூலம்
போற்றிய நெல்லி மாஞ்சிபூரஞ் சந்தணங் கிராம்பு
மாற்றிய தாளீசந்தான் மருசீரகமும் ஏலம்
பார்த்துச் சர்க்கரையும் கூட்டி பரிந்து மண்டலந் தான் கொள்ளே.

இதன் பொருள்:—

| | |
|---|---|
| அதிமதுரம்<br>கோஷ்டம்<br>சுக்கு<br>மிளகு<br>திப்பிலி<br>கண்டந்திப்பிலி<br>நெல்லிமுள்ளி<br>சடாமாஞ்சி<br>கர்ப்பூரம்<br>சந்தணம்<br>கிராம்பு<br>தாளீசபத்திரி<br>சீரகம்<br>ஏலம் | இவை சமனிடை எடுத்துக் காய வைத்து இடித்து வஸ்திர சாயம் செய்து |

இந்தச் சூரணத்துக்குச் சமனிடை சர்க்கரை கலந்து காலை, மாலை வெருகடி வீதம் 45 நாள் சாப்பிடவும்.

தலைக்குத் தைலம் :—

பரிந்து நல்லெண்ணெய் பாலும் பருத்திடும் நெல்லிச் [சாறு
தெரிந்திடும் முசுமுசுக்கை சிந்திலும் பொன்னாங்காணி
வருந்திய முத்தஞ் சந்தம் மதுரமோடேல மாஞ்சில்
பொருந்து செண்பகப்பூ வங்கம் பூண்டெரி தலைக்கு [வாரே.

இதன் பொருள் :—

| | |
|---|---|
| நல்லெண்ணெய்<br>பசுவின் பால்<br>முற்றிய நெல்லிக்காயின் சாறு<br>முசுமுசுக்கைச் சாறு<br>சிந்தில் கொடிச் சாறு<br>பொன்னாங்காணிச் சாறு | இவை வகைக்கு 2 சேர் எடுத்து சேர்த்து அடுப்பி லேற்றி |
| முத்தக்காசு (கோரைக் கிழங்கு)<br>சந்தணம்<br>அதிமதுரம்<br>ஏலம்<br>சடா மாஞ்சில்<br>செண்பகப்பூ<br>லவங்கப் பட்டை | இவை வகைக்கு ½ பலம் எடுத்துப் பால் விட் டரைத்துக் கல்கமாக்கி மேலே சொன்ன எண்ணெ வகையில் குழப்பி |

எரித்துப் பக்குவத்தில் இறக்கி வடித்து வைத்துக் கொண்டு தலையில் தேய்த்து வரவும். இவ்வாறு பொதுவான பித்த ரோக சிகித்சை சொல்லப் பட்டது.

(c) கப ரோகங்கள் 20 :—

1. த்ருப்தி (எப்போதும் சாப்பிட்டது போல் ஆகாரத்தில் ஆசையில்லாதிருத்தல்)
2. தந்த்ரா (தூக்கம் வருவது போன்ற மயக்கத்தோடு கூடிய சோம்பல்)
3. நித்ராதிக்யம் (மிதமிஞ்சிய தூக்கம்)

4. ஸ்தைமித்யம் (உடம்பு திமிர்த்துப் போதல்)
5. குருகாத்ரதா (உடம்பு பருத்துகனத்தல்)
6. ஆலஸ்யம் (சக்தியிருந்தும் காரியங்களில் சுறு சுறுப்பின்மை)
7. முகஸ்ராவம் (வாயில் சதா நீர் ஊறுதல்)
8. முகமாதுர்யம் (வாயில் தித்திப்பு)
9. ச்லேஷ்மோத்கிரணம் (அடிக்கடி கபம் வெளிப்படல்)
10. மலாதிக்யம் (மலம் அதிகரித்தல்)
11. பல நாசம் (பலக்குறைவு)
12. அபக்தி (அஜீர்ணம்)
13. a) ஹ்ருதயோபலேபம் (இருதயத்தில் பூச்சிப் போன்ற அடைப்பு)
    b) கண்டோப லேபம் (தொண்டையில் பூச்சிப் போன்ற அடைப்பு)
14. தமநீப்ரதிசயம் (தமனிகள் (nerves) அதி பூரண மாக இருத்தல்)
15. களகண்டம் (ச்லேஷ்மத்தினால் உண்டாகும் களகண்டம், அல்லது கழுத்தில் கிளம்பித் தொங்கும் கட்டி)
16. அதிஸ்தௌல்யம் (உடம்பு மிதமிஞ்சிப் பெருத்தல்)
17. சீதங்கதா (உடம்பில் குளிர்ச்சி)
18. உதர்தம் (மார்பில் அரிப்பு, குத்தலோடு கூடிய வீக்கம்)
19. ச்வேதாவபாஸதா (உடம்பு வெளுத்தல்)
20. ச்வேதநேத்ர மூத்ரவர்ச்சஸ்த்வம் (கண், மூத் திரம், மலம் இவை வெளுத்தல்)

மேலே சொல்லப்பட்டவை கபப்ரகோபத்தால் ஏற்படும் முக்கியமான உபத்திரவங்கள். இவைகளைத்தவிர சில்லரையாகப் பல உபத்திரவங்களும் கபப்ரகோபத்தால் உண்டாகலாம். அவைகளைக் கீழே சொல்லப்பட்ட கபப்ரகோபத்தின் குணம், சேஷ்டைகளைக்கொண்டு நிச்சயிக்க வேண்டும் :—

கபத்தின் குணங்கள் :—

1. வெண்மை
2. குளிர்ச்சி
3. கனம், பருமன்
4. நைப்பு

5. இனிப்பு
6. அசையாமை
7. ஒட்டிக்கொள்ளும் தன்மை
8. மிருதுத்தன்மை

கபத்தின் சேஷ்டைகள் :—

1. வெண்மை நிறமுண்டாக்கல்
2. குளிர்ச்சியுண்டாக்கல்
3. அரிப்பு உண்டாக்கல்
4. அசையாதிருக்கச் செய்தல்
5. வீக்கம், எழுச்சி
6. கனமுண்டாக்கல், பருமன் உண்டாக்கல்
7. கைப்புக் கொடுத்தல்
8. அங்கங்கள் அசைவற்றுப் போதல்
9. ஈரமாக்குதல்
10. பூச்சுப்போன்ற அடைப்பு
11. தேகத்திலுள்ள ரஸம் முதலியவற்றின் மார்க்கங்களை அடைத்தல்
12. இனிப்பையுண்டாக்கல்
13. தாமதத்தை உண்டுபண்ணுதல்.

கப வியாதிகளுக்கான சிகிச்சைகள் :—

அடியிற்கண்ட ப்ரயோகங்கள் கப ரோகங்களுக்கு குணம் தரும் :—

1. உவர்ப்பு, கைப்பு, தீக்ஷ்ணம் (கடுமை), வறட்சி, இந்த குணங்களுள்ள ப்ரயோகங்கள்.
2. ஸ்வேதம் (மருந்துச் சரக்குகள் சேர்த்துக் கொதிக்க வைத்த ஆவியினால் வேது பிடித்தல், ஒத்தடம் கொடுத்தல் முதலிய உபாயங்களால் வியர்க்கும்படி செய்தல்)
3. வமநம் (வாந்தி செய்வித்தல்)
4. சிரோவிரேசனம் (நஸ்யம், அஞ்சனம் முதலிய உபாயங்களால் தலையிலுள்ள கபப்ரகோபத்தை வெளிப்படுத்தல்)

5. உடற்பயிற்சி

மேலேகண்ட சிகிச்சைகளை நோயாளியின் வயது முதலிய வைகளுக்குத் தகுந்த அளவாகப் பிரயோகம் செய்ய வேண்டும்.

இவைகளுள் வமனம் (வாந்தி செய்வித்தல்) எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது. அந்த ப்ரயோகத்தில் வமனத்திற்காகக் கொடுக்கப்படும் த்ரவ்யம் ஆமாசயத்தில் (இரைப்பையில் போய்) அங்கிருந்து மேலே கிளம்பி மார்பிலிருக்கும் ச்லேஷ்மத்தின் முக்கிய பாகத்தை வெளிப்படுத்துகிறது. வயற்கரையை உடைத்து விட்டால் பயிரிலுள்ள தண்ணீர் வெளிப்பட்டுப் பயிர் உலர ஆரம்பிப்பதுபோல் இதர இடங்களிலுள்ள கபப்ரகோபமும் சமனமடைகிறது.

கபரோகங்களுக்குப் பொதுவான மருந்தும் எண்ணெயும் :—

அடியிற்கண்ட முறை திரட்டுவாகடத்துலிருந்து எடுத்தெழுதப்பட்டது :—

1. உள்ளுக்கு மருந்து :—

வார்பெறு தனத்தாய் ஐயம் வளர்ந்திடும் இரு
[பதாகச்
சீர்பெறுமாந்தையீளை திகரடி விக்கல் சத்தி
பேர்பெறு சுவாசகாசம் வெருத்திடுமிருமல்
[வாந்தி
தார் பெறு சுரமுண்டாக்கும் தனக்கெல்லாம்
[மருந்துகேளே.
தனது நல் இஞ்சிச்சாறு தளர்திரிகடுகோடேலம்
மனது நற்கோட்டமாஞ்சி வாலுளுமரிசிசிங்கி
கனதுறு நாகங் கண்டங்கத்திரி யரத்தை யிந்து
நினைவுறுச்சியில் ரெத்தம் நெய்யெரித்துள்ளுங்
[கொள்ளே.

இதன் பொருள்:—

| | |
|---|---|
| சுக்கு<br>மிளகு<br>திப்பிலி<br>ஏலம்<br>கோஷ்டம்<br>சடாமாஞ்சி<br>வாலுளுவையரிசி<br>கடுக்காய்ப்பூ<br>சிறு நாகப்பூ<br>கண்டங்கத்திரிவேர்<br>சிற்றரத்தை<br>இந்துப்பு | இவைசம னெடை எடுத்து இஞ்சிச் சாறுவிட்ட ரைத்துக் கல்கமாக வைத்துக் கொண்டு |

ஷை சரக்குகளின் கூடிய நிறைக்கு நாலுமடங்கு நெய் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு நெய் யையும் கடுகையும் சேர்த்து நோயாளியின் வயது, வலிமை, வியாதிக்குத் தகுந்தபடி கொடுக்கவும்.

2. தைலம் :—

எரித்த நல்லெண்ணெய் பாலும் இசைந்தலாமிச் [சம் வேலி,
தரித்திடும் சீந்தில்முத்தம் சந்தனம் தேவதாரம்
உரித்திடு தண்ணீர் மிட்டான் உயர் நிலப்பனை [நன்னாரி
பரித்த மஞ்சிட்டியோடு பகர்தலை தனக்குவாரே

இதன் பொருள்:—

| | |
|---|---|
| நல்லெண்ணெய்<br>பசுவின் பால் | வகைக்கு 2 சேர் எடுத்துச்சேர்த்து |
| விளாமிச்சம் வேர்<br>சீந்தில் கொடி<br>கோரைக் கிழங்கு<br>சந்தனம்<br>தேவதாரம்<br>தண்ணீர் விட்டான் கிழங்கு<br>நிலப்பனங்கிழங்கு<br>மஞ்சிட்டி | வகைக்கு $\frac{1}{2}$ பலம் எடுத்துப் பால் விட்டரைத்துக் கல்கமாக்கி எண்ணெ வகையில் குழப்பி |

அடுப்பிலேற்றி எரித்துப்பதத்திலிறக்கி எண்ணெயை வடித்துத் தலையில் தேய்த்துவரவும்.

3. ஸாமான்யஜ ரோகங்கள் :—

இது வரையில் நானாத்மஜ ரோகங்கள் அதாவது வாதம், பித்தம், கபம் இவை தனித்தனியாக ப்ரகோபம் ஆவதால் ஏற்படும் ரோகங்களையும் அவற்றின் பொதுவான சிகிச்சைகளையும் அறிந்தோம். இனி வாதம், பித்தம், கபம் இவைகளின் சேர்க்கையினால் ஏற்படும் ரோகங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இவைகளுக்கு 'மஹா ரோகங்கள்' என்றும் பெயர் உண்டு. அவை கீழே விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றையும் வாத, பித்த, கபசம்பந்தத்தை யொட்டிப் பலவகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். அந்தப்பெயரைக் கொண்டு அந்த தோஷம் மிகவும் அதிகம் என்பதைப் பொருளாக கொள்ளல் வேண்டும். இதர தோஷங்களின் ப்ரகோபமும் சிறிது இருக்கலாம். ஏனெனில் தனியான ஒரு தோஷத்தின் ப்ரகோபத்தினால் ஏற்படும் ரோகங்கள் இந்த ஜாப்தாவில் சேர்க்கப்படவில்லை. ஏற்கனவே நானாத்மஜ ரோகத்தில் சேர்க்கப்பட்டு விட்டன.

| | |
|---|---|
| 1. உதரங்கள் 8 (வயிறு பருத்தல்) | வாத உதரம் |
| | பித்த ,, |
| | கபம் ,, |
| | ஸந்நிபாத (மூன்றும் சேர்ந்த) ,, |
| | ப்ளீஹ, யக்ருத் (மண்ணீரல், கல்லீரல்) ,, |
| | பத்த (மலபந்தம்) ,, |
| | சித்ர அல்லது க்ஷதக (குடலில் த்வாரம்) ,, |
| | ஜல ,, |
| 2. மூத்ராகாதம் 8. (நீர் அடைப்பு) | வாத மூத்ராகாதம் |
| | பித்த ,, |
| | கப ,, |
| | ஸந்நிபாத ,, |
| | அச்மரீ (கல்லடைப்பு) ,, |

| | |
|---|---|
| | சர்க்கரா மூத்ர காதம் (மணல் போன்ற அடைப்பு ) |
| | சுக்ர நிமித்த ,, |
| | சோணித நிமித்த ,, |
| 3. க்ஷீரதோஷம் 8. (முலைப்பால் குற்றம்) | வைவர்ண்யம் (நிறக்குற்றம், பித்தத்தால்) |
| | வைகந்த்யம் (வாசனைக் குற்றம் பித்தத்தால்) |
| | வைரஸ்யம் ( உருசிக்குற்றம், வாதத்தால்) |
| | பைச்சில்யம் (பிசுபிசுப்பு, கபத்தால்) |
| | பேனஸங்காதம் (நுரை சேர்தல் — வாதத்தால்) |
| | ரெளக்ஷ்யம் (வறட்சி, வாதத்தால்) |
| | கௌரவம் (பால் தடித்து இருத்தல் — கபத்தால்) |
| | அதிஸ்நேஹம் (அதிக நெய்ப்பசை — கபத்தால்) |
| 4. சுக்ல தோஷம் 8. | தநு (கனம் குறைதல் — வாதத்தால்) |
| | சுஷ்கம் (காய்ந்து போதல் — வாதத்தால்) |
| | பேநிலம் (நுரையுடன் கூடியது — வாதத்தால்) |
| | அச்வேதம் (நீலம் அல்லது மஞ்சள் நிறம் கலந்திருப்பது — பித்தத்தால்) |
| | பூதி (துர்நாற்றம்—பித்தத்தால்) |
| | அதி பிச்சிலம் (அதிக பிசுபிசுப்பு — கபத்தால்) |
| | அந்யதாது உபஹிதம் (ரத்தம் முதலிய மற்ற தாதுக்களோடு சேர்ந்து இருத்தல் அமிதபோகத்தால், காயத்தால்) |
| | அவஸாதி (மெதுவாகவும், கொஞ்சமாகவும் இறங்குவது — வாதத்தால்) |

| | |
|---|---|
| 5. குஷ்டம் 7. (மஹா குஷ்டங்கள்) | கபால குஷ்டம் (கருஞ்சிவப்பு—வாதத்தால்) |
| | உதும்பர குஷ்டம் (அத்திப்பழத்தின் மேல்தோல்போல் இருத்தல் — பித்தத்தால்) |
| | மண்டல குஷ்டம் (படைகள் சேர்ந்தது — கபத்தால்) |
| | ருஷ்ய ஜிஹ்வா குஷ்டம் (மானின் நாக்குபோல் சுற்றுப்புறம் சிவப்பு நடுவில் கருப்பு — வாத, பித்த மிகுதியால்) |
| | புண்டரீக குஷ்டம் (சிவந்த வெண்மை — பித்த கப மிகுதியால்) |
| | ஸித்ம குஷ்டம் (மார்பில் உண்டாவது — சுரைப் பூவையொத்தது — கபவாத மிகுதியால்) |
| | காகணம் குஷ்டம் (குன்றுமணி போன்றது — மூன்று தோஷமும் சேர்ந்தது) |
| 6. பிடகம் 7. (பிளவை பிரமேகத்தினல் உண்டாகின்றவை) | சராவிகா (அகல் போன்று நடுவில் சிறிது குழிந்தது) |
| | கச்சபிகா (ஆமை முதுகுபோல் நடுவில் மேடிட்டது) |
| | ஜாலிநீ (வலை போன்ற பின்னலுள்ள ரத்தக் குழாய்கள்) |
| | ஸர்ஷபிகா (வெண் கடுகுபோன்ற கொப்புளம்) |
| | அலஜீ (வெண் சிவப்பு, பல முகமுள்ளது) |
| | விநதா (ஆழ்ந்த வேர், துர் நீர், கருமை நிறம் உள்ளது, பெரியது ஆனல் மேலேகிளம்பாதது) |
| | வித்ரதி (விப்புருதி-வெளியில் பல இடங்களிலும் உட் புறத்தில் இருதயம், நுரையீரல், கல்லீரல் மண்ணீரல், வயிறு, மூத்திரக் குண்டிக் காய், தொப்புள் பாகம், துடை யிடுக்கு, மூத்திரப்பை இந்த ஸ்தானங்களிலும் எழும் கட்டி) |

| | | |
|---|---|---|
| 7. விஸர்ப்பம் 7. (அக்கி போன்ற விஷ விரணம், சீக்கிரம் பரவக்கூடியது) | வாத | விஸர்ப்பம் |
| | பித்த | விஸர்ப்பம் |
| | கப | ,, |
| | சந்நிபாத | ,, |
| | அக்னி | ,, (வாத, பித்த மிகுதியால்) |
| | கர்த்தம | ,, (தவளை நிற முள்ளது—சேறு போன்ற சிதறுண்ட மாம்ஸத்தோடு கூடியது—பித்த கப மிகுதியால்) |
| | க்ரந்தி | விஸர்ப்பம் (முடிச்சுகள் சேர்ந்தது—கப வாத மிகுதியால்) |
| 8. அதீஸாரம் 6. (வயிற்றுப் போக்கு) | வாத | அதீஸாரம் |
| | பித்த | ,, |
| | கப | ,, |
| | சந்நிபாத | ,, |
| | பயஜ | அதீஸாரம் (பயத்தால்) |
| | சோகஜ | ,, (சோகத்தால்) |
| 9. உதாவர்த்தம் 6. (அபான வாயுப்ரகோப மடைந்து மேலே கிளம்புதல்) | வாத | உதாவர்த்தம் (அபான வாயுவை அடக்குவதால்) |
| | மூத்ர | ,, மூத்ர வேகத்தை அடக்குவதால்) |
| | மல | ,, (மல ,, |
| | சுக்ல | ,, (சுக்லத்தை ,, |
| | சர்தி | ,, (வாந்தி ,, |
| | க்ஷவது | ,, (தும்மல் ,, |
| 10. குல்மம் 5. (குன்மம்) | வாத | குல்மம் |
| | பித்த | ,, |
| | கப | ,, |

| | | |
|---|---|---|
| | சந்நிபாத | குல்மம் |
| | ரக்தஜ | ,, (ஸ்த்ரீகளுக்கு மாத்திரம் வரக் கூடியது) |
| **11.** ப்ளீஹ தோஷம் 5. (மண்ணீரல் கோளாறுகள்) | வாத | தோஷம் |
| | பித்த | ,, |
| | கப | ,, |
| | சந்நிபாத | ,, |
| | ரக்த | ,, |
| **12.** காஸம் 5. (இருமல்) | வாத காஸம் | |
| | பித்த காஸம் | |
| | கப காஸம் | |
| | க்ஷத காஸம் (மார்பில் சிதைவினுல்) | |
| | க்ஷய காஸம் (தாது க்ஷயத்தினுல்) | |
| **13.** ச்வாஸம் 5. (மூச்சுத்திணறல்) | மஹாச்வாஸம் (பெரிய சத்தத்தோடு) | |
| | ஊர்த்வச்வாஸம் (மேல் நோக்கியது) | |
| | சிந்நச்வாஸம் (விட்டு விட்டு சுவாஸம்) | |
| | தமகச்வாஸம் (மற்ற ஸ்ரோதஸ் ஸுகளைத் தடுத்து 'குர்' என்ற சத்தத்துடன் உண்டாவது) | |
| | க்ஷுத்ரச்வாஸம் (ஆயாஸத்தினுல் ஏற்படும் மேல் மூச்சு) | |
| **14.** ஹிக்கா 5. (விக்கல்) | மஹதீ (எல்லா மர்மங்களையும் வெளியில் தள்ளுவது போன்றது) | |
| | கம்பீரா (பெரிய சப்தம்) | |
| | வ்யபேதா (இரட்டையாக வருவது) | |
| | க்ஷுத்ரா (அல்பமானது) | |
| | அந்நஜா (சாப்பாட்டினுல் ஏற்படுவது) | |

| | |
|---|---|
| 15. த்ருஷ்ணு 5. (தாகம்) | வாத த்ருஷ்ணு<br>பித்த ,,<br>ஆம ,, (அஜீர்ணத்தால்)<br>க்ஷய ,, (தாதுக்ஷயத்தால்)<br>உபஸர்க்க ,, (ஜ்வரம், முதலிய தொத்து வியாதிகளால் ஏற்படுவது) |
| 16. ச்சர்தி 5. (வாந்தி) | த்விஷ்டார்த்தஸம்யோகஜா (பிடிக்காத வஸ்துக்களால்) ச்சர்தி<br>வாத ச்சர்தி<br>பித்த ,,<br>கப ,,<br>சந்நிபாத ,, |
| 17. பக்தஸ்ய அநசந ஸ்தாநம் 5. (அன்னத்வேஷம்) | 1. பித்தம்<br>2. வாதம்<br>3. கபம்<br>4. சந்நிபாதம்<br>5. த்வேஷம் (பிடிக்காத வஸ்து, மனோ நிலைமை) |
| 18. சிரோ ரோகம் 5. (தலையில் ஏற்படும் நோய்கள்). | வாத சிரோ ரோகம்<br>பித்த ,,<br>கப ,,<br>சந்நிபாத ,,<br>க்ருமிஜ ,, (கிருமிகளால் ஏற்படக் கூடியவை) |
| 19. ஹ்ருத் ரோகம் 5. (இருதயத்தில் ஏற்படும் நோய்) | வாத ஹ்ருத்ரோகம்<br>பித்த ,,<br>கப ,,<br>சந்நிபாத ,,<br>க்ருமிஜ ,, |

| | | |
|---|---|---|
| 20. | பாண்டு ரோகம் 5. | வாத பாண்டு |
| | (சோகை நோய்) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாத,, |
| | | ம்ருத்பக்ஷண,,(மண் தின்பதி ருல்) |
| 21. | உன்மாதம் 5. | வாத உன் மாதம் |
| | (பைத்தியம்) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாத,, |
| | | ஆகந்துக,, |
| 22. | அபஸ்மரம் 4. | வாத அபஸ்மாரம் |
| | (காக்கை வலிப்பு) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாத,, |
| 23. | அக்ஷிரோகம் 4. | வாத ரோகம் |
| | (கண் ரோகம்) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாதம்,, |
| 24. | கர்ண ரோகம் 4. | வாத ரோகம் |
| | (காது ரோகம்) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாதம்,, |
| 25. | ப்ரதிச்யாயம் 4. | வாத ரோகம் |
| | (ஜலதோஷம், முதலிய | பித்த ,, |
| | மூக்கின் ரோகங்கள்) | கப ,, |
| | | சந்நிபாத ,, |
| 26. | முக ரோகம் 4. | வாத ரோகம் |
| | (வாயில் வரும் வியாதி) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாத ,, |

| | |
|---|---|
| 27. க்ரஹணீ தோஷம் 4. (அக்னி ஆசயமாகிய க்ரஹணி (Duodenum)-யில் ஏற்படும் கோளாறுகள்). இதுவே 'கிராணி' என்று தமிழ் நூல்களில் கூறப்படும் வயிற்றுப்போக்கு. | வாத க்ரஹணீ தோஷம்<br>பித்த ,, ,,<br>கப ,, ,,<br>சந்நிபாத ,, ,, |
| 28. மதம் 4. (குடி முதலியவற்றால் ஏற்படும் மயக்கம்) | வாத மதம்<br>பித்த ,,<br>கப ,,<br>சந்நிபாத ,,<br>(சிலக்ரந்தங்களில் மதத்தை 3 வகையாகப் பிரித்திருக்கிறார்கள் :—<br>மத்ய மதம் (குடியால்)<br>விஷஜ ,, (விஷங்களால்)<br>ரௌதிர (ரத்த தோஷத்தினால்)<br>இம்மூன்றும் மேலே சொல்லப்பட்ட 4 வகையில் உள்பட்டவைகள்). |
| 29. மூர்ச்சாயம் 4. (அறிவழிதலோடுகூடிய மயக்கம்) | வாத மூர்ச்சாயம்<br>பித்த ,,<br>கப ,,<br>சந்நிபாத ,, |
| 30. சோஷம் 4. (உடம்பு உலர்ந்து போதல் இதற்கே 'யக்ஷ்ம' என்ற பெயரும் உண்டு) | ஸாஹஸஜ சோஷம் (சக்திக்கு மீறிய காரியங்களால்)<br>ஸந்தாரணஜ சோஷம் (மலமூத்ராதிவேகங்களை அடக்குவதால்)<br>க்ஷயஜ சோஷம் (சுக்லம், ஓஜஸ், நெய்ப்பு இவை குறைதலால்)<br>விஷமாசனஜ சோஷம் (ஆகாரங்களில் ஏற்படும் தவறுகளால்) |
| 31. க்லைப்யம் (நபும்ஸகம்) | 1. பீஜோபகாதஜம் (விரைக்குக் கெடுதி ஏற்படுவதால்)<br>2. சுக்லோபகாதஜம் (சுக்லத்துக்குக் கெடுதி ஏற்படுவதால்) |

| | | |
|---|---|---|
| 20. | பாண்டு ரோகம் 5. | வாத பாண்டு |
| | (சோகை நோய்) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாத ,, |
| | | ம்ருத்பக்ஷண ,, (மண் தின்பதினால்) |
| 21. | உன்மாதம் 5. | வாத உன் மாதம் |
| | (பைத்தியம்) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாத ,, |
| | | ஆகந்துக ,, |
| 22. | அபஸ்மரம் 4. | வாத அபஸ்மாரம் |
| | (காக்கை வலிப்பு) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாத ,, |
| 23. | அக்ஷிரோகம் 4. | வாத ரோகம் |
| | (கண் ரோகம்) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாதம் ,, |
| 24. | கர்ண ரோகம் 4. | வாத ரோகம் |
| | (காது ரோகம்) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாதம் ,, |
| 25. | ப்ரதிச்யாயம் 4. | வாத ரோகம் |
| | (ஜலதோஷம், முதலிய | பித்த ,, |
| | மூக்கின் ரோகங்கள்) | கப ,, |
| | | சந்நிபாத ,, |
| 26. | முக ரோகம் 4. | வாத ரோகம் |
| | (வாயில் வரும் வியாதி) | பித்த ,, |
| | | கப ,, |
| | | சந்நிபாத ,, |

| | |
|---|---|
| 27. **க்ரஹணீ தோஷம் 4.** (அக்னி ஆசயமாகிய க்ரஹணி (Duodenum)-யில் ஏற்படும் கோளாறுகள்). இதுவே 'கிராணி' என்று தமிழ் நூல்களில் கூறப்படும் வயிற்றுப்போக்கு. | வாத க்ரஹணீ தோஷம்<br>பித்த ,, ,,<br>கப ,, ,,<br>சந்நிபாத ,, ,, |
| 28. மதம் 4. (குடி முதலியவற்றால் ஏற்படும் மயக்கம்) | வாத மதம்<br>பித்த ,,<br>கப ,,<br>சந்நிபாத,,<br>(சிலக்ரந்தங்களில் மதத்தை 3 வகையாகப் பிரித்திருக்கிறார்கள் :—<br>மத்ய மதம் (குடியால்)<br>விஷஜ ,, (விஷங்களால்)<br>ரௌதிர (ரத்த தோஷத்தினால்)<br>இம்மூன்றும் மேலே சொல்லப்பட்ட 4 வகையில் உள்பட்டவைகள்). |
| 29. மூர்ச்சாயம் 4. (அறிவழிதலோடுகூடிய மயக்கம்) | வாத மூர்ச்சாயம்<br>பித்த ,,<br>கப ,,<br>சந்நிபாத ,, |
| 30. **சோஷம் 4.** (உடம்பு உலர்ந்து போதல் இதற்கே 'யக்ஷ்ம' என்ற பெயரும் உண்டு) | ஸாஹஸஜ சோஷம் (சக்திக்கு மீறிய காரியங்களால்)<br>ஸந்தாரணஜ சோஷம் (மலமூத்ராதிவேகங்களை அடக்குவதால்)<br>க்ஷயஜ சோஷம் (சுக்லம், ஓஜஸ், நைப்பு இவை குறைதலால்)<br>விஷமாசனஜ சோஷம் (ஆகாரங்களில் ஏற்படும் தவறுகளால்) |
| 31. **க்லேப்யம்** (நபும்ஸகம்) | 1. பீஜோபகாதஜம் (விரைக்குக் கெடுதி ஏற்படுவதால்)<br>2. சுக்லோபகாதஜம் (சுக்லத்துக்குக் கெடுதி ஏற்படுவதால்) |

3. த்வஜபங்கஜம் (குறி நரம்பு முதலியவை தளர்ந்து போவதால்)

4. ஜராசுக்ரக்ஷயஜம் (கிழத்தனத் தால் சுக்லம் குறைதலால்)

| | |
|---|---|
| 32. சோதம் 3. (வீக்கம்) | 1. வாத சோதம் |
| | 2. பித்த சோதம் |
| | 3. கப சோதம் |
| 33. கிலாஸம் 3. (குஷ்டத்தில் ஒரு வகை) | 1. ரத்த கிலாஸம் (சிவப்பு ரத்தத்தைப்பற்றியது) |
| | 2. தாம்ரகிலாஸம் (தாம்ர வர்ணம், மாம்ஸத்தைப் பற்றியது) |
| | 3. சுக்லகிலாஸம். (வெண்மை, கொழுப்பைப்பற்றியது) |
| 34. ரத்த பித்தம் 3. (மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ, இரு புறமோ ரத்தம் வெளிப்படுதல்) | 1. ஊர்த்வபாகம் (மேலே கண் காது, மூக்கு, வாய், வழியாக ரத்தம் வெளிப்படல்) |
| | 2. அதோபாகம் (கீழே மல மூத்திர த்வாரங்களின் வழியே ரத்தம் வெளிவரல்) |
| | 3. உபயதோபாகம் (மேலும் கீழும் ரத்தம் வெளிவரல்) |
| 35. ஜ்வரம் 2. | சீதஜ்வரம் (உஷ்ண வீர்யமான மருந்துகளால் குணமடைவது) |
| | உஷ்ணஜ்வரம் (சீத வீர்யமான மருந்துகளால் குணமடைவது) |
| 36. வ்ரணம் 2. (விரணம்) | 1. நிஜம் (சரீரத்தில் ஏற்படும் கோளாறுகளால் உண்டாவது) |
| | 2. ஆகந்துகம் (வெளியிலிருந்து உண்டாகும் கெடுதிகளால் உண்டாவது) |

| | |
|---|---|
| 37. ஆயாமம் 2. (உடம்பை வளைக்கும் வாதம்) | 1. அந்தராயாமம் (கழுத்தில் பிடிப்புடன் உள்புறமாக உடம்பை வளைப்பது)<br>2. பஹிராயாமம் (முதுகுத் தண்டில் பிடிப்புடன் வெளிப்புறமாக உடம்பை வளைப்பது) |
| 38. க்ருத்ரஸி 2. (விறைப்பு, வலி, நடுக்கம் இவைகளோடு கூடிய வாதப்ரதானமான வியாதி) | 1. வாத க்ருத்ரஸீ<br>2. வாத கபக்ருத்ரஸீ |
| 39. காமலா 2. (பித்தபாண்டு அதிகரித்தும் பித்தத்தினாலும் கண், உடம்பு, மூத்திரம், மலம் முதலியவை மஞ்சளாகும் வியாதி ; மஞ்சள் காமாலை என்று வழங்கப்படுவது) | 1. கோஷ்டாச்ரயா (உடம்பின் உட்பாகத்திலுள்ள அங்கங்களைப்பற்றியது)<br>2. சாகாச்ரயா (தோல், ஸப்த தாதுக்கள் இவைகளைப் பற்றியது) |
| 40. ஆமம் 2. (ஆகாரத்தின் அளவு, காலம், குணம் இவற்றின் தவறுகளால் உண்டாகும் பக்குவமாகாத ரஸத்தின் சேர்க்கையினால் ஏற்படும் வியாதி) | 1. விஷூசி. (வயிற்றுப்போக்கு)<br>2. அலஸகம் (வாந்தி அல்லது போக்கு இல்லாமல், ஆம விஷம் உள்ளேயே தங்கி உடம்பைக் கட்டைபோல் விறைக்கச் செய்வது) |
| 41. வாத ரக்தம் 2. (ப்ரகோபம் அடைந்த ரத்தம், வாயுவினால் கெட்டுப் போய், அரிப்பு, எரிவு, வலி, தோலில் வர்ணபேதம், முதலியவைகளை உண்டாக்கும் வியாதி) | 1. உத்தானம் (தோல் மாம்ஸம் இவைகளைப் பற்றியது)<br>2. கம்பீரம் (உடம்பினுள் உள்ள அங்கங்களைப் பற்றியது) |
| 42. அர்சஸ் 2. (மூலம்) | 1. ஆர்த்ர அர்சஸ் (ரத்தம், பித்தம் இரண்டும் ப்ரகோபமடைந்து ரத்த ஒழுக்கோடு கூடிய மூலம்) |

2. சுஷ்க அர்சஸ்) (வாதம், கபம் இரண்டும் ப்ரகோபமடைந்து உண்டாகும் வறண்ட மூலம்)

43. ஊருஸ்தம்பம் 1.
இது ஒரு ஆச்சரியமான வியாதி. ஆமவிஷம் மேதஸ்ஸோடு சேர்ந்து வாத, பித்த கபங்களின் மார்க்கங்களை அடைத்து துடையில் இறங்கி அங்கேயே தங்கி துடையில் வலி, அசைவின்மை, ஜ்வரம் முதலியவைகளைக் கொடுக்கும். இது வாத வியாதி யல்ல. தைலம் முதலிய ப்ரயோகம் செய்யவே கூடாது. ஆகாரத்தைக் குறைத்தும் திப்பிலி, கடுக்காய், க்ஷாரங்கள் முதலியவை சேர்ந்த ப்ரயோகங்களாலும் கபத்தையும், மேதஸ்ஸின் அதிகத்தையும், ஆம தோஷத்தையும் சமனம் செய்யவேண்டும்)

1. ஊருஸ்தம்பம் (ஒரே வகை—ஆம தோஷம், வாத,பித்த, கபம் இவை சேர்ந்து உண்டாவது)

44. ஸந்யாஸம் 1.
(ஆகார புஷ்டியின்மையாலும் மனோவேதனைகளாலும் ப்ரகோபமடைந்த வாத, பித்த, கபங்கள் ரத்தக் குழாய்களையும், ரஸவாஹிகளையும் உணர்ச்சி செல்லும் தமனிகளையும் அடைப்பதினால் ஏற்படும் மிகக்கடுமையான வியாதி. கட்டைபோல் கிடத்தி ப்ராணபாயத்தைக் கொடுக்கக் கூடியது)

1. ஸந்யாஸம் (ஒரேவகை, மனது சரீரம் இரண்டையும் பற்றியது).

45. மஹாகதம் 1.
(வஸ்துக்களின் ஸ்வரூபத்தைப் பற்றித்தப்பான அபிப்பிராயத்தை அடைந்து அதிலேயே ஆக்ரஹம் கொள்ளல்)

1. மஹாகதம் (ஆகார புஷ்டியில்லாமை, மல மூத்ர வேகத்தை அடக்குதல், ஒத்துக்கொள்ளாத சீதோஷ்ணங்களில் பழகுதல் இவைகளால் உண்டாவது. இருதயத்தையும், மனதையும் பற்றியது)

46. க்ருமி ஜாதிகள் 20.

இவை நான்கு வகை :—

(a) பஹிர்மலஜம் (வெளியே உள்ள சரீரமலங்களில் உண்டாகக்கூடியவை) 2:-

1. யூகம்
2. பிபீலிகம்

(கருமை, வெண்மை நிறம். பேன், ஈர் முதலியன).

(b) சோணிதஜம் (ரத்தத்தில் உண்டாகக் கூடியவை) 6 :-

3. கேசாதம்
4. லோமாதம்
5. லோமத்வீபம்
6. ஸௌரஸம்
7. ஔதும்பரம்
8. ஜந்துமாதா

தாமிர வர்ணம். உருண்டை வடிவம். சில கண்ணுக்கு புலப்படா. மாம்ஸம் முதலியவைகளைத் தின்னும்.

(c) ச்லேஷ்மஜம் (கபத்தில் உண்டாகக்கூடியவை) 7:—

9. அந்த்ராதம்
10. உதராதம்
11. ஹ்ருதயசரம்
12. சுரு
13. தர்ப்பபுஷ்பம்
14. ஸௌகந்திரம்
15. மஹாகுதம்.

சில பருத்து வெளுத்தவை; சில புழுப்போல் சிவந்த வெளுப்பு; சில கண்ணுக்குப் புலப்படா, அவை நீண்டு நூல்போல் வெளுத்தவை உடம்பை இணைக்கச் செய்து அக்னி பலத்தைக் கெடுத்து

இருதயத்தையும் கெடுப்பவை. ஆமாசயத்தில் உண்டாகி மேலும் கீழும் செல்லுபவை.

(d) புரீஷஜம் (மலத்தில் உண்டாகக்கூடியவை)

16. ககேருகம்
17. மகேருகம்
18. லேலிஹம்
19. ஸசூலகம்
20. ஸௌஸுராதம்.

சில சிறுத்து வெண்மையாகவும், சில பெருத்து நீல நிறம் பசுமை, மஞ்சள் நிறமுள்ளவைகளாகவும் இருக்கும். பேதி, உடம்பிளைப்பு முதலியவைகளை உண்டாக்கும்.

47. ப்ரமேஹம் 20 (நீரிழிவு)

(a) கபப்ரமேஹம் 10;—

இவை புதிய அரிசி முதலிய தான்யங்களாலும், ஸ்நானம் தேகப்பயிற்சி முதலியன இல்லாததாலும், தூக்கம், நடையின்மை முதலிய காரணங்களாலும், கபம், மேதஸ், மூத்திரம் இவை அதிகமாகி உண்டாகின்றன.

இவைகளில், மூத்திரத்தில் அடியில்கண்ட 10 குணங்களில் சிலவோ அல்லது யாவையுமோ இருக்கும்:—

1. வெண்மை
2. குளிர்ச்சி
3. திடத்துவம்
4. பிசுபிசிப்பு
5. மிகவும் தெளிவு
6. எண்ணெ நைப்பு
7. கனம்
8. இனிப்பு
9. இறுகித்தெளிந்த தன்மை
10. மெதுத் தன்மை (வேகமில்லாமை)

இவற்றின் பெயர் :—

1. உதகமேஹம் (ஜலம் போன்று அளவுக்கு மிஞ்சிய மூத்திரம்)
2. இக்ஷுவாலிகாரஸ மேஹம் (இனிப்பும், பிசுபிசிப்பும் உள்ளது)
3. ஸாந்த்ர மேஹம் (மூத்திரம் பாத்திரத்தில் வைக்கப்பட்டால் வண்டல் படிவது)
4. ஸாந்த்ர ப்ரஸாத மேஹம் (மூத்திரம் அடைபட்டு கொஞ்சம் கொஞ்சமாக வருதல்)

5. சுக்லமேஹம் (மாக்கரைத்தது போல் சுக்லம்வெளிப்படுதல்)

6. சுக்ர மேஹம் (சுக்லத்தோடு அடிக்கடி நீர் வெளிப்படுதல்)

7. சீத மேஹம் (மிகக் குளிர்ச்சி இனிப்பு இவைகளோடு கூடியது)

8. ஸிகதா மேஹம் (மணல் போன்று இறுகிய மூத்திர தோஷங்கள் உள்ளது)

9. சனைர்மேஹம் (மெதுவாகவும், கொஞ்சம் கொஞ்சமாயும் வருவது)

10. லாலா மேஹம் (நூல் வலை போல் பிசுபிசுத்த பாகங்களோடு கூடியது)

இவை 10-ம் சாத்திய ப்ரமேஹங்கள்.

(b) பித்தத்தினுல் ஏற்படும் ப்ரமேஹங்கள் 6:— பித்தத்தை அதிகரிக்கும் அஜீரண போஜனம் முதலியவைகளால் பித்தம் அதிகரித்து, மேதஸ், மாம்ஸம், உடம்பின் நீர் இவைகளை தூஷிப்பித்து மூத்திரப்பைக்கு இவைகளைக் கொண்டு வந்து ப்ரமேஹத்தை உண்டு பண்ணுகிறது. இவை 6 விதம்:—

1. க்ஷார மேஹம் (சுண்ணும்பு முதலிய காரத்தின் நீர் போல காரம், வர்ணமுள்ளது)

2. காலமேஹம் (மசியைப் போல் கருப்பான வர்ணமும், உஷ்ணமும் உள்ளது)

3. நீல மேஹம் (நீல வர்ணமுள்ளது. புளிப்பு உள்ளது)

4. ரக்த மேஹம் (சிவப்பு வர்ணம், துர்கந்தம், உஷ்ணம், உப்பு இந்த குணங்களுள்ளது)

5. மாஞ்சிஷ்டமேஹம்(மஞ்சிட்டி போன்ற வர்ணம், துர்கந்தம் உள்ளது)

6. ஹாரித்ர மேஹம் (மஞ்சள் வர்ணம், கார்ப்பு இந்த குணங்கள் உள்ளது)

இவைகளை குணப்படுத்துவது மிகவும் கஷ்டம்.

(c) வாதத்தினுல் உண்டாகும் மேஹங்கள் 4:—

அமித தேகப்பயிற்சி, ஸ்திரீ போகம், வாயு பதார்த்தம், வேகத்தை அடக்குதல் முதலிய காரணங்களால் வாயு ப்ரகோபமடைந்து வஸை (மாம்ஸரஸம்), மஜ்ஜை, லஸீகா (ஊந்தண்ணீர்), ஓஜஸ், இவைகளை இழுத்துக் கொண்டு மூத்திரப்பையிற் புகுந்து வெளிப்படுத்துகிறது

(1) வஸாமேஹம் (வஸை கலந்தது)

(2) மஜ்ஜா மேஹம் (மஜ்ஜை கலந்தது)

(3) ஹஸ்திமேஹம் (மதம்பிடித்த யானை போல் ஸதா நீர் இறங்குவது)

(4) மது மேஹம் (கார்ப்பு, இனிப்பு, வெண்மை, ஙைப்பின்மை இந்த குணமுள்ளது) இந்த 4-ம் அஸாத்திய ப்ர மேஹங்கள்.

48. யோநிவ்யாபத் 20. (கர்ப்பத்துக்கு இடையூறுன பெண் அவயவக்கோளாறுகள்) இவை ஆகார முதலிய பழக்கங்களின் பிசகுகளாலும், ருதுவில் ஏற்படும் கெடுதிகளாலும், பிறக்கும் போதே உள்ள குறைவுகளாலும், கெட்ட கர்மாவின் பலத்தினுலும் ஏற்படக் கூடியவை)

இவை 2 வகை :—

(a) தோஷங்களால் ஏற்படுபவை 4;—

1. வாத யோநிவ்யாபத்—(வலி, சத்தம் இவைகளோடு ருது வெளிப் படுதல்)
2. பித்த யோநிவ்யாபத்–(எரிவு, வேக்காடு, உஷ்ணம், நீலம் அல்லது மஞ்சள் வர்ணம், துர்க்கந்தம் இந்த குணங்களோடு ருது வெளிப்படுதல்)
3. கப யோநிவ்யாபத்-(குளிர்ச்சி, பிசுபிசுப்பு, அரிப்பு, வெண்மைநிறம் இந்த குணங்களோடு ருது வெளிப்படுதல்)
4. சந்நிபாத யோநிவ்யாபத்:—(எரிவு, குத்துவலி, வெண்மை, பிசுபிசிப்பு இந்த குணமுடைய ருது)

(b) இதர தாது முதலியவற்றின் மாறுபாடுகளாலும், சேர்க்கையிலும், ஏற்படுபவை 16:—

5. ரக்த யோநி— (ரத்தம் பித்தத்தினுல் கெடுக்கப்பட்டு அதிகமாக வெளிப்படுதல், கர்ப்பம் உண்டான பிறகும் நில்லாதிருத்தல்)
6. அரஜஸ்கா— (யோநியிலும் கர்ப்பாசயத்திலும் பித்தம் தங்கி ருது ஆகாமல் செய்வது; இளைப்பு, மேனி கெடுதல் இவைகளை உண்டாக்குவது)
7. அசரணு (புருஷசங்கமில்லாமையாலும், யோநியைச் சுத்திசெய்து கொள்ளாமையாலும், க்ருமிகள் உண்டாகி அதிக அரிப்பை உண்டாக்கி அமிதமாக புருஷ விருப்பத்தை உண்டாக்குவது)

8. அதிசரணு (அமித போகத்தி ஞல் வாயு ப்ரகோபமடைந்து வீக்கம், வலி, உணர்ச்சியின் மை இவைகளை உண்டாக்கு வது)

9. ப்ராக்சரணு (ருதுவாவதற்கு முன் ஸங்கம் ஏற்படுவதால் ப்ரகோபமடைந்த வாயுவி ஞல் ஏற்படும் இடுப்பு முத லிய இடங்களில் வலி)

10. உபப்லுதா (வாயு ப்ரகோப மடைந்து கபத்தை இழுத்துக் கொண்டு யோநியை அடைந்து பாண்டுரோகம், வலியுடன் கபம் கசிந்து வெளிப்படுதல் முதலியவற்றைச் செய்வது)

11. பரிப்லுதா (பித்த சரீரமு டைய ஸ்த்ரீ தும்மல், ஏப்பம் முதலியவைகளை ஆண்பிள்ளை களின் எதிரில் அடக்குவதி ஞல் பித்தமும் வாதமும் சேர்ந்து யோநியைக் கெடுத்து, தொட முடியாத வீக்கம், வலி, ஜ்வரம், நீலம் அல்லது மஞ்சள் வர்ணம் கலந்த ருது, இவைகளை உண்டாக்குவது),

12. உதாவர்த்திநீ — (வேகங்களை அடக்குவதனுல் ப்ரகோப மடைந்த வாதம் ருதுவை வலி யுடன் கொஞ்சம் கொஞ்ச மாக வெளிப்படச் செய்வது)

13. கர்ணிநீ (பிரஸவ காலத் துக்கு முந்தியே பிரஸவத்துக் காக வலுவில் பாடுபடுவதி ஞல் ப்ரகோபமடைந்த வாயு கர்ப்பத்திஞல் தடைப்பட்டு கபம், ரத்தம் இவற்ருேடு கலந்து ஒரு முடிச்சுப்போன்ற தடையை உண்டாக்குகிறது. அது ருதுவைத் தடுக்கும்)

14. புத்ரக்நீ (சோணிதம் கெட்டுப்போய் வாயுப்ரகோபமடைந்து கர்ப்பம் உண்டாக உண்டாக அதை அழிப்பது)

15. அந்தர்முகீ (வயிறு நிறையச் சாப்பிட்டவுடன் ஸங்கம் ஏற்பட்டு அப்போது சரீரம் சரியான நிலையில் இல்லாமலும் இருந்தால் வாயுவானது கர்ப்பாசயத்தின் முகத்தை வளைத்து விடுகிறது. அப்போது இந்தக் கோளாறு ஏற்படுகிறது)

16. ஸூசீமுகி (கர்ப்பத்திலிருக்கும்போதே ஸ்த்ரீப்ரஜைக்கு மாதாவின் பிழையினால் வாயு ப்ரகோபமடைந்து கர்ப்பத்தின் ஜனன அவயவத்தைத் தாக்குமானால் அப்போது அந்த அவயவத்தின் த்வாரத்தை ஊசி போன்ற சிறிய த்வாரமாகச் செய்து விடுகிறது. அதற்கே ஸூசீமுகம் என்று பெயர்)

17. சுஷ்கா (ஸங்ககாலத்தில் மலமூத்திர வேகங்கள் உண்டானால் அவைகளை அடக்குவதினால் ப்ரகோபமடைந்த வாயு கர்ப்பாசயத்தின் வாயை உலர்த்தி விடுகிறது. அந்தத் தோஷத்துக்கு சுஷ்கா என்று பெயர்)

18. வாமிநீ— (கர்ப்பம் அடைந்த 6-வது அல்லது 7-வது நாள் கர்ப்பாசயத்தில் போய்ச் சேர்ந்த ரேதஸ்ஸை வெளிப்படுத்தும் தோஷத்துக்கு வாமிநீ என்று பெயர்)

19. ஷண்டீ (கர்ப்பத்திலிருக்கும்போதே சோணித தோஷத்தினால் ப்ரகோபமடைந்த

வாயு கர்ப்பத்திலிருக்கும் ஸ்த்ரீ சிசுவின் கர்ப்பாசயத்தைக் கெடுத்து விடுகிறது. அதனுல் அந்த சிசு வயதான பிறகும் ருதுவாகாமலும் ஸ்தன மில்லாமலும் இருக்கும் அதற்கு ஷண்டீ என்று பெயர்)

20. மஹாயோநி (தவருன நிலைகளில் அமித போகம் செய்வதினுல் வாயு ப்ரகோபமடைந்து கர்ப்பாசயம் யோநி இவற்றின் முகத்தை அசைவறச் செய்யும். வாய் மூடப்படாமல் நுறையுடன் ருது வெளிப்படும். கணுக்கஷி லும் இடுப்பிலும் வலி யிருக்கும். யோநி மாம்ஸம் மேல் கிளம்பி யிருக்கும். இந்தத் தோஷத்திற்கு மஹா யோநி என்று பெயர்)

இதில் சொல்லப்பட்ட வியாதிகளின் சிகிச்சைக் கிரமத்தை சரகஸம்ஹிதை முதலிய வடமொழி நூல்களிலும் அகஸ்தியர், தேரையர் முதலிய தமிழ் நூல்களிலும் விரிவாகக் காண்க.

# அநுபந்தம்

## ப்ராசீன வைத்ய க்ரந்தங்களின் விவரம்

யாமளாஷ்டகம் (ஸரஸ்வதி மஹால் நெ. 9335 சுவடி) என்ற கிரந்தத்தில் நமது ப்ராசீன க்ரந்தங்களின் விபரம் பூராவும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் 4 வேதங்களுக்கும் உபவேதங்கள் 4, அங்க வேதங்கள் 4 என்ற பெயர்களோடு நமது புராதன கலைகளைப்பற்றிய கிரந்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன :—

| வேதங்கள். | உபவேதங்கள். | அங்கவேதங்கள். |
|---|---|---|
| ருக்வேதம். | ஆயுர்வேதம், 30,000 கிரந்தம், 12 அத்யாயம் கொண்டது. | ஆயுர்வேதம் 8,00000 கிரந்தம், 8 காண்டங்களைக் கொண்டது. |
| யஜுர்வேதம். | தநுர்வேதம், 20,000 கிரந்தம், 33 அத்யாயம் கொண்டது. | சில்பவேதம், 6,00000 கிரந்தம், 2 பாகம்—20 அத்யாயம் கொண்டது. |
| ஸாமவேதம். | காந்தர்வ வேதம் 36,000 கிரந்தம், 17 அத்யாயம் கொண்டது. | ஜ்யோதிஷம். 4,00000 கிரந்தம், 3 ஸ்கந்தம் கொண்டது. |
| அதர்வணவேதம். | அர்த்தவேதம் 14,000 கிரந்தம்- 18 அத்யாயம் கொண்டது. | தாதுத்யோதம் 2,00000 கிரந்தம். 32 ஸித்திகள் கொண்டது. |

மேலே கண்ட உபவேதங்கள், அங்கவேதங்கள் இவற்றின் விரிவான அட்டவணைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலிருந்து ஆயுர்வேதம் என்ற உபவேதத்தினுடையவும் ஆயுர்வேதம் என்ற அங்கவேதத்தினுடையவும் அட்டவணைகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

ஆயுர்வேதம் என்ற உபவேதம்—30,000 கிரந்தம், இதில் :—

1. பிண்ட உற்பத்தி
2. ஆயுர் நிர்ணயம்
3. ப்ரக்ருதி ஞானம் ( சரீர. மனதின் சுபாவங்கள் )
4. நாடி தாது விதானம்
5. வஸ்து தோஷ நிரூபணம்
6. சாரீர குண விஞ்ஞானம்
7. ஔஷத உத்பாதநக்ரமம்
8. கஜரோகம், அச்வரோகம், நரரோகம்
9. சிகித்ஸாக்ரியை
10. ரஸ, அக்னி, மூலிகா, ரக்த, பாக, ரேகம் என்ற ஆறுவகை ப்ரயோகங்கள்
11. வியாதி குண நிரூபணம்
12. பூர்வாபூர்வ பாபகர்ம விஞ்ஞாநம்
13. கர்மதோஷ ப்ரதர்சனம்—முதலிய பல விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன.

ஆயுர்வேதம் என்ற அங்கவேதம்—8,00000 கிரந்தம்—8 காண்டங்கள் கொண்டது. அவை :—

| | | |
|---|---|---|
| (1) | ரஸேச்வர காண்டம் | —1,00000 கிரந்தம் |
| (2) | வானஸ்பத்யம் | ,, |
| (3) | குணபாடம் | ,, |
| (4) | சாரீரம் | ,, |
| (5) | வியாதி தத்வபரிஞானம் | ,, |
| (6) | பைஷஜ்யக்ருதி லக்ஷணம் | ,, |
| (7) | ருங்நிதாநம் | ,, |
| (8) | க்ரியாகாண்டம் | ,, |

இவ்வெட்டு காண்டங்களின் அட்டவணை :—

1. ரஸேச்வர காண்டம்—1,00000 கிரந்தம் :—

(a) சம்பு பீஜ விநிஷ்பத்தி (ரஸம் உண்டாகும் விதம்)
(b) பார்வதி பீஜஸம்ஸ்ருதி (கந்தகம் ,, ,,)

(c) சுத்தி க்ரியை
(d) பீஜ தோஷம்
(e) மாரணம்
(f) ரஸ விக்ரியை
(g) ஸ்தம்பனம்
(h) பாரதாஸ்போடம்
(i) க்ஷேக தாஹப்ரணசநம்
(j) நாநா ஔஷதிக்ருதி மூலம்
(k) மோடநம்
(l) மத காரணம்
(m) கத தாரண நிஷ்பத்தி
(n) வங்காதி கரண க்ரியா
(o) லோஹாத்வம்ஸம்
(p) ரஸாகர்ஷம் — இவை முதலியன

2. வாநஸ்பத்யம் (செடி, கொடி, மரம் முதலியன), 1,00000 கிரந்தம்

(a) ஔஷத பரிஞானம்
(b) வீருதஸமுத்பவம் (செடி கொடிகளின் உற்பத்தி)
(c) வ்ருக்ஷ, மூல, வல்லி, பத்ர, புஷ்ப, பல, த்வக், நிர்யாஸ (பிசின்), ரஸ, ஸாரம், இவைகளின் உற்பத்தி
(d) ஸாரயோகவியோகம்
(e) சுஷ்க, ஆர்த்ர, அனுகிர்த்தனம்
(f) கஷாய பரிஞானம்
(g) பாகபேத லக்ஷணம்
(h) குணஸார விஞ்ஞானம்
(i) ஓஷதி நிருபணம்
(j) தைல நிஷ்பாதனம்
(k) பாக விஞ்ஞப்தி
(l) கந்தஸம்ஸ்க்ரியா (வாஸனைத் தைலங்கள்)
(m) ரஸாயந பரிஞாநம்
(n) வஸ்து யோக ஸாதனம்

(o) ஓஷதி உன்மீலனம் (செடிகள் விழித்தல்)
(p) க்ரியா கால சோதனம்
(q) (?) யாவ அஞ்ஜந ஸித்தி
(r) பிஷ்டீகரண ஸாதநம்
(s) (?) நாப யோகம்
(t) பார்வதி பீஜம், கைரேயம், நாபீ இவற்றின் சுத்தி
(u) 'வஜ்ரவல்லி,' 'அம்ருதா,' 'மாம்ஸீ,' 'குமாரி,' 'கதகாச்ம,' இவற்றின் ஸ்வரூபம், கல்ப முறைகள்
(v) த்ராக்ஷாதி ஆஸவம். —முதலியன

3. குணபாடம் — 1,00000 கிரந்தம் —

(a) குண நிர்வசநம்
(b) ஸர்வ வீருத லக்ஷணம் (செடி கொடிகளின் லக்ஷணங்கள், குணங்கள்)
(c) ப்ரக்ருதி விஞ்ஞாநம்
(d) அநுரூபார்த்த கல்பநம் (மருந்து சேர்க்கை)
(e) மனுஷ்ய குண ஞாநம்
(f) பால, ஸ்த்ரீ சிகிச்சை
(g) மாத்திரை, குளிகை, சூர்ணம் இவற்றின் கல்பனமும் இவை முதலியன.

4. சாரீரம் — 1,00000 கிரந்தம்.

(a) தாதுநிர்வசனம்
(b) பிண்ட உற்பத்தி
(c) ப்ரக்ருதிலக்ஷணம்
(d) 101 நாடி லக்ஷணம்
(e) ஸ்ருஷ்டி, ஸ்திதி, அந்தநிரூபணம்
(f) மூர்ச்சை, உன்மாதம் — இவற்றின் காரணம்
(g) கர்மஜ, தோஷஜ, த்வக்த்வஜ வியாதிகள்
(h) ரோகபரிஸங்க்யாநம்
(i) பூர்வ கர்ம ஞாநம்
(j) 6 வித நாடி ஞாநம்

(k) ஸாத்ய, அஸாத்ய ஞானம்
(l) ரோக, ரோகி, இவர்களின் லக்ஷணம், நிதானம்
(m) நிமித்தம், சகுனம்
(n) ரோகங்களின் காலவரையறை — முதலியன.

14

5. வியாதி தத்வ பரிஞானம் — 1,00000 கிரந்தம்.

(a) வியாதி நிரூபணம்

| | | |
|---|---|---|
| (b) | சிரோ ரோகங்கள் | — 60 |
| (c) | கண் வியாதிகள் | — 90 |
| (d) | காது ,, | — 100 |
| (e) | வாய் ,, | — 70 |
| (f) | ஸ்ருக்வி ரோகங்கள் | — 15 |
| (g) | கழுத்து ரோகங்கள் | — 6 |
| (h) | இருதய ,, | — 20 |
| (i) | விலா, வயிறு ,, | — 60 |
| (j) | பக்ஷரோகம் ,, | — 10 |
| (k) | லிங்கரோகம் | — 33 |
| (l) | அபானரோகம் | — 22 |
| (m) | முழங்கால், துடை, மூத்திரப்பை ரோகம் | — 17 |
| (n) | முழங்கால் முட்டு ரோகம் | — 4 |
| (o) | கால் விரல் ரோகம் | — 10 |
| (p) | வெண்குஷ்டம் வகை | — 33 |
| (q) | ப்ரமேஹம் | — 20 |
| (r) | மூத்ர ரோகம் | — 55 |
| (s) | வாயுக்கள் | — 86 |
| (t) | உன்மாதம் | — 10 |
| (u) | மூர்ச்சை | — 5 |
| (v) | ஜ்வரம் | — 36 |
| (w) | அபஸ்மாரம் | — 4 |

(x) அதிஸார }
(y) க்ரஹணி } வகைக்கு — 20
(z) அர்சஸ் }
(aa) க்ஷயம், யக்ஷ்மா — 40
(bb) ராஜயக்ஷ்மா — 1
(cc) வ்ரணங்கள் — 1000
(dd) பித்த ரோகங்கள் — 3000
(ee) சிலேஷ்ம ரோகங்கள் — 1000
(ff) த்ரிதோஷ ரோகங்கள் — 3000
(gg) வாத ரோகங்கள் முதலியன. — 3000

6. பைஷஜ்யக்ருதி லக்ஷணம் 1,00000 கிரந்தம்

(a) ஔஷதம் செய்தல்
(b) ஔஷதங்களின் அளவு
(c) திதி, வார, நக்ஷத்திர, யோக, கரண லக்ஷணம்
(d) பாகலக்ஷணம்
(e) பத்தியம் எதுவெனல்
(f) ஸந்நிபாத லக்ஷணம்
(g) வியாதியில் காலம் கடத்தல்
(h) வமன, விரேசந, லங்கனம்
(i) ஆரோக்ய மடைந்தபின் ஸ்நானம், ஆகாரம், ஸங்கம் இவற்றைப் பற்றிய விதிகள் முதலியன.

7. நிதானம் (வியாதியின் நிதானம்) 1,00000 க்ரந்தம் :—

(a) தோஷநிர்வசநம்
(b) ரோக உற்பத்தி ஞாநம்
(c) சிகிச்சை முறை
(d) வைத்தியன் லக்ஷணம்
(e) மருந்து செய்தல், முதலியன.

8. க்ரியாகாண்டம் — 1,00000 கிரந்தம் :—

(a) பலவித க்ரியைகள்
(b) ரோகங்கள் ஔஷதங்களின் லக்ஷணம்

(c) ரோகிகள் செய்யவேண்டிய க்ரியைகள்—வைத்தியன் செய்யவேண்டிய க்ரியைகள்
(d) ஔஷதம் எடுத்துக் கொள்ளுதல்
(e) தானங்களின் முறை
(f) மந்த்ர ஜபங்களின் முறை
(g) சுத்தி க்ரியைகளின் முறை
(h) ருத்ராபிஷேக விதி
(i) எல்லா தேவதைகளையும் அர்ச்சிக்கும்முறை, முதலீயன.

9

இவ்வாருக உள்ள ஆயுர்வேதம் என்ற உபவேதம் ஆயுர்வேதம் என்ற அங்கவேதம் இரண்டிலும் மிக விரிவான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

ஆயுர்வேதம் எழுதிய மகர்ஷிகள் 64 பேர்.

குறிப்பு :— மேலே கண்டவிவரம், 'யாமளாஷ்டகம்' 11, 12 அத்யாயங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டது.

———

சரபேந்திரர் குன்ம வைத்ய முறைகளிலுள்ள

# மருந்துகளின் அட்டவணை

| நெம்பர் | மருந்துகளின் பெயர் | பக்கம் | மருந்து நெம்பர் | அடங்கியுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை<br>மூ = மூலிகை<br>க = கடைச்சரக்கு<br>க்ஷா = க்ஷாரம்<br>உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| | **1. லேகிய வகைகள்** | | | | |
| 1 | வச்சிரவல்லரிதகீ லேகியம் | 1 | 1 | 30 | உ, மூ, க |
| 2 | குன்மாதிக்கு லேகியம் | 63 | 42 | 9 | மூ, க |
| 3 | குன்மாதிக்கு கோமிய லேகியம் | 88 | 60 | 6 | க, மூ |
| 4 | வாத குன்மாதிக்கு மருந்து | 99 | 70 | 6 | க |
| 5 | குன்மாதிக்கு வில்வாதி லேகியம் | 110 | 80 | 14 | க |
| 6 | சத்தி குன்மாதிக்கு வில்வாதி லேகியம் | 112 | 81 | 14 | க |
| 7 | சத்தி குன்மாதிக்கு வில்வாதி லேகியம் | 114 | 82 | 3 | க |
| 8 | குன்மாதிக்கு மருந்து | 153 | 111 | 14 | க |
| 9 | குன்மாதி பீலிகைக்கு | 158 | 113 | 24 | க |
| 10 | வலி குன்மாதி வயிற்று வியாதிக்கு மருந்து | 181 | 134 | 6 | க |

## 2. வடகங்கள்

| நெம்பர் | மருந்துகளின் பெயர் | பக்கம் | மருந்து நெம்பர் | அதிலுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை மூ = மூலிகை க = கடைச்சரக்கு க்ஷா = க்ஷாரம் உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| 1 | நவசிஞ்சாக்ஷார வடகம் | 4 | 2 | 17 | உ, க்ஷா |
| 2 | சிஞ்சாக்ஷார வடகம் | 6 | 3 | 40 | உ, க்ஷா |
| 3 | குன்மாதிக்கு மருந்து | 15 | 7 | 16 | உ, க |
| 4 | குன்மத்துக்குச் சுலப முறை | 31 | 19 | 12 | க |
| 5 | குன்மத்துக்குக்குக்கிலாதி குளிகை | 66 | 44 | 16 | உ, க |
| 6 | குன்மாதி பலவகைக்கு மருந்து | 71 | 47 | 10 | உ, க |
| 7 | குன்மாதி சகலத்துக்கும் மருந்து | 72 | 48 | 4 | க |
| 8 | குன்மாதி மருந்து | 84 | 57 | 13 | க |
| 9 | குன்மாதி சகலத்திற்கும் மருந்து | 90 | 63 | 16 | உ, க்ஷா |
| 10 | சத்தி குன்மாதிக்கு மருந்து | 100 | 71 | 2 | க |
| 11 | வாதகுன்மாதிக்கு மருந்து | 107 | 77 | 7 | க, க்ஷா |
| 12 | இரத்த குன்மாதிக்கு மருந்து | 120 | 88 | 19 | க |
| 13 | சத்தி, இரத்த, வலி, எரி, வாயு குன்மாதிக்கு மருந்து | 136 | 100 | 14 | க |
| 14 | வயிற்றிற் கட்டி வியாதிக்கு மருந்து | 164 | 118 | 6 | உப்பு |
| 15 | வலி குன்மாதிக்கு மருந்து | 169 | 122 | 3 | க |

| நெம்பர் | மருந்துகளின் பெயர் | பக்கம் | மருந்து நெம்பர் | அதிலுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை<br>மூ = மூலிகை<br>க = கடைச்சரக்கு<br>க்ஷ = க்ஷாரம்<br>உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| | **3. சூரண வகைகள்** | | | | |
| 1 | குன்மம் எட்டுக்கும் ஏக மூலிகைச் சூரணம் | 27 | 16 | 1 | மூ |
| 2 | அட்ட குன்மத்திற்கும் தீபாக்னி சூரணம் | 39 | 27 | 20 | க, மூ |
| 3 | குன்மாதிக்குச் சிவதைச் சூரணம் | 55 | 35 | 9 | க |
| 4 | குன்மாதிக்கு நிலவாகைச் சூரணம் | 61 | 39 | 9 | க |
| 5 | குன்மாதிக்கு நரசிங்க ரஸாயனம் | 64 | 43 | 8 | க |
| 6 | குன்மாதிக்குப் பஞ்சலவணச் சூரணம் | 73 | 49 | 4 | க |
| 7 | குன்மாதி பதினெட்டுக்கும் பஞ்சலவணச் சூரணம் | 82 | 55 | 9 | க |
| 8 | குன்மாதிக்கு மருந்து. | 84 | 56 | 4 | உலோ |
| 9 | குன்ம வலிக்கு மருந்து | 89 | 61 | 11 | உலோ |
| 10 | குன்மாதிக்கு மருந்து | 89 | 62 | 13+2 | க |
| 11 | குன்மாதிக்கு மருந்து | 94 | 66 | 16 | உ, க |
| 12 | வாத குன்மாதி மருந்து | 95 | 67 | 4 | க |
| 13 | வாத குன்மாதிக்கு மருந்து | 99 | 69 | 6 | க, க்ஷா |
| 14 | சத்தி குன்மாதிக்கு மருந்து ( கருங்கோழிச் சூரணம் ) | 101 | 72 | 15 | உ, க, மாம்ஸம் |

| நெம்பர் | மருந்துகளின் பெயர் | பக்கம் | மருந்து நெம்பர் | அதிலுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை<br>மூ = மூலிகை<br>க = கடைச்சரக்கு<br>க்ஷா = க்ஷாரம்<br>உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| 15 | பஞ்ச குன்மாதிக்கு மருந்து | 118 | 86 | 2 | க |
| 16 | சத்தி குன்மாதிக்கு மருந்து | 121 | 89 | 3 | உலோ |
| 17 | வாத குன்மாதிக்கு மருந்து | 122 | 90 | 26 | கடை |
| 18 | அஷ்ட குன்மாதிக்குச் சூரணமும் தைலமும் | 127 | 92 | 13+3 | க |
| 19 | குன்மாதிக்கு மருந்து | 130 | 94 | 6 | க |
| 20 | குன்மம், விஷூசி, அஜீரணத்துக்கு ஹிங்குச் சூரணம் | 145 | 106 | 8 | க |
| 21 | குன்மாதி முதல் வியாதிக்குத் தாவாக்னிச் சூரணம் | 149 | 109 | 37 | க |
| 22 | குன்மாதி எட்டுக்கும் பெருங்காயச் சூரணம் | 161 | 115 | 17 | க, க்ஷா |
| 23 | வயிற்று வலி, குன்மம், சகலத்திற்கும் மருந்து | 165 | 119 | 25 | க, க்ஷா, உ |
| 24 | குன்மாதி வாய்வுக்குச் சூரணம் | 168 | 121 | 2 | க |
| 25 | குன்மத்துக்குப் பெருங்காயச் சூரணம் | 179 | 132 | 2 | க |
| 26 | வலி குன்மாதிக்குச் சூரணம் | 180 | 133 | 11 | க |
| | **4. கஷாய வகைகள்** | | | | |
| 1 | குன்மாதிக்கு நொச்சிற் பழுதயம் | 28 | 17 | 5 | க |
| 2 | குன்மாதிக்குக் காளசாகாதிப் பழுதயம் | 32 | 20 | 6 | க |

| நெம்பர் | மருந்துகளின் வகைகள் | பக்கம் | மருந்து நெம்பர் | அதிலுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை. மூ = மூலிகை க = கடைச்சரக்கு க்ஷா = க்ஷாரம் உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| 3 | குன்மாதிக்கு மருந்து | 60 | 38 | 5 | க |
| 4 | சத்தி குன்மாதிக்கு மருந்து | 103 | 73 | 7 | க |
| 5 | குன்மாதிக்கு மருந்து | 119 | 87 | 3 | க |
| 6 | குன்மாதிக்குடி நீர் | 146 | 107 | 9 | க |
| 7 | எரி குன்ம வாயுவுக்குக் கடாயம் | 163 | 117 | 4 | க |
| 8 | வலி குன்மாதிக்குக் குடி நீர் | 167 | 120 | (1+4) | க |
| 9 | சத்தி குன்மாதிக்குக் குடி நீர் | 178 | 131 | 5 | க |
| 10 | வலி குன்மாதிக்கு மருந்து | 171 | 125 | 16 | க |
| | **5. எண்ணெய் வகைகள்** | | | | |
| 1 | குன்மத்திற்கு ஏரண்ட தைலம் | 17 | 8 | 19 | க |
| 2 | குன்மத்திற்கு ஏரண்ட தைலம் | 18 | 8 | 19 | க |
| 3 | குன்மத்திற்கு உள்ளியாமணக் கெண்ணெய் | 29 | 18 | 32 | க |
| 4 | குன்மத்திற்கு உள்ளியாமணக் கெண்ணெய் | 42 | 28 | 30 | க, உ |
| 5 | குன்மாதிக்கு க்ஷாரதைலம் | 48 | 31 | 7 | க்ஷா, க |
| 6 | குன்மத்திற்கு உள்ளியாமணக் கெண்ணெய் (ராம பாணம்) | 52 | 34 | 43 | க |
| 7 | குன்மாதிக்கு மருந்து | 61 | 40 | 7 | க |

| நெம்பர் | மருந்துகளின் பெயர் | பக்கம் | மருந்து நெம்பர் | அதிலுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை<br>மூ = மூலிகை<br>க = கடைச்சரக்கு<br>க்ஷா = க்ஷாரம்<br>உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| 8 | குன்மாதிக்குக் கொம்மட்டிக்கா யெண்ணெய் | 96 | 68 | 7 | க |
| 9 | வாத குன்மாதிக்கெண்ணெய் | 104 | 74 | (7+12) | க |
| 10 | வாத குன்மாதிக்கு மருந்து | 106 | 76 | 20 | க, உ |
| 11 | பித்த குன்மாதிக்கு மருந்து | 115 | 83 | 3 | க |
| 12 | குன்ம, வாயுவுக் கெண்ணெய் | 129 | 93 | 7 | க |
| 13 | குன்ம, வாயுவுக்குக் கெந்தகத் தைலம் | 131 | 95 | 2 | உ |
| 14 | குன்மாதிக்குப் பேய் கொம்மட்டி எண்ணெய் | 132 | 96 | 17 | க, உ |
| | **6. நெய் வகைகள்** | | | | |
| 1 | குன்மாதிக்குப் புனர்நவாதிக் கிருதம் | 32 | 21 | 18 | க |
| 2 | அட்ட குன்மத்திற்குப் பஞ்ச கவ்விய கிருதம் | 37 | 25 | 19 | க |
| 3 | எரி குன்மாதிக்கு நெய் | 174 | 127 | 12 | க |
| | **7. கடுகு** | | | | |
| 1 | குன்மாதிக்கு வஜ்ஜிர வல்லிக் கடுகு | 22 | 11 | 17 | க |
| 2 | தேங்காய்க் கடுகு | 48 | 32 | 5 | உ, க |
| 3 | குன்மஞ் சூலைக்கு மோர்க் கடுகு | 147 | 108 | 36 | க |

| நெம்பர் | மருந்துகளின் பெயர் | பக்கம் | மருந்து நெம்பர் | அதிலுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை மூ = மூலிகை க = கடைச்சரக்கு க்ஷா = க்ஷாரம் உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| 4 | வலி குன்மாதிக்கு மருந்து | 172 | 126 | 18 | க, உ |
| | **8. க்ஷார வகை** | | | | |
| 1 | சங்க க்ஷாரம் | 10 | 5 | 37 | க, க்ஷா, உ |
| 2 | குன்மாதிக்கு க்ஷார வகை | 92 | 64 | 12 | க்ஷா, க |
| 3 | வாத குன்மாதிக்கு மருந்து | 108 | 78 | 15 | க்ஷா, க |
| 4 | குன்மம், கெண்டை, சூலை, வாயு திரட்சிக்கு மருந்து | 137 | 101 | 10 | க்ஷா, க |
| | **9. கட்டு** | | | | |
| 1 | குன்மாதிக்கு நவசாரக் கட்டு | 25 | 13 | 3 | க்ஷா |
| | **10. திராவகம்** | | | | |
| 1 | குன்மாதிக்குக் கவுசைத் திராவகம் | 156 | 112 | 22 | உ, க்ஷா |
| | **11. பழம், காய் முதலிய மருந்து** | | | | |
| 1 | குன்மத்துக்கு வழுதுணைப் பழம் | 34 | 22 | 3+3 | க |
| 2 | குன்ம வாயுவுக்கு மருந்து | 134 | 97 | 3 | க்ஷா, க |
| 3 | வலி குன்மாதிக்கு மருந்து | 170 | 123 | 3 | க |
| 4 | வலி குன்மத்துக்கு மருந்து | 170 | 124 | 4+9 | க |
| 5 | குன்மாதி வயிற்று வியாதிக்கு மருந்து | 175 | 128 | 12 | க்ஷா, உ |

| நெம்பர் | மருந்துகளின் பெயர் | பக்கம் | மருந்து நெம்பர் | அதிலுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை மூ = மூலிகை க = கடைச்சரக்கு க்ஷா = க்ஷாரம் உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| | **12. பேதி** | | | | |
| 1 | வலி குன்மத்துக்குப் பேதி | 135 | 99 | 2 | க |
| | **13. கல்பம்** | | | | |
| 1 | குன்மாதிக்குச் சாறணைக் கற்பம் | 105 | 75 | 1 | மூலி |
| 2 | எரி குன்ம வெக்கைக்கு மருந்து | 163 | 116 | 4 | மூலி |
| | **14. செந்தூரம்** | | | | |
| 1 | குன்மாதிக்கு நாகச் செந்தூரம் | 44 | 29 | 6†3†5 | உ, க |
| 2 | குன்மாதி வியாதிக்குச் செந்தூரம் | 56 | 36 | 7 | உ |
| 3 | குன்மாதிக்கு லவணச் செந்தூரம் | 59 | 37 | 8 | கடை |
| 4 | வாதாதியட்ட குன்மாதிக்குச் செந்தூரம் | 178 | 130 | 6 | உலோ |
| | **15. பற்ப வகைகள்** | | | | |
| 1 | குன்மத்திற்குத் தாமிர பற்பம் | 18 | 9 | 5 + 2 | உ |
| 2 | குன்மம் முதலிய ரோகங்களுக்குக் குமரி பற்பம் | 23 | 12 | 5 | உ |
| 3 | குன்மாதிக்கு வெள்ளி பற்பம் | 25 | 14 | 2 | உலோ |
| 4 | குன்மாதிக்கு இரத பற்பம் | 26 | 15 | 3 + 3 | உலோ |
| 5 | குன்மாதிக்குக் கருங்கோழி பற்பம் | 50 | 33 | 45 | க, க்ஷா, மாம்ஸம் |

| நெம்பர் | மருந்துகளின் பெயர் | பக்கம் | மருந்து நெம்பர் | அதிலுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை<br>மூ = மூலிகை<br>க = கடைச்சரக்கு<br>க்ஷா = க்ஷாரம்<br>உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| 6 | குன்மாதிக்குத் தாமிர பற்பம் | 70 | 46 | 6 | உ |
| 7 | குன்மாதிக்குக் குமரி பற்பம் | 75 | 51 | 11+10 | உ |
| 8 | குன்மாதிக்குக் குமரி பற்பம் | 78 | 53 | 15 | உ |
| 9 | குன்மாதிக்குத் தாமிர பற்பம் | 87 | 59 | 4 | உ |
| 10 | சத்தி குன்மாதிக்குத் தாமிர பற்பம் | 115 | 84 | 4 | உலோ. |
| 11 | குன்மாதிக்குக் கோழி பற்பம் | 124 | 91 | 31 | க, மாம்ஸம் |
| | **16. மாத்திரை வகைகள்** | | | | |
| 1 | க்ஷார குளிகை | 9 | 4 | 4 | க்ஷா, க |
| 2 | குக்கிலாதி மாத்திரை | 13 | 6 | 30 | க்ஷா, க |
| 3 | குன்மத்துக்கு மாத்திரை | 20 | 10 | 15 | க்ஷா, க |
| 4 | குன்மாதிக்குக் கோடாசூழி மாத்திரை | 36 | 24 | 12 | உ, க |
| 5 | குன்மாதிக்குக் கோடாசூழிக் குளிகை | 38 | 26 | 13 | உ, க |
| 6 | குன்மாதிக்கு மருந்து (ரஸ்லோஹ குளிகை) | 47 | 30 | 11 | உ, க |
| 7 | குன்மாதிக்கு மருந்து | 62 | 41 | 14 | உ, க |
| 8 | குன்மாதிக்குக் கோடாசூழிக் குளிகை | 86 | 58 | 12 | உ, க |
| 9 | பஞ்ச குன்மாதிக்கு மருந்து | 93 | 65 | (13,5) | க்ஷா, க |

| நெம்பர் | மருந்துகளின் பெயர் | பக்கம் | மருந்து நெம்பர் | அதிலுள்ள சரக்குகளின் தொகை | சரக்குகளின் சேர்க்கை மூ = மூலிகை க = கடைச்சரக்கு க்ஷா = க்ஷாரம் உ = உலோகம் |
|---|---|---|---|---|---|
| 10 | குன்மவாயு, வலிக்குச் சரபேந்திரக் குளிகை | 134 | 98 | 13 | உ, க |
| 11 | குன்மாதி, அசீரணங்களுக்குச் சங்க குடாரிக் குளிகை | 140 | 103 | 13 | உ, க்ஷா |
| 12 | பஞ்ச குன்மஞ் சூலை, பெரு வயிறுக்கு மருந்து | 152 | 110 | 16 | உ, க |
| 13 | குன்மம் பீலிகைக்குக் கோடா சூழி மாத்திரை | 160 | 114 | 13 | உ, க |
| | **17. ரஸகந்தக ஔஷதங்கள்** | | | | |
| 1 | அட்ட குன்மாதிக்கு அர்த்த நாரீச பாகம் | 35 | 23 | 16 | உ, க |
| 2 | குன்மாதிக்கு மருந்து | 68 | 45 | 9 | உ |
| 3 | குன்மாதி குடாரம் | 73 | 50 | 14 | உ, க்ஷா, க |
| 4 | குன்மாதி குடாரம் | 77 | 52 | 14 | உ, க |
| 5 | குன்மாதிக்கு குடாரம் | 80 | 54 | 29 | உ, க்ஷா, க |
| 6 | வாத குன்மாதிக்கு மருந்து | 109 | 79 | 7 | உ, க்ஷா |
| 7 | பித்த குன்மாதிக்கு சோமரஸம் | 117 | 85 | 6 | உ, க்ஷா |
| 8 | சகல, குன்ம மூலாதிக்கும் மருந்து | 139 | 102 | 5+6 | உ, க |
| 9 | குன்ம, காசாதி நோய்க்கு இரத சேகரம் | 142 | 104 | 17 | உ, க |
| 10 | குன்மாதி பீலிகை, பெரும்பாடு, கர்ப்ப விச்சதிக்கு, வித்தியா ரஸம் | 143 | 105 | 6+4+5+2 | உலோ |

# குன்மத்தின் வகைகள்

இதிலுள்ள முறைகளில் 8 வித குன்மங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவற்றின் விவரம் "யூகிமுனி வைத்ய சிந்தாமணி" என்ற நூலிலிருந்து எடுத்து எழுதப்பட்டிருக் கிறது.

செய்யவே அஷ்டகுன்மச் செயலைக் கேளு
செயலான வாயுகுன்மம் வாத குன்மம்
எய்யவே பித்தகுன்ம மெரிகுன்ம மாகும்
எழிலான வலிகுன்மஞ் சத்தி குன்மம்
தெய்யவே சன்னி குன்மஞ் சிலேஷ்ம குன்மஞ்
சாகஸமாங் குன்மமது எட்டு மாகும்
கொய்யவே இதனுடைய குணங்களெல்லாங்
குறிப்பறிந்து ஒவ்வொன்றும் கூர்ந்து பாரே. (க)

பார்க்கவே வாயு குன்மம் பகரக்கேளு
பருகியதோர் பதார்த்தங்கள் செரித்திடாது
தோர்க்கவே அசனந்தான் செல்லாதாகும்
துருத்திகொண்ட காற்றுப்போல் வயிறு உப்பும்
ஊர்க்கவே ஊறு பெலந்தான் கெடுக்கும்
உடலுலரும் நடைகுறையும் ஓச்சலாகும்
வேர்க்கவே அடிவயிறு தனிலே பந்து
மிகப்புரண்டு வில்லுப்போல் விகுத்த மாமே. (உ)

விகுத்தமாம் வாதகுன்மம் விளம்பக் கேளு
மிகத்தானும் நடை குறையும் வலம் விடாது
உகுத்தமாமுடல் தானு மிகக் கடுக்கும்
உறக்கமொடு தியக்கமுமா யுழலையாகும்
தகுத்தமாஞ் சரீரமது கனத்துக் காணும்
சங்கையாய் அசனமிகத் தானுஞ் செல்லா
மிகுத்தமாம் பெலம் கேடாம் கை காலோயும்
பேசவொண்ணு நாவரளும் தலையும் நோமே. (ங)

னோம் பித்த குன்மத்தின் நுட்பங்கேளு
நுணி மஞ்சள் நிறம்போல முகமுமாகும்
வாம் சத்தி வாந்தியுண்டாய் மன மறுக்கும்
மயக்கமாய் நெஞ்சுதனில் கோழைகட்டும்
காம் நெருப்பாய்த் தானிருக்குங் கைகாலோயுங்
கடு வெய்யில் கண்டவுடன் தலை சுழற்றும்
மூ மூத்திரஞ் சிவந்திருக்குந் தாகங்காணும்
முக்கியே மலம் விழுகும் மூச்சுண்டாமே. (ச)

உண்டாகும் வாய் நீர்தான் இளைப்புண்டாகும்
உடல் வற்றும் வடிவழியும் உரத்திரைக்கும்
வெண்டாகும் பெலன் கெடுக்கு மசனந்தள்ளும்
மிக்கான தலைத்தியக்கம் வெளிரும் மேனி
திண்டாகும் நெஞ்சுதனில் புகைச்சலாகும்
திடுக்கிட்டு நடுக்கலுமாந் தேகந்தானும்
சுண்டாகும் தலையெங்கும் பாரமாகும்
ச்லேற்றுமமாம் குன்மமென்றே செப்பலாமே. (ரு)

செப்பலாஞ் சன்னிகுன்ம செயலைக் கேளு
தியக்கமொடு மயக்கமுமாய் குளிருண்டாகும்
அப்பமா மசனமிகத் தானுஞ் செல்லா
அடிவயிற்றி லிரைச்சலுமாய் வாய் நீரூறும்
உப்பமாம் வயர்கழியும் உஷ்ணமாகும்
உவர்க்கும் வாய் நெஞ்சுதனில் புகைச்சலாகும்
தெப்பமாம் மூச்சதுவும் சிதைந் தெழும்பும்
தேகமெங்கும் குளிர்ச்சியுமாய்த் திடுக்குமாமே. (சா)

திடுக்குமாம் மெரிகுன்மம் செயலைக் கேளு
சிறுவயத்திலெரிந்துமே குடல் குமட்டாம்
வடுக்கும் வாய்நீர் சுழற்றுந் தலை வலிக்கும்
வயிறுப்பிக் கிறுகிறுக்கும் புளித்தேக்காகும்
வெடுக்கு மயிர்கால் தோறும் வேர்வையாகு
மிகப் பொருமி வயிறுகழிந்திரைச்சலாகும்
யெடுக்குமே உடலிளைக்கும் இறங்கா தூணும்
எரியுமே யுடலெங்கு மிருமலாமே. (எ)

இருமலாஞ் சத்திகுன்மமியம்பக் கேளு
　　ஈரலுக்குள் ளெரிவாகும் ஏக்கமாகும்
திருமலாந் தியக்கமொடு மயக்கமுண்டாஞ்
　　சிறு வலியுமுண்டாகி வாந்தியாகும்
பொருமலாம் பெலன் கெடுக்கும் வலம்விடாது
　　பெரிதான அக்கினிதான் மிகவுண்டாகும்
செருமலாம் நடை குறையும் அருசியாகும்
　　சிறு நரம்பெல்லாம் புடைத்துத் திமிருமாமே. (அ)

திமிராக வயிறூதுந் திரையு மேனி
　　செடமுலர்ந்து கருத்தழியும் சிதறுந் தூக்கம்
வமிராக வயிரிறைந்து முள் போலாகும்
　　வருத்தமாயசனமிகத் தானுஞ் செல்லா
விமிராக விலாவுதனில் சொருகலாகும்
　　முதுகுதண்டு வலிகாணு மிடுப்பு நோவாம்
கமிராகக் காயமது கடுப்புக்காணுங் கனசுரமாய்
　　பொய்ப் பசியுங் காணுங் காணே. (கூ)

இவற்றின் பொருள் :—

| குன்ம வகை | உடம்பின் நிலை | வயிறு |
| --- | --- | --- |
| 1. வாயு குன்மம் | 1. பலஹீனம்<br>2. ஓய்ச்சல்<br>3. உடல் உலரும் | 1. வயிறு உப்பும்<br>2. அடி வயிற்றில் பந்துபோல் புரளும் |
| 2. வாத குன்மம் | 1. நடை, பலம் குறையும்<br>2. உடல் கனக்கும்; கடுக்கும்<br>3. உறக்கம் உண்டாகும் | |
| 3. பித்த குன்மம் | 1. முகம் மஞ்சள் நிறம்<br>2. மயக்கம் உண்டாம்<br>3. உடம்பு உஷ்ணம்<br>4. கைகால் ஓச்சல்<br>5. மூச்சு உண்டாம் | |
| 4. கப குன்மம் | 1. இளைப்பு, பலஹீனம்<br>2. இரைப்பு<br>3. நடுக்கல்<br>4. வெளுப்பு | |
| 5. சன்னி குன்மம் | 1. தியக்கம்<br>2. மயக்கம்<br>3. குளிர்ச்சி<br>4. திடுக்கிடல் | அடி வயிற்றில் இரைச்சல் |
| 6. எரி குன்மம் | 1. இளைக்கும்<br>2. எரியும் | 1. சிறு வயிற்றில் எரிச்சல்<br>2. குடல் குமட்டும்<br>3. வயிறு உப்பிக் கிறுகிறுக்கும் |

| ஆகாரம் | மலப்போக்கு | இதர குறிகள் |
|---|---|---|
| 1. ஆகாரம் செரிக்காது<br>2. செல்லாது | | வயிறு வில்லுப்போல் பிகுவாக இருக்கும் |
| ஆகாரம் செல்லாது | மலம் கட்டும் | 1. நாவரளும்<br>2. தலை நோகும் |
| வாந்தி | முக்கி மலம் விழும் | 1. நெஞ்சில் கோழை கட்டும்<br>2. கடும் வெயிலில் தலை சுழற்றும்<br>3. மூத்திரம் சிவந்திருக்கும்<br>4. தாகம் காணும் |
| ஆகாரம் செல்லாது | | 1. வாயில் நீர் ஊறும்<br>2. நெஞ்சில் புகைச்சல்<br>3. தலை சுற்றும், பாரம் |
| ஆகாரம் செல்லாது | வயிற்றுப் போக்கு வயிற்றில் உஷ்ணம் | 1. வாயில் நீர் ஊறும்,<br>2. நெஞ்சில் புகைச்சல்<br>3. மூச்சுத் தங்கி எழும்பும். |
| 1. புளித்த ஏப்பம்<br>2. ஆகாரம் செல்லாது | 1. பொருமல்<br>2. வயிற்றுப் போக்கு | 1. வாய் நீர்<br>2. தலை வலி, சுழற்றல்<br>3. மயிர்க்காலில் வேர்வை<br>4. இருமல் |

| குன்ம வகை | உடம்பின் நிலை | வயிறு |
|---|---|---|
| 7. சத்தி குன்மம் | 1. ஈரலுக்குள் எரிவு<br>2. ஏக்கம், தியக்கம், மயக்கம்.<br>3. பலஹீனம், நடை குறையும்<br>4. சிறு நரம்பு புடைத்துத் திமிருண்டாகும் | 1. சிறுவலி<br>2. அக்கினி மிக வுண்டாம் |
| 8. வலி குன்மம் | 1. மேனி திரையும், உலரும்<br>2. உடம்பு கடுப்பு<br>3. இடுப்புவலி, முதுகுத் தண்டு வலி<br>4. விலாவில் சொருகல்<br>5. தூக்கம் வராது<br>6. ஜ்வரம் | வயிறு ஊதும், இரையும், முள் போலாகும் |

சரகஸம்ஹிதை முதலிய வடமொழி நூல்களில் குன்மத்தை, தோஷங்களைப் பொறுத்து எட்டு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். அதன் விவரம் பின்வருமாறு :—

வகைகள்:—(1) வாதகுல்மம் (2) பித்த குல்மம் (3) கப குல்மம் (4) வாத பித்த குல்மம் (5) வாத கபகுல்மம் (6) பித்த கபகுல்மம் (7) சந்நிபாத குல்மம் (8) ரக்த குல்மம்.

அவற்றின் குறிகள்:—

(1) வாதகுல்மம் —(a) உண்டாகும் இடமும், உருவமும். வலி யிருக்கும் இடமும் நிலையில்லாமல் மாறிக்கொண்டே யிருக்கும்

(b) வாயுவும், மலமும் கட்டும்.

(c) தொண்டை, வாய் உலர்ந்து போம்

(d) தேகநிறமும், மலமும் செம்மை கலந்த கருமையாகும்

(e) குளிர் ஜ்வரம் காணும்

(f) வயிறு, மார்பு, விலா, தலை, தோள் இந்த இடங்களில் வலியுண்டாகும்.

| ஆகாரம் | மலப்போக்கு | இதர குறிகள் |
|---|---|---|
| 1. வாந்தி<br>2. அருசி | 1. பொருமல்<br>2. மலம் கட்டும் | |
| 1. ஆகாரம் செல்லாது<br>2. பொய்ப்பசி காணும் | | |

(g) ஜீர்ணமானபின்பு உபத்திரவங்கள் அதிகரிக்கும்
(h) சாப்பிட்டவுடன் உபத்திரவங்கள் குறையும்

2. பித்த குல்மம் — குறிகள்:—
(a) ஜ்வரம், தாகம்
(b) முகம், உடம்பு, சிவப்பு
(c) ஆகாரம் ஜீரணிக்கையில் கடுமையான வலி
(d) வியர்வை, எரிவு
(e) தொட்டால் தாங்கமுடியாதவலி

3. கபகுல்மம் — குறிகள்:—
(a) உடல் அசைவற்றுப்போதல்
(b) குளிர்ஜ்வரம்
(c) உடம்பு விலவிலத்தல்
(d) இருதயத் துடிப்பு
(e) இருமல்
(f) அருசி, உடம்பு கனத்தல்
(g) உடம்பு குளிர்ந்து போதல்

(h) வலி குறைவாகவே இருத்தல்

(i) குன்மக் கட்டி கடினமாகவும் உயர்ந்தும் இருத்தல்

4. வாதபித்த குல்மம்
5. வாதகப குல்மம்
6. பித்தகப குல்மம்

இருவித குல்ம லக்ஷணங்களும் கலந்து காணப்படும்.

7. சந்நிபாத குல்மம் ;—

(a) மிகக்கடுமையான வலி

(b) எரிவு

(c) குன்மக்கட்டி கல்லைப்போல் கெட்டியாகவும் பருத்தும் இருத்தல்

(d) சீக்கிரம் பக்குவமாகி வெடிப்புக்காணல்

(e) சீக்கிரம் பலவீனம் அக்கினிபலக்குறைவு இவைகளை உண்டாக்குதல். இது அசாத்தியம்.

8. ரக்த குல்மம் — குறிகள் :—

(a) இது ஸ்திரீகளுக்கே வரக்கூடியது

(b) ருது தோஷம் முதலிய காரணங்களால் கர்ப்பம் போன்ற சின்னங்களுடன் ஏற்படும் குல்மம்.

(c) 10 மாதங்கள் சென்ற பிறகே சிகிச்சை செய்ய வேண்டும்.

# சரபேந்திரர் வைத்திய முறைகள்

## (குன்ம சிகிச்சை)

உ

ஹரி: ஓம் நன்றாக.

**காப்பு**

திருமலருஞ் செங்கழுநீர் மலருஞ் செந்நெற்
செங்கரும்புந் தென்னையும் பூகமுஞ்செழித்த
மருமலருங் காவு நிரை வயலுஞ்சூழ்ந்த
வளப்பதியாந் தஞ்சை நகர் மனுவைக்காக்குந்
தருமலரு நகைமுக வான்புருடமேரு
சரபோசி மகாராசன் சகலநூலுங்
கருமலரு நோயாய்ந்துங் குன்மமாதிக்கவுஷ
தங்கண்டுரைக்கும் வெள்ளைக்கணேசன் காப்பே.

---

## 1. வச்சிரவல்லரிதகி லேகியம்

(குன்மம், மூலம், பாண்டு நோய்களுக்கு)

கொடிவச்சிரம் புளிநரளை மருளின் மூலங்
குடிக்கருணை வனக்கருணைக் கிழங்குதானும்
படிப்புவரு நாயுரிவேர் வகையொன்றுக்குப்
பலம் பத்து யரிதகியும் பயித்துப்பத்தாய்
குடிப்பிடுநீர் நாலுமரக்காலுமிட்டுக்
கொளுத்தடுப்பிற் காய்ச்செட்டொன்றாகத்தானு
முடித்திறக்கி யரிதகியை யெடுத்துலர்த்து
மூன்னீரில் வெல்லமுப்பான் பலமுமீட்டே. (க)

மீட்டியதைப் பாகாகக் காய்ச்சிக்கொண்டு,
மேலுலர்த்துங் கடுக்காயு மேலஞ்சுக்குங்
கோட்டமிலவங்க பத்திரி லவங்கப்பட்டை
கூடு சிறுநாகப்பூ வாய்விடங்கங்
கூட்டிரு சீரகமும் வெட்பாலைப்பட்டைக்
கூமீரு மந்திப்பிலி சதகுப்பை கிராம்பு
நீட்ட நிலப்பனை மூலம் யானைத்திப்பிலி
நேரும் வகைக்கரைப் பலமாய் நிறுத்துக்கொள்ளே (உ)

கொள்ளவே சேங்கொட்டை லோகபற்பங்
கோரையுடன் கிழங்கு கருணைக்கிழங்கும்
விள்ளுபிரமிய மருந்திவ்வகையொன்றுக்கு
விடுநாலு பலமிதெல்லாமிடித்துக்கொண்டே
கள்ளச்சேங்கொட்டை கருணைக்கிழங்குங்
காய்ச்சிடு நெய் நாலு பலந்தனிலே வறுத்து
துள்ளச் சூரணித்திதனை முன்னிடித்த
சூரணத்தினுடன் கலந்துஞ் சொற்பாகூட்டே (ச)

ஊட்டுவது நல்லெண்ணை பலமு நாலு
வொக்கவிடுபதினைந்து பலமுந்தேனைக்
கூட்டுவாய் கிண்டியதை வைத்துக்கொண்டே
கொள்ளிரு வராகனெடையொரு வேளைக்கு
நாட்டுவார் வச்சிர வல்லரிதகிப்பேர்
நல்லலேகியங் குன்மஞ் சூலை மூலம்
பூட்டு வயிற்றுட்கட்டி பாண்டு சோகை
பொல்லாத மகோதரமும் போகுந்தானே (ரு)

(இதன் பொருள்)

| | |
|---|---|
| பிரண்டைக்கொடி | —10 பலம் |
| புளி நரளை | —10 ,, |
| மருள் வேர் | —10 ,, |
| கருணைக்கிழங்கு | —10 ,, |
| காட்டுக்கருணைக்கிழங்கு | —10 ,, |
| நாயுருவி வேர் | —10 ,, |
| கடுக்காய் 100 | |

இவற்றை நான்கு மரக்கால் ஜலத்தில்போட்டு அடுப்பேற்றி எட்டில் ஒன்ருய்க் காய்ச்சி ஜலத்தை இறுத்துக்கொண்டு கடுக்காயை மட்டில் எடுத்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

இறுத்தெடுத்த ஜலத்தில் 30 பலம் வெல்லம் போட்டு இளம்பாகாக்கிக்கொண்டு உலர்ந்த கடுக்காயைப் பொடிசெய்து அதனுடன்,

| | | |
|---|---|---|
| ஏலம் | — | ½ பலம் |
| சுக்கு | — | ,, |
| கோஷ்டம் | — | ,, |
| லவங்கப்பத்திரி | — | ,, |
| லவங்கப்பட்டை | — | ,, |
| சிறுநாகப்பூ | — | ,, |
| வாய்விடங்கம் | — | ,, |
| சீரகம் | — | ,, |
| கருஞ் சீரகம் | — | ,, |
| வெட்பாலைப்பட்டை | — | ,, |
| ஓமம் | — | ,, |
| திப்பிலி | — | ,, |
| சதகுப்பை | — | ,, |
| கிராம்பு | — | ,, |
| நிலப்பனங்கிழங்கு | — | ,, |
| யானைத்திப்பிலி | — | ,, |

இவைகளைப் பொடி செய்துகொண்டு

1. சேங்கொட்டை 4 பலம் } இவ்விரண்டையும் 4 பலம்
2. கருணைக்கிழங்கு ,, } நெய்யில் வறுத்து
3. அயபஸ்பம் 4 பலம்
4. கோரைக்கிழங்கு ,,
5. பிரமியம் ,,

இவை ஐந்தையும் சேர்த்து இடித்துக்கொண்டு இந்தச் சூரணத்தையும் முந்திய சூரணத்தையும் சேர்த்து பாகோடு சேர்த்துச் சூடு கொடுக்கும்போது 4 பலம் நல்லெண்ணையையும், ஆறிய பிறகு 15 பலம் தேனையும் சேர்த்துக் கிண்டி பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

தினம் ஒன்றுக்கு ஒரு வேளைக்கு 2 வராகனிடை அல்லது ⅕ பலம் வீதம் சாப்பிடவும்.

இந்த லேகியத்தின் பெயர் வச்சிர வல்லரிதகிலேகியம். அதாவது பிரண்டை, சேங்கொட்டை, கடுக்காய் இவற்றை முக்கியமான சரக்குகளாகக் கொண்ட லேகியம்.

இதனால் தீரும் வியாதிகள்:— குன்மம், சூலை, மூலம், பூட்டுநோய்கள், வயிற்றுக்கட்டி, பாண்டு, சோகை, மகோதரம்.

---

## 2. நவ சிஞ்சாக்ஷார வடகம்

(அஷ்டகுன்மம், சூலை, வயிற்றுப்போக்கு நோய்களுக்கு)

நாவியொரு வராகனிடை யந்திடைக்கு
நாட்டிர தங்கூட்டு பஞ்ச லவணந்தன்னில்
மேவவகை யொன்றுக்குப் பலமொன்றாகும்
மேற்சங்கச் சாரமது பலமும் பத்தாய்த்
தாவிய சீனச்சாரம் பலமோரைந்துஞ்
சாரத்திரையம் பலமொன்றரையிமெதல்லாம்
பாவிய கல்வந்தனிலே மூன்று நாள்தான்
பழச்சாற்றாலரைத்து சொச்சிகரிப்பான்சாறே (சு)

சிவகாந்தை இஞ்சிச்சாறென்றுக்கொன்று
தினமு மரைத்துருட்டிலந்தை விதையின்றிட்டம்
நவசிஞ் சாச்சாரமெனும் வடகத்தின்பேர்
நாட்டியொவ்வோருண்டைகொள்ள நகருநோய்கேள்
பவமட்ட குன்மங்கள சீரணங்கள் படுஞ்சூலை
விசூழி மந்தாக்கினிகள் தீரும்
அவ பத்திய மெள்ளெண்ணெய் ஒன்றாகாது
வான்செயலை மறவாமலருந்துவாயே (எ)

(இ—ள்)

| | | |
|---|---|---|
| நாபி ( சுத்தி செய்தது ) | — | 1 விராகனெடை ( $\frac{1}{10}$ பலம் ) |
| பாதரஸம் ,, | — | ,, |
| கடலுப்பு | — | 1 பலம் |
| இந்துப்பு | — | ,, |
| வளையலுப்பு | — | ,, |
| அட்டுப்பு | — | ,, |
| உவர்மண் உப்பு | — | ,, |
| சங்கக்ஷாரம் | — | 10 பலம் |
| சீனக்ஷாரம் | — | 5 பலம் |
| ( யவச்சாரம் ) யவக்ஷாரம் | — | $\frac{1}{2}$ பலம் |
| (சத்திச்சாரம்) ஸர்ஜக்ஷாரம் | — | $\frac{1}{2}$ பலம் |
| வெண்காரம் | — | $\frac{1}{2}$ பலம் |

இவைகளைக் கல்வத்திலிட்டு ( எலுமிச்சம் ) பழச்சாற்றால் மூன்று நாள் அரைத்து பிறகு,

நொச்சிச்சாறு
கரிசலாங்கண்ணிச்சாறு
சிவகரந்தைச்சாறு
இஞ்சிச்சாறு
} இவை ஒவ்வொன்றையும் விட்டு ஒவ்வொரு நாள் அரைத்து,

இலந்தை விதை அளவான வடகமாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதன் பெயர் **நவசிஞ்சாக்ஷார வடகம்.**

ஒவ்வொரு நாள் ஒவ்வோர் உருண்டை கொள்ள அடியிற் கண்ட நோய்கள் தீரும் :—

1. அஷ்ட குன்மங்கள்.
2. அஜீரணங்கள்.
3. சூலை..
4. விசூசியெனும் வயிற்றுப்போக்கு
5. அக்கினி மாந்தியம்..

பத்தியம் :— நல்லெண்ணை சேர்க்கக்கூடாது.

# 3. சிஞ்சாக்ஷார வடகம்

(குன்மத்துக்கு)

பஞ்சாக்கினி யஞ்சுப்புச் சத்திட்சாரம்
பாரெட்டு வகைச்சாரம் யானைத்திப்பிலி
எஞ்சாத பெருங்காயம் செவியஞ்சுக்கு
மெவட்சாரமோம மிளகிடுவசம்பு
மிஞ்சாது திப்பிலியுமிவைகளெல்லாம்
இடும்பங்குக்கரையிதின் மேற்சங்கச்சார
முஞ்சமமாம் இதிற்பாதி வாயுவிடங்கம்
ஊட்டிதிலும் பாதி நேர்வாளங்கூட்டே. (அ)

வாளத்திற் பாதி ரசம் இதற்கு நேராய்
வருங்கந்தி நாவியிந்தவகை பொடித்து
மீளிஞ்சி முருங்கை யெலுமிச்ச நீரை
விட்டரைத்துப் பின்றிப்பிலி மிளகுஞ்சுக்கு
நாளிட்ட கடாயத்திலரை வெண்சாரனைக்
கருணைக்கிழங்கு வனக்கருணைச்சாற்றால்
நீள வொன்றுக்கொவ்வொரு நாளரைத்திலந்தை
நிறைகொட்டை யளவுருட்டி நிழலுலர்த்தே (கூ)

உலத்துருண்டை நொச்சிச்சாறிஞ்சிச்சாற்றி
லூட்டுவெந்நீர் தனிலொன்றை யுள்ளே கொள்ளு
பெலத்தட்டவித குன்மந்தீர்ந்து போகும்
பெருவாதமுதலதினுற் பின்னுநோய்கள்
மலத்துதரப்பொருமலும் போமக்கினிமந்த
மகோதரங்களிவை செய்யும் வருத்தந்தீர்க்கும்
வலுத்த சிஞ்சாட்சாரமெனும் வடகந்தன்னை
வரைந்து வைத்தார் சரபோஜிமன்னர் மன்னே.

(இ—ள்)

1 பஞ்சாக்கினி—அதாவது கொடிவேலி வேர்
செங்கொடிவேலி வேர்
கோமூத்திரம்
வெடியுப்பு
நவச்சாரம்
} இவை சேர்ந்து ஒரு பங்கு.

பஞ்சலவணம்—அதாவது கடலுப்பு
இந்துப்பு
வளையலுப்பு
அட்டுப்பு
உவர்மண் உப்பு
} இவை சேர்ந்து ஒரு பங்கு.

சத்திச்சாரம் (ஸர்ஜக்ஷாரம்) ——— ஒரு பங்கு

அஷ்டக்ஷாரம்
அதாவது நாயுருவி
புரசு
எருக்கு
எள்
காட்டுப்பருத்தி
} இவைகளின் முழுச் செடிகளைக் கொளுத்தியசாம்பலை எடுத்துச் சுத்தி செய்த க்ஷாரம்

யவக்ஷாரம்
வெண்காரம்
சத்திச்சாரம்
} இவை சேர்ந்து ஒரு பங்கு.

| | |
|---|---|
| யானைத் திப்பிலி | ஒரு பங்கு |
| பெருங்காயம் | ,, |
| சவ்வியம் | ,, |
| சுக்கு | ,, |
| ஓமம் | ,, |
| மிளகு | ,, |
| வசம்பு | ,, |
| திப்பிலி | ,, |

---

1 பஞ்சாக்கினி என்ன என்பது நிச்சயமாக விளங்கவில்லை. இங்கே கொடுத்திருக்கும் 5 சரக்குகளும் வைத்திய அகாதியில் அக்கினி என்னும் சொல்லுக்குப் பொருள்களாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கண்ட சரக்குகளைச் சம பாகமாக எடுத்துக்கொண்டு இவைகள் எல்லாம் சேர்ந்த நிறையில் பாதி சங்கக்ஷாரமும்,

அதில் பாதி வாயுவிடங்கமும்,
இதிலும் பாதி நேர்வாளமும் (சுத்தி செய்தது),
நேர்வாளத்தில் பாதி சுத்தி செய்த பாதரசமும்,
அதே எடையில் சுத்திசெய்த கந்தகமும்,
அதே எடை நாபியும், (சுத்தி செய்தது)

இவைகள் எல்லாம் சேர்த்துப் பொடி செய்து இஞ்சிச் சாறு, முருங்கைச்சாறு, எலுமிச்சஞ்சாறு இவைகளைவிட்டு அரைத்து, திப்பிலி, மிளகு, சுக்கு இவைகளை ஒரு நாள் கொதிக்க வைத்த கஷாயத்திலும் அரைத்து, வெண்சாரணைச் சாறு, கருணைக்கிழங்குச்சாறு, காட்டுக்கருணைச்சாறு இவை ஒவ்வொன்றையும் விட்டு ஒரு நாள் அரைத்து இலந்தைக்கொட்டை அளவாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொள்ளவும்.

இதில் ஓர் உருண்டையை நொச்சிச்சாற்றிலாவது, இஞ்சிச் சாற்றிலாவது அல்லது வென்னீரிலாவது உட்கொள்ளவும்.

இதனால் தீரும் வியாதிகள் :— 1. அஷ்டவித குன்மம்
2. வாத நோய்கள்.
3. வயிற்றுப் பொருமல்
4. அக்கினிமந்தம்
5. மகோதரம்

இதன் பெயர் **சிஞ்சாரக்ஷார வடகம்.**

# 4. க்ஷாரகுளிகை யெனும் மாத்திரை

(குன்மத்துக்கு)

எவட்சாரஞ் சவுக்காரம் போளம் மூன்று
மிவ்வகையொன் றுக்கு இரண்டு பலமுங்கொண்டு
அவுஷதம் வெவ்வேருகப் பொடியுஞ் செய்து
அதற்கொரு தாம்பரத் தட்டடுப்பிலேத்திச்
சவுக்கியமா மெண்ணெயதிற் காயவிட்டு
தன்னிலே முதற்போளப் பொடியைப் போட்டுச்
சவுக்காரப் பொடி பின்னே தூவி மூன்றுந்
தரத்திலெவச் சாரத்தின் பொடியுந் தூவே. (௰௧)

இந்த வகைப் பொடித்தூவிக் கிண்டிவிட்டு
மிதைப்பதமா யிறக்கிச் சூடாறு முன்னே
முந்து சுண்டைக்காயளவாய்க் குளிகை செய்து
முறையோடே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
தந்ததொரு குளிகையிஞ்சிச்சாற்றிலாதல்
தவறில்லாக் கொடிவேலிக் கிடாயத்தாதல்
வந்தரை மண்டலங் கொள்ளுஞ் சகல குன்மம்,
வாங்கிப் போங்கை கண்ட மருந்திதாமே. (௰௨)

| | | | |
|---|---|---|---|
| (இ—ள்) | யவக்ஷாரம் | 2 பலம் | இவற்றைத் தனித் தனியாகப் பொடிசெய்து கொண்டு |
| | சவுக்கார உப்பு | ,, | |
| | கரியபோளம் | ,, | |

ஒரு தாமிரத் தட்டை அடுப்பில் வைத்து, அதில் நல்லெண்ணெயை ஊற்றிக் காயவைத்து அதில் முதலில் போளப் பொடியைப்போட்டு, பிறகு சவுக்காரப் பொடியைத் தூவி, அதன் பிறகு யவக்ஷாரப்பொடியையும் தூவவும்.

இவைகளைக்கிண்டி, இறுகும் சமயத்திலிறக்கி சூடு ஆறுவதற்குள் சுண்டைக்காயளவாகக் குளிகை செய்து நிழலில்

உலர்த்திக்கொள்ளவும். பிறகு அந்தக்குளிகையை இஞ்சிச் சாற்றிலாவது, கொடிவேலிக் கஷாயத்திலாவது தினம் ஒரு குளிகை வீதம் அரைமண்டலங் கொள்ளவும்.

இதனால் சகல குன்மமுந் தீரும். இது கைகண்ட மருந்து.

---

## 5. சங்கக்ஷாரம்

(குன்மம், சுவாசகாசம் முதலியவற்றிற்கு)

பஞ்சாக்கினி யஞ்சுப் போமங்காயம்
பார்கடுகு சீரகம் வாய் விளங்கத்தோடு
மிஞ்சாமல் வகையொன்று பலமுமொன்று
மேவுசிஞ்சாட்சார மகிச் சாரம் ரெண்டும்
அஞ்சு வகைக்கு எண்பலமா மருக்கட்சாரம்
இது நாலுபலம் போடு புரசம் பட்டை
குஞ்சாம் வேலிப்பருத்தி முள்முருக்குங்
கொன்றையிது சாம்பரிலாச்சாரங் கூட்டே (௰௩)

கூட்டுவதும் இருபலமாய்ச் சங்கச்சாரம்
கொள் பத்துப்பல நாவிரச பற்பத்தில்
நாட்டுக்கெந்தித் தாம் பிரத்தின் பற்பந்தன்னை
நண்ணுவகைக் கொரு பலமாம் திரிபலாதி
மூட்டு திரிகடுச் சாரத்திரையங் கூட்டி
முது கல் வத்தெனுமிச்சஞ்சாறு விட்டு
வாட்டு மிரு சாமமட்டும் இலந்தைக் கொட்டை
யளவுருட்டி நிழலுலர்த்தி அருந்தக்கேளே (௰௪)

அருந்துமோர் குளிகையுண்டையாதி காலம்
அட்டவிதக் குன்மங்கள் கண்டுபோகும்
பொருந்து மகோதரமும் பாண்டு அசீரணங்கள்
புரிசூலை ரோகங்கள் சுவாச காசம்

பெருமல பந்தம் வயிற்றுப் பொருமல் மந்தம்
பிழை யொன்றுஞ் செய்யாமற் பேசாதோடும்.
மருந்து சங்கச்சாரமெனும் வடகப்பேராம்
மன்னன் உரைவைத்திய நூல்வழியைப் பாரேன் (மரு)

(இ—ள்) பஞ்சாக்கினி அதாவது கொடிவேலி வேர் செங்கொடி வேலி வேர் கோமூத்திரம், வெடியுப்பு, நவச்சாரம்—இவை சேர்ந்து 1 பலம்.

| | | |
|---|---|---|
| கடலுப்பு | 1 பலம் | இவைகளோடு |
| இந்துப்பு | ,, | |
| வளையலுப்பு | ,, | |
| அட்டுப்பு | ,, | |
| உவர்மண் உப்பு | ,, | |
| ஓமம் | ,, | |
| பெருங்காயம் | ,, | |
| கடுகு | ,, | |
| சீரகம் | ,, | |
| வாயுவிடங்கம் | ,, | |

| | |
|---|---|
| சிஞ்சாட்சாரம்,<br>அதாவது புளியம் புறணி சுட்ட க்ஷாரம்<br>மகிச்சாரம்,<br>அதாவது உவர்மண் காரம். | இவைகள் ஒவ்வொன்றில்<br>5 பலமும், |

| | |
|---|---|
| எருக்கஞ் செடி க்ஷாரம் | 8 பலமும் |
| புரம்சம் பட்டை க்ஷாரம் | 4 பலம் |
| வேலிப் பருத்தி க்ஷாரம் | 2 பலம் |
| முள் முருக்கு க்ஷாரம் | 2 பலம் |
| கொன்றைக்ஷாரம் | 2 பலம் |
| சங்க க்ஷாரம் | 10 பலம் |

| | |
|---|---|
| நாபி (சுத்தி செய்தது)<br>ரஸ பஸ்பம்<br>நாட்டுக் கந்தக பஸ்பம்<br>தாம்பிர பஸ்பம் | வகைக்கு ஒரு<br>பலம். |

த்ரிபலே (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்கு 1 பலம்.

த்ரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி,) வகைக்கு 1 பலம்.

3 க்ஷாரம் (சக்தி க்ஷாரம், யவக்ஷாரம், வெண்காரம்) இவை வகைக்கு ஒரு பலம்.

இவைகளை யெல்லாம் கல்வத்திலிட்டு எலுமிச்சஞ்சாறு விட்டு 2 ஜாமம் (6 மணி நேரம்) அரைத்து இலந்தைக்கொட்டை யளவாக உருட்டி நிழலில் உலர்த்தி தினம் ஓர் உருண்டை வீதம் சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள் :—

1. அஷ்ட குன்மம்
2. மகோதரம்
3. பாண்டு
4. அஜீரணம்
5. சூலே
6. சுவாசகாசம்
7. மலபந்தம்
8. வயிற்றுப் பொருமல்
9. மந்தம்

இதன் பெயர் **சங்கக்ஷாரம்.**

# 6. குக்கிலாதி மாத்திரை

(குன்மத்துக்கு)

சித்தரத்தை பெருங்காய மோமஞ்சுக்குத்
திப்பிலியு மிளகு கடுத்தான்றி நெல்லி
வைத்த திரிச்சாரம் வெள்ளை மிளகு மஞ்சள்
வசம்பு பஞ்சலவண மிலவங்கங் கோஷ்டம்
முத்துந் திப்பிலி மூலம் வாய் விளங்கம்
முதுசவியஞ்சாதியின் பத்திரி சாதிக்காய்
குத்தமிலாமருந்தொன்று பலமுமொன்று
கூறு மிதற்குச் சமமாய்க் குக்கிலாமே. (௰௬)

ஆகும் வெள்ளைப் பூண்டு பலம் நூறுந்தூக்கி
அடங்கலுஞ் சேர்த்திதிலும் வெல்லம் நெய்யுங்கூட்டி
நேக விடுத்துண்டைகள் செய்தொவ்வோருண்டை
நேர் உதைய காலத்தினிலே வாய்க்கொள்ளு
மாகுன்ம மெண்பதெனும் வாதஞ்சூலை
வயிற்றிலுள்ள கட்டிகளுஞ் சுவாசகாசம்
போகுமட்டதச குட்டங் காது ரோகம்
பொறுக்காத மேகவிரணங்கள் போமே. (௰௭)

(இ—ள்)

| | | |
|---|---|---|
| சிற்றரத்தை | 1 | பலம் |
| பெருங்காயம் | | ,, |
| ஓமம் | | ,, |
| சுக்கு | | ,, |
| திப்பிலி | | ,, |
| மிளகு | | ,, |
| கடுக்காய் | | ,, |
| நெல்லிக்காய் | | ,, |
| தான்றிக்காய் | | ,, |
| யவக்ஷாரம் | | ,, |

| | | |
|---|---|---|
| சக்தி க்ஷாரம் | 1 | பலம் |
| வெண்காரம் | | ,, |
| வெள்ளை மிளகு | | ,, |
| மஞ்சள் | | ,, |
| வசம்பு | | ,, |
| கடலுப்பு | | ,, |
| இந்துப்பு | | ,, |
| அட்டுப்பு | | ,, |
| வளையலுப்பு | | ,, |
| உவர் மண் உப்பு | | ,, |
| லவங்கப்பட்டை | | ,, |
| கோஷ்டம் | | ,, |
| கண்டந்திப்பிலி | | ,, |
| வாயுவிளங்கம் | | ,, |
| சவ்வியம் | | ,, |
| ஜாதிபத்திரி | | ,, |
| ஜாதிக்காய் | | ,, |

இவையெல்லாம் சேர்ந்த நிறைக்கு சுத்தி செய்த குங்கிலியமும், வெள்ளைப்பூண்டு நூறுபலமும், வேண்டிய வெல்லமும் நெய்யும் சேர்த்து நன்றாக இடித்து கழற்சிக்காய் அளவு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். அதிகாலையில் தினம் ஓர் உருண்டை சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள் :

(1) குன்மம்
(2) எண்பது வாதங்கள்
(3) சூலை
(4) வயிற்றுக்கட்டி
(5) சுவாசகாசம்
(6) 18 வித குஷ்டம்

(7) காது ரோகம்

(8) மேகவிரணங்கள்

இதன் பெயர் குக்கிலாதி மாத்திரை.

---

## 7. குன்மாதிக்கு மருந்து

பேயெனுங் கொமட்டிக்காயின் சாறு நாழி
பின்னிடுமே சம்பீரப் பழநீர் நாழி
யாயுநொச்சி நீர் நாழி வெள்ளைப் பூண்டும்
ஆத்திரதம்ரச நாழி யடங்கலுந்தான்
தோயவிட்டுச்சலம் வத்திநாழியாக்கிச்
சொன்ன குளவிந்தமுடன் சூதமோடுங்
காயமுடன் வெண்காரஞ் சோமனுப்புங்
கடுகு மஞ்சள் மிளகும் வெந்தயங்களாமே. (மஅ)

தயங்காமற் காந்தமு நேர்வாளமிந்தச்
சரக்கொன்று மூக்கழஞ் சாய்த்தானுங் கூட்டி
நயந்தரைத்து முன் வத்து நாழிச் சாற்றின்
னண்ணிடத்துழாவி மெல்லப்பழம் புளிப்போல்
மயன் பதமாக்கி தனைத் தூதளங்காய் மட்டு
அளவுட்கொள்ளட்ட குன்மம் வாயுவும்
வயற்றிலுள்ள நோய் வர்க்க மகோதரங்கள்.
வளர்ந்தபெரு வயிற்றுடனே மறுத்துப்போமே. (மகூ)

### 7. குன்மாதிக்கு மருந்து

1. (பாடபேதம்) 80 செ. சுவடியில் உள்ளபடி.

அலகையின் கொம்மட்டிக்காய்ச் சாறு நாழி
அதினடுவே சம்பீரப்பழச் சாறு நாழி
குலவு திரு நொச்சிச் சாறுநாழி
கூடவெள்ளுள்ளி யிஞ்சிச்சாறு நாழி

சலமறவே வத்திநாழியாக்கி யதனுடனே
குதாவிந்தஞ் சூதங்காயம்
நலமுடைய வெண்காரம் சோமனுப்பு
நற்கடுகு மோதகமும் நயந்து கொள்ளே.
கொள்ளிவை வெந்தயமு மிளகு மஞ்சள்
குலவு*செறி நேர்வாளம் காந்தமோரோன்
றுள்ளபடி மும்மூன்று களஞ்சி கூட்டி
யொக்கவே யரைத்ததனைத்துழாவிக் காச்சி
மெள்ளவே பழம்புளிபோற் பதமதாக்கி
மிக்கதோர் தூதுளங்காய் அளவுகொள்ளிற்
குன்மமெட்டு வாயுவர்க்க முதர நோய்கள்
பெருவயிறு மகோதரங்கள் ஓடிப்போமே.

(இ-ள்) பேய்க்கொம்மட்டிக்காய் சாறு 2 ஆழாக்கு
எலுமிச்சம் பழச்சாறு ,,
கருநொச்சிச்சாறு ,,
வெள்ளைப்பூண்டுச்சாறு ,,
இஞ்சிச்சாறு ,,

இவற்றையெல்லாம் சேர்த்து 2 ஆழாக்காகக் காய்ச்சி மரமஞ்சள், சுத்தியான ரசம், பெருங்காயம், வெண்காரம், இந்துப்பு, கடுகு, மஞ்சள், மிளகு, வெந்தயம், காந்தந்தூள், சுத்தி செய்த நேர்வாளம் இவை ஒவ்வொன்றும் மூன்று கழஞ்சு சேர்த்து ஒன்றாகக் கல்வத்திலரைத்து, முன்னே காய்ச்சியிருக்கும் நாழிச்சாற்றில் துழாவி, மெல்லப்பழம்புளிபோல் பதமாக்கி தூதுவிளங்காய் அளவுக்கு உருண்டை செய்து தினம் சாப்பிடவும்.

இதில் தீரும் வியாதிகள் :

1. அஷ்ட குன்மம்
2. வாயு
3. வயிற்று நோய் வியாதிகள்
4. மகோதரங்கள்
5. பெரு வயிறு

1. இந்தப் பாடபேதத்தில் மோதகம் என்கிற அஜமோதம் அல்லது ஓமம் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

# 8. குன்மத்துக்கு ஏரண்ட தைலம்

பூண்டிஞ்சி சிவந்தியுடன் சிவதையிந்துப்புடன்
புடன் மிளகு திப்பிலி நிலவாகை வேர்
காண்டியுகாய் முருங்கை முடக்கொற்றுனொச்சி
கழற்கொடிச்சாரணை கொன்றைகொடிவேலின்வேர்
ஆண்டசெம்முள்ளியுடன் கள்ளிப்பாலும்
ஆமணக்கினெண்ணெயுடனனலிற் காய்ச்சித்
தீண்டுபதத் தேரண்டத் தயிலந் தன்னைத்
தினங்கொள்ள குன்மமெட்டுந் தெரித்துப்போமே. (உ௰)

(இ—ள்)

| | |
|---|---|
| வெள்ளைப்பூண்டு<br>இஞ்சி<br>சிவந்திப் பூ<br>சிவதை வேர்<br>இந்துப்பு<br>மிளகு<br>திப்பிலி<br>நிலவாகை வேர்<br>* உகா வேர்<br>முருங்கைப் பட்டை<br>முடக்கற்றான்<br>நொச்சி<br>கழற்கோடி<br>சாரணைவேர்<br>கொன்றை வேர்<br>கொடிவேலி வேர்<br>செம்முள்ளி<br>கள்ளிப்பால் (கொடிக்கள்ளி அல்லது சதுரக்கள்ளி) | இவை ஒவ்வொன்றும் சமனிடை எடுத்துக்கொண்டு கல்கமாகஅரைத்து இவைகள் எல்லாவற்றையும் சேர்த்த எடைக்கு 4 பங்கு ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் தைலத்தை வடித்துக்கொள்ளவும் |

இதை தினமும் ஒரு காசு எடை சாப்பிடவேண்டும். இதனால் அஷ்ட குன்மங்களும் போம்.

இதன் பெயர் **ஏரண்ட தைலம்**

---

* உகா :— குணபாடம் (சென்னை கவர்மெண்டு பிரஸ்) 90-ம் [பக்கம் பார்க்க.

# 8. குன்மத்துக்கு ஏரண்ட தைலம்

(பாடபேதம்) 80-ம் நெ. சுவடியில் உள்ளபடி

உள்ளியிஞ்சி யிந்துப்பு சிவதை சிவந்தியுடன்
கொள்ளு நிலவாகைவேரும் குலவு மிளகு திப்பிலியும்
உள்ளேரண்ட எண்ணெயுடன் உறவே முடக்கொத்தான்
இலைகொள்
தள்ளா தொக்கக்கழற்சிக்கொடி சாரணை வேரும்
கொடிவேலி
காட்டில் நொச்சில் நிலவாகை கடிய கொன்றைகழலுடனே
யோட்டந் தண்டை '1' யுகாய் முருங்கை யுற்றசிவதை
செம்முள்ளி
கூட்டாமணக் கெண்ணெயுடன் கொடிய வுள்ளியிந்துப்பு
வேட்டம் பெரிய கள்ளிப்பால் மிகவே கூடக்குன்
மம் விடும்.

---

# 9. குன்மத்துக்குத் தாம்பிர பற்பம்

தருங்கொட்டைப்பாசி திராயெருக்கின் பத்திரி
தன்னின் ஒக்க கொண்டரைத்தோர் புதுச் சட்டிக்குள்
ஒருகையிற்கனம் பூசியதின் மேல் நெல்லி
யுட் கெந்திப் பொடிதூவித் தாம்பிரத்தால்
வருந்தகட்டைப் பரப்பியபின் மேலுங் கெந்தி
மன் பொடிதூவியுமுன் சொல் மருந்தும்பூசு
நெருங்கோடொன்றது மூடிச்சீலை மண் செய்
நீள்வனத்தின் எருவதினல் புடமு நேமே (உமிக)

---

1. 'தண்டை' என்பது 'ஆதண்டை' யாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்தச் சரக்கு 54, 46 நெ. சுவடிக ளின் பாடத்தில் சொல்லப்பட வில்லை.

போட்டு ஆறியெடுத்தரைத்து வைத்துக்கொண்டுப்
போடு நெல்லிக்கெந்தியொடு கழஞ்சுஞ்சுற்றி
கூட்டிய நேர்வாளமொரு கழஞ்சுரெண்டுங்
கூறிய பற்பத்துடனே கலந்து நன்றாய்
ஆட்டிதையும் பொடிச்செய்தே யிருபோதுக்கு
மாமிரண்டு பனவிடையை வெல்லந்தன்னில்
ஊட்டியெட்டுத் தினமும் முதல் மிளகு பத்து
முண்டு பின்னதையுண்டஞ்சுகுன்மம் போமே. உ௰உ

(இ-ள்)

| | |
|---|---|
| கொட்டைப்பாசி<br>திராய்<br>எருக்கு இலை | இவைகளைச் சேர்த்து அரைத்து ஓர் புதுச்சட்டிக்குள் ஒரு கைக்கனம் பூசி அந்தப் பூச்சின் மேல் நெல்லிக் |

காய் கந்தகப்பொடி தூவி அதன் பேரில் மெல்லிய தாமிரத் தகடுகளைப்பரப்பியதன் மேலும் கந்தகப்பொடியைத் தூவியதன் மேல் மேலே முன்சொன்ன கொட்டைப்பாசி, திராய், எருக்கு இலைக் கலப்புப் பூச்சை ஓர் கைக்கனத்திற்கு மேலும் பூசி, சட்டியை மூடி சீலை மண் செய்து காட்டு வறட்டியில் புடம் போடவும்.

புடம் ஆறிய பிறகு புடமானதை யரைத்து வைத்துக் கொண்டு,

| | |
|---|---|
| சுத்தி செய்த நெல்லிக்காய்க் கந்தகம் 1 கழஞ்சு<br>சுத்தி செய்த நேர்வாளம் ,, | இவ்விரண்டையும், |

மேற்படி பஸ்பத்தோடு கலந்து அரைத்து அதில் வேளையொன்றுக்கு ஒரு பனவிடை வீதம் எடுத்து பனை வெல்லத்தில் வைத்து தினம் இருபோது எட்டுத்தினங்கள் சாப்பிடவும். எந்த வேளையிலும் மருந்து சாப்பிடுமுன் பத்து மிளகு சாப்பிட்டுப்பின் மருந்து சாப்பிடவும்.

இதனால் ஐந்து வித குன்மங்கள் போகும்.

# 10. குன்மத்துக்கு மாத்திரை

சுக்கோமம் மிளகு குரோசானியோமஞ்
சொல்லும் திப்பிலியும் வகைக்கரைவராகன்
நிக்குமிடைப் பூண்டுடனே நறுக்குமூலம்
நேரொன்றுக்கொரு பலமாமிந்துப்போடும்
தக்கு பொட்டிலுப்பு வளையலுப்புங் காயம்
சவுட்டுப்புங் கல்லுப்பும் பொடியுப்போடும்
எக்குவகை யொன்றுக்கு மூவராகனிடை
யெல்லாஞ் சூரணஞ் செய்திஞ் சிச்சாறே (உ௰௩)

இட்டரை முற்றின தேங்காயிரண்டுள் நீரை
யிறுத்துவிட்டு மருந்தடைத்தக்காயின் மீதே
தொட்டிடு சாணம் பொதிந்து புடத்திற்போட்டுத்
தோய்சாணங்கருக வதைச்சுட்டெடுத்துத்
தட்டியுடைத்துள் மருந்தையெடுத்துப் பின்னுந்
தனையரைத்துத் தேற்று விற்றளவுருட்டி
வட்டனைத் தேங்காயதனைக் கீறிக் காயவைத்து
ஒரு கீற்றுருண்டையொன்று வாங்குட்கொள்ளேன் (உ௰௪)

கொள்ளுவதிப் படியிரண்டு நேரமுந்தான்
கொண்டுவந்தாற் சத்திகுன்மவாத குன்மந்
துள்ளும் வலி குன்மமுடனே பித்த குன்மந்
துலையாத கபகுன்ம மெரியுங்குன்மங்
கள்ளஞ்செயெட்டு விதக்குன்மமெல்லாங்
காணுமலோடிப் போங்கண்டறிந்தத்
தெள்ளிய மாத்திரை முறையைச் சரபோசேந்திரன்
செகத்தோருக்குதவியதாய் செய்ததாமே. (உ௰௫)

(இ—ள்)

சுக்கு
ஓமம்
மிளகு
குரோசானி ஓமம்

} இவை வகைக்கு அரை விராகனிடை

திப்பிலி
சூண்டு
நறுக்கு மூலம் (கண்டந் திப்பிலி) } வகைக்கு ஒரு பலம்

இந்துப்பு
பொட்டிலுப்பு
வளையலுப்பு
பெருங்காயம்
சவுட்டுப்பு
கல்லுப்பு } இவைகள் வகைக்கு மூன்று விராகனிடை யெடுத்துப் பொடி செய்துகொண்டு,

மேற்கண்ட சரக்குகளனைத்தையும் இஞ்சிச்சாறு விட்டரைத்து இரண்டு முற்றின தேங்காயைக் கொண்டுவந்து, அதன் கண்ணைத் திறந்து இளநீரை யிறுத்துவிட்டு, அரைத்த மருந்தை அதனுள்ளிட்டு கண்ணை மூடி, சாணத்தால் கவசம் செய்து புடத்தில் போட்டு சாணம் கருகும்படி அதைச் சுட்டெடுத்து அதைத் தட்டியுடைத்து,

அதனுள்ளிருக்கும் மருந்தை எடுத்து அரைத்துத் தேற்றாங்கொட்டை யளவுக்கு உருண்டையாக வுருட்டித் தேங்காயைக் கீறி, காயவைத்து ஒரு கீறும் ஓர் உருண்டையுமாகத் தினம் இரண்டு வேளை சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள்:—

1. சக்திகுன்மம்.
2. வாத குன்மம்.
3. வலி குன்மம்
4. பித்த குன்மம்
5. கபகுன்மம்
6. எரி குன்மம்.
7. ரத்த குன்மம்.
8. த்ரிதோஷ குன்மம்

# 11. குன்மாதிக்கு வச்சிரவல்லிக் கடுகு

கொடிப் பிரண்டைச் சாறதுவுங் குறுணி தன்னிற்
கூட்டுவாயரி தகிக்கா யன்பதுந்தான்
நெடிய சுக்குத் திப்பிலியு மிளகும் மூன்றும்
நேரும் வகைக்கொரு பலஞ்சீரகமும் காயங்
கடிய சவுக்கார மதி விடையமும் வெண்
காரமுமைவகை யொன்றுக் கரைப்பலங்காண்
கடுகோம முழக்குழக்குப்பிருநாழிதான்
கடுகுரோணி மல்லி வராகனிடை நாலே (உ௰சு)

கனிமதுர மெழுவராகனிடைப்பூண்டுங்
கண்டி தஞ்சு பல மிவைகளரைகரைத்து
அன்லிலடிப்பத்தாமற் கிளறிவிட்டு
அதையிறுகும் பக்குவஞ்சிற்றுமணக்கின்
தனியெண்ணே நாழிவிட்டும் அடிப்பத்தாமல்
தான்பத மாயிறக்கியொரு பாக்களவு கொள்ளுந்
தினங்கைப்புப் புளித்தள்ளு மண்டலந்தான்
சேர் குன்மங்கிராணி மகோதரமும் போமே (உ௰எ)

(இ-ள்)

| | |
|---|---|
| கொடிப் பிரண்டைச் சாறு | 1 குருணி |
| கடுக்காய் (எண்ணிக்கையில்) | 50 |
| சுக்கு, மிளகு, திப்பிலி | வகைக்கு ஒரு பலம். |
| ஜீரகம், பெருங்காயம், சவுக்காரம், அதிவிடையம், வெண்காரம் | வகைக்கு $\frac{1}{2}$ பலம் |
| கடுகு, ஓமம் | இவை வகைக்கு ஒரு உழக்கு (பட்டணம் படி $\frac{1}{8}$) |

உப்பு — இருநாழி அதாவது பட்டணம் படி $\frac{1}{2}$

கடுகுரோகிணி } வகைக்கு 4 விராகனிடை
மல்லி

அதி மதுரம் — 7 விராகனிடை
பூண்டு — 5 பலம்

இவைகளைச் சேர்த்து அரைத்து அனலில்வைத்து அடியிற் பற்ருமல் கிளறிவிட்டு இறுகும் பக்குவத்தில் சிற்ருமணக்கெண்ணெ கால் படி விட்டு, அடிப்பற்ருமல் பதமாக இறக்கி வைத்துக்கொள்ளவும்.

தினமொன்றுக்கு 1 பாக்களவு ஒரு மண்டலம் (45 நாட்கள்) சாப்பிடவும்.

பத்தியம் :— புளிப்பு, கசப்பு, தள்ளுபடி

இதனுல் தீரும் ரோகங்கள் :—

1. குன்மம்.
2. கிரஹணி எனும் வயிற்றுப்போக்கு
3. மகோதரம்

இதன் பெயர் வஜ்ஜிரவல்லிக்கடுகு.

---

# 12. குன்மம் முதலிய ரோகங்களுக்குக் குமரி பற்பம்

இரதம் ஐந்து வராகனிடை காந்தங்கெந்தி
யிரும்பின் தூள் வராகனிடை வகைக்குப் பத்தாங்
கர பாகமாய்ப் பொடித்துக் கலத்தில் வைத்துக்
காட்டும் இரதத்தையும் விட்டதனிேடே
பரவிட வெள்ளறுகினதின் சாறும் விட்டுப்
பரிதி முன்னே யுலரவைத்ததைப் பொடித்து
யிரண்டு பனவிடை மட்டாய் வெல்லத்தினுள்
இட்டுருட்டு விழுங்குபுளி கைப்பாகாதே. (உஅ)

பத்தியமாயிருந்திடப் போஞ் சகல குன்மம்
பௌத்திரம் பீலிகைக் கிராணிச் சலக்கழிச்சல்
முத்திய வாய்வுக் குன்மமென்றதெல்லாம்
முறிந்தோடும் பாண்டு ரோகங்களாதி
தொத்திய நாற்றெட்டென்றும் வியாதிதீருஞ்
சுகம் பெறுவச்சிர தேகமாகுங்காய
சித்தியாஞ் சிவனருளைச் சித்தத்துன்னித்
தினங்கொள் சரபேந்திரன் முறைதீர்ந்தானே (உகூ)

(இ-ள்)

சுத்தம் செய்த பாதரஸம்—5 வராகனிடை (அரைப்பலம்)

| | | |
|---|---|---|
| ,, | காந்தம்— | இவை வகைக்குப் பத்துவராகனிடை (ஒரு பலம்) |
| ,, | கந்தகம்— | |
| ,, | இரும்புத்தூள்— | |

காந்தம், கந்தகம், இரும்புத்தூள் இவைகளைப் பொடி செய்து கல்வத்தில் வைத்துக்கொண்டு அதில் பாதரஸத்தைப் பரவிவிட்டு, வெள்ளறுகின் சாறும் விட்டு, அரைத்துவெய்யிலில் உலரவைத்து அதைப்பொடி செய்து வைத்துக்கொள்ளவும்.

தினமொன்றுக்கு இரண்டு பனவிடை அதாவது சுமார் 3 குன்றிமணிநிறை மருந்தை வெல்லத்தில் வைத்து விழுங்கவும்.

பத்தியம் :— புளி, கசப்பு கூடாது.

இதனால் தீரும் வியாதிகள் :—

1. சகலவிதமான குன்மங்கள்
2. பௌத்திரம்
3. பீலிகை எனும் ப்ளீஹ உதரம்
4. கிராஹணீ
5. ஜலக்கழிச்சல்
6. முற்றிப்போன வாயு குன்மம்
7. பாண்டு ரோகம்

# 13. குன்மாதிக்கு நவச்சாரக்கட்டு

புளியமரமேற் பிராணிசுட்ட சாம்பற்
போடு குப்பைமேனியின் சாறிட்டரைத்து
நளிய குகைச்செய்து லர்த்திக் குகையிற்குள்ளே
நவச்சாரம் வைத்ததின் மேற் குகைவாய்மூடி
க்ளி சேலை மண் செய்துகுக்குடம் போற்
காட்டெருவிற் புட மிடவும் பற்பமாகுந்
தெளியுமிதைச் செந்தேனிற் கொள்ளக்கேளுந்
தீராத வாய்வு குன்மத்திரட்சி போமே. (கூ0)

(இ-ள்)

புளியம்புரணி சுட்டசாம்பலை எடுத்துக் குப்பைமேனியின் சாறு விட்டரைத்து, குகைசெய்து உலர்த்தி குகைக்குள்ளே நவச்சாரம் வைத்து குகை வாயை மூடி களிமண்ணால் சீலைமண் செய்து குக்குடபுடத்தில் அதாவது $1\frac{1}{4}$ சாண் ஆழமுள்ள புடத்தில் இடவும். அது பஸ்பமாகும். பஸ்பமானதைத் தெரிந்துகொண்டு, அதை எடுத்துத் தினம் இரண்டு பணவிடை வீதம் தேனில் சாப்பிடவும்.

இதனால் நாள்பட்ட வாயு குன்மம், வாயுக்கட்டி இவை தீர்ந்து போகும்.

---

# 14. குன்மாதிக்கு வெள்ளி பற்பம்

தெளி வெள்ளியைத் தகடுதட்டி மேலே
செம்முள்ளியிலை யரைத்துக் கவசங்கட்டிக்
குளியான குகையுள் வைத்துக் குகைவாய்மூடிக்
கொண்டும் பின்சேலை மண்செய் கெசபுடத்திற்
களியாமலிட்டு ஆறியெடுக்கப் பற்பங்
கண்டனுபானத்திலிடத் தீரும் ரோகம்
பளியட்ட குன்மநீர்க் கடுப்படைப்பு
பாய்ச்சல் கபம் பீனிசம்புண் பறக்குந்தானே (கூக)

(இ-ள்) வெள்ளியை மெல்லிய தகடாகத் தட்டி அதன் மேலே செம்முள்ளியிலையை யரைத்துக் கவசங்கட்டி, மண்குகை செய்து, அதனுள் தகட்டைவைத்துக் குகைவாயை மூடி, பிறகு சீலை மண்செய்து * கஜபுடத்தில் அதாவது 2 முழம் ஆழம், விஸ்தாரமுள்ளபுடத்தில் வைக்கவும். புடம் ஆறியபின், அதை எடுத்துப் பஸ்பமானதை யறிந்துகொண்டு ஒருபண விடை வீதம் தகுந்த அனுபானத்தில் சாப்பிடவும்.

இதனால் நீங்கும் நோய்கள் :—

1. அஷ்டகுன்மம்
2. நீர்க்கடுப்பு
3. நீர் அடைப்பு
4. பாய்ச்சல் (அதிமூத்திரம்)
5. கபம்
6. பீனிஸம்
7. புண்கள்

---

## 15. குன்மாதிக்கு ரதபற்பம் (சந்தம் வேறு)

இரதமஞ்சு நிட்கமாகு மேத்தவெள்ளைக் காரமும்
ஒருநிட்கம் எருக்கம்பூநீர் ஊட்டியேழு நாளரை
பெரியகாசிக் குப்பியிட்டுப் பின்னேழு மண் சீலைசெய்
அரியகுப்பி வாயைமரக்கலாலு மூடதின்பின்னே. (௬௨)

சட்டியிலும் வெண்மணல்தனில் வைத்திடுங் குப்பிவாய்
மட்டாய் மணலிட்டுஞ் சட்டிவாயை மற்றோர் சட்டியால்
இட்டுமூடிச் சீலைமண் ணிடும்பன் னிருசாமமும்
தொட்டதீப மாயெரித்தெடும்பின் சொல்லக்
கேளுமே. (௬௩)

சுத்தபடிக் காரஞ்சுத்தி செய்திடும் பாற்றுற்றமு
நித்தசங்கு பற்பமூன்று நேர்வகைக்கோர் நிட்கமாய்
வைத்தமுன் மருந்துங்கூட்டி மத்தித்திஞ்சிச்சாற்றினில்
குத்திட்ட குன்மமுஞ் சூலையுஞ்சுர மொச்சிக்கே. (௬௪)

---

*கஜபுடம்—நூறு எருவில் போடும் புடம் (வைத்திய அகராதி).

(இ-ள்) பாதரஸம் 5 நிஷ்கம் அல்லது 5 வராகனிடை (½ பலம்)
வெண்காரம் 1 நிஷ்கம் 1 ,, ($\frac{1}{10}$ பலம்)

இவ்விரண்டையும் எருக்கம்பூ சாறுவிட்டு ஏழுநாளரைத்து அரைத்த விழுதைப் பெரிய காசிக்குப்பியில் போட்டு, குப்பியை ஏழு சீலைமண் செய்து, அதன் வாயை மாக்கல்லினால் மூடிவிடவும். ஓர் பெரிய சட்டியில் வெண் மணல் வைத்து, அதில் இந்தக்குப்பியைவைத்துக், குப்பியின் வாய்மட்டம் வரைக்கும் மணல் போட்டு சட்டியின் வாயை மற்றோர் சட்டியால் மூடி, சீலைமண் செய்து சிறுதீயாக பன்னிரண்டு ஜாமம் (1½நாள்) எரிக்கவும்

ஆறியபின் மருந்தை யெடுத்து சுத்திசெய்த படிக்காரம் சுத்திசெய்த பால் துத்தம், சங்கு பஸ்பம் இவை வகைக்கு ஓர் * நிஷ்கம் அல்லது வராகனிடை எடுத்து அந்த மருந்துடன் சேர்த்து ஒன்றாய் அரைத்து வைத்துக்கொள்ளவும்.

இம் மருந்தை இஞ்சிச்சாற்றில் சாப்பிட அஷ்ட குன்மமும் சூலையும் போகும். நொச்சிச்சாற்றில் சாப்பிட ஜுரம் நீங்கும்.

---

# 16. குன்மமெட்டுக்கும் ஏகமூலிகைச் சூர்ணம்

ஆதித்தன் தினத்தில் நீர்மேலக்கினி சமூலமும்
சோதிவெயில் காயவைத்துச் சொல்லும் வாரந்தன்னிலே
யீதைத்தூளிடிவடித் திடும்புதுக் கலசத்துள்
ஆதல்வை வெறுகடிப் பிரமாணமாய் இதைக்கொளேன் (௩௫)

கொள்ளுமுத் தினம்வெந்நீருட் கொண்டுபத்தியங்களாய்
உள்ள புளிகைப்புடன் ஒழிந்திடக் குன்மங்கள்போம்
தள்ளுமஞ்சு நாளிற்சத்தி குன்மவாத மேழுநாள்
கொள்ளபத்து நாளிற்பித்த குன்மந்தீரு மேலுண்மே (௩௬)

---

* 'நிஷ்கம்' என்பது 80 குன்றிமணி என்றும் 32 குன்றிமணி என்றும் இரண்டு மதங்கள் இருக்கின்றன. வடநாட்டில் 80-ம், தென்னாட்டில் 32-ம் எனக்கொள்ளலாம்,

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமையன்று நீர்மேல் நெருப்பு எனும் மூலி கையை வேருடன் பிடுங்கிவந்து வெயிலில் காயவைத்து மற்றோர் ஞாயிற்றுக்கிழமை யன்று இடித்து சோறுவடிக்கும் புதுச் சட்டியில் வைத்துக்கொள்ளவும்.

ஒரு வெறுகடிப்பிரமாணம் வீதம் (அதாவது மூன்று விரல்களால் கிள்ளும் அளவு) மூன்றுதினம் வெந்நீருடன் உட்கொண்டு, புளி, கசப்பு நீக்கிப் பத்தியமாய் சாப்பிட குன்மங்கள் தீரும்.

இதே முறையில் ஐந்து நாட்கள் சாப்பிட சத்தி குன்மம் எனும் வாந்தியோடு கூடிய குன்மம் தீரும்.

ஏழுநாளில் வாதகுன்மம் ஒழிந்துபோகும்.
பத்துநாட்களில் பித்தகுன்மம் தீரும்.
பத்தியம் முடிந்தபின் சாதாரண உணவு சாப்பிடலாம்.

---

# 17. குன்மாதிக்கு நொச்சிற் பழுதயம்

## (கஷாயம்)

நொச்சில் திப்பிலி மிளகு நுகருஞ்சீரகம் சுக்கும்
மெச்சி வகைக்கோர் கழஞ்சுவீதம் வத்தக்காய்ச்சியுண்
அச்சமுள்ள அட்டகுன்மம் அண்டவாதம் சூலைகள்
நச்சுவாயுவும் குடலில் நண்ணுவாதம் தீருமே. (௧௭)

(இ-ள்) கருநொச்சி
திப்பிலி
மிளகு
கருஞ்சீரகம்
சுக்கு
} இவை வகைக்கு ஓர் கழஞ்சு.

வீதம் எடுத்து இவைகள் எல்லாம் சேர்ந்த அளவுக்கு எட்டு மடங்கு ஜலம் வைத்து ஒரு மடங்காக வற்றக்காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். பின் கஷாயத்தை தினம் சாப்பிடவும்.

இதில் தீரும் வியாதிகள்:—

1. அஷ்ட குன்மம்
2. அண்டவாதம்
3. சூலைகள்
4. நச்சுவாயு
5. குடல் வாதம்

# 18. குன்மத்துக்கு உள்ளியாமணக் கெண்ணை

முருங்கைசிற் றேரண்டநாவல் முந்துநொச்சிலந்தையும்
காந்தைகொடிவேலி மூக்கரட்டை வெள்ளைச் சாரணைத்
தருங்கொழுஞ்சி வெள்ளுள்ளியுந் தண்சிவதை மோருடன்
மருவிடுந் தண்ணீர் குறுணி வைத்திடுங்கடாயமே. (௩௮)

காச்சு மூன்று சேரதாய்க் கடாயமுந் திரிபலைப்
பாச்சுசிங்க முத்தங்தேவ தாரம் பாரச் செவ்வியங்
காச்சிந்துப் பரேணுகந் திரிகடுவெள்ளோத்திரம்
வாச்சிடும் பெருங்குரும்பை மற்றுங்கொடிவேலியே. (௩௯)

ஏலுஞ்சிறு தேக்குடனு மோர்பெருந் துவர்சிகைச்
சாலுமிம் மருந்துகடனித் தனிக்கழஞ்சியாம்
மேலரை சிற்றாமணக்கு விள்ளெண்ணையுழக்குடன்
காலுங்கள்ளிப் பாலுங்கொஞ்சங் காணுமுற்கடாயத்தே (௪௰)

கூட்டிதை யெரிமெழுகு கொள் பதத்திலே வடித்
தூட்டிட விரும்பி நக்கவுத்த குன்மம் பீலிகை
நாட்டுங்குடல் வாதமு நீராமையும் பெருவயிற்
றோட்டுஞ்சூலை வெப்புப்பாவையோட்டிடும் பாருண்மையே (௪௧

---

* 80-ம் நெ. சுவடியில் இதே முறை உரைநடையாகக் கொடுக்கப்பட்டிருப்பதில் 'வேளை' யையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(இ-ள்)

| | |
|---|---|
| முருங்கைப் (பட்டை)<br>சிற்றுமணக்கு (வேர்)<br>நாவல் (பட்டை)<br>கருநொச்சில் (சமூலம்)<br>இலந்தை (பட்டை)<br>சிவகரந்தை (சமூலம்)<br>கொடிவேலி (வேர்)<br>மூக்கரட்டை (வேர்)<br>வெள்ளைச் சாரணை (வேர்)<br>கொழுஞ்சி (சமூலம்)<br>வெள்ளுள்ளி (பூண்டு)<br>சிவதை (வேர்) | இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்துக் கொண்டு |

இவைகளை நன்றாக நறுக்கி அத்துடன் ஒரு குறுணி மோரும், ஒரு குறுணித் தண்ணீரும் சேர்த்து அடுப்பிலேற்றி மூன்று சேர் கஷாயமாகக் காய்ச்சி, அந்தக் கஷாயத்தில்,

| | |
|---|---|
| கடுக்காய்<br>நெல்லிக்காய்<br>தான்றிக்காய்<br>கற்கடசிங்கம்<br>முத்தக்காசு<br>தேவதாரு<br>செவ்வியம்<br>இந்துப்பு<br>அரேணுகம்<br>சுக்கு<br>மிளகு<br>திப்பிலி<br>வெள்ளிலோத்திரம்<br>பெருங்குரும்பை<br>கொடிவேலி<br>சிறு தேக்கு<br>கடுக்காய்ப்பிஞ்சு | இவை வகைக்கு 1 கழஞ்சு வீதம் எடுத்துக்கொண்டு இவைகளைத் தூள் செய்து கஷாயத்தில் போட்டு |

ஒரு உழக்கு (பட்டணம் படி அரைக்கால்) சிற்றுமணக் கெண்ணெயும் கால் உழக்கு கள்ளிப்பாலும் சேர்த்து எரித்து மெழுகு பதத்திலே வடித்து ஒரு காசிடை வீதம் சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள் :—

1. குன்மம்.
2. பிலிகை எனும் ப்ளீகோதரம்.
3. குடல் வாதம்
4. நீராமை
5. பெருவயிறு
6. சூலை
7. வெப்புப்பாவை

## 19· குன்மத்துக்கு சுலப முறை

இந்துப்பு மிளகு சுக்கெலியினுந்திப்பிலி
வெந்தயங் கடுகு அசமதாகம் வெள்ளையுள்ளியும்
முந்துங் காயங்கள்ளிப்பாலொருபிடியும் நாழியாற்
றந்தவிட்டிற் கூட்டிக் கொடுத்தாலுங் குன்மந்தீருமே (சஉ)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | இந்துப்பு<br>மிளகு<br>சுக்கு<br>எலியால் (காட்டாமணக்கு)<br>திப்பிலி<br>வெந்தயம்<br>கடுகு<br>ஓமம்<br>வெள்ளை உள்ளி (பூண்டு)<br>பெருங்காயம் | இவை வகைக்கு 1 பலம் எடுத்துத் தூள்செய்து |

கள்ளிப்பால் ஒரு கையளவும் தவிடு ஒரு நாழி (பட்டணம் படி $\frac{1}{4}$ ம்) சேர்த்து அரைத்து வேளைக்குக் கழற்சிக்காயளவு மருந்தை சாப்பிடவும். இதனால் குன்மந் தீரும்.

# 20. குன்மாதிக்குக் காலசாகாதிப் பழுதயம்

காலையின் சாகாதி சீரகங் கரிமிளகுடன்
நீளுமஞ்சள் திப்பிலியு நேருஞ் சுக்கெலாஞ்சம
மீளுநீரை விட்டரைத்து மேலிள நீரிற் கரை
நாளுநீர்ச் சுவறியுண்ணலமாங்குன்மஞ்சூலையே (சங)

| | |
|---|---|
| கருவேப்பிலை<br>சீரகம்<br>கரிமிளகு<br>மஞ்சள்<br>திப்பிலி<br>சுக்கு | இவை சம எடை எடுத்துக்கொண்டு இவற்றையெல்லாம் ஜலம் விட்டரைத்து இளநீரில் கரைத்து |

நீர் வற்றும்படியாகக் காய்ச்சித் தினமும் உண்ணவும். இதனால் குன்மம், சூலை இவை நீங்கும்.

---

# 21. குன்மாதிக்குப் புனர் நவாதிக் கிருதம்

வெள்ளைச்சாறணைக் கிழங்குவீதம் பல நூறு வெள்
ளுள்ளிப்பல மன்பதுடன் ஒக்குங் கொடிவேலிவேர்
கொள்ளுப்படி நாலுஞ்சுக் கொடுந்திப்பிலி மூலமும்
முள்நெருஞ்சிலுஞ்சிவதை, மூலமாயில் பட்டையே (சச)

யானைத்திப்பிலி வசம்பு மாவரைவேர் திப்பிலிக்
கானக் கற்கடக சிங்கிகாண் மோரடாச் செவ்வியந்
தானிரு பலம்வகைக்குத் தாக்கெண்ணுன்கு நீர்படிப்
பானையிலிட் டெட்டிலொருபங்கு காய்ச்சிக் கொள்ளுமே (சரு)

பசுவினெய் யிருபடியும் பாலுநாற்படி விட்டே
யிசையும் பிப்பிலாதி மென்றாளிட்டுப்பதபாகமாய்
நசையக்காச்சிதை வடிக்கொள் நாளருந்தக் குன்மங்கள்
வசையுதரக்கட்டி மந்தம் வலி ரோமை மாற்றுமே (சசு)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | வெள்ளைச் சாறணை வேர் | 100 பலம் |
| | உள்ளிப் பூண்டு | 50 ,, |
| | கொடிவேலி வேர் | 50 ,, |
| | கொள்ளு | 4 படி |

சுக்கு
கண்டந்திப்பிலி
நெருஞ்சில் சமூலம்
சிவதை வேர்
ஆயில் பட்டை (பூதிகம்)
* யானைத்திப்பிலி
வசம்பு
ஆவாரை வேர்
திப்பிலி
கர்க்கடகசிங்கி
மோரடம் எனும் (பெருங்குரும்பை)
செவ்வியம்
} வகைக்கு 2 பலம்

இவைகளை யெல்லாம் இடித்து அதனுடன் 32 படி ஜலம் ஒரு பானையில் விட்டு அதை எட்டில் ஒரு பங்காக வற்றக் காய்ச்சிக்கொண்டு, பசுநெய் 2 படி பசும் பால் 4 படி விட்டுக் காய்ச்சி, மறுபடியும் மேல் சொன்ன யானைத்திப்பிலி முதல் செவ்வியம் வரையில் உள்ள சரக்குகளை இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்து அந்தப்பொடியைத் தூவி பதமாகக் காய்ச்சி இறக்கி நெய்யை வடித்துக்கொள்ளவும். வேளை ஒன்றுக்கு ½ தோலா வீதம் சாப்பிடவும்.

* 80 நெ. சுவடியில் இந்த செய்யுளுக்கு உரை நடை எழுதப்பட்டிருப்பதில் யானைத் திப்பிலிக்குப்பிறகு 'தந்தி' என்ற நேர்வாளமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதில் தீரும் வியாதிகள் :—

1. குன்மங்கள்.
2. உதரக்கட்டி.
3. மந்தம்
4. வயிற்றுவலி
5. நீராமை

## 22. குன்மத்துக்கு வழுதுணைப் பழம்

நற்சிறு வழுதுணை யீனுற்பது பழந்தன்னில்
நிற்பதொரு நாழியுப்பு நேர்குறுணி மோருடன்
தற்பெரிய பானையிட்டதுதன் வாயோர் சட்டியால்
முற்படிய மூடிப்பூப்புடத்தில் முப்பானுளிடேன் (சஎ)

இட்டெடுத்ததிலோர்பழ மிரவிகாலத் துண்டிடத்
தொட்டோர் காசிடைத் தயிலந்துய்த்திடு மூவைந்துநாள்
அட்ட குன்மந் தீரும்பின்னென்றுத்திர தச்சாறுழக்
கிட்டுள்ளியுழக்கிந்திருக்காசிடை குழைத்துணே.(சஅ)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சிறுமுள் கத்திரி | 40 பழங்கள் |
| | உப்பு | 1 நாழி |

இவ்விரண்டையும் ஒரு குருணி மோருடன் பெரியபானையில் இட்டு அதன் வாயை ஒரு சட்டியால் வாய்படியமூடி பூமிக்குள் புடமாக, வைக்கவும். முப்பது நாள் கழித்து எடுத்து ஒவ்வொரு நாளும் காலையில் ஒரு பழம் எடுத்து ஒரு காசிடை நல்லெண்ணெயில் தோய்த்து 15 நாள் சாப்பிடவும். 15 நாள் சாப்பிட்டபின்பு இஞ்சி ரஸம் ஒரு உழக்கு, உள்ளிப் பூண்டின் சாறு ஒரு உழக்கு, இந்துப்பு இருகாசு இடை சேர்த்துக் குழைத்துச் சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள் :— அஷ்டகுன்மம்.

# 23. அட்டகுன்மாதிக்கு அர்த்த நாரீச பாகம்

பாதரதத்தோர் நிறைக்கப்பாதி வெள்ளித் தாம்பரம்
ஓதும் வெள்ளி தன்னிற்பாதி யொக்கும் வெட்பாசாணமும்
ஈது சூரணங்கள், செய்திதை வெளுப்பருகின்வேர்
ஆதலரசத்தாலும் பிட்டாக வேகவைத் தெடேன் (சசூ)

எடுத்துத்தாம்பிரச்சிமிழிலிட்டு வைத்துக்கொண்டிதைக்
கொடுத்திடொரு குன்றியினைகொள் முருக்கம் பட்டையில்
அடுப்பினின் கடாயத்துண்ணு மட்டசுக்கு நீரிலுங்
கடுத்திடிஞ்சிச் சாற்றிலுண்ணக் கண்டெட்டேகுங்
(இ-ள்) குன்மமே (ருய)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | பாதரசம் | 1 பலம் | இவைகளைச் சூரணம் செய்து, |
| ,, | வெள்ளி | $\frac{1}{2}$ பலம் | |
| ,, | தாமிரம் | $\frac{1}{2}$ பலம் | |
| ,, | வெள்ளைப் பாஷாணம் | $\frac{1}{4}$ பலம் | |

வெள்ளறுக்கின்வேர்ச் சூரணமும் சமனிடை சேர்த்து ஒரு சட்டியில் காட்டாமணக்குச் சாறுவிட்டு வாயை ஒரு துணியால், வேடு கட்டி அதில் ஷை சரக்குகளை வைத்துக் காட்டாமணக்குச் சாற்றின் ஆவியில் பிட்டாக வேகவைக்கவும். அதை உலர்த்தித் தாமிரச் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

வேளை ஒன்றுக்கு ஒரு குன்றுமணி எடை வீதம் முருங்கைப்பட்டைக் கஷாயத்திலாவது சுக்குக் கஷாயத்திலாவது இஞ்சிச்சாற்றிலாவது உண்ணவும்.

இதனால் அஷ்டகுன்மங்களும் தீரும்.

---

# 24. குன்மாதிக்குக் கோடாசூழி* மாத்திரை

சொல்லுந் திப்பிலி மிளகுஞ்சுக்குந் தான்றிக்காகடு
நெல்லியுட் பருப்பிர தநேரிந்துப்புங்கெந்தகம்
வல்லவெங்காரங்கள் பத்தும் வராகனிடை பத்துமாய்
நில்லு மிதற்குச்சமமா நேர்வாளமுங் கூட்டிடேன் (ருக)

கூட்டிடுங் குமரிச்சாறு கொண்டரைத்துங் குன்றிபோற்
க்காட்டிடுங் குளிகைகட்டிக் காணிழலுலர்த்தியே
மூட்டிதை யனுபானத்தில் மூடு நோயையுங்கண்டு
வாட்டிடட்ட குன்மங்களும் வாயுவுடன் தீருமே (ருஉ)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | திப்பிலி | 1 வராகனிடை |
| | மிளகு | ,, |
| | சுக்கு | ,, |
| | தான்றிக்காய் | ,, |
| | கடுக்காய் | ,, |
| | நெல்லிக்காய் பருப்பு | ,, |
| | பாதரஸம் | ,, |
| | இந்துப்பு | ,, |
| | கந்தகம் | ,, |
| | வெண்காரம் | ,, |

ஷை பத்து சரக்குகளுடன் 10 வராகனிடை சுத்திசெய்த நேர்வாளமும் சேர்த்து சோற்றுக்கற்றாழைச்சாறு விட்டரைத்து, குன்றுமணி போல் மாத்திரைகளுருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

தகுந்த அனுபானத்தில் சாப்பிட்டுவந்தால் அஷ்டகுன்மங் களும் வாயுவும் தீரும்.

---

* 'கோடாசூழி' என்பது ஒரு செடிக்கும் பெயர். சித்தவைத்தியத்தில் ஒரு மாத்திரைக்கும் பெயர். 'கோடாசூரி' 'கோடகசாலை' என்றும் பெயர் உண்டு.

# 25. அட்டகுன்மத்துக்குப் பஞ்ச கவ்விய கிருதம்

பசுவின் கோமியமுஞ்சாணம் பாறயிர்நெயைவகை
வசிசதிரக்கள்ளிப்பாலும் வகைக்கொருபடியொன்றாய்
நிசம்பெருங்குமிளவித்து நேரும் வெண்கடுகுடன்
பசைபெருங்கோரைக்கிழங்கும் பார்சயிந்தலவணமே (நுந)

சிவதை கடுதான்றி சுக்குந் தேவதார நெல்லியுந்
துவர்கடுக்காயோரண்ட வித்துடன் வராகனிடை ரெண்டாய்
இவையெலாம் பொடிகள் செய்து இதை மெழுகுறுபதங்
கவனமாய் பழவெல்ல மூங்கண்டறு பலமிடேன் (நுச)

இடுகலந்து கின்றியே யிறக்கிவைத்துக் கொடுண்ணப்
படுதினமொரு கொட்டையின் பாக்களவுந் திட்டமாம்
அடுமே பஞ்ச கவ்வியக்கிருத மென்னும் பெயர்
கொடுமேயட்ட குன்மமாதி குலேந்தோடுங்கை கண்டதே.
(நுரு)

(இ-ள்)

| | |
|---|---|
| பசுவின் மூத்திரம்<br>பசுவின் சாணத்தின் நீர்<br>பசுவின் பால்<br>பசுவின் நெய்<br>பசுவின் தயிர்<br>சதுரக்கள்ளிப் பால் | இவை வகைக்கு ஒரு படி எடுத்து கலந்து அடுப்பில் வைத்து |
| பெருங்குமிழ் விதை<br>வெண் கடுகு<br>பெருங்கோரைக்கிழங்கு<br>இந்துப்பு<br>சிவதை வேர்<br>கடுகு<br>தான்றிக்காய்<br>சுக்கு<br>தேவதாரு<br>நெல்லிக்காய்<br>கடுக்காய்<br>ஆமணக்கு விதை | இவை வகைக்கு இரண்டு வராகனிடை எடுத்து அவை எல்லாவற்றையும் பொடிசெய்து பஞ்சகவ்வியம் வகையறுவில் போட்டு எரித்து |

மெழுகு பதத்தில் வரும்போது 6 பலம் பழைய வெல்லம் சேர்த்து கிண்டி, இறக்கிக்கொள்ளவும். *

தினம் ஒரு கொட்டைப் பாக்களவு சாப்பிடவும். இதனால் அஷ்ட குன்மம் தீரும். இதற்கு பஞ்சகவ்விய கிருதம் என்று பெயர்.

---

# 26. குன்மாதிக்கு கோடாசூழி†க் குளிகை

இரதநாபி கெந்தக மிணங்கு வெள்ளைக் காரமுங்
காவில் தாளகந் தான்றிக்காய் கடுக்காய் நெல்லியுடன்
விரையுந்திப்பிலி சுக்குடன் மிளகிதாகுமிவை யெலாம்
நிறைவராகனிடையிதற்கு நேராய் நேர்வாளமிடேன் (௫௬)

இட்டுங்கரிசாலைசீரி லீதனை நாற்சாமமும்
தொட்டுருட்டிக் குன்றியெனத் தோன்றிடக்குளிகை செய்
திட்டுகீழவிலுலர்த்திதை அனுபானத்திடில்
அட்டகுன்மம் வாயுவாதி யானரோகந்தீருமே (௫௭)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சுத்தியான பாதரஸம் | வகை ஒன்றுக்கு ஒரு வராகனிடை. |
| | நாபி. (சுத்தி செய்தது) | |
| | கெந்தகம் (சுத்தி செய்தது) | |
| | வெண்காரம் ,, | |
| | தாளகம் ,, | |
| | தான்றிக்காய் | |

---

* 80-ம் செ. சுவடியில் இதே முறை. உரைநடையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் தேவதாரத்திற்குப் பிறகு சந்தனமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

† 'கோடாசூரி' அல்லது 'கோடகசாலை' அல்லது 'கோடாசூழி' என்பது ஒரு பூண்டுக்குப் பெயர். அதே பெயருள்ள ஒரு குளிகையும் சித்தவைத்தியத்தில் பிரசித்தமாக இருக்கிறது. சித்தவைத்தியத்திரட்டு 8-ம் பக்கம் பார்க்க.

| | | |
|---|---|---|
| கடுக்காய் | } | வகையொன்றுக்கு ஒரு வராகனிடை |
| நெல்லிப்பருப்பு | | |
| திப்பிலி | | |
| சுக்கு | | |
| மிளகு | | |

மேலே சொன்ன சரக்குகள் சேர்ந்த நிறைக்கு சமனிடை சுத்திசெய்த நேர்வாளம் சேர்த்து, இவற்றையெல்லாம் கரிசலாங்கண்ணிச்சாறு விட்டு 4 ஜாமம் (12 மணிநேரம்) அரைத்து குன்றிமணி அளவுக்கு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

தகுந்த அனுபானத்துடன் மருந்தை சாப்பிட்டால்

1) அஷ்டகுன்மம்
2) வாயு முதலிய ரோகங்கள் தீரும்.

---

# 27. அட்டகுன்மத்துக்குத் தீவாக்கினிச் சூரணம்

பஞ்சலவண்ம் வெண்காரம் பார்சவுக்காரமும்
மிஞ்சு நவச்சாரஞ் சுக்கு மிளகு திப்பிலியுடன்
அஞ்சிறுதேக் கோமஞ் செவ்வியந்திப்பிலி மூலமும்
எஞ்சிரண்டு சீரகமு மோர்வட்டத்திருப்பியே (ருஅ)

வகைகளோர் பலமும் பாதிமற்றுஞ் சித்திர மூலமும்
முனைகத்திஞ்சியிரண்டும் பாதி மூட்டிவறுத்தேபொடி
நகத்தொரு வெருகடியாய் நாளுந்தேனிற் கொள்ளவே
பகைத்தெண் குன்மமண்டவாயுவும் பத்தறுந்தீபாக்
கினிக்கே (ருகூ)

(இ—ள்) :—

| | |
|---|---|
| சாதாரண உப்பு<br>இந்துப்பு<br>வளையலுப்பு<br>அட்டுப்பு<br>உவர் மண் உப்பு<br>வெண்காரம்<br>சவுக்காரம்<br>நவச்சாரம்<br>சுக்கு<br>மிளகு<br>திப்பிலி<br>சிறுதேக்கு<br>ஓமம்<br>சவ்வியம்<br>கண்டந்திப்பிலி<br>சீரகம்<br>கருஞ்சீரகம்<br>வட்டத்திருப்பி | இவை வகைக்கு ஒரு பலம் |
| கொடிவேலி<br>இஞ்சி | இவை வகைக்கு $4\frac{1}{2}$ பலம் |

இவை எல்லா சரக்குகளையும் வறுத்துப் பொடி செய்து, தினந்தோறும் ஒரு வெருகடி அளவு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

இதனால் நீங்கும் நோய்கள் :—

1) எட்டுவகைக்குன்மம்
2) அண்டவாயு

இதன் பெயர் தீபாக்கினிச் சூரணம்.

## பாடபேதம் (80 நெ. சுவடியிலிருந்து)

பஞ்சலவணத்துடன் நவச்சாரம் வெங்காரம்
பாவு சவுக்காரமுடனே
பாங்கான சுக்கொடு சிறுதேக்கு செவ்வியம்
பாவு திப்பிலி மூலமுஞ்
சொல்பயன் திப்பிலி வட்டத்திருப்பியும்
திகழோம மிளகினுடனே
சீரக கருஞ்சீரக வகைக் கொருபலமதாய்
சேர் நன்றாய்க் கலந்து மிஞ்சி
சித்திரமூலம் மிவைரெண்டும் பாதியாய் மூண்
யிசைக்கின்ற மருந்துபாதி
மேன்மையுடனே யிதெல்லாம் வறுத்துப் பொடிபண்ணி
வெரு கடிதேனிற்கொள்ள
அஞ்சாமல் நின்றிடுமட்ட குன்மங்களும்
அண்டவாய்வுக் கிறுணியும்
அகன்றிடும் தீபாக்கினி சூரணமாகுமென்ற
றிந்துரைக்கின்ற வாறே.

# 28. குன்மத்திற்கு உள்ளியா மணக்கெண்ணெ

எளிய புன்கிரு முருங்கை யேர்சிவதை கொன்றையுங்
களியுங்குப்பை வன்னி மிளகறணை செங்கத்தாரியும்
நளிவெண் காக்கணுழிஞ்சி * நாரிமாவிலங்கையுந்
தெளியும் வேம்பிரண்டவுரி சேர்பெரு மருந்துமே (கூ௰)
பாவட்டை வெள்ளருகெருக்கும் படரிமூக்கறட்டையுந்
தாவுய்யக்கொண்ணுனு வெள்ளைச் சாறணைக்கழற்கொடி
மேவிய மருந்தும் வேரும் வெட்டியோர் மிடாவிட்டே
தீவிரக்கடாயங் காச்சிச் சேரோரண்டத் தெண்ணையே (கூக)
கள்ளியின் பாலுஞ்சரிக்கலந்திரதங்கெந்தகம்
உள்ளியும் நேர்வாளங்கூட்டியொத்தெரிபதத்தினில்
வள்ளிதாய் வடித்து நக்கவாங்குமட்டகுன்மமுந்
தள்ளிடுங் கிரந்தியாதி சகலரோகந்தீருமே (கூஉ)

பாடபேதம் 80-ம் நே. சுவடியிலுள்ளபடி :—

இருமுருங்கை சிவதை கொண்ணை எழிலிகுப்பைவன்னிவேர்
எளியபுங்கு எருக்கழஞ்சு எண்ணுசெங்கத்தாரியும்
பருவிலங்கை வேம்புரெண்டு பலியும் வெள்ளைக்காக்கிணன்
படரிநாரி மிளகறணையும் பாவட்டை உய்யக்கொண்ணுனும்
அவுரிசாறடை மூக்குறட்டையும் ஆனகட்டை வெள்ளருக்கும்
அதிலும் பித்தளையெருக்கம் வேரும் அழிஞ்சி வேர்கள்கடிச்சையும்
பெருமருந்தும் வேர்கள்வெட்டி கிசாயமாகக்காச்சியே
பெருத்த கள்ளிப்பால் வெள்கடுகெண்ணை சரியதாகக்கலந்தபின்
கரியுரச கெந்தகம் கரிஞலுள்ள வாளமும்
கடுகவே யெரித்து மிந்தக்கலந்தபின் வடித்து நக்க
சரியுமல்லவே கொரந்தி தள்ளுண்டு போய்விடும்
சகல உலகந் தாரணையே சந்திரகிரந்தி யெண்ணையே

* நாரி = நன்னாரி

(இ-ள்)

| | |
|---|---|
| புங்கம் வேர் | 1 பலம் |
| நல்ல முருங்கைப் பட்டை | ,, |
| முள் முருங்கை | ,, |
| சிவதை வேர் | ,, |
| கொன்றை வேர் | ,, |
| குப்பைமேனி வேர் | ,, |
| கொடிவேலி வேர் | ,, |
| மிளகரணை வேர் | ,, |
| செங்கத்தாரி வேர் | ,, |
| வெள்ளைக்காக்கறட்டை வேர் | ,, |
| அழிஞ்சில் வேர் | ,, |
| நன்னாரி வேர் | ,, |
| மாவிலங்கைப்பட்டை | ,, |
| நிலவேம்பு (சமூலம்) | ,, |
| வேப்பம்பட்டை | ,, |
| அவுரி (சமூலம்) | ,, |
| பெருமருந்து வேர் | ,, |
| பாவட்டை வேர் | ,, |
| வெள்ளறுகு வேர் | ,, |
| எருக்கு வேர் | ,, |
| மூக்கறட்டை வேர் | ,, |
| உய்யக்கொண்டான் வேர் (எருமைமுல்லை அல்லது கொய்யா) | ,, |
| வெள்ளைச்சாறணை வேர் | ,, |
| கழற்கோடி வேர் | ,, |

இந்த சரக்குகளையெல்லாம் இடித்து ஓர் அகன்ற பாத்திரத்தில் போட்டு, சேர்ந்த அளவுக்கு எட்டு பங்கு அதாவது 24 சேர் ஜலம்விட்டு, நாலில் ஒன்றாய்க் கஷாயமாகக் காய்ச்சி

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணை | —$1\frac{1}{2}$ சேர் |
| கள்ளிப்பால் | —$1\frac{1}{2}$ சேர் |
| பாதரஸம் | —$7\frac{1}{2}$ விராகனிடை ($\frac{3}{4}$ பலம்) |
| கெந்தகம் | ,, |
| வெள்ளைப்பூண்டு | ,, |
| (சுத்தி செய்த) நேர்வாளம் | ,, |

இவைகளை அரைத்து

கஷாயத்தோடு கலந்து எரித்து பதத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும். இதைத் தினமும் அரைக்காசிடை சாப்பிட குன்மங்கள் கிரந்திகள் இவை தீரும்.

# 29. குன்மாதிக்கு நாக செந்தூரம்

[இனிச்சந்தம் வேறு]

பதின்பலந்துத்து நாகத்தின் மேலிலுப்பை
யெண்ணெ பசுவெண்ணெ தடவியே
இதுவுருக்கியிடுங் கொச்சைப் பாலிலே
யிருவதுதாஞ் சாய்த்தொரு சட்டிக்குள்
அதில் வெடியுப்பு நாழி பலஞ்சுக்கும்
அசமதாக மூரிபலமஞ்சளும்
பொதியதூட் செய் சிறுகச்சிறுகவே
போட்டுச் செந்நாயுருவிந் நறுக்கிடேன் (கூ௩)

இட்டுக் கிண்டி வறுத்திடிடாடிமத்தின்
பூப்போலே சிவந்திடுஞ் செந்தூரம்
மட்டொரு பணமாயிடை வைப்பது
வளர்கொடு வேலிவேரில் வெருகடி
தொட்டனுபானந் தேனிற் குழைத்துத்
துடங்குநாட்பத்துக்குட் சத்தி குன்மமும்
பட்டெரிகுன்ம மாயுவலிகுன்மம்
பதினெண்குட்ட முதாத்திரட்சி போமே (கூ௪)

திரிகடுகை வெதுப்பிப் பொடிசெய்து
செந்தூரத்திற் பணவிடையுங் கொண்டு
வெருகடி தூட் கலந்தொரு மண்டலம்
விடியலுங் கொள்ளத் தீரும் வியாதிகேள்
இரு மலீளை மந்தார காசங்களும்
எலிகடி வாதகாச மெரிகுரல்
அரிகுரற் சுவாச காசகப கோப
மாறுந் தொண்ணூறுமாகும் பித்தாதிக்கே (கூ௫)

கோபநூறு மிரு பத்தெட்டு மன்கோர
முன்னூற்றிரு பத்தாறிந்திரத்
தாபகண்ட முமைந்தாம் பதினெட்டுத்
தாதுவின் பிரமியம் பயித்தியம்
மாபத்தும் பத்துஞ்சோம நோயிராறு
மார்பினோயுமுகங்கா லெரித்தலும்
லோபங் கொண்டோடிப் போகும் புலவரை
நோக்கியோடிப் போமுலோபியரும் போலுமே (கூகூ)

போகும் ஆவரைப் பஞ்சகச் சூரணப்
பொடியுமற்றயிலக் தனிலாவது
ஆகுஞ்செந்தூர மிட்டொரு மண்டலம்
அடுத்துணைப் போமிரு பான்கழிச்சலும்
ஏகு மூவாறெனுங்கிரிச்சங்களும்
எலும்புருக்கி யீராறுள்ளிருக்கியும்
பாகுநேர் மொழியார் மூலக்குத்துடன்
பயோதரப்புத்துடன் றீரும்பாருமே (கூஎ)

(இ—ள்)

துத்தநாகம் 10 பலம் எடுத்து இலுப்பையெண்ணெயையும், பசுவெண்ணெயையும் அதன் மேல்தடவி வெள்ளாட்டுப்பாலில் இருபதுதடவை உருக்கி ஊற்றிச் சுத்தம் செய்து அதை ஓர் சட்டிக்குள் வைத்து அடுப்பிலேற்றி, அதில்

| | | |
|---|---|---|
| வெடியுப்பு | — ஒரு நாழி | இவற்றை நன்றாகப் பொடி செய்து, சிறுகச்சிறுக சட்டியில் போட்டு அத்துடன் |
| சுக்கு | — ஒரு பலம் | |
| ஓமம் | — அரைப்படி | |
| மஞ்சள் | — ஒரு பலம் | |

செங்காயுருவியையும் நறுக்கிப்போட்டு, நன்றாக வறுக்கவும். அது மாதுளம்பூப்போல சிவந்த செந்தூரமாகும்.

1) இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடை (3 குன்றுமணியிடை) வைத்து ஒரு வெருகடி கொடிவேலி வேர் சூரணத்தைச் சேர்த்து, தேனில் குழைத்துப் பத்துநாள் சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள் :—

1) சக்தி குன்மம் என்னும் வாந்தியோடு சேர்ந்த குன்மம்
2) எரிகுன்மம்
3) வாயுகுன்மம்
4) வலிகுன்மம்
5) பதினெட்டு வகைக் குஷ்டரோகங்கள்
6) உதரத்திரட்சி

2) சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைக் கொஞ்சமாய் வறுத்துக்கொண்டு பொடிசெய்து ஷை செந்தூரத்தில் ஒரு பனவிடையும், சூர்ணத்தில் ஒரு வெருகடியும் சேர்த்துக் காலை வேளையிலும் மாலையிலும் ஒரு மண்டலம் சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள் :—

1. இருமல்
2. ஈளை
3. மந்தாரகாசம்
4. எலிகடி
5. வாதகாசம்
6. எரிகுரல்
7. அரிகுரல்
8. சுவாசகாசம்
9. கபரோகங்கள் (96)
10. பித்தரோகங்கள் (128)
11. இந்திரத்தாபம் (326 உஷ்ணரோகம்)
12. கண்டத்தாபம் 5 (நெஞ்சு நோக்காடு)
13. பதினெட்டுப் பிரமேகம்
14. இருபது பயித்திய நோய்கள்
15. பன்னிரண்டுவகை சோம நோய்கள்
16. மார்புவலி
17. முகம் எரிச்சல்
18. கால் எரிச்சல்

(3) ஷை செந்தூரத்தை ஆவாரை இலை, பூ, வேர், காய், செடி இவை ஐந்தையும் உலர்த்திப்பொடி செய்த சூரணத்தோடாவது, இவ்வைந்தும் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தோடாவது சேர்த்து ஒரு மண்டலம் சாப்பிட்டால் பின் கண்ட வியாதிகள் தீரும்.

1. இருபதுவகைக் கழிச்சல்
2. பதினெட்டுவகை மூத்திரக் கிரிச்சிரங்கள்.
3. பன்னிரண்டு வகை எலும்புருக்கி என்னும் நோய்
4. பதினெட்டுவகை உள்ளுருக்கி வியாதிகள்
5. ஸ்திரீகளின் மார்பு நோய்.
6. ஸ்திரீகளின் மார்புப்புற்று (cancer)

---

# 30. குன்மாதிக்கு மருந்து
## (ரஸலோஹ குளிகை)

உள்ளியுஞ் சோமனுப்பு முயர்ந்ததோ திணங்கு சூதம்
வெள்ளி வெண்காரஞ்சுக்கு மிளகுதிப்பிலி தற்காந்தங்
கள்ளியின் பாலுநொச்சி கசக்கிய விலைச்சாறுண்டை
கொள்ளவே குன்மவாய்வைக் கொன்றிடக்கடவதாமே (சூஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| உள்ளிப்பூண்டு | இவைகளை சமனிடை எடுத்துக்கொண்டு நொச்சி இலைச்சாற்றினால் அரைத்துக் குளிகைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். |
| இந்துப்பு | |
| சுத்தியான பாதரசம் | |
| ,, வெள்ளி | |
| வெண்காரம் | |
| சுக்கு | |
| மிளகு | |
| திப்பிலி | |
| காந்தம் | |
| கள்ளிப்பால் | |

தகுந்த அனுபானத்தில் குளிகையைச் சாப்பிட குன்மவாயு எனும் நோய் தீரும்.

# 31. குன்மாதிக்கு மருந்து
## (க்ஷார தைலம்)

தேங்காய்ப் பாலிலிந்துப்புச்சிறக்கப் பலமொன்றது கொள்ள
வாங்காவெண் காவுள்ளியது வலியவிரண்டு பலங்கொண்டே
தூங்காச்சாரமிரு கழஞ்சுசொன்னவளவிற் கள்ளிப்பால்
ஏங்காதேசித்தெண்ணெய்கொள்ள விராதேகுன்மமது கண்டாய்
(சூசூ)

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | தேங்காய்ப்பால் | 1 சேர் | இவைகளைச் சேர்த்து அரைத்து |
| | இந்துப்பு | 1 பலம் | |
| | வெண்காரம் | 2 பலம் | |
| | உள்ளி | 2 பலம் | |
| | யவக்ஷாரம் | 2 கழஞ்சு | |
| | கள்ளிப்பால் | 2 கழஞ்சு | |

சிற்றாமணக் கெண்ணெ 1 சேர் விட்டுக் குழப்பி அடுப்பில் வைத்துக்காய்ச்சி எண்ணெயாக எடுத்துக்கொள்ளவும்.

இதைக் காசிடையாக தினம் சாப்பிட்டுவர, குன்மந்தீரும்.

---

# 32. தேங்காய்க்கடுகு
## ( குன்மத்துக்கு )

தேங்காயொன்ருேடு முத்தியது கண்ணைத்,
திறந்திள நீரிறுத்திட்டதற்குள்ளே
பாங்காய்க்கல்லுப்புங் காந்தம் பெருங்காயம்
பங்கிருகாசிடையிட்டுக் கள்ளிப்பால்
தேங்கரெண்டு வராகனிடைகுத்தித்
திறக்கும் வாய்முனையால் வீக்கிமேற்சாணம்
வாங்கி மூடிப் பொதிந்தெரு முட்டையை
மாட்டிச்சுட்டோடு விட்டெடு நீக்கிடேன் (எம)

எடுத்தரைத்துண்டையிட்டு நிழலுலர்த்தி
　　இதைவைத்துக்கொடுக்குந்தின நாவினில்
தடவிடெண்ணெப் பின்னுங்கருப்புக்கட்டி
　　தான் தின்றப்பால் மருந்து முப்பாக்களவு
எடுத்துண்ணக் கொடுநாள் மூன்று இந்தப்படி
　　யிட்டுவந்தால் அட்டகுன்மமென்றதைக்
கெடுத்துங்கூட்டோடே தள்ளுங் கைக்கண்டது
　　கேளுந்தேங்காய்க்கடுகிது நேத்தியே. (எக)

(இ-ள்) ஒரு முற்றின தேங்காயின் கண்ணைத் திறந்து இளநீரைக் கொட்டிவிட்டு அதற்குள்ளே

| | |
|---|---|
| கல்லுப்பு<br>காந்தம்<br>பெருங்காயம் | } இவை வகைக்கு இரு காசிடை போட்டு |

கள்ளிப்பால் இரண்டு வராகனிடையும்விட்டு மேல் கண்ணை ஒரு முளையினல் நன்கு அடைத்து அதன்மேல் சாணியினுல் கவசம் செய்து வரட்டியில் வைத்து தேங்காய் ஓடு கருகும் வரை சுட்டெடுக்கவும்.

பின்பு தேங்காயினுள்ளிருக்கும் சரக்குகளை நன்கு அரைத்து உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

மருந்து சாப்பிடுவதற்கு முன், முதலில் நாக்கில் நல்லெண்ணெயைத்தடவி பிறகு கருப்புக்கட்டி (பனைவெல்லம்) கொஞ்சம் சாப்பிட்டு மூன்று பாக்களவு ஷை மருந்தை மூன்று தினங்கள் சாப்பிடவும்.

இம்மருந்தினல் எட்டுவகைக் குன்மங்களும் தீரும்.

இதன் பெயர் **தேங்காய்க் கடுகு.**

---

# 33. குன்மாதிக்குக் கருங்கோழி பற்பம்

திப்பிலி கருஞ்சீரகம் வெள்ளுள்ளிச்
செவ்வியங்கடுக்காய் திப்பிலி மூலஞ்
செப்பகிற் சிறுதேக்குத் தேசாபுரஞ்
சித்தரத்தைச் சுக்கோமமுடன் சத
குப்பையு நெல்லி முள்ளித் தான்றிக்காயுங்
குரோசானி யோமமும் வாய்விளங்கமிந்
துப்புங் கோட்டமும் வால் மிளகுமிவை
சொல் வகைக்குப்பலமரை தூக்கிடேன். (எஉ

குக்கிலும் பெருங்காய மபினியுங்
கூரேலமுங் கிராம்புங் கோரோசனை
மிக்கி லவங்கப்பத்திரி சாதிக்காய்
மேலதிமதுரஞ் சாதிப்பத்திரிப்
புக்கிது வகையொன்றுக் கிரண்டுமாய்
புரிவராகனிடை கொண்டு மேற் கருங்
குக்கிடத்திற் புடம் வைக்கும் வாறது
கோமியத்திலுங்கொள் நவச்சாரமே. (எந)

சத்திச்சாரமெவச் சாரஞ்சீரகந்
தான்றி நெல்லி கடுக்காய் வெள்ளுள்ளியுஞ்
சித்திச்சுக்கு மிளகு நேர்வாளமுந்
திப்பிலியுங்கிராம் போமஞ் சேர்த்தெல்லாங்
குத்திடுங்கள்ளிப்பால் விட்டரைத்திட்டுக்
குளிகை கட்டிப் பசுநெய்யிற் கொண்டிடப்
பத்திடஞ்சு வகைக்குன்மங்காமாலை
பாண்டு வெண்பது வாதம் பரியுமே. (எச)

விக்கலுஞ் சுரபாண்டுடன் வீக்கமும்
விழுங்கிருமி சுவாசகாசங்களுந்
தக்க நீர் மாந்தமுங் குடல் வாதங்கள்
தள்ளிடா மூத்திரக்கிரிச்சங்களும்
மைக்கவுசை மகோதர மாதியாய்
வளர் வியாதி சகலமுந்தீத்திடச்
சக்கரக் காத்தாமோதரத் தரணிக்
காசச்சரபோசி மகாராசனுரைத்ததே (எரு)

(இ-ள்) திப்பிலி
கருஞ்சீரகம்
பூண்டு
செவ்வியம்
கடுக்காய்
கண்டந்திப்பிலி
சிறுதேக்கு
அகிற்கட்டை
தேசாவரக் கிழங்கு
சித்தரத்தை
சுக்கு
ஓமம்
சதகுப்பை
நெல்லிமுள்ளி
தான்றிக்காய்
குரோசானி ஓமம்
வாய்விடங்கம்
இந்துப்பு
கோஷ்டம்
வால்மிளகு

இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம்

குக்கில்
பெருங்காயம்
அபினி
ஏலம்
கிராம்பு
கோரோசனை
இலவங்கப்பத்திரி
சாதிக்காய்
சாதிப்பத்திரி
அதிமதுரம்

இவை வகைக்கு இரண்டு வராகனிடை

ஷை சரக்குகளை நன்றாக இடித்து, ஒரு கருங்கோழியின் தலை இறகு, கால்நகம் முதலியவற்றை நீக்கி, வயிற்றைக்கீறி, குடல் நீக்கி ஷை இடித்த சூரணத்தை வயிற்றுனுள் வைத்து, மேலேதைத்து கோமூத்திர ஆவியில் புட்டவியலாகப் புடமிடவும். புடம் ஆறியபின் அதையெடுத்து எலும்பு நீக்கி

| | |
|---|---|
| நவச்சாரம்<br>சத்திக்ஷாரம்<br>எவக்ஷாரம்<br>சீரகம்<br>தான்றிக்காய்<br>நெல்லிக்காய்<br>கடுக்காய்<br>உள்ளிப்பூண்டு<br>சுக்கு<br>மிளகு<br>சுத்திசெய்த நேர்வாளம்<br>திப்பிலி<br>கிராம்பு<br>ஓமம் | இவையெல்லாம் வகைக்கு 2 வராகனிடைபோட்டு, சூரணித்து திருகுக் கள்ளிப்பாலும் விட்டு புடம் போட்ட கோழியையும் சேர்த்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து, பின்பு குளிகைகளாக உருட்டிக்கொள்ளவும். |

குளிகைகளை பசுநெய்யிற் சாப்பிடவும்
இதனால் தீரும் வியாதிகள் :—

1. ஐந்துவகைக் குன்மம், 2. காமாலை, 3. பாண்டு, 4. எண்பதுவகை வாதங்கள், 5. விக்கல், 6. ஜுரப்பாண்டு, 7. வீக்கம், 8. கிருமிரோகங்கள், 9. சுவாசகாசம், 10. நீர் மார்ந்தம், 11. குடல்வாதங்கள், 12. மூத்திரக்கிரிச்சிரங்கள், 13. கவுசை, 14. மகோதரம்.

---

## 34. குன்மாதிக்கு உள்ளியாமணக் கெண்ணை (ராமபாணம்)

உள்ளியாமணக் கின்றயிலத்திலும்
மூறுசிவதைத் யெலியாமணக்குவேர்
குள்ள மூக்கறட்டை முதுகூந்தலுங்
கொன்றைச்சாறணையுமுடக் கொற்றான் வேர்
முள்ளு மாங்கழற்சிக்கொடிவேர்
புன்கின் முதுப்பட்டை யிரண்டாமுருங்கை மூலந்
தெள்ளுங்காரி கண்டங்கடு ரோகிணி
தசமூலமிது சேர்த்திடித்திட்டிடேன் (எசு)

அரத்தை திப்பிலி மஞ்சளுடன்
குப்பையாம் பெருங்குரும்பையிரு சீரகங்
காத்த காகரமு மிளகுஞ்சவுக்
காரமிந்துப்புடன் கடுகுக்காரம்

பிரத்தகரட்சார மிந்திரவண்ணமும்
பெருந்துவர்சிகைக்காய்ச்சுழைமண்ணுடன்
மாத்தசத்துருக்கீட மிது சமம்
வாளமு மிருபானோர் பலமிடேன் (எஎ)

வெள்ளைப்பாற் பலம் பத்துடன் விட்டரை
மேற்குடிநீர் விளக்கெண்ணையிற்கலந்
துள்ள வெண்ணை பதத்தில் வடித்தெடுத்
துட்கொள்ளிலெட்டு குன்மமும் வாயுவுங்
கொள்ளட்டப் புலிசவாதமண்டத்திற்
கொள்ளும் வாதங்குடல் வாதம் போக்கிடும்
வள்ளலாஞ் சரபோசி மகராசன்
வரையிலாக் கொடைபோல் ராம பாணமே (எஅ)

(இ-ள்)
உள்ளிப்பூண்டு
காய்ந்த சிவதை வேர்
எலியாமணக்கு வேர்
மூக்கறட்டை வேர்
முதியார் கூந்தல்
சரக்கொன்றை வேர்
சாரணை வேர்
முடக்கொற்றான் வேர்
கழற்சிக்கொடி வேர்
முதிர்ந்த புன்கம் பட்டை
நல் முருங்கை வேர்
முள் முருங்கை வேர்
கண்டங்கத்திரி வேர்
கடுரோகிணி
பாதிரிவேர்
வாகை வேர்
பெருங்குமிழ் வேர்
வில்வம் வேர்
சிறுவழுதுணை ,,
நெரிஞ்சில் ,,
சிறுமல்லி ,,
பெருமல்லி ,,

இவைகள் வகைக்கு ஒரு பலம் எடுத்து அவைகளைச் சேர்த்து இடிக்கவும். இடித்த தூளை 16 பங்கு ஜலத்தில் போட்டு எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சவும்.

அரத்தை
திப்பிலி
மஞ்சள்
சதகுப்பை
பெருங்குரும்பை
சீரகம்
கருஞ்சீரகம்
சுக்கு
மிளகு
சவுக்காரம்
இந்துப்பு
கடுகு
யவக்ஷாரம்
தகர ,,
இந்திர வண்ணம் (பேய்க்குமட்டிக் காய்)
பெரிய பிஞ்சுக் கடுக்காய்
உவர்மண் காரம்
சத்துருகீடம் (வாய்விடங்கம்)

} இவைகள் வகைக்கு ½ பலம் எடுத்து

ஷை சரக்குகளை ஒன்றிரண்டாக இடித்து இதனுடன் சுத்திசெய்த நேர்வாளம் இரண்டு பலத்தை வெள்ளாட்டுப்பால் பத்து பலத்தில் அரைத்துக் கஷாயத்தில் கலக்கவும். கஷாயத்திற்குச் சரியான விளக்கெண்ணெயிற் கஷாயத்தைக்கலந்து காய்ச்சி, எண்ணெ பதத்தில் வடித்தெடுக்கவும்.

இதனால் தீரும் வியாதிகள் :—

1) எட்டுவகைக் குன்மங்கள்
2) வாயு
3) புலிசவாதம்
4) குடல் வாதம்

இந்திர வண்ணம் = பேய்க் கொமட்டிக்காய்
சத்துருகீடம் = வாயு விடங்கம்

# 35. குன்மாதிக்குச் சிவதைச் சூரணம்

சுத்தி செய்த சிவதையின் மூலத்தைத்
தூக்கிருபத் தேழாய் வராகனிடை
கொத்தமல்லி கடுக்காயுந் திப்பிலி
கோரையின் கிழங்கும் வாய்விளங்கமும்
வத்தச்சுக்கு மிளகது தான்றிக்காய்
வகைய தொன்றுக்கொரு வராகனிடை
குத்திடிவடிக் கொள் சமஞ் சீனியைக்
கூட்டிவெண்ணீருட்கொள்ளப் போங்குன்மமே (எக)

(இ-ள்)

சுத்தி செய்த சிவதைவேர் — 27 வராகனிடை (சுமார் $2\frac{3}{4}$ பலம்)

| | |
|---|---|
| கொத்தமல்லி விதை<br>கடுக்காய்<br>திப்பிலி<br>கோரைக்கிழங்கு<br>வாய்விடங்கம்<br>சுக்கு<br>மிளகு<br>தான்றிக்காய் | இவை வகைக்கு 1 வராகனிடை |

ஷை சரக்குகளை உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து இதற்குச் சரிநிறை சர்க்கரை கலந்து வெந்நீருடன் உட்கொள்ளக் குன்மம் போகும்.

# 36. குன்மாதி வியாதிக்குச் செந்தூரம்

இர தமைந்து பலங்கெந்தகம்
பலமேக மிந்திலவணமு நாற்பலம்
அரப்பொடி யிரண்டாம் பலவெங்காரம்
அது பலமும் மெட்டாமூசிக் காந்தமும்
நிறைபல மேழுங்கூட்டிக் குமரியின்
நீரினல் இருநாளரைத்தே வில்லைப்
பரவொரு புதுச்சட்டிக்குள் வைத்துமேற்
பாங்கொரு சட்டிக்கொண்டதை மூடிடேன் (அ௰)

மூடிச்சிலைமண் செய்து சாம்பிராணியு
மூட்டித் தூபங்கொடுத்தொரு சாதியாய்த்
தேடிய விறகிட்டுப் பதினறுசெல்லச்
சாம மெரித்தெடுத் தைந்தாநாள்
ஊடிரண்டாந்தர முற்படியாக
வுற்றுச் செந்தூரஞ் செய்து சிமிளிட்டு
நாடிச்சுக்கு மிளகுடன் றிப்பிலி
நற்பொடிக்கு வெதுப்பனுபானமே (அக)

தேனெலும்பிச்ச நீர் தயிர் மூன்
றாளுஞ் செந்தூரத்தோர் பணவிடையுங் கூட்டிப்
பானங்கொள்ள மிதுக்கெரிகுன்மமும்
பார்பயித்தியக் குன்மம் வலிகுன்மம்
ஊனிலுஞ் சத்தி குன்ம வாயு குன்ம
மோடிரு பத்தாறும் பித்தரோகமும்
ஈனச் சேற்றும் நூற்றிருபானெலி
யெண்பதாமிரு மற்றெண்ணூற்றுறுமே (அஉ)

காமாலை புகைபாண்டு விடபாகங்
கல்லடைப் புத்துன்மாங்கிடமும் வறள்
காமாலை பிற மூலஞ் சூலைக்கட்டுக்
காணுதகடி சோகைப் பிரமியம்

மாமாலை நீரிழிவுள்ளுருக்கியும்
வண்டுகள் கடியண்டத்துள் வாதநீ
ராமையுஞ் செரியாமை பௌத்திர நற்
கபாலவெப்பம் பக்கச்சூலையே (அ௩)

மூலம் போராமை யென்னும் வியாதிகள்
மூரகந்திருமிதுக்கிரும் பத்தியங்
கொல்லுங்கைப்புப் புளிப்புப்புகையிலை
கூட்டிடாமலுங் கொள்ளரையுப்புமேற்
றோலிலாத்துவரம் பருப்புழுளை
துளிர்க் கீரையுஞ் சொல்முருங்கைப் பிஞ்சும்
மேலிது கூட்டவபத்தியநடை
விட்டிடப்பல நோயும் விட்டோடுமே (அ௪)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 5 | பலம் | இச்சரக்குகளைச் சோற்றுக் கற்றாழைச் சாற்றில் இரண்டு நாட்கள் அரைத்து, ஒரே வில்லையாகத் தட்டி |
| ,, நெல்லிக்காய் கந்தகம் | 1 | ,, | |
| இந்துப்பு | 4 | ,, | |
| இரும்புத்தூள் | 2 | ,, | |
| பொரித்த வெண்காரம் | 8 | ,, | |
| சுத்திசெய்த காந்தம் | 7 | ,, | |

ஒரு புதுசட்டிக்குள் வைத்து அதன்மேல் மற்றோர் சரியான சட்டியால் மூடிச்சீலைமண் செய்து, சாம்பிராணிப் புகையும் போடவும். பின்பு இதை ஒரே மாதிரி விறகால் அடுப்பின் மேலேற்றிப் பதினறு ஜாமம் எரிக்கவும். ஐந்தாவது நாளன்று அதை எடுத்து மறுபடியும் கற்றாழைச் சாறுவிட்டரைத்து மறுபடியும் முன் கூறியவாறு செந்தூரமாகும்வரை புடமிடவும். புடமாறியபின்பு செந்தூரத்தை ஓர் சிமிழில் அடக்கம் செய்து, சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றின் சூரணத்தோடு செந்தூரத்தில் ஓர் பனவிடையும் கூட்டி வெந்நீர் அனுபானத்துடன் சாப்பிடவும். அல்லது தேன், எலுமிச்சம்பழச்சாறு, தயிர் இவற்றில் ஏதாவதொன்றில் ஷெடி சூரணத்தையும் செந்தூரத்தில் ஓர் பனவிடையுங் கூட்டிச் சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள் :—

1. எரிகுன்மம்
2. பித்தகுன்மம்
3. வலிகுன்மம்
4. சத்திகுன்மம்
5. வாயுகுன்மம்
6. இருபத்தாறு வகையான பித்தரோகங்கள்
7. நூற்றிருபது கபரோகங்கள்
8. எண்பது வகை வாத ரோகங்கள்
9. தொண்ணூற்றாறுவகை இருமல்
10. காமாலை (மஞ்சள்)
11. விஷப் பாண்டுரோகம்
12. கல்லடைப்பு
13. துர்மாமிசங்கள்
14. வறள் காமாலை
15. வெளி மூலம்
16. சூலைக்கட்டு
17. காணுக்கடி
18. சோகை
19. அதிமூத்திர ரோகம்
20. நீரிழிவு
21. உள்ளுருக்கி
22. வண்டுகள் கடி
23. அண்ட வாதம்
24. நீராமை
25. அஜீரணம்
26. பௌத்திரம்
27. மண்டைக் கொதிப்பு
28. பக்கசூலை
29. உள்மூலம்
30. பேராமை

இதற்குப் பத்தியம்:— கசப்பு, புளிப்பு, புகையிலை கூடாது. அரையுப்பு சாப்பிடவும். தோலில்லாத துவரம்பருப்பும், துளிரான முளைக்கீரை, முருங்கைப்பிஞ்சு இவைகள் சாப்பிடவும். ஸ்திரீபோகங்கூடாது.

---

## 37. குன்மாதிக்கு லவண செந்தூரம்

கல்லுப்பூமச்சியும் வகைக்கோர் படி
காயஞ்சங்கு வெண்காரம் பலகறை
மெல்லிந்துப்பு மிதுவகைக் கோர்பலம்
வெந்த கொள்ளுத்தண்ணீரிலரைத்திதைப்
புல்லச்சட்டியுள் வெற்றிலையிட்டதிற்
புட்டுப்போல் வைத்து வெத்திலைமேலிட்டுஞ்
சில்லுச்சட்டியால் மூடிமண் சேலையுஞ்
செய்கெசபுடம் போடச் செந்தூரமே (அரு)

புடமுமாறியெடுத்த மருந்தினைப்
போற்றி வைத்துச் சகல குன்மாதிக்கும்
இடலாம் ரோக நிலைகண்டனுப்பானத்த
திலும் வராகனிடை யிடுஞ்செந்தூரம்
படவுந்தேனிலு மிஞ்சிரசத்திலும்
பசுவின் வெண்ணை தனிலுங் குழைத்துணக்
கடவதாகவுதவிசெய்தான் தஞ்சைக்
காவலன் சரபேந்திரன் முறைகளே (அசு)

(இ-ள்)

கல்லுப்பு 1 படி
ஊமச்சி என்ற நத்தை 1 படி

| | |
|---|---|
| பெருங்காயம்<br>சுத்திசெய்த சங்கு<br>பொரித்த வெண்காரம்<br>சோழி<br>இந்துப்பு | இவை வகைக்கு 1 பலம் |

ஷெ சரக்குகள் யாவற்றையும் கொள்ளுக்கஷாயத்தில வைத்து, ஓர் புதுச்சட்டியை எடுத்து, அதில் வெற்றிலைகளைப் பரப்பி ஷெ மருந்தை பிட்டுப்போல் வைத்து மறுபடியும் வெற்றிலைகளால் மூடவும். பின்பு அச்சட்டியை மற்ேறார் சட்டியினல் மூடிச் சீலைமண்செய்து கஜபுடம் போடவும்.

புடமாறியபின், செந்தூரத்தை எடுத்து குன்மரோகங்களுக்கு, வியாதியின் நிலைமையை அறிந்து, ஒரு வராகனிடை செந்தூரத்தைத் தேனிலோ, இஞ்சிச்சாற்றிலோ, பசு வெண்ணையிலோ குழைத்துக் கொடுக்கவும்.

---

## 38. குன்மாதிக்கு மருந்து

புரசமேற் பட்டை மூன்று பலந்தனிற்
போடுந்திப்பிலி சுக்கு வெள்ளுள்ளியுங்
கரிமிளகுஞ்சமங் கூட்ட நீரிட்டுக்
கடாயங்காய்ச்சி வடித்திறுத்துக்கொண்டு
உரவிலும் வெந்திடுமருந்தை யெலா
மூடரைத்துக் கடாயத்திலுங்கரை
பரவியுண்ணக் கொடுத்திடக் குன்மங்கள்
பாடிலாக்குடிபோற்றேயும் பாருமே (அக)

(இ-ள்)

புரசம் பட்டை 3 பலம்
திப்பிலி ,,
சுக்கு ,,
வெள்ளைப் பூண்டு ,,
மிளகு ,,

இவை யாவற்றையும் ஒன்றிரண்டாய் இடித்துத்தண்ணீரில் போட்டுக் கஷாயமாக்கவும்.

கஷாயத்தை இறுத்து அத்துடன் அடியில் தங்கியிருக்கும் சரக்குகளை அரைத்துக் குழப்பிச் சாப்பிடவும்.

இதனல் குன்மங்கள் தீரும்.

---

# 39. குன்மாதிக்கு நிலவாகைச் சூரணம்

திப்பிலி மிளகுங் கருஞ்சீரகம் பெருங்காயம் சுக்கோமமிந்
துப்பிது சமமாமிதற்குப்பாதிச் சூரணமா நிலவாகை
தன்னையே முப்பொடியிலுஞ்சேர்த்து வெருகடி மூட்டு
வென்னீர் குடித்திரும் பத்தியம்
உப்புக்கூட்டிப்புளி கசப்பும் வாயுவுமொக்கும்
பண்டங்கள் தள்ளோடுங் குன்மமே. (அஅ)

| | |
|---|---|
| திப்பிலி<br>மிளகு<br>கருஞ்சீரகம்<br>சீரகம்<br>பெருங்காயம்<br>சுக்கு<br>ஓமம்<br>இந்துப்பு | இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து நன்றாகச் சூரணம் செய்து |

நிலவாகை 4 பலத்தைத் தனியாகச் சூரணித்து, இரண்டு சூரணங்களையும் கலந்து இடித்து வைத்துக் கொள்ளவும். ஒரு வெருகடிப்பிரமாணம் வென்னீருடன் சாப்பிட்டுவரக் குன்மங்கள் தீரும்.

பத்தியம் :— உப்பு சேர்க்கலாம். புளி, கசப்பு, வாயுப் பண்டங்கள் இவற்றை நீக்கவும்.

---

# 40. குன்மாதிக்கு மருந்து

இந்துப்புங்காயம் வசம்பு வெள்ளுள்ளியு
மெலும்பிச்சங்கனி நேர்கொடுவேலிவேர்
நைந்து நாறத்தங்காய் நிகர்சீந்திவேர்
நாட்டிதெல்லாமரைத்தே தரண்டெண்ணையிற்
தந்தெரித்துப் பதத்தில் வடித்தெடு
சாப்பிடக்கேளிது தள்ளு நோய்களை
வந்தெரிகுன்மமுஞ்சத்தி குன்மமும்
வலிகுன்மங்களிதை மாற்றும் வாய்மையே. (அக)

இந்துப்பு (பொரித்தது) 1 பலம்
காயம் ,, ,,
வசம்பு ,,
உள்ளிப்பூண்டு ,,
எலுமிச்சங்காயளவு { கொடுவேலி வேர்
நாறத்தங்காயளவு { சீந்தில்கொடி வேர்

} இவைகளை எடுத்து எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து.

4 சேர் விளக்கெண்ணையில் கலந்து அடுப்பிலேற்றிப் பதத்தில் இறக்கி எண்ணையை வடித்துக்கொள்ளவும்.
இதை அனுதினம் ஓர் காசிடை சாப்பிட்டுவர

(1) எரிகுன்மம்
(2) சக்திகுன்மம்
(3) வலி குன்மம்

இவை தீரும்.

## 41. குன்மாதிக்கு மருந்து

இரதநாவி மனோசிலை கெந்தகம்
இடுவெண்கார நேர்வாள நவச்சாரம்
அரிதார மிளகுஞ் சுக்குந்திப்பிலி
யாமலகங் கடுக்காய் தான்றிக்காயுஞ்
சரியிடை யொரு சாமங் கரிசாலைச்
சாற்றினலரைத்துப் பருத்திவிதைப்
பிரமாணமுண்டை செய்திஞ்சிச் சாற்றிடும்
பேராட்ட குன்ம வாதங்கள் தீருமே. (௬௰)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்
சுத்திசெய்த நாபி
,, மனோசலை
,, நெல்லிக்காய் கந்தகம்
,, நேர்வாளம்
பொரித்த வெண்காரம்
சுத்தி செய்த தாளகம்
மிளகு
சுக்கு
திப்பிலி
நெல்லிக்காய்
கடுக்காய்
தான்றிக்காய்

இவை வகைக்கு 1 வராகனிடை எடுத்து நன்கு இடித்து கையாந்தகரைச் சாற்றினால் ஒரு ஜாமம் நன்கு அரைத்து

பருத்தி விதைப் பிரமாணம் உருண்டை செய்யவும். மாத்திரையை இஞ்சிச் சாற்றில் கொடுத்துவர

1. எட்டு குன்மங்களும்
2. வாயுவும் தீரும்

---

# 42. குன்மாதிக்கு லேகியம்

கடுக்காயைந்து மிளகுழக்காகு மேற்
    கடுகுரோணி யிருவராகனிடை
இடுகருஞ் சீரகத்துடன்றிப்பிலி
    யிதிற் சுத்தி வாள மூன்று முக்காற்பலம்
முடுக்கிடு வாய்விளங்க மரைப்பல
    மூலியெல்லாம் வறுத்துத் தூளெண்ணையாற்
படுக்கு லேகிய மந்தாக்கினி யெரி
    பாக மாயெடுத்துண் ணொருவேளைக்கே (சுக)

புளியங்கொட்டை யளவிடக்குன்மாதி
    போக்கு மேல்வயிற்றிற் கண்டிப்புண்டாகிற்
களியு மண்டலங்காலரை கொண்டிடக்
    காணுதோடுங் கடும் பத்தியமிது
புளியுமுப்புக் கசப்பும் புகையிலை போக்கி
    வென்னீர் பழக்கஞ்செய் நோயுற்றும்
எளியராகுஞ் சவலைக்குத் தேற்றுந்
    தாயென வருஞ் சரபேந்திரனியல் பிதே. (சுஉ)

(இ-ள்)

கடுக்காய் — 5
மிளகு — 1 உழக்கு (பட்டணம்படி $\frac{1}{8}$)
கடுகு ரோகிணி 2 வராகனிடை
கருஞ்சீரகம் — $\frac{1}{4}$ பலம்
திப்பிலி — ,,
சுத்திசெய்த நேர்வாளம் ,,
வாய்விடங்கம் $\frac{1}{2}$ ,,

ஷை சரக்குகளைப் பொன்நிறமாக நன்கு வறுத்துப் பொடி செய்து வெல்லம் சேர்த்து ஆமணக்கெண்ணெய் விட்டு மந்தாக் கினியாக எரித்து லேகியம் செய்து ஒரு வேளைக்குப் புளியங் கொட்டையளவு சாப்பிட குன்மம் தீரும். மூக்கால் மண்டலம் சாப்பிட வயிற்றிலுண்டான கண்டிப்புத்தீரும்.

பத்தியம் :— புளி, உப்பு, கசப்பு, புகையிலை நீக்கவும். வென்னீர் உபயோகிக்கவும்.

---

## 43. குன்மாதிக்கு நரசிங்க ரசாயனம்

கொடுவேலிவேர் செங்கொட்டை யிருவகைக்
கூறு முப்பத்திரண்டு பலம் ரெட்டித்
திடு சதாவரிமூல நெரிஞ்சிக்கா
யிதுவகை யொன்றுக் கெண்பலமாய் நிறு
நெடுநிலப் பனைமூல நாலைந்திது
நேர்பலந் தேன்பலம் பதினாறது
விடு பசுநெய் பலமெட்டுச் சீனியு
மேற்பல மிருபத்தைந்து மீட்டுமே (கூரு)

மீட்டிதெல்லாமிடித்து நெய் தேன் சீனி
விடு கலந்தொருநெய்ப் பானையில் வைத்து
நாட்டிலிந் நரசிங்கரசாயன
நாமங்கொள்ளதிகாலையு மாலையுங்
கூட்டிரண்டு வராகனிடை வீதங்
குன்ம மஞ்சுமகோதரம் பாண்டுவுங்
கொட்டி வாதம் பித்தங் கபக்கூட்டமுங்
குட்ட மூவாறுந்திக் கட்டி தீருமே (கூச)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த கொடிவேலி வேர் / ,, சேங்கொட்டை | இவை வகைக்கு 16 பலம் |
| தண்ணீர் விட்டாங்கிழங்கு | — 64 பலம் |
| நெரிஞ்சிக்காய் | — 8 பலம் |
| நிலப்பனைக்கிழங்கு | — 20 பலம் |
| தேன் | — 16 பலம் |
| பசுநெய் | — 8 பலம் |
| சீனி | — 25 பலம் |

ஷை சரக்குகளை நன்கு சூரணம் செய்து நெய், தேன், சீனி இவை ஒன்றுபடக் கலந்து ஒரு நெய்தடவிய பானையில் வைக்கவும். இதன் பெயர் நரசிங்கரஸாயனம். காலையிலும் மாலையிலும் 2 வராகனிடை வீதம் சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள்:—

1. ஐந்துவித குன்மங்கள்
2. மகோதரம்
3. பாண்டு
4. வாதம், பித்தம், கபம் என்னும் திரி தோஷங்கள்
5. பதினெட்டுவகைக் குஷ்டரோகங்கள்
6. வயிற்றுக்கட்டி

# 44. குன்மாதிக்குக் குக்குலாதி குளிகை

## சந்தம் வேறு

சிந்திற்றண்டு மேற்றோறிருத்தியதை
சிறுகவே நறுக்காறைந்தும்
ஏய்ந்திரண்டு பலமாம் பதக்கு நீர்
இட்டுக்குக்கில் பலமைந்துடன்
றேய்ந்தாப் பொடியிட்டுந் திரிபலை
சேரிரு பலங்குறுணியாய்க்
காய்ந்த நீர் கிட்டிகட்டிப் பிழிகொண்டு
கைபழக்கிடுஞ் சட்டியே (௬௫)

சட்டிக்குள்ளிட்டுக் காய்ச்சிப் பாகுபதந்
தன்னிற் றிரிபலை யிருவராகனும்
இட்டிடை திரிகடு வராகனிடை
யிரு மூன்றுஞ்சிவதை யொன்றரை
கட்டிடை வராகனிடை யிட்டுமேற்
காட்டிறுமணக்கின் பருப்
பொட்டிய பலமொன்றரையுடனும்
உற்ற வாய்விளங்கமுமிடேன் (௬௬)

பலமிரண்டரை யிதையிடி வடிப்
பண்ணிமுன்ன முதசர்க்கரை
நலமிரண்டரைப் பலமுரைந்திட
நல்ல மேற் பொடித்தூவியே
கலமெழுகு பதங்காண கப்பையிற்
கட்டிடாமலுந் துளாவியே
விலகிற்க்கொரு வராகனுசவிலட
விட்டுங் குளிகையுமிட்டிடேன் (௬௭)

ணவத்துக்கொண்டுடலஞ் சுத்திசெய்து பின்வாங்கழாக்குப்
பசும் பாலிலே
உத்தொரு குளிகை துய்த்து மண்டலமுமுட்கொளக்குன்
மஞ்சோகை
பௌத்திரங் குட்டஞ் சிலந்தி பாண்டுகளோட்டு மேக
மெலும்புருக்கியும்
பத்தியமிரு மக்கினி மந்தம் பார்ரோகமெல்லாந் தீருமே.
(சூஅ)

(இ-ள்)

சீந்தில் கொடியைக் கொண்டுவந்து, மேல் தோலை நீக்கி, சிறு துண்டுகளாக நறுக்கி 32 பலம் எடை அத்துண்டுகளை எடுத்துக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| குக்கில் | — | 5 பலம் |
| தேய்ந்த இரும்புத்தூள் | | 2 பலம் |
| கடுக்காய் | இவை மூன்றுஞ் சேர்ந்து 2 பலம் | |
| நெல்லிக்காய் | | |
| தான்றிக்காய் | | |

ஷை 6 சரக்குகளையும் இரண்டு மரக்கால் ஜலத்தில் போட்டு ஒரு மரக்கால் அளவுக்குச் சுண்டக் காய்ச்சவும். சக்கைகளைக் கிட்டி கட்டிப் பிழிந்துகொண்டு, கஷாயத்தை ஒரு பழகிய சட்டியில் ஊற்றவும். பின்பு கஷாயத்தைக் காய்ச்சிப் பாகுபதத்திற்கு வரும்போது,

| | | |
|---|---|---|
| கடுக்காய் | இம்மூன்றும் சேர்ந்து 2 வராகனிடை | இவைகளை நன்கு இடித்து வஸ்திரகாயம் செய்து அதனுடன் சேர்த்து |
| நெல்லிக்காய் | | |
| தான்றிக்காய் | | |
| சுக்கு | 2 வராகனிடை | |
| திப்பிலி | ,, | |
| மிளகு | ,, | |
| சிவதை | 1½ ,, | |
| காட்டாமணக்கின் பருப்பு | 1½ பலம் | |
| வாய்விளங்கம் | 2½ பலம் | |
| சீந்தில்சர்க்கரை | 2½ பலம் | |

இவற்றை மேலேசொன்ன பாகில் போட்டுக் காண்டியில் ஒட்டாவண்ணம் மெழுகுபதத்தில் இறக்கவும். பிறகு அதை ஒரு வராகனிடை எடையுள்ள குளிகைகளாக உருட்டிக் கொள்ளவும். எண்ணெ தேய்த்து ஸ்நானம் செய்து மற்றொரு நாள் பேதிக்கும் சாப்பிட்டு உடம்பை சுத்திசெய்துகொண்டு உழக்குப் பசும்பாலில் தினம் ஒரு குளிகைவீதம் 45 நாட்கள் சாப்பிடவும்.

இதனுல் தீரும் வியாதிகள் :—

1. குன்மம்
2. சோகை
3. பௌத்திரம் (பகந்தரம்)
4. குஷ்டம்
5. நரம்புச்சிலந்தி
6. பாண்டு
7. ஒட்டுமேகம்
8. எலும்புருக்கி
9. அக்கினிமந்தம்

இச்சா பத்தியத்துடன் இருக்கவும்.

---

# 45. குன்மாதிக்கு மருந்து

கெந்தக மனேசிலையுந் திப்பிலி கேளுஞ் சாதிலிங்கமிரதமும்
இந்துப்பு மிதுவகைக்கு முக்கழஞ்சிட்டரை பொடிகாந்தமும்
வந்தறுகழஞ்சொருவகைக்கிடு மற்றுங்குமரியால் மத்தித்தே
இந்தமாமருந்திருப்பு வட்டிலிலேற்கத்தேங்காய் போற்
பூசமே. (கக)

பூசிவட்டிலைப் புழுங்கல் நெல்லினுட்போட்டு நாலுநாட்புதைத்
தெடுத்
தாசி பணவிடை மதுவிலாவது வாவின் வெண்ணெதனிலாவது
பேசிய வெல்லக்கட்டியாவதிற் பெற்றதிலீட விட்டிடும்
பாசிசேர் குன்மமெட்டும் பீலிகை பாண்டு சோகை முதற்
றீருமே (உ)

(இ-ள்)

சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் }
,, மனோசிலை }
திப்பிலி } இவை வகைக்கு
,, லிங்கம் } 3 கழஞ்சு
* ,, பாதரஸம் }
பொரித்த இந்துப்பு }

சுத்தி செய்த அரப்பொடி 6 கழஞ்சு
சுத்தி செய்த காந்தப்பொடி 6 கழஞ்சு

இவைகளைக் கல்வத்தில் போட்டு கற்றாழைச் சாற்றால் நன்கு அரைத்து ஒரு இரும்பு வட்டிலில் ஒருவிரல் கனத்திற்குத் தேங்காய் மூடியுள் இருப்பதுபோல் பூசவும். பின்பு இதைப் புழுங்கல் நெல்லினுள் நான்கு நாட்கள் புதைத்துவைக்கவும்.

வட்டிலில் உள்ள மருந்தை எடுத்துப்பொடி செய்து ஒரு பணவிடை தேனிலாவது, பசு வெண்ணெயிலாவது அல்லது பனைவெல்லக்கட்டியிலாவது உட்கொள்ளவும்.

1. குன்மம் எட்டுவகை
2. பீலிகை எனும் மண்ணீரல் வீக்கம்
3. சோகை
4. பாண்டு

இவை தீரும்.

---

* பாதரஸம் - 4 கழஞ்சு என உரையில் காணப்படுகிறது.

# 46. குன்மாதிக்குத் தாம்பிர பற்பம்

செம்பரப்பொடியை யிருகழஞ்சிரதங் கெந்தியவ்வளவிடும்
இம்பரப் பொடியிலு முழக்குடனிதுகளும் பொடிவெற்றிலை
அம்பினாற் குழைத்ததையோர் செங்கலையழகு மடலெனக்
குழிசெய்தே
தம்பினூமத்திலை தனையரை குழியிற்றடவிக்குழை மருந்தை
யுமிடேன். (௱௧)
இட்டு முற்படிப்பூசியோர் செங்கலிணையமூடி மண்சேலைசெய்
தொட்டுங்கெச புடமிட்டேயாறியெடுந்தூயபற்பமிது
நேத்தியாம்
எட்டுக்குன்மங்கள் தீர்க்குந் தேனிலிடுமிலது கருப்புட்டி
தனிலிடும்
விட்டுவாத குன்மந்தீர விஞ்சிரசமேனிக்கொள்ள நலமெத்தவே
(இ-ள்) (௱௨)

| | | | |
|---|---|---|---|
| சுத்தி செய்த | தாமிரம் ராவிய பொடி | — | 10 கழஞ்சு |
| ,, | பாதரஸம் | — | ,, |
| ,, | கந்தகம் | — | ,, |
| ,, | இரும்பு அரப்பொடி | — | 1 உழக்கு |

இவற்றைக் கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாற்றினால் ஒன்று பட அரைத்து உருட்டி வைத்துக்கொள்ளவும்.

ஓர் செங்கல்லில் குழியொன்றைச் செய்து அந்தக்குழியில் ஊமத்தை இலையை அரைத்துத் தடவி மேற்சொன்ன மருந்தை வைக்கவும்.

ஊமத்தை இலையை அரைத்துத் தடவிய குழியுள்ள மற்றொரு செங்கலை முதல் செங்கலின் மேல் பொருந்தும்படி வைத்துச் சீலை மண் செய்து கெஜபுடம் போடவும். புடம் ஆறியபின் சுத்தமான பற்பத்தை எடுத்து ஓர் அரிசியிடை அளவு தேனிலாவது, பனை வெல்லத்திலாவது சாப்பிட எட்டு வகைக் குன்மங்கள் தீரும்.

இஞ்சி ரசத்தில் சாப்பிட வாதகுன்மம் நீங்கும்.

# 47. குன்மாதி பலவகைக்கு மருந்து

தவளக்குங்கிலியத்தூள் கடுக்காயுந்தஞ்சை நகரக் கிட்டந்
தான் பொடி
துவள வகைக்கொரு சேர தாயிடுந்துளசியஞ்சிலை நொச்சியும்
பவள முறுக்கிலை யூமத்தினிலை பருத்தியிலையுத்தாமணியிலை
நவமதாறு வகையொன்றுஞ்சேரொன்றுரசமும் வாங்கி
யிரதமுமிடேன். (௩௩)

இடுமுன்றானையுவிந்தச்சாற்றினுலிட்டுத்துழவிது பிசினைநேர்
எடுகிண்டியதைத் தூதுவளங்கனியென்னக்குளிகை
செய்தே நெயில்
அடுகருப்புட்டியாதலனு பானமாகுங் கெடும் பலகுன்மமும்
விடுமே பலவித நோயுந் தீருமென்று விளம்பினன் சரப
வேந்தனே. (௩௪)

(இ-ள்)

| | |
|---|---|
| வெள்ளைக்குங்கிலியத் தூள்<br>கடுக்காய்<br>வல்லத்துக் கிட்டான் தூள் | இவை வகைக்கு 1 சேர் |

| | |
|---|---|
| துளசி<br>அஞ்சிலை நொச்சி<br>செம்முருக்கு இலை<br>கரூமத்திலை<br>பருத்தி இலை<br>உத்தாமணி இலை | இவற்றின் சாறு வகைக்கு 1 சேர் |

சுத்தி செய்த பாதரசம் 1 சேர்

முதலிற் சொன்ன 3 சரக்குகளை இடித்துப் பாதரஸத்துடன் சேர்த்து ஷை சாறுகளை விட்டுத்துழாவி, அடுப்பிலேற்றிப் பாகு பதத்தில் கிண்டி யிறக்கவும்.

இதைத் தூதுவிளங்காய் அளவாக மாத்திரைகள் செய்யவும். இதைக் கருப்புட்டி (பனைவெல்லம்) யில் சாப்பிட எட்டு குன்மங்களும் தீரும்.

# 48. குன்மாதி சகலத்துக்கும் மருந்து

உள்ளி சாரணைமூலமிரு வகை யொன்றுக்கொரு
பலமாஞ்சதிரக்
கள்ளிப்பால் குத்தி மேலணிரத்திது கந்த மூலத்தினுள்
வைத்தே
ஒள்ளெரிப் புடமிட்டரைத்த பினுற்றதான்றிக்காயள
வுண்டை
வள்ளிதாய்ச் செய்து கஞ்சியிற்கொடு வயிறுபோகக் குன்ம
மாறுமே. (௭௫)

சகல குன்மமுந்தீர்க்கு மிம்முறை தருமருந்திலைரோசிகம்
நிகழுமாகிற் கூழ்காய்ச்சி மூன்று நாள் நேர்குடித்திடவும்
பார் நலம்
பகலவனிகராகப் புவிதனிற் பார்நோயிருட்குறும்பினை
யகலப்போக்கி மனுமுறையைப் பாலனஞ்செயண்ணற்
சரபப் பெருமான் சொலே (௭௬)

(இ-ள்)

| | |
|---|---|
| பூண்டு<br>வெள்ளைச்சாரணை வேர் | இவை வகையொன்றுக்கு<br>1 பலம் எடுத்து |

சதுரக்கள்ளிப்பால் விட்டரைத்து அதைக் கருணைக்கிழங்கினுள்வைத்துப் புடமிட்டுப் புடமாறியபின் அதை நன்கு அரைத்துத் தான்றிக்காயளவு உருண்டைகள் செய்யவும். கஞ்சியில் இவ்வுருண்டையைச் சாப்பிட நன்கு பேதியாகிக் குன்மந் தீரும்.

அரோசிகம் ஏற்பட்டால் 3 நாட்கள் கூழ் சாப்பிடவும்.

## 49. குன்மாதிக்குப் பஞ்சலவணச் சூரணம்

எருக்கின் பூப்பிடியிரண்டுங் கல்லுப்பிரு பலங்கழற்
கோடிவிதை
எருக்கம் பழுப்பிருவகைக் கோரன்பதாயிதை யோர்கல
சத்துளிட்டுமேற்
பொருதகவோடிட்டு மூடிச் சேலை மண்பொதிந்து செய்
துங் கள்ளிவிறகினல்
எரிக்க மூன்று நாட் பற்பம் பல குன்மமேகுந் தேனிற்றின
மிருவதே (௱எ)

(இ-ள்)

எருக்கின் மொட்டு — 2 பிடி
கல்லுப்பு — 2 பலம்

கழற்கோடிவிதை }
எருக்கம்பழுப்பு } இவை வகைக்கு 50

இவற்றை ஓர் பானையில் போட்டு, அதன் வாயை மற்றோர் மூடிகொண்டு மூடி சீலை மண்செய்து அடுப்பின் மேலேற்றிக் கள்ளிக் கட்டை விறகினல் மூன்று நாள் எரிக்கவும். இதை இருபதுநாள் வெருகடிவீதம் தேனில் சாப்பிடக் குன்மம் தீரும்.

---

## 50. குன்மாதி குடாரம்

இரதங்கெந்தக நாவிதாளகமிடு நேர்வாளம் வெண்காரமுந்,
திரிபலா திரிகடுகி தாவதுஞ் சேரக்கூட்டி திற் பாதியாய்த்
தரு நேர்வாளமுஞ் சுட்டுச் சாம்பலது தானும் பாதியிஞ்சிச்
சாற்றிலே
ஒரு நாள் விட்டரை குன்றி நிகருண்டை
யுருட்டி நிழலுலர்த் தெடுத்திடேன். (௱அ)

எடுத்தோருண்டையை யிஞ்சிச்சாற்றினில்
இடலாங்குன்ம மென்றதுக்கெலாங்
கடுத்து மண்டலங் கொள்ளு நாட்
கழிந்ததுக்கிரண்டு மண்டலங்கொளும்
படுக்குமோர் தயிர் பாலுஞ்சேர்த்துப் புளி பத்தியக்
கைப்புத் தள்ளிடு
சடுத்தம் பேசி குன்மநோயைப் போக்குமுறை
சாற்றினர் சரபவேந்தனே. (௱௬)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரசம் | இவை வகைக்கு 1 பலம் |
| ,, நெல்லிக்காய்கந்தகம் | |
| ,, நாபி | |
| ,, தாளகம் | |
| ,, நேர்வாளம் | |
| பொரித்த வெண்காரம் | |
| கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் | இவை மூன்றுஞ்சேர்ந்து 1 பலம் |
| சுக்கு, மிளகு, திப்பிலி | ,, |

இவைகளை நன்ருக அரைத்து இவைகளின் மொத்த எடையில் பாதி எடை (4 பலம்) நேர்வாளஞ் சுட்ட சாம்பலைச் சேர்த்து, 2 பலம் ($\frac{1}{4}$ சேர்) இஞ்சிச்சாற்றிலே ஒரு நாள் அரைத்து ஒரு குன்றுமணி அளவாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். தினம் ஓர் உருண்டைவீதம் இஞ்சிச் சாற்றில் 45 நாட்கள் சாப்பிட குன்மந் தீரும்.

நாள்பட்ட குன்மந் தீர 90 நாட்கள் சாப்பிடவும்.

பத்தியம் 1. மோர், தயிர், பால் சேர்க்கலாம்
2. புளிப்பு, கசப்பு நீக்கிவிடவும்

# 51. குன்மாதிக்குக் குமரிபற்பம்

ஒரு கழஞ் சிரதமைங் கழஞ்சிய்யமுற்ற பொடியது
மனேசிலை
இரு கழஞ்சி கெந்தியிடுங் கழஞ்சிரண்டு மிதைநிறுங்
குமரிச்சாற்றினல்
ஒருமையாம் மைப்போலரைத்திதை யோட்டுங்கல்
வத்திலப்பியே
பரிதிமுன் வைக்கப்பற்பமாகிடும் பருங்கடுக்காய்த்தூள்
முப்பங்கே (௱ய)

பங்கிரண்டிடுமிந்து லவணமும் பார் மிளகுஞ்சுக்குத்
திப்பிலி
இங்கிம் மூன்றுந்தூளிரண்டு பங்கிட்டு மிவையுமுந்தின
பற்பத்தின்
நங்கலந்து கரிசாலை நீரொரு நாளெலா மரைத்துருட்டிடுந்
தங்கமாத்திரையொரு வராகனிடை தக்கதொன்று
மிஞ்சிச் சாறிதே (௱யக)

பஞ்சகோசலத்தாதல் குடிநீரிர் பலநோய் கண்டனு
பானத்தில்
மிஞ்சிடாமற் கொடுசகல குன்மங்களும் விட்டுக்
கூட்டுடனே விழும்
அஞ்சிமூலமும் பீலிகைக்குட்டமக்கினிமந்தமுதரநோய்
கொஞ்சம் வெட்கிக் குடிபோகும் விடதங்கொள்ளு
நாட்குடிநீர்க் கொள்ளேன். (௱யஉ)

புங்கம் பட்டை யகிற்பட்டை சாறணைப்புதுவேர் கொடி
வேலி வேருடன்
றங்குந்திப்பிலி மிளகுசுக்கது சைந்தலவணங் கடுக்காயிடும்
பங்குஞ்சம நிறுத்திது கடாயமிட்டுப் பருகிராவினிற்
பத்தியந்
திங்கும் புளிகைப்புத்தள்ளிடச் சகலதீவினைப் பிணிக
டீருமே, (௱யங)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | — 1 | கழஞ்சு |
| ,, வெள்ளீயத்தூள் * | — 5 | ,, |
| ,, மனோசிலை | — 2 | ,, |
| ,, நெல்லிக்காய் கெந்தகம் | — 2 | ,, |

இவற்றைக் கல்வத்தில் போட்டுச் சோற்றுக் கற்றாழைச் சாற்றினால் நன்கு மைபோல அரைத்து, கல்வத்திலேயே அப்பி வைத்து வெய்யிலில் வைக்கவும். அது பூத்து பஸ்பமாகிவிடும். பின்பு பஸ்பத்திற்கு மூன்றுபங்கு கடுக்காய்தூளும், 2 பங்கு பொரித்த இந்துப்பும்,

மிளகு
திப்பிலி
சுக்கு
} இவை மூன்றுஞ்சேர்ந்து, பஸ்பத்தில் இரண்டுபங்கும்

எடுத்து, இவை யாவற்றையும் கையாந்தகரைச் சாறு விட்டு ஒரு நாள் அரைத்து இதை ஒரு வராகனிடை நிறையுள்ள குளிகைகள் செய்து, தினம் ஒரு குளிகை இஞ்சிச் சாற்றிலேனும் அரிசித்திப்பிலி, கண்டந்திப்பிலி, சவ்வியம், கொடிவேலி வேர், சுக்கு இவை ஐந்தின் கஷாயத்திலாவது அல்லது நோய்க்குத் தகுந்த அனுபானத்திலாவது கொடுக்க சகல குன்மங்களும் தீரும்.

இவை தவிர இம்மருந்தினால் நீங்கும் நோய்கள் :—

1) மூலம்
2) பீலிகை யெனும் மண்ணீரல் வீக்கம்
3) குஷ்டம்
4) அக்கினிமாந்தம்
5) வயிற்றுநோய்கள் இவை தீரும்.

---

* 80 நம்பர் சுவடியில் 'அரப்பொடி' என்று காணப்படுகிறது.

மருந்து சாப்பிட்ட அன்றைய ராத்திரி அடியில் கண்ட கஷாயம் சாப்பிடவும் :—

புங்கம்பட்டை
அகில்பட்டை
வெள்ளைச்சாறணை வேருடன் கூடியது
கொடிவேலிவேர்
அரிசித்திப்பிலி
மிளகு
சுக்கு
பொரித்த இந்துப்பு
கடுக்காய்

இவை வகைக்கு 1 பலம் எடுத்து, இவைகளின் மொத்த அளவுக்கு 16 பங்கு தண்ணீர் விட்டு, எட்டில் ஒரு பங்காக வற்றக் காய்ச்சிடவும்.

இதை இரவில் சாப்பிடவும்.

பத்தியம் புளிப்பு, கசப்பு தள்ளப்படவேண்டும்.

---

# 52. குன்மாதிக் குடாரம்

கெந்தகமரிதார மிரதமுங் கேளுந்தாம்பிரப்பற்பமுந்
தந்திரிபலை திரிகடு மனோசிலை வெண்காரமிவை
சமங்கொண்டு
முந்திரட்டி நேர்வாளங் கூட்டெடலா மூலைக்கையாந்தகரைச்
சாற்றினு
லிந்த மருந்தொரு நாளெலா மரைத்திடு குன்றியிடை
குளிகையே (௱௰௪)

கட்டுங்குளிகையை நிழலுலர்த்திவை கடிய விஞ்சிரசந்
தன்னிலே
எட்டுவகைக் குன்மந்தீரும் ரோகத்தினினமறிந்தனு
பானங்கள்
தொட்டுங்கொடுமுந்தி நோயுமுப் பிசங்கள் சூழுங்
காய்ச்சல் வெப்புப்பாவையுங்
கெட்டும் பீலிகை யகுவையுடன் மந்தாக்கினி கடீரு
மண்டலங்கொளேன் (௱௰௫)

(இ-ள்)

சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் }
,, தாளகம் } இவை வகைக்கு 1 பலம்
,, பாதரசம் }
,, தாம்பிர பற்பம் }

சுக்கு }
திப்பிலி } இவை மூன்றுஞ் சேர்ந்து 1 பலம்
மிளகு }

கடுக்காய் }
நெல்லிக்காய் } ,,
தான்றிக்காய் }

சுத்திசெய்த மனோசிலை }
பொரித்த வெண்காரம் } இவை வகைக்கு 1 பலம்

நேர்வாளம் (சுத்திசெய்தது) 16 பலம்

இவைகளைக் கல்வத்தில் போட்டு இளங் கையாந்தகரைச் சாற்றினால் ஒரு நாள் அரைத்து, குன்றுமணி அளவுக்கு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

இதைத் தினந்தோறும் ஒரு மாத்திரை வீதம் இஞ்சிச் சாற்றில் சாப்பிட எட்டுவகைக் குன்மங்களும் தீரும்.

ரோகத்தின் தன்மையறிந்து தகுந்த அனுபானத்தில் கொடுக்க வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், வெப்புப்பாவை, பிளீகம், அகுவை (அரையாப்பு) மந்தாக்கினி இவைகள் 45 நாளில் குணமாகும்.

---

# 53. குன்மாதிக்குக் குமரிப்பற்பம்

அயப்பொடியிரு பத்தஞ்சுகாசிடையதனிற் பாதிகெந்தகத்
துடன்
நயப்பிரு கழஞ்சிரதங் காந்தமுந்நாட்டுமுக் கழஞ்சி
நானெலாம்

பயப்பிடுங் குமரிச்சாற்றினேக வரைப்பதையோவெரு
முட்டையகலமாங்
கயப்படத்தட்டிக் கலசத்தோட்டினடு காண்வைத்து
மேல்மூடிடேன் (௱௰௬)

மூடிப்பின் பரிதிமுகத்திற்சாமமொன்று மோடிவைக்கவது
பற்பமாங்
கூடத்திரிபலை திரிகடுகுமேற் கூறுஞ்சீரக மிரண்டுடன்
நாடிந்துப்பு விழாலரிசி யிதுநடை வராகனிடை வகைக்
கொன்றுங்
தேடிப்பொடிசெய்து முன்மருந்துடன் சேர்த்துங் கல்
வத்தரைத்திடேன் (௱௰௭)

எடுத்தோர் காசிடைகொடுப்பாய் குன்மத்துக்கேற்ற
குடிநீரிலாகுதற்
கடுத்திடிஞ்சியின் சலத்திலாவது கலந்துண வெட்டுக்
குன்மத்தைத்
தடுத்திடு முந்திப் பொருமற் கிராணியைத் தம்பித்தக்
கினியின் மந்தமும்
அடுத்த நோய்களெல்லாந்தீரு மிம்முறையை யறியச்
செய்தான் சரபேந்திரனே (௱௰௮)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த இரும்புத்தூள் | | — | 25 காசிடை |
| ,, | நெல்லிக்காய் கந்தகம் | — | 12½ ,, |
| ,, | பாதரஸம் | — | 2 கழஞ்சி |
| ,, | காந்தம் | — | 3 ,, |

இவை யாவையும் ஒரு கல்வத்திலிட்டு சோற்றுக் கற்றாழைச் சாறுகொண்டு நன்கு அரைத்து ஒரு எருமுட்டை அகலம் அடையாகத் தட்டவும். பின்பு இதை ஒரு கலசத்தில் வைத்து மேலே சில் கொண்டு மூடி வெய்யிலில் ஒரு ஜாமம் வைக்கவும். இப்படி வைத்திடப் பூத்து பஸ்பமாகும் இதனோடு

கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்

சுக்கு
திப்பிலி
மிளகு
சீரகம்
கருஞ்சீரகம்
இந்துப்பு
விழலரிசி

இவைகள் வகைக்கு ஒரு வராகனிடை எடுத்து நன்கு சூரணம் செய்து முன் எடுத்த பஸ்பத்துடன் சேர்த்துக் கல்வத்தில் அரைத்துக்கொள்ளவும்.

இம்மருந்தை ஒரு காசிடை குன்மத்திற்கேற்ற கஷாயத்திலாவது, இஞ்சி ஸ்வரஸத்திலாவது உட்கொள்ள,

இதனால் தீரும் வியாதிகள்.

1) குன்மம்
2) வயிற்றுப்பொருமல்
3) கிராணி
4) பித்த அக்கினி மந்தம்

---

# 54. குன்மாதிக்கு குடாரம்

இரதந்தாம்பிரபற்பங் கெந்தகமேற்றநாவி காந்தச் சூரணந்
திரிபலாதி கருஞ்சீரகங்கடுகுஞ் சித்தராதி வேரின் பட்டையுந்
திரிகடுகுடன் கடுகுரோகணி சீரகமு மெவட்சாரமும்,
பரவு வாய்விளங்கஞ் சத்திச் சாரமுடன் பஞ்சலவணம் வெண்
காரமே (ஙய)

இதையெலாஞ் சமங்கொண்டு சூரணித்திதிலும்
பாதிநேர்வாளமாம்
இதனிற் பாதியாயெட்டியினில் விரைபிட்டெலாங் கொண்டு
சூரணித்
ததையுமாதளம் பழரசத்துளு மஞ்சுதின நனைத்துலர்ந்தபின்

உதயமேழு நாட்கரிப்பானீரினுளூட்டி நனைத்துலர்ந்தெடுப்பதே (௭௨௰)

எடுத்துஞ் சூரணஞ்செய்து குப்பியிலிட்டடைத்திரு குன்றிநேர்
கொடுத்திடிஞ்சியிரதத்தினுலாவது கோவிநெய்யிளவெந்நீரினும்
அடுத்து வெல்லத்திலு மனுபானங்கொள்ளுமட்ட குன்மங்களுஞ்சூலையும்
விடுத்திடுங் குளிர் மாறலாதியாய் விடமக்காய்ச்சலெல்லாந் தீருமே. (௭௨௧)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்தி செய்த பாதரசம் | 1 பலம் |
| தாமிர பற்பம் | ,, |
| சுத்தி செய்த நெல்லிக்காய்கந்தகம் | ,, |
| ,, நாபி | ,, |
| ,, காந்தப் பொடி | ,, |
| கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் | இவை மூன்றுஞ் சேர்ந்து 1 பலம் |
| கருஞ்சீரகம் | ,, |
| கடுகு | ,, |
| கொடிவேலி வேர் பட்டை | ,, |
| சுக்கு, மிளகு, திப்பிலி | இவை மூன்றுஞ் சேர்ந்து 1 பலம் |
| கடுகுரோகிணி | ,, |
| சீரகம் | ,, |
| யவக்ஷாரம் | ,, |
| வாய்விளங்கம் | ,, |
| சக்திக்ஷாரம் | ,, |
| இந்துப்பு, கடல்உப்பு, வளையலுப்பு, உவர்மண் உப்பு, அட்டுப்பு | இவை ஐந்தும் சேர்ந்து 1 பலம் |
| பொரித்த வெண்காரம் | ,, |

இவை வகைக்கு 1 பலம் எடுத்து, சுத்தி செய்த நேர்வாளம், $8\frac{1}{2}$ பலமும் சேர்த்துப் பொடி செய்யவும். இந்தப் பொடியுடன் சுத்தி செய்த எட்டி விதை $4\frac{1}{4}$ பலமும் சேர்த்து மாதுளை ரஸத்தில் 5 தினங்கள் ஊற வைத்து உலர்ந்தபின் கரிசாலங்கண்ணிச் சாற்றில் ஏழு நாட்கள் அதிகாலையில் ஊறவைத்து உலர்த்த வேண்டும்.

உலர்ந்தபின், அவற்றைப் பொடி செய்து ஒரு சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

இச்சூரணத்தைத் தினம் 2 குன்றுமணி எடை இஞ்சிச் சாற்றிலாவது, பசு நெய்யிலாவது, வெல்லத்திலாவது வெந் நீரிலாவது தகுந்த அனுபானத்தில் கொடுக்கப் பின்கண்டநோய் கள் தீரும்.

1. எட்டுவித குன்மங்கள்
2. சூலை
3. குளிர் ஜுரம்
4. விஷமக் காய்ச்சல்

இது ஒரு சம்பிரதாயமான சூரணம் என்று 80ம் நெ. சுவடி யில் சொல்லப்பட்டிருக்கிறது.

---

# 55. குன்மாதி பதினெட்டுக்கும் பஞ்சலவணச் சூரணம்

பஞ்சலவணத் திலொன்றுக் கொருபடி பகருஞ்
சதிரக்கள்ளியதனையே
நைஞ்சிறுக வரிந்ததுவுமுப்பளவு நாட்டிடொரு புதுப்
பானையுள்
மிஞ்சிக் கள்ளிப்பொடி முன்பரப்பிடது மேலுமிலவணந்
தூவியே
பஞ்சலவணங் கள்ளிப்பொடியுநிரை நிறைபானையடை
படமூடிடேன். (கஉஉ)
மூடிப்பானைவாயோடு செம்மியதை மொய்மண்சேலை
செய்மூதெரி
யாடியறுபது நாடி சென்றவுடனுறி யெடுத்தந்தப்
பற்பத்துள்
கூடி மேன்மருந்தோமந்திப்பிலி குறுமிளகும் வகைப்
பலமொன்றாய்த்
தேடியிளவறுப்பாய் வறுத்து முற்செய்த பற்பத்துடன்
சேர்த்திடேன். (௩உ௩)

சேர்த்திரண்டையுங்கூட்டி நேகப்பொடிசெய்து புதுக்
கலசத்துள்ளே
கார்த்துவைத்துக்கொண்டுதய காலத்தொரு காசிடை
நிறுத்துட்கொள்வெந்
நீர்த்துய்த்திப் படியேழு நாட்செல நின்ற பகைவருஞ்
சேனையைப்
போர்த்தொழில் சரபங்கொன்ற சிங்கம் போற்போகும்
பதினெட்டுக் குன்மமே. (௭௨௪)

(இ-ள்)

| | |
|---|---|
| இந்துப்பு<br>கடலுப்பு<br>விளையலுப்பு<br>அட்டுப்பு<br>உவர்மண்உப்பு | இவை வகைக்கு 1 படி |

சதுரக்கள்ளி (வேருடன்) சிறுக நறுக்கியதூள் 5 படி. ஒரு புதுப்பானையில் முதலில் இந்துப்பைப்போட்டு அதின்மேல் நன்கு அரியப்பட்ட சதுரக்கள்ளியை ஒரு படி போட்டு, அதன் மேல் ஒரு படி கடலுப்பைப்போட்டு மறுபடியும் சதுரக்கள்ளி 1 படியைப் போடவும். அதின்மேல் விளையலுப்பு 1 படி போட்டு சதுரக்கள்ளியைப்போடவும். இதே முறையில் மற்ற உப்புக்களையும் போட்டு பானை நிறைந்த பின்பு அதன் வாய்க்குத் தகுந்தபடி ஒரு மூடியிட்டுச் சீலைமண் செய்யவும்.

பின்பு இதை ஓர் அடுப்பிலேற்றி 60 நாழிகை (ஒரு நாள்) எரிக்கவும். ஆறியவுடன் அந்தப்பற்பத்தை எடுத்துக் கீழ்க் கண்ட சூரணத்தை சேர்த்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| ஓமம்<br>திப்பிலி<br>மிளகு | இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்துப் பொன் வறுவலாய் வறுத்துச் சூரணித்துக் கொள்ளவும். |

பற்பத்தையும் சூரணத்தையும் சேர்த்து நன்கு அரைத்து ஒரு புதுப்பானையில் வைத்துக்கொள்ளவும்.

இச்சூரணத்தை அதிகாலையில் வெந்நீருடன் ஒரு காசிடை வீதம் எழு நாட்கள் சாப்பிடப் பதினெட்டுவகைக் குன்மங் களும் தீரும்.

## 56. குன்மாதிக்கு மருந்து

வெள்ளெருக்கின் பட்டையிடி மீட்டிவடிக்கட்டித்
தெள்ளிடுநாள் நாழியதிற்சேரசமதாகம்
விள்ளப்புடைத் தாய்ந்திடித்தவ்வீதம் வடிக்கட்டிக்
கொள்ளிரண்டுங் கூட்டுரலுட் கொஞ்சம் பொடியிட்டே. (எ௨ரு)

விட்டுன்குழித்திரதமிட்டு வெற்றிலைச் சாறூட்டித்
தொட்டிடி நன்றாய்க்கருப்புத் தோன்றுமதில் மேற்றூள்
இட்டிடித்தெல்லாமருந்து மேற்றுவைத்துக்கொள்ளும்
அட்டகுன்மந்தீரும் பத்தியம் பசும்பாற் பருப்பே. (எ௨சு)

(இ-ள்) வெள் எருக்கின் பட்டையை உரலில்போட்டு நன்கு இடித்துச் சாற்றை வடிக்கட்டிவிட்டுச் சக்கையில் ஒரு நாழி எடுத்து மறுபடியும் நன்கு தூள்செய்யவும். ஓமத்தை நன்கு தீட்டிப்புடைத்து வெள்ளெருக்கின் பட்டைக்குச் சமமாகச்* சேர்த்து இரண்டையும் நன்கு பொடியாகும்வரை இடிக்கவும். அத்தூளிலே ஒரு பிடி அள்ளி உரலில் போட்டு, நடுவில் குழி செய்து அதில் சுத்திசெய்த பாதரசம் ஒரு பலத்தைப் போட்டு வெற்றிலைச் சாறுவிட்டு நன்றாகக் கருப்பு நிறம் தோன்றும் வரை இடிக்கவும். இந்தப்பொடியுடன் மீதியுள்ள வெள்ளெருக்கின் பொடியையும் சேர்த்து இடித்து வைத்துக் கொள்ளவும்.

இச்சூரணத்தைத் தினம் ஒரு காசிடை பசும்பாலுடன் உட்கொள்ள எட்டுவகைக் குன்மங்களும் தீரும்.

**பத்தியம்:** பாசிப்பருப்பும் பாலும் உபயோகப்படுத்தவும்.

* 80 நம்பர் சுவடியில் ஓமம் மூன்றுபலம் என்று கண்டிருக்கிறது.

---

## 57. குன்மாதி மருந்து

இலைக்கள்ளியிலைப் பலமுமீரிரண்டோர் சட்டி
நிலைக்கடி பரப்பதின்மேல் ரெண்டுபல முப்புங்
கலைக்கதிரின் மேல்வைத்த பின்னுங் கள்ளியிலை மூடித்
தலைக்கு மறுசட்டிகொண்டு தான்கவிழ்த்து மூடிடேன். (எ௨எ)

மூடிடும் விளிம்பு சுத்தி மொய் மண் சேலை செய்தே
கூடியடுப்பேத்தி யெரிக்கொள்ள நாலுசாமம்
ஊடியெடு பற்பமிதிலுள்ளி பலமைந்துந்
தேடியிடு சுக்கிந்துப்பு திப்பிலி வசம்பே. (எஉஅ)

ஏலம்பொட்டிலுப்பு மிளகிந்த வகையேழுங்
கோலமொன் றுக்கொன் று பலங்கொண்டசமதாகம்
ஏலும் பலமைந்து மருந்தெல்லாங் கூட்டிப்பாதி
யாலு மிளகறணையின் வேரதின் பட்டையும்பாதி. (எஉகூ)

கூட்டிதெல்லாஞ்சுக்குடி நீர் கொண்டரைகழற்போற்
காட்டிடுண்டை நாகரக்கடாய மிட்டரைத்தே
ஊட்டிடொரு மண்டலமு முப்பும் புளித்தள்ளிக்
கூட்டிக்கெற்பசூலைப் பக்கக்குன்மம் குடிப்போமே.
(எநய)

(இ-ள்) இலைக்கள்ளியிலை நான்குபலம் ஒரு புதுச்சட்டியில் பரப்பி அதன்மேல் இரண்டு பலம் இந்து உப்பைத் தூவி அதன் மேல் திரும்பவும் நான்கு பலம் கள்ளியிலைகளைப் பரப்பி மற்றொரு சட்டியினால் அதன் வாயை மூடிச் சீலைமண் செய்யவும்.

இதை அடுப்பின் மேலேற்றி 4 ஜாமம் எரிக்கப் பற்பமாகும்.

இந்தப்பற்பத்துடன்,

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பூண்டு | 5 பலம் | இவைகளையும் சேர்த்து |
| சுக்கு | 1 பலம் | |
| இந்துப்பு | ,, | |
| திப்பிலி | ,, | |
| வசம்பு | ,, | |
| ஏலம் | ,, | |
| பொட்டிலுப்பு | ,, | |
| மிளகு | ,, | |
| ஓமம் | 5 பலம் | |
| மிளகறணைவேர்ப் பட்டை | $8\frac{1}{2}$ பலம் | |

இவற்றையெல்லாம் சுக்குக் கஷாயத்தில் அரைத்துக் கழற்கோடி அளவு உருட்டவும்.

இந்த உருண்டைகளைத் தினம் ஓர் உருண்டை வீதம் சுக்கு கஷாயத்திலே காலை வேளையில் 45 நாட்கள் சாப்பிடவும். பத்தியம்: உப்பு, புளி தள்ளிவிடவும்

இதனால் தீரும் வியாதிகள் :—

1. கர்ப்பசூலை
2. பக்கசூலை
3. குன்மம்

---

# 58. குன்மாதிக்குக் கோடாசுழிக் குளிகை

வெண்கார நாவி சுக்கு மிளகுகடுக்காயும்
மண் காரண்டிப்பிலி நெல்லி மால் தாரந்தான்றி
பண்காணிரதம் வகைப்பாரொரு கழஞ்சாங்
கண்காணேர்வாள மிடக்காண் களஞ்சிராறே (எஙக)

இவ்வகையெல்லா முருக்கினிலை ரசத்தாலாட்டி
யவ்விழுதைக்குன்றி மணி யளவிற் பிரமாணங்
கவ்வுருண்டை செய்து நிழற் காட்டுலத்தெடுத்து
வவ்வுமட்ட குன்மத்துக்கு மாட்டிஞ்சிச்சாறே (எஙஉ)

சூலைக்காச்சுற் சோகையுந்தித் தோடங்கள் முத்தோடம்
பீலிகை வயிற்றுள் வலிப்பெருஞ் சுவாசங்காசம்
ஏலிவைக்குருண்டையொன்று மிஞ்சிரசத்தூட்டிக்
காலுமஞ்சுக்காச் சலுக்குங்கன்னி மூலைப்பாலே (எஙங)

(இ-ள்) பொரித்த வெண்காரம்
சுத்திசெய்த நாபி
சுக்கு
மிளகு
கடுக்காய்
திப்பிலி
நெல்லிக்காய்
சுத்திசெய்த தாளகம்
தான்றிக்காய்
சுத்திசெய்த பாதரஸம்
} இவை வகைக்கு ஒரு கழஞ்சு

சுத்திசெய்த நேர்வாளம் — 12 கழஞ்சு

இவைகளைக் கல்வத்திலிட்டு முருங்கை இலைச் சாற்றினால் நன்கு அரைத்துக் குன்றுமணி அளவில் மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

இஞ்சிச்சாற்றில் தினம் ஒரு மாத்திரை சாப்பிடவும்.

இதனால் தீரும் வியாதிகள் :—

1. சூலை
2. காய்ச்சல்
3. சோகை
4. வயிற்று நோய்கள்
5. சன்னிபாதம் அல்லது சன்னி
6. பீலிகை
7. பெருஞ்சுவாசகாசம்

வாதம், பித்தம், கபம் முதலிய காய்ச்சல்களுக்கு மாத்திரையை முலைப்பாலில் சாப்பிடவும்.

80ம் நம்பர் சுவடியில் :—
விரேசனத்துக்கு கஞ்சாங்கோரைக் கஷாயத்தில் சாப்பிடவும்.

---

## 59. குன்மாதிக்குத் ததாமிர பற்பம்

தாம்பிரத்தின் றகடீசற்றன்னிற கைப்போலும்
மேம்பட வடித்துப்பல மீட்டுவாய் மூன்றும்
மாம்பிரதமூன்று பலமற்றுங் கெந்திமூன்றுந்
தாம்பலம் பொடித்தொரு கொட்டாங்கச்சியிலிட்டே

(௱௩௪)

இட்டெலும்பிச்சம்பழச் சாறிட்டு மூன்றுநாளுங்
கட்ட வெய்யில் வைத்துப் பற்பங்கண்டபின்பெடுத்து
மட்டொரு சிமிழிலிட்டு வைப்பாய் குன்மம்போக்குந்
திட்டம் பணவிடையுள்ளி தேன்சர்க்கரைகொள்ளேன்.

(௱௩௫)

(இ-ள்) 3 பலம் தாம்பிரத் தகடு ஒன்றை ஈசல் இறகைப்போல் மெல்லியதாக அடித்து,

சுத்திசெய்த பாதரஸம்
" நெல்லிக்காய் கந்தகம் } வகைக்கு 3 பலம்

இம்மூன்றையும் அரைத்து ஓர் கொட்டாங்கச்சியில் வைத்து எலுமிச்சம்பழச்சாற்றை ஊற்றிப் பற்பமாகும்வரை (3 நாட்கள்) வெய்யிலில் வைக்கவும். இதை ஒரு சிமிழில் வைத்துக் குன்மத்திற்கு ஒரு பணவிடை தேனிலாவது, வெள்ளைப்பூண்டுச் சாற்றிலாவது, சர்க்கரையிலாவது உட்கொள்ளவும்.

---

## 60. குன்மாதிக்குக் கோமிய லேகியம்

கோசலத்திலீரெண்படிக் குள்ளிடுங்கடுக்காய்
வீசிடு நூறொன்றிரண்டாய் விள்ளத்தட்டிப் போட்டே
கூசிட நாலொன்றாக்கிக் கொள்ளவத்தக் காய்ச்சிப்
பேசுங்கொடிவேலி சுக்கும் பெருஞ்சிவதை வேரே.
(ளாங-கூ)

ஒரு படி விழாலரிசி யொக்க மூவகைக்குந்
தருவது முக்காசிடையாய்த்தான் பொடித்துத்தூவிக்
குருகும் பதத்தோடிறக்கிக் கொடுக்கவெட்டுக் குன்மம்
இருபது பிரமியங்களிருகாலோச்சற் போமே. (ளாஙஎ)

(இ-ள்) பசுவின் மூத்திரம் 16 படி எடுத்துக்கொண்டு, அதில் 100 கடுக்காயை ஒன்றிரண்டாக (கொட்டையை நீக்கித்) தட்டிப்போட்டு அடுப்பின் மேலேற்றி 4 படியாகச் சுண்டக் காய்ச்சவும்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த கொடிவேலி வேர் | ஒரு காசிடை | இவைகளைப் பொடி செய்து கொண்டு |
| சுக்கு | ,, | |
| சிவதைவேர் | ,, | |
| விழாலரிசி | 1 படி | |

காய்ச்சிய கோமூத்திரத்தைக் கடுக்காயுடன், ஷை பொடி செய்த 4 சரக்குகளையும் கலந்து அடுப்பிலேற்றி அடிப்பிடிக்காமல் லேகிய பதத்தில் இறக்கவும்.

இதை ஒரு கழற்சிக்காய் அளவு தினம் சாப்பிட எட்டு விதக் குன்மமும், 20 வகை பிரமேகம் எனும் மூத்திர ரோகமும், காலோச்சலும் தீரும்.

80ம் நெ. சுவடியில் கர்ப்பமுண்டாகும் என்றும் கண்டிருக்கிறது.

# 61. குன்ம வலிக்கு மருந்து

இந்துப்பிது முப்பலமுமிரதம் பெருங்காயங்
கெந்தி வெண்காரமிளகெவச்சாரந்துரிசோடுந்
தந்தவடிமண் வெள்ளுள்ளி தகைநேர்வாளப் பருப்பும்
இந்தவகை யொன்றினுக்கொன்றிடப் பலமுமாமே.

(ாகூஅ)

இட்டுச் சீனிக்காரங் கழஞ்சிது பலநாலாகும்
மட்டுவெண் கலத்தின் சதாவைத்த மருந்தெல்லாந்
தொட்டுப்பொடி செய்துகொள்ளத் தூளை யிளநீரில்
விட்டுநாற் பனவிடையோர் வேளைக் குன்மம்போமே.

(ாகூகூ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| இந்துப்பு 3 பலம் | | |
| சுத்திசெய்த பாதரசம் | } | இவை வகைக்கு 1 பலம். |
| ,, நெல்லிக்காய் கந்தகம் | | |
| பொரித்த பெருங்காயம் | | |
| ,, வெண்காரம் | | |
| மிளகு | | |
| சுத்திசெய்த துரிசு | | |
| உவர்மண் | | |
| வெள்ளைப் பூண்டு | | |
| சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு | | |
| சீனக்காரம் 4 பலம் | | |

இவைகளை ஒரு வெண்கலப் பாத்திரத்திலிட்டு நன்கு அரைத்துக் கொள்ளவும். வேளைக்கு 4 பனவிடை வீதம் இளநீரிற் சாப்பிடக் குன்மந் தீரும்.

---

# 62. குன்மாதிக்கு மருந்து

காட்டில் வட்டத்திருப்பியின்வேர் கண்டமஞ்சாறுக்கிப்
போட்டுக் கள்ளிப்பாலூட்டிப் போதுலர்த்திக் கொண்டு
கூட்டுமுக்காவேளை துழாய்க்குருஞ்சாவுத்தாமணியின்
நாட்டுவகை வேரெலியால் நல்ல விற்றென்றுமே. (ாசம)

விளக்கினத்தை யுலர்த்தியிடி வெந்தயமுஞ்சுக்குங்
களிப்பிளவுங் காசுக்கட்டிக்கா வெளுள்ளிதானும்
வளக்கமிள கிதுசமமாய் வைத்துப்பொடியாக்கி
யுளக்கலந்து வைத்துதுதயத் துண்ணும் வெருகடியே.

(௱சுக)

உண்டிடு பினற்பசும் பாலுருத்திராளக்காய்ச்சிக்
கொண்டிடுபின் பேயன்பழங் கூட்டிப்பஞ்சதாரைக்
கிண்டிடு பிசைந்திதனைக் கேழுச்சியின் பொழுதில்
மண்டிடும் பிடிகுன்மமும் வாயுவும் பல போமே.

(௱சுஉ)

(இ-ள்)

காட்டிலுள்ள வட்டத்திருப்பிவேரை 5 அல்லது 6 துண்டுகளாக்கிக் கள்ளிப்பால் கொஞ்சம் எடுத்து அந்த வேர்கள் முழுகும் வரை விட்டு உலர்த்தி வைத்துக்கொள்ளவும். அதனுடன் முக்காவேளைவேர், துளசிவேர், குறிஞ்சாவேர், உத்தாமணிவேர், எலியால்விரை அதாவது காட்டாமணிப்பருப்பு, வெந்தயம், சுக்கு, காசுக்கட்டி, களிப்பாக்கு, உள்ளிப்பூண்டு, மிளகு இவைகளைச் சமமாக எடுத்துத் தூள்செய்து நன்கு கலந்து வைத்துக்கொண்டு ஒரு வெருகடிப் பிரமாணம் எடுத்துக் காலையில் சாப்பிடவும். பின்பு பசும்பாலைத் திராளக்காச்சி அதில் பேயன் பழத்தைச் சர்க்கரையில் கலந்து சேர்த்து அடுப்பிலேற்றிக் கிண்டி இறக்கி வைத்துக்கொண்டு மத்தியானம் சாப்பிடவும்.

இதனால் குன்மமும் வாயுவுந் தீரும்.

## 63. குன்மாதி சகலத்துக்கு மருந்து

புளியம்பட்டை யெருக்கிலை பூப்பட்டை யிலைக்கள்ளிக்
களியின் பட்டை கொடுவேலிது கனலிற்பற்பஞ்செய்தே
யளி பலமொன்றுகும் பஞ்சலவணம் பெருங்காயம்
விளியவரைப் பலங்களிட்டு மேலுஞ்சங்கின் பற்பம் (௱சுங)

இருபல மாயிட்டிரத மிசையும் பச்சை நாவி
தரும்பணவிடையு முப்பான் சம்பீரரசத்தால்
அரையுமெள்ள நாள்மூன்று மாத்திரதச் சாற்றால்
ஒரு நாளரைத்திலந்தை விற்றி னுப்புருண்டை
செய்யேன் (௩௪௪)

செய்யிது நிழலுலர்த்தித் தெளியாப் பிணிக்கெல்லாம்
வையிதி லொருகுளிகை மத்தித்திஞ்சிச் சாற்றுள்
ஐயமில்லை யிம்முறையில குலுங்குன்மமெல்லாஞ்
சைவ நெறிச்சிவப்பூசைச் சரபத்துரையுரையே. (௩௪௫)

(இ-ள்)

| | |
|---|---|
| புளியம்பட்டை<br>எருக்கு இலை<br>,, பூ<br>,, பட்டை<br>இலைக் கள்ளிப்பட்டை<br>கொடிவேலி வேர் | இவை சமமாக எடுத்து அடுப்பி விட்டுப் பற்பம் செய்து 1 பலம் பற்பத்தோடு |
| இந்துப்பு<br>கடலுப்பு<br>அட்டுப்பு<br>உவர்மண் உப்பு<br>வளையலுப்பு | இவை எல்லாம் சேர்ந்து 1 பலம் |

பொரித்த பெருங்காயம் — $\frac{1}{2}$ பலம்

சங்கு பற்பம் 2 பலமும் சேர்த்து,

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரஸம்<br>,, நாபி | இவை வகைக்கு 30 பணவிடையையும் கலந்து |

எலுமிச்சம் பழச்சாற்றால் 3 நாட்கள் விடாமல் அரைத்து இஞ்சிச் சாற்றில் ஒரு நாள் அரைத்து இலந்தை விதைப் பிரமாணம் உருண்டைகளாக உருட்டிக்கொள்ளவும்.

உருண்டைகளை நிழலில் உலர்த்திவைத்துக்கொள்ளவும்.

தினம் ஒரு உருண்டைவீதம் இஞ்சிச் சாற்றில் உட்கொள்ளக் குன்மம் ஒழியும்.

# 64. குன்மாதிக்கு க்ஷாரவகை

முண்டகஞ் செம்முள்ளி பனை முத்தியகாயாகுங்
கண்டங்கத்திரி சாறணை கதலிச்சருகோடுந்
தண்டமுண்ணுயுருவி தழலிற் சுட்டுஞ்சாம்பர்
கொண்டதொரு குருணி தண்ணீர் குறுக்குழக்காய்க்
காய்ச்சேன் (௱சசுஈ)

காய்ச்சிரண்டும் பலங்காயங்கல்லுப்பது நான்கு
வாச்ச பலஞ்சவுக்கார மற்றுஞ் சீனிக்காரம்
பாச்சிரண்டு பலமிந்துப்பிடுவது முப்பலமே
யாச்சி தெல்லாம் பொடிச்செய்து முன்னடுங்
குடிநீரிட்டே (௱சஎ)

போட்டும் பற்பமாகச் செய்தோர் பொழுது கொள்ளத்
தானே
காட்டும் வெருகடி யளவு காய்ந்திள வெந்நீரில்
ஊட்டுங் கரைத்துட்கொடுக்க வோட்டுங் குன்மநோய்
கேட்டுமிகு பத்தியமாக் கிடைப்புளிகைப் பொழியே.
(௱சஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| நீர்முள்ளி<br>செம்முள்ளி<br>முற்றின பனங்காய்<br>கண்டங்கத்திரிவேர்<br>சாரணை (வெள்ளை) வேர்<br>வாழைச் சருகு<br>நாயுருவிசமூலம் | இவைகளைச் சுட்டுச் சாம்பலாக்கி ஒரு மரக்கால் தண்ணீரில் கரைத்து உழக்காகக் காய்ச்சின பின் |

பொரித்த பெருங்காயம் — 2 பலம்
கல்லுப்பு — 4 பலம்
சவர்க்காரம் — 1 பலம்
பொரித்த சீனகாரம் — 2 பலம்
,, இந்துப்பு — 3 பலம்

இவைகளைப் பொடிசெய்துகொண்டு, முன் வைத்த கஷாயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக் குழப்பி அடுப்பின் மேல் வைத்து எரித்துப் பற்பமாகச் செய்துகொள்ளவும்.

தினம் ஒரு வேளை ஒரு வெருகடி தூள் இளஞ்சூடான வெந்நீருடன் கலக்கிச் சாப்பிடக் குன்மம் தீரும்.

பத்தியம் :— புளிப்பு, கசப்பு கூடாது.

---

# 65. பஞ்ச குன்மாதிக்கு மருந்து

சுக்குமிள குள்ளியொடு சோமனுப்புங்காயம்
மிக்கு மிவட்சாரஞ்சத்திச் சாரம் விடலவணம்
பக்குவங் காய்ச்சிலவணமும் படுஞ்சதிரலவணம்
எக்கும்வகை யொன்றுக்குக் காலிடும் பலங்களாமே.
(௱௪௯)

புளியம்பட்டைச் சாம்பலது போட்டிடொரு பங்காய்
ஒளியுங்கழனுட பருப்பு மூட்டிப்பலம் நாலாம்
நளியுமெனும் பிச்சம் பழரசத்தரை முச்சாமங்
குளிகைகட்டி நிழலுலர்த்திக் கொண்டுவைத்துக்
கேழேன். (௱௫௰)

நொச்சில் விழுதம் மூலநுண்கொட்டைக் கரந்தை
வச்சிதுச மூலஞ் சிற்றாமணக்கிளங்காய் வேருங்
குச்சுரும்பூ வோடுமிதைக் கூட்டிகுடி நீருள்
மெச்சிதின முத்துள்ளி விளக்கெண்ணெ விட்டுக்கலந்தே
(௱௫௧)

கலந்திடனு பானமிக்கடாயத் தொரு குளிகை
மலந்திடக்கரைத்துக்கொண்டு வைகறையிற்கொள்ளு
சலந்தருமோ பஞ்சகுன்மந் தன்னைக் குடிய்போக்கும்
நலந்தருமே பத்தியங்கள் நல்லெண்ணெயாகாதே. (௱௫௨)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | இவைகள் ஒவ்வொன்றும் வகைக்கு $\frac{1}{4}$ பலம் |
| மிளகு | |
| வெள்ளைப் பூண்டு | |
| இந்துப்பு | |
| பொரித்த பெருங்காயம் | |
| யவச்சாரம் | |
| சத்திசாரம் | |
| அட்டுப்பு | |
| உவர்மண் உப்பு | |
| * சதிர்லவணம் | |

---

(* சதிர்லவணம் என்பது எதைக் குறிப்பதென்பது தெரியவில்லை)

இவைகள் சேர்ந்த எடைக்கு சமமாகப் புளியம் பட்டை சுட்டசாம்பல், கழற்சிப்பருப்பு — 4 பலம். இவைகள் எல்லா வற்றையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டு 3 ஜாமம் அரைத்துக் குளிகை குன்று மணி அளவு செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| கரு நொச்சி<br>விழுதி வேர்<br>கொட்டைகரந்தை சமூலம்<br>சிற்றாமணக்கு வேர் | இவைகளை நசுக்கிக் கஷாயம் வைத்துக் கொண்டு |

விளக்கெண்ணெ 3 துளி மேற்படி கஷாயத்துடன் கலந்துகொண்டு இந்த அனுபானத்துடன் ஒரு குளிகையை நன்கு கரைத்துக் கொண்டு காலை நேரத்தில் கொடுத்திட பஞ்சவித குன்மங்களும் தீரும்.

இதற்குப் பத்தியம் :— நல்லெண்ணெ சேர்க்கக் கூடாது.

---

# 66. குன்மாதிக்கு மருந்து

(சந்தம் வேறு)

காந்தஞ் சித்தரத்தை கல்மதங்குக்கிற்
கிராம்புங்கச் சோலமிந்துப்புஞ்
சேர்ந்த கல்லுப்புக்கூகை நீர்காயஞ்
சீர்வளையுப்பதிவிடையம்
போந்த நெல்லிக்காய்க் கந்தகமிரதம்
பூரி கருஞ்சீரகஞ் சுரைக்காய்க்
கெந்தியிம் மருந்திலொன்று முக்கழஞ்சிக்
கிட்டைதைத் தூளிடித்திடுமே. (ருஅ)

இடித்தெடு மருந்தை யிடுதினமிரண்டு
நேரத்து ளொருபொழுதினுக்குப்
பிடித்தெடுபென் போலொரு பிடிக்கொண்டு
பின்னிள வெந்நீருட்கலந்தங்

குடித்திடச் சகல குன்மமும் போக்குங்
குணமிது பத்தியம் புளியும்
புடித்திடும் புகையும் போக்கிக் காலரையாம்
பொருந்திய மண்டலங்கொளேன். (உருச)

(இ-ள்) சுத்திசெய்த காந்தம்
சித்தரத்தை
கல்மதம்
சுத்தியான குக்கில்
கிராம்பு
கச்சோலம்
இந்துப்பு
கல்லுப்பு
சூடகை நீறு
பொரித்த பெருங்காயம்
,, வளையலுப்பு
அதிவிடயம்
சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம்
,, பாதரஸம்
கருஞ்சீரகம்
சுரைக்காய்

இவைகள் வகையொன்றுக்கு 3 கழஞ்சு எடுத்துக்கொண்டு கந்தகம், பாதரஸம் இவ்விரண்டையும் முதலில் கல்வத்திலிட்டு நன்கு பொடித்துக்கொண்டு மீதியுள்ள சரக்குகளை உலர்த்தி உரலிலிட்டு இடித்து வஸ்திரகாளனம் செய்து வைத்துக் கொள்ளவும்.

இம் மருந்தை தினம் 2 வேளை, ஒரு சிம்டா (அதாவது 2 அல்லது 3 குன்றுமணி) அளவு இளஞ்சூடான வெந்நீருடன் கொடுத்தால் சகல குன்மங்களும் தீரும்.

இதற்குப்பத்தியம் :— புளி, புகையிலை நீக்கி முக்கால் மண்டலம் (30 நாள்) மருந்தைச் சாப்பிட்டு வரவும்.

---

# 67. வாத குன்மாதி மருந்து

கொடிப் பிரண்டையின் வேர் புளியாரணையின்வேர்
கோலவுரியினிலம் மூலம்
துடிப்பிது மூன்றுஞ் சமமிடைக்கொண்டு
சூழ வெயின் முகத்தினிலுலர்த்தி

இடிப்பிடுந் தூளை மடிவடிக்கட்டி
பிராயச் சர்க்கரையிட்டுக் கலந்து
முடிப்பிடுங் குன்ம மூறைக்கொரு குன்றி
மூட்டிடும் புளி கைப்பு மொதுக்கேன். (௫௫௫)

(இ-ள்)

பிரண்டைக் கொடியின் வேர்
புளியரணையின் வேர்
அவுரியின் வேர்
} இவைகள் தனித்தனி சமனிடையாக எடுத்து

வெயிலில் உலர்த்தவும். பின்பு இவைகளை உரலிலிட்டு நன்கு இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். இதற்குச் சரி இடை ராயபுரி சர்க்கரை (குழைவுசீனி) சேர்த்து தினம் குன்றுமணி அளவு வீதம் உட்கொள்ளக் குன்மம் தீரும்.

இதற்குப் பத்தியம் :—

புளி, கசப்பு, இவைகளை நீக்கவும்.

---

# 68. குன்மாதிக்குக் கொம்மட்டிக் காய் எண்ணெய்

கானப்பேய்க் கொம்மட்டிக்காயினை
வாகுகழி வைக்கற்றீயில் வெந்தெடுத்துத்
தானதைப் பிழிந்தச் சாறிருபடியுந்
தன்படியீருள்ளிச் சாறும்
ஆனினப்பாலு மாமணக்கெண்ணை
அவ்வளவாய் எலாங் கலந்தோர்
பானையுளிட்டு மடுத்தெரிமெழுகு
பதத்தினிலெடு வடித்திதிலே (௫௫௬)

இதிற்பெருங் காய மிடும்பலங்
கடுகு ரோகணி திப்பிலி மூலம்
உதித்திரு வசைக்கு மூவராகனிடை
யூட்டிடப் பொடிசெய் தெண்ணெயினிற்

கொதிப்பதிற் கலந்துகொள் மகவில்லார்
குன்மத்தோர் தமக்குந் துட்டளவு
மதிப்பதிகால மெழுநாள் குடித்து
மற்றநாள் வெதுப்பிட்டுக் கொடுப்பாய். (௭௫௭)

கொடுத்திட வயிறுபேதித் தொன்பது நாட்
குணங்கொடுத்திடு முன்னைப்படியே
மடுத்துமும்மடங்கு கொடுத்துணப்
புளியும் வைத்திச்சாபத்தியத்துடனே
யடுத்திரு மிதுக்குத்தீரு நோய் குன்ம
ம்க்கினி மந்த நீர்க்கோர்வை
படுத்திடுங்கை காலுடலெரிப்பதுங்
சீப்படுங் கட்டி வழலை வாய்வுடனே. (௭௫௮)

அன்ன நாவிறக்க மற்றது
வயிற்றுளாமத்தின்கட்டி பீலிகையுஞ்
சன்னிவாயுவுகள் தன்கட்டி
சூலை சாரமகோதாமுடன் கவுசை
யின்ன நோய் பலவுந்தீர்ந்திடக்
கடல் சூழெண் டிசைபடர் தருங்கீர்த்தி
மன்னமன்ன வருந்திறைதாஞ்
சுமந்த வாசலான் சரபவேந்துரையே. (௭௫௯)

(இ-ள்)

நன்கு முத்தின பேய்க்கும்மட்டி காய்களை கொண்டுவந்து, வரகு வைக்கோலைப் போட்டு அவைகளை மூடிக் கொளுத்தி விடவும். பின்பு அக்காய்களை வெந்து பக்குவமானபின் நன்கு நசுக்கி 2 படி சாறு பிழிந்து கொள்ளவும். அத்துடன்

| | |
|---|---|
| வெள்ளைப் பூண்டு சாறு | 2 படி |
| ஊற்றின விளக்கெண்ணை | 2 படி |
| பசுவின் பால் | 2 படி |

இவைகளையும் சேர்த்து நன்கு கலந்து ஒரு பானையிலிட்டு அடுப்பின் மேலேற்றி மெழுகு பதம் வரும் வரை எரிக்கவும். மெழுகு பதம் ஆனபின்

பொரித்த பெருங்காயம் 1 பலம்
கடுகு ரோகிணி 3 வராகனிடை
கண்டந்திப்பிலி 3 ,,

இவைகளை நன்கு பொடி செய்து மேலே சொல்லிய கொதிக்கும் எண்ணையிற் கலந்து பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணையில் ஒரு துட்டளவு அதிகாலையில் ஏழு நாள் வரை கொடுத்து எட்டாநாள் வெதுப்பித்துக் கொடுக்கவும். பேதி யாகும். அன்றைக்குப் புளி சேர்த்து இச்சாபத்தியமாக இருக்கவும். குழந்தை இல்லாதவர்களுக்கு கர்ப்பமுண்டாகும். குன்மம் தீரும்.

இவ்வாறே 3 முறை ஈவ்வெட்டு நாட்கள் சாப்பிடத் தீரும் வியாதிகள்.

1. குன்மம்
2. அக்கினி குறைவு
3. நீர்க்கோர்வை
4. கை கால் எரிச்சல்
5. சீக்கோர்த்த கட்டி வகைகள்
6. அழலை
7. வாயு
8. அன்னத்வேஷம்
9. வயிற்றுக் கட்டி
10. பீலிகை என்னும் மண்ணீரல் வீக்கம்
11. சன்னி, வாயு
12. சூலை
13. மகோதரம்
14. கவுசை

இவை போன்ற இன்னும் மற்ற ரோகங்களும் தீரும்.

# 69. வாத குன்மாதிக்கு மருந்து

சூரணைக் கிழங்குப்பலம் பதினாறுஞ்
சொல்லெவச் சாரந்திப்பிலியும்
கூரிருவகை யொன்றிரு வராகனிடை
கூட்டி டீரிரு வராகனிடை
காரச்சுக்கொடு சேங்கொட்டை
யெட்டாகக்காண் வராகனிடையுங் கலந்து
நேராது வெல்லமிட்டிடி குன்மநீக்கிட
விளவெந்நீர் கொள்ளேன். (௱சுவ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| கருணைக்கிழங்கு | — 16 பலம் | |
| யவச்சாரம் | — 2 வராகனிடை | |
| திப்பிலி | — ,, | |
| சுக்கு | — 4 வராகனிடை | |

சுத்திசெய்த சேராங்கொட்டை 8 வராகனிடை இவை களை கல்லுரலிலிட்டு சரியளவு வெல்லத்தைச் சேர்த்து நன்றாக இடித்துக் கொள்ளவும், இதை வெதுவெதுப்பான வென்னீரில் சாப்பிடவும். குன்மம் நீங்கும்.

---

# 70. குன்மாதிக்கு மருந்து

சித்திர மூல மிருவராகனிடை திகழ்
பெருங்காயமவ் விடைக்கே
வைத்த சுக்கோம மிளகு திப்பிலியு
மதியுப்புங்கருத்த சீரகமுங்
இத்திறமாறு வகைக்கொருபல மாயிட்
டெலாஞ் சூரணித்தன்னந்
துத்திடும் போதிற் புள்ளடி யெடுத்துத்
தூவிக்கொள் குன்மங்குலையும். (௱சுக)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த கொடிவேலி வேர் | — 2 வராகனிடை | |
| பொரித்த பெருங்காயம் | — 2 | ,, |

சுக்கு
ஓமம்
மிளகு
திப்பிலி
இந்துப்பு
கருஞ்சீரகம்
} இவைகள் வகைக்கு 1 பலம்

இவை எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு இடித்து சூஸ்தி ரகாயம் செய்து வைத்துகொள்ளவும். இதில் புள்ளடிப் பிர மாணம் தூளை எடுத்து அன்னத்தில் போட்டுக்கொண்டு சாப் பிட்டுவரக் குன்மம் தீரும்.

---

# 71. சத்தி குன்மாதிக்கு மருந்து

தென்னையின் காய்க்கண் திறந்து
நீருகுத்திச் சேருழக்கெருக்கின் பாலடைத்து
முன்னயனத்தையு மூசிக் காட்டெருவில்
மூட்டிடுங் கிசபுடத்தொடும்
தன்னையுங் கருகச் சுட்டெடுத் தரைத்துத்
தனியொரு பாக்களவுருட்டித்
தின்னவப் பொழுது சத்தி குன்மங்கள்
தீர்ந்திடும் பொருமலும் போமால். (௱சூ௨)

(இ-ள்)

ஒரு முத்தின தேங்காயை எடுத்து அதன் கண்ணைத் திறந்து உள்ளிருக்கும் இளநீரைக் கொட்டிவிட்டு ஒரு உழக்கு எருக்கம்பாலை உள்ளே ஊற்றி விடவும். பின்பு அதற்குச் சீலே மண் செய்து காட்டெருவில் புடம் போடவும். அப்போது மேல் கொட்டாங்கச்சி கருகியவுடனே, அதை எடுத்து உடைத்து உள்ளிருக்கும் தேங்காயை நன்றாக அரைத்துப் பாக்களவு உருட்டி வைத்து கொள்ளவும்.

அவ்வப்போது ஒரு உருண்டை சாப்பிட சத்திகுன்மம், பொருமல் இவைகள் தீரும்.

---

# 72. சத்தி குன்மாதிக்கு மருந்து

## (கருங்கோழிச் சூரணம்)

காயமுங்காந்தமொரு வகைக்காறு
கண்டிடைவராகன் சேர்த்திடுவெண்
காரம்வேற்கொம்பு மிளகரைப்பலமாங்
காற்பலஞ்சதகுப்பை யோமம்
நேய சீரகமும் நஞ்சுரித்தெடுக்கு
நேர்வாளப் பருப்பஞ்சுங்கூட்டி
யாயக்கொடிப் பிரண்டையரிதுண்டும்
பதக்கிலருந்து நீர் நான் மரக்காலே. (எசுங)

இட்டவித்திரண்டு படியதாய்ச் சுண்ட
விறக்கிடுங்கடாயத்திற் கழற்சி
தொட்டதும்பையின் வேர் மிளகரணையின் வேர்
சொல்வகைக் கொன்று காற்பலமாஞ்
சட்ட சாரணை வேரரைப்பல மிட்டுச்
சாற்றிய நிரை மருந்தெல்லாம்
அட்டவைப் பிரண்டை நீரை விட்டரைத்து
மதைக்கருங்கோழியிற்கேளேன். (எசுச)

எலும்பிணை யொதுக்கி யெடுத்த மாங்கிஷத்தை
யிசைத்தரை மருந்தைமேற் பிசறி
நலுங்கிடுஞ் சுண்டிவெந்த பின்
னஞ்சுநாள் வெயிலுலர் வைத்திடித்துக்
குலுங்கு சூரணமாய்க் கொண்டு
உதையத்திற் கொடுப்பதோர் பென்பிடித்தேனிற்
கலுழ்ந்திதைக் குழைத்துத் தின்னவும்
வெந்நீர்க்கை பரிமாறவுங்காணேன். (எசுரு)

காணுமிப்படியே யொன்பது நாளுங்
கழித்து மற்றொன்பது தினங்கள்
பூணுறக்கழித்துப் பத்தியமாகப்
புளித்தள்ளிப்பிடிக்கவு முருங்கை

தோணுங்காயிலையுஞ் சுருக்கறிவாடுஞ்
சொற்றிருக்கையின் கறிவாடும்
ஊனும் வெள்ளாட்டின் வத்தலுங்
கூட்டவோடிடுஞ் சத்தி குன்மமே. (௭௬௬)

(இ-ள்)

பொரித்த பெருங்காயம் 6 வராகனிடை
சுத்தி செய்த காந்தம் ,,

| | |
|---|---|
| வெண்காரம்<br>சுக்கு<br>மிளகு | இவை வகைக்கு ½ பலம் |

சதகுப்பை ¼ பலம்
ஓமம் ¼ பலம்
சீரகம் ¼ பலம்

சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு 5 (எண்ணிக்கையில்)
பிரண்டையை நசுக்கிப் பிழிந்த சாறு 2 மரக்கால்
ஜலம் 4 மரக்கால்

இவைகள் யாவற்றையும் ஒன்று சேர்த்து, அடுப்பின் மேலேற்றி 2 படியாக சுண்டும் வரை காய்ச்சி அதில்

கழற்சிவேர் ¼ பலம்
தும்பைவேர் ¼ பலம்
மிளகரணை வேர் ¼ பலம்
வெள்ளைச் சாரணையின் வேர் ½ பலம்

இவைகளைச் சேர்த்து வேகவைத்து மருந்து எல்லாவற்றையும் அதே கஷாயம் விட்டு அரைத்து வைத்துக்கொள்ளவும். நல்ல கருங்கோழி ஒன்றை கொண்டுவந்து எலும்பு நீக்கி அதன் மாமிசத்தை ஷை அரைத்த மருந்து கஷாயம் இவைகளைவிட்டுப் பிசரி அரைத்து அடுப்பின் மேல் வைத்து மாமிசம் வெந்தபின்பு அதை இறக்கி வெயிலில் 5 நாள் உலர்த்தவும். நன்கு காய்ந்த பின் இதை உரலிலிட்டு இடித்து சூரணித்து வைத்துக்கொண்டு தினம் அதிகாலையில் ஒரு சிம்டா வீதம் தேனில் உட்கொண்டு வென்னீரை அனுபானமாக உபயோகப்படுத்தவும். இவ்வாறு

9 நாள் சாப்பிட்டு மறு 9 நாளும் பத்தியமாக, புளி தள்ளி இருக்கவும்.

பத்தியமான பதார்த்தங்கள்.

முருங்கைக்காய்
முருங்கை இலை
சுறுவின் கருவாடு
வெள்ளாட்டு வத்தல்

உபயோகிக்க சத்தி குன்மம் தீரும்.

---

# 73. சத்தி குன்மாதிக்கு மருந்து

நெற்பொரியும் பசும் பயறு வல்லை முல்லை
நேரிய ஏலமுடன் சுக்குநெல்லி
முற்படவே யிளநீரிற் காச்சிரண்டொன்றாக்கி
முத்திய பின்னெடுத்து வடித்தூத்திக்கொள்ள
சொற்பெரிய சத்தி குன்மஞ்சுரத்திற் சத்தித்
துயரமுடன் கிறுகிறுப் புள்ளுழலை மூச்சு
பற்றறு மென்றிமையவரு மிருடிதானும்
பகர்ந்தனர் முன்னருந் தமிழின் படியைக்கண்டே.

(௱௮௭)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| நெல் பொறி | } | இவைகளை 1 பலம் சமமாக எடுத்து ஒன்றிரண்டாக்கி |
| பச்சைப்பயறு | | |
| புரசம் வேர் | | |
| முல்லை வேர் | | |
| ஏலக்காய் | | |
| சுக்கு | | |
| நெல்லி | | |

இளநீரில் (1 மரக்கால்) போட்டு அடுப்பின்மேல் வைத்து பாதியாக ($\frac{1}{2}$ மரக்கால்) சுண்டக்காச்சவும். இதில் தினந்தோறும் 1 அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுக் கொண்டுவர,

கீழ்க்கண்ட ரோகங்கள் தீரும் :—

1) சத்தி குன்மம்
2) சுரத்தில் உண்டாகும் வாந்தி
3) கிறுகிறுப்பு, மயக்கம்
4) உள் அழலை
5) மூச்சு

## 74. வாத குன்மாதிக் கெண்ணை

இளநீரிஞ்சிச் சாறுள்ளி யிதுவுந்திரிகடுகிந்துப்பும்
அளவே கொண்டரைத்தழற் காய்ச்சியத்தை யிரண்
[டொன்றுக்கியிட்டுக்
கொளவே வாதகுன்ம மறுங்கொள்ள வேமூநாளளவும்
பிளவே மீறி நின்றதனிற் பிசைந்தேயெண்ணை
கூட்டுவதே. (௱சுஅ)

கூட்டு முள்ளியறு பலமுங் கொடுவேல் மரிசு நிலவாகை
யோட்டும் வீழிசாரணையு மோரொன்றுலொரு
பலம்பாரீர்
தேட்டம் பெரிய திரிகடுகு தெளியஞ் சோமனுப் பறிவுங்
காட்டிற் கள்ளிப்பாலுடனே கலந்தோரண்டத்
தெண்ணை கொள்ளேன் (௱சுசு)

(இ-ள்)

இளநீர் — 1 படி
இஞ்சிச் சாறு — 1 படி
பூண்டின் சாறு — 1 படி

| | |
|---|---|
| சுக்கு<br>மிளகு<br>திப்பிலி<br>இந்துப்பு | இவைகளை ½ பலம் வீதம் எடுத்து அம்மி யிலிட்டு நன்கு அறைத்துச் சாற்றில் கலந்து |

அதை அடுப்பின் மேல் வைத்து பாதியாகச் சுண்டக் காய்ச்சவும். இந்தக் கஷாயத்தை 7 நாள் உட்கொள்ள வாத குன்மம் தீரும், இப்படித் தீராவிட்டால், அக்கஷாயத்துடன்

உள்ளிப்பூண்டு — 6 பலம்
கொடிவேலி — 1 பலம்

மிளகு
நிலவாகை
வீழில்
வெள்ளை சாரணை
} இவைகள் வகை ஒன்றுக்கு 1 பலம்

சுக்கு
மிளகு
திப்பிலி
} இவை சேர்த்து ஒரு பலம்

பொரித்த இந்துப்பு ஒரு பலம்
கள்ளிப்பால் 1 படி
ஆமணக்கெண்ணெ 1 படி

இந்தச் சரக்குகளையும் சேர்த்து அடுப்பின் மேல் வைத்துப் பதத்தில் இறக்கிக்கொள்ளவும். இதனுல் குன்மம் தீரும்.

---

# 75. குன்மாதிக்குச் சாறணைக் கற்பம்

காதோடடர்ந்த கண்ணுளே காலையெழுந்து சுத்திப்பண்ணிப்
பாதங்கழுவிச் சாறணைவேர் பச்சை தின்னவல்லீராய்
ஓதஞ்சீத மறுந்தோட முரைக்குங் குல்மம் பெருவயிறு
வாதங்காதமரை போகு மாறுமொரு நோய்
வாராதே. (௱எய)

(இ-ள்)

விடியற்காலையில் எழுந்து கை, கால்களை சுத்திசெய்து சத்தி சாரணை வேரை மெல்லியதாய்ப் பார்த்துப் பச்சையாகச் சாப்பிட.

1) ஓதம் என்ற விதை வீக்கம்
2) சீதம்
3) வாத, பித்த, சிலேஷ்ம குன்மங்கள்
4) பெரு வயிறு
5) வாதம்

இவைகளைப் போக்கி மற்ற நோய்கள் வாராமல் செய்யும்.

---

# 76. வாத குன்மாதிக்கு மருந்து

திரிபுர மெரித்தான் சாறுந் திருடியின் சாறுஞ்சத்தே
கிரிபுரை கள்ளிச்சாறுங் கேடிலா முருங்கின்சாறுஞ்
சரிசரி சாத்திரவாரி தண்ணீருங் கூட்டிக்காய்ச்சி
உரியொடு நாழியானால் உரவிடுமாமணக்கெண்ணெ.
(௱எக)

எண்ணெ நெய்யிரண்டு நாழியிதுவுடன் கடுக்காயுள்ளி
நண்ணிய சோமனுப்பு நலந்தருமிஞ்சிவாளம்
தண்ணுறு கடுகுரோணி சாதிலிங்கமும் வெண்காரம்
வண்மையாம் வசம்போடொக்க வளர்பெருங்காயங்
கூட்டே. (௱எஉ)

* கூட்டிய வத்தித்திப்பிலி குலவிய காந்தங் கெந்தம்
வாட்டிய விழி வேரும் வகையுடன் கூட்டிக்கொள்ள
நாட்டமாய் வேகவைத்து நலம்பெற வடித்துநக்கத்
தோட்டிய வாதகுன்மங் தூலைந்திடு முண்மைதானே.
(௱எஉஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| நொச்சிச்சாறு<br>கள்ளிச்சாறு<br>வெள்ளைக் காக்கரட்டான் சாறு<br>முருங்கையிலைச்சாறு<br>தண்ணீவிட்டான் கிழங்கின் சாறு | இவை வகைக்கு $\frac{1}{2}$ படி வீதம் சேர்த்து |

அடுப்பிலேற்றி,

| | | |
|---|---|---|
| ஆமணக்கெண்ணெ | 1 படி | இவைகளையும் அதில் சேர்த்து |
| நெய் | 2 படி | |
| நல்லெண்ணெய் | 1 படி | |

---

* இந்தச் செய்யுள் மூலச்சுவடி நெ. 46, 52 இவைகளில் விடப்பட்டிருக்கிறது. 80 நெ. சுவடியில் காணப்படுகிறது.

கடுக்காய்
உள்ளிப்பூண்டு
இந்துப்பு
இஞ்சி
சுத்திசெய்த நேர்வாளம்
கடுகு ரோகிணி
சுத்திசெய்த லிங்கம்
பொரித்த வெங்காரம்
யானைத்திப்பிலி
சுத்திசெய்த காந்தம்
,, நெல்லிக்காய் கந்தகம்
விழிவேர்

} இவை வகைக்கு 1 பலம் எடுத்துச் சேர்த்து அரைத்து

எண்ணெய் வகையுடன் குழப்பிப் பதமாக அடுப்பிலிருந்து இறக்கி வடித்துக்கொண்டு தினந்தோறும் காசிடை சாப்பிட்டு வர வாதகுன்மந் தீரும்.

---

# 77. வாத குன்மாதிக்கு மருந்து

தாடிம மூலந்தன்னில் மேன்பட்டை சயிந்தலவணமு மேலங்
கூடிய சவச்சலவணமுங் காயங்கொடு விளாலரிசியுஞ் சமமாய்த்
தேடி மாதளையினிலை ரசமூட்டிச் சேர்த்தரை கழற்பிரமாணம்
நாடியக்காரந்தனிலனுப்பான நாட்டிக்கொள் நகருங்குன்மமுமே.
(௱௭௩)

(இ-ள்)
மாதுளை வேர்ப்பட்டை
இந்துப்பு
ஏலக்காய்
வளையலுப்பு
பொரித்த பெருங்காயம்
விழலரிசி

} இவைகள் சமனிடை எடுத்துப் பொடி செய்து

மாதுளை இலை ரஸத்தால் கல்வத்திலிட்டு நன்கு அரைத்துக் கழற்சிக்காய்ப் பிரமாணம் உருண்டை செய்து சர்க்கரை அனுபானத்தில் கொடுத்தால் குன்மங்கள் தீரும்.

அக்காரம் = சர்க்கரை 'அக்காரவடிசில்' என்பதிற்காண்க.

---

# 78. வாத குன்மாதிக்கு மருந்து

வச்சிரத் துணுக்கு மருளுடன் கிழங்கும்
வளர்கொடிவேலியின் மூலங்
கச்சிருகருணைக் கிழங்கிந்துலவணங்
காய்ச்சுப்பும் வளையலுப்பதுவும்
நச்சிடுப்புடனே புளியாரணையுமேல்
நாட்டிடும் வகைக்கொருபலமே
வச்சிடும் புடத்திற்சாம்பலாக்கிதற்குள்
மருவிடச்சுக்குந் திப்பிலியே. (௱௭௪)

இந்துப்பு மிளகு மிரண்டு சீரகங்க
ளேற்குமிவ் வகைக்கொருபலமாஞ்
சந்தித்துப் பொடித்துத் தன்னைமுன் மருந்துள்
தன்னுடன் கலந்திளவெந்நீர்
முந்திட்டுக் குழப்பிவிழுங்கிடத் தீரு
முந்திநோய் வாத குன்மங்கள்
பந்தயங்கூறி நாரத்தை முருங்கைப்
பருப்பு மாமற்றும் பத்தியமே. (௱௭௫)

(இ-ள்)

பிரண்டைத் துண்டுகள்
மருள் கிழங்கு
கொடிவேலி வேர்
கருணைக்கிழங்கு
காட்டுக் கருணைக்கிழங்கு
இந்துப்பு
காய்ச்சுப்பு
வளையலுப்பு
புளியாரணைவேர்

இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்து ஒரு சட்டியிலிட்டு வறுத்துச் சாம்பலாக்கிக் கொள்ளவும்,

| | |
|---|---|
| சுக்கு<br>திப்பிலி<br>இந்துப்பு<br>மிளகு<br>சீரகம்<br>கருஞ்சீரகம் | இவைகள் வகைக்கு 1 பலம் |

எடுத்து நன்றாகக் கல்லுரலில் இட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து முன் தயார் செய்த சாம்பலுடன் சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு வெரு கடியளவு இளஞ் சூடான வெந்நீரில் குழப்பிச் சாப்பிடவும்.

திரும் நோய்—வாத குன்மங்கள்.

இதற்கு பத்தியம் :—

| | |
|---|---|
| 1. நாரத்தை<br>2. முருங்கை<br>3. பயற்றம் பருப்பு | இவைகள் சேர்த்துக் கொள்வது நலம். |

## 79. வாத குன்மாதிக்கு மருந்து

கெந்தகமிரதந்தாமிர பற்பங்
    கேளெவட்சாரமப்பிரகந்
தந்தமாஷகமுஞ்சமமிடைக்
    கொண்டிதனைக் கொடிவேலியின் சாற்றால்
முந்தரைப்பொருநாள் முழுதும்
    விடாமல் மூட்டிருகுன்றியினிடைக்கு
அந்த வெற்றிலையிலருந்திடத்
    திருமடல் குடல்வாத குன்மமுமே. (எஎசு)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகம்<br>,, பாதரஸம்<br>தாமிரபஸ்பம்<br>யவச்சாரம்<br>சுத்தி செய்த அப்ரகம்<br>யானைத்தந்தத்தின் கரி (மஷி) | வகைக்கு 1 வராகனிடை எடுத்து |

கல்வத்திலிட்டுக் கொடிவேலி இலைச்சாற்றால் ஒரு நாள் முழுதும் விடாமல் அரைத்து 2 குன்றிமணி யெடையுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளவும்.

தினம் ஒரு மாத்திரை வெற்றிலைச்சாற்றில் கொடுக்கக் குடல்வாதம் குன்மம் முதலியவைகள் தீரும்.

---

# 80. குன்மாதிக்கு வில்வாதி லேகியம்

கூவிளைவேர் முப்பானிரு பலமாய்க்கொண்
டெட்டுமரக்கால் நீரிட்டே
மேவிய குறுணியாய் வற்றக்காச்சு
மிதைவடிக்கொள் பழவெல்லந்
தூவிடு முப்பானிருபலங்கலந்து
சுருங்கிது பாகுகாண் பதத்திற்
றீவியமிளகு நாககேசரமுஞ்
செவ்வியஞ் சீரகத்துடனே (௱எஎ)

சித்திரமூல மைவகைக் கொருபலமாந்
திப்பிலி மூலமொன்றரையாய்
வைத்திது பலங்காண்சுக்கு
இருபலமு மருவியதாளிச பத்திரி
யுத்திடு முக்காற்பலமிடு லவங்க
லவங்கமுரைக்கும் பத்திரியுடனேலம்
இத்திர மூன்று வகைக்கிருவராக
னிடைக் கொண்டுஞ் சூரணஞ்செய்யேன். (௱எஅ)

செய்து பின் பசுந்தேன் சேரிரண்டைரையுஞ்
சேர்த்துடன் கொண்டிடகளேளும்
எய்த ரோசிகங்களிரத்த குன்மங்கள்
எடுத்திடுஞ் சத்தி குன்மங்கள்

வெய்து பித்தங்கள் மருத்துரோகங்கள்
மேலெழு நோயெலாந்தீர
நெய்நிணம் பருகி வாகைபூண்
டொளிரு நிருபவேற் சரபவேந்துரையே. (௱எ௬).

(இ-ள்) மேல் தோல்போக்கின வில்வவேரில் 32 பலம் எடுத்து நசுக்கி 8 மரக்கால் தண்ணீரில் ஊரப்போட்டு அடுப்பில் வைத்து 1 மரக்கால் ஆகும்வரை சுண்டக் காய்ச்சவும். கஷா யத்தைத் தனியாக எடுத்துக்கொண்டு அதனுடன் 32 பலம் பழய வெல்லத்தைச் சேர்த்துக் கரைத்து அடுப்பின் மேல் வைத்துப் பாகு பதமாகும் வரை காய்ச்சவும். பின்பு,

| | |
|---|---|
| மிளகு<br>சிறு நாகப்பூ<br>செவ்வியம்<br>சீரகம்<br>சித்திரமூலம் | வகைக்கு 1 பலம் |

| | | |
|---|---|---|
| திப்பிலி மூலம் | 1½ | பலம் |
| சுக்கு | 1 | பலம் |
| தாளீசபத்திரி | 2 | பலம் |
| கிராம்பு | ¾ | பலம் |
| லவங்கப்பத்திரி | 2 | வராகனிடை |
| ஏலக்காய் | 2 | வராகனிடை |

இவைகளைச் சுத்தமாக எடுத்து கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து அடுப்பிலுள்ள பாகில் போட்டுக்கிண்டிப் பதத்தில் இறக்கிக்கொள்ளவும்.

ஆறியபின் சுத்தமான தேன் 2½ சேர் கலந்து வைத்துக் கொள்ளவும்.

இதனால் தீரும் வியாதிகள்:—

1] அரோசிகம்
2] ரத்தகுன்மம்

3] சக்திகுன்மம்
4] பித்தாதிகம்
5] கர்ப்பாசய நோய்கள்

குறிப்பு :— கடைசிச் செய்யுளிலுள்ள 4 வது அடி முழுவதும் சரபேந்திர மன்னனைச் சிறப்பித்துக் கூறுகிறது.

---

# 81. சக்தி குன்மாதிக்கு வில்வாதி லேகியம்

கூவின் மூலமுப்பான் பலஞ்சீவிக்
கூட வெண்மரக்கால் நீரிட்டு
மேவிய குறுணியாய் வற்றக்காச்சி
வெல்லமுப்பான் பலங்கரைத்தே
தூவிதிற செவ்விய நாற்பலமிளகுந்
தூய சீரகமுந் திப்பிலியும்
பாவிரு பலமாயிடுஞ் சுக்கு மூன்றுபலஞ்
சித்திர மூலமு மதுரம் (௱அ௯)

திப்பிலி மூலஞ் சாதிபத்திரியுஞ்
சிக்கிது வகைக்கொருபலமாய்
ஒப்பிலவங்கப் பத்திரியேலமுட
னரைப்பலம் வகைக்கொக்குஞ்
செப்பிதைப் பொன்போனிறந்தர
வருத்துச்செய் பொடிதனைக்கடாயத்துள்
வைப்பிது பாகுபதந்தனிற்றாவி

மருவிட நாழித்தேன் வார்த்தே (௱அ௯)
தேனிட்டுக் கிளறிச்சிக்கென விறக்கித்
தினமொரு வெரு கடிதின்னத்
தானட்ட குன்மஞ் சத்திகுன்மங்கள்
சாரும் வெள்ளைக்களங்காணி

வேனிட்டகிருமி காசச்சுவாசம்
விடபாண்டு ரோகங்காமாலை
தானிட்ட வன்னவரோசிகங்களுமேற்
சாருநோய்பலவுந் தீர்ந்திடுமே. (௱அஉ)

(இ-ள்)

மேல் தோல் நீக்கிய வில்வவேரில் 30 பலம்எடுத்து நசுக்கி 8 மரக்கால் ஜலம் விட்டு ஊரவைத்து மறுநாள் அடுப்பின் மேலேற்றி 1 மரக்கால் ஆகும் வரை வற்றக் காச்சவும். பின்பு அக்கஷாயத்துடன் 30 பலம் வெல்லம் சேர்த்துக் கரைத்து வடிக்கட்டி அடுப்பின் மேல் ஏற்றிப்பாகுபதம் ஆகும் வரை காய்ச்சவும். இதனுடன்,

| | |
|---|---|
| செவ்வியம் | 4 பலம் |
| மிளகு | 2 பலம் |
| சீரகம் | 2 பலம் |
| திப்பிலி | 2 பலம் |
| சுக்கு | 3 பலம் |
| கொடிவேலிவேர் | 1 பலம் |
| அதிமதுரம் | 1 பலம் |
| கண்டந்திப்பிலி | 1 பலம் |
| ஜாதிபத்திரி | 1 பலம் |
| லவங்கப்பத்திரி | ½ பலம் |
| ஏலக்காய் | ½ பலம் |

ஷை சரக்குகளைப் பொன்னிறமாக வருத்து உரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு பாகில் சேர்த்துக் கிண்டிப் பதத்தில் இறக்கவும். ஆறியபின், தேன் 1 படி சேர்த்துக் கிளறி வைத்துக்கொள்ளவும். இதில் தினந்தோறும் 1 கழற்சிப் பிரமாணம் சாப்பிட

1. எட்டுவிதக் குன்மங்கள்.
2. சத்தி குன்மம்
3. வெள்ளை ஒக்காளம்

4. கிராணி என்னும் போக்கு
5. க்ருமி
6. காசம்
7. சுவாசம்
8. விஷபாண்டு
9. காமாலை
10. எல்லாவித அரோசகங்களும் தீரும்.

---

# 82. சத்தி குன்மாதிக்கு வில்வாதி லேகியம்

நல்லசீரகமு மிருபலமூன்று
லவங்கப்பத்திரி வராகனிடைச்
சொல்லிதை யிடித்துச் சூரணஞ்செய்து
தூயதேன் மூன்றுசேரதனை
வல்லெரிக் காச்சியாற விட்டெடுத்து
வகுத்த சூரணத்துடன் கலந்து
புல்லரோசிக முருத்திரப் புணிச் சத்திபுரி
குன்மம் போக்கு முட்கொள்ளேன். (எஅங)

(இ-ள்)

சீரகம் — 2 பலம்
லவங்கப்பத்திரி — 3 வராகனிடை

இவைகளை இடித்துச் சூரணம் செய்துகொள்ளவும். சுத்தமான தேன் 3 சேர் எடுத்து இளஞ்சூடாகக் காய்ச்சி ஆறவிட்டு எடுத்து ஷை சூரணத்துடன் கலந்துகொண்டு உபயோகிக்கவும்.

தீரும் வியாதிகள்:—

1. அரோசிகம்
2. சத்திகுன்மம் போன்ற பயங்கர ரோகம் இவை தீரும்.

# 83. பித்த குன்மாதிக்கு மருந்து

முசுமுசுக்கிலேயின் விழுதரை துவர்க்காய்
 மொத்த நல்லெண்ணே யாழாக்கும்
வசமெலும் பிச்சம் பழரசம் பிழிந்து
 மத்தித்து மூன்று வேளேக்கும்
பிசகிடாதருந்த விது விலக்கிடுந்
 தீப்பிணி பலவினுக்குஞ் சஞ்சீவி
கசடுறும் பித்த குன்மங்கடீரும்
 காணிச்சாய் பத்தியங்களுமே. (எஅச)

(இ-ள்)

முசுமுசுக்கிலேயை ஒரு கடுக்காய்ப் பிரமாணம் விழுதாக அரைத்து நல்லெண்ணே ஒரு ஆழாக்கோடு சேர்த்துக் குழப்பி எலுமிச்சம் பழரஸத்தையும் சேர்த்து நன்கு குலுக்கி வைத்துக் கொள்ளவும். இதை வேளேக்குத் துட்டெடை 3 வேளேயும் சாப்பிட்டுக்கொண்டுவர பற்பல ரோகங்களே தீர்ப்பதுடன் பித்த குன்மமும் போகும் இதற்கு இச்சாபத்தியமாக இருக்கவும்.

---

# 84. சத்தி குன்மாதிக்குத் தாமிர பற்பம்

தாமிரம் பத்துக்காசிடை நிறுத்துத்
 தகடு நேரியதாகிடத் தட்டிக்
கூம்புனுங்கலசத்துள்ளடை மேலுங்
 கொடுநெல்லிக் கெந்தகம் பொடித்துந்
தேம்பதிலஞ்சு காசிடை தூவிச்
 செய்யுரை நத்தையொன்றிட்டு
மாம்பிலந்தரத்தாமரையிலேயுரி நீர்
 வார் ஒரு கோலினுற்கிளறேன். (௲அரு)

நிளறியக்கல சத்தலேக்கி வாயோடு
கிட்டுமேற் சேலேமண் செய்து
வளரொரு கூடை வரளியதடுக்கி
வைத்ததற்குட்புடமிட்டும்
ஒளியெரி தன்னில் வெந்தபின்
பெடுத்து முத்திடுங்கலச மாறியபின்
குளிகலம்மியினிற் பொடிச்செய்து
பின்னுங் கூட்டிடுங் கலசத்தின் முன்போல். (எஅசு)

இத்தை மும்மடங்கும் புடமிடச் சிவக்கு
மெடும் பொடிச் செய்தொரு சிமிழில்
அத்தை வைத்தொரு போதினுக் கொரு
பணமாமளவு நன்வெல்லத்துட் கொடுக்கச்
சத்திகுன்மங்கடனேக் குடிப்போக்குந்
தன்வயிறிழிந்திட வேண்டிற்
குத்தியபுட்டி வெல்லத்துட் கொடுக்கக்
குணமுண்டு பத்தியங் கேளேன். (எஅஎ)

காடையென் குருவி சுறுக்கருவாடுங்
களிற்று மீன்றிருக்கை மீன்வற்றற்
கூட வெள்ளாட்டின் வற்றலுமுருங்கைக்
கூறெல்லாங் கொச்சைபின் பாலுங்
தேடிவையாறுமுடன் கொளத்தகு
மித்தின மிருப்த்து நான்காகும்
பாடியபுலவர் கலிதனேப்போக்கும்
பரிசுபொற் சரபவேந்துரையே. (எஅஅ)

(இ-ள்)

தாமிரம் 10 காசிடையை எடுத்து நன்கு மெல்லியதாக அடித்துத்தகடாக்கி வாய்குறுகிய ஒருகலசத்திற்குள் வைக்கவும். அதன் மேல் சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகத்தில் 5 காசிடை எடுத்துப் பொடிசெய்து அந்தக் கலசத்தில் போட்டு நத்தை ஒன்றையும் போட்டு, ஆகாசத் தாமரைச் சாறு அரைப்படி சேர்த்து ஒரு கோலினல் கிளரிக்கொடுக்கவும்.

பின்னர், இந்தக் கலசத்தின் வாய்க்குப் பொருந்தும்படியான ஒரு அகலை வைத்துச் சீலைமண் செய்யவும். இதை ஒரு கூடை அதாவது சுமார் 25 எருமுட்டையில் புடம் போடவும். நன்கு வெந்து ஆறியபின் கலசத்தை எடுத்துப் பிரித்து ஒரு கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொள்ளவும். இத்தூளை மறுபடியும் முன்போல் இரண்டு தடவை ஒரு கூடை வரளியில் சிவக்குமளவும் புடம்போடவும். இவ்வாறு செந்தூரம் கிடைத்தபின் அதைப் பொடிசெய்து சிமிழில் பத்திரப் படுத்திக்கொண்டு வேளைக்கு ஒரு பனவிடையளவு வெல்லத்தோடு கொடுக்கச் சத்தி குன்மங்கள் சுகமாகும். மலசுத்தியாக வேண்டுமானால் கருப் புட்டியுடன் கொடுக்கவும்.

இதற்குப் பத்தியம்:—

காடைக்குருவி, சுறுக்கருவாடு, கெளித்திமீன் வற்றல் திருக்கைமீன் வற்றல் வெள்ளாட்டு வற்றல், முருங்கைக்காய், வெள்ளாட்டுப்பால் இவைகள் உபயோகிக்கலாம். இவ்வாறு 24 நாட்கள் சாப்பிடவும்.

---

# 85. பித்த குன்மாதிக்கு சோம ரசம்

நாவிரச மரிதாரஞ் சரிகொடு
நாடிய தேக்கிலை காய்பூவே
கூவிது முச்சமஞ் சாறதிலிருநாட்
கூர்ந்தரை பொன்னாங்கணி நீரால்
மேவிரு நாளரைப் பாயிதையோர்குகை
வீக்கிடுவாய் சேலைமண் செய்தே
பூவினுங் குழலுளாயிதை வைத்துப்
போடெரு மேலும் புடமூடேன். (எஅக)

மூடு புடங்களுள்ளாறிட வாறிட
முன்னிரையஞ்சு புடந்தானே
போடு மெடுத்திதனைப் பொடியாய் விடம்
போக்கியுஞ் சுத்திசெய் நேர்வாளங்

கூடு பொடிச்சரிபாக மிடுத்திரு
குஞ்சி யிடைக்கா நெய்யாலே
நாடுமெனு பானங்களிலேயுண்
நாசமாம் பித்த குன்மந்தானே. (எகூ0)

(இ-ள்)

சுத்தி செய்த நாபி } இவை வகைக்கு
,, பாதரஸம் } சரியிடை
,, தாளகம் } எடுத்து

தேக்குமரத்தின் இலை, காய், பூ இவைகளை இடித்துப் பிழிந்த சாற்றில் ஊரப்போட்டு இரண்டுநாள் அரைக்கவும்.

பின்பு இதை பொன்னுங்காணிச் சாற்றினால் இரண்டுநாள் அரைத்து ஒரு குகையிலிட்டுச் சீலைமண்செய்து ஒரு குழியில் வைத்துப் புடம் போடவும். இவ்வாறு 5 புடம் போட்டுப் பொடியாக்கிக் கொள்ளவும். இதற்குச் சரிபாகம் நேர்வாளத்தை நன்கு சுத்தமாக்கித் தூளாக்கிச் சேர்த்துக் கொள்ளவும்.

இதில் ஒரு குன்றியளவு பசு நெய்யில் கொடுத்துவர பித்த குன்மம் தீரும். தகுந்த அனுபானத்திலும் கொடுக்கலாம்.

---

# 86. பஞ்ச குன்மாதிக்கு மருந்து

சாறணை வேரணுவாக நறுக்கிது
தன்னையு மேதி முன்னீராலே
யூறவை மூவிகலைக் கடுக்காய்வை
யூடரைத் துவெய்ய வினோராயே
மாற வுலர்ந்து பினேகவரும்
பொடிமா வெருகடியாம் பிரமாணஞ்
சேர வருந்தி வெந்நீர் குடியே
னிதிற்றீருமே பஞ்ச குன்மந்தானே. (எகூக)

(இ-ள்)

சாறணை வேரைச் சிறுசிறு துண்டங்களாக நறுக்கி சாறணை சாற்றிலேயே ஊரவைத்து எடுத்துக்கொண்டு அத்துடன் சரிபாகம் மூவரிக் கடுக்காய்சேர்த்து நன்கு அரைக்கவும். அரைத்த விழுதை வெயிலில்வைத்துக் காயவைத்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

இந்தப் பொடியில் ஒரு வெருகடி வெந்நீரில் சாப்பிட்டுவர ஐந்துவிதமான குன்மங்களும் தீரும்.

---

## 87. குன்மாதிக்கு மருந்து

கோடியதா யொரு சாடியுங்
 காயவை கோடதி*னிர்க் குன்றிலைதானே
போடிதிலுங் கல்லுப்புடனே
 வருபூரியான மோரையு மேல்வாரேன்.
கூடிதுமேன் றெளிவான நீரா
 யிறுகோரஞ் செய்குன்ம மெழும்போதே
தேடியருந்திடுமே குடியேகிடுஞ்
 செற்றதே சத்தி குன்மந்தானே. (எகூஉ)

(இ-ள்)

புதிதாய் ஒரு சட்டியை அடுப்பின்மேல் ஏற்றி அதில் வெண்ணொச்சி இலைபோட்டு அத்துடன் கல்லுப்பையும் போட்டு வருக்கவும். கொஞ்சம் சூடு இருக்கும் மோரையும் ஊற்றவும். பின்பு ஓரிடத்தில் வைத்து நன்கு தெளிந்தபின் மேல் தெளிவை இறுத்துக்கொண்டு குன்மம் ஆரம்பிக்கும்போதே சாப்பிட உடனே தீரும்.

---

* நிர்க்குன்றிலை = நிர்க்குண்டியிலை = நொச்சியிலை

# 88. இரத்த குன்மாதிக்கு மருந்து

சாறணைவேர் கொடிவேலியின்வேர்
கள்ளிதன் கொழுந்துஞ் சாதிக்காயே
வீறுபெறுங் கிழங்காங் கருவேலிலை
மேலெருக்கினது வேர்த்தோலே
கூறிரு சீரகந்திப்பிலி நாகரங்
கூட சமதாகமிந்துப் போடு
ஏற வசம்புடனு மிளகுஞ் சமஞ்சேர்
பெருங்காயம் பலமாமே. (௭௯௩)

மாகடுகின் பொடிதானுழக்கா
முள்ளிவாங்கிடுமோர் பலந்தாங்கூட
ஆகும் பிண்ணாக்கொரு கூறிதெலாங்
குப்பையாகிய மேனியினீராலே
நேகவரை சுண்டைக் காயளவா
யுண்டைநீ கட்டியெண்ணெயு நேர்வாரேன்
மோகமுடனதி காலமுணத்
தீருமூரிரத்த குன்மமுந்தானே. (௭௯௪)

(இ-ள்)

| | |
|---|---|
| வெள்ளைச்சாரணை வேர்<br>கொடிவேலி வேர்<br>கள்ளிக்கொழுந்து<br>சாதிக்காய்<br>ஈச்வரமூலி அதாவது பெருமருந்து வேர்<br>கருவேல் இலை<br>எருக்கின்வேர் பட்டை<br>சீரகம்<br>கருஞ்சீரகம்<br>அரிசித்திப்பிலி<br>சுக்கு<br>இந்துப்பு<br>வசம்பு<br>மிளகு<br>பொரித்த பெருங்காயம் | இவைகள் வகைக்கு 1. பலம் எடுத்து |

| | | |
|---|---|---|
| கடுகு | — | 1 உழக்கு |
| வெள்ளைப்பூண்டு | — | 1 பலம் |
| நல்ல பிண்ணாக்கு | — | ஒரு கையளவு |

இவைகளை ஒன்றிரண்டாகப் பொடித்துக் கல்வத்திலிட்டுக் குப்பைமேனிச் சாற்றினால் நன்கு அரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உருட்டவும். இதை நல்லெண்ணெயிலூரவைத்துத் தினந்தோறும் அதிகாலையில் சாப்பிட இரத்த குன்மம் தீரும்.

# 89. சத்தி குன்மாதிக்கு மருந்து

மாவுளிதூள் பொடியாமி தாழாக்கி
டுவாய் கிட்டமாம் பொடியாழாக்கே
பாவுகடுக் காய்த்தூளீ ராழாக்குடன்
பாவனை செய்தரை நாள்மூன்றே
மேவுலரப் பொடிதானிரு காசிடை
மேவிட வெல்ல முனுண்பாயே
தாவுகொளும் பல நோய்களுமே
குன்மந்தான் சத்தி குன்மமுஞ் சாராதே. (எகூறு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த எஃகு அரப்பொடி | — | 1 ஆழாக்கு |
| ,, மண்டூரம் (கிட்டம்) | | ,, |
| ,, கடுக்காய்த்தூள் 2 | | ,, |

இவைகளைத் தண்ணீரில் ஊரவைத்து நிழலில் நீர் சுண்டிய பின் 3 நாள் நன்கு அரைத்து வெயிலில் உலர்த்திக்கொள்ளவும். இதில் இரண்டு காசிடை வெல்லம்தின்று பின் சாப்பிடப் பலவித கஷ்ட ரோகங்களும் சத்தி குன்மமும் தீரும்.

# 90. வாத குன்மாதிக்கு மருந்து

வெள்ளுளி யோரன்பது பலமா
யிடிமே லிருகுறுணி தண்ணீர் வாரேன்
ஓள்ளனல் காய்ச்சி யுடன்பிழிந்தே
யதிலொற்ற சிற்றாமணக்கின் வேருங்
கொள்ளு புன்முருங்கையுஞ் சாறணை
சிவதை கூறு மாவிலங்கை தன்வேரா
முள்ளிலந் தையின் றேனுக நந்தியின்
வேர் மூக்கறணை மூலஞ் சுக்காமே. (௭௯௬)

இவ்வகையோ ரொன்றிரு பலமாய்
நறுக்கிடுவது நீர்பதக் குடனுமே
செவ்விதைக் காச்சிடு நாலிலொன்றாய்
வடித்தே முற்கடாயத் துடன்கூட்டே
செவ்விய மேலமரே ணு கங்காயமுஞ்
சித்திரமூலம் பங்கம்பாளை
நவ்விரு சீரகமோமம் வெட்பாலையு
நாகரந் திப்பிலி மிளகாமே. (௭௯௭)

ஆகிய தேவதாரமு மிதுசம
மாகிடுஞ் சூரணமே செய்வாய்
பாகுயர் கொம்மட்டி மாதுளங்கனிநீர்
பாவொரு சாமமரைப்பாய்பின்
னேகிது வத்திடுவாயிஞ்சி நீரினி
லேழுதிரந் தோய்த்திடுங் காய்ந்தே
வாகிதை வைத்திடுவாய் பஞ்சலோக
மென்மா கடாயத்தினுள் வைப்பாயே. (௭௯௮)

வைப்பது சூரணமிட்டதி காலமே
வாங்கிக்கொள் தீர்ந்திடு நோய்களாய்
முப்படு குன்மமுங் காசங் கிராணிகள்
மூடிமந் தாக்கினியுடன் சூலை

செப்பிடு வயிறு கடுப்புகள்
    மூலமுஞ் சேரு நீராம்பலிட நோவே
இப்பருநோய் முதலானது நீங்கிடு
    மென்றெண்ணி யிம்முறை செய்வாயே. (எகூகூ)

(இ-ள்)

வெள்ளைப்பூண்டு 50 பலம் இடித்து இரண்டு மரக்கால் ஜலம்சேர்த்து அடுப்பின்மேல் வைத்து நாலிலொன்றாய்ச் சுண்டக் காய்ச்சவும்.

| | |
|---|---|
| சிற்றாமணக்கு வேர்<br>கொள்ளு<br>பொன் முருங்கை<br>வெள்ளைச்சாரணை<br>சிவதை வேர்<br>மாவிலங்கை வேர்<br>இலந்தை வேர்<br>மூக்கரட்டை வேர்<br>சுக்கு<br>நாகதந்தி வேர் (பேய்க்கும்மட்டி<br>[வெள்ளைப்பூ உள்ளது) | இவை வகைக்கு 2 பலம் |

இதை ஒன்றிரண்டாக இடித்து 2 மரக்கால் ஜலம்விட்டு அதை நாலில் ஒன்றாய்ச் சுண்டக் காய்ச்சவும். இதையும் வடிக் கட்டி முன் கஷாயத்துடன் சேர்த்துகொள்ளவும்.

| | |
|---|---|
| செவ்வியம்<br>ஏலக்காய்<br>அரேணுகம்<br>பொரித்த பெருங்காயம்<br>கொடிவேலி வேர் | இவைகள் வகைக்கு 1 கழஞ்சு |

| | |
|---|---|
| ஆடுதீண்டாப்பாளை வேர்<br>சீரகம்<br>கருஞ்சீரகம்<br>ஓமம்<br>வெட்பாலையரிசி<br>சுக்கு<br>அரிசிதிப்பிலி<br>மிளகு<br>தேவதாரு | இவைகள் வகைக்கு 1 பலம் |

இவைகளை நன்கு சூரணித்துக் கொம்மட்டி மாதுளைச் சாற்றினால் ஒரு ஜாமம் அரைக்கவும். இது உலர்ந்தபின், கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றில் ஏழுதடவை பாவனைசெய்து உலர்த்திக் கொள்ளவும். இச்சூரணத்தை பஞ்சகோலக் கஷாயத்தில் அதாவது, சுக்கு திப்பிலி, கண்டந்திப்பிலி செவ்வியம் கொடிவேலி வேர் சேர்ந்த கஷாயத்தில் தினந்தோறும் அதிகாலையில் உட்கொள்ளக் கீழ்வரும் ரோகங்கள் தீரும்.

1. குன்மம்
2. கிராணி
3. அக்கினி மந்தம்
4. சூலை
5. வயிற்றுக்கடுப்பு
6. மூலம்
7. நீராம்பல் என்னும் வீக்கம்

பங்கம்பாளை = ஆடுதீண்டாப்பாளை

'பஞ்சலோகக் கஷாயம்' என்பது 'பஞ்சகோல கஷாயம்' என்பதன் திரிபு.

---

# 91. குன்மாதிக்குக் கோழிப் பற்பம்

சேவலின் காறலைபோக வயிற்றனுட்
சேர்கொடிவேலியு நாய்வேளை
காவெள்ளு காயுத்தாமணி சாறணைக்
காட்டியவை வகையின் வேரே
கூவிய மறலுமாகாயக்கருடனுங்
கூப்பிறண்டையப்பைக் கிழங்கோடே
வாய்விளங்கம் பெருங்காயமுங்
கடுகுள்ளி வாலுளுவைதிரிகடுகாமே. (உள)

காமவெட்பாலையினரி சதகுப்பையுங்
காணிரு சீரகமுங்காந்தம்
ஓமங்கல்லுப்பிவட்சார நவச்சார
மோதும் பொட்டிலுப்பாம் பாரே

பூமியட்டுப்போடு வளையலுப் போரென்றும்
போட்டு முக்கழஞ்சும் பொடியாமே
நீ மறவாமல் வைத்துவர்மண்ணிரு நாழி
நீர்குறுணியுங்கரை மேற்றேறே. (உ௱௪)

தேறலினுத் தொருதாழியுளிட்டு
வாய்சேலையும் வேடுகட்டதின் மேலே
யேறிடவைத்ததிலாவிகள் சோறிட
வீடொரு சாடியால் மேல் மூடேன்
கூறவாய் சேலைமண்செய் தெரியிட்டவிக்
கொண்டபின்னங்கமெல்லாம் போக்கே
மாறொருசாடியுங்காய நற்சாராயம்
வார்பது நாழிதனிற் போடேன். (உ௱௫)

சூரணம் போடு வறுத்திடுசாராயஞ்
சுண்டியபின்னெடு மேனீழல்
ஆரவுலந்திடி சூரணமே செய்து
வானதிதோர் வெருகடியீவாய்
பார்குன்மாதி கிராணியசீரணம்
பாயதிசாரம் மூலவாயுவே
பூரவயிற்றுள்வலித்துடல் வீக்கங்கள்
போக்கிடந்தேடிப்போம் பொய்யாதே. (உ௱௬)

(இ-ள்) ஒரு பருத்த சேவலைக் கொண்டுவந்து கால் தலை, இவற்றைப் போக்கி வயிற்றைக் கீறிக்குடல் முதலியவற்றை நீக்கவும்.

கொடிவேலி வேர்
நாய் வேளை வேர்
கருப்பு எள்ளு வேர்
உத்தாமணிவேர்
சாறணை வேர்
மருள் கிழங்கு
ஆகாசகருடன் வேர்
பிரண்டைக் கிழங்கு
அப்பைக்கோவைக் கிழங்கு

வாய்விடங்கம்
பெருங்காயம்
கடுகு
பூண்டு
வாலுளுவை
சுக்கு
திப்பிலி
மிளகு
வெட்பாலையரிசி
சதகுப்பை
சீரகம்
கருஞ்சீரகம்
காந்தம்
ஓமம்
கல்லுப்பு
யவட்சாரம்
நவச்சாரம்
பொட்டிலுப்பு
அட்டுப்பு
வளையலுப்பு

இவைகள் தனித்தனியே வகைக்கு 3 கழஞ்சு எடுத்துப் பொடிசெய்து சேர்த்துக் கோழியின் வயிற்றிலுள்வைக்கவும். உவர்மண் இருநாழிக்குத் தண்ணீர் குறுணிவிட்டுத் தெளிய வைத்து ஒரு தாழியில்விட்டு வேடுகட்டி வேட்டின் மேலே கோழியை வைத்து ஆவிபோகாமல் மூடிச் சேலைமண் செய்யவும். இதை அடுப்பின்மீதேற்றி அவிக்கவும். பின்பு கோழியை எடுத்து எலும்பையெல்லாம் நீக்கிவிட்டு உலர்த்திப் பொடிசெய்து கொண்டு ஒரு அகன்ற பாத்திரத்தைக் காயவைத்து அதிலே நல்ல சாராயத்தில் 1 நாழிவிடவும். அதில் மேல்சொன்ன சூரணத்தைப்போட்டுச் சாராயம் சுண்டும்மட்டும் வருத்து நிழலிலுலர்த்திப் பொடிபண்ணி தினம் வெருகடிபிரமாணம் சாப்பிட

குன்மம்
கிராணி

மூலவாயு
அஜீரணம்
உடல் வீக்கம்
இவைகள் தீரும்.

## 92. அட்டகுன்மாதிக்குச் சூரணமும் தைலமும்

காணெருக்கோர் கடகத்தினிறைந்திலே
கைக்கொடு வந்தீனுமேதி
யானிடு நீரெண் மரக்காலோர் பானை
யுளாயடை யிட்டந் நீர்வாரேன்
தானிதிலிருபடியுப் பிடுவாய் மறுசால்
அடியான்மூடிமண் சேலைசெய்
வானடுப்பேற்றிது பொங்காவிபோகா
மல்மண்குழைத்தப் பியெரிப்பாயே. (உாச)

ஓங்கனலிட்டெரி வெந்தபின்
சகலமுமொன்றி நிற்குந்தைலமுநாழி
தேங்கவிறுத்திது கொள் மறுசேலைமண்
செய்தெரி வெந்தது திருநீரும்
பாங்கது கண்டெடுமேலிடு மருந்தையும்
பார்கலவஸரைப் பலமேற்காயம்
வாங்கசமதாகந் திப்பிலி சுக்குடன்
மாமிளகு நாய்கடுகாமே. (உாரு)

சாறணைவேர் கொடுவேலிவேர் கடுகுடன்சார
வசம்போடு வெண்வெங்காயங்
கூறு பிறண்டையுப் பிட்டவித்தாட்டு தூட்கொள்
வகைக்கொன்றுக்கோர் பத்தாமேற்
சேர் வராகனிடைக் கொண்டுஞ் சூரணஞ்
செய்தறுபானுக்கு முன்சாம்பற்
கூறது முப்பான் வராகனிடையது
கூட்டிடி தூளை வடிக்கொள்ளேன். (உாசு)

கொள்ளவுஞ் சூரணம் வெருகடியளவாங்
கூறிடவலிகுன்மம் வாயுவோடே
உள்ள குன்மங்களும் நீங்கிடுந்தையிலத்தி
லோர் சிறுகரண்டியாலொருவேளை
விள்ளந்தி சந்திவிடாமலருந்திட
மேவிய சகலகுன்மமும் போமே.
தள்ளருமிருவது நாட்களில் வயிற்றி
லுண்டாகிய நோயெலாந்தான் போமே. (உ௱௭)

(இ-ள்)

காட்டு எருக்கின் இலை ஒரு பானைநிறையப் போட்டுக் கன்று ஈனாத எருமைக்கிடாரியின் மூத்திரம் எட்டுமரக்கால், உப்பு 2 படி, இவைகளையும் சேர்த்து அந்தப் பானைக்குத் தகுந்த பானை அடியால் மூடிச் சீலைமண்செய்யவும். இதை அடுப்பின்மேலேற்றி நன்றாக எரிக்கவும். ஆவி வெளியே போகாமல் அப்போதைக்கப்போது களிமண்ணைப் பூசிவரவும்.

இவ்வாறாக நன்கு எரிந்தபின் பானையினுள் யாவும் ஒன்றாகி நிற்கும். அதிலுள்ள எண்ணைசத்து 1 நாழி பானையிலேயே வைத்து மீதித்தெளிவை இறுத்துக்கொள்ளவும். மறுபடி சீலை மண் செய்து சரக்குகள் பற்பமாகும்வரை எரிக்கவும். இந்தப் பற்பத்தோடு சேர்க்கவேண்டிய சரக்குகள்.

பொரித்த பெருங்காயம் $\frac{1}{2}$ பலம்

ஓமம்
திப்பிலி
சுக்கு
மிளகு
நாய்க்கடுகு
சாரணைவேர்
கொடிவேலிவேர்
கடுகு
வசம்பு
யவச்சாரம்
வெள்ளைப்பூண்டு
பிரண்டை

} இவை வகைக்கு 10 வராகனிடை

எடுத்து அவைகளை அகன்றதோர் சட்டியில் போட்டு மற்றொரு சட்டியால் மூடி சீலமண் செய்து உலர்ந்தபின் அடுப்பிலேற்றி சிறு தீயாக ஒரு ஜாமம் எரித்துச் சாக்குகளை அவற்றின் புகையிலேயே அவித்து உலர்த்திச் சூரணம் செய்து சூரணத்தில் 60 வராகனிடைக்கு 30 வராகனிடை பற்பம் சேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்ளவும்.

இதை வேளைக்கு ஒரு வெருகடியளவாகச் சாப்பிடத் தீரும் நோய்கள் :—

1. வலிகுன்மம்
2. வாயுகுன்மம்

தைலத்தை ஒரு சிறு கரண்டியால் அந்திசந்திவிடாமல் சாப்பிட்டுக்கொண்டுவர சகலவிதமான குன்மங்களும் தீரும்.

20 நாட்கள் சாப்பிட வயிற்றுநோய்கள் யாவும் தீரும்.

---

# 93. குன்ம வாயுவுக்கு எண்ணை
## (சந்தம் வேறு)

வசம்பு வெள்ளுள்ளி காயமிந்துப்பு நால்வகையும்
பசும்பு சித்திரமூலிவேரெலும்பிச்சம்பழ நேர்
நசம்புஞ்சீந்திலின் வேரொரு நாரத்தங்காய்போல்
வசம் பெறக்கலந்தரை விளக்கெண்ணையுள் மலர்த்தே. (உ௱அ)

மலர்த்திப்பின்னனலெரித்ததைப் பதத்தினில் வடித்தோர்
கலத்துள்வைத்துக் கொள்ளெரி குன்மஞ் சத்திகாண் குன்மம்
வலித்த குன்மங்களண்டத்தில் வாதங்கள் வயிற்றுள்
கலத்த நோய்களு மூச்சுக்குத்திவையெலாங் கழலும். (உளகூ)

(இ-ள்)

வசம்பு
வெள்ளைப்பூண்டு
பொரித்த பெருங்காயம்
இந்துப்பு

} இவை நான்கும் சேர்ந்து ஒரு எலுமிச்சம்பழப் பிரமாணம்

பச்சையான கொடிவேலிவேர் — ஒரு எலுமிச்சம்பழப் பிரமாணம்

சிந்தல் கொடிவேர் — ஒரு நாரத்தங்காயளவு

எடுத்துக்கொண்டு யாவற்றையும் அம்மியில் வைத்து நன்கு தண்ணீரினால் கைபடாமல் அரைத்து விளக்கெண்ணெயில் குழப்பிக்கொள்ளவும்.

பின்பு இதை அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்திலிறக்கவும். ஒரு சீசாவில் பத்திரப்படுத்தி தினம் ஒரு வேளைக்கு ஒரு துட்டிடை உபயோகித்துவரத் தீரும் நோய்கள்

1. எரிகுன்மம்
2. சத்தி குன்மம்
3. வலி குன்மம்
4. அண்ட வாதம்
5. வயிற்று நோய்கள்
6. மூச்சு வாங்குதல்

---

# 94. குன்மாதிக்கு மருந்து

இருபலக்கரில் முப்பலச் சுண்டி நாற்பலச் சீரகமிரவி
தரு வெயிற்படக் காய்ந்திடிப் பொடி வடித்ததனில்
மருவுமிந்துப்புங் கல்லுப்பு முப்பலம் வங்கைக்கு
இருபலம் பொட்டிலுப்பிடப் பொடிச்செய்து மிணக்கேன்.

(உளம)

இணக்கிக்கொண்டொருவேளைக்கி வெருகடியெடுத்து
உணக்கொடுத்து வெந்நீரதின்மேலுணப் புளிப்பூ
சணிக்காய் பால் கைப்பு மோர் கடுகுடன் புகை தயிரும்
பிணக்கித் தள்ளிட வாயு குன்மங்களப்பிறம் போம். (உளயக)

(இ-ள்)

கரி மிளகு 2 பலம்

சுக்கு 3 பலம்

சீரகம் 4 பலம்

இவைகளை நன்கு உலர்த்தி உரலிலிட்டுப் பொடி செய்து கொண்டு வஸ்திரத்தினால் வடிக்கட்டிக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பொரித்த இந்துப்பு | } | வகைக்கு |
| ,, கல்லுப்பு | } | 3 பலம் |
| ,, பொட்டிலுப்பு | | 2 ,, |

இவற்றையும் பொடி செய்துகொண்டு மேல்சொன்ன சூரணத்துடன் கலந்துகொள்ளவும் :—

வேளைக்கு ஒரு வெருகடி எடுத்து வென்னீரோடு சாப்பிடவும். இதற்குப் பத்தியம் :—

புளி
பூஷணிக்காய்
பால்
கசப்பு பதார்த்தங்கள்
மோர்
கடுகு
புகையிலை
தயிர்

இவைகளை நீக்கவும்.

தீரும் வியாதி :—

வாயு குன்மம்.

# 95. குன்ம வாயுவுக்குக் கெந்தகத் தைலம்

கெந்தகம் பலமொன்றைச் சங்கம் பழக்கிரம்
முந்த விட்டரை கலந்திரவியின் முகம் வைக்க
வந்த சத்துவையிற்கினால் வழித்தும் பீங்கானிற்
தந்துயிற்கொளக் குன்மம்போம் புண்களிற்றடவேன்.
(இ-ள்) (உளயஉ)

சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் 1 பலத்தை சங்கம் பழத்தின் சாறுவிட்டு நன்கு அரைத்து நல்ல வெயிலில் வைக்க அதினின்று தைலம் பிறக்கும். அதை ஒரு இறகினால் எடுத்து

வழித்துப் பிங்கானில் சேமித்து வைத்துக்கொள்ளவும். இத் தைலத்தில் ஒன்று அல்லது இரண்டு சொட்டுகள் உள்ளுக்குச் சாப்பிட்டுவர குன்மங்கள் நீங்கும்.

ஆருத புண்களின்மேல் தடவ அவையுந்தீரும்.

---

## 96. குன்மாதிக்குப் பேய்க் கொம்மட்டி எண்ணெய்

பேய்க்கொம்மட்டி சம்பீரம் வெள்ளுள்ளி பேர் நொச்சில்
வாய்க்கு மிஞ்சியின்சாறு கொள் நாழியோர் வகைக்கித்
தீயில் நாழியாய்க் காய்ச்சதிலிரதஞ் சாதிலிங்கந்
தூயவெண்காரமிந்துப்புடன் காயமுஞ் சொல்லும். (உளயிங)

கடுகு வெந்தைய மிளகு நேர்வாள முங்காந்தம்
முடுகு மஞ்சளுமோமமுமொன்று முக்கழஞ்சாய்
இடுகவுமரைக்காய்ச்சிடக் குழம்பினிலிணக்கிக்
கடுகிடாமலுங் கிண்டிடும் பழம் புளிக்கடமே. (உளயிச)

பதத்திற் காய்ச்சியும் வடித்திடோர் பல்லகைதன்னுள்
இதத்தில் வைத்தொரு தூதளங்கனி யளவெடுத்துங்
கதித்த வெல்லத்துட் கருப்புட்டி யாவதிற்கலந்தும்
வதைத்த குன்மங்களஃவை நீராமையும் வல்லே. (உளயிரு)

உதிர வாயுவும் வாயுவும் பெரு வயிற்றுடனே
சதி மகோதரம் பீலிகை கவுசை கடானும்
அதிக தோடங்கள் வெப்புப்பாவைகள் முதலான
விதுவெலாங் குடியேகிடுங் கைகண்டதிதுவே. (உளயிசு)

(இ-ள்)

| | |
|---|---|
| பேய்க்கும்மட்டிக்காய்ச் சாறு<br>எலுமிச்சம்பழச்சாறு<br>வெள்ளைப்பூண்டின் சாறு<br>நொச்சிச்சாறு<br>இஞ்சிச்சாறு | இவைகள் வகைக்கு ஒருநாழி எடுத்து |

அடுப்பின் மேலேற்றி ஒரு நாழியாக ஆகும்வரை வற்றக் காச்சவும். அதனுடன்,

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | இவைகள் வகைக்கு 3 கழஞ்சு எடுத்து |
| ,, லிங்கம் | |
| பொரித்த வெண்காரம் | |
| ,, இந்துப்பு | |
| ,, பெருங்காயம் | |
| கடுகு | |
| வெந்தயம் | |
| மிளகு | |
| சுத்திசெய்த நேர்வாளம் | |
| ,, காந்தம் | |
| மஞ்சள் | |
| ஓமம் | |

கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு மேற்சொன்ன சாற்றில் போட்டு அடிப்பிடிக்காமல் பழம்புளி போன்ற பதம் வரும்வரை அடுப்பின் மேலேற்றிக் கிண்டவும். பதம் வந்தபின் இதை இறக்கிக்கொண்டு ஒரு பாத்திரத்தில் சேமித்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு தூதுவளங்காயளவு வெல்லத்துடனே அல்லது கருப்புட்டியுடனே கலந்து சாப்பிட பின்வரும் நோய்கள் தீரும்.

1. குன்மம்
2. நீராமைக்கட்டி
3. வயிற்றிலுள்ள வாயு
4. வயிற்றுப்பொருமல்
5. மகோதரம்
6. பிலீகம்
7. கவுசை
8. அதிக தோஷங்கள்
9. வெப்புப்பாவை

இவைகள் யாவும் தீரும்.

# 97. குன்ம வாயுவுக்கு மருந்து

கள்ளியின் பெருமரந்துணித்தொரு முளக்காட்டம்
உள்ளுறை வெண்டையெடுத்தொரு நாழி கல்லுப்பும்
கொள்ளவிட்டு நாரத்தங் காய்வாய் நெகிழக்கொண்டும்
உள்ளடைத்து மேலுப்பையிட்டந்தவாய் மூடேன்.

(உ௱௯௭)

மூடிமேற்புரிச்சுற்றுமியெருவுமாய் மூட்டி
நீடியகன்ற புடமிட்டு வெந்தபின் னெடுத்தே
கூடியவுப்புங்காயையும் வெவ்வேறாய்க் கொண்டு
தேடித்தின்னுங்காயுப்பி நீர்க்குடி குன்மந்தீரும்.

(உ௱௯௮)

(இ-ள்)

ஒரு பெருத்த கள்ளிக்கட்டையை எடுத்து அதிலுள்ள உள் சோற்றை எல்லாம் எடுத்து ஒரு உழக்குமாதிரி செய்து கொள்ளவும். அதில் ஒரு நாழி கல்லுப்பை போட்டு அதன் மேல் ஒரு நாரத்தங்காயை உட்செலுத்தி அதின்மேல் மறுபடியும் உப்பைப்போட்டு அந்த வாயை மூடி சந்திபந்தம் செய்து சீலைமண் செய்யவும். பின்பு உமியும் எருமுட்டையும் போட்ட ஒரு அகன்ற புடத்தில் அதைவைத்து வேகவைக்கவும். ஆறிய பின் அந்த உப்பையும், நாரத்தங்காயையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு அந்த நாரத்தங்காயைத் தின்று அந்த உப்பு நீரையும் குடிக்கவும்.

குன்மம் தீரும்.

---

# 98. குன்மவாயு வலிக்குச் சரபேந்திரக் குளிகை

சூதநாவிந்துப்பும் வெண்காரமுஞ் சுக்குஞ்
சாதிலிங்க மப்பிரகந்திப்பிலி யசமோதகம்
ஓதிடு கருஞ்சீரக மிளகிவை யோரொன்
றீதிடு வராகனிடை நேர்வாளமஞ்சளையே.

(உ௱௯௯)

இடைகள் கூட்டியுங் கரிப்பானீராலரைத்திதனை
யடையக்குஞ்சிபோலளவுண்டை செய்நிழலுலர்த்தித்
தடையிலாதிஞ்சிநீர் சுண்டிநீரொன்றிற்றுனே
இடவுங்குன்மங்கள் வாயுவுஞ்சுரங்களுமேகும்.

(இ-ள்) (உளஉ௰)

| | | |
|---|---|---|
| சுத்தி செய்த ரஸம் | | இவைகள் வகைக்கு 1 வராகனிடை |
| ,, நாபி | | |
| பொரித்த இந்துப்பு | | |
| ,, வெண்காரம் | | |
| சுக்கு | | |
| சுத்திசெய்த லிங்கம் | | |
| ,, அப்ரகம் | | |
| திப்பிலி | | |
| ஓமம் | | |
| கருஞ்சீரகம் | | |
| மிளகு | | |

சுத்தி செய்த நேர்வாளம் 5½ வராகனிடை

இவைகளைக் கரிசாலங்கண்ணிச் சாற்றினால் நன்றாக அரைத்துக் குன்றுமணியளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதை இஞ்சிச் சாற்றிலோ அல்லது சுக்குக் கஷாயத்திலோ ஒரு குளிகை வீதம் சாப்பிட பலவகைப்பட்ட குன்மங்களும், சுரங்களும் தீரும்.

---

# 99. வலிகுன்மத்துக்குப் பேதி

வெள்ளைக்காக்கணன் பாக்களவரைப்பதவ்வேரைக்
கள்ளமேதியின்றேய்கட்டித்தயிரினுட்கலந்து
கொள்ளக்குன்மங்கள் பேதியினிற் கழிந்தபின் குளித்து
விள்ளுமோருடன் மிளகு நீர் சோறுண வீழும்.

(உளஉக)

(இ-ள்)

வெள்ளைக்காக்கரட்டான் பாக்களவு எடுத்து அம்மியில் வைத்து நன்றாக அரைத்து கட்டியான எருமைத்தயிரோடு

கலந்து உட்கொள்ளவும். நன்கு பேதியானபின் குளித்து விட்டு மிளகு ரசம் வைத்து, மோரும் சேர்த்து சாப்பிடவும்.

குன்மம் தீரும்.

---

# 100. சத்தி, இரத்த, வலி, எரி, வாயு குன்மாதிக்கு மருந்து

கடுகுசுக்கிந்துஞ்சாதிக்காய் கரிளுடன்காயம்
இடுகிராம்பசமோதகமெள்மலாவகமுங்
கொடுவெள்ளுள்ளி முக்காற்பணவிடையுடன் கொண்டு
படுகருத்த சீரகம் விசுவாசுவைப் பகரேன்.
(உளஉஉ)

முருங்கையினிலைச் சாற்றரை முன்கருஞ்சீரகம்
இருகழஞ்சியுங் கருக்கவும் பொடிச்செய்திம் மருந்தை
ஒருங்கரைத்திட்டுப் பிசைந்து கோதும்பை மாவுரியு
மருங்கு தூவியுங் களியெனக் கிளறிவைத்திடுமே.
(உளஉங)

வைத்துமோரிலிம் மருந்தொரு பாக்களவாகத்
துய்த்துங்காலமே முப்பது நாட்கோர்த்துடங்கும்
பத்தியஞ்சுக்குப் பொடியெண்ணை வெள்ளைதன்பாலாஞ்
சத்திரத்தமும் வாய்வெரிவலிகுன்மந்தளரும்.
(இ-ள்) (உளஉச)

| | |
|---|---|
| கடுகு | இவைகள் வகைக்கு $\frac{3}{4}$ பணவிடை |
| சுக்கு | |
| இந்துப்பு | |
| ஜாதிக்காய் | |
| மிளகு | |
| பொரித்தகாயம் | |
| கிராம்பு | |
| ஓமம் | |
| எள்ளுப்பிண்ணாக்கு | |
| வெள்ளைப்பூண்டு | |
| கருஞ்சீரகம் | |
| சாதிப்பத்திரி | |

இவைகளை முருங்கையிலைச் சாற்றிலரைத்து மேல்சொன்ன கருஞ்சீரகம் 2 கழஞ்சியைக் கருகவருத்து இதையும் சேர்த்து ஒன்றாக நன்கு அரைத்துக் கோதுமை மாவு 1 படியையும் சேர்த்துத் தண்ணீர் சிறிது சேர்த்துக் களியாகக்கிண்டவும்.

இம்மருந்தில் ஒரு பாக்களவு மோருடன் காலையில் 30 நாட்கள் சாப்பிடச் சத்திகுன்மம், இரத்த குன்மம், வலிகுன்மம் இவை தீரும்.

இதற்குப் பத்தியம்:— சுக்குப்பொடி, எண்ணெய், வெள்ளாட்டுப்பால் உபயோகிக்கலாம்.

---

## 101. குன்மங், கெண்டை, சூலை வாயுத்திரட்சிக்கு மருந்து

தண்டு நீக்கிக்கொடிவேலி வேரது
தான்படர்ந்த பிரண்டைவேர்ப்புன்கின் வேர்
திண்டுகாய் வேரயில் மரப்பட்டையுஞ்
சீதநீக்கிய மாவிலங்கைப் பட்டை
கொண்டு சங்கவேர் புன்முருங்கைவேருங்
கூர்மறுள்மூலங்கொள் வகைக்கோர்பலங்
கண்டுரலிலிட்டுப் பொடியாயிடி
காணுந்தூளைக்கைசெய்திடக்கேளுமே. (உளஉரு)

எடுத்திடுமருந்தைப்புதுப் பாண்டத்துளிட்டு
நீயுமிதின்மேலுங்கல்லுப்பைப்
படுத்திடும்படி யொன்றிட்டு பின்கேளும்
பருத்ததோர் சட்டியாற் பானை வாய்மூடியே
தொடுத்தும் பூமியிற்றோண்டிக் குழிசெய்து
தொந்தமாகப் புதைத்து மேற்சட்டியால்
அடுத்துமூடியெருப்புடமிட்டுமே
லருணகாலத்திலாறியெடுத்திடேன் (உளஉசு)

கறையிலிட்டிடித்தூளை வடிக்கட்டிக்
கலசத்துள்வைத்துக் காணோர்வெருகடி
இறையை நோக்கியிருவேளையுங் கொள்ளுவீர்
ஏயதீ வினையாலெழு நோய்களும்
முறை கெடும்வாயுவு சூலைத்திரட்சியு
மோதிடுங் கெண்ட குன்மவியாதியும்
மறையப்போகுமெனவுஞ் சரபேந்திர
மன்னர் மன்னன் வகுத்த முறையிதே. (உளஉஎ)

(இ-ள்)

முற்றிய கொடிவேலி வேரைக் கொண்டுவந்து உள்ளிருக்கும் நரம்பை நீக்கிவிட்டு அதன்வேர்
பிரண்டைவேர்
புங்கம்வேர்
உகாவேர்
ஆயில்யமரப்பட்டை (பூதிகம்)
மாவிலங்கபட்டை
சங்கம்வேர்
பொன் முருங்கைவேர்
மருள்வேர் (கிழங்கு)

இவைகள் வகைக்கு 1 பலம்

இவற்றை கல் உரலிலிட்டுப் பொடியாக்கிக்கொள்ளவும். பின்பு இதை ஒரு புதுப்பானையுள்ளிட்டு அதன் மேல் கல்லுப்பை 1 படி போட்டு அதன்வாய்க்குத் தகுந்தபடி ஒரு பெரிய சட்டியால் மூடவும். அதற்குச் சீலைமண்செய்து குழிக்குள் வைத்து மேல் சட்டியின்மேல் எருமுட்டையை வைத்து அடுக்கிப் புடம்போடவும். நன்கு ஆறியபின் மறுநாள் விடியற்காலத்தில் எடுக்கவும். அதிலுள்ள கரித்தூளை ஒரு பாண்டத்தில் பத்திரப்படுத்தி வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்ளவும். இதை வெருகடியளவு காலை மாலை இருவேளையும் கொள்ளப் பின்கண்ட ரோகமனைத்தும் தீரும் :—

1) வாயு
2) சூலை
3) கெண்டை
4) குன்மம்

# 102. சகல குன்ம மூலாதிக்கும் மருந்து

அயம்பொடித்தஞ்சு கழஞ்சொரு கழஞ்சிரதாதி
இயம்பு கெந்தகமிரு கழஞ்சிடுமனோ சிலையே
நயம்பிரு கழஞ்சிட்டுங் கற்றாழையின்னீர்
வியம்பரைத்திடலா மொருயாமம் விடாதே. (உ௱உஅ)

மையிடும் படியரை பட்டபின் கல்வத்துடனே
வெயிலில் வைக்கப் பற்பமாகிடு மிந்துலவணம்
வையிருபங்குந்திப்பிலி சுக்கு மாமிளகுஞ்
செய்யிருபங்குஞ்சூரணித்திட்டி திற்கடுக்காய். (உ௱உகூ)

தூளுமூன்று பங்கிது வெலாமுன் பற்பத்தோடே
மீளக்கூட்டியுங் கரிப்பானீராலும் விடாமல்
நாளெலாமரைத்தொரு நிட்கங்குளிகையு நாட்டிக்
கோளுலத்திஞ்சி நீர் பஞ்சகோசலக்குடி நீர். (உ௱௩௰)

தன்னிலோருண்டையிடக் குன்மம் பீலிகை சகலங்
குன்னமாஞ் செலகூர்மமும் வயிற்றினோய் குட்டம்
அன்ன ரோசிகமக்கினி மாந்தங்களடங்கா
இன்னஞ் சேர்பல ரோய்களுந்தீரும் பாரிதற்கே. (உ௱௩௧)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த அரப்பொடி | 5 | கழஞ்சு |
| ,, பாதரஸம் | 1 | ,, |
| ,, நெல்லிக்காய் கந்தகம் | 2 | ,, |
| ,, மனச்சிலை | 2 | ,, |

இவற்றை கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றினல் கையோயாமல் 1 ஜாமம் அரைக்கவும். நன்கு மைபோல் அரைபட்ட

வுடன் அக்கல்வத்திலேயே அடையாகத் தட்டி வெயிலில் வைக்க அது பற்பமாகிவிடும். பின்பு

இந்துப்பு — 2 பங்கு (10 கழஞ்சு)

திப்பிலி
சுக்கு
மிளகு } இவை சேர்த்து 2 பங்கு (10 கழஞ்சு)

இவற்றை நன்றாகச் சூரணித்துக் கடுக்காய்த்தூள் 3 பங்கும் (15 கழஞ்சு) சேர்த்து முன் பற்பத்தோடு மறுபடியும் கல்வத்திலிட்டு கரிசாலங் கண்ணிச் சாறுவிட்டுக் கையோயாமல் 1 நாள் அரைத்து ஒரு நிஷ்க (வராகனெடை)ப் பிரமாணம் மாத்திரை உருட்டவும். நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு இஞ்சிச் சாற்றிலாவது, பஞ்சகோல (திப்பிலி, கண்டதிப்பிலி, செவ்வியம், கொடிவேலிவேர், சுக்கு) கஷாயத்திலாவது ஒரு மாத்திரை வீதம் சாப்பிட,

1) குன்மம்
2) பீலிகை
3) ஜலக்கூர்மம் (நீராமை)
4) வயிற்றுநோய்
5) குஷ்டம்
6) அரோசகம்
7) அக்கினி மந்தம்

முதலிய நோய்கள் தீரும்.

---

# 103. குன்மாதி, அசீரணங்களுக்குச் சங்ககுடாரி குளிகை

சங்கினீரேழுபலம் புளியம்பட்டைச் சாம்பல்
பங்கிடெண் பலமஞ்சுப்புந்தான் பலமெட்டாய்
இங்கு நால்வராகனிடையுங் கெந்தகமிரதந்
தங்கு நால்வராகனிடையும் வகைக்கொன்றுதானே

(உாக௨)

முக்கடு கொருவகைக்கிரு நிட்கமுன்னிட்டே
தக்கெலும்பிச்சச் சத்தொரு நாளரைத்ததனை
வைக்கவோர் நிட்கக்குளிகையாய்ச் செய்து வல்லிஞ்சி
புக்க சீரணஞ் சூலேகுன்மதிசாரம் போமால்.

(உரு௩௩)

(இ-ள்) சுத்திசெய்த சங்கு நீறு 7 பலம்
புளியம்புரணிசுட்டசாம்பல் 8 ,,

கடலுப்பு
இந்துப்பு
வளையலுப்பு } இவை எல்லாம் 8 பலம்
உழமண்ணுப்பு
அட்டுப்பு

சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் — 4 வராகனிடை
,, பாதரஸம் — 4 ,,

சுக்கு
திப்பிலி } வகைக்கு 2 நிஷ்கம் (2 வராகனிடை)
மிளகு

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு ஒரு நாள் விடாமல் அரைத்து நிட்கபிரமாணம் மாத்திரை உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

ஒரு மாத்திரை வீதம் இஞ்சிச்சாற்றில் சாப்பிட,

1. அஜீரணம்
2. சூலை
3. குன்மம்
4. அதிசாரம்

இவை நீங்கும்.

குறிப்பு:—

---

80-ம் செ. சுவடியில் 'பெருங்காயம் வராகனிடை 4' என்பது சேர்க்கப்பட்டிருக்கிறது.

# 104. குன்ம, காசாதி நோய்க்கு இரத சேகரம்

இரதந்தாமிர பற்பங் கெந்தகமிசை நாவி
திரிகடு கயபற்பம் வெண்கார மூந்திசையிற்
பரவிலவங்க நாக கேசரஞ்சங்கின் பற்பந்
திரள் பொன்னூமத்தின் விரைதுடிலவங்க பத்திரியே. (௨௭௩௪)
கூவிளைப் பழச்சதையுங் கத்தூரி கூர்மஞ்சள்
தாவிதுக் கெலாஞ்சமன் கையாந்தகரையின் சாற்றூற்
பாவிடத்தின் மூன்றரை விடாமலும் பகுப்பாய்
மேவிடக்குஞ்சியிடைக் குளிகைய தென்விதிப்பாய். (௨௭௩௫)
விதித்தி டோர்குளிகையினைத் தேன் விட்டனுபானம்
மதித்திடு மஞ்சுவகைக்குன்மங் காசமாக்ஷயமுங்
கதித்த சுவாசமந்தாக்கினி சூலை காமாலை
அதிக்கிராணியும் பித்தபி சாரங்களறுமே. (௨௭௩௬)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | இவைகள் வகைக்கு 1 வராகனிடை |
| தாமிரபற்பம் | |
| சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | |
| ,, நாபி | |
| சுக்கு | |
| திப்பிலி | |
| மிளகு | |
| அயபற்பம் | |
| பொரித்த வெண்காரம் | |
| கிராம்பு | |
| சிறுநாகப்பூ | |

| | |
|---|---|
| சங்கபஸ்பம் | இவைகள் வகைக்கு 1 வராகனிடை |
| பொன்னூமத்தை விரை | |
| லவங்கப்பத்திரி | |
| வில்வப்பழச்சதை | |
| கஸ்தூரி மஞ்சள் | |

எடுத்துக் கல்வத்திலிட்டு எல்லாவற்றிற்கும் சமமாகக் கையாந்தகரை (கரிசாலங்கண்ணி)யின் சாற்றினால் 3 நாள் கை ஓயாமலரைத்து குன்றுமணிப்பிரமாணமாக மாத்திரை உருட்டி நிழலிலுலர்த்திக்கொள்ளவும்.

இதில் ஒரு குளிகை விதம் தேன்விட்டுக் குழைத்துச் சாப்பிட:-

1) ஐந்துவகை குன்மம்
2) காசம்
3) க்ஷயம்
4) சுவாசம்
5) மந்தாக்னி
6) சூலை
7) காமாலை
8) பித்த அதிசாரம்
9) கிராணி

இவைகள் தீரும்.

இதற்குப் பெயர் இராதசேகரம்

---

# 105. குன்மாதி பீலிகை, பெரும்பாடு கெர்பவிச்சதிக்கு வித்தியாரசம்

நீடுங்கந்தகந்தாளகமஞ்சேசிலை நிமிளை
போடுந்தாமிரப்பற்பமுஞ் சமமதாய்ப் பொருத்தித்
தேடுந்திப்பிலிக் கடாயமிட்டரையொரு தினந்தான்
கூடுமுன்னரைப் பணவிடை கட்டிடுங்குளிகை. (உ௩௭)

உலத்திப்பின்னற்காண நீர் தன்னிலோருண்டை
மலத்திக்குன்மமும் பீலிகை தீர்ந்திடுமகச்சூல
நிலைத்திலாதிரு மாதமும் மாதத்தினெகிழ்ந்தார்
திலத்தில் வெல்லகடாயமிட்டதிற் சிறு தேக்கே. (உ௩௮)

முக்கடுச்சமன் பொடிவராகனிடை முற்குளிகை
யொக்கவும் பொடித்திட்டுணச் சூனிலைத் தொன்றுஞ்
சுக்குந்திப்பிலி தேவதாரம் புங்கமரத்தோ
றக்கவுஞ்சிறு தேக்குடன் சமன் பொடிதானே. (உ௩௯)

ஒரு வராகனெய்க்குளிகையும் பொடிபிடைக்கொக்கும்
மருவெள்ளும் வெல்லமாய்க் குடிநீர் வைத்துள்வாங்கப்
பெருகுதிரங்கள் சாய்ப்பதுங்கொள் பெரும்பாடுந்
தரிகொளாமற் போங்கடிதடப்பெருவலி தனிக்கே.

(உசயு)

சித்திரப்பருப்பும் வேம்பினுள்ளுரை விறையுஞ்சேர்த்து
வைத்திடுங்குளிகை யொன்று மாநிம்பநீரால் வாட்டி
உத்திதை யோனிக்குள்ளே பூசிட வலியையோட்டுந்
துத்த தோடமும் வலிக்குந்தனக்குணச்சுகமதாமே.

(உசக)

(இ-ள்) சுத்திசெய்த கெந்தகம்
,, தாளகம்
,, மநச்சிலை
,, நிமிளை
தாமிரபற்பம்
} இவை வகைக்கு 1 வராகனிடை

இவைகளைக் கல்வத்திலிட்டுத் திப்பிலிக் கஷாயம் விட்டு ஒரு நாள் அரைக்கவும். பின்பு இதை $\frac{1}{2}$ பணவிடை நிறையுள்ள குளிகைகளாகச் செய்யவும்.

வேளைக்கு 1 உருண்டை வீதம் கொள்ளுக் கஷாயத்தில் சாப்பிடக் குன்மம், பீலிகை, உள்சூலை, இவைகள் இருமாதத்தில் போகும். இல்லாவிடில் எள்சேர்த்த வெல்லக்கஷாயமிட்டு அதில்,

சிறுதேக்கு
சுக்கு
திப்பிலி
மிளகு
} வகைக்கு 1 வராகனிடை பொடித்து

முன் சொன்ன குளிகை ஒன்றுசேர்த்துச் சாப்பிடவும்.

சுக்கு
திப்பிலி
தேவதாரம்
புங்கமரப்பட்டை
சிறு தேக்கு
} இவைகளை வகைக்கு 1 வராகனிடை வீதம் எடுத்து

பொடிசெய்து கொண்டு இதற்கு சமன் குளிகையும் சேர்த்து எள்சேர்ந்த வெல்லத்தண்ணீருடன் சாப்பிடப் பெரிதான ரத்த ஒழுக்கு, பெரும்பாடு, நிற்காத இடுப்புவலி இவைகள் நீங்கும்.

ஆமணக்குப் பருப்பு (கொட்டை முத்து)
வேப்பம் பருப்பு

இவ்விரண்டையும் சேர்த்து ஒரு குளிகையும் சேர்த்து வேப்பங்கஷாயத்தால் அரைத்து யோனிக்குள்ளே பூசிவைக்க சகிக்கமுடியாத வலிகளை எல்லாம் அகற்றும்.

இதற்கு பெயர் வித்யாரஸம்.

---

# 106. குன்மவிஷூசி, அஜீரணத் துக்கு ஹிங்குச் சூரணம்

காயமிந்துப்புஞ் சீரகம் வசம்பு நாகரமும்
ஆயரீதகிச் சித்திரமூலி வேரதின்றோல்
நேயகோட்டமுமெண் வகை நிரையதாநிட்கந்
தோயொன்றுதி யெட்டெணிறுத்திட்டுஞ் சூரணியே. (உசஉ)

செய்து சூரணம் வெருகடியிள வெந்நீர் செலுத்தி
வைதற் கொள்ள விசூசி குன்மமக்கினி மாந்தங்
கைதரோசிகம் வாந்திய ஜீரணங்களுமேல்
எய்து நீரிழியாட்டுடன் நீங்கிடு மிதற்கே. (உசங)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பொரித்த பெருங்காயம் | 1 | வராகனிடை |
| ,, இந்துப்பு | 2 | ,, |
| சீரகம் | 3 | ,, |
| வசம்பு | 4 | ,, |
| சுக்கு | 5 | ,, |
| கடுக்காய் தோல் | 6 | ,, |
| கொடிவேலி வேர் தோல் | 7 | ,, |
| கோஷ்டம் | 8 | ,, |

இவ்வெட்டுச் சரக்குகளும் மேல்கண்ட நிறை வீதம் எடுத்துக்கல்லுரலிலிட்டு நன்கு இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும்.

இதில் ஒரு வெருகடி அளவு இளவெந்நீரில் சாப்பிட

1. விஷபேதி என்ற காலரா
2. குன்மம்
3. அக்கினி மந்தம்
4. அரோசகம்
5. வாந்தி
6. அசீரணங்கள்
7. நீரிழிவு

இவைகள் தீரும். இதற்கு "ஹிங்க்வாதி சூரணம்" எனப் பெயர்.

---

# 107. குன்மாதிக் குடிநீர்

ஆயிலும் புங்கின் பட்டையும் சாரணையதின் வேர்
தீயிலுங் கொடிவேலியின் வேர் திரிகடுகுந்
தூய விந்துப்பு மரிதகி யிவைகளுந் தோதுந்
நீயிடுங்குடி நீரிராக்குடி குன்ம நோசாம். (உசச)

(இ-ள்)

ஆயில்யமரப்பட்டை
புங்கம்பட்டை
சாரணைவேர்
கொடுவேலிவேர்
சுக்கு
திப்பிலி
மிளகு
இந்துப்பு
கடுக்காய்

இவைகளை சமனடை எடுத்து உரலிலிட்டு, ஒன்றிரண்டாக இடித்து 16 பங்கு ஜலம்விட்டு 8ல் ஒன்றாகக் கஷாயமாக சுண்டக் காய்ச்சி இராத்திரிக் குடிநீராக உபயோகிக்கக் குன்மம் குணமாகும்.

---

## 108. குன்மஞ்சூலைக்கு மோர்க்கடுகு

ஆயிலின் றேரல் கொடுவேலி கருவேம்புஞ்
சேங்கொட்டை யாகுங் கொற்றான்
நாய்வேளை புங்கு வட்டத்திருப்பி
புண்ணைகாவளை வேர் நாகணந்தி
மெய்சிறுகல்லூரி மூக்கரத்தை
வசம்பது செவ்வியம் வெள்ளுள்ளி
தூயசிறு மூலகஞ் சிவதை கூவிளை
சாரணையைந்து பலமாய்த்தூக்கே. (உசரு)

தூக்கியபின்னறுக்கி யிட்டு முக்குறுணி
நீரதனைச் சொரிந்து நாலொன்
றாக்கிய் மோரறுநாழி காடியுமுந்
நாழி யுப்புத்தாணோர் நாழி
தேக்கிருபான் பலங்கடுக்காயுடன்
சாதிக்காயதிலுந் தேருஞ்சுக்குத்
தாக்கி யிட்டுக்காய்ந்த பின்னுந்
தனிலூரி நெய் யெண்ணையுரிச் சார்வாறே. (உசசு)

வாத்தி தெல்லாங் காய்ந்து பதமான
வறதி காயமிளக சமதாகம்
போத்து கருஞ்சீரகமிந்துப்புந் திப்பிலி
சுக்கு பொருந்துஞ் சீரகம்
ஏத்திவையொன்றாக் கெண்பலம்
பொடிசெய்திது கடுக்காயிரக்கித்தின்ன
தோத்து குன்மம் இருமல் பீலிகை
கிராணிதுத் தத்துட்சூலை போமே. (உசஎ)

(இ-ள்) ஆயில் பட்டை
கொடிவேலிவேர்
கருவேப்பிலை
சுத்திசெய்த சேங்கொட்டை
முடக்கற்றான்
நாய்வேளை
புங்கம்பட்டை
வட்டத்திருப்பி
புன்னை
காய்வேளை வேர் (காட்டுமல்லிகை)
நாகணந்தி
கல்லூர்வஞ்சி
மூக்கரட்டை
வசம்பு
செவ்வியம்
உள்ளிப்பூண்டு
இளம் முள்ளங்கி
சிவதைவேர்
வில்வவேர்
சாரணைவேர்

இவைகளை வகைக்கு 5 பலம் எடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றி ரண்டாக இடித்து 3 மரக்கால் தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாகச் சுண்டக்காச்சவும். இதனுடன்

மோர் 6 நாழி
காடி 3 நாழி
உப்பு 1 நாழி
கடுக்காய் 20 பலம்
ஜாதிக்காய்
சுக்கு

இவைகளை இடித்து மேல் கூறிய கஷாயத்தோடு சேர்த்து

நெய் ½ படி
எண்ணை ½ படி

சேர்த்து மறுபடி அடுப்பின் மேலேயே வைத்துப் பதமாக வரும்போது அதில்

| | |
|---|---|
| பெருங்காயம்<br>மிளகு<br>ஓமம்<br>கருஞ்சீரகம்<br>பொரித்த இந்துப்பு<br>திப்பிலி<br>சுக்கு<br>சீரகம் | இவைகள் வகை ஒன்றுக்கு 8 பலம் எடுத்துச் சூரணித்துப்போட்டு |

குழப்பி வைத்துக்கொள்ளவும். இதை தினந்தோறும் அடி வண்டலோடு சாப்பிட

1. குன்மம்
2. பீலிகை
3. கிராணி
4. சூலை

முதலியவை நீங்கும்.

---

## 109. குன்மாதி முதல் வியாதிக்கு தாவாக்கினி சூரணம்

முக்கடுகும் பெருங்காயமோம மஞ்ச
டிப்பிலியின் மூலங் கோட்டந்
தக்கிடுங் கோரைக்கிழங்கு வாயுவிளங்க,
மிருசீரகஞ்சார்வசம்புந்
தொக்கடு குரோகணியுஞ் செவ்வியஞ்
சித்திர மூலி தூயஞ்சுப்புந்
திக்களிறின் றிப்பிலிகள் கண்டங்
கத்திரி மூலந்திரிபலாவே. (உசஅ)

பொன்முசுட்டை சிவதைவேர் பாலை
சிறுவழுதிலையும் பொருமெவட்பாலை
தன்னரிசியவட்சாரஞ் சிறு தேக்குஞ்
சத்திதருஞ்சாரமஞ்சள்

பின்னு மரமஞ்சள் வசம்பது
சமனாய்க் கொண்டு பெருஞ்சூரணங்கள்
இன்னதிலும் பாதியதக்கார மிட்டுக்
கொள்ளிதனாலேகு நோயே. (உசசு)

வாதகுன்ம முதரநோய் பழமலம
சீரணம் பாண்டக்கினி மாந்தஞ்
சீதவரோசிகங்காச சுவாசங்கள்
வாந்திகளுந்திரள் வியாதி
யீதகலுமக்காரமிலையாகிற்
சூரணத்தையிதவாய்க் கொள்ள
சீதானை நிகர் சரபோசேந்திரமாலிம்
முறையைத் தெரிவித்தாரே. (உருய)

(இ-ள்)

சுக்கு
திப்பிலி
மிளகு
பெருங்காயம்
ஓமம்
மஞ்சள்
கண்டந்திப்பிலி
கோஷ்டம்
கோரைக் கிழங்கு
வாயுவிடங்கம்
ஜீரகம்
கருஞ்சீரகம்
வசம்பு
கடுகுரோகிணி
செவ்வியம்
சித்திரமூலம்
கடலுப்பு
இந்துப்பு
வளையலுப்பு
உவர்மண் உப்பு
அட்டுப்பு
யானைத்திப்பிலி
கண்டங்கத்திரி வேர்
கடுக்காய்

நெல்லிக்காய்
தான்றிக்காய்
பொன் முசுட்டை வேர்
சிவ்தை வேர்
பாலை வேர்
சிறுகத்திரி வேர்
வெட்பாலையரிசி
யவட்சாரம்
சிறுதேக்கு (கண்டுபாரங்கி)
சத்திச்சாரம்
மஞ்சள்
மரமஞ்சள்
வசம்பு

இவைகளை தனித்தனி சம அளவாக எடுத்துக்கொண்டு நன்கு உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணம் செய்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். இதன் நிறைக்குச் சரிபாதி சர்க்கரையோ அல்லது கருப்புக்கட்டியோ சேர்த்துக்கொள்ளவும்.

இதனால் தீரும் நோய்கள்.

1. வாதகுன்மம்
2. மலச்சிக்கல்
3. அஜீரணம்
4. பாண்டு
5. அக்கினிமந்தம்
6. அரோசிகம்
7. காஸங்கள் ( இருமல் )
8. ச்வாஸங்கள்
9. வாந்தி

சர்க்கரை இல்லாவிடில் இதைத்தனியே சாப்பிடலாம்.

# 110. பஞ்சகுன்மஞ் சூலை பெரு வயிறுக்கு மருந்து

சாதிலிங்கம் வெண்காரமிந்து சுக்குமிளகுவசம்பசமதாகம்
வாதிதிப்பிலி சிவதைவேரிங்குங்கிரிமி சத்துருவாயுவிளங்கந்
நீதினிலவாமணக்குமிவை யொன்றுங்கழஞ்சொன்றாய்ச்
[சேகரித்துப்
பாதியுங் கேழ்சுத்திசெய்த நேர்வாளம்பாதியுமாய்ப்பழச்
சாறாட்டே. (உருக)

நாவலின்றோலிரதத்தினற் சாமமொன்றரைத்து நறுங்குஞ்சிக்கி
யாவளவாயுண்டை நிழலாத்தியிள வெந்நீராலாகுந்தேனிற்
பாவவொருவுண்டைபொடிசெய்திட்டுங்கொடுமூலம்
[பஞ்சகுன்மங்
கோவசன்னி விரோத மகோதரங்கசமுங்காமாலை குணமாய்ப்
போமே. (உருஉ)

(இ-ள்) சுத்தி செய்த லிங்கம்
பொரித்த வெண்காரம்
,, இந்துப்பு
சுக்கு
மிளகு
வசம்பு
ஓமம்
திப்பிலி
சிவதை வேர்
பெருங்காயம்
அதிவிடயம்
வாயுவிடங்கம்
நிலவாமணக்கு
} இவைகள் வகைக்கு 1 கழஞ்சு, அதாவது சுமார் $1\frac{1}{4}$ வராகனிடை

இவை யெல்லாவற்றிற்கும் பாதி இடை ($6\frac{1}{2}$ கழஞ்சு) சுத்தி செய்த நேர்வாளப் பருப்பும் சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு அரைக்கவும். பின்பு நாவல் பட்டைச் சாற்றையும் விட்டு ஒரு ஜாமம் அரைத்துக் குன்றி

மணிப்பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைக்கவும்.

இதைத்தேனிலோ அல்லது இளஞ்சூடான வென்னீரிலோ 1 மாத்திரை வீதம் கொடுக்க

1. மூலம்
2. பஞ்சவித குன்மங்கள்
3. சன்னிவகைகள்
4. மகோதரம்
5. காமாலை

இவைகள் தீரும்.

---

# 111. குன்மத்துக்கு மருந்து

புங்கின்றோலை இடித்தோர்துலாங் கொள்ளுமது
தூளோர் புதுப்பானைக்குள்
நன்கினியகாடிமரக் காலிதிலளந்திடுவாய்
நான்கதாகப்
பின்கிநெட்டொன்றாய்க் காய்ந்ததையாற்றி
ரசமிரங்கப்பிசைவடித்துந்
தின்கிரண்டு படியுப்பு மொருபடி பூண்டின் பருப்புந்
திருத்தித்தானே. (உருக)

நெய்யுழக்கு வெள்ளாட்டின் பாற்றயிராய்த்
தோய்ந்தபடி நீர் விடாமல்
நையதனைக்கடைந்தெடுத்தம் மோருதான்
படியளவு நான்கு விட்டுச்
செய்யெண்ணெயுங் கள்ளிப்பாலுழக்கோர்
வகைக்கிட்டுச் சேர்த்திதெல்லாம்
மெய்யெரியுமந்தாக்னி தனிற்பாகு திரள்
போதில் விடு மருந்தே (உருஉ)

கொடுவேலி புளிச்சிராய் பலாசாட்
டாங்கொடி பிரமிகொன்றைக் கள்ளி
யொடு சுட்ட சாம்பல் வகையொவ்வோரொன்ற
ரைப்பலமாயூட்டிக் கின்றி
விடுமெண்ணை கலசத்தில் வைத்தொரு பாக்க
ளவாய் விடியற் கொள்ளுங்
கெடுங்குல்மம் பலபிணி கடனக்கனுபானங்
தெரிந்து சேழ்த்திடாயே (உ௫௩)

சூரணங்கள் கடாயத்துட்கற்கவகைதனி
லிட்டுத்துய்க்கும் போது
பாரகுவை சூலை வல்லை பீலிகையும் வயிற்றூதற்
பாவை வெப்புங்
கோரக்கிராணிகள் முதலா நீராமை கவுசை
களுங் குலைந்தோடிப் போஞ்
சேரலர்கள் புரஞ்செற்ற சிவதியான்
சரபோசன் செய்விப்பாமே. (உ௫௪)

**(இ-ள்)**

புங்கமரப்பட்டையை **1** துலாம் (நூறு பலம்) கொண்டு வந்து உரலிலிட்டு நன்றாக இடித்து அத்தூளை ஓர் புதுப்பானைக் குள்போட்டு அதன்மேல் காடி 4 மரக்கால் ஊற்றி அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சவும். பின்பு சக்கையைப் பிசைந்து வடிக்கட்டிக்கொண்டு அதில் **2** படி உப்பையும் **1** படி வெள்ளைப்பூண்டுப் பருப்பும், போட்டு நெய் **1** உழக்கு விடவும். வெள்ளாட்டுப் பாலை உரைக்குற்றித் தயிராகத் தோய்ந்தபின் அதைத் தண்ணீர் விடாமல் மோராக்கியதில் **4** படி எடுத்து ஷை கஷாயத்துடன் சேர்த்துக் கொள்ளவும். அதனுடன்

நல்லெண்ணை **1** உழக்கு
கள்ளிப்பால் **1** உழக்கு

இவற்றையும் சேர்த்து அடுப்பின்மேல் ஏற்றி மந்தாக்கினி யால் எரித்துப். பாகுபதம் வரும்போது அதில்

| | | |
|---|---|---|
| கொடிவேலி வேர்<br>புளியஞ்சிராய்<br>பலாசு (புரசு)<br>ஆட்டாங்கொடி<br>பிரமி<br>சரக்கொன்றை<br>கள்ளி | } | இவைகள் சுட்டசாம்பல்<br>தனித்தனியே<br>½ பலம் |

எடுத்துச் சூரணித்துப் போட்டு லேகியம் போல் செய்து வைத்துக் கொள்ளவும். இதை எண்ணெய்க் கலசத்தில் பத்திரப்படுத்தவும்.

இதில் ஒரு பாக்களவு விடியற்காலத்தில் தகுந்த அனுபானத்துடன் உட்கொள்ள, குன்மம் நீங்கும்.

தகுந்த கல்க கஷாய அனுபானங்களுடன் உட்கொள்ள.

1. அரையாப்பு
2. சூலே
3. பீலிகை
4. வயிற்றுப் பொருமல்
5. வெப்புப்பாவை
6. கிராணி
7. நீராமை
8. கவுசை

இவைகள் தீரும்.

# 112. குன்மாதி, கவுசைக்குத் திராவகம்

வளையலுப்பிந்துப்பும் வெடியுப்பு நாயுருவி வறுகல்லுப்பும்
எளின் சக்கையுப்பு வகைக்கோர்பலந்தா நவச்சாரமிவச்
சாரங்கள்
விளைசவட்சார வகைக்கைம்பலமாய்க் காரீயமிசை வெங்காரம்
நளி துற்றம் படிக்காரஞ் சவுக்காரங் கெந்தியன்னபேதி
நாட்டே (உருரு)

தாம்பிரத்தினரை பொடியுமிருதார்சிங்கிவைகள் பலந்தானும்
வாங்கித்
தேம்புதிருகடுகின் வகைக்கிரு பலமாகத் தட்டித்தெளிந்த
நீரைத்
தாம்படியுங் நாலிலொன்ருய்க் காச்சி வடி முன்னுரைக்குஞ்
சரக்கரைத்துக்
கூம்பு தென்னங்குடுக்கை தனிலிட்டடைத்துச் சேலையும் மண்
கூட்ச்செய்யே (உருசு)

செயதுமொரு பானைதனைத் துளையிட்டு மருந்தடை தேங்காய்
துவாரம்
யெய்தவது சரிவைத்துப் பிசகாமற் சீலைமண் செய்திதைக்
குழிக்குள்
வைய்துக்கீட் சிறுகுழி தோண்டிக்கலசம் வைத்ததின் மேன்
மருந்தின் பானை
யையமத்திக் கீழுமண் பூசெரு வடுக்கிப்புட தயிலமாகும்
பாரே (உருஎ)

அதையெடு பீங்கான் குப்பிதன்னில் வைத்து நோய்தெரிந்து
மருந்தக்கேளும்
இதைய ரைக்காற் பணவிடையாங்குன்மாதி சூலை சயமீளைகாசம்
வதை பீலிகைபட்டிகை பக்கக்கவுசை கவுசைகளுமற்ற னேகம்
மூதிய வியாதிகடருமுறை தெளிந்து சரபேந்திரன் மொழிந்த
வாறே, (உருஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| வளையலுப்பு<br>இந்துப்பு<br>வெடியுப்பு<br>நாயுருவி உப்பு<br>கல்லுப்பு<br>எள் செடியின் உப்பு | தனித்தனியே 1 பலம் |
| நவச்சாரம்<br>யவக்ஷாரம்<br>சவுட்டுக்காரம் | வகைக்கு 5 பலம் |
| காரீயம்<br>வெங்காரம்<br>துத்தம்<br>படிக்காரம்<br>சவர்க்காரம்<br>நெல்லிக்காய் கெந்தகம்<br>அன்னபேதி<br>தாம்பிர அரப்பொடி<br>மிருதார் சிங்கு | வகைக்கு 1 பலம் |

இவைகளை எல்லாம் சேகரித்து வைத்துக்கொண்டு

| | |
|---|---|
| சுக்கு<br>திப்பிலி<br>மிளகு | வகைக்கு இரண்டு பலம் எடுத்து |

நசுக்கி 4 படி ஜலம்விட்டு அதை நாலில் ஒன்றாகக்காய்ச்சி வடிக்கட்டி மேல் சொன்ன சரக்குகளைச் சேர்த்து இக்கஷாயத்தால் அரைத்துக் கல்கமாகச் செய்துகொள்ளவும்.

ஒரு முற்றின தென்னங்குடுக்கையைக் கொண்டுவந்து, அதற்குள் ஷெ கல்கத்தை அடைத்து மூன்று முறை களிமண்ணால் சேலைமண் செய்யவும். ஒரு புதுப்பானையைக் கொண்டுவந்து அதனுடைய அடியில் ஒரு சிறிய துவாரம் செய்யவும். தேங்காயிலுள்ள துவாரமும் பானையின் அடி துவாரமும் பொருந்தும்படி வைத்து பானை வாய்க்குச் சீலைமண் செய்யவும்.

பானை நுழையும்படி ஒரு குழியைத் தோண்டி அதன் அடியில் இன்னும் சிறிய குழியை தோண்டி அதில் ஒரு பீங் கான் கிண்ணத்தை வைக்கவும். அதன் மேல் மருந்துச்சட்டி யின் அடி துவாரம் படியும்படியாக வைத்து அசையாமலிருக்கச் சேலைமண் செய்யவும். மேல் சட்டிக்கு நாலுபக்கத்திலும் எரு முட்டைகளை அடுக்கி நெருப்பிட, அச்சூட்டினால் பீங்கானில் புடத்தைலம் இறங்கும். அதை ஒரு குப்பியில் பத்திரப் படுத்தி உபயோகிக்கவும். இதை தினம் $\frac{1}{8}$ பணவிடை (அரைக் குன்றுமணியிடை) வீதம் சாப்பிடத் தீரும் வியாதிகள் :—

1) குன்மம்
2) சூலை
3) க்ஷயம்
4) ஈளை
5) காசம்
6) பீலிகை
7) பக்கக் கவுசை

முதலிய வியாதிகள் தீரும்.

---

# 113. குன்மாதி பீலிகைக்கு

சாரணைவேர் கொடுவேலிவேர் புன்கின்றோன் முற்றக்காசா
யிற் றோற்
கூறுசிறுகாஞ் சோரிவேர் பெருமரத்தின் மேற்றோலுங்
கோலச்சுக்கும்
வீறுதிப்பிலி மிளகு மிவ்வகை யொன்றுறுபல மேலிடத்தே
மாறுசலங்குருணி விட்டு வத்தக்காச்சிதில் மருந்தின் வகையுங்
கேளே. (உ௫க)

ஆத்தியின் பூவசமோதஞ் சாதிக்காயிரு சீரமுக்குராவேர்
மாத்திரு திப்பிலி கோட்டங் கரில் சுக்கு சாதிபத்திரிவளர்
வில்வத்தின்

ஏத்தப்பழச் சதையுடனிவ் வொன்றுக்கு நாற்பலமாயிட்டரைத்துத்
தோத்து பதமாய்க் காச்சி வடித்திதை நக்கக்குன்மந்துலைந்து
போமே. (உகூ)

ஆதளை மேற் புல்லுருவியதை நன்னீர் தனிவிட்டு மட்டக்காச்சி
வேதந்த நீர் குடிக்கலாகும கோதாஞ்சூலைமிடல் செய்பிலிப்
பேதமுனுங் கவுசையாதி வைகள் தீரும் பாரும் பெருநீர்
சூழ்ந்த
பூதலத் தோர்க்காக முறைச்சரபோசி மகராசன் போதிப்பாமே
(இ-ள்) (உகூக)

| | |
|---|---|
| வெள்ளைச்சாறணைவேர் | வகை ஒன்றுக்கு 6 பலம் |
| கொடிவேலிவேர் | |
| புங்கின் தோல் | |
| கோரைக்கிழங்கு | |
| ஆயில்பட்டைத் தோல் | |
| சிறுகாஞ்சோரிவேர் | |
| பெருமரப்பட்டை | |
| இலந்தை | |
| சுக்கு | |
| திப்பிலி | |
| மிளகு | |

இவற்றைக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து ஒரு மரக்கால் ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்ருக வற்றக்காய்ச்சிக் கஷாயத்தை இறுத்துக்கொண்டு

| | |
|---|---|
| ஆத்திப்பூ | வகைக்கு 4 பலம் எடுத்து |
| ஓமம் | |
| சாதிக்காய் | |
| சீரகம் | |
| கருஞ்சீரகம் | |
| அமுக்குராக் கிழங்கு | |
| திப்பிலி | |
| யானைத்திப்பிலி | |
| கோட்டம் | |
| மிளகு | |
| சுக்கு | |
| ஜாதிப்பத்திரி | |
| வில்வப்பழச் சதை | |

அரைத்து ஷெடி கஷாயத்திலிட்டுப் பிசைந்து மெழுகு பத மாக ஆகும்வரை அடுப்பில் வைத்துப் பின்பு உபயோகிக்கவும்.

இதை தினந்தோறும் $\frac{1}{4}$ தோலா வீதம் சாப்பிடக் குன்மம் தீரும்.

ஆமணக்குச் செடியின் மேல் வளரும் புல்லுருவியைத் தண்ணீரில் இட்டு நன்கு காய்ச்சி அச்கஷாயத்துடன் சாப்பிட.

மகோதரம், சூலே, பீலிகை கவுசை முதலியவை தீரும்.

ஆதளை = ஆமணக்கு

---

# 114. குன்மம் பீலிகைக்குக் கோடா சூழிமாத்திரை

அரிதார நாவிரதங்கந்தகமும் வெண்காரமா னேர்வாளந்
தெரிசுத்தி தனித்தனியே செய்து சமன்றிரி கடுகுந்திரிபலாதிச்
சரி கூட்டி மூன்றுதினங் கரிப்பானீரால ரைத்துத் தன்னை
மாத்திரை
யொரு பணவிடையளவாயிள வெய்யிற்பட வீதனையுலர்த்து
வாயே (உகூஉ)

உலத்திடுமோருண்டையுமே ழெட்டென்னு மிளகிட்டு
முண்ணக்கேளு
பெலத்திடு குன்மாதியும் வாயூராலும் வயிற்றுள்வலி பீலிதானும்
புலத்துதையங் கொள்ளப்போங் குணமாகும் பித்தசடம்
பொருந்தினோர்க்கு
நலத்த சருக்கரை கூட்டிக் கொள்ளலாம் பிணிகள்
(இ-ள்) பலநாடாதாமே. (உகூங)

| | |
|---|---|
| சுத்தி செய்த தாளகம்<br>,, நாபி<br>,, பாதரஸம்<br>,, நெல்லிக்காய் கந்தகம்<br>பொரித்த வெண்காரம்<br>சுத்தி செய்த நேர்வாளம் | } இவைகள் தனித்தனி 1 வராகனிடை |

சுக்கு
திப்பிலி } இவை சேர்ந்து 6 விராகனிடை
மிளகு

கடுக்காய்
நெல்லிக்காய் } இவை தனித்தனி 2 விராகனிடை
தான்றிக்காய்

இவைகளை எடுத்துக் கல்வத்திலிட்டுக் கரிசாலைச் சாற்றினால் 3 நாள் கையோயாமலரைத்து 1 பணவிடையளவாக உருட்டி இளவெயிலில் உலர்த்தி வைக்கவும். இந்த மாத்திரை ஒன்றை ஏழெட்டு மிளகுடன் சேர்த்து தினம் விடியற்காலத்தில் சாப்பிட.

1) நாள்பட்ட குன்மம்
2) வாயில் ஜலம் ஊறுதல்
3) வயிற்றுவலி
4) பீலிகை முதலியவை தீரும்.

பித்த சரீரமுள்ளவர்க்கு 1 மாத்திரை வீதம் சர்க்கரையில் சாப்பிடவும்.

---

# 115. குன்மாதி எட்டுக்கும் பெருங்காயச் சூரணம்

பெருங்காயம் பலமொன்று வெள்ளைப் பூண்டைந்
துபலம் பேரிந்துப்பும்
வரும் பொட்டிலுப்புடனுங் கல்லுப்புமிவட்
சாரம் வளைகிலுப்புங்
பருகு திப்பிலிமூல நவச்சாரந்தும் பிராட்டம்படர் வெண்காரந்
தரு கடுக ரோகிணி யோம நாயுருவி வாழையதின்
சருகுந்தானே. (உ௬௪)
சலமுள்ளி கண்டங்கத்திரி சுட்ட சாம்பலோடு
சரக்கொன்றுக்குச்
சொலுமிட்ட வராகனிடை யொன்றுகுஞ்சமன் கூட்டிச்
சூரணஞ்செய்

பலவெண்பூண்டுத் தயிலமிட்டரைத்து மிருவேளை பாங்காய்க்
கொள்ள
விலகட்ட குன்மமுடன் பலவகை நோயுந்தீர்ந்து விளங்குவாரே.
(உகரு)

(இ-ள்)

பொரித்த பெருங்காயம் — 1 பலம்
வெள்ளைப்பூண்டு — 5 பலம்

| | |
|---|---|
| இந்துப்பு<br>பொட்டிலுப்பு<br>கல்லுப்பு<br>யவட்சாரம்<br>வளையலுப்பு<br>கண்டந்திப்பிலி<br>நவச்சாரம்<br>போரத்தை<br>வெண்காரம்<br>கடுகுரோகினி<br>ஓமம் | இவைகள் வகை ஒன்றுக்கு 1 வராகனிடை |

| | | |
|---|---|---|
| நாயுருவி<br>வாழைச்சருகு<br>நீர்முள்ளி | இவைகளின் க்ஷாரம் | வகை ஒன்றுக்கு 1 வராகனிடை |

கண்டங்கத்திரி சுட்டசாம்பல்

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்கு சூரணித்துக்கொள்ளவும். பின்பு வெள்ளைப்பூண்டுத் தயிலத்தினால் நன்கு கல்வத்திலிட்டு அரைத்துக்கொண்டு ஒரு மிளகு அளவு வியாதிக்குத் தக்கவாறு இருவேளை உட்கொள்ள எட்டுவிதக் குன்மங்களும் இன்னும் பலவகை நோய்களும் தீரும்.

தும்பராட்டம் — போரத்தை

# 116. எரிகுன்ம வெக்கைக்கு மருந்து

காணியின் றன்னிலை துவைத்த சாறோடும்
        பழங்கஞ்சி கலந்து கொண்டு
ஊனு நெய்யுஞ் சந்தணமுங் கூட்டியதை
        உதயத்தி லுண்ணத்தானே
நாணியெரி குன்மமுட னுள்ளூறு வெட்கை
        கடீரு நாவலோர்க்கும்
பூணு மறையோர் தவர்க்கு நல்குரவை
        சரபேந்திரன் போக்குமாற் போல். (உசசு)

(இ-ள்)

பொன்னாங்காணி இலைச் சாறோடு பழயகஞ்சி சேர்த்து கலந்து வைத்துக்கொண்டு நெய்யும் சந்தணமும் குழைத்துக் கொண்டு அதை விடியற்காலத்தில் சாப்பிட்டுக்கொண்டுவர எரி குன்மங்கள், வெக்கை முதலியவைகள் தீரும்.

---

# 117. எரிகுன்ம வாயுவுக்குக் கடாயம்

காசிடையின் மிளகதனைக் கடையலிட்டுச் சீரகமுக்காசிடைக்கி
வாசமுற வருத்து மறைப்படி சலமிட்டதைக் காலாய் வத்தக் காச்சிக்
காசிரண்டு நிறைகொண்ட கற்கண்டும் பொடித்திட்டுக் கபிலை நெய்நாற்
காசிடைதானிட்டந்தி காலையின் முத்தினங்கொள் குன்மங் கரந்து போமே. (உசஎ)

(இ-ள்)

மிளகை ஒரு காசிடை எடுத்துப் பொடித்து சீரகம் 3 காசிடை எடுத்து அவ்விரண்டையும் பொன் வருவலாக வருத்துக் கொண்டு ½ படி ஜலம் விட்டு ⅛ படியாக வற்றக் காய்ச்சவும். பின்பு அதனுடன் 2 காசு எடை கற்கண்டு சேர்த்துக்கொண்டு பசுவின் நெய் 4 காசியிடை சேர்த்துக் காலை மாலை 3 நாள் சாப்பிட எரி குன்மம் தீரும்.

# 118. வயிற்றிற்கட்டி வியாதிக்கு மருந்து

கடுக்காய்த்தூள் முகித்தள்ளுஞ் சேங்கொட்டை
வெள்ளையுள்ளிகாணிந்துப்பும்
அடுத்த வெல்லம் இவைகள் வகைக்கிருபலமாமிரத
முமைங்காலதாக்கக்
கொடுக்கவராகனிடை முந்திச்சேங்கொட்டை
தனையிடித்துக் கொண்டொவ்வொன்றாய்
விடுத்திடியோர் கலசத்துள் வைத்தேற்றுவிற்றள
வாய்விழுங்கிடாயே. (உசுஅ)

ஒன்பது நாளந்திசந்தி யுண்டுவர வாய்வெந்து
முதரகொந்தும்
பின்பு குதங்கடுத்தாலுங் கழிந்தாலும் விட்டுவிட்டுப்
பிறகு மாற்று
நன்பசுவினெய்யதனிற் சருக்கரை நெற்பொரி
மாவுகாட்டிக்கிண்டித்
தின்பது வென்னீர்குளியோரண்டெண்ணெ
தலைமுழுகத் தீருந்தானே. (உசுகூ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| கடுக்காய்த்தூள் | } | வகை ஒன்றுக்கு 2 பலம் |
| சுத்தி செய்த சேங்கொட்டை | | |
| வெள்ளைப்பூண்டு | | |
| இந்துப்பு | | |
| வெல்லம் | | |

சுத்தி செய்த பாதரஸம் $1\frac{1}{4}$ விராகனெடை, இவைகளை எடுத்து முதலில் சுத்திசெய்த சேங்கொட்டையைக் கல்லுரலில் விட்டு இடித்து மசிந்தபின் ஒவ்வொரு சரக்காகப் போட்டு நைய இடித்து ஒரு கலசத்தில் பத்திரப்படுத்தவும். இதில் ஒரு

தேற்றாங்கொட்டையளவு தினம் அந்திசந்தி விழுங்கவும். இவ்வாறு 9 நாள் சாப்பிடவும். வாய்வெந்து வயிறும் வெந்து ஆஸனம் கடுத்தாலும் கழிந்தாலும் மருந்தை நிறுத்திவிட்டு அதற்கு மாற்று அடியில் கண்டபடி சாப்பிடவும்.

நல்ல பசுவின் நெய்யில் சர்க்கரையும், நெற்பொரி மாவையும் சேர்த்துக்கிண்டித் தின்றுவரவும். அதனுடன் தலைக்கு விளக்கெண்ணை தேய்த்து வென்னீரில் ஸ்நானம் செய்யவும்.

---

# 119. வயிற்றுவலி குன்மஞ்சகலத் துக்கும் மருந்து

பாலொடுவி சிறுகுறுஞ்சா வாதொண்டையழிஞ்சிலப்பைக்
கிழங்கும்
மேலிடு சிற்றாவரையின் மூலமு நன்னாரி கொடுவேலி
தாலும்
வேலியினிற் பருத்தி சிறுகீரைப்பெரு மருந்திவைகள்
வேரதாகுங்
கோலும் வனக்கருணையினக்கிழங்கு நாகரமுஞ்
சேங்கொட்டைதானே (உஎ0)

வெள்ளையுள்ளி வசம்பு நேர்வாள மிளகிந்துப்பு
வெட்பாலைத் தோல்
ஒள்வளையலுப்பு நவச்சாரமுடனே சீன்முற்றகாரங்
கள்ளமிலாக் கருஞ்சீரமனோசிலையில் வகை
முன்னங்காண் மருந்துங்
கொள்ள வருத்துப் பொடிசெய் கூருகருப்புட்டிதனிற்
கொடுத்திடாயே. (உஎக)

கொடுத்திடோர் வெருகடிதான் பஞ்சகுன்மஞ் சோகை
பித்தக்குளுப்பைதானுங்
தொடுத்திடு நீராமை யிரத்தக்கவுசை பெருவயிறுஞ்
சூலையாமம்
அடுத்திடு வெப்புப்பாவை குடல் வாதமகோதரங்
ளாறும் பாடு
படுத்திடு விப்புருதி சயகாச கவுசைகள் வழுவப்பாரை
போமே (உளஉ)

(இ-ள்)

கொடிப்பாலை வேர்
சிறுகுறிஞ்சான் வேர்
ஆதண்டை வேர்
அழிஞ்சில் வேர்
அப்பக்கோவை கிழங்கு
சிற்றுவரை வேர்
நன்னாரி வேர்
கொடிவேலி வேர்
வேலிப்பருத்தி வேர்
சிறுகீரை வேர்
பெருமருந்த வேர்
காட்டுக்கருணைக்கிழங்கு
சுக்கு
சுத்திசெய்த சேங்கொட்டை
வெள்ளைப்பூண்டு
வசம்பு
சுத்திசெய்த நேர்வாளம்
மிளகு
பொரித்த இந்துப்பு
வெட்பாலைப்பட்டை
வளையலுப்பு
நவச்சாரம்
சீனக்காரம்
கருஞ்சீரகம்
மனோசிலை சுத்தியானது

} இவைகள் எல்லாவற்றையும் தனித் தனி சம பாகம் எடுத்து

இளவறுப்பாக வறுத்துக்கொண்டு கல்லுரலிலிட்டு இடித்து சுருப்புட்டி சேர்த்து வைத்துக்கொள்ளவும். இதில் தினந் தோறும் ஒரு வெருகடி சாப்பிட,

1) பஞ்சகுன்மம்
2) சோகை
3) பித்தக்குளுப்பை
4) நீராமை
5) ரத்தக்கவுசை
6) பெருவயிறு
7) சூலை
8) வெப்புப்பாவை
9) குடல் வாதம்
10) மகோதரம்
11) விப்புருதி
12) க்ஷயம்
13) காசம்

முதலியவைகள் தீரும்.

பாலோடுவை=கொடிப்பாலை.

## 120. வலிகுன்மாதிக்குக் குடிநீர்

முக்கடுகுங் கொடுவேலி சாறணைவேர் வகைக்கிரண்டா மொழி மருந்தும்
ஒக்க நறுக்கிடு தண்ணீர் நாற்படியும்† விட்டதனையுரியாய்க் காச்சித்
தக்கிடிருவேளை யொன்றுக்கொரு சிரங்கைக் குடிநீரைத்தான் குடித்தாற்
குக்கில் வலிகுன்ம முதற் கொடுநோயுந் தீரு மிது குணமாந் தானே. (உளஙு)
(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு<br>திப்பிலி<br>மிளகு *<br>கொடிவேலிவேர்<br>சாறணைவேர் | } வகைக்கு 2 பலம் எடுத்து |

சிறியதாக நறுக்கி 4 படி தண்ணீர்விட்டு ½ படியாக வற்றக் காச்சி தினம் காலை மாலை ஒரு கையளவு பருகிவர, வலிகுன்மம் முதலிய நோய்கள் தீரும்.

* 'மிளகுக்கு' பதில் 80 நெ. சுவடியில் 'கடுக்காய்' என்று காணப்படுகிறது.

† படி என்பது பட்டணம்படியில் பாதி.

# 121. குன்மாதி வாயுவுக்குச் சூரணம்

ஆடு தின்னாப்பாலை யொரு தென்னங்காயளவு மரைத்ததிற் கல்லுப்புங்
கூடுமொரு பிடியிரண்டு புதுச்சட்டி நடுவுப்பைக் கொளப்பரப்பி
மூடு மொரு விரலுயரமரைத்திட்ட தப்பி மூடிச்சேலை
யோடுமண் செய்தடுப் பேத்தியெரியிட்டும் படபடெனவுப் புத்தானே. (உஎச)

வெடித்தபின் பதம் வரும் போதாவி மண் சேலை வழிவிட வுந்தானே
தொடுத்திட்ட பொன்னிறம் போற் புறப்பட்ட தேயிறக்கிச் சூடாரச்செய்
யெடுத்திட்டு மருந்தையம்மிதனில் நேகப்பொடி செய்து மிதையும் வைத்துக்
கொடுத்திடோர் வெருகடிதான் வென்னீருங் கொளப்பிணிகள் குணமாந்தானே. (உஎரு)
வலிகுன்மம் பொருமல் பக்கவாய்வுடன் றிரட்சிகளும் வரளை வாய்வும்
நலியன்ன மிறங்காமைய சீரணந்தீபனமின்மை காவையொட்டி
மலி சோறுண்டது செரித்து வரும்பொழுது வலித்திடுதல் மந்தத்தோடும்
வலி யோடிக்குத்துதலுஞ் செருமல் பல வாயு வெலாம் வாங்கிப் போமே. (உஎசு)

(இ-ள்)

ஆடுதீண்டாப்பாளை ஸமூலம் கொண்டுவந்து தேங்காயளவு எடுத்தரைத்துக்கொண்டு ஒரு புதுச்சட்டியில் இரு பிடி உப்பைப் பரப்பிக்கொள்ளவும். அதன்மேல் ஒரு விரற்கடை உயரமாக அரைத்த கல்கத்தைத் தட்டையாக தட்டி வைத்து அதன்மேல் மறுபடியும் இரண்டு பிடி உப்பை போட்டு அதன் வாய்க்குத் தகுந்தபடி மூடியிட்டுச் சீலைமண் செய்யவும். இதை அடுப்பின் மேல்வைத்து சிறு தீயாக எரிக்கவும், அப்படி எரிக்கும்போது உப்புப் படபடவென வெடித்தபின் அதின்

சேலமண் வழியாக ஆவி வர ஆரம்பித்து அது பொன்னிற மாகும். அப்போது அதை அடுப்பினின்று இறக்கிச் சூடாறிய பின் அதை அம்மியில் வைத்து நன்ருகப் பொடி செய்து கொள்ளவும்.

இம்மருந்தில் ஒரு வெருகடியளவு எடுத்து வென்னீருடன் உட்கொள்ள வலிகுன்மம், பொருமல், பக்கவாயு, நாவரட்சி, வாளைவாயு, அன்னத்துவேஷம், அஜீரணம், பசியின்மை, ஆகாரம் ஜீரணிக்கும்போது ஏற்படும் மந்தம் முதலியவைகள் தீரும்.

## 122. வலிகுன்மாதிக்கு மருந்து

இங்கு வராகனிடை காலாமணக்கினெண்ணை யிலுலிதைப்
பொரித்துப்
பங்கமிலாவெள்ளையுள்ளித் தோலுரித்துக்காற்பலமுன் படி
வருத்தே
தங்கிரண்டு மரைத்தொன்று யந்திசந்தி எழுதினந்தான்
விழுங்கு
மங்குவலி குன்மமும் போம்வாயு விலாக்கழிகூட்டி
வரவுந்தானே. (உஎஎ)

(இ-ள்)

சுத்தமான பெருங்காயம் $\frac{1}{4}$ வராகனிடை எடுத்து ஆமணக்கெண்ணெயினுல் இதை நன்கு பொரித்துக் கொள்ளவும். உள்ளிப்பூண்டை நன்ருக தோலுரித்துவிட்டு $\frac{1}{4}$ பலம் எடுத்து ஆமணக்கெண்ணெயில் வதக்கிக்கொண்டு அவ்விரண்டையும் ஒன்ருக சேர்த்தரைத்து காலைமாலை தினமும் உட்கொள்ள வலிகுன்மம் தீரும். இவ்வாறு 7 நாள் சாப்பிடவும்.

வாயுவை விருத்தி செய்யும் கரிகாய் வகைகளை நீக்கவும் (புகை, புளி தவிர்க்கவும்).

# 123. வலிகுன்மாதிக்கு மருந்து

கத்தரிக்காயிரண்டுள்ளே காயம் வராகனிடையரைக்
கரைந்தரைச்சேர்
சுத்தெள்ளெண்ணை தனில்வேகவைத்ததனை மூன்று தினந்
துய்க்கலாகும்
மித்தெண்ணையுந் தொட்டுத்தடவிடலாம் வலிகுன்மம்
வெருண்டோடும்
நித்தனருள் பெற்ற சரபேந்திர பூபனின்னயஞ்செய்திம்
முறையை நிகழ்த்துந்தானே. (உஎஅ)

(இ-ள்)

சொத்தை இல்லாத நன்றாக முத்தின கத்தரிக்காய் இரண்டு கொண்டுவந்து அதை குடைந்து கொள்ளவும். அதில் ½ வராக னிடை பெருங்காயத்தை வைத்து ½ சேர் நல்லெண்ணையில் வேக வைத்துக்கொள்ளவும். இதை மூன்று தினம் சாப்பிட்டு ஷை எண்ணெயை மேலே தடவிக்கொண்டுவர வலிகுன்மம் தீரும்.

---

# 124. வலிகுன்மத்துக்கு மருந்து

மிளகரணைவேர் சத்திச்சாரணை வேர் தாழையினில்
விழுதுந்தானே
யளவுபெற நறுக்கிது கோசல மூன்றுபடியிலிட்டு
மட்டக்காச்சு
வளமாக வடிக்கொண்டு மறுக்க காச்சுப்பாகு
மற்றுங்காயம்
உளகருஞ்சீரமிந்துப்புடனுங் கல்லுப்பு வெள்ளுள்ளி
தானே. (உஎகூ)

மூக்கடுகுமிவைசேர முன்னுரைத்தவுப்பினிரை
மூட்டியொன்றாய்த்
தக்கிடு சூரணம் செய்து நாரங்கத்தினிலடைத்துச்
சாறூறித்

தொக்க வெடுத்திதையைந்து தினமருந்த வலிகுன்மந்
துலேந்துபோகுஞ்
சக்கரஞ்சூழ் நிலவலேயந்தனேயாளுஞ்சா பேந்திரன்
சாற்றும் வாறே. (உஅ௰)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மிளகரணே வேர் | } | வகைக்கு 1 பலம் |
| சத்திச் சாரணே வேர் | | |
| தாழை விழுது | | |

இவைகளேச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி 3 படி பசு மூத்திரத்தில் போட்டு நன்கு காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும். இந்தத் தெளிவை மறுபடி அடுப்பில் வைத்து காய்ச்சிக் கொண்டேவா அது உப்பாகும் இதனுடன்

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | } | இவை எல்லாம் சேர்த்து முன் உப்பின் எடை எடுத்து இடித்து |
| கருஞ்சீரகம் | | |
| இந்துப்பு | | |
| கல்லுப்பு | | |
| பூண்டு | | |
| சுக்கு | | |
| திப்பிலி | | |
| மிளகு | | |

அதனுடன் ஒன்றாய்க்கலந்து ஒரு நாரத்தங்காயில் அடைத்து நன்கு ஊரவைக்கவும். பின்பு இதை 5 நாள் சாப்பிட வலிகுன்மம் தீர்ந்துபோகும்.

---

## 125. வலிகுன்மாதிக்கு மருந்து

பெருங்காயங்கரில் சுக்கு வெள்ளே யுள்ளிகடுகு திப்பிலி
யிந்துப்பும்
இரு சீரம் வெந்தயமுங்கழற்கொழுந்துப் பருப்பு
வேலிப்பருத்தி
யுரு கொற்றானிலே தானுமரைத்தெல்லாந் தேங்காய்ப்
பாலூற்றுட்டின் பால்
இரு நாழி வகைக்கிட்டுக்காச்சிடிரு நாழியதா
யேற்கப்போமே. (உஅக)

(இ-ள்)

| | |
|---|---|
| பெருங்காயம் | வகைக்கு 1 பலம் |
| மிளகு | |
| சுக்கு | |
| வெள்ளைப்பூண்டு | |
| கடுகு | |
| திப்பிலி | |
| இந்துப்பு | |
| சீரகம் | |
| கருஞ்சீரகம் | |
| வெந்தயம் | |
| கழற்சிக்கொடிக் கொழுந்து | |
| கழற்சிக்காய்ப் பருப்பு | |
| வேலிப் பருத்தி | |
| முடக்கொற்றான் இலை | |

இவைகளைச் சேர்த்து இடித்து,
தேங்காய்ப் பால் 2 நாழி
வெள்ளாட்டுப்பால் 2 நாழி
விட்டுக் குழப்பி அடுப்பிலிட்டு 2 நாழியாகக் காச்சி வடித்துக் கொள்ளவும். இதனால் வலிகுன்மம் குணமாகும்.

---

# 126. வலிகுன்மாதிக்கு மருந்து

கரிலோர் சேரரசப் பொடியவ்வளவாமிந்துப்புடனே
காற்சேராகும்
இரதமுமுக்கழஞ்சுக் கொரு சேர் நேர்வாளமிரு
கழஞ்சும்
பெருங்காய நாற்கழஞ்சுங் காந்தமறு கழஞ்சொடு
பேசு கஞ்சா
விரு சேராயரீதகி சுக்காறு பலஞ் சவுக்காரமிதைங்
கழஞ்சே. (உ-அ௨)

வெந்தயஞ் சீரகமும் வெண்காயமிவை வகைக்கொரு
சேர்வீதமாகத்
தந்திடு மேற்சீனமறுகழஞ்சதாய்க் கல்லுப்புத்
தானோர் நாழி

உந்து கொச்சை நீருமுத்தாமணி நீரு
நானாழியூட்டி நாழி
வந்திடவுங்காச்சி வடிமுன் மருந்தை யரைக்கடுகாய்
வைத்திடாயே (உ௭௫)

வைத்திடவே வெருகடியினளவாகத் தேனிலதை
மத்தித்துண்ணும்
உத்தபனை மூட்டியிலுஞ் சேர்த்தருந்து மெரிகுன்மமுடன்
வாயூறல்
மெத்தவலி குன்மமுதற்றீரு மிது பொய்யிலவாம் வேந்த
வேந்தர்
துத்தியஞ்செய் செங்கோலானீதிபுனை சரபேந்திரன்
சொல்லிதாமே. (உ௭௬)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மிளகு | — | 1 சேர் |
| சுத்திசெய்த அரப்பொடி | — | 1 சேர் |
| இந்துப்பு | — | ¼ சேர் |
| சுத்திசெய்த பாதரசம் | — | 3 கழஞ்சு |
| ,, நேர்வாளம் | — | 2 கழஞ்சு |
| பொரித்த பெருங்காயம் | — | 4 கழஞ்சு |
| சுத்தியான காந்தம் | — | 6 கழஞ்சு |
| சுத்திசெய்த கஞ்சா | — | 6 ,, |
| கடுக்காய் | — | 2 சேர் |
| சுக்கு | — | 6 பலம் |
| சவுக்காரம் | — | 5 கழஞ்சு |
| வெந்தயம் | — | 1 சேர் |
| சீரகம் | — | 1 சேர் |
| வெள்ளைப்பூண்டு | — | 1 சேர் |
| சீனக்காரம் | — | 6 கழஞ்சு |
| கல்லுப்பு | — | 1 நாழி |

இவைகளைச் சேர்த்து இடித்து வைத்துக்கொள்ளவும்

| | | |
|---|---|---|
| வெள்ளாட்டு மூத்திரம் | — | 4 நாழி |
| உத்தாமணிச்சாறு | — | 4 நாழி |

இவ்விரண்டையும் அடுப்பில் வைத்து 1 நாழியாகும் வரை காய்ச்சி முன்மருந்தையும் இத்துடன் சேர்த்துக் கொதிக்கவைத்துக் அரைக்கடுகாய் இறக்கிக் கொள்ளவும். தினம் 1 வெருகடியளவு தேனில் குழைத்து சாப்பிட அல்லது பனைவெல்லத்திலாவது சாப்பிட :

எரிகுன்மம்
வாயூரல்
வலிகுன்மம் இவைகள் தீரும்.

குறிப்பு :—

1 கழஞ்சு = $1\frac{1}{4}$ வராகனிடை = 40 குன்றுமணியெடை
கொச்சைநீர் = ஆட்டுமூத்திரம்
நாழி = ஒரு சிறியபடி = பட்டணம் படியில் பாதி.

---

## 127. எரிகுன்மாதிக்கு நெய்

கொத்தமல்லி செண்பகப்பூ விலவங்கமதிமதூரங் கோட்டமேலக்
தித்தமுறுஞ் சாதிக்காய் கருஞ்சீரகஞ் சாத்திரவேதி களமாம் போலுஞ்
சுத்தமுள பெருங்காயஞ் சதைகுப்பையிவை கூட்டிச் சுரபி நெய்யும்
பத்தவிட்டு மெரித்துநக்க வெரிகுன்மந்தீருமிது பண்புதானே.

(இ-ள்) (உ-அநு)

| | |
|---|---|
| கொத்தமல்லிவிதை | வகைக்கு 1 வராகனிடை |
| செண்பகப்பூ | |
| கிராம்பு | |
| அதிமதூரம் | |
| கோஷ்டம் | |
| ஏலக்காய் | |
| ஜாதிக்காய் | |
| கருஞ்சீரகம் | |
| சகஸ்திரவேதி (அதாவது புளிவஞ்சி) | |
| பெருங்காயம் | |
| சதகுப்பை | |

எடுத்துத் தண்ணீர்விட்டுக் கல்கமாக அரைத்துக்கொண்டு பசுவின் நெய் 1 படியில் நன்றாகக் குழப்பி அடுப்பின் மீதேற்றிப் பதத்தில் இறக்கவும். தினந்தோறும் ¼ தோலா வீதம் சாப்பிட எரிகுன்மம் தீரும்.

குறிப்பு :—

சாத்திரவேதி = சகஸ்திரவேதி (தமிழ்மொழியகராதி)

'ஸஹஸ்ரவேதி' = (1) கஸ்தூரி (2) பெருங்காயம் (3) அம்லவேதஸம் (ராஜநிகண்டு)

ஸஹஸ்ரவேதி = புளியாரை, புளிநரளை (ஸரஸ்வதி மஹாலில் உள்ள சுவடி நிகண்டுகள்)

அம்லவேதஸம் = புளி வஞ்சி (டீகா அமரம்)

அம்லவேதஸம் = ஒரு மரம், பூ வெண்மை நிறம், காய்பச்சை, பழம் மஞ்சள், சர்க்கரைக் குமட்டிப் பழத்தின் அளவு, பிரபுக்கள் வீட்டுத்தோட்டங்களில் காணப்படும், ஹிந்தியில் 'வேந்த்தி' என்றும் 'அம்லவேந்த்தி' என்றும் பெயருடையது. (ஸாலிக்ராம் நிகண்டு)

* மருந்துக் கடைகளில் சாஸ்திரபேதி என்ற ஒரு சரக்கு விற்கிறார்கள்.

---

# 128. குன்மாதி வயிற்று வியாதிக்கு மருந்து

பேய்க்கொம்மட்டிக்காய் வளையமாயறுத்து மிதிற் சீனம் பெருங்காயந்தான்

ஆய்மிளகு மிந்துவுப்பும் வேர்க்கொம்பு வெந்தயமுமை விதானும்

மாய்காந்தமுங் கல்மதஞ் சீதாளத்தயிலம் வளையற்காரம்

தேய்வெடியுமிவைகள் பொடிச்செய்துக் காயுள்ளிட்டுத் தீபிற்றுனே. (உஅசு)

வேகவைத்து முறைதையத்திலொரு கிற்யுத்தின்றதின் மேல் வெந்நீர் கொள்ளுநீ

சோகம் விட்டு வயிறிழியும் பின்குளித்து மோருடனே சோறு
மூண்ணுத்
தேகமுற்ற வியாதிகளும் வயிற்று வியாதிகள் பலவுந் தீருங்
குன்ம
போகவழித்தேடியிடு மிம்முறையைச் சரபேந்திரன் புகன்ற
தாமே. (உ௮எ)

(இ-ள்)

பேய்க்கும்மட்டிக்காய்களைக் கொண்டுவந்து வளையமாய் அறுத்து

| | | |
|---|---|---|
| அதில் | சீனாக்காரம் | வகைக்கு 1 வராகனிடை |
| | பெருங்காயம் | |
| | மிளகு | |
| | இந்துப்பு | |
| | சுக்கு | |
| | வெந்தயம் | |
| | கடுகு | |
| | காந்தம் | |
| | கல்மதம் | |
| | கூந்தல்பனை* | |
| | எண்ணெ வெண்காரம்* | |

இவைகளைப் பொடிசெய்து ஷ காய்க்குள் இட்டு அடுப்பில் போட்டு வெதுப்பிவிடவும். பின் காலையில் ஒரு கீற்று சாப்பிட்டு அனுபானமாக வெந்நீர் உபயோகிக்க நன்கு மல சுத்தியாகும். பிறகு குளித்துவிட்டு மோர்போட்டு சாதம் சாப்பிடவும். இப்படி அடிக்கடி சாப்பிட்டுவரப் பலவித உடல் நோய்களும், வயிற்று நோய்களும், குன்மமும் தீரும்.

---

* 'சீதாளத் தயிலம் வளையற்காரம் தேய் வடியும்' என்ற சொற்றொடருக்குப் பொருள் விளங்கவில்லை. 80 நெ. சுவடியில் 'சீதாளத் தயிலம் வடியுயர் வளையற்காரம்' என்று இருக்கிறது.

# 129. அட்டகுன்மாதி குலாந்தகன்

*அரிதார நாவிரதந்தாம்பிரத்தூட்கெந்தகமுமான சுக்குங்*
*கரிலுடனே திப்பிலிகளிது வகைகளொரு வராகனிடைகொண்டு*
*புரிசுத்திவாள மூவராகனிடையிவை கூடப்பொரு கரிப்பான்*
*றரு சாற்றிலரை மூன்று சாமமட்டுங் குன்றி நிகரதனை*
*யுருட்டே. (உஅஅ)*

*குளிகைசெய் நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டிஞ் சிரசங்கூறு*
*நொச்சில்*
*அளிகடாயத்திலிட்டுக் கொடு வயிற்றுள் நோய்கள் பலவட்ட*
*குன்ம*
*களி பீலிகைகவுசை வாதத்தாலடுத்த தெலாநாடாதோடுங்*
*களிமதாவளப்பிடறியுதைய சரபேந்திரன் முறைகணித்ததாமே.*
(இ-ள்) (உஅக)

| | |
|---|---|
| சுத்திசெய்த நாபி<br>சுத்திசெய்த தாளகம்<br>,, பாதரசம்<br>,, தாம்பிரத்தூள்<br>,, நெல்லிக்காய் கந்தகம்<br>சுக்கு<br>மிளகு<br>திப்பிலி | இவைகள் வகை ஒன்றுக்கு 1 வராகனிடை எடுத்து |

சுத்தி செய்த நேர்வாளம் 3 வராகனிடையுடனே சேர்த்துக் கல்வத்திலிட்டு பொற்றலை கையாந்தகரைச் சாற்றினால் 3 ஜாமம் அரைத்துக் குன்றுமணியளவாக மாத்திரை உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு இஞ்சிரஸத்திலோ, நொச்சிச்சாற்றிலோ, தேனிலோ கொடுக்க வயிற்று நோய்கள் பலவும், எட்டு வகைக்குன்மமும், பீலிகை, கவுசை, வாதம், முதலியவைகளும் தீரும்.

---

## 130. வாதாதியட்ட குன்மாதிக்குச் செந்தூரம்

பாதரதங் கெந்தகமும் பெருங்காயம் வெண்காரங்கள் பகரொன்
றாக்குப்
போதவிரு களஞ்சிட்டுச் செம்பினொடு பொடியாறு பொரு
களஞ்சித்
தூதுவளைச்சாற்றிலரைத்தகலிட்டுச் சேலைமண்செய்தூடே
குக்கில்
ஓதுபுடச் செந்தூரந் தேனிலுண வெட்டுவகையுறு குன்மம்
(இ-ள்) போமே. (உகூ௰)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரசம் | } | இவைகள் வகைக்கு 2 கழஞ்சி |
| ,, நெல்லிக்காய் கந்தகம் | | |
| பொரித்த பெருங்காயம் | | |
| ,, வெங்காரம் | | |

சுத்திசெய்த தாம்பிரப்பொடி--6 கழஞ்சி

இவற்றை கல்வத்திலிட்டு தூதுவளைச் சாற்றினால் நன்கு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் வைத்துச் சேலை மண்செய்யவும். இதை எருவின் நடுவில் வைத்துக் குக்குடபுடம் போடச் செந்தூரமாகும். இதைத் தேனில் குழைத்துச் சாப்பிட எட்டுவித குன்மமும் தீரும்.

குக்குடபுடம்—10 எருமுட்டையிற் போடும் புடம்
(பதார்த்தகுண வயித்திய அகராதி)

---

## 131. சத்திகுன்மாதிக்குக் குடிநீர்

புரசத்தின்மேல் மேற்சிவியதைக் குறுகவி
நாலுபலம் பொடித்தான்
மருவாதி நாலுமரக்கானீர் நாலொன்றாய்வத்தக்காச்சி
ஒருபானையதனிலிடு முன் பிசைந்து வடித்திட்டே ஒரு
காற்பங்கு
அருகிடப்பின் காச்சதிலுமிளகு சுக்குவெள்ளையுள்ளியது
வசம்பே. (உகூக)

ஒரு கொட்டைப் பாக்களவேற்றென்றரைத்து முக்காற்
பங்குற்றநீருள்
மருகிடவுங் கரைமூன்று நாளிரண்டுநேர
மொன்றுக்குரி மட்டாகப்
பருகிடவுங் கொடுமூன்று தினங்களிலுந்திரு
நாட்பட்டதுக்கு
மொருபத்து நாட்குடித்துப் பத்தியமும்பிடி
குன்மமோடுந்தானே. (உகூஉ)

(இ-ள்)

புரசம் பட்டை மேல்புறணியைச் சீவிவிட்டு, நன்கு சிறியதாக நறுக்கி இடித்து 4 பலம் அளோடு 4 மரக்கால் தண்ணீர்விட்டு ஒரு மரக்காலாக வற்றக்காச்சி நன்றாகப்பிசைந்து ஒரு பானையில் வடிக்கட்டிக்கொள்ளவும். இதில் ¼-பாகம் எடுத்து மறுபடியும் அடுப்பிலேற்றி நாலிலொன்றாகக் காய்ச்சவும். இக் கஷாயத்தைக்கொண்டு, மிளகு, சுக்கு, வெள்ளைப்பூண்டு, வசம்பு, இவற்றைத்தனித்தனி ஒரு கொட்டைப்பாக்களவெடுத்து நன்றாக அரைத்து மிகுந்துள்ள ¾-பாகம் புரசம்பட்டைக் கஷாயத்தில் குழப்பிக் கொள்ளவும்.

இதைத்தினம் 2 வேளை ¼ படி வீதம் 3 நாளைக்குச் சாப்பிடக் குன்மம் தீரும். நாள்பட்ட குன்மத்திற்கு 10 நாள் சாப்பிடவும். பத்தியமாக இருக்கவும்.

---

# 132. குன்மத்துக்குப் பெருங் காயச் சூரணம்

பெருங்காயம் வராகனிடையைந் தாகுமி
வைதுளாய்ப்பின்கலந்தே
யொருதினங்களிருவேளை மூவராகனிடையிள
வெந்நீருட்கொள்

வருதினம் பத்தியந்துவரை மிளகு நீருப்பிலி
யும் மற்றும் வெந்நீர்
இருபது நாட்கொள்பத்து நாளொருபோது
ண்ணு குன்மமேகுந்தானே.
(உகுங)

(இ-ள்)

பொரித்த பெருங்காயம் 5 வராகனிடை
துளசி 5 வராகனிடை

இவ்விரண்டையும் சேர்த்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு 1½ வராகனிடைவீதம் ஒரு தினம் இரண்டுவேளை சாப்பிட்டு மேலே வெந்நீர் உட்கொண்டு மறுதினம் துவரை மிளகு ரஸம் உப்பில்லாமல் வைத்துச் சாப்பிட்டு வெந்நீர் உட்கொண்டு இப்படி 20 நாளும், பிறகு 10 நாள் ஒருவேளை மருந்தும் சாப்பிடக் குன்மம் நீங்கும்.

---

# 133. வலிகுன்மாதிக்குச் சூரணம்

(இதன் செய்யுளும் அடுத்தமுறையின் செய்யுளும் 46-நெ. சுவடியில் கிடைத்தமட்டிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 80 நெ. சுவடியிலிருந்து உரைநடை கொடுக்கப்பட்டிருக்கிறது).

அசமதாகந்தனிலே வெண்டுளவின்சாறு கையான்தனிற்
சாறு....
வசமதனைப்பாவனைசெய்ததின் பின்பு கருநொச்சில்வ....
பசையரவு மூலத்திடித்த தூளசமதாகத்திற்பாதி....
துசமுடன் முக்கடுகு மிந்துமிது வகையொவ்வோரோன்....
(உகூச)

"அசமதாகம் நாழியில் வெள்ளைத்துளசிச் சாறு, கையாந்தகரைச் சாறு இதில் பாவனைபண்ணின பின்பு கருநொச்சில் இது உலர்த்தியிடித்துச் சூரணம் பண்ணின தூள் அசமதாகத்தில் பாதி கூட்டி ———

இதில் மேல்மருந்து சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், வராகனிடை —ரு—இவையோரொன்று பலம் க—இவையெல்லாம் ஒன்ருகச் சூரணம் பண்ணி—நாளொன்றுக்கு மூன்று வராகனிடை இளவெந்நீரில் அரைத்துக் குழப்பிக் குடிக்கவும்.

இதுக்குப் பத்தியம்—துவரைச்சாறு மிளகு நீர் இட்டுப் பிலி—வெந்நீர் பழ நார்த்தங்காய்—அவிழ்தம் இரண்டுநேரமும் இருபதுநாள் கொள்ளவும்—பின்பு பத்துநாளைக்கு ஒரு நேரம் கொள்ளவும்—இந்தப்படி கொள்ள வலிகுன்மந் தீரும்.''

(இ-ள்)

மேலேகண்ட உரை நடையின் பொருள்வெளிப்படை: மேல் மருந்துகளில் பெருங்காயம் 5 வராகனிடை மற்ற 4 சரக்குகளும் வகைக்கு 1 பலம் என்று கொள்க.

உப்பிலி = உப்புச் சேர்க்காமல்.

---

## 134. வலிகுன்மாதி வயிற்று வியாதிக்கு மருந்து

நொச்சியிலை தனையொருபானையினிறை
வேடுகட்டிநெடு தேங்காய்ப்பூ
பச்சை வெள்ளையுள்ளியதிற் பருப்பிரண்டு
மேல்வைத்துப் பாகமாக்கி
வச்சதனை யெடுதேங்காய்ப் பால்பிழிந்து
மது பாதி வைத்துக்காய்ந்த
நிச்சய நீர் பாதி விட்டுச் சம்பிரக்காய
ளவதனை நேகத்தானே. (உகூ)

சாரணைவேர் தனையரைக்காசிடையின்
பெருங்காய ...
கூ.ரெரியிற் கொதிகண்டு சுடச்சுடவு மூதி
யதுகொ....

மீறு வெண்காவுள்ளிதனைக் கடிகொண்டு
குடிநீருமே....
ஊறு வலிகுன்ம மூடனெரிகுன்மம்
பலபிணிகளேகும்....

"வலிகுன்மத்துக்கு மருந்து"

"தொச்சியிலை—பறித்துப்—பானையிலே அமுக்கி—வனுடு கட்டி—வனுடுமேலே—வெங்காயம், உள்ளிப்பருப்பை வைத்து அதின்மேலே, தேங்காய்துருவி — வனுடுமேலே வைத்து — அதையிறக்கித் தேங்காய்ப்பால் பிழிந்து....அவிச்சதண்ணீர்ப் பாதியும் — இந்தப்பாலும்—ஒரு எலுமிச்சங்காயளவு சாரணை வேரும்—ஒரு காசிடை பெருங்காயமுங் கரைத்து—கொதிக்க வைத்து — வெண்காயபருப்பு கடிக்கொண்டு—ஊதிஊதிக் — குடிக்கத்தீரும்."

(இ-ள்)

மேலேகண்ட உரைநடை வெளிப்படை.

வனுடு = வேடு
சாரணைவேரை அரைத்துக் கரைக்கவும்.
வெண்காய பருப்பு கடிக்கொண்டு = தேங்காயோடு வெந்தவெங்சாயம் உள்ளிப்பருப்பு இவைகளை இடையே கடித்து மென்று கொண்டு.

# அனுபந்தம் I.

## குணபாடம்

---

## (1) பச்சிலை வர்க்கம்

---

### 1. அவுரி

பயன்படும் உறுப்புகள் — இலை, வேர்.

சுவை — கைப்பு, வீரியம் — வெப்பம், பிரிவு — கார்ப்பு.

குணம் — தாவரகந்த மூலவிஷம் 18, வாதசுரம், காமாலை, மாந்தம், சீதளம், சந்நிபாதம், கீல்வாதம், பாம்பு விஷம் இவைகளைப் போக்கும்; உடல் பொன்னிறம் பெறும்.

த்ரிதோஷ செய்கை :— வாதம், பித்தம் இரண்டையும் குறைக்கும்.

### 2. ஆட்டாங்கொடி

(ப-உ) ஸமூலம்.

சுவை — கார்ப்பு, வீரியம் — சீதம், பிரிவு — மதுரம்

குணம் — பித்தம், எரிவு, தாகம் இவைகளை சமனப்படுத்தும், ஜீரண சக்தியைக் கொடுக்கும்.

(த்ரி-செ) வாதம், பித்தம், சிலேஷ்மம் மூன்றையும் சமனப்படுத்தும்.

### 3. ஆவாரை

(ப-உ) இலை, பூ, பட்டை, விதை, வேர், பிசின்.

சுவை — துவர்ப்பு, வீரியம் — சீதம், பிரிவு — இனிப்பு.

**குணம்** — சர்வ பிரமேக மூத்திர ரோகங்களையும், ஆண் குறி எரிச்சலையும் போக்கும். வெகு மூத்திரம், வெள்ளை, உட்சூடு, விரணம், வாதகிரஹணி, அஸ்தி ஜ்வரம், தாகம் இவை போகும். மூத்திரத்திலுள்ள மது குறையும்.

## 4. இலைக்கள்ளி

(ப-உ) இலை, பால், வேர்.

சுவை — கைப்பு, வீரியம் — வெப்பம், பிரிவு — கார்ப்பு.

**குணம்** :—செங்கரப்பான், கருங்கரப்பான், கிரந்தி, காது குத்தல் இவைகள் நீங்கும். சிறு குழந்தைகளுக்கு உண்டாகும் கரப்பான் ரோகத்திற்கு இதன் இலையை வாகு வைக்கோலினால் வதக்கிச் சாறு பிழிந்து புகட்டலாம். சாற்றை வெதுப்பிக் காதில்விட காது குத்தல் நீங்கும். சாறுடன் உப்புச் சிறிது சேர்த்துக் காய்ச்சி கக்குவான், சோபம், குன்மம், காமாலை, சூலை முதலிய நோய்களுக்கு வழங்கலாம்.

(த்ரி-செ) பித்தத்தையும் வாதத்தையும் கண்டிக்கும்.

## 5. ஊமத்தை

(ப-உ) இலை, பூ, காய், விதை.

சுவை — கைப்பு, வீரியம் — வெப்பம், பிரிவு—கார்ப்பு,

**குணம்**. நாய் கடிப்புண், குழிவிரணம், வித்ருதிக்கட்டிகள், நஞ்சு, த்ரிதோஷம் இவை நீங்கும். இதன் புகையை முகருவதால் கஷ்டச்வாசம் நீங்கும். இலை ரசத்தை 1-முதல் 2-துளி காதில்விட காதுவலி தீரும். சுக்லத்தையும் பாதரஸத்தையும் கட்டும். பெருவியாதி, வியர்வை, தினவு, பித்த சுரம் தீரும். அளவு மீறினால் மயக்கமும் வாந்தியும் உண்டாகும்.

(த்ரி-செ) கபஹரம்.

## 6. எருக்கு

(ப-உ) இலை, பூ, பால், பட்டை, வேர்.

சுவை — கைப்பு, காரம், மதுரம்; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு.

குணம் — எலி விஷம், குஷ்டம், கிருமிரோகம், கீல் வீக்கம், பாம்பு விஷம், அக்னி மந்தம், மலக்கட்டு இவை போம். இலையைக் கட்டிகளுக்கு வதக்கிப் போடவும். அது பழுத்து உடையும். குதிகால் வாதத்திற்கு நல்லது.

(த்ரி-செ) கப ஹரம்

## 7. கருநொச்சி

(ப-உ) இலை, பூ, வேர், பட்டை.

சுவை—கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு; வீரியம்-வெப்பம் பிரிவு-கார்ப்பு.

குணம் — வாதநோய், குளிர்ஜ்வரம், வீக்கம், தலைவலி, பீனஸம், கீல்வாதம், குழந்தைகள் மாந்தம், கல்லீரல் வீக்கம், இரத்த வாந்தி, இரத்த பேதி இவைகள் தீரும்.

(த்ரி-செ) வாத, கப ஹரம்.

## 8. கருவேப்பிலை

(ப-உ) இலை, ஈர்க்கு, பட்டை, வேர்.

சுவை—சிறுகார்ப்பு, வீரியம்—வெப்பம், பிரிவு-- கார்ப்பு.

குணம்:—அரோசகம், சீதபேதியால் வரும் வயிற்றுளைவு, பழஞ்சுரம், பித்த தோஷம், இவை நீங்கும். வாந்தி நிற்கும். பசிதீபனமுண்டாகும்.

## 9. கருவேலங் கொழுந்து.

(ப-உ) கொழுந்து, பட்டை, வேர், பிசின், வித்து.

சுவை—துவர்ப்பு, வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

குணம்— இதைத் தயிரிலரைத்துக் குடிக்கில், பாஷாண வேகம் தீரும். முலைப்பாலில் அரைத்து அடைதட்டிக் காய்ந்த சட்டியிலிட்டு வெதுப்பி அற்ப சூடாகக் கண்ணில் ஒற்றடம் இடக்கண் சிவப்பு மாறும். துஷ்டவ்ரணங்களுக்குக் கட்ட துர் நீரை மாற்றும். இருமல் சாந்தமாகும். சர்க்கரை கூட்டிக்கொள்ளவும்.

(த்ரி-செ) கபத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

## 10. கள்ளிக் கொழுந்து இலைக்கள்ளி (4) யைப் பார்க்க.

## 11. கழற்சிக்கொடி.

(ப-உ) இலை, கொட்டை, பட்டை, வேர்.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு.

குணம் — இதனால் பீசவாதம், சூலைக்கட்டி, பிரமேகம், பலவித குன்மம் உள் அழலை இவை தீரும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் போக்கும்.

## 12. கூந்தல் பனை

(ப-உ) விதை, கள்.

சுவை—இனிப்பு, வீரியம் — சீதம்; பிரிவு — இனிப்பு.

குணம் — இதன் சோறு மலத்தைக் கட்டும். பாளை மாமிசத்தை வளர்க்கும். விதையை உரைத்து நெற்றியில் பூச ஒற்றைத் தலைவலி நிற்கும்.

(த்ரி-செ) கபத்தை விருத்தி செய்து பித்தத்தையும், வாதத்தையும் குறைக்கும்

13. **கொட்டைக் கரந்தை**

(ப-உ) இலை, பூ, விதை, வேர், வேர்ப்பட்டை.

சுவை—கைப்பு; வீரியம் — வெப்பம் — பிரிவு-கார்ப்பு;

குணம் — ஒழுக்கு பிரமேசம், வெள்ளை, கரப்பான், சொறிசிரங்கு இவை தீருவதன்றி மறிபட்ட மலமும் இறங்கும். மேலும், வாதம், பயித்தியம், சினப்பு முதலியவை நீங்கி சர்மரோகங்களும் தீரும்.

(த்ரி-செ) பித்தத்தை விருத்தி செய்து கப, வாதங்களைக் குறைக்கும்.

14. **சதுரக்கள்ளி**

(ப-உ) பால், தண்டு, வேர்ப்பட்டை

சுவை—கைப்பு, கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு

குணம் — கரப்பான், சொறி, கபநோய், குன்மம், சீதம் இவைகளைப் போக்கும், பேதியுண்டாக்கும்.

15. **சகஸ்ர வேதி** (புளிவஞ்சி)

16. **சிவகரந்தை**

(ப-உ) சமூலம்.

சுவை—துவர்ப்பு, சிறுகார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு-கார்ப்பு.

குணம்— வாந்தி, அரோசகம், விந்து நஷ்டம், கரப்பான் க்ஷீணவாதம், வாதாதி தொந்தம், காசம், அக்கினி மாந்த்யம், இவைகளை நீக்கும். ஜடராக்கினியையும் வனப்பையும் உண்டாக்கும். தாதுபுஷ்டி தரும்.

(த்ரி-செ) வாத கபத்தை நீக்கி பித்தத்தை அதிகப் படுத்தும்.

## 17. சீந்தில் கொடி.

(ப-உ) இலை, கொடி, வேர் (கிழங்கு) சமூலம்.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம்:— நீரிழிவு, க்ஷயம், அதிசுஷ்க ரோகம், சர்ப்ப விஷம், இரத்த பித்தம், சுரம் இவை நீங்கும். காய சித்தி உண்டாகும்.

(த்ரி-செ) திரி தோஷ சமனி.

## 18. தாழை

(ப-உ) இலை, பூ, சோறு, விழுது.

சுவை—துவர்ப்பு, வீரியம்-சீதம், பிரிவு—இனிப்பு.

குணம்— சோற்றினால் மாதருக்கு சோணிதம் விகுண மின்றி உண்டாகும். பூ-தீபாக்கினியையுண்டாக்கும் விழுது விந்துவையும், ரத்தத்தையும் பிரகாசப்படுத் தும். சோபரோகக் கூட்டங்களை நீக்கும். பூவிலி ருந்து மணப்பாகு தயாரித்துக் கொடுத்தால் அம்மை ரோகம் வரவொட்டாமல் தடுக்கும். விழுதைப் பாலில் அரைத்துக்கொடுக்க மலட்டு ரோகம் நீங்கும்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

## 19. துளசி.

(ப-உ) இலை, விதை,

சுவை—கார்ப்பு; வீரியம்-வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம்— கபம், வயிற்றுளைச்சல், அஸ்திகத ஜ்வரம், தாகம், சுரமாந்தம், அரோசகம் இவை போகும். வெப்பத்தை தரும். இருமல், இரைப்பு, கோழை சேருவதினாலுண்டாகும் குறுகுறு வென்ற சப்தம், மார்பு சளி, விஷம், சந்நிபாத ஜ்வரம் இவைகளை நீக்கும்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைத்துப் பித்தத்தை அதிகரிக்கும்.

## 20. தேக்கு

(ப-உ) மரக்கட்டை.

சுவை-மதுரம், துவர்ப்பு ; வீரியம்—சீதம் ; பிரிவு-இனிப்பு

குணம் — நீரிலிட்டு இழைத்து சேராங்கொட்டை, முந்திரிக்கொட்டை, முதலிய விஷத்தை நீக்க மேலுக்கு உபயோகிக்கலாம்

(த்ரி-செ) பித்தத்தையும் கபத்தையும் போக்கும்.

## 21. செந்நாயுருவி

(ப-உ) சமூலம்.

சுவை—கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு

குணம்—இதனால் வீக்கம், பாண்டு, காமாலை இவை நீங்கும். ருதுகாலத்தில் மாதர்களின் சோணிதத்தை வழக்கப்படி உண்டாக்கும். சிறுநீரையும் பெருக்கும்.

(த்ரி-செ) வாத, கபங்களை குறைக்கும்.

## 22. செம்முருங்கை

(ப-உ) எல்லா பாகங்களும்.

சுவை—கைப்பு, துவர்ப்பு, இனிப்பு ; வீரியம்-வெப்பம் ; பிரிவு-இனிப்பு

சிறிய பிஞ்சால் திரிதோஷமும், பூவால் — புணர்ச்சியில் வன்மையும், கண்ணிற்கு குளிர்ச்சியும் உண்டாகும். இலை — சுரத்தையும், பட்டை — விஷத்தையும், வேர் — வாத கோபத்தையும் நீக்கும்.

வீக்கம், கட்டி, அதிமூத்ரம், கரப்பான் முதலியவைகள் தீரும்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் போக்கும்,

## 23. நாய்வேளை

(ப-உ) இலை, விதை, வேர், சமூலம்.

சுவை — கார்ப்பு; வீரியம் — வெப்பம், பிரிவு — கார்ப்பு;

குணம் — வாதப் பொருமல், தேகக் கடுப்பு, கர்ணநாத ரோகம், சிலேஷ்ம பீனஸ நோய் இவை போம், வாத சோணிதம், வாதக்கடுப்பு, குன்மம் இவைகளைப் போக்கும். நாக்குப்பூச்சிகள் விழும். வீக்கங்களும் தீரும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும், குறைக்கும்.

## 24. நீலவாகை

(ப-உ) இலை.

சுவை — கைப்பு (வெகுட்டல்) வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு.

குணம் — மூலவாயு, வெப்பு, கிரந்தி, குன்மம், நாள் பட்ட மலச் சிக்கல், இவை தீரும்.

(த்ரி-செ) வாயுவையும், பித்தத்தையும் குறைக்கும்.

## 25. நிலவேம்பு

(ப-உ) சமூலம்.

சுவை — கைப்பு, வீரியம் — வெப்பம், பிரிவு — கார்ப்பு.

குணம்—இதனால் வாத சுரம், மேக நீர்க்கோர்வை, சுரம், பித்த மயக்கம் இவை நீங்கும், புத்திக்குத் தெளி வுண்டாகும்.

(த்ரி-செ) கபத்தையும், பித்தத்தையும் போக்கும்.

## 26. நீர் மேல் நெருப்பு

(ப-உ) சமூலம்.

சுவை — கார்ப்பு, வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு.

குணம் :— மகாவாத ரோகமும், இரத்தக் குறைவினால் உண்டாகும் திமிர்வாத நோயும் தீரும். இலையை அரைத்துத் தேகத்தில் பற்றவைத்து கொப்பளமெழுப்பலாம்.

( த்ரி-செ ) கபத்தையும், வாதத்தையும் கண்டிக்கும்.

## 27. நெருஞ்சில்

( ப-உ ) சமூலம்.

சுவை — துவர்ப்பு, இனிப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — சொட்டு மூத்திரம், சுரவெதும்பல், கல்லடைப்பு, நீரடைப்பு, முடவாதம், பிரமேக வெள்ளை, மூத்திர கிருச்சிரம், திரிதோஷ கோபம், விரணம், சுரதாகம், வெப்பம் ஆகிய இவைகள் தீரும். தாது புஷ்டி உண்டாகும்.

( த்ரி-செய் ) — திரி தோஷ சமனி.

## 28. பருத்தி

( ப-உ ) இலை, பூ, பிஞ்சு, விதை, பட்டை, வேர்ப் பட்டை.

சுவை — துவர்ப்பு, இனிப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் :— அஜீர்ண பேதி, சீழ் மேகம், பித்தம், விரண சோபை இவைகள் தீரும்.

( த்ரி-செ ) பித்தத்தையும், கபத்தையும் போக்கும்.

## 29. பிரண்டை.

( ப-உ ) தண்டு, வேர்.

சுவை — கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — இதனால் ஆசனத்தினவு, இரத்த மூலம் ஒழியும். மேலும் அக்கினி மாந்தம், , குன்மம் வாதாதிசாரம், முளை மூலம், கபதோடம், இரத்தபேதி, கால் அசதி நிவர்த்தியாகும். பசி உண்டாகும். முறிந்த எலும்பை ஒட்டவைக்கும்.

(த்ரி-செ) வாதத்தையும், கபத்தையும் குறைக்கும்.

## 30. புளி நரளை

(ப-உ) இலை, கிழங்கு.

சுவை — புளிப்பு, துவர்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — இதன் இலை பெண்கள் வயிற்றிலுள்ள இரத்த குன்மத்தைப் போக்கும். இதன் கிழங்கு மேகம், கிறுகரப்பான், அழிபுண், இரத்த மூலம் இவற்றைப் போக்கும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் போக்கும்.

## 31. செம்முள்ளி

(ப-உ) சமூலம்.

குணம் — பிரமேகம், அதிஸாரம், கப சோபை, ஆயாஸம் இவை நீங்கும். சுக்கிலமும், சப்த தாதுவும் விருத்தியாகும். பாண்டு, குளுப்பை, ஜலக்கோர்வை, மூத்திர சிக்கல், வீக்கங்கள் தீரும்.

(த்ரி-செ) பித்தத்தைக் குறைக்கும்.

## 32. நில ஆமணக்கு

(ப-உ) சமூலம், வேர்.

சுவை — கைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு.

குணம் — முட்டு வீக்கம், வாத நோய், பிடிப்பு, ஸ்தம்ப வாதம், ஈரல் நோய்கள் முதலியவைகள் சுகப்படும். சர்ம நோய் குணமாகும். குழந்தைகளின் கல்லீரல் மண்ணீரல் வீக்கம் இவைகளுக்கு ஊறல் கஷாயம் கொடுக்கவும். கண் வியாதிகளுக்கு கண்ணில் சாறு பிழியவும்.

(த்ரி-செ) வாதத்தையும், கபத்தையும் போக்கும்.

## 33. பிரமிய வழுக்கை

(ப-உ) சமூலம்.

சுவை — துவர்ப்பு, கைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — சீல்களில் கபம் விருத்தியடைவதால் உண்டாகும் வலி, வீக்கம், கால் பிடிப்பு, கை கால் எரிவு, வாதக் கடுப்பு, மல மந்தம், சோகை முதலியன தீரும்.

(த்ரி-செ) பித்தத்தையும், கபத்தையும் குறைக்கும். வாயுவையும் கண்டிக்க வல்லது.

## 34. முட்கா வேளை

(ப-உ) இலை, விதை, வேர், வேர்பட்டை.

சுவை—கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — இதனால் மார்புநோய், நெஞ்சில் கோழை கட்டல், சுவாசகாசம், வெப்பம், வீக்கம், நெறிக்கட்டி, இவை நீங்கும் மேலும் அதிசாரம், வயிற்றுநோய், குன்மம், இரத்த மூலம், மந்தாக்னி, நாவறட்சி, அன்னத்வேஷம் முதலியவை தீரும்.

(த்ரி-செ) வாதகபஹரம்.

**35. முசு முசுக்கை**

(ப-உ) இலை, வேர்.

சுவை — துவர்ப்பு, கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — காசம், கோழை, சுவாசம், நெஞ்சிற் புகைக் கம்மல், சலதோஷம், அற்ப வீரியமுள்ள விஷம், வாந்தி, மார்பு நோய், குன்மம், பித்தாதிக்யம் இவை தீரும்.

(த்ரி-செ) கபத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

**36. முடக் கொற்றான்**

(ப-உ) இலை, வேர்.

சுவை—துவர்ப்பு, கைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — கீல்பிடிப்பு, சினைப்பு, கிரந்தி, கரப்பான், பாதத்தைப்பற்றிய வாதம், மலக்கட்டு இவை போகும். இலைச்சாற்றை காதிலிட காதுவலி, சீழ்வடிதல் நிற்கும்.

**37. முதியார் கூந்தல்**

(ப-உ) சமூலம்.

சுவை—கைப்பு ; வீரியம்—சீதம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம்—மூலக்கடுப்பு, அதிசாரம், சுரவேகத்தினாலுண்டான நாவறட்சி, இடுப்பு வாதம், பிரமேகம், இருமல், கட்டி, நேத்திரமங்கல், கோழை, அக்கினிமந்தம், வாதகப தொந்தம், தினவு ஆகிய இவைகள் நீங்கும். இலையை அரைத்து இளநீரில் குடிக்க மாறாச் சுரமும், த்ரி தோஷமும் தீரும்.

(த்ரி-செ) — த்ரி தோஷஹரம்.

38. **முல்லை**

(ப-உ) இலை, பூ, வேர், எண்ணெய்.

சுவை—கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு; **குணம்**—நேத்திர பிரகாசம், தேகத்தில் நன்மணம், வனப்பு இவைகள் ஏற்படும். தேகக்குத்தலும் மூர்ச்சா ரோகமும் நீங்கும். வாந்திக்கு இப்புஷ்பத்தின் கஷாயத்தை வழங்கலாம்.

(த்ரி-செ) கபத்தையும், பித்தத்தையும் போக்கும்.

39. **வெண் நொச்சில் :—**

(ப-உ) இலை, பூ, வேர், பட்டை.

சுவை—கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு-கார்ப்பு;

குணம் :—குளிர்சுரம், முறை சுரம் இவை தீரும். வாத நோய்களுக்கும், வீக்கங்களுக்கும் வேது பிடிக்கலாம். தலைவலி, பீனஸம், இவைகள் தீரும். வயிற்றுவலி, மலக்கிருமி, குஷ்டம் முதலிய ரோகங்களும் தீரும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் குறைக்கும்.

40. **வெற்றிலை**

(ப-உ) இலை.

சுவை—விறுவிறுப்பு, கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — கபம், சீதளம், காணுக்கடியின் துர்குணம், திரிதோஷதாபம், நீரேற்றம், தலைபாரம், மாந்தம், குரல் கம்மல், வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், இவை போம்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைத்து பித்தத்தை அதிகரிக்கும்.

41. **வேலிப்பருத்தி** (உத்தாமணி)

(ப-உ) சமூலம்.

சுவை—கைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — வாதநோய், சந்நி, கிரி தோடம், வாத குன்மம், சரீரக்குடைச்சல், குத்தல், நடுக்கல், தனுர்வாதம், சுவாஸம், அக்கினிமந்தம், இவை நீங்கி தீபனமுண்டாகும். இலையின் குடிநீரை குழந்தைக்குப் புகட்ட வயிற்றிலிருக்கும் புழு வெளிப்படும்.

---

## (2) வேர் வகை

42. **அழிஞ்சில் வேர்**

( ப-உ ) விதை, பட்டை, வேர்.

சுவை — கைப்பு ; வீரியம் – வெப்பம் ; பிரிவு – கார்ப்பு ;

குணம் — வாத கோபம், சீவடியும் பெரு நோய் இவை நீங்கி பித்தத்தை உயர்த்தும். நாள்பட்ட கடி விஷம், விஷகடியாலுண்டான தாபிதம், பெருங்குடலில் உள்ள பூச்சி வகைகளும் நீங்கும். குஷ்டத்தில் மிக்க குணம் செய்யும்.

( த்ரி-செ ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

43. **ஆவரை வேர்**

( ப-உ ) இலை, பூ, பட்டை, விதை, வேர், பிசின்,

சுவை – துவர்ப்பு ; வீரியம் – சீதம் ; பிரிவு – இனிப்பு ;

குணம் — வேர் பட்டை கஷாயத்துடன் பால் கூட்டி தைலம் செய்து தலை முழுக மேகச் சூடு தணியும். கண் குளிரும்.

## 44. ஆடு தீண்டாப் பாளை வேர்

(ப-உ) இலை, விதை, வேர், சமூலம்.

சுவை — கைப்பு (குமட்டல்) வீரியம் – உஷ்ணம்; பிரிவு – கார்ப்பு;

குணம் — குஷ்டமும், பாம்பு விஷமும் நீங்கும், பிரஸவ வேதனையைத் தூண்டும்.

(த்ரி-செ) கபத்தை முறிக்கும்.

## 45. ஆதண்டை வேர்

(ப-உ) காய், வேர்.

சுவை — சிறு கைப்பு; வீரியம் – வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம்—அக்கினி மந்தம், இரைப்பையின் தாபம், வாந்தி, மார்புவலி முதலியவை குணமாகும். பீனஸம், வாதக்குடைச்சல், மண்டைக்குடைச்சல் தீரும்.

## 46. ஆகாசகருடன் வேர்

(ப-உ) சமூலம், கிழங்கு.

சுவை–கைப்பு; வீரியம்–வெப்பம்; பிரிவு–கார்ப்பு;

குணம் — துஷ்ட விஷம், பாண்டு, உட்சூடு, சூலை, கிரந்தி, குஷ்டம், தமைச்சல், அக்கிப்புண், குடல்நோய், கண்டமாலை, முத்தோஷம் இவைகள் தீரும்.

## 47. உத்தாமணி வேர்

(ப-உ) சமூலம்.

சுவை–கைப்பு; வீரியம்-வெப்பம்; பிரிவு-கார்ப்பு;

குணம் — வாதரோகங்களைப் போக்கும்.

**48. ஏலந்தை வேர்**

(ப-உ) கொழுந்து, இலை, பழம், பட்டை, வேர், வேர் பட்டை, கட்டை, சமூலம்.

சுவை—துவர்ப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

குணம் — அயர்ச்சியை விலக்கும், பசியை உண்டாக்கும், மலத்தைக் கழிக்கும், கீல் வாதத்தைத் தீர்க்கும்.

(த்ரி-செ) பித்தத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

**49. எருக்கின் வேர்**

(ப-உ) இலை, பூ, பால், பட்டை, வேர்.

சுவை—கைப்பு, காரம், மதுரம்; வீரியம்—வெப்பம்; பிரிவு—இனிப்பு;

குணம் — நாள்பட்ட கீல்வாதம், குஷ்டம், மேகவ்ரணம், மேகப்படை, இரஸவேக்காடு, நீர்க்கோர்வை, பேதி, சீதபேதி, சந்நிபாதம், வாதநோய், இன்னும் பலவித விஷங்களும் தீரும்.

(த்ரி-செ) த்ரிதோஷ ஹாரம்.

**50. கழற்சிக் கொடி வேர்**

(ப-உ) இலை, கொட்டை, பட்டை, வேர்.

சுவை-கைப்பு; வீரியம்-வெப்பம்; பிரிவு-கார்ப்பு.

குணம் — சுரவியாதிக்கு நல்லது, குன்மரோகம் தீரும்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

**51. கண்டங்கத்தரி வேர்**

(ப-உ) இலை, பூ, காய், பழம், விதை, வேர், சமூலம்.

சுவை-கார்ப்பு; வீரியம்-வெப்பம்; பிரிவு-கார்ப்பு;

குணம் — இருமல், நீர்தோஷம், கோழை இவைகள் குணமாகும்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

## 52. காட்டாமணக்கு வேர்

(ப-உ) இலை, பால், வேர், வித்து.

சுவை — துவர்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — கீல் பிடிப்புக்கு வெளிப்பிரயோகம் செய்யலாம். அஜீர்ணத்திற்குக் கொடுக்கலாம். இது இரும்பை ஈயமாக்கக்கூடியது.

(த்ரி-செ) பித்தத்தையும், வாதத்தையும் போக்குந் தன்மையுடையது.

## 53. காய் வேளை வேர்

(ப-உ) இலை, விதை, வேர், பட்டை.

சுவை—கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — வீக்கங்களின்மேல் இதை அரைத்து பூசலாம். குன்மம், நாட்பட்ட அதிசாரம், முதலிய நோய்களுக்குக் கொடுக்க சுகமாகும். விரணங்கள் மேல் பூசவும் உபயோகிக்கலாம். அண்டவீக்கம் குறையும்.

(த்ரி-செ) வாத, கபத்தைக் குறைக்கும்.

## 54. கொடிவேலி வேர்

(ப-உ) வேர்.

சுவை — கார்ப்பு, விறுவிறுப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — கட்டி, விரணம், கிரந்தி, வாதரோகம், அரையாப்புக் கட்டி, குத்தல், சோபை, மூலரோகம், உதிரக்கட்டு, நீரேற்றம், பெருவயிறு இவை போம். மேலும், சூலைக்கட்டு, குழிப்புண், கிரந்தி, மேக விரணம், நெறி, சுரம், விஷம ஜ்வரம் இவையும் தீரும்.

(த்ரி-செ) வாதச்லேஷ்மஹரம்.

## 55. கொன்றை வேர்

(ப-உ) இலை, பூ, புளி, விதை, காய், ஓடு, மரப்பட்டை, வேர்ப்பட்டை.

சுவை — கைப்பு, துவர்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு— கார்ப்பு;

குணம் — வண்டுகடி, தேமல், சொறி, விடநீர் இவைகளைப் போக்கும். இதற்குக் கடின பேதியாகும் குண முண்டு. சுரம் நீங்கும்.

(த்ரி-செ) கபத்தைக் குறைக்கும்.

## 56. சங்கன் வேர்

(ப-உ) இலை, வேர், பால்.

சுவை — கைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — சோபை, வாத வீக்கம், சுர வெப்பம் இவைக ளோடு, முறை சுரம், கீல் வீக்கம், வாத பித்த கோபம், பல் விடம், கோழை இருமல் கப சுரம், உட்சுரம் இவை தணியும்.

## 57. சாரணை வேர்

(ப-உ) சமூலம், வேர்.

சுவை — கைப்பு (உவட்டல்) வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — சீதளம், . நீரோட்டம், தடிப்பு, குன்மம், தேமல், தடிப்பு, வாதவலி, சிறு சிரங்கு, பிரமேகம், இருமல் இவற்றை நீக்கி சிறு நீரைப் பெருக்கும். நெறிகட்டு, ஜலோதரம், நீர்க்கட்டு முதலியவற்றை நீக்கும்.

(த்ரி-செ) கபத்தையும், வாயுவையும் கண்டிக்கும்.

## 58. சிவதை வேர்

(ப-உ) வேர்.

சுவை—கைப்பு, வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு.

குணம் — இதனால் பழயமலம், உதாவர்த்த வாதம், பித்தவாததொந்தம், பாலகிரகதோஷம் இவற்றுடன் மலாசயக்கிருமியும், எலி விஷமும், பித்த குன்மமும் தீரும்.

(த்ரி-செ) கபத்தைக் கண்டிக்கும்.

## 59. சிற்றுமணக்கு வேர்

(ப-உ) இலை, வேர், வித்து.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு.

குணம் — வாதத்தைத் தன்னிலைப்படுத்தும். கஷாயங்களிலும், தைலங்களிலும் இம்மருந்தைச் சேர்ப்பது வழக்கம். நன்றாக பேதியாகும், பக்கசூலை குணமாகும்.

(த்ரி-செ) பித்தத்தையும் வாதத்தையும் போக்குந் தன்மையுடையது.

## 60. சிறு குறிஞ்சான் வேர்

(ப-உ) இலை, வேர்.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு.

குணம் — அற்ப ஜெந்துக்களின் நஞ்சு, வாத சுரம், வாத தோடம், காசம், சுவாசகாசம், இவற்றுடன் பாம்பு கடி விஷங்களுக்கு உள்ளுக்கும் வெளிப்பிரயோகத்திற்கும் உபயோகிக்கலாம்.

## 61. சிறு வழுதுணை வேர்

(ப-உ) இலை, பிஞ்சு, காய், பழம், வித்து, வேர்.

சுவை—கைப்பு, துவர்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—காரப்பு.

குணம் — கப, வாத ரோகங்களை நீக்கும்.

## 62. சீந்தில் கொடி, வேர்

(ப-உ) இலை, கொடி, வேர் (கிழங்கு), சமூலம்.

சுவை—கைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு.

குணம் — இதனால் சர்வமேகம், இரத்த பித்த ரோகம், அதிசுரம், அதிசாரம், மாந்தம், பித்த கணம், அம்ல பித்தம், சர்ப்ப விஷம் ஆகியவை தீரும். ஜடராக்னி விருத்தியாகும்.

(த்ரி-செ) திரிதோஷ சமனி.

## 63. செங்கதாரி வேர்

குணம் — பூதக்கரப்பான், மேக வெடி சூலை போகும்.

## 64. தும்பை வேர்

(ப-உ) இலை, பூ, வேர்.

சுவை—இனிப்பு, கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—இனிப்பு.

குணம் — சர்ப்ப விஷம், வாதநோய், தலைவலி, கப தோஷம், சிலேத்தும ஜன்னி, பிரமேகம், நேத்திரப் புகைச்சல், அக்னி மாந்தம், சோம்பல் இவை தீரும்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் நீக்கும்.

## 65. நன்னாரி வேர்

(ப-உ) வேர்.

சுவை—இனிப்பு, சிறுகைப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு—இனிப்பு.

குணம் — பித்த நோய், வண்டுகடி, நீரேற்றம், தாகம், வாய் நீர்சுரப்பு, புணர்ச்சியின் சூடு, மதுநீர், கிரந்தி, சுரவேகம் தணியும். அதி பித்தம் தீரும்.

( த்ரி-செ ) கபத்தையும் பித்தத்தையும் தணிக்கும். திரி தோஷசமனி

## 66. நல் முருங்கை வேர்

( ப-உ ) எல்லா பாகங்களும்.

சுவை — கைப்பு, துவர்ப்பு, இனிப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு—கார்ப்பு ; ( பட்டை, வேர் ) கார்ப்பு ;

குணம் — வாத கோபத்தை நீக்கும். மண்ணீரல், கல் லீரல் நோய்கள், உதர நோய், கைகால் வீக்கம், வாதம், தொண்டைக் கம்மல், முதுகுவலி முதலியவை குணமாகும்.

( த்ரி-செ ) வாதத்தையும் கபத்தையும் போக்கும்.

## 67. நாயுருவி வேர்

(ப-உ) சமூலம்.

சுவை—கைப்பு, துவர்ப்பு ; கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு-கார்ப்பு ;

குணம் — வசியமுண்டாகும், வேர் ஊறல் கஷாயம் வயிற்று நோயில் மிக்க குணம் தரும், சிறு நீரைப் பெருக்கித் தள்ளும். வீக்கம், காமாலை தீரும்.

( த்ரி-செ ) கபத்தை நாசம் செய்யும்.

## 68. நாகதந்தி வேர்

( ப-உ ) விதை, வேர்.

சுவை—கைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — மலாசயத்தைப் பற்றிய பழைய மலமும், வாத நோயும் தீரும். விஷம சந்நிபாதம், தேகக்குடைச்சல், வயிற்று நோய் இவை தீரும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் நீக்கும்.

## 69. நாய்வேளை வேர்

(ப-உ) இலை, விதை, வேர், சமூலம்.

சுவை—கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு.

குணம் — மாந்தம் போகும், மலக்கிருமிகள் வெளிப்படும்

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் நீக்கும்.

## 70. நிலவாகை வேர்

(ப-உ) இலை.

சுவை—கைப்பு, வெகுட்டல்; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு.

குணம்—மூலவாயு, வெப்பம், கிரந்தி, குன்மம், நாள்பட்ட மலச்சிக்கல் இவைகள் தீரும்.

(த்ரி-செ) கபத்தையும் பித்தத்தையும் சமனம் செய்யும்.

## 71. நெரிஞ்சில் வேர்

(ப-உ) சமூலம்.

சுவை—துவர்ப்பு, இனிப்பு; வீரியம்—சீதம், பிரிவு—இனிப்பு.

குணம் — இதற்கு சொட்டு மூத்திரம், சுர வெதும்பல். கல்லடைப்பு, நீரடைப்பு, முடவாதம், பிரமேக வெள்ளை, மூத்திரகிருச்ரம், திரிதோஷ கோபம், விரணம், சுரதாகம், வெப்பம், ஆகியவைகள் நீங்கும்.

(த்ரி-செ) த்ரிதோஷ சமனி.

## 72. பசளை வேர்

(ப-உ) இலை, வேர்.

சுவை—இனிப்பு ; வீரியம்—சீதம் ; பிரிவு—இனிப்பு ;

குணம்— பித்தத்தைத் தணிக்கும், தாகத்தையும் சூட்டையும் தணித்து மலத்தை இளக்கும்.

(த்ரி-செ) வாதத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

## 73. பாதிரி வேர்

(ப-உ) இலை, பூ, பட்டை, வேர்.

சுவை—துவர்ப்பு ; வீரியம்—சீதம் ; பிரிவு—இனிப்பு ;

குணம் — மது மூத்திரம், கரப்பான், உழலை, கண், காது, கை, கால் இவைகளைப்பற்றிய எரிச்சல், மேகபிடகம், பெருவிரணம், மூலரோகம், மேகச்சொறி, கபவாத தொந்தம், அக்கினி மாந்தம் இவைகள் தீரும்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

## 74. பாவட்டை வேர்

(ப-உ) இலை, காய், வேர்.

சுவை—கைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — ஈரல் நோய்கள், வாத சுரம், அரோசகம், போம். சோகை நோயில் நீரை இறக்கும், வலப்பாட்டீரல், இடப்பாட்டீரல் நோய்கள் நீங்கும். மகோதரத்தில் நீரை வற்றச் செய்யும்.

(த்ரி-செ) பித்தத்தையும் கபத்தையும் சமனம் செய்யும்.

## 75. பாலை வேர்

(ப-உ) பட்டை, வேர்.

சுவை — இனிப்பு, துவர்ப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு— இனிப்பு ;

குணம் — விக்கல், ஐவகை வலி, வாந்தி, வயிற்றுவலி, விலாக்குத்தல், கருங்கரப்பான், மந்தாக்கினி தீரும்.

## 76. பிரண்டை வேர்

(ப-உ) தண்டு, வேர்.

சுவை — கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — முறிந்த எலும்புகள் சீக்கிரம் கூடும். இதை மேலுக்கும் பற்றிடலாம்.

(த்ரி-செ) வாத கபஹரம்.

## 77. புன்னை வேர்

(ப-உ) இலை, பூ, விதை, பட்டை, பிசின்.

சுவை — கைப்பு, வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — உள் உறுப்புக்களிலிருந்து வருகிற இரத்தப் பெருக்கைத் தடுக்கும். புண்களும், வெள்ளை, வெட்டைகளும் தீரும்.

## 78. புங்கம் வேர்

(ப-உ) இலை, பூ, விதை, வேர், எண்ணெய்.

சுவை —கைப்பு, துவர்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு— கார்ப்பு ;

குணம் — வாதக்குடைச்சல், த்ரிதோஷ மூர்ச்சை, தாப சுரம், வாத குன்மம், இரத்த தாதுவில் வருகின்ற நோய்கள், விரணம், புரையோடல், பாம்பு விஷம் இவை தீரும்.

(த்ரி-செ) பித்தத்தைக் குறைக்கும்.

## 79. பெருங்குமிழ் வேர்

(ப-உ) பழம், வேர்.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — அதிக வெப்பத்தையும், தலையிலுண்டாகும் சண்டுகளையும் போக்கும்.

(த்ரி-செ) வாதத்தைக் குறைக்கும்.

## 80. பெரு மருந்து வேர்

(ப-உ) இலை, வேர்.

சுவை—கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — இதனால் பித்தம், இரைப்பு, இருமல், சுரம், உடம்புவலி, வாதநோய், விஷகடி முதலியவை தீரும். இதைத்தவிர, நாள் பட்ட விரணம், படர் குஷ்டம், இவற்றோடு மாட்டு நோய்களுக்கும் பயன் படும்.

## 81. மருள் வேர்

(ப-உ) பட்டை, கிழங்கு.

சுவை—கார்ப்பு, இனிப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — இதனால் கபக்கட்டு, பெரு வயிறு, பலவித சோபை, மூலம் இவைகளை நீக்கி, தீபாக்கினி உண்டாகும். தாகம், மார்பு நோய், சிரங்கு, சுரம், நெறிக்கட்டு முதலியவைகளுக்கு வழங்கலாம்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் குறைக்கும்.

## 82. மாவிலிங்க வேர்

(ப-உ) இலை, பட்டை, வேர்.

சுவை — கைப்பு; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — இதற்கு சுரம், கடிதோஷம், மகா வாத ரோகங்கள், சர்ப்ப கீட விஷம், கல்லடைப்பு இவைகள் தீரும். நாள்பட்ட விரணம், அரையாப்புக்கட்டி முதலியவைகள் குணமாகும்.

(த்ரி-செ) வாதஹரம்.

**83. மிளகரணை வேர்**

(ப-உ) இலை, பட்டை, வேர்.

சுவை — துவர்ப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — கப விருத்தி, அஜீரண வாயு, க்ஷயம், காசம், சுவாசம், வயிற்றுப்பிசம் ஆகியவை நீங்கும். வாத வீக்கங்களுக்கும் இதைப் போடலாம்.

**84. மாதுளை வேர்ப் பட்டை**

(ப-உ) பூ, பிஞ்சு, பழம், விதை, பட்டை, வேர்.

சுவை — துவர்ப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — அதிசாரம், வாந்தி, இவை நீங்கும்.
தட்டைப்புழு விழும். கணச்சூடு, இருமல், நாள் பட்ட சுரம், இரத்த பித்தம் இவைகளுக்கு நல்லது.

(த்ரி-செ) த்ரிதோஷங்களையும் சமனம் செய்யும்.

**85. முடக்கற்றான் வேர்**

(ப-உ) இலை, வேர்.

சுவை—துவர்ப்பு, கைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு— கார்ப்பு ;

குணம் — இதனால் வாதம், மூலம், நாள்பட்ட இருமல், இவைகள் குணமாகும்.

**86. முள் முருக்கு வேர்**

(ப-உ) இலை, பூ, விதை, பட்டை.

சுவை — கைப்பு, கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — தாதுபுஷ்டியை உண்டாக்கும் ; நீரிழிவு நோய் சுகப்படும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் குறைக்கும்.

87. மூக்கரட்டை வேர்

(ப-உ) சமூலம், வேர்.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம்—கீல் வாதத்திற்கும், சுவாசத்திற்கும், காமாலே, நீர்க்கட்டு, சலோதரம், சோபை இவைகளுக்கும் பயன்படும். மலச்சிக்கல் தீரும்.

(த்ரி-செ) கபத்தைக் குறைக்கும்.

88. வட்டத் திருப்பி வேர்

(ப-உ) இலே, வேர்.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம்—சிலேஷ்ம கோபம், விடம், வாத தோஷம், எலும்புருக்கி, பிரமியம், பித்த சுரம், அதிசாரம், சிரங்கு இவை தீரும். மாமிச தாதுவை வளர்க்கும். மலக்கிருமிகள் வெளிப்படும். முறிந்த எலும்பையும் ஒட்டவைக்கும்.

(த்ரி-செ) வாதத்தைம், பித்தத்தையும் குறைக்கும்.

89. வக்கை வேர்

(ப-உ) இலே, பூ, பட்டை, வேர்ப்பட்டை, வித்து, பிசின்.

சுவை—கார்ப்பு, கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம்—இரத்த மூலம், அதிசாரம், பிரமேகம், தாக சுரம் இவை தீரும். இதனல் பல் துலக்க பல் உறுதியாகும்.

(த்ரி-செ) த்ரிதோஷ சமனி.

90. விழுதி வேர்

(ப-உ) இலே, காய், வேர்.

சுவை -- சிறு கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — வெண் மேகம், கரப்பான், வித்ருதிக் கட்டி, சரிரக்குத்தல், மலாசயக் கிருமி, தூர் மலம், இவைகள் நீங்கும். விரேசனமுண்டாகும்.

## 91. வில்வ வேர்

(ப-உ) இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வேர், பிசின்.

சுவை — துவர்ப்பு, கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு— கார்ப்பு.

குணம் — வாத குன்மம், வாயு, கபம், பித்த சோகை, நீரேற்றம், சன்னி, உடல்வலி, அக்னி மந்தம், அரோசகம், அதிசாரம், விக்கல், பித்த சுரம் இவைகள் நீங்கி தேகத்தின் அழகையும், புஷ்டியையும் அதிகப் படுத்தும்.

(த்ரி-செ) த்ரிதோஷ சமனி.

## 92. வெள்ளறுகு வேர்

(ப-உ) சமூலம்.

சுவை—கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு—கார்ப்பு;

குணம் — இதற்குக் குன்மம், வாதப்பிணி, வாதக்குடல் விருத்தி, கீல் பிடிப்பு, நரம்புகளைப் பற்றிய கிரந்தி, தினவு, சிறுசிரங்கு இவை போம்.

## 93. வெள்ளைக்காக்கணம் வேர்

(ப-உ) இலை, விதை, வேர்.

சுவை — கைப்பு, துவர்ப்பு, இனிப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு;

குணம் — வெள்ளை, பிரமேகம், தலை நோய், சுரம், கண் ணோய், ஆமம் இவை நீங்கும். பேதியுண்டாகும். சிறு நீரையும், மலத்தையும் கழிக்கும்.

(த்ரி-செ) பித்தத்தையும், கபத்தையும் போக்கும்.

---

## (3) பட்டை வகை.

### 94. அரசம் பட்டை

(ப-உ) இலை, வித்து, பட்டை, வேர்.

சுவை—துவர்ப்பு, கைப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

குணம் — புண்களை ஆற்றும், விக்கல் சாந்தமாகும், சொறி சிரங்குகள் குணப்படும். வாய்புண்களுக்கு கொப்பளிக்கலாம்.

(த்ரி-செ) பித்தத்தையும் கபத்தையும் குறைக்கும்.

### 95. ஆயில்ய மரப்பட்டை (ஆயில் பட்டை)

(ப-உ) பட்டை.

சுவை—கார்ப்பு, கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — வாதாதி முத்தோஷங்களையும், பழய சுரத்தையும் போக்கடிக்கும்.

(த்ரி-செ) த்ரிதோஷ சமனி

### 96. இலந்தைப் பட்டை

(ப-உ) கொழுந்து, இலை, பழம், பட்டை, வேர், கட்டை, சமூலம்.

சுவை—துவர்ப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

குணம் — கஷாயத்தால் வாதரோகியைக் குளிக்கச் செய்யலாம். பட்டையின் தூளை பழய புண்களுக்கும் விரணங்களுக்கும் தூவிக் கட்டலாம். சுரம் தீரும்.

(த்ரி-செ) த்ரிதோஷ சமனி.

## 97. எருக்கு

(ப-உ) இலை, பூ, பால், பட்டை, வேர்.

சுவை—கைப்பு, காரம், மதுரம்; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — நாள்பட்ட சில்வாதம், குஷ்டம், மேகவிரணம் மேகப்படை, இரசவேக்காடு, நீர்க்கோர்வை, சந்நிபாதம், வாதநோய் முதலியவை தீரும்.

(த்ரி-செ) வாதஹரம்.

## 98. கள்ளிப் பட்டை

(ப-உ) பால், தண்டு, வேர்ப்பட்டை.

சுவை—கைப்பு, கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — நரம்புச்சிலந்தி, கபவாத தொந்தம், சந்நிபாதம் இவை தீரும்.

(த்ரி-செ) த்ரிதோஷ ஹரம்.

## 99. கொன்றைப் பட்டை (சரக்கொன்றை)

(ப-உ) இலை, பூ, புளி, விதை, காய், ஓடு, மரப்பட்டை, வேர்பட்டை.

சுவை—கைப்பு துவர்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — இதனால் பெருவியாதி, கிருமி, சூலை, வாதகப தொந்தம், மலக்கட்டு, அரோசகம், இவை போம், பேதியுண்டாகும்.

(த்ரி-செ) த்ரிதோஷ ஹரம்.

## 100. கொடிவேலி வேர் பட்டை

கொடி வேலி வேரைப் பார்க்க. (54)

## 101. நாவல் பட்டை

(ப-உ) சமூலம்.

சுவை—துவர்ப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — வாயிற் பிறக்கும் நோய்கள், இருமல், பெரும்பாடு, ஈளை, குழந்தைகளின் கிரக தோடங்கள், வியங்கம், லாஞ்சனம் என்னும் மச்ச பேதங்கள் ஆகியவை போம்

(த்ரி-செ) கப பித்தங்களைப் போக்கும்.

## 102. புரசம் பட்டை

(ப-உ) இலை, பூ, விதை, பட்டை பிசின்.

சுவை—துவர்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — வாதாதிக்கம், தலைபாரம், நீர்க்கோர்வை, இருமல் முதலியன போகும், அதிதாகம் நீங்கும், பாம்புக்கடி விடமும் நீங்கும்.

(த்ரி-செ) பித்தத்தை அதிகரிக்கும்.

## 103. புங்கம் பட்டை

(ப-உ) இலை, பூ, விதை, வேர், எண்ணெய்.

சுவை—கைப்பு, துவர்ப்பு; வீரியம்—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

புங்கம் வேரைப் பார்க்க (78)

## 104. புளியம் பட்டை

(ப-உ) இலை, ஈர்க்கு, பூ, காய், பழம், ஓடு, கொட்டை, பட்டை.

சுவை—துவர்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — உளைமாந்தை, குன்மரோய், வாதாதிசாரம், சுரம், அசீரணம் இவை நீங்கும். பித்தமும் பசியும் விருத்தியாகும்.

( த்ரி-செ ) கபத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

## 105. மாவலிங்கம் பட்டை

( ப-உ ) இலை, பட்டை, வேர்.

சுவை—கைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — இதனால் வாத ரோகம், சந்நி, கல்லடைப்பு இவைகள் தீரும்.

## 106. முருங்கைப் பட்டை

( ப-உ ) எல்லா பாகங்களும்.

சுவை—கைப்பு, துவர்ப்பு, இனிப்பு ; வீரியம்—சீதம் ; பிரிவு—கார்ப்பு.

குணம் — கபதோடமும், சந்நிபாதமும், வாத தோடங்களும், சில் விஷங்களும் தீரும்.

( த்ரி-செ ) த்ரி தோஷ சமனி.

## 107. முள் முருங்கைப் பட்டை

( ப-உ ) இலை, பூ, விதை, பட்டை.

சுவை—கைப்பு, கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — இதன் மை கண்ணோயைத் தீர்க்கும். புண்களைக் கழுவ இதன் கஷாயம் உபயோகப்படும். நீரிழிவும் குணமாகும்.

( த்ரி-செ ) வாதத்தையும், கபத்தையும் குறைக்கும்.

## 108. வெட்பாலைப் பட்டை

( ப-உ ) இலை, பட்டை, வித்து.

சுவை—துவர்ப்பு, சிறுகைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — குடல் சம்மந்தமான நோய்களைத் தீர்க்கும், ஜடாராக்கினியைத் தூண்டும். மலத்தைக் கட்டும். பல்வலி நீங்கும்.

( த்ரி-செ ) பித்தத்தைக் குறைக்கும்.

## 109. வெள்ளி லோத்திரப் பட்டை.

( ப-உ ) பட்டை, கட்டை.

சுவை — துவர்ப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — விஷ விருக்ஷங்களின் நஞ்சு, எலும்புருக்கி, பெரு வயிறு, குரல் கம்மல், உதாவர்த்தம், அசீரண பேதி, கிரகணி, சீதபேதி, அதிசாரம், பெரும்பாடு. சூதகத்தடை இவை நீங்கும்.

( த்ரி-செ ) கபத்தைக் குறைக்கும்.

## 110. வெள்ளெருக்கம் பட்டை.

97. எருக்கைப் பார்க்க.

## 111. வேப்பம் பட்டை.

( ப-உ ) இலை, ஈர்க்கு, பூ, காய், பழம், வித்து, நெய், பிண்ணாக்கு, மரப்பட்டை, வேர்ப் பட்டை, கட்டை, கள், பிசின்.

சுவை — கைப்பு, சிறு துவர்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — சீதசுரம், மூலகணம், மாந்தம், மலம், வாத கோபம், குன்மம், எரி பூச்சி இவைகளைப் போக்கும்.

( த்ரி-செ ) பித்த கபங்களைக் குறைக்கும்.

## (4) சாறு வகை

### 112. அகத்திச் சாறு

(ப-உ) இலே, பூ, பட்டை, வேர்.

சுவை — கைப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — சாற்றை மூக்கில் நஸ்யம் செய்ய முறை சுரம் விலகும். சாதாரண சுரங்களில் உடம்பின் மேல் பூசலாம். தலையில் தடவ பைத்தியமும், தலைவலியும் போகும்.

(த்ரி-செ) திரிதோஷ ஹரம்.

### 113. இஞ்சிச் சாறு

(ப-உ) கிழங்கு.

சுவை — கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், வாந்தி, குடல் நோய், பித்தமயக்கம், நீரிழிவு இவைகள் தீரும். தொண்டைப்புண், குரல் கம்மல் இவை குணப்படும்.

(த்ரி-செ) கபத்தையும் வாயுவையும் கண்டிக்கும்.

### 114. ஊமத்தைச் சாறு

(ப-உ) இலே, பூ, காய், விதை,

சுவை—கைப்பு, வீரியம்—வெப்பம் : பிரிவு—கார்ப்பு;

குணம் — புண், புரை, ஆறுதபுண், பிளவை, துர்ச்சதை இவைகளைப் போக்கும்.

### 115. எலுமிச்சம் பழச்சாறு

(ப-உ) இலே, காய், பழம், பழரசம், எண்ணெய்.

சுவை — புளிப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

**குணம்** — பித்த மயக்கம், வாந்தி, அரோசகம், தாகம், யானைக்கால், உன்மாதம், கண்ணோய், காதுவலி இவற்றிற்குப் பயன்தரும். நகச்சுற்றுக்கும் நன்மை பயக்கும். தாகவிடாய் தீரும்.

(த்ரி-செ) கபஹாரம், பித்தஹாரம்.

## 116. எருக்கம்பூச் சாறு

(ப-உ) இலை, பால், பட்டை, வேர்.

சுவை — 97 எருக்கைப் பார்க்க.

குணம் — அப்பிரகத்தை சுத்திசெய்யும்.

## 117. கள்ளி இலைச்சாறு

இதை வைக்கோற்றீயில் வாட்டிப் பிழிய இரசம் வரும். இதைக் குழந்தைகளுக்குப் புகட்ட கக்குவான், காமாலை, கரப்பான், குன்மம், பெரு விரணம் இவை தீரும். பெரியவர்களுக்கு மலபந்தம், அஜீரணம், வாத தோடம் நீங்கும்.

(த்ரி-செ) வாதஹாரம்.

## 118. கரிசலாங்கண்ணிச்சாறு

(ப-உ) இலை, வேர், சமூலம்.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — இதனால் பாம்புக்கடி விஷம், ஜலதோஷம், காதுவலி, யானைக்கால், மூத்திரத்தில் இரத்தம் வருதல் முதலியவை நீங்கும்.

இது பலவித தைலங்களில் சேரும்.

(த்ரி-செ) கபஹாரம்.

## 119. கருநொச்சிச்சாறு

சுவை — கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — கழுத்து நெரிக்கட்டு, மாந்தம், சுவாசகாசம் முதலியவை தீரும்.

(த்ரி-செ) வாதத்தையும், கபத்தையும் சமனம் செய்யும்.

## 120. காட்டாமணக்குச் சாறு

சுவை — துவர்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு;

குணம் — புடைகளுக்கும் சர்ம வியாதிகளுக்கும் பூசலாம்.

## 121. குப்பைமேனிச் சாறு

சுவை — கைப்பு, கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு.

குணம் — நன்முக பேதியாகும், மலக்கிருமியை வெளிப்படுத்தும், இருமலைத் தணித்துக் கோழையை வெளிப்படுத்தும். வாத வலியையும் தலைவலியையும் தீர்க்கும்.

## 122. கொடிப்பிரண்டைச் சாறு

குணம் — காதுச் சீழுக்குக் காதில்விடக் குணம் தரும்.

சுவை — கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

## 123. கொர்மாட்டி மாதுளைச் சாறு

(ப-உ) பழம், இரசம்.

சுவை — கைப்பு, புளிப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம்— உஷ்ணத்தையும், தேக அனலையும் தணித்து தாக சாந்தி கொடுக்கும், பித்த வாந்தியை நிறுத்தும். சுரம், அமோசிகம் தீரும்.

## 124. கொடிவேலி இலைச் சாறு

சுவை — கார்ப்பு, சிறுவிறுப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — நல்லெண்ணெயுடன் கலந்து தைல பதத்தில் வடித்து உபயோகிக்கத் தீராத தலைவலி, நீர் பீனஸம், தும்மல் வாத நோய் முதலியவைகள் சமனப்படும்.

## 125. சிவகரந்தைச் சாறு

சுவை — துவர்ப்பு, சிறுகார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — இதனால் பாதரசம் சுத்தியாகும்.

## 126. தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு

( ப-உ ) இலை, கிழங்கு.

சுவை — இனிப்பு; வீரியம் — சீதம்; பிரிவு — இனிப்பு.

குணம் — தேக வெப்பத்தைத் தீர்த்து வெள்ளையை நிறுத்தும். தாது புஷ்டியைத் தரும். பித்த சூலை நீங்கும்.

## 127. தூது வேளைச் சாறு

சுவை — சிறிது கைப்பு, கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — காதடைப்பு, காதெழுச்சி குணமாகும். கபக் கட்டை அறுக்கும்.

## 128. பேய்க் கொம்மட்டிச் சாறு

சுவை — கைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — மலபந்தம், சூதகக்கட்டு, சூதகஜன்னி, இரத்த குன்மம் முதலியவைகள் தீரும்.

129. பொன்னாங்காணிச் சாறு

சுவை — இனிப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — வாத கப சம்பந்தமான கண் ரோகங்கள் தீரும். பல வகைத் தைலங்களில் சேரும். இத்தைலங்கள் கண் ரோகங்களை நீக்க வல்லது.

130. முருங்கிலைச் சாறு

சுவை — கைப்பு, துவர்ப்பு, இனிப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — கண்ணிலிடக் கண்வலி தீரும். அதிமூத்திரம் குறையும், வாந்தி செய்விக்கலாம். தலைவலிக்குப் பொட்டில் தடவலாம்.

131. வெள்ளைச் சாறணைச் சாறு

சுவை—கைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — மூக்கில் பிழிய நீரேற்றம், ஒற்றைத்தலைவலி நேத்திரப்பிணிகள் தீரும். காமாலை, வீக்கம், பாண்டு குன்மம், வயிற்றுளைச்சல் முதலியவைகளைத் தீர்க்கும். விஷங்களை முறிக்கும். தீபனம் உண்டாக்கும். கட்டுப்பட்ட நீரை வெளிப்படுத்தும்.

132. வெள்ளைப் பூண்டுச் சாறு

சுவை—கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — காதில் பிழிய செவிடு நீங்கும். உள்நாக்கில் தடவ குணமாகும். இருமல், சுவாசம், மலக்கிருமி இவைகள் தீரும். சுளுக்கும், மேற்றோல் சரிவும் குணப்படும்.

133. வெற்றிலைச் சாறு

சுவை—விறுவிறுப்பு, கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — கபம், சீதளம், காணுக்கடி, தூர்க்குணம், த்ரிதோஷ கோபம், இவை தீரும். சிரோபாரத்திற்கு நஸ்யமாகவும், காது குத்தலுக்கு காதிலும் விடக் குணம் தரும். அஜீரணம் விலகும்.

### 134. வெள்ளைக் காக்கணச் சாறு

சுவை—கைப்பு, துவர்ப்பு, இனிப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — க்ஷயரோகத்தின் அதிக வியர்வை நீங்கும். நெரிக்கட்டுகளுக்கு பூசினால் அது கரையும்.

### 135. வேலிப் பருத்திச் சாறு

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — சுவாசகாசம் தீரும். கால் வீக்கங்களுக்கு மேலே தடவலாம். கருப்பையிலுண்டாகும் பக்க சூலைக்கு இதன் சாற்றை தேனுடனே பிரயோகிக்கலாம்.

### 136. எருக்கம் பால்

சுவை—கைப்பு, காரம், மதுரம்; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — ஐவகை வலிகளும், மகாவாதம், எலி விஷம், குளிர் ஜ்வரம் இவைகளும் தீரும். வாதக்கட்டிகளைக் கரைக்கும். உபாசங்களை செந்தூரிக்கும். பல் நோய், பல்சொற்றை இவைகளுக்கு மேலேதொட்டு வைக்கலாம். நன்கு பேதியாகும்.

### 137. சதுரக்கள்ளிப் பால்

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு.

குணம் — குஷ்டம், காணுக்கடி, சூலை, வாதகுன்மம், வாத நோய், வாதப்பிரமேகம், துஷ்ட விரணம், கரப்பான், பாலுண்ணி முதலிய சருமவியாதிகள், முதலியவைகள் தீரும். நன்றாக பேதியாகும். மூட்டு வீக்கங்கள் கரையும்.

138. நீருக் கள்ளிப் பால்

சுவை—கைப்பு, கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு.

குணம் — கஞ்சவாதம், கிரந்தி, பெருவியாதி, சீதக்கட்டு, கிருமி ரோகம், பக்க சூலை, கரப்பான் இவை தீரும். தேள் கொட்டிய வாயிலிட வேதனை அடங்கும்.

139. தேங்காய்ப் பால்

சுவை—இனிப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

குணம் — வாத விகாரம், பித்தாதிக்கம், கரப்பான் சுக்கில வ்ருத்தி இவை யுண்டாகும்.

---

## (5) கிழங்கு வகை

140. அமுக்கிராக் கிழங்கு

(ப-உ) இலை, விதை, கிழங்கு.

சுவை — கைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — கபம், வாத சூலை, வாத ரோகம், கரப்பான், பாண்டு, சுரம், வீக்கம், ஆயாசம் இவைகளைப் போக்கிப் பசி உண்டாக்கும். காசம், ச்வாஸம், க்ஷயம், விரணம் இவைகளைப் போக்கும்.

(த்ரி-செ) வாத கபங்களைக் குறைக்கும்.

141. அப்பக்கோவைக் கிழங்கு

(ப-உ) இலை, காய், தண்டு, கிழங்கு.

சுவை — கைப்பு; வீரியம் — சீதம்; பிரிவு — கார்ப்பு.

குணம் — சந்திகளிலுண்டாகும் குற்றல், பித்த கோபம், சர்மதள குஷ்டம், நாக்கு ரோகம், இரைப்பு, கோவை, மதுமேகம், ரத்த பித்தம், வீக்கம், பொருமல், அரோசகம் இவற்றை நீக்கும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் குறைக்கும். பித்த கோபத்தையும் தணிக்கும்.

142. **கருணைக் கிழங்கும்,** காட்டுக்கருணைக் கிழங்கும்

(ப-உ) தண்டு, கிழங்கு.

சுவை — கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — மூலரோகம், கிருமிகள், வாத சூலை, குன்மம், ரத்த தோஷம், ச்வாசம், காஸம், வாந்தி, இவைகளை நீக்கி, பசி தீபனத்தையும், சீரணத்தையும் உண்டாக்கும்.

(த்ரி-செ) கபம், வாதம் இவற்றைக் குறைக்கும்.

143. **கோரைக் கிழங்கு** முத்தக்காசைப் பார்க்க.

144. **தண்ணீர் விட்டான் கிழங்கு**

(ப-உ) இலை, கிழங்கு,

சுவை — இனிப்பு, கைப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — நீர்ப்பிழிவு, நாட்பட்ட சுரம், எலும்புருக்கி நோய், வெட்டை, உட்சூடு, ரத்த பித்தம், இவைகளுக்கு வழங்கலாம். பலம் தரக்கூடியது, தாது புஷ்டி தரக்கூடியது.

(த்ரி-செ) வாதத்தையும், பித்தத்தையும் போக்கும்.

145. **தாமரைக் கிழங்கு**

(ப-உ) சமூலம்.

சுவை — இனிப்பு, துவர்ப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — பித்த ஸந்தாபம், ரத்த பித்தம், வலி, ச்ரமம், முதலிய நோய்களையும் காசம், மாமிச தாதுவைப் பற்றிய தவளைச் சொறி இவற்றையும் நீக்கும். நேத்திர ஒளி, குளிர்ச்சி இவைகளைத் தரும்.

(த்ரி-செ) பித்தஹரம்.

## 146. தேசாவரக் கிழங்கு

கண்டத் திப்பிலியைப் பார்க்க.

## 147. நிலப்பனைக்கிழங்கு

(ப-உ) கிழங்கு.

சுவை—இனிப்பு, கசப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

குணம் — இதனால் மேக மூத்திர வெப்பம், வெண் குஷ்டம், ஒழுக்குப்பிரமேகம், நீலாஞ்சனரோகம், முதலியவைகள் நீங்கும். ஆண்மையும், பலமும், விருத்தியாகும்.

(த்ரி-செ) பித்தத்தையும் கபத்தையும் போக்கும்.

## 148. மருளங் கிழங்கு

(ப-உ) பட்டை, கிழங்கு.

சுவை—கைப்பு, துவர்ப்பு; வீரியம் —வெப்பம்; பிரிவு—கார்ப்பு.

குணம் — கபக்கட்டு, பெருவயிறு, பலவித சோகை, மூலம் இவை தீரும், தீபாக்கினிஉண்டாகும். தாகம், மார்பு நோய், சிரங்கு, ஜ்வரம், நெறிக்கட்டு, வாத நோய் இவைகளும் தீரும்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் குறைக்கும்.

### 149. வெள்ளைச் சாறணைக் கிழங்கு

(ப-உ) சமூலம், வேர்.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — பீஜ வீக்கம், மந்தம், வாத கோபம், நெறிக் கட்டி ஜ்வரம், ஜலோதரம், மலக்கட்டு, நீர்கட்டு, சூதி காவாயு, குன்மம், சுவாஸம், வெட்டை முதலியவை தீரும்.

(திரி-செ) வாதத்தையும், கபத்தையும் குறைக்கும்.

### 150. முள்ளங்கிக் கிழங்கு

(ப-உ) இலை, கிழங்கு, விதை.

சுவை—கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — வாதப்பிணி, கரப்பான், வயிற்றெரிச்சல், குத்தல், குடல் விருத்தி நோய், இருமல், கபம், தலைவலி நீரேற்றம், பல்நோய், பல் சிலந்தி, குன்மம், சுவாஸம், மூலக்கடுப்பு இவை போம்.

(த்ரி-செ) த்ரிதோஷ ஹரம்.

---

## (6) வித்து வகைகள்.

### 151. ஆமணக்கு வித்து

சுவை—இனிப்பு; வீரியம்—உஷ்ணம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — கட்டிகளின் மேல் கட்டிவர அவைகள் பழுத்து உடையும். ஒத்தடம் கொடுக்க வயிற்றுவலி, மூத்திரப்பை தாபிதம், கல்லடைப்பு, சதையடைப்பு, பக்கவலி, வீக்கம் இவைகள் தீரும்.

(த்ரி-செ) வாதத்தைக் குறைக்கும்.

## 152. கழற்சிக்காய் வித்து

(ப-உ) இலை, கொட்டை, பட்டை, வேர்.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — அண்டவாதம், பக்கசூலை, வயிற்றுவலி, குன்மம் முதலிய நோய்களும் வீக்கமும் போகும். பசியை உண்டாக்கும்

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

## 153. காட்டாமணக்குப் பருப்பு

(ப-உ) இலை, பால், வேர் வித்து.

சுவை—துவர்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — தைலங்களோடு சேர்ந்து வாதரோகம், சரும வியாதி இவைகளைத் தீர்க்கும்.

## 154. பெருங்குமிழ் விதை

(ப-உ) பழம், விதை.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — அதிக வெப்பத்தையும், தலையிலுள்ள சுண்டுகளையும் தீர்க்கும்.

## 155. பொன்னுமத்தை விதை

(ப-உ) இலை, பூ, காய், விதை.

சுவை—கார்ப்பு; வீரியம்—உஷ்ணம்; பிரிவு—கார்ப்பு;

குணம்—புண், கிரந்தி, நாட்பட்ட கிராணி, கர்ப்பாதிசாரம் பித்தசுரம், நீங்காவிஷஜுரம், அதிசாரம், முதலியவை தீரும். குஷ்டங்களுக்கு மேலே பத்துப்போடலாம்.

**156. வேப்பம் வித்து**

(ப-உ) இலை, ஈர்க்கு, பூ, காய், பழம், வித்து, நெய், பிண்ணாக்கு, மரப்பட்டை, வேர்ப்பட்டை, கட்டை, கள், பிசின்.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — விஷம், சன்னிபாதம், இவைகள் நீங்கும். விரணத்தில் இழைத்துப் பூசப்புழுக்கள் வெளிப்படும்.

(த்ரி-செ) கபத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

---

## (7) கடைச் சரக்கு வகைகள்

**157. அதிமதுரம்**

(ப-உ) இலை, வேர், பால், விதை.

சுவை — இனிப்பு ; வீரியம் — சீதம்; பிரிவு — இனிப்பு.

குணம் — த்ரிதோஷப்புண், தாகம், கண்நோய், உன்மாதம், விக்கல், வலி, வெண்குஷ்டம், பித்தம், எலும்புருக்கி, கிரிச்சிரம், ஆவர்த்த பித்தம், மத மூர்ச்சை, விஷபாகம், வெப்பு, வாத சோணிதம், காமாலை, தாது நஷ்டம், வாய் வேக்காளம், இருமல், வெட்டுக்காயம் முதலியவைகளுக்கு நல்லது.

நீர்க்குண்டிக்காய் (Kidney)-க்கும் மண்ணீரலு (Spleen)-க்கும் ஆகாது.

(த்ரி-செ) வாத பித்தஹரம்.

**158. அதிவிடையம்**

(ப-உ) வேர்.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — விரணம், முறைசுரம், வேகமுள்ள அதிசாரம், கோழை, மேல் நோக்கிய வாந்தி முதலிய நோய்களைப் போக்கும்.

(த்ரி-செ) கப, பித்தஹரம்.

## 159. அரேணுகம்

(ப-உ) விதை.

சுவை — கார்ப்பு; வீரியம் – சீதம்; பிரிவு – கார்ப்பு;

குணம் — நமைச்சல், தாகம், விஷம் முதலியவற்றை நீக்கி முகத்திற்குக் கவர்ச்சியை உண்டுபண்ணும். வாசனைச் சரக்குகளில் ஒன்று.

## 160. அபினி

(ப-உ) கசகசாப்பால்.

சுவை — கைப்பு; வீரியம் – வெப்பம்; பிரிவு – கார்ப்பு;

குணம் — குன்மம், வாதப்பிணிகள், காது நோய்கள், பல்வலி, பேதி வகை எல்லாவற்றிற்கும், நல்லது. நாசிரோகம், சூதக வயிற்றுவலி, இரத்தப்பெருக்கு, அண்டவாயு, இடுப்புவலி, எலும்பு நோய்கள், இசிவு, இரைப்பு, மார்சளி, விரணம் இவைகளுக்கும் நல்லது.

(த்ரி-செ) கபத்தைக் குறைத்து, வாதத்தையும் பித்தத்தையும் அதிகமாக்கும்.

## 161. அகில் கட்டை

(ப-உ) கட்டை, பிசின்.

சுவை — கார்ப்பு, கைப்பு, அற்ப இனிப்புள்ளது; வீரியம் — வெப்பம்; பிரிவு – இனிப்பு.

குணம் — பீனிஸம், ஒற்றைத் தலைவலி, வாதம், நாசியடைப்பு, சுரம், வாந்தி, அருசி, அயர்வு முதலியவை நீங்கி விருத்தர்களின் தளர்ந்த தேகம் இறுகும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் குறைக்கும்

## 162. ஏலக்காய்

(ப-உ) காய்.

சுவை — கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — சுரத்தைத் தணிக்கும், வாய் வேக்காளம், பேதி, அரையாப்புக்கட்டி, வாந்தி, சிலந்தி விஷம், உஷ்ண பேதி, இருமல், நெஞ்சில் கோழை, சுக்ர நாசம், ரத்த பித்தம், அரோசகம் முதலியவைகள் தீரும்.

(த்ரி-செ) பித்தம், கபம் இவற்றைக் குறைக்கும்.

## 163. ஓமம்

(ப-உ) வித்து.

சுவை — கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — சீத சுரம், காசம், செரியாமாந்தம், பொருமல், பேதி, அதிசாரம், குடலிரைச்சல், ஆசனக் கடுப்பு, சீத பேதி, சுவாசகாசம், தந்த ரோகம், முதலியவைகள் போம்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

## 164. கடுகு

(ப-உ) வித்து.

சுவை — கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — தலைவலியைத் தரக்கூடிய இருமல், பீனஸம், கோழை, கபம், காணுக்கடிவிஷம், குடைச்சல், மூடம், அக்கினி மந்தம், அரோசகம், தோல் வியாதி இவை தீரும். ஸுகப்ரஸவமுண்டாக்கும். வாத சீதக் கடுப்பு, கீல்வாதம், விக்கல் இவை நீங்கும். நீரைப் பெருக்கி வாந்தியையுண்டுபண்ணும். கிருமி, அரிப்பு, குஷ்டம் இவைகளுக்கு நல்லது.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் கண்டிக்கும்.

## 165. கடுகரோகிணி

சுவை — கைப்பு, கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — மாந்தம், சுரம், கபாதிக்யம், கரப்பான், சூதகக் கட்டு, நீர்க்கோர்வை, காக்கை வலி, உன்மாதம், இவைகள் குணமாகும். கபாதிக்க அரோசகம், விஷமஜ்வரம், ரத்தபித்தம் இவைகள் நீங்கும்.

(த்ரி-செ) பித்தத்தைக் குறைக்கும்.

## 166. கடுக்காய்

சுவை — முக்கிய சுவை துவர்ப்பு ; உப சுவைகள் — இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு. (உப்பு சுவை ஒன்று மட்டும் இல்லை). வீரியம் — வெப்பம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — அபஸ்மாரம், அரோசகம், இருதய நோய், இரத்த பித்தம், இடிபட்ட புண், உதாவர்த்தரோகம், கண் நோய்கள், காசம், காமாலை, கிருமி நோய்கள், குன்மம், குஷ்டம், கைகால் எரிச்சல், கோழைக்கட்டு, சித்த பிரமை, சிரோரோகம், சுவாசம், சோபை, தமகச்வாசம், பல் நோய்கள், தொண்டைக்கம்மல், நாவறட்சி, நபும்ஸகம், பாண்டு, பீலீசம், பிரமேகம், மலமந்தம், ஆரம்ப மஹோதரம், மார்புநோய், மூத்ராகாதம், மூத்ரகிருச்சரம், மூலரோகம், மேகரோகம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், வாந்தி, விக்கல், விஷ ஜுரம், க்ஷயம், ஈரல் வியாதி, அஜீரணம், அழலை, இருமல், உள்ளங்கால் எரிவு, உஷ்ணவாயு, கிரந்தி, சூலை, பவித்ரம், புகைச்சல், கிரந்தி, வயிற்றுக்கட்டி, வாய்ப்புண் முதலிய பலவகை ரோகங்கள் தீரும். ரஸாயன குணமுடையது.

(த்ரி-செ) த்ரிதோஷசமனி.

கடுக்காய்ப்பிஞ்சின் குணம் — பிஞ்சினால் மலச் சிக்கலும், எலும்பைப்போல் வெளுத்து வாராநின்ற சீதமும் நீங்கும். மூல வாயுவினால் பிறந்த முக்கலும், ஆசனக் கடுப்பும் இராது.

### 167. கஞ்சா

(ப-உ) இலை, பூ, சமூலம், நார்.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு;

குணம் — விரண சன்னி, மதுபான வெறி, பால இசிவு, பலவித சூலை, நரம்பு வேதனை, வாந்திபேதி, பெரும்பாடு, கீல்வாதம், மந்தப் பிரஸவம், அதிசாரம், ஒற்றைத் தலைவலி, சுக்குவான், வயிற்றுவலி, அதிஸ்தூல ரோகம் இவை போம். மூல வாயு, கிராணி, கரப்பான் இவைகளும் குணமாகும்.

(த்ரி-செ) பித்தத்தை அதிகரிக்கச் செய்யும்.

### 168. கண்டத்திப்பிலி

(ப-உ) வேர்.

சுவை — கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — தாகம், பித்தம், சோகம், விடாச்சுரம், இருமல், மேகம், தேகக் கடுப்பு, பித்த தாகம், மூர்ச்சை, காசம் இவை நீங்கும் துர் நீரை வற்றச்செய்யும்.

(த்ரி-செ) வாதம், கபம் இவ்விரண்டையும் குறைத்து பித்தத்தை அதிகரிக்கச் செய்யும்.

### 169. கருஞ்சீரகம்

(ப-உ) வித்து.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு —கார்ப்பு ;

குணம் — மண்டைக் கரப்பான், விரணம், உட்சூடு, தலைநோய், கண்ணோய், சிரங்கு, வயிற்றுப் பொருமல், குன்மம், மார்புவலி, இருமல், வாந்தி, வீக்கம் முதலியவைகள் தீரும்.

(த்ரி-செ) கபத்தைக் குறைக்கும்.

170. **கற்கடசிருங்கி** ( கடுக்காய்ப்பூ )

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — இருமல், இரத்த சீதமலம், முக்கல், கிராணி, பேதி, ரத்த மூலம், ஈளை, வயிற்று இரைச்சல், பேதி, இரத்த மூலம், ரத்த பித்தம், மேகவிரணம் இவைகள் தீரும்.

( த்ரி-செ ) பித்தத்தையும், வாயுவையும் கண்டிக்கும்.

171. **கரியபோளம்**

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — மார்புவலி, வீக்கம், மகாவாதம், வயிற்றுவலி, மேகக்கட்டி, கை கால்களிலுள்ள வலி, இவைகள் நீங்கும். ருதுவை ( மாதவிடாய் ) உண்டாக்கும். தீபன சக்தியை அதிகரிக்கும்.

( த்ரி-செ ) கப, பித்தஹரம்.

172. **களிப்பாக்கு**

சுவை — துவர்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — நெஞ்சில் கோழையும், அதிசாரமும், மன (மகிழ்ச்சியையும் உண்டாகும். பித்த அருசி ஒழி) யும். அதிகம் சாப்பிட்டால் சோகை உண்டாகும்.

( த்ரி-செ ) வாத, கபங்களைக் குறைக்கும்.

173. **கச்சோலம்**

சுவை — கைப்பு, அற்பகாரம் ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — கபநோய், கீல்பிடிப்பு, விரணம் இவை நீங்கும்.

( த்ரி-செ ) கபஹரமானது.

174. **கார்போகரிசி**

(ப-உ) வித்து.

சுவை — கைப்பு, இனிப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — கடுவன், விரணம், சர்ப்ப விஷம், தினவு, யானைச்சொறி, கிரந்தி இவைகள் தீரும். பசி உண்டாகும், குஷ்டம் விலகும்.

(த்ரி-செ) கபத்தைக் குறைக்கும்.

175. **காசுக்கட்டி**

சுவை — துவர்ப்பு, கைப்பு; வீரியம் — உஷ்ணம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — விரணம், அஜீர்ணபேதி, தொண்டைக் கம்மல், ருசியின்மை, இவைகள் தீரும்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் குறைக்கும்.

176. **கிரும்பு**

(ப-உ) பூ.

சுவை — காரமும், விறுவிறுப்புமுள்ளது; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — பித்தமயக்கம், பேதி, வாந்தி, இரத்தக் கடுப்பு, கிராணி, சுக்கில நஷ்டம், மச்சம், கண்ணில் பூ, படை இவை நீங்கும். மலத்தைக் கட்டும். தலை ரோகங்களையும் நீக்கவல்லது.

(த்ரி-செ) த்ரிதோஷஹரம்.

177. **குக்கில்**

சுவை — கைப்பு, துவர்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — காது, உதடு, நாசி, இவற்றிலுள்ள நோய், மேகப்புண், கட்டி, கடி, வாத வித்திரதி, சூலை, கிராணி, நகவிரணம் இவை நீங்கும்.

## 178. குரோசானி ஓமம்

(ப-உ) இலை, வேர், விதை.

சுவை — கார்ப்பு, சிறு கைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — சூதக ஜன்னி, சுவாசகாசம், ஆரம்ப உன்மாதம், இரச வேகத்தால் காணுகிற நடுக்கம், நினைவு தடுமாற்றம், நித்திரையின்மை, வெகுமூத்திரம், வாதம், வீரிய நஷ்டம், புண், பேதி, கடுப்பு, கரப்பான் ஆகிய நோய்கள் தீரும்.

(த்ரி-செ) கபத்தைக் குறைத்து வாயுவை அதிகரிக்கச் செய்யும்.

## 179. சவுக்கை நீறு

குணம் — யோனி ரோகம், வித்ருதிக்கட்டி, இருதய வாதம், கிரிப்புழு, காசம், கோழை இவைபோம் — விந்து புஷ்டியாம்.

## 180. கொள்ளு

(ப-உ) விதை, சமூலம்.

சுவை — துவர்ப்பு, சிறுகைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — பித்த குன்மம், பயித்தியம் இவை உண்டாகும். நீரேற்றம், குளிர் சுரம், இவை தீரும். சுக்ராச்மரி, விக்கல், ச்வாசம் இவற்றிற்கும் நல்லது.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் குறைத்துப் பித்தத்தை அதிகரிக்கச் செய்யும்.

181. **கோஷ்டம்**

(ப-உ) வேர்.

சுவை — கார்ப்பு, கசப்பு ; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு ;

உபயோகம் — வெட்டை, நடுக்கம், சுரம், தொண்டை நோய், பித்தம், சுவாசகாசம், விஷம், மேகம், தாது நஷ்டம், வெள்ளை விழுதல் இவைகளோடு குஷ்டமும் போம்.

(த்ரி-செ) த்ரிதோஷஹரம்.

182. **சந்தனம்**

(ப-உ) மரம், எண்ணெ.

சுவை — கைப்பு, சிறு துவர்ப்பு ; வீரியம் — சீதம், வெப்பம் ; பிரிவு — இனிப்பு, கார்ப்பு ;

குணம் — த்ரிதோடம், சித்தப் பிரமை, ரூட்சை, ஒழுக்குப் பிரமேகம், நாவரட்சி, உட்சூடு, நமைச்சல், இவைகள் தீரும். விவேகம், சருமதாது ஒளி, இலக்குமி விலாஸம், சரீர பலம் முதலியவைகள் உண்டாகும்.

(த்ரி-செ) பித்தத்தை நாசம் செய்யும்.

183. **சதகுப்பை**

(ப-உ) இலை, பூ, விதை.

சுவை — இனிப்பு, கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — தலைவலி, கர்ணசூலை, ஆசனக்கடுப்பு, சலபீனஸம், பீனஸம் இவை நீங்கும் ; ஈரல், நுரை ஈரல், இரைப்பை முதலிய அவயவங்களிலுள்ள சிக்கலை அறுத்து வன்மையை உண்டாக்கும். சூட்டு உடம்பிற்கு ஆகாது.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

## 184. சவ்வியம்

(ப-உ) கொடி.

சுவை—கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — சூலை, அரோசகம், சந்நிபாத ஜ்வரம், நீடித்த காசம், ஈளை, பயித்தியம், தொண்டைநோய், எலும்பைப் பற்றி ஏறுகிற தாவரவிஷம் இவை போகும்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

## 185. சண்பகப் பூ

(ப-உ) சமூலம்.

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம்—வாத பித்த சுரம், அஸ்தி சுரம், பிரமேகம், சுக்கில நஷ்டம், நேத்திர அழலை இவை நீங்கும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும், குறைக்கும். பித்தத்தையும் நீக்கும்.

## 186. சாதிக்காய்

(ப-உ) காய்.

சுவை—துவர்ப்பு, கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — விந்துநட்டம், அதிசாரம், தலைவலி, இரைப்பு, கிராணி, வெப்ப நோய்கள், முதலியவை தீரும். மேக ரோகங்களும் தீரும்.

(த்ரி-செ) பித்தத்தை அதிகரிக்கச் செய்யும்.

## 187. சாதி பத்திரி

(ப-உ) பத்திரி.

சுவை—கார்ப்பு, துவர்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — தாப சுரம், கிரகணி, ஜலக்கழிச்சல், இவைகளை நீக்கி தாது புஷ்டியை உண்டாக்கும். விஷத்தை நாசம் செய்து, வாயிலுள்ள அரோசகத்தை நீக்கும்.

( த்ரி-செ ) கபத்தைக் குறைக்கும்

## 188. சிறு தேக்கு (கண்டு பாரங்கி).

( ப-உ ) இலை, வேர்.

சுவை—கைப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — ச்வாஸகாஸம், வறட்சி, சலதோஷம், நாசி நோய், குளிர் ஜ்வரம், சோபம், விரணம், க்ருமி இவைகள் நீங்கும்.

( த்ரி-செ ) வாதத்தையும் கபத்தையும் குறைக்கும்.

## 189. சிறு நாகப் பூ

( பு-உ ) இலை, மொக்கு, பூ, விதை, வேர், பட்டை.

சுவை—சிறுகைப்பு, கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — பிரமேகம், உதாவர்த்தம், இருமல், இவைகள் நீங்கும். நீரை வறட்டும் குணம் உண்டு. நீரடைப்பு, உதரச்சிக்கல், காலெரிச்சல், இவை நீங்கும்.

( த்ரி-செ ) வாதத்தையும் கபத்தையும் போக்கும்.

## 190. சிற்றரத்தை

( ப-உ ) வேர்

சுவை—கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — நெஞ்சிற் கோழை, ஈளை, இருமல், சீதளம் கரப்பான், மார்புநோய், மூலம், தந்தநோய், வீக்கம், வலி, நடுக்கம், உதரம், இவைகள் தீரும்.

( த்ரி-செ ) வாதத்தையும் கபத்தையும் குறைக்கும்.

## 191. சீரகம்

(ப-உ) விதை.

சுவை—கார்ப்பு, இனிப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

குணம்—பித்த சாந்தியாகும். அரோசகம், வயிற்றுவலி, வாய் ரோகம், பிலீக நோய், சுவாசம், தொண்டைக் கம்மல், பீனஸ நோய், கிரகணி, முதலியவை விலகும். தாதுபுஷ்டி உண்டாகும். கண்ணுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும்.

(த்ரி-செ) வாதத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

## 192. சீந்தில் சர்க்கரை

சுவை—இனிப்பு, வீரியம்—வெப்பம்; பிரிவு—இனிப்பு;

குணம்—சுரங்களுக்குப் பின் உண்டான பல்ஹீனம், மண்ணீரல் வீக்கம், காமாலை, இருமல், மூர்ச்சை, வாந்தி, கபக்கட்டு, மூத்திரப்பை தாபிதம் இவைகளுக்கு மிகவும் நல்லது.

(த்ரி-செ) த்ரி தோஷ ஹரம்.

## 193. சுக்கு

(ப-உ) உலர்ந்த இஞ்சி.

சுவை—கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—இனிப்பு;

குணம்—விலாக்குத்தல், அஜீரணம், மார்பெரிச்சல், புளித்த ஏப்பம், வெப்பம், ஆசனநோய், சுவாச காசம், நீரேற்றப், முக நோய், சிரநோய், அரோசிகம், வயிற்றுவலி, பாண்டு, யானைக்கால் இவைகள் தீரும்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் கண்டிக்கும்.

## 194. சேராங் கொட்டை

(ப-உ) விதை.

சுவை—கைப்பு, இனிப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—
கார்ப்பு;

குணம் — குஷ்டம், கபம், விடபாகம், கிருமி, சூலை, கிரந்திக் கூட்டம், உடம்புத்திமிர் நோய், தீராக்கடி விஷம், மூலம், வாதரோகம், குன்மம் இவைகளை விலக்கும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் குறைக்கும்.

## 195. தான்றிக் காய்

(ப-உ) இலை, பழம், விதை.

சுவை—துவர்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு— இனிப்பு;

குணம் — இதனால் சிலந்தி விஷம், பிரமேகம், வாத பித்தம், இரத்தபித்தம், இவைகள் போகும். தலைமயிரை வளர்க்கும். காசம், ச்வாஸம், அச்மரி, வயிற்றுப் போக்கு, வீக்கம், பல்வலி, இவற்றை நீக்கும். கண் வலி, வாய்ப்புண், இவைகளும் நீங்கும்.

(த்ரி-செ) கபத்தைக் குறைக்கும்.

## 196. தாளீச பத்திரி

(ப-உ) இலை, பட்டை, பழம்.

சுவை—கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — பேதி, சீதபேதி, சுரம், பீனஸம், தொண்டை ரோகம், நாள்பட்ட இருமல், இரைப்பு, அரோசகம், வாந்தி, அஜீரணம், அஸ்திஜ்வரம் இவைகள் தீரும். சுகப்பிரஸவமுண்டாகும். விக்கல், க்ஷயம், இவைகள் தீரும்.

(த்ரி-செ) த்ரி தோஷ ஹரம்.

## 197. திப்பிலி

(ப-உ) காய், அரிசி.

சுவை—கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—இனிப்பு;

குணம் — இருமல், குன்மம், இரைப்பு, கப நோய், பாண்டு, அரோசகம், மூர்ச்சை, ஜலதோஷம், பீலிகம், மஹோதரம், மேகக்கட்டி, தொண்டை நோய், தலை நோய்கள், முதலியவை நீங்கும். ஜ்வரம், ச்வாஸம், இவை நீங்கி தீபனம் உண்டாகும்.

(த்ரி-செ) வாதத்தையும் கபத்தையும் போக்கும்.

## 198. தேவதாரு

(ப-உ) பட்டை, கட்டை.

சுவை—துவர்ப்பு, சிறுகைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு-கார்ப்பு;

குணம் — பீனஸம், புராண ஜ்வரம், நீரேற்றம், சரீர வெப்பம், இருமல், பல்வலி, இரைப்பு, வலி இவை நீங்கும். ஆமதோஷம், மலச்சிக்கல், பிரமேகம், பூததோஷம், இவைகளை நிவர்த்திக்கும்.

(த்ரி-செ) கபவாத ஹரம்.

## 199. நெல்லிக் காய்

(ப-உ) இலை, பட்டை, பூ, வேர், காய், விதை.

சுவை—துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

குணம் — கபநோய், பித்தாதிக்யம், வாய்நீர்ச் சுரப்பு, வாந்தி, மலமந்தம், தலைச்சுற்றல், பிரமேகம் இவை போகும். தாகம், பித்தம், வீக்கம் இவைகளும் நீங்கும். ரஸாயன குணமுள்ளது.

(த்ரி-செ) புளிப்பினால் வாயுவையும், இனிப்பினாலும், சீதத்தாலும் பித்தத்தையும், ரூக்ஷத்தினாலும், துவர்ப்பினாலும், கபத்தையும் கண்டிக்கிறது.

## 200. நாய்க் கடுகு

(ப-உ) இலை, விதை, வேர், சமூலம்.

சுவை — கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — வாதப் பொருமல், தேகக் கடுப்பு, குத்தல், கர்ண நாத ரோகம், சிலேஷ்ம பீனஸ நோய், வாத ரத்தம், வாதக்கடுப்பு, குன்மம் இவை தீரும்.

( த்ரி-செ ) வாதத்தையும் கபத்தையும் குறைக்கும்.

## 201. நேர் வாளம்

( ப-உ ) விதை.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — மலாசயத்தைப் பற்றிய பழைய மலமும், வாத நோயும், தேகக் குடைச்சல், பித்த நோய், மேகநீர், முதலியவைகளைத் தீர்க்க வல்லது.

( த்ரி-செ ) வாதத்தையும், கபத்தையும் போக்கும்.

## 202. பெருங்காயம்

( ப-உ ) பிசின்.

சுவை — கைப்பு ; கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — தந்த ரோகம், சர்ப்பவிஷம், தேள் விஷம், கிருமி, அஜீரணம், வாதாதிக்கம், இருதய வாயு, குன்மம், உதரம், சூலை, இரத்தக் கிருமி, கபநோய், வயிற்றுப் பொருமல் இவைகளை நீக்கும். கண்களுக்கும் ஹிதமானது.

( த்ரி-செ ) வாதத்தையும், கபத்தையும் குறைக்கும்.

## 203. பெருஞ்சீரகம்

( ப-உ ) பூ, விதை, வேர்.

சுவை — கார்ப்பு, இனிப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — யோனி ரோகம், வயிற்றுவலி, அஜீரணம், வயிற்றுப்பிசம், நுரைத்த கப இருமல், சுவாசம், ஹீனத்வனி, பீனஸம், க்ருமிகள் முதலியவை தீரும்.

(த்ரி-செ) வாதத்தையும், கபத்தையும் குறைக்கும்.

## 204. பேய்க்கும்மட்டிக்காய்

(ப-உ) காய், பழம், வேர், வித்து.

சுவை — கைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு, கார்ப்பு;

குணம் — கீல் பிடிப்பால் நடையின்றிக் கிடப்பவர், சோர்தல், கருப்பையிலுள்ள ஆமம், இரத்தகுன்மக் கட்டி, அகாலருது, இவைகள் தீரும். காமாலை, யானைக் கால், இவைகளையும் நீக்கும்.

(த்ரி-செ) பித்தத்தையும், கபத்தையும் குறைக்கும்.

## 205. மஞ்சள்

(ப-உ) கிழங்கு.

சுவை — கைப்பு, கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — உடலுக்கு மேனி தரும், புருடவசியமும், பசியும் உண்டாகும். வாந்தி, தலைவலி, நீரேற்றம், பிரமேகம், வீக்கம், வண்டுகடி, பெரு விரணம், அரிப்பு, குஷ்டம் இவைகளைப் போக்கும்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் குறைக்கும்.

## 206. மரமஞ்சள்

(ப-உ) பட்டை.

சுவை — கைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — மூக்குகணம், மூலநோய், அரோசகம், கணசுரம், உட்சுரம், விரணம், பிரமேகம், காது, வாய், கண் இவைகளிலுள்ள நோய்கள், அரிப்பு, விஷம் இவற்றை நீக்கும்.

## 207. மல்லி

(ப-உ) இலை, விதை.

சுவை — இனிப்பு, துவர்ப்பு; வீரியம் — சீதம்; பிரிவு— இனிப்பு;

குணம் — உட்சூடு, குளிர் ஜ்வரம், பித்த ரோகம், அஜீரணம், வாந்தி, விக்கல், நாவரட்சி, ஏப்பம், விரணம், காசம், முதலிய நோய்கள் தீரும்.

(த்ரி-செ) பித்தத்தையும் கபத்தையும் போக்கும்.

## 208. மாம்பூ

(ப-உ) இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து, மரப் பட்டை, வேர்ப்பட்டை, பிசின்.

சுவை — துவர்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — அதிசார பேதி, நாட்பட்ட சீதபேதி, கோசு உபத்திரவம் முதலியன தீரும்.

## 209. மிளகு

(ப-உ) விதை, கொடி.

சுவை — கைப்பு, கார்ப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு— கார்ப்பு;

குணம் — வாத ரோகங்களையும், சீழ் மூலமும், குளிர் ஜ்வரம், பாண்டு, பிரமேகம், இருமல், தொண்டை நோய், அஜீர்ணம், காமாலை, இருதய நோய், கிருமி, அரோசகம் இவைகளை நீக்கும்.

(த்ரி-செ) வாதத்தையும், கபத்தையும் குறைத்து பித்தத்தை அதிகப்படுத்தும்.

## 210. முத்தக்காசு அல்லது கோரைக்கிழங்கு

(ப-உ) கிழங்கு.

சுவை — கைப்பு, உவர்ப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு— கார்ப்பு ;

குணம் — இதனால் குளிர் ஜ்வரம், இரத்த பித்தம், பேதி, மூர்ச்சை, வாந்தி, அரோசகம், கிருமி, இவைகள் தீரும். பாசனம், தீபனம், முதலிய குணங்களும் உண்டு.

( த்ரி-செ ) கபத்தையும், பித்தத்தையும் குறைக்கும்.

## 211. யானைத்திப்பிலி

( ப-உ ) காய், அரிசி.

சுவை — கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு—கார்ப்பு;

குணம் — கபம், கரப்பான், குறற்கம்மல், நாசி நீர்ப்பாய்ச்சல், சுவாசம் இவை நீங்கும். தீபனம் உண்டாகும். ஸ்தன்யம், தேக காந்தி இவைகளை வ்ருத்தி செய்யும்.

( த்ரி-செ ) கபத்தையும், வாதத்தையும் போக்கும்.

## 212. லவங்கப்பட்டை,

( ப-உ ) பட்டை.

சுவை — காரம், இனிப்பு ; வீரியம் — சீதம் ; ( உஷ்ணமென்றும் கூறுவர். ) பிரிவு— இனிப்பு ;

குணம் — தாது நஷ்டம், வாய் நோய்கள், சர்ப்ப விஷம், பேதி, இரைப்பு, சகல விஷம், வயிற்றுக் கடுப்பு, தலைநோய், தொண்டைப் புண் இவைகளை நீக்கி குளிர்ச்சி உண்டுபண்ணும்.

( த்ரி-செ ) கபத்தையும், வாதத்தையும் நீக்கும்.

## 213. லவங்கப்பத்திரி

( ப-உ ) இலை.

சுவை — கார்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — பேசுரப், சீதசுரம், வெட்டை, சுவாசம், தாகம், வாந்தி, வாய்ப்புண், மேகக்கட்டி, அருசி, வயிற்றுவலி, பொருமல் இவைகளைப் போக்கும்.

( த்ரி-செ ) கபத்தையும், வாதத்தையும் போக்கும்.

## 214. வசம்பு

( ப-உ ) வேர்.

சுவை — கார்ப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — சர்ப்ப, கீட , தாவர, முதலிய விஷங்கள், அர்ப்ப விரணம், குன்மம், இரத்த பித்தம், வாய் நாற்றம், சூலை, சன்னி பாதம், பிலீக நோய், காசம், வயிற்றுக் கிருமி, இவைகளை நீக்கும். தொண்டை நோய், மூளை நோய், வீக்கம், வாந்தி அதிஸாரம் இவைகளையும் போக்கும்.

( த்ரி-செ ) கபத்தையும், வாதத்தையும் கண்டிக்கும்.

## 215. வட்டத்திருப்பி

( ப-உ ) இலை, வேர்.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு;

குணம் — விஷம், வாத நோய், எலும்புருக்கி, பிரமியம், பித்த சுரம், அதிசாரம், சிரங்கு இவைகள் நீங்கும். மாமிச தாதுவையும், முறிந்த எலும்பையும் ஒட்டவைக்கும். ஜ்வரம், தாகம், அதிஸாரம், சூலை இவற்றைப் போக்கும்.

( த்ரி-செ ) வாதத்தையும், பித்தத்தையும் குறைக்கும்.

## 216. வாயுவிடங்கம்

( ப-உ ) இலை, விதை, வேர், பட்டை.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு;

குணம் — பாண்டு, குஷ்டம், குன்மம், அதிஸ்தூலநோய், வாயு, சர்ப்ப, கீட, தாவர விஷங்கள், கிருமி நோய், பகந்தரம், ( பவுத்திரம் ) அக்னி மாந்த்யம், அருசி, மயக்கம், முதலிய நோய்கள் தீரும்.

( த்ரி-செ ) வாதத்தையும், கபத்தையும் நீக்கும்.

## 217. வாலுளுவை அரிசி

( ப-உ ) இலை, விதை, நெய்.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — வயிற்றுக் கடுப்பு, கடுப்புடன் கூடிய இரத்த பேதி, பித்தம், இருமல், மலக்கட்டு, சூதிகாவாதம், கீல் வாதத்தில் உண்டாகும் நோக்காடு, மகோதரம், மூளைக்கோளாறு முதலிய வ்யாதிகளைப் போக்கும்.

( த்ரி-செ ) கபத்தையும், வாயுவையும் போக்கும்.

## 218. வால் மிளகு

( ப-உ ) உலர்ந்த முதிராத காய்.

சுவை — கார்ப்பு, விறுவிறுப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — இதனால் த்ரிதோஷம், குன்மம், தாகம், வெட்டை முதலியவை நீங்கிப்பசிஉண்டாகும். தோல் வியாதி, அரிப்பு, வீக்கம் விரணம் இவைகளை நீக்கும்.

( த்ரி-செ ) கபத்தையும், வாதத்தையும் குறைக்கும்.

## 219. வெண் கடுகு

( ப-உ ) விதை.

சுவை — காரம் ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — குழந்தைகளுக்கு உண்டாகும் தோஷங்கள், பூத பைசாச தோஷம், கடிவிஷங்களின் குற்றம், முடக்கு வாத ரோகங்கள், வாத ரத்தம், தோல் வியாதிகள், விரணம் இவைகள் நீங்கும்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைக்கும்.

## 220. வெட்பாலை அரிசி

(ப-உ) இலை, பட்டை, அரிசி.

சுவை — உவர்ப்பு, கஷாயம், கைப்பு; வீரியம் — வெப்பம், சீதம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — பித்தவாத தொந்தம், கடுவன், குடல் விருத்தி, வயிற்றுப் பொருமல், பேதி, சீதபேதி, குஷ்டம், ரத்த பித்தம், மூலம் முதலியவை தீரும்.

(த்ரி-செ) வாதத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

## 221. வெந்தயம்

(ப-உ) இலை, வித்து.

சுவை — கைப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — பிள்ளைகளின் கணச்சூடு, பேதி, சீதக் கழித்தல், பிரமேகம், தேக உஷ்ணம், இரத்த பித்தம், அஸ்தி ஜ்வரம், தாகம், இருமல், க்ஷயம், அரோசகம் இவைகளை நீக்கும், தாதுபுஷ்டியுண்டாகும். ஜடராக்னியை வ்ருத்தி செய்யும்.

(த்ரி-செ) வாதத்தைக் குறைக்கும்.

## 222. வெள்ளைப் பூண்டு

(ப-உ) கிழங்கு.

சுவை — கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — கட்டிகள், செவிடு, நாள்பட்ட இருமல், சுவாசம், மலக்கிருமி, சந்நி, வாதரோகம், கபத்தலைவலி, வாய் நோய், நீரேற்றம், சீத பேதி, மூலம் இவைகள் நீங்கும். மூளைக்கு நல்லது, பலம் தரக்கூடியது. ஒடிந்த எலும்பை ஒட்டவைக்கும்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும்போக்கும்.

## 8. புஷ்ப வகை.

### 223. அகத்திப் புஷ்பம்

குணம் — வெயிலினாலும், புகையிலை, சுருட்டு இவைகளினாலுமுண்டான பித்த தோஷங்களை நீக்கும். உஷ்ணத்தைத் தணிக்கும்.

## 9. பழ வகைகள்.

### 224. எலுமிச்சம் பழம்

(ப-உ) இலை, காய், பழம், பழரசம், எண்ணெய்.

சுவை — புளிப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — பித்த மயக்கம், வாந்தி, அரோசகம், தாகம், யானைக்கால், உன்மாதம், கண்ணோய், காதுவலி, இவைகளைப் போக்கும். நகச்சுற்றுக்கு நன்மை தரும். மலங்கட்டும். கிருத்ரும விஷங்கள், முகத்திற்கு வசீகரமின்மை இவைகளை நீக்கவல்லது. பொருமல், வயிற்றுவலி, அக்னிமந்தம், படை முதலியவற்றையும் குணம் செய்யும்.

(த்ரி-செ) மூன்று தோஷங்களையும் சமனப்படுத்தும்.

### 225. சிறு வழுதுணைப்பழம்

(ப-உ) இலை, பிஞ்சு, காய், பழம், வித்து, வேர்.

சுவை—கைப்பு, துவர்ப்பு; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — இதை வெதுப்பி வயிற்றுவலிக்கும், மலப்பூச்சி வெளிப்படவும் கொடுக்கலாம். சீரண சக்தியை உண்டாக்கும். வலப்பாட்டிரல் வ்யாதிக்கு இது முக்கிய மருந்து. பல் வலியை நீக்கும்.

(த்ரி-செ) பித்தத்தையும், வாதத்தையும் குறைக்கும்.

## 226. சங்கம் பழம்

(ப-உ) இலை, வேர், பால், பழம்.

சுவை — கைப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — சோகை, கரப்பான், வெப்பம், கிரந்தி, குன்மம், கீல்வாதம், வாத வீக்கம் இவைகள் உண்டாகும்.

(த்ரி-செ) வாதஹரம்.

## 227. நாரத்தம் பழம்

(ப-உ) பூ, பழச்சதை, தோல்.

சுவை—இனிப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு—இனிப்பு ;

குணம் — தாகம், வாந்தி, சுரம், அரோசகம், இளைப்பு, அஜீரணம், க்ருமி, சூலை, ச்ரமம் முதலியவைகளைத் தீர்க்கும். பலம் கொடுக்கும்.

(த்ரி-செ) வாதத்தைக் குறைக்கும்.

## 228. பேயம்பழம்

(ப-உ) சமூலம், இலை, பூ, பிஞ்சு, காய், பழம், பட்டை, கட்டை, தண்டு, நீர்.

சுவை — துவர்ப்பு, இனிப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — பயித்தியமும், உட்சூடும் நீங்கும். வாதாதிக்கமும், மிகு குளிர்ச்சியும், மலக்கழிவும் உண்டாகும். தீபன சக்தியைத் தரும். சுக்லத்தை விருத்தி செய்யும், ச்ரமத்தை நீக்கும்.

(த்ரி-செ) பித்தத்தைக் குறைக்கும். வாதத்தையும், கபத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

## 229. வில்வப் பழம்

(ப-உ) இலை, பூ, பழம், பிஞ்சு, காய், வேர், பிசின்.

சுவை—துவர்ப்பு, இனிப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — கண்ணெரிச்சல், கபால வலி, தேக அழல், மூளையைப்பற்றிய ரோகம், இவைகளை நீக்குவதுடன் உடலுக்கு அழகும் வன்மையுமுண்டாகும். க்ஷயம், இரத்தபேதி, நாட்பட்ட பேதி, அதிசாரம், கிரகணி, கண்ணிருளல், நாள்பட்ட மலபந்தம் இவைகள் தீரும். சில சமயம் அது உடலில் செரிப்பது கஷ்டம்.

(த்ரி-செ) மூன்று தோஷங்களையும் போக்கும்.

## 10. காய் வகைகள்.

### 230. எள்ளுக்காய்

சுவை—கார்ப்பு, கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — சாம்பலாக்கி விரணங்களுக்குத் தூவலாம். பலம் தரக்கூடியது, தலைமயிரை வளர்க்கும்.

(த்ரி-செ) த்ரிதோஷ சமனி.

### 231. தேங்காய், இளநீர்

சுவை—இனிப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

குணம் — பித்தம், பீனஸம், நாவறட்சி, ச்ரமம், தாகம், சோகை இவைகளை நீக்கும். மூத்திரத்தை அதிகரிக்கச் செய்யும்.

(த்ரி-செ) பித்தத்தைக் குறைக்கும்.

### 232. கத்தரிக்காய்

சுவை—கைப்பு; வீரியம்—உஷ்ணம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — ச்வாஸம், காஸம், ஜ்வரம், வாந்தி, மார்புவலி, அரோசகம், இவைகள் தீரும்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் போக்கும்.

## 233. கும்மட்டிக்காய்

சுவை—கைப்பு; வீரியம்—வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

**குணம்** — கிருமி, கபவ்ரணம், எல்லா உதர ரோகங்களும், குன்மம், குஷ்டம், ஜ்வரம் இவைகள் தீரும். கர்ப்பாசயக் கோளாருகளும், இரத்த குன்மக்கட்டி, அகாலருது முதலியவைகளை தடையின்றி நீக்கும்.

(த்ரி-செ) கபத்தைக் குறைக்கும்.

## 234. சுரைக்காய்

சுவை—கைப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

**குணம்** — அருசி, பீலிகரோகம், ஆமம், மார்புநோய் இவைகளும், உட்சூடும் நீங்கும்.

(த்ரி-செ) வாதத்தையும், பித்தத்தையும் குறைக்கும்.

## 235. நெருஞ்சில்காய்

சுவை—துவர்ப்பு; வீரியம்—சீதம்; பிரிவு—இனிப்பு;

**குணம்** — பிரமேகம், நீர்க்கடுப்பு, கல்லடைப்பு, வெள்ளை, விரணம், வெப்பம் இவை நீங்கும். வலி, இருதய நோய், பிரமேகம், இவைகள், நீங்கித் தாது புஷ்டி உண்டாகும்.

(த்ரி-செ) த்ரி தோஷசமனி; வாயுவைக் கண்டிக்கும்.

## 236. பயறு

(ப-உ) விதை.

சுவை—துவர்ப்பு; வீரியம்—சீதளம்; பிரிவு—இனிப்பு;

**குணம்** — ரத்தம், மூத்திரம் இவைகளைப் பற்றிய வியாதிகளை நீக்கும். கண்களுக்கு நல்லது, ஜடாராக்னியை விருத்தி செய்யும்.

(த்ரி-செ) கபத்தையும், பித்தத்தையும் குறைத்து வாயுவை அதிகப்படுத்தும்.

## 237. பனங்காய்

(ப-உ) குருத்து, ஓலை, பூ, நுங்கு, பழம், மட்டைகள், கிழங்கு, வேர்.

சுவை-இனிப்பு; வீரியம்--சீதம்; பிரிவு--இனிப்பு;

குணம் — பித்தம், தாகம், ச்ரமம், மலபந்தம், இவைகளை நீக்கும், மதத்தை உண்டு பண்ணும். தாகம், சோஷம் இவற்றைக் குறைக்கும்.

(த்ரி-செ) கபத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

## 238. நெல் பொறி

நெல்லை தண்ணீரிலிட்டு ஊறவைத்து அதைப் பொரித்து உமி நீக்கி எடுப்பது "பொறி" யாகும்.

குணம் — வயிற்று நோய், பிரமேகம், நீர்ச்சுருக்கு, சுரம் முதலிய நோய்களில் பலன் தரும். தாகம், வாந்தி, ஜீரணக் குறைவு, மூர்ச்சை, அரோசகம் இவற்றைப் போக்கும்.

(த்ரி-செ) பித்தத்தைக் குறைக்கும்.

## 239. புளிவஞ்சி

(ப-உ) புளி.

சுவை — அதிகப் புளிப்பு — துவர்ப்பு; வீரியம் — உஷ்ணம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — பசியை விருத்தி செய்யும். இருதயவலி, குன்மம், பீலிகை, விக்கல், வாயுப் பொருமல், சுவாசம், காசம், அஜீரணம், வாந்தி, மூலம், அரோசகம் இவற்றை நீக்கும். ஆட்டு மாமிசத்தையும் இரும்பு ஊசியையும் திரவமாக்கும்.

(த்ரி-செ) கபத்தையும் வாதத்தையும் குறைத்துப் பித்தத்தை விருத்திசெய்யும்.

# 11. எண்ணெய் வகைகள்

## 240. ஆமணக்கெண்ணெய்

சுவை — இனிப்பு ; வீரியம் — வெப்பம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — மலத்தைக் கழிக்கும், கபம், கொழுப்பு, வாயு இவற்றைக் குறைக்கும். இது ஹ்ருதயம், வஸ்தி, பக்கங்கள், முழங்கால், எலும்பு இவைகளைப் பற்றிய சூலைகளை நீக்கும். ஆமதோஷம், வாதரத்தம், ப்லீகம், உதாவர்த்தம், வீக்கம், இவைகளையும், க்ருமி, குஷ்டம் இவைகளையும் நீக்குவதிலும் நிகரற்றது. உத்தமமான ரஸாயனம். அதிகப் பசியை உண்டாக்கும். உடலைப் பொன்னிறமாக்கும். மருந்து வேகம், வாயுவினால் மூலத்திலுண்டாகும் அழலை, சீதபேதி, பிரமேகரோகம், முலைக்காம்பு விரணம், முலை வெடிப்பு, இவைகளுக்கும் நல்லது. கண் சிவப்பு, கண்ணில் தூசி விழுதல் முதலிய கண் ரோகங்களில் கண்களில் போடலாம்.

(த்ரி-செ) கபம், வாதம் இவ்விரண்டையும் குறைத்துப் பித்தத்தை அதிகரிக்கச் செய்யும்.

## 241. எள்ளெண்ணெய்

சுவை — துவர்ப்பு ; வீரியம்—வெப்பம் ; பிரிவு— இனிப்பு ;

குணம் — எலும்பு முறிவு, நெருப்புச் சுட்டபுண், இவைகளுக்கு உபயோகப்படுத்தலாம். புத்திக்குத் தெளிவு, விழிகளுக்குக் குளிர்ச்சி, உடம்பு பூரித்தல், தேக புஷ்டி, பலம், தேஜஸ் இவை உண்டாம். சொறி, சிரங்கு, விரணம் இவற்றைப் போக்கும். இருமல் குணப்படும்.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் போக்கி பித்தத்தை விருத்தி செய்யும் இயல்புடையது.

### 242. இலுப்பை எண்ணெய்

சுவை — இனிப்பு; வீரியம் — சீதம்; பிரிவு — இனிப்பு;

குணம் — இடுப்பு வாதம், தூர் பலம் இவைகளை நீக்கும். சேற்றுப் புண்களுக்கும் உபயோகிக்கலாம்.

(த்ரி-செ) கப பித்த ஹரம்.

## 12. பால் வகைகள்

### 243. பசுவின் பால்

சுவை — இனிப்பு; வீரியம் — சீதம்; பிரிவு — இனிப்பு;

குணம் — மிகுந்த ருசியுடையது, பசையுள்ளது, காந்தி, புத்தி, மேதை, சரீர அங்கங்களுக்கு புஷ்டி, வீரிய விருத்தி முதலியவைகள் உண்டாகும்.

(த்ரி-செ) வாதம், பித்தம், இவ்விரண்டு தோஷங்களை யும் குறைக்கும்.

### 244. முலைப் பால்

சுவை — இனிப்பு, துவர்ப்பு; வீரியம்—சீதம்; பிரிவு — இனிப்பு;

குணம் — பசையுள்ளது, கண்களுக்கு ஹிதமானது, பலத்தைக் கொடுக்கும். ரத்த பித்தத்தை நாசம் செய்யும். கண் வலியை சாந்தப்படுத்தும். ஜடராக்கினியை விருத்தி செய்யக்கூடியது.

(த்ரி-செ) வாதத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

### 245. வெள்ளாட்டுப் பால்

சுவை — துவர்ப்பு, இனிப்பு; வீரியம் — சீதம்; பிரிவு — இனிப்பு;

குணம் — ரத்த பித்தம், அதிசாரம், க்ஷயம், காஸம், ஜ்வரம் முதலிய பற்பல ரோகங்களையும் தீர்க்க வல்லது.

(த்ரி-செ) த்ரி தோஷ சமனி.

## 246. தயிர்

சுவை — புளிப்பு, இனிப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு— புளிப்பு ;

குணம் — மேதஸ், சுக்ரம், பலம், அக்னி, வீக்கம் இவைகளை வ்ருத்தி செய்யும். அருசியைப் போக்கும்.

(த்ரி-செ) கபத்தையும் பித்தத்தையும் விருத்தி செய்து வாதத்தைக் குறைக்கும்.

## 247. மோர்

சுவை — துவர்ப்பு, புளிப்பு ; வீரியம்—உஷ்ணம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — தீபன சக்தியைக் கொடுக்கும், வீக்கம், உதரம், கிரகணீ, அருசி, குன்மம், நெய் அதிகமாக உபயோகித்ததனுலுண்டான கெடுதி, கைவிஷம், பாண்டு, வாந்தி, ச்ரமம், இவற்றை நீக்குவதில் சிறந்தது. மேலும் தேவர்களுக்கு எவ்வாறு அம்ருதம் ஹிதமோ அவ்வாறு மனிதர்களுக்கு பூலோகத்தில் மோர் ஹிதத்தை அளிக்கிறது.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் போக்கடிக்கும்.

## 248. வெண்ணெய்

சுவை — இனிப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — தீபனம், ருசி இவற்றைக் கொடுக்கும். கண்களுக்கு நல்லது. காஸம், க்ருமி, சூலை, நாவறட்சி, தாபம், ச்ரமம், அருசி, க்ஷயம், பீலிகை, கிரகணி, மூலம் இவைகளைப் போக்கும்.

(த்ரி-செ) வாதத்தையும் பித்தத்தையும் குறைத்துக் கபத்தை அதிகரிக்கச் செய்யும்.

## 249. நெய்

சுவை — இனிப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு—இனிப்பு ;

குணம் — புத்தி, காந்தி, ஞாபகசக்தி, இவைகளைக் கொடுக்கும். பலம், புஷ்டி, ஹிருதய வலிவு, ஜடராக்னி, தேககட்டு, இவைகளை விருத்தி செய்யும். க்ஷீணித்தவர், அடிபட்டவர், சஸ்திரத்தினாலும், நெருப்பினாலும் தாக்குண்டவர் இவர்களுக்கு நன்மை செய்யும்.

(த்ரி-செ) வாதம், பித்தம் இவற்றைக் குறைக்கும்.

**250. காடி.**

சுவை — புளிப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு—புளிப்பு ;

குணம்—அருசியைப் போக்கும், வாதகுன்மத்தை போக்கும்.

(த்ரி-செ) பித்தத்தைச் சிறிதளவு வ்ருத்தி செய்யும்.

## 13. ஜீவ வகைகள்

**251. கருங்கோழி மாமிசம்**

சுவை — இனிப்பு, உப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — தொண்டைக் கம்மலை நீக்கி ஜடராக்னியை அதிகப்படுத்தும். தாது புஷ்டியைத் தரும். பலத்தைக் கொடுக்கும்.

(த்ரி-செ) வாத ஹரம்.

**252. கஸ்தூரி**

சுவை — கைப்பு, உவர்ப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு— உவர்ப்பு ;

குணம் — விஷத்தையும், நாவறட்சியையும் போக்கி மனதிற்கு ஹிதமான மணத்தைத்தரும். குஷ்டம், துர்கந்தம், இவற்றை நீக்கும். கர்ப்பாசயத்தைச்சுத்தி செய்து, ஹிருதயத்தை வலுப்படுத்தும்.

(த்ரி-செ) வாதத்தையும், கபத்தையும் போக்கும்.

### 253. கோரோசனை

சுவை — உவர்ப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — உவர்ப்பு ;

குணம் — விஷம், கண்வலி, பூதக்ரகதோஷம், அருசி, கிருமி, குஷ்டம், இவற்றைத் தீர்க்கும். ஸௌபாக்யத்தையும், மனதிற்கு சந்தோஷத்தையும், நல்ல பசியையும் உண்டாக்கக்கூடியது.

( த்ரி-செ ) கப ஹரம்.

## 14 உலோக வகைகள்.

### 254. இரும்புத் தூள்

சுவை — கைப்பு, துவர்ப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு— கார்ப்பு ;

குணம் — பிரமேகம், பாண்டு, சூலம், இவைகளை நீக்கும். தேகத்திற்கு ரஸாயனமான வஸ்துக்களில் இரும்பைத்தவிர வேறு உயர்ந்தது கிடையாது. ஆயுளை விருத்தி செய்யும், பலம், வீரியம், தாதுபுஷ்டி இவைகளை உண்டாக்கும்.

( த்ரி-செ ) த்ரிதோஷ ஹரம்.

### 255. கல் மதம்

சுவை —கைப்பு ; வீரியம்—உஷ்ணம் ; பிரிவு —கார்ப்பு ;

குணம் — மேகம், பைத்தியம், சிறுநீரில் உண்டாகும் கல், வீக்கம், குஷ்டம், அபஸ்மாரம் ( காக்கைவலி ) க்ஷயம் உதரம், அர்சஸ், இவைகளை நீக்கும். மூத்திரக் கடுப்பை சமனம் செய்யும். ரஸாயன குணமுள்ளது

### 256. காந்தம்

இரும்புத் தூளைப்பார்க்க.

### 257. காரீயம்

சுவை — கைப்பு, உப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு— உவர்ப்பு ;

குணம் — பாண்டு, தோலிலுண்டாகும் கிருமி இவைகளை நீக்கும். சரியாகப் பக்குவம் செய்யப்படாவிட்டால் குன்மம், குஷ்டம், பாண்டு, பிரமேகம் வாத வீக்கம் பகந்தரம், வித்ருதி, முதலிய வியாதிகளை உண்டாக்கும்.

(த்ரி-செ) கபத்தையும், பித்தத்தையும் குறைக்கும்.

## 258. கிட்டான் அல்லது மண்டூரம்

சுவை — இனிப்பு, கார்ப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு— கார்ப்பு ;

குணம் — ஆமவாதம் (Rheumatism) பாண்டு, மேகம், குஷ்டம், வாதரத்தம், க்ரிமி, குன்மம், வீக்கம் இவற்றைப் போக்கும்.

(த்ரி-செ) வாத ஹரம்.

## 259. சங்கு

சுவை — இனிப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு—கார்ப்பு;

குணம் — பரிணாமசூலை, ரத்தபித்தம், இவற்றைப் போக்கும். குன்மம், ச்வாஸம், இவற்றைப்போக்கிக் கண்களைப் பிரகாசப் படுத்தும்.

## 260. தங்கம்

சுவை — துவர்ப்பு, கைப்பு, இனிப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — இனிப்பு ;

குணம் — பசையுள்ளது, ருசியையும், ஆயுஸ், சிறந்த புத்தி, வீர்யம், பலம், ஞாபகசக்தி, ஸ்வரம், காந்தி இவைகளையும் கொடுக்கும். பலவித ரோகங்களையும் நீக்கி, சுகத்தைக் கொடுக்கக்கூடியது. தாது புஷ்டி தரும், தேகத்தைப் பொன் மேனியாக்கும். க்ஷய ரோகத்தில் மிகவும் நற்பயனைத் தரும்.

(த்ரி-செ) த்ரி தோஷ ஹரம்.

## 261. தாமிரம்

சுவை — இனிப்பு, கைப்பு, துவர்ப்பு; வீரியம் — சீதம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — மலச் சிக்கல், சூலை, பாண்டு, மஹோதரம், குன்மம், குஷ்டம், ஆசனத்தைப்பற்றிய ரோகங்கள், வீக்கம், மயக்கம், தாகம் இவைகளைப் போக்குவதில் சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட பஸ்மமோ சிந்தூரமோ சிகாற்றது. சுத்தமில்லாத தாமிரம், க்ஷயம், குஷ்டம், வாந்தி, விரேசனம், மூர்ச்சை இவைகளையுண்டு பண்ணி சுகத்தைக் கெடுத்து முடிவில் ஆயுளையும் போக்கும்.

(த்ரி-செ) கபத்தையும், பித்தத்தையும் குறைக்கும்.

## 262. தாளகம்

சுவை — கார்ப்பு; வீரியம் — வெப்பம்; பிரிவு—கார்ப்பு;

குணம் — பசையுள்ளது, குஷ்டத்தைப் போக்கடிக்கும். விஷம், அரிப்பு, பேய் பிசாசு, மயிர், வ்ரணம் இவைகளைப் போக்கும். மனதுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். பசியை உண்டுபண்ணும்.

(த்ரி-செ) வாதத்தையும், கபத்தையும் நாசம் செய்யும்.

## 263. துரிசு

சுவை—கார்ப்பு, துவர்ப்பு; வீரியம்—உஷ்ணம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — கண் ரோகங்களையும், வெள்ளைக் குஷ்டத்தையும் விஷ வேகத்தையும் தீர்க்கும். வாந்தியைக் கொடுக்கும்.

(த்ரி-செ) த்ரி தோஷ ஹரம்.

## 264. துத்த நாகம்

சுவை — கைப்பு, உப்பு; வீரியம் — உஷ்ணம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — பலத்தைக் கொடுக்கும். காரீய குணங்களைப் பெற்றுள்ளது.

(த்ரி-செ) கபத்தையும், வாதத்தையும் போக்கும்.

## 265. நெல்லிக்காய்க் கெந்தகம்

சுவை — கைப்பு, உவர்ப்பு, இனிப்பு; வீரியம் — உஷ்ணம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — ரஸாயன குணமுள்ளது. அரிப்பு, குஷ்டம், சொறி சிரங்கு, ஆம தோஷம், விஷம், கிருமி இவைகளை நீக்கி அக்னி விருத்தி, இந்திரிய பலம் இவற்றைக் கொடுக்கும். தோல் வியாதி, அனைத்தையும் தீர்க்க வல்லது. நன்றாக சுத்தி செய்யப்படாத கந்தகம் குஷ்டம், ஜ்வரம் இவைகளை உண்டாக்கி சுகம், ரூபம், பலம், சுக்ரம், ஓஜஸ் முதலியவைகளை கெடுக்கிறது.

(திரி-செ) கபத்தையும், வாதத்தையும் குறைத்து பித்தத்தை அதிகமாக்கும்.

## 266. பாதரஸம்

சுவை — எல்லாச் சுவைகளும்; வீரியம் — உஷ்ணம்; பிரிவு—இனிப்பு;

குணம் — கிருமி, குஷ்டம், மூர்ச்சை இவைகளை நீக்கும். எல்லா ரோகங்களையும் நாசம் செய்து, சகல சித்திகளையும் கொடுக்கிறது. கிழத்தனம் வராமல் தடுத்துத் தீர்க்காயுளைக் கொடுக்கின்றது. இதனாலேயே இதற்கு "பாரதம்" எனப் பெயர். சுத்தி செய்யப்படாத ரஸத்தை உபயோகித்தால் குஷ்டம் முதலிய ரோகங்களை உண்டாக்கி ப்ராண ஹானியையும் அளிக்கும்.

(த்ரி-செ) த்ரி தோஷ ஹரம்.

## 267. பால் துத்தம்

சுவை — கைப்பு, கார்ப்பு; வீரியம் — சீதம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — கண்களுக்கு நல்லது, தோல் வியாதியைத் தீர்க்கும். ருசியையும், பசியையும், புஷ்டியையும் தரும்.

(த்ரி-செ) த்ரி தோஷ ஹரம்.

## 268. மிருதார் சிங்கி

இது கூர்ஜா தேசத்தில் மலையில் அகப்படும் காரீய ஸத்துவமுள்ள ஒரு சரக்கு. இது மஞ்சள் நிறமாக இருக்கும்.

குணம் — உடம்பெங்கும் பரவுகிற பித்த விரணம், கரப்பான், சிரங்கு, புண் இவைகள் விலகும்.

(த்ரி-செ) வாதத்தையும், கபத்தையும் குறைக்கும்.

## 269. லிங்கம்

சுவை — கார்ப்பு, இனிப்பு; வீரியம்—உஷ்ணம்; பிரிவு—கார்ப்பு.

குணம் — விஷம், குஷ்டம், தோல் வியாதி, ஸன்னிபாத ஜ்வரம், ஸம்ஸர்க ஜ்வரம், முதலியவைகளைத் தாமதமின்றி நீக்கும். ரஸாயன குணமுடையது.

(த்ரி-செ) வாத கபஹரம்.

## 270. வெள்ளி

சுவை — உவர்ப்பு, புளிப்பு; வீரியம் — சீதம்; பிரிவு — இனிப்பு;

குணம் — ரோகமாகிற சமுத்திரத்தைத் தாண்டச் செய்வதால் இதற்குத் "தாரம்" எனப் பெயர். நரை, மூப்பு, தாகம், ஜ்வரம், வாதப் பிடிப்பு, ஒழுக்குப் பிரமேகம், ஈளை, கண்நோய், விரணம் முதலியவைகள் நீங்கும். பலம், ருசி, தாது புஷ்டி தீர்க்க ஆயுள் முதலியவைகள் உண்டாகும்.

(த்ரி-செ) வாதத்தையும், பித்தத்தையும் குறைக்கும்.

## 271. அப்பிரகம்

சுவை — துவர்ப்பு, இனிப்பு ; வீரியம் — சீதம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — புத்தியைக் கொடுக்கும். கிழத்தன்மையை நீக்கி ஆயுளை அதிகப்படுத்தும். பலம் கொடுக்கும். அக்னியை விருத்தி செய்யும். அந்தந்த ரோகங்களுக்கு தக்க அனுபானத்தில் கொடுக்க பற்பல ரோகங்களை நீக்கும். அண்டம், மகோதரம், பிரமேகம், நீரிழிவு, சுரம், மேகம், கண்ணோய் முதலிய பலவகைப் பிணிகளும் தீரும். க்ஷயத்தைத் தீர்க்கும். அக்னியில் போட்டால் அசையாதிருக்கும் அப்ரகமே மருந்துக்கு உதவும். மற்றவை கெடுதி செய்யும்.

(த்ரி-செ) வாதத்தையும், பித்தத்தையும் குறைக்கும்.

## 272. நிமிளை (பொன் நிமிளை அல்லது ஸ்வர்ணமாக்ஷிகம்)

சுவை — கைப்பு, கார்ப்பு ; இனிப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — மூத்திரப்பை ரோகங்கள், சோபம், உதரம், க்ஷயம், விஷம், பசியின்மை, பலமின்மை, கண் ரோகங்கள், குஷ்டம், விரணம் முதலியவைகளைத் தீர்க்கும். ப்ரமம், இருதயத் துடிப்பு, மூர்ச்சை, ச்வாஸம் இவைகளைப் போக்குவதில் சிறந்தது.

(த்ரி-செ) த்ரி தோஷ சமனம்.

## 273. மனோசிலை

சுவை — கார்ப்பு ; கைப்பு ; வீரியம்—உஷ்ணம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — மிகுந்த ரஸாயன குணமுள்ளது, பூதம், அக்னிமாந்த்யம், அரிப்பு, க்ஷயம், அச்மரி, மூத்ரகிருச்சரம், இவைகளை நீக்கும். வச்யகாரி.

(த்ரி-செ) வாதத்தையும், கபத்தையும் போக்கும்.

274. **வெள்ளைப் பாஷாணம்**

குணம் — சுரம், தோஷம், ஜன்னி, மூக்கிலுண்டாகும் புண், வாயிலுள்ள புண், கிரந்தி, ஸர்ப்ப விஷம் இவை யாவும் போகும்.

## 15. உப்பு வகைகள்

275. **அட்டுப்பு**

சுவை — உப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு—கார்ப்பு ;

குணம் — சூலை, வாந்தி, அருசி இவை தீரும்.

( த்ரி-செ ) பித்தம் நீங்கும்.

276. **இந்துப்பு**

சுவை — உப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு — கார்ப்பு ;

குணம் — 8 வித குன்மம், கபம், மலச்சிக்கல், கரப்பான், காது, கண், காசம், தாகம், இரத்த மூலம், நரம்புச் சிலந்தி, விஷம், தேக வலி இவைகளெல்லாம் நீங்கும்.

( த்ரி-செ ) த்ரிதோஷ ஹரம்.

277. **கடலுப்பு**

சுவை — உப்பு ; வீரியம் — உஷ்ணம் ; பிரிவு — கார்ப்பு;

குணம் — உஷ்ண வாயுவும், 8 வித குன்மமும் தீரும். தொண்டை நோயையும் தீர்க்கும்.

278. **கல்லுப்பு**

குணம் — குத்தல், அருசி, வாந்தி, 8 வித குன்மங்கள், நாவறட்சி, மலக்கட்டு இவைகளும் தீரும்.

279. **கரியுப்பு**

குணம் — அசீரணம், வயிற்றுப் பொருமல், வாயு இவை

களை நீக்கி பசியை உண்டாக்கும். நீரடைப்புத் தீரும்.

( த்ரி-செ ) வாத கப ஹரம்.

## 16. க்ஷார வகைகள்

### 280. சவுக்காரம்

குணம் — சீதளத்தைப் போக்கும், வயிற்றுப் பொருமல், குன்மம் இவை தீரும்.

( திரி-செ ) வாத கப ஹரம்.

### 281. சத்தி க்ஷாரம்

குணம் — அக்கினி மாந்தம், மலச்சிக்கல், வயிற்றுக்கட்டி, வயிற்றிலிருந்து மேல் நோக்கிவரும் இருமல், வாத வலி, குன்மம், மகோதரம், கிராணி இவைகள் தீரும்.

( த்ரி-செ ) வாத கப ஹரம்.

### 282. சீனக்காரம்

குணம் — பல்லரணை, யானைக்கால், கண்ணோய், துர்மாம்ஸம், உள்வேக்காடு, குன்மம், உட்சூடு, இவைகள் தீரும்.

( த்ரி-செ ) வாத ஹரம்.

### 283. சோகி ( சோழி ) அல்லது பலகறை

குணம் — அக்னி மாந்தம், கிராணி, விஷ சுரம், கண்ணோய், பரிணாம சூலை, இவைகளைப் போக்கும்.

( த்ரி-செ ) கபத்தையும், வாதத்தையும் போக்கும்.

### 284. நவச்சாரம்

குணம் — குன்மம், குடலினுள்ள வலி, மகோதரம், கல்லடைப்பு, வாத நோய் இவைகள் தீரும்.

( த்ரி-செ ) த்ரி தோஷ ஹரம்.

### 285. யவச்சாரம்

குணம் — விரணங்கள், சில் விஷங்கள், வீக்கம், கிராணி, அட்டவித குன்மம், சூலை, அதிஸ்தூல ரோகம், உஷ்ணத்தினால் உண்டாகும் வயிற்றுவலி, நீரடைப்பு, பிலீகம் இவை தீரும்.

(த்ரி-செ) வாத கப ஹரம்.

### 286. வளையலுப்பு

குணம் — குடல்வாதம், சுவாசம், குன்மவலி, சூலை, வெப்பம், பிலீகம் இவை நீங்கும்.

(த்ரி-செ) வாத ஹரம்.

### 287. வெங்காரம்

குணம் — சொறி, 8 வித குன்மம், தினவு, கிராணி, கிருமி, சர்ப்ப விஷம், சன்னி இவை போம்; மூத்திரத்திலுண்டாகும் கல், நீரடைப்பு இவைகள் தீரும்.

(த்ரி-செ) த்ரி தோஷ ஹரம்.

### 288. உவர் மண் உப்பு

சுவை — கைப்பு, உவர்ப்பு; வீரியம் — உஷ்ணம்; பிரிவு — உவர்ப்பு;

குணம் — தீக்ஷ்ணம், கபத்தை இளக்கும்.

## 17. அனுபானவகைகள்

### 289. கற்கண்டு

தாது புஷ்டி தரும், அடிபட்டதனாலேற்பட்ட க்ஷீணத்தைக் குறைக்கும், ரத்த பித்தத்தைப் போக்கும். வாதத்தைச் சமனம் செய்யும். பல்லறணை, காசம், வாந்தி, வெப்பம், நீர்ச்சுருக்கு இவைகளும் தீரும்.

## 290. சர்க்கரை

குணம் — வாத சுரம், வாத நோய்கள், வாந்தி, கிருமி, விக்கல் இவைகள் நீங்கும்.

## 291. தேன்

சுவை — துவர்ப்பு, இனிப்பு; வீரியம் — உஷ்ணம்; பிரிவு — கார்ப்பு;

குணம் — கண்களுக்கு ஹிதமானது. நாவறட்சி, விஷம், ச்வாஸம், ரத்த பித்தம், பிரமேகம், குஷ்டம், கிருமி, வாந்தி, அதிஸாரம் இவைகளைத் தீர்க்கவல்லது. புண்களைச் சுத்தமாக்கி, புதிய மாமிசத்தையும் வளரச் செய்து, அவைகளை ஆற்றுகிறது. அதிஸ்தூல ரோகத்தைப் போக்கும்.

(த்ரி-செ) வாதத்தை அதிகரிக்கும்.

தேனை ஒருபொழுதும் உஷ்ணப்படுத்தியோ, உஷ்ண வீரியமுள்ள சரக்குகளுடன் கூட்டியோ, உஷ்ண காலத்திலோ உபயோகப்படுத்தக்கூடாது. வாந்தியாகும் சரக்குகளுடனோ அல்லது வஸ்தி செய்யும் சந்தர்ப்பத்திலோ தேனைச் சுடவைத்து உபயோகிப்பதால் தீங்கு நேரிடாது.

## 292. வெல்லம்

குணம் — கிருமி, மஜ்ஜை, ரத்தம், மேதஸ், மாம்ஸம், கபம் இவைகளைத் தீர்க்கும். ஹ்ருதயத்திற்கு வன்மை தரும். பித்த குன்மம் நீங்கும். நெஞ்சில் கோழைக் கட்டை உண்டாக்கும்.

(த்ரி-செ) கபத்தை வ்ருத்தி செய்யும்.

## 293. பனை வெல்லம்

(குணமும், த்ரி-செய்கையும்) வாத பித்த தொந்தம், ச்லேஷ்மரோகம், சந்நிபாதம், அரோசகம், வாத குன்மம் இவைகள் தீரும்.

# அனுபந்தம் 2.

## சரக்கு சுத்தி முறைகள்

[ சரஸ்வதி மஹால் 70 நெ. சுவடியில் உள்ளபடி ]

### 1. தங்கம்

செம்மண்ணில் பொதித்துப் புடம் போடச் சுத்தமான ஸ்வர்ணமாகும்.

### 2. வெள்ளி

வெள்ளியைத் தகடாக்கிக் கொம்புப் பாகற்காய்ச் சாற்றிலும், அதன் வேர்ச் சாற்றிலும் ஏழு தரம் காய்ச்சிக் காய்ச்சித் தோய்க்கவும்.

### 3. தாம்ரம்

1. செம்பைத் தகடாக்கி அதைச்சிவக்கக் காய்ச்சித் துளசிச் சாற்றில் 7 தரமும், கற்றாழைச் சாற்றில் 7 தடவையும் புளி இலை ரசத்தில் 7 தடவையும் தோய்த்துப் பின்பு புளித்த மோரில், சிவக்கக் காய்ச்சி 7 தடவை தோய்த்துக் கடைசியில் பொன்னாங்காணிச் சாற்றில் 7 தடவையும், சிவக்கக் காய்ந்தபின் தோய்க்கச் சுத்தியாகும். பின்பு நன்றாகக் கழுவி உலர்த்தவும்.

2. அந்தரத்தாமரை இலை ரசத்தில் செம்பை உருக்கி 16 தடவை வார்க்கச் சுத்தியாகும்.

### 4. இரும்பு

அரப்பொடியை இரும்புப் பாத்திரத்தில் போட்டு நல்லெண்ணெய் வார்த்து 1 ஜாமம் வறுத்துக் காடியில் கழுவிக்கொண்டு வேலம்பட்டைக் கஷாயத்தில் 1 ஜாமம் வேகவிட்டுக் காடியில் கழுவிக்கொள்ளச் சுத்தியாகும்.

### 5. வெள்ளீயம்

1. ஒரு இருப்புக் கரண்டியில் நெய் வார்த்து, அதனுடன் வெள்ளீயத்தை உருக்கிப் பேய்க் கொம்மட்டிக்காய்ச் சாற்றில் 16 தடவை சாய்க்கவும்.

2. இதை உருக்கி நல்லெண்ணெயிலோ அல்லது இலுப் பெண்ணெயிலோ 16 தடவை சாய்க்கலாம்.

### 6. நாக சுத்தி

எண்ணெய், மோர், பசு மூத்திரம், காடி, காணச்சாறு, எருக்கம்பால், பசும்பால், எலுமிச்சம்பழச் சாறு இவைகளில் ஒவ்வொரு தடவை உருக்கிச் சாய்க்கச் சுத்தியாகும்.

( காணம் = கொள்ளு )

### 7. காரீயம்

காரீயத்தை இருப்புக் கரண்டியில் நெய் விட்டு உருக்கிக் கோடைக் கிழங்கு கொண்டுவந்து இடித்து மூத்தின காடித்தெளிவிலே கலந்து உருக்கிய காரீயத்தை 11 தடவை சாய்க்கவும்.

( கோடைக்கிழங்கு = சிற்றரத்தை )

### 8. மயில் துத்தம்

தயிர் விட்டு அரைத்து அடையாகத் தட்டிச் சட்டியி லிட்டுப் பொரிக்கவும்.

### 9. நேர்வாள சுத்தி

மேல் ஓட்டை உடைத்து உள்ளிருக்கும் பருப்புகளைப் பசுவின் சாணி ஜலத்தில் வேகவைத்து, அதன் பின் பருப்புகளுக்கு இடையிலுள்ள இலையையும் மூளையையும் நீக்கிவிட்டுக் கற்றாழஞ் சாற்றில் வேகவைக்கவும். பின்பு, பாலில் வேகவைத்து நெய் விட்டு வறுத்துப் பத்திரப்படுத்தவும்.

### 10. பால் துத்தம் சுத்தி

பொடி செய்து அழுத்தமான துணியில் முடிந்துக் கிழி கட்டிச் சுண்ணாம்புத் தண்ணீரில் டோலாயந்திரமாக எரிக்கவும்.

### 11. நெல்லிக்காய் கெந்தக சுத்தி

1. இரும்புக் காண்டியில் கந்தகத்தைப் போட்டு ஆமணக் கெண்ணெயை வார்த்துக் கொதிப்பிக்கச் சுத்தியாகும்.

2. ஆட்டுப் பால் விட்டு அரைத்துக் கொதிக்க வைத்தாலும் சுத்தியாகும்.

### 12. நிமிளை சுத்தி

மெல்லிய துணியில் கட்டி ஆட்டு மூத்திரம், காடி, வாழைக் கிழங்குச் சாறு இந்த மூன்று தண்ணீரிலும் தனித்தனியே 4 ஜாமம் எரித்துக் கொள்ளச் சுத்தியாகும்.

### 13. துத்தம் சுத்தி

1. நன்றாய்ப் பொடி செய்து துணியில் முடிந்து நாய் மூத்திரத்தில் 7 ஜாமமும், கோமூத்திரத்தில் 2 ஜாமமும், டோலாயந்திரமாக வேகவிட்டுப் பிறகு எடுத்துக் காண்டியிலிட்டு நெய் விட்டுக் கொதிக்கவைத்து அதிவிட்டு எடுக்கச் சுத்தியாம்.

2. நான்கு எலுமிச்சம் பழச்சாற்றில் 30 நாழிகைச் சூரிய புடம் வைத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

### 14. அப்பிரக சுத்தி

கொல்லன் உலையில் போட்டு, ஊதி கோமூத்திரத்தில் ஏழுதரம் காய்ச்சிக் காய்ச்சி நனைத்தெடுக்கச் சுத்தியாகும். பின்பு, இதை நெல்லுடன் சேர்த்து

ஒரு மூட்டையாகக் கட்டித், திரிபலா கஷாயத்தில் போட்டு 1 இரவு ஊறவைத்து, மறுநாள் அம்மூட்டையை நன்றாகக் கசக்கி வரவும். அப்போது அப்ரகம் துணியின் மூலமாக நுண்ணிய அணுக்களாக வந்துக் கஷாயத்தினடியில் தங்கும். இதற்குத் "தான்யாப்பிரகம்" அல்லது "அப்ரகநவனீதம்" என்று பெயர்.

### 15. காந்த சுத்தி

இதைச் சிறுக இடித்து எலுமிச்சம் பழச்சாறு, காடி, புளித்த மோர் ஒவ்வொன்றிலும் 3 நாழிகை ஊறப் போட்டுச் சூரிய புடம் போடச் சுத்தியாகும்.

### 16. துரிசு சுத்தி

கொடிவேலிச் சாறு விட்டு 3 நாள் வெயிலில் வைத்து வெள்ளையாய்ச் செய்யச் சுத்தியாகும்.

### 17. பாதரஸ சுத்தி

1. ரஸம் 1 பலம், கல்லுப்பு 1 பலம் போட்டுக் கற்றாழைப் பால் விட்டு 3 நாள் அரைத்துக் கழுவி எடுத்துக்கொண்டு, கருடன் கிழங்குச் சாற்றில் 3 நாள் அரைத்துக் கழுவி, வெயிலில் வைக்கச் சுத்தியாகும்.

2. ரஸம் 1 பலத்தை, மஞ்சள் பொடியிலும், ஒட்டடையிலும் 3 நாழிகை தனித்தனியே மத்தித்து ஊதிவிடவும். பின்பு கற்றாழைச் சாறு, சந்தணக் குழம்பு, செம்பருத்தம்பூச்சாறு, வெத்திலைச் சாறு, பழுபாகல் கிழங்குச் சாறு, நிலப் பனைக் கிழங்குச் சாறு, அழிஞ்சில் சாறு, அம்மான் பச்சரிசிச் சாறு, கையாந்தகரைச் சாறு, சாரணை இலைச்சாறு, பலாசம் பட்டைக் கஷாயம், கொன்றைப் பட்டைக் கஷாயம் இந்த வகை ஒவ்வொன்றிலும் 3 நாழிகை மத்திக்கச் சுத்தியாகும்.

**ரசத்தின் 8 வித தோஷ சுத்தி**

1. காடியினால் அரைத்தால் — நாக தோஷம் தீரும். பாவட்டை இலைச்சாற்றிலோ அழிஞ்சிச் சாற்றிலோ அரைத்தால் வங்கதோஷம் நீங்கும். கொன்றை இலைச்சாற்றால் மல தோஷமும், கொடி வேலி இலைச் சாற்றினால் வன்னிதோஷமும், கரு ஊமத்தை இலைச் சாற்றினால் அரைக்க சஞ்சல தோஷமும் திரிபலா (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) கஷாயத்தினால் விஷதோஷமும், திரிகடு (சுக்கு, திப்பிலி, மிளகு) கஷாயத்திலரைக்கக் கிரி தோஷமும் நெருஞ்சி வேர்ச் சாற்றினாலரைக்க அக்கினி தோஷமும் தீரும்.

2. ரசத்திற்கு 16 பங்கு செங்கல் பொடியும், மஞ்சள் பொடியும் போட்டு இரும்புக் கல்வமாவது அல்லது கருங்கல் கல்வமாவது கொண்டுவந்து, மெதுவாக அனல் காட்டி, மேல் சொல்லிய ரஸமும் பொடியும் போட்டு அரைக்க ரசத்தின் 8 வித தோஷமும் தீரும்.

**18. தொட்டிப்பாஷாண சுத்தி**

பொடி செய்து, அழுத்தமான கருப்புத் துணியில் கிழி கட்டி, கோமூத்திரத்தில் டோலாயந்திரமாக மூன்று நாள் எரிக்கவும்.

**19. வெங்கார சுத்தி**

பொரித்து உபயோகிக்கவும். காடியிலோ அல்லது எலுமிச்சம்பழரசத்திலோ அரைத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

**20. தந்தி பாஷாண சுத்தி** (குதிரைப்பல் பாஷாணம்)

கோமூத்திரத்தில் மர்த்தனை பண்ணி மொத்தையாக்கி, துணியில் கட்டி கோமூத்திரத்தில் போட்டு 3 நாள் எரிக்கச் சுத்தியாகும்.

**21. கர்ப்பூர சிலாஜது சுத்தி**

கற்றாழைச் சாற்றில் 1 ஜாமம் அரைக்கச் சுத்தியாகும்.

**22. கரிய போள சுத்தி**

காடியில் நனைத்து உலர்த்தவும்.

**23. ஊமத்தை விதை சுத்தி**

எலுமிச்சம்பழச் சாற்றில் மர்தனை செய்யவும்.

**24. கபரி சுத்தி (பெருங்காயம்)**

1. பொடி செய்து பசும்பாலில் போட்டு 30 நாழிகை சூரிய புடம் வைக்கவும்.
2. தாமரை இலைச் சாற்றில் பாவனை செய்யவும்.

**25. நிமிளை சுத்தி**

வாழைக் கிழங்குத் தண்ணீரில் வேகவைத்தெடுக்கச் சுத்தியாகும்.

**26. கௌரீபாஷாண சுத்தி**

எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து உருண்டை செய்து அழுத்தத் துணியில் கிழிகட்டி சுண்ணாம்புத் தண்ணீரில் டோலா யந்திரமாக இரண்டு நாள் எரிக்கவும். அல்லது (இரண்டு ஜாமமாவது எரிக்க).

**27. லிங்க சுத்தி**

முலைப்பாலிலாவது அல்லது எலுமிச்சம் பழச்சாற்றிலாவது 15 நாழிகை அரைக்கச் சுத்தியாகும்.

**28. கெந்தக சுத்தி (வேறு)**

ஒரு சட்டியில் பால் விட்டு அதன் வாயை, மெல்லிய துணியால் கட்டி, அத்துணியின்மேல் இந்த கந்தகத்தைத் தூள்செய்து வைத்து, மேலே அதன் வாய்க்குப் பொருந்தும்படி வேறொரு சட்டியைக் கவிழ்த்துச் சந்திபந்தனம் செய்து, மேலுள்ள சட்டிக்கு அனலை மூட்டவேண்டும். அப்போது அதனுள் இருக்கும் கந்தகம் உருகி பாலில் விழும். அதை எடுத்துத் தண்ணீரில் அலம்பி எடுத்துக்கொள்ளவும். (அதபாதன யந்திர விவரத்தையும் பார்க்க).

**29. எலிப்பாஷாண சுத்தி**

1. தேனிற்குள் ஒரு ஜாமம் போட்டு எரிக்கச் சுத்தியாகும்.
2. பொடி செய்து கிழி கட்டிச் சுண்ணும்புத் தண்ணீரில் டோலாயந்திரமாக எரிக்கச் சுத்தியாகும். (1 நாள்).

**30. மனேசிலை சுத்தி**

1. துண்டுகளாக்கித் துணியில் கிழிகட்டி டோலாயந்திரமாக ஆட்டு மூத்திரத்தில் 3 நாள் எரிக்கவும்.
2. பசுவின் பாலிலும், உளுந்து அவித்த ஜலத்திலும், டோலாயந்திரமாக எரிக்கவும்.

**31. தாளக சுத்தி**

1. தாளகத்தை மெல்லிய துணியில் மூட்டை கட்டிக் கோமூத்திரத்தில் 3 நாள் வேக வைக்கவும்.
2. பசுவின் பாலிலும், சுண்ணும்புத் தண்ணீரிலும் தனித்தனியாக ஒரு ஜாமம் எரிக்கவும்.

**32. வெள்ளைப்பாஷாண சுத்தி**

1. சுண்ணும்புத் தண்ணீரில் டோலா யந்திரமாக 60 நாழிகை எரிக்கவும்.

2. சீலையில் முடிந்து, சாணியில் பொதிந்து வேகவைத்துப் பின்பு எடுத்துப் பொட்டணம் கட்டிப், பசும்பாலில் டோலாயந்திரமாக வேகவைத்தபின், சிறு கீரைச் சாற்றில் வேக வைக்கச் சுத்தியாகும்.

### 33. நாபி சுத்தி

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்க் கஷாயத்தில் நாபியை இட்டுச் சூரிய புடத்தில் 3 நாள் ஊரவைத்துப் பின்பு கோமூத்திரத்தில் 3 நாள் சூரிய புடம் வைக்கவும்.

### 34. பொன்னரிதாரஞ் சுத்தி

பூஷணிக்காய்ச் சாற்றில் டோலாயந்திரமாக ஒரு ஜாமம் எரிக்கச் சுத்தியாகும்.

### 35. கர்பூரசிலாஜித் சுத்தி

1. செங்கழுநீர் கிழங்குச் சாறுவிட்டு 1 ஜாமம் அரைக்கச் சுத்தியாகும்.

2. பாலில் டோலாயந்திரமாக 1 ஜாமம் எரிக்கவும்.

### 36. வைக்ராந்த சுத்தி

இதைப் பொடி செய்து நெய்யும் தேனும் சரிகலந்து அதில் பொடியை 8 நாள் நனைய விட்டு எடுத்து ஒரு சீலையில் பொட்டணமாகக் கட்டி கருணைச் சாற்றிலே டோலாயந்திரமாக எரிக்கச் சுத்தியாகும்.

### 37. காசலவணம்

புளி இலைச்சாற்றில் நனைத்து உலரவைத்துக்கொள்ளவும்.

### 38. சத்திச்சாரம்

காடியில் 3 நாழி மத்திக்கச் சுத்தியாகும்.

## 39. யவட்சாரம்

பச்சரிசிக் கழுநீரில் 1 நாழி மத்தித்து உலரவைத்தால் சுத்தமாகும்.

## 40. தொட்டிப் பாஷாண சுத்தி

பொட்டணம் கட்டிக் கோமூத்ரத்தில் 3 நாள் டோலாயந்திரமாக எரிக்கவும்.

## 41. சூரியபோள சுத்தி

காடியில் அரைத்து உலர்த்தவும்.

## 42. இந்துப்பு சுத்தி

காடியில் பாவனை செய்யச் சுத்தியாகும்.

## 43. ஸௌவர்ச்சல சுத்தி

பசு மூத்திரத்தில் நனைத்து ஊரவைத்து வறுக்கவும்.

## 44. ஆமணக்கு சுத்தி

ஆமணக்கு முத்தை இளநீரில் 1 ஜாமம் வேகவைக்கவும்.

## 45. குக்கில் சுத்தி

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பேப்புடல், கண்டங்கத்திரி வேர், சிந்தில் கொடி ஆடாதோடை, வேப்பம் பட்டை, இது வகைக்கு 1 பலம் கூட்டி இடித்து 1 பதக்கு நீரிட்டு ஷை குக்கிலே டோலா யந்திரமாக அப்பானையில் கட்டி எரிக்கவும்.

## 46. எட்டி விதை சுத்தி

கொட்டையை உடைத்து நஞ்சை எடுத்துவிட்டுப் பழய காடியில் 3 நாள் ஊரப்போட்டு எடுத்து ஒரு சாக்கி விட்டு நன்றாக உராய்ந்து வெய்யில் உலர்த்தச் சுத்தியாகும்.

47. **ஜீரகம்**

2 ஜாமம் வெயிலில் உலர்த்தவும்.

48. **கள்ளிப்பால்**

வரகு அரிசித் தவிட்டைப் போட்டு வெயிலில் வைக்கச் சுத்தியாகும்.

49. **அரக்குப் பொடி, சுத்தி**

எலுமிச்சம்பழச்சாற்றில் வேகவைத்துக் கழுவிக் கழுவி 11 தடவை வேக வைத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

50. **திப்பிலி சுத்தி**

எலுமிச்சம்பழ ரசத்திலோ அல்லது கொடுவேலி வேர் கஷாயத்திலோ ஊரவைத்து உலர்த்தச் சுத்தியாகும்.

51. **மிளகு**

புளித்த மோரில் 3 நாழி ஊரவைக்கவும். பின்பு வறுத்துக்கொள்ளவும்.

52. **யானைத் திப்பிலி**

காடியில் 1 ஜாமம் பாவனை செய்யவும்.

53. **முசுட்டை விதை**

மல்லிகைச் சாற்றில் ஊரவைக்கவும்.

54. **சுக்கு சுத்தி**

சுண்ணாம்பு பூசி உலர்த்தவும்.

55. **ஓமம்**

சுண்ணாம்பு நீரில் போட்டு 1 ஜாமம் வெயிலில் வைக்கவும்.

## 56. பால்

சிறு காஞ்சோறி வேர் போட்டுக் காய்ச்சச் சுத்தியாகும்.

## 57. பிடலவணம்

மோரில் ஊறவைக்கவும்.

## 58. காஞ்சலவணம்

புளி இலைச்சாற்றில் ஊரவைத்து உலரவைக்கவும். பின்பு வறுத்து உபயோகிக்கவும்.

## 59. குங்கிலிய சுத்தி

வேம்பு, கண்டங்கத்திரி, சீந்தில், ஆடாதோடை, பேப்புடல் இவற்றை 8 படி நீரிட்டு 2 படியாகக் காய்ச்சிய கஷாயத்தை, ஒரு அகன்ற சட்டியில் விட்டு வேடு கட்டி அதன்மேல் குங்கிலியத்தை வைத்து, அடுப்பில் கொதிக்கவைத்து, குங்கிலியம் மெழுகு பதமானதும் இறக்கி, அக்கஷாயத்திலேயே அலம்பி எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

## 60. சேராங் கொட்டை சுத்தி

ஜலத்தில் செம்மண் இட்டு சேற்றெருனாளேஆரில்
மலத்து கோணிதனிலே தேய்த்து மாசறகழுவசுத்தி
பலத்தினை சுன்னனீரில் பாச்சியோர் நாளே ஆரில்
அழுத்தி காத்துவ்ர சுத்தியாகுஞ் சேங்கொட்டைதானே.

(இ-ள்) செம்மண்ணைக் கொண்டுவந்து, தண்ணீரில் கரைத்து, அதில் மூக்கு வெட்டிய சேராங்கொட்டைகளை ஒரு நாள் ஊரவைக்கவும். மறுநாள் அவைகளை ஒரு அழுக்குச் சாக்கில் கட்டி, நன்றாக எண்ணெய் சத்து நீங்கும் வரை உராய்ந்து, கழுவியபின், அக்கொட்டைகளைச் சுண்ணாம்புத் தண்ணீரிலிட்டு, ஒரு நாள் ஊர வைக்கவும். பின்பு அவைகளைத் துடைத்து வைக்கச் சுத்தியாகும்.

# சுத்தியந்திர வகை

## 61. டோலா யந்திரம்

சுத்தமாக்கவேண்டிய சாமானை, ஒரு துணியிலிட்டு முடிந்து, அதன்மேல் ஒரு நூலைக் கட்டி விடவும். ஒரு புதுச் சட்டியை எடுத்து, அதில் வேண்டிய திரவத்தை விட்டுச் சட்டியின் வாய் புகாவண்ணம் ஒரு குச்சியை இட்டு அதன் நடுவே கிழியின் நூலைக் கட்டி, அக்கிழி அந்த திரவத்துக்குள் நன்றாக மூழ்கி இருக்கும்படி தொங்கவிடவும். பின்பு இதை, அடுப்பின் மீதேற்றித் திரவத்தை கொதிக்கச் செய்தால் துணியிலுள்ள சரக்கு சுத்தியாகும். இதுதான் டோலாயந்திரம்.

கிழி—சிறுமூட்டை

## 62. அத. பாதன யந்திரம்

ஒரு சதுரமான குழியை வெட்டி, அதில் ஒரு சட்டியை வைத்து, அதில் வேண்டிய திரவத்தை விட்டு, அச்சட்டியின் வாயை ஒரு மெல்லிய துணியால் கட்டி, அதில் வேண்டிய சரக்கை வைத்து, அச்சட்டி வாய்க்குப் பொருத்தமான வாயுள்ள இன்னொரு சட்டியை அதன்மேல் கவிழ்த்துச் சீலைமண் செய்யவும். இப்போது மேல் சட்டியைச் சுற்றிலும் வராட்டி அடுக்கி தீமூட்டவும். இதனால் சட்டிக்குள்ளிருக்கும் வஸ்து உருகி சட்டியின் அடியிலிருக்கும் திரவத்தில் விழுந்து சுத்தியாகும்.

# அனுபந்தம்—3

## சரக்குகளின் பெயரகராதி

# அனுபந்

## சரக்குகளின்

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 1 | அகத்தி | 112, 223 | அகஸ்த்ய Agastya |
| 2 | அகில் கட்டை | 161 | அகரு Agaru |
| 3 | அட்டுப்பு | 275 | பிடா லவணம் Bida Lavanam |
| 4 | அதிமதுரம் | 157 | யஷ்டிமது Yashtimadhu |
| 5 | அதிவிடையம் | 158 | அதி விஷா Athivisha |
| 6 | அப்பக் கோவை | 141 | பிம்பீ Bimbi |
| 7 | அப்பிரகம் | 271 | அப்ரக Abhraka |
| 8 | அபினி | 160 | அஹிபேனம் Ahiphenam |
| 9 | அமுக்குரா | 140 | அஸ்வகந்தா Aswagandha |
| 10 | அரசு | 94 | அஸ்வத்த Aswatha |

## நம் 3.

## பெயரகராதி

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| அவிஸே<br>Avise | அகதி<br>Agathi | Agati-<br>grandiflora | Sesbenia<br>grandiflora |
| அகரு<br>Agaru | அகரு<br>Agaru | Aquilaria<br>Agallocha | Eagle-wood |
| சுரேகார உப்பு<br>Suraykara<br>Uppu | கடிலா நோனே<br>Katila Nonay | —— | Black Salt |
| அதிமதுரமு<br>Athimadhura-<br>mu | ஜட்டிமத, மூல்<br>ஹட்டி<br>Jattiy Mada,<br>Moola Hatty | Glycyrrhizae<br>Radix or<br>glabra | Indian Liquo-<br>rice |
| அதிவாசா<br>Athivasa | அதிஸ்<br>Athisa | Aconitum<br>Hetero<br>phyllum | Indian Atees |
| தொண்டா,<br>காகிதொண்<br>டா<br>Donda, kaki-<br>dhonda | கந்தூரி,<br>குலகாங்க<br>Kandhuri,<br>Gulakangha | Coccinia<br>Indica | Cephalandra<br>Indica |
| அப்ரக<br>Abhraka | அப்ரக<br>Abhraka | Mica | Talc-Glimmer |
| நல்லமந்து<br>Nallamandhu | அபீம்<br>Aphyoon | Opium | Poppy |
| பென்னேரு,<br>பில்லி<br>அண்ட்ரா<br>Pennaru, Pilli<br>Andra | அசகந்த<br>Asagandha | Withania or<br>Physalis<br>Somnifera | Winter cherry |
| ராவி செட்டு<br>Ravi chattu | பீபர, பீபல<br>விருக்ஷ<br>Peepara, Pee-<br>pala Vruksha | Ficus-<br>Religiosa | Poplar leaved<br>Fig tree,<br>Popul tree |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 11 | அரேணுகம் | 159 | ரேணுகா<br>Renuka |
| 12 | அவுரி | 1 | நீலீ<br>Neeli |
| 13 | அழிஞ்சில் | 42 | அங்கோல<br>Ankola |
| 14 | அன்ன பேதி | ...... | காஸீஸ<br>Kaseesa |
| 15 | ஆகாச கருடன் | 46 | மஹா மூலம்<br>Maha moolam |
| 16 | ஆடு தீண்டா பாளை | 44 | அஜாஸ்பர்சா<br>Ajasparsa |
| 17 | ஆட்டாங் கொடி | 2 | ஸோமவல்லி<br>Somavalli |
| 18 | ஆதண்டை | 45 | ——— |
| 19 | ஆயில்ய மரம் | 95 | பூதீக<br>Poothika |
| 20 | ஆவாரை | 43, 3 | ஆஹுலி, தலபோடகம்<br>Ahuli, Thalapotakam |
| 21 | இஞ்ஜி | 113 | ஆர்த்ரகம்<br>Ardrakam |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தின் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| —— | ரேணுகா<br>Renuka | Vitex Speciosa | —— |
| நீலி செட்டு<br>Neeli chettu | நீல, லீல<br>Neela, Leela | Indigofera Cordiflora | Indigo plant |
| ஊடுகா, அங்கோலமு<br>Uduga, Ankolamu | டேயரா, டேரா<br>Dera, Tera | Alangium Lamerkii or Decapetaium | Sage leaved Alangium |
| அன்ன பேதி<br>Annabedi | காஸீஸ<br>Kaseesa | Ferrus Sulphus | Sulphate of Iron |
| நாகதொண்டா or முரு தொண்டா<br>Nagadonda or Murudonda | ராக்ஷஸ கட்டா<br>Rakshas Ghadda | Bryonia Epigoea | Bryoms |
| காடுதே கட பாகு<br>Gadude Gada-paraku | கந்தாண்<br>Gandan | Aristolochia Bracteata | Indian Birthwort |
| ஸோமவல்லி<br>Somavalli | ஸோம<br>Soma | Psoralia corylifolia | Esculent Flacourtia |
| ஆருதோண்டா<br>Arudonda | —— | Capporis Zeylanica | Horrida |
| —— | —— | —— | —— |
| தங்கேடு<br>Thangedu | தர்வட், தர்வர்<br>Tharvat, Tharvar | Cassia auriculata | Tenner's Cassia |
| அல்லமு<br>Allamu | ஆர்த்ரக்<br>Ardrak | Zingiber officinalis | Green Ginger |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 22 | இரும்பு | 254 | கிருஷ்ண லௌஹ, or அயஹ Krishna Loha, Ayah |
| 23 | இலந்தை | 96, 48 | பதரி, கோல Badari, Kola |
| 24 | இந்துப்பு | 276 | ஸைந்தவம் Saindhavam |
| 25 | இலுப்பை | 242 | மதூக Madhooka |
| 26 | இலைக்கள்ளி | 4 | ஸ்நுஹீபத்ர Snuhii Pathra |
| 27 | இளநீர் | 231 | நாரிகேளோதகம் Narikelodakam |
| 28 | உவர்மண் உப்பு | 288 | ஔத்பித லவணம் Oudbhida Lavanam |
| 29 | ஊமத்தை | 114,5,155 | தத்தூர Dhattoora |
| 30 | எருக்கு | 49,116,136,6, 97 | அர்க்க Arka |
| 31 | எலுமிச்சை | 115,224 | நிம்பூக, ஜம்பீர Nimbooka, Jambeera |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| இனுமு Inumu | லோஹ, இச்பாத், காளலௌஹ், போலாத் Loha, Ispath, Kalaloh, Polad | Ferrum | Iron |
| ரேகு Reghu | பேர் Bar | Zizyphus Juguba | The Jujuba tree |
| இந்துப்பு Indhuppu | சைந்தா நோனு Sainda Nona | Sodium Chloride | Rock Salt |
| இப்பசெட்டு, பின்ன இப்பா Ippa chettu, Pinna Ippa | மஹுஆ ஹா-(வா) Mahuaa-(Va) | Bassia Latifolia | Mowa tree Ellopa tree |
| ஆகுஜெமேடு Aku Jemedu | தூஹர் Thuhar | Euphorbia Nivalia | Common Milk Hedge |
| டெங்காயாநீளு Tenkaya Neelu | நாரியல் Nariyal | Cocos Nucifera | Tender Coconut Water |
| விடுலு பஸ்மமு Vitlu Basmamu | சூர்யாகார, சோரா, ரேச்கவா, வாஜி Suryakhara, Sora, Resgava, Vaji | Nitre Salt Petre | Pot. Nitras |
| உம்மெத்தா Ummaththa | ததூரா Dathura | Datura Alba | Datura, Thorn apple |
| ஜில்லேடு செட்டு Jilledu Chettu | ஆக் Aak | Calotropis Gigantea | Mudar |
| நிம்ம Nimma | நிம்பூ, லிமு Nimbu, Limu | Citrus acida Citrus Limonum | Lemon |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 32 | எள்ளு | 230,241 | தில<br>Thila |
| 33 | ஏலக்காய் | 162 | ஸ்தூல ஏலா<br>ஸூக்ஷ்ம ஏலா<br>Sthula, Ela,<br>SookshmaEla, |
| 34 | ஓமம் | 163 | அஜமோத<br>Ajamoda |
| 35 | கச்சோலம் | 173 | கச்சூர, சடீ<br>Kachura, Satee |
| 36 | கஞ்சா | 167 | விஜயா, கஞ்ஜா,<br>பங்கா<br>Vijaya, Ganja,<br>Bhanga |
| 37 | கடலுப்பு | 277 | சாமுத்திர லவணம்<br>Samudra Lavanam |
| 38 | கடுகு | 164 | சர்ஷப<br>Sarshapa |
| 39 | கடுகு ரோகிணி | 165 | கடுரோஹிணி<br>Katurohini |
| 40 | கடுக்காய் | 166 | ஹரீதகி, அபயா<br>Harithaki, Abhaya |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| நுவுலு<br>Nuvulu | தில்<br>Thil | Sesamum—<br>Indicum | Gingeli<br>seeds |
| ஏலகுலு, ஏல காய வித்துலு<br>Elakulu, Ela-<br>kaya Vithulu | படி ஏலாயச்சி, சோட்ட ஏலாயச்சி<br>Badi Elayachi,<br>Chotta<br>Elayachi | Amomum<br>Suvulatem<br>Eletaria<br>cardamomum | Lesser card—<br>omom<br>Cardamom<br>Seeds |
| ஓமமு<br>Omamu | அஜ்மோத், அஜ்வாயன்<br>Ajmod,<br>Ajwayan | Carum<br>copticum<br>(Ptychotis)<br>Ajowan | Bishops—<br>weed |
| கிச்சிலிகட்டலு<br>Kichili<br>Gaddalu | கசூர, ஹல்தி<br>Kachoora,<br>Haldi | Curcuma<br>Zedoary | Long—<br>Zedoary |
| கஞ்சாயி<br>Ganjayi | பாங்கு, பங்க, காஞ்சா<br>Bhangh, Bang<br>Ganja | Cannabis<br>Sativa | Indian Hemp |
| உப்பு<br>Uppu | ஸமுத்ர நோணம், பாங்கா<br>Samudra Non-<br>neh, Panga | Sodii<br>chloridum,<br>Sodii Muras | Common Salt |
| நல்ல ஆவாலு<br>Nalla Aavalu | ராயன்<br>Rayan | Sinapis Nigroe<br>Semina | Mustard<br>Seeds |
| கடுகரோஹிணி<br>Katukarohini | குட்கி<br>Kutki | Picrorrhiza<br>Kurroa | Hellebore |
| கரக்காயா<br>Karakkaya | ஹரட், பைலி ஹாரா<br>Harad,<br>Paili Hara | Terminalia<br>chebula | Myrobalam<br>chebula |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 41 | கடுக்காய் பிஞ்சு | 166 | பால ஹரீதகி<br>Bala Harithaki |
| 42 | கண்டங் கத்திரி | 51, 225, 61, 146 | கண்டகாரி, நிதிக்திகா<br>Kantakari, Nidigdhika |
| 43 | கண்டத் திப்பிலி | 168, 146 | பிப்பலி மூல<br>Pippali Moola |
| 44 | கத்திரி | 232 | வார்தாகி<br>Varthaki |
| 45 | கரிசலாங்காணி | 118 | பிருங்கராஜ, மார்க்கவ<br>Bhringaraja, Markava |
| 46 | கரிய போளம் | 171 | கன்யா ஸாரம்<br>Kanya Saram |
| 47 | கரியுப்பு | 279 | சாமுத்ரம்<br>Samudram |
| 48 | கருங் கோழி | 251 | கிருஷ்ண குக்குட<br>Krishna Kukuta |
| 49 | கருஞ்சீரகம் | 169 | கிருஷ்ண ஜீரக, உப குஞ்சிகா<br>Krishna Jooraka, Upakunchika |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தின் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| சிட்டி கரகாயா<br>Chitti karkaya | பல்ஹர்.<br>ஜாஞ்ஜி ஹர்<br>Bal Har,<br>Janji Har | Do. | Do.<br>(Tender) |
| நேல முலக,<br>வாகுடு<br>Nela Mulaka,<br>Vakudu | கட்ரி, கடேலி<br>Katri, Kateli | Solanum<br>Jacquini | Wild eggs<br>plant |
| பிப்பலீ மூலம்<br>Pippali Moola | பேல் பேலய,<br>மோத், பீபரா<br>மூல<br>Pael Pelaya,<br>Moth, Peepa-<br>ra moola | Chavica Rox-<br>burghii, piper<br>officinarum | Piper Root |
| வங்காய<br>Venkaya | பண்டா,<br>பைங்கன்<br>Bhanta,<br>Baingan | Solanum<br>Melongena | Brinjal |
| குண்ட கலி<br>ஜேரு<br>Kunta Gala<br>jeru | பாங்கரா,<br>மகரையா<br>Bhangara,<br>Magaraya | Elcipta<br>Prostata | Traning<br>Eclipta |
| சின்ன<br>களபந்த<br>Chinna<br>Kalabanda | சோட்டா<br>கனவர்<br>Chota<br>Kanwar | Aloe Litoralis | Small Aloes |
| உப்பு<br>Uppu | ஸமுத்ர நோனா<br>Samudra<br>Nonna | Sodium<br>Chloride | Common<br>Salt |
| நல்ல கோடி<br>Nalla Kodi | கால முர்கி<br>Khala Murghi | —— | Black Cock |
| நல்ல ஜிலகரா<br>Nalla<br>Joolakara | ஸ்யாஹ்ஜீரா,<br>காளாஜீரா<br>Syahi Teera,<br>Kala Jeera | Nigella Sativa | Black cumin,<br>Small Fennel |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 50 | கருணைக்கிழங்கு | 142 | ஸூரண Soorana |
| 51 | கருநொச்சி | 7,119 | நிர்குண்டி Nirgundi |
| 52 | கருவேலங் கொழுந்து | 9 | பபூல, பர்பூர Baboola, Barboora |
| 53 | கருவேப்பிலை | 8 | காளசாகம், கைடர்யம் Kala sakam Kaidaryam |
| 54 | கல்கண்டு | 289 | சிதோ பலம், மிஞண்டி Sithopalam, Meenandi |
| 55 | கல் மதம் | 255 | சிலாஜது Silajatu |
| 56 | கல்லுப்பு | 278 | —— |
| 57 | கழற்சிக் கொடி | 11,50,152 | வச்ர பீஜ, குபேராக்ஷி, லதாகரஞ்ஜ Vajrabeeja, Kuberakshi Lathakaranja |
| 58 | களிப்பாக்கு | 172 | பூக, க்ரமுகம் Pooga, Kramuka |
| 59 | கள்ளி | 10,98 117,138 | ஸ்நுஹீ Snuhee |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| கந்த கட்டா Ganda Ghadda | ஸூரண், ஜமீகந்த் Sooran, Jamee Kand | Amorpho-phallus Paniculatus, | Typhonium |
| தெல்ல வாவிலி Thella Vavili | சம்ஹாலு, மேவுடி Samhalu, Mevudi | vitex Negundo | Five leaved chaste tree |
| நல்ல தும்மா Nalla Thumma | காள் பபூள Kala baboola | Acacia Arabica | Acacia tree, Gum Arabic |
| கரிவேப்ப செட்டு Kariveppa Chettu | மீடானீம், வரசங்க் Meeta Neem, Varsang | Murraya Konigii | Curry-leaf |
| படிக பெல்லமு, Patike Bellamu | மிசிரி, கடிசாக்ர Misiri, Kadi Sakra | Saccharum-purification | Sugar-Candy |
| சிலாஜித் Silajit | சிலாஜித் Silajit | Asphaltum punjabinum | Asphalt |
| கச்சகாயு Gachakaya | கரஞ்ஜவா, ஸகரகோடா Karanjva, Sagarkota | Caesalpinia Bonducella | Bonduc Nut, Molucca bean |
| போக செக்கா Pooka Chekka | சிகினி சுபாரி Chikni Supari | Areca catechu | Boiled tender araca Nut |
| ஜெமுடு, காடஜெமுடு Jemedu, Kada Jamedu | தூஹர், ஸேஹண்ட் Thuhar, Sehund | Euphorbia Tirucalli Euphorbia Trigona | Milk hedge |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸம்ஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 60 | கற்கட சிங்கி | 170 | கற்கடசிருங்கி Karkata Sringi |
| 61 | கற்றாழை | —— | குமாரி, க்ருஹ கன்ய Kumari, Grihakanya |
| 62 | கஸ்தூரி | 252 | கஸ்தூரி Kastoori |
| 63 | காசுக்கட்டி | 175 | கதிரஸார Khadirasara |
| 64 | காச்சுப்பு | —— | —— |
| 65 | காடி | 250 | சுக்ர Chukra |
| 66 | காட்டாமணக்கு | 52,120,153 | பவதை ரண்ட Pavathairanda |
| 67 | காட்டுக் கருணை | 142 | வனஸூரண Vanasoorana |
| 68 | காந்தம் | 256 | காந்த லோஹ Kantha Loha |
| 69 | காய் வேளை | 53 | சரபுங்கா Sara punkha |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| கற்கட ச்ருங்கி<br>Karkata<br>Sringi | காகட் சிங்கி<br>Kakat Singi | Rhus<br>Succedanea<br>Pistacia<br>intageirrima | The galls |
| களபந்த,<br>Kalabanda, | கீகுவார்<br>Glikuvar | Aloe<br>Perfoliata | Indian aloes |
| கஸ்தூரி<br>Kasthuri | கஸ்தூரா<br>Kastoora | Moschii | Musk |
| காசு, கவிரே<br>Kachu, Kavire | கைர்ஸார்,<br>கய்யா<br>Kairsar,<br>Kayya | Catechu<br>Extractum | Catechu |
| — | — | — | — |
| காடி, புலுபு<br>Kadi, Pulupu | சூகா<br>Chooka | — | Venegar |
| பேபாலம்,<br>அடவி<br>ஆமுதமு<br>Papalam,<br>Adavi<br>Amudamu | ஜாங்கி<br>அரண்டி<br>Janghi<br>Arandi | Jatropha<br>Curcus | English Physic<br>Nut |
| அடவி கந்த<br>கட்டா<br>Adavi Kanda<br>Gadda | வாராஹி கந்த<br>Varahi Kand | Dracontium<br>Polyphyllum<br>Tacca<br>Pinnatifida | Wild<br>Amorpho-<br>phallus |
| காந்த லோஹா<br>Kaantha loha | காந்த லோஹ<br>Kaantha Loha | — | Magnet |
| வெம்பலி<br>Vempali | சர்போங்கா<br>Saraponka | Tephrosia<br>Purpurea | Purple<br>Tephrosiaca |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 70 | காரீயம் | 257 | ஸீஸக<br>Seesaka |
| 71 | கார்போகு (ஆட்டாங்கொடியைப் பார்க்க) | 174 | பாகுசி<br>Bauchi |
| 72 | கிட்டான் | 258 | லோஹ கிட்டம், மண்டூர<br>Loha Kittam, Mandoora |
| 73 | கிராம்பு | 176 | லவங்க<br>Lavanga |
| 74 | குக்கில் | 177 | குக்கலு<br>Guggulu |
| 75 | குப்பைமேனி | 121 | அதிமஞ்சரி, அரித்தாமஞ்சரி<br>Athimanjari, Arithamanjari |
| 76 | குரசாணி ஓமம் | 178 | பாரஸீக யவானி<br>Paraseeka Yavani |
| 77 | கூகைநீர் | 179 | துகா, தவக்ஷீரி<br>Thuga, Thavaksheeri |
| 78 | கூந்தல் பனை | 12 | சங்கர் ஜடா, ஹிந்தாள,<br>Sankar Jata, Hinthala |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| ஸீஸமு<br>Seesamu | ஸீஸ்<br>Sees | Plumbum | Lead |
| பாவஞ்சி வித்துலு, காருகச்ச<br>Bhavanchi Viththulu, Karugajja | பாபச்சி, பகுடி<br>Babchi, Bakudi | Psoralia Corylifolia | Eusculant Flacaurtia |
| இனுபசிட்டெமு<br>Inupachittemu | மண்டூர, கிட்டி<br>Mandoora, Kitti | Ferro Ferric Oxide | Iron ore |
| லவங்காலு<br>Lavangalu | லோங்க, லௌங்க<br>Longa, Lounga | Caryophyllum auromaticus | Cloves |
| குக்கிலமு<br>Guggilamu | குகர், கூகள்<br>Gugar, Gookal | Balsam odenron Roxburghii or Mukul | Indian Dellium |
| குப்பெண்ட<br>Kuppenta | குப்பி<br>Kuppi | Acalipha Indica | Indian acalipha, Cat's Struggle |
| குரசானி ஓமமு<br>Kurosani Omamu | குர்சானி அஜவாயன<br>Kursani Ajwayan | Hyoscyamus Niger | Henbena Seeds |
| —— | தவாகீர்<br>Thavakeer | Curcum augustifolia | Arrow Root |
| கொண்ட ஜிலுகு.<br>Konda Jilugu, கிரகதாடு<br>Girakathadu | மரி<br>Mari | Caryota Urens | Sago-Palm |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 79 | கொடி வேலி | 54,100,124 | சித்ரகம் Chithraka |
| 80 | கொட்டை கரந்தை | 13 | முண்டி Mundi |
| 81 | கொள்ளு | 180 | குலுத்த Kuluththa |
| 82 | கொன்றை | 55,99 | ஆரக்வத Aragvadha |
| 83 | கோரோசனை | 253 | கோரோசனு Gorochana |
| 84 | கோஷ்டம் | 181 | குஷ்ட Kushta |
| 85 | சகஸ்ரவேதி | 239,15 | அம்லவேதஸம் Amla Vethasam |
| 86 | சங்கன் | 56,226 | Kundali குண்டலி |
| 87 | சங்கக்ஷாரம் | — | சங்க க்ஷார Sanka kshara |
| 88 | சங்கு | 259 | சங்க Sankha |
| 89 | சண்பகப்பூ | 185 | சம்பக Champaka |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| சித்ர மூலமு Chithra moolamu | சிதா சித்ரக் Chitha chithrak | Plumbago Zeylanica | Ceylon Lead wort |
| பொட்டஸரமு Bodda Saramu | கோரக்முண்டி Gorak Mundi | Sphoeranthus Indicus or Hirtus | Indian Globe Thistle |
| உலவலு Ulavalu | குல்தீ Kulthee | Dolichos biflorus | Horse gram |
| ரேல காயலு Rela Kayalu | அமல்தாஸ் Amalthas | Cassia Fistula | Indian Ladurnam Pudding Pipe Tree |
| கோரோசனமு Gerochanamu | கௌலோசன் Goulochan | Bostorum | Gole-stone, Bezora |
| சங்கல்வ கோஷ்டு Sangalva Koshtu | கூட Koota | Sassurea Lappa | Costus Root |
| புல்ல ப்ரப்ப Pulla prabba | அம்லவேந்த் Amla Venth | Acido Zeyfolia | Common Soral |
| தெல்ல உப்பி Thella Uppi | காலாங்குர் காமை Kalankur Kamai | Azima Tetracanta, Monetia Barleriades | — |
| சங்கக்ஷாரமு Sanka kshramu | சங்க க்ஷார் Sanka kshar | — | — |
| சங்கமு Sankhamu | லோடாசங்க Lota Sankha | — | Conch |
| சம்பகமு Champakamu | சம்பா, சம்பக் Champa, Champak | Michelia champaka | Yellow champaka |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 90 | சதுரக்கள்ளி | 14,137 | வஜ்ரகண்டக, வஜ்ர துண்டி Vajrakantaka, Vajra Thundi |
| 91 | சத்திக்ஷாரம் | 281 | ஸர்ஜி க்ஷாரம் Sarji ksharam |
| 92 | சந்தனம் | 182 | சந்தன, ஸ்ரீகண்ட Chandana, Srikanta |
| 93 | சர்க்கரை | 290 | சர்க்கரா, ஸிதா Sarkara, Sitha |
| 94 | சதகுப்பை | 183 | சதாஹ்வா, சதபுஷ்பா Sathahwa, Sathapushpa |
| 95 | சவுக்காரம் | 280 | ——— |
| 96 | சவுட்டுப்பு (உவர்மண் உப்பு) | ——— | ஊஷர, ரோமக Ooshara, Romaka |
| 97 | சவ்யம் | 184 | சவ்யம் Chavyam |
| 98 | சாதிக்காய் | 186 | ஜாதிபலம் Jatheephalam |
| 99 | சாதிப்பத்திரி | 187 | ஜாதிபத்ரீ Jathipathram |
| 100 | சாறணை | 57 | புனர்னவா Punurnava |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| பொந்த ஜெமுடு Bontha Jemudu | ஸேஹுண்ட் Sehund | Euphorbia antiquorum | —— |
| ஸர்ஜிகா க்ஷாரமு Sarjika ksharamu | ஸஜ்ஜீ Sajgi | —— | Ashes of sal tree |
| கந்தபுசக்க Gandapu chekka | சந்தன் Chandan | Santalum album | Sandalwood |
| பஞ்சதாரா Panchadara | சினி, சக்கர் Chini, Sakkar | Saccharum | Sugar |
| சதாபா, சதகுப்பீ Sathapa, Sathakuppi | ஸோயா Soya, | Anetum graveoloyens | Dill seed |
| —— | —— | —— | —— |
| சவுட்டுப்பு Chavuttuppu | காரீநோன Khareenona | —— | —— |
| சவ்யமு Chavyamu | சவ்யம் Chavya | Chavica Roxburghii | Aye Piper chava |
| ஜாஜிகாயா Jajikaya | ஜாய பல் Jaey Phal | Myristica Officinalis | Nut-meg |
| ஜாபத்ரி Japathri | ஜாவித்ரீ Javitkri | Myristica Fragrans | Mace ( Arillus of the Nut ) |
| தெல்ல கலிஜேரு ( Thella galijeru ) | விஷகபர் Vishakaphar | Trianthema Pentandra or decandra | Spreading Hogweed |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 101 | சிஞ்சாக்ஷாரம் | ——— | சிஞ்சாக்ஷாரம் Chincha Ksharam |
| 102 | சிவகரந்தை | 16,125 | ஹபுஷா Hapusha |
| 103 | சிவதை | 58 | த்ரிவ்ருத் Trivruth |
| 104 | சிறுகுறிஞ்சான் | 60 | மேஷ ச்ரிங்கி Mesha sringi |
| 105 | சிறு தேக்கு | 188 | பார்ங்கி Bharngi |
| 106 | சிறு நாகப்பூ | 189 | நாககேஸரம் Naga kesaram |
| 107 | சிற்றரத்தை | 190 | ராஸ்னா Rasna |
| 108 | சிற்றாமணக்கு | 151,240,59 | ஏரண்டம் Eranda |
| 109 | சீந்தில் கொடி | 17,62 | குடூசி Gudoochi |
| 110 | சீந்தில் சர்க்கரை | 192 | குடூசி ஸத்வம் Gudoochi Satwam |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| சிந்த செட்டு க்ஷார chinthaku chettu Kshara | இம்லி க்ஷார் Imli kshar | Tamaridus Indica | Tamarind Ash |
| போட தரமு Bodatharamu | காக்ரோந்தா Kakronda | Sphoeranthus Zeylanicus | ——— |
| தெகட Tegada | நஸோதர் Nasothar | Ipomea Turpethum | Turpeth Root ( Rhubarb ) |
| பொாத பத்ர (புட்ல) Poda pathra ( Putla ) | மேடாசிங்கி Medaaseengi | Gymnema Sylvester | ——— |
| கண்டு பாரங்கி Gantu Bharangi | பாரங்கி Barangi | Clerodendron Serratum | ——— |
| நாககேஸரம் Naga kesaram | நாக கேஸரம் Naga kesaram | Ochrocarpus longifollius | Mosua Ferrea |
| ஸன்ன ராஷ்ட்ரமு Sanna Rashtramu | ராஸ்னு, ரஹ்ஸனி Rasna, Rahsani | Vandae Rox-burghii | Lesser galangal |
| சிட்டாமுதபு செட்டு Chittha-mudapu chettu | அரண்ட Aranda | Ricinus Communis | Caster plant |
| திப்ப-திக Thippa Thiga | கிலோய் Giloy | Tinospora Cordifolia | Heart leaved Moon seed |
| திப்ப-திகஸத்து Thippa Thega Sathu | கிலோய் ஸத்வ Giloy Satwa | Do. | Do. |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 111 | சிரகம் | 191 | ஜீரகம் Jeerakam |
| 112 | சீனக்காரம் | 282 | ஸ்படிகீ Sphatiki |
| 113 | சுக்கு | 193 | சுண்டி Sunthi |
| 114 | சுரை | 234 | அலாபு Alaabu |
| 115 | செங்கதாரி | 63 | ——— |
| 116 | செந்நாயுருவி | 21 | ரக்த அபாமார்க Raktha Apamarga |
| 117 | செம்முருங்கை | 22 | ரக்த சிக்ரு Raktha Sigru |
| 118 | செம்முள்ளி | 31 | ——— |
| 119 | சேராங்கொட்டை | 194 | பல்லாதகம் Bhallathakam |
| 120 | சோகி | 283 | வராடிகா Varatika |
| 121 | தகரக்ஷாரம் | ——— | சக்ரமரதக்ஷாரம் Chakramarda-ksharam |
| 122 | தங்கம் | 260 | ஸ்வர்ண Swarna |
| 123 | தண்ணீர்விட்டான் | 126,144 | சதாவரி Sathavari |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| ஜீலகர்ர Gila karra | ஜீரா Zira | Cuminum Cyminum | Cumin seeds |
| படிக Patike | பட்கரீ Phatkari | ——— | Alum |
| ஸொன்டி Sonti | சோன்ட் Sonth | Zingiber Officinalis | Dried ginger |
| ஸொரதீகே Sorateega | கட்வீ, Kadvi | Lagenaria Vulgaris | Bottle Gourd |
| ——— | ——— | ——— | ——— |
| எர்ர உத்தரேணி Erra Uthareni | லால் ஓங்கா, சிர்சிரா Lalonga, chirchira | Achyranthus Laparia | Red Prickly chaff |
| எர்ர முனகா Erra Munaga | லால் ஸஹஜன் Lal Sahajan | Moringa Ptery gosperma | Red Drum stick-tree |
| ——— | ——— | ——— | ——— |
| ஜீடிகிஞ்சலு Jeedi ginjalu | பிலாவா Bhilawa | Semecarpus anacardium | Marking Nut |
| கவ்வலு Gavvalu | கௌடீ Koudi | ——— | Cowries |
| தகிரிஸ க்ஷாரமு Tagirisa Ksharamu | சகுண்டக்ஷார் Chaknnda kshar | Cassia Tora | ——— |
| பங்காரு Bhangaru | ஸோனா Sona | Aurum | Gold |
| பில்லி பீசரா Pilli peechara | சதாவரி Satavari | Asperagus adscendens ,, gonodoclodos ,, Racemosus | ——— |

| நம்பர் | தமிழ்ப் பெயர் | குணபாடம் நம்பர் | ஸமஸ்கிருதப் பெயர் |
|---|---|---|---|
| 124 | தயிர் | 246 | ததி<br>Dhadhi |
| 125 | தாமரை | 145 | கமலம்<br>Kamalam |
| 126 | தாம்ரம் | 261 | தாம்ரம்<br>Thamram |
| 127 | தாழை | 18 | கேதகீ<br>Kethaki |
| 128 | தாளகம் | 262 | ஹரிதாளம்<br>Harithalam |
| 129 | தாளிசபத்திரி | 196 | தாளீஸபத்ர<br>Thaleesapathra |
| 130 | தான்றிக்காய் | 195 | விபீதகீ<br>Vibeetaki |
| 131 | திப்பிலி | 197 | பிப்பலீ<br>Pippali |
| 132 | துத்தநாகம் | 264 | ஜஸத<br>Jasada |
| 133 | தும்பை | 64 | த்ரோண புஷ்பீ<br>Drona Pushpi |
| 134 | துரிசு | 263 | மயூர துத்தம்<br>Mayura thutham |
| 135 | துளசி | 19 | துளஸீ<br>Thulasi |

| தெலுங்குப் பெயர் | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் | லத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| பெருகு Perugu | தஹீ Dhahee | Curdled Milk | Curd |
| பத்மமு Padmamu | கமல் Kamal | Nelumbium Speciosum | Lotus |
| ராகி Raagi | தாம்பா Thamba | Cuprum | Copper |
| மொகலி Mogali | கேவ்டா Kevda | Pandanus Fascicularis ,, Odoratessimus | Fragrant Screw Pine |
| ஹரிதளமு Haridalamu | ஹரிதாள் Harithal | Yellow Sulphuret of Arsenic | Orpiment |
| தாளீஸபத்ரமு Thaleesa Pathramu | தாளீஸபத்ர Thaleesa-pathra | Flacourtia Cataphracta | Many Spiked Flacourtia |
| தான்ற காயா Thaura kaya | பைரா, பஹேடா Bhairah, Baheda | Terminatia Belerica | Beleric Myrobalans |
| பிப்பள்ளு Pippallu | பீபல Peepal | Piper Longum | Long Papper |
| துத்தநாகமு Tuttanagamu | தஸ்தா Dastha | Zincum | Zinc |
| தும்மீ Thummi | கோமா, தண்ஹலி Goma, Danhali | Lewcus Aspera ,, Ceppalotus | |
| மைலுதுத்தமு Mailututhamu | மோர் துது More Thuthu | Cuprae Sulphas | Copper Sulphate |
| துளஸி Thulasi | துளஸி Thulasi | Ocimum Sanctum, Ocimum album | Holy Basil |

| நம்பர் No. | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Names |
|---|---|---|---|
| 136 | தூதுவளை | 127 | அலர்கம் Alarka |
| 137 | தேக்கு | 20 | சாக, சால Saka, Sala |
| 138 | தேங்காய் | 231, 139 | நாரிகேள Narikela |
| 139 | தேவதாரு | 198 | தேவதாரு Devadaru |
| 140 | தேன் | 291 | மது Madhu |
| 141 | நல் முருங்கை | 66 | மதுசிக்ரு Madhu Sigru |
| 142 | நவசாரம் | 284 | நரஸார Narasara |
| 143 | நன்னாரி | 65 | ஸாரிபா Sariba |
| 144 | நாகதந்தி | 68 | நாகதந்தி Nagadanthi |
| 145 | நாயுருவி | 67 | அபாமார்க Apamarga |
| 146 | நாய் கடுகு | 200 | திலபர்ணி, வனஸர்ஷப Thilaparni, Vanasarshaba |
| 147 | நாய் வேளை | 23, 69 | ,, |
| 148 | நாரத்தை | 227 | நாரங்கம் Narangam |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தீன் Latin | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| முள்ளமுஸ்தே Mullamusthe | —— | Solanum Trilobatum | —— |
| தேகூ Theekoo | ஸாக்வான் Saghvan | Tectona Grandis | Teak |
| டெங்காய Tenkaya | நாரியல் Nariyal | Cocos Nucifera | Coconut palm |
| தேவதாரு Devadaru | தேவதாரு Devadaru | Cedrus Deodara | Himalayan Cedar |
| தேனெ Thenea | சஹத் Sahadh | Mel | Honey |
| முனகா Munaga | ஸஹஜாநு Sahjana | Moringa Pterygesperma | Drum Stick |
| நவாஸாரமு Navasaramu | நவஸாதர் Navasadar | Ammonium Muriaus | Ammonium Chloride |
| ஸுகந்தி மூல Sugandhi Moola | ஸாரிவா, கோரிஸர் Sariva, Gorisar | Hemidesmus Indicus | Indian Sarasaparilla |
| எலுக ஜீடி செட்டு Eluka Geedi Chettu | நாகாலி Nagali | —— | —— |
| உத்தரேணீ Uththareni | சிர்சிரா Chirchira | Achyranthus Aspera | Prickly chaff |
| குக்க ஆவாலு Kukka Avalu | ஹுல் ஹுல் Hul Hul | Cleome Viscosa | Dog Mustard |
| ,, | ,, | ,, | Sticky cleome |
| நாரங்கமு Narangamu | நாரங்கி Naranghi | Citrus Aurantium | Orange |

| நம்பர் No. | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Names |
|---|---|---|---|
| 149 | நாவல் | 101 | ஜம்பூ<br>Jambu |
| 150 | நிமிளை | 272 | ஸ்வர்ண மாக்ஷிகம்<br>Swarna Makshikam |
| 151 | நிலப்பனை | 147 | முஸலீ<br>Musali |
| 152 | நிலவாகை | 24,70 | ஆஹூலீ<br>Ahuli |
| 153 | நிலவாமணக்கு | 32 | ——— |
| 154 | நிலவேம்பு | 25 | பூனிம்ப,<br>கிராததிக்தம்<br>Boonimba,<br>Kiratha Thiktha |
| 155 | நீர்மேல் நெருப்பு | 26 | அக்னிகர்பா<br>Agni Garba |
| 156 | நெய் | 249 | க்ருத<br>Gritha |
| 157 | நெரிஞ்சில் | 235,27,71 | கோக்ஷூர<br>Gokshura |
| 158 | நெல்லிக்காய் | 199 | ஆமலகி<br>Amalki |
| 159 | நெல்லிக்காய் கெந்தகம் | 265 | கந்தகம்<br>Gandakam |
| 160 | நெல்பொறி | 238 | லாஜா<br>Laja |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தீன் Latin | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| நேரேடு Nerædu | ஜாமன் Jaman | Eugenia Jambolana | Jambul |
| ஸ்வர்ணமாக்ஷிக Swarnamakhika | ஸோனுமாங்கி Sonamankhi | Ferri Sulphuretum | Iron Pyrites |
| நேலதாடு Nelathadu | ஸ்யாஹ்முஸலி Syahi Musali | Curculigo Orchioides | Blake Musale |
| நெல்லதங்கேடு Nella Tangedu | ஸோனுமகி Sonamakhi | Cassia Lanceolata | Country Senna |
| துண்டிகமு Dundigamu | லால்சேரண்ட Lal Cheranda | ——— | ——— |
| நிலவேமு Nila Vemmu | கிரியத் Kiryath | Andro graphis Paniculata, Swertia chirata, Erythroea Roxburghi | Chirata |
| அக்னிவேந்தர் பாகு Agni Vendra Paku | தட்மரி Dadmari | Ammonia Debilis | ——— |
| நெய் Nai | கி Ghee | Butyrum Depuratum | Ghee |
| பல்லேரு Palleru | கோக்ரு Gokru | Tribulus Terrestri | Small Caltrops |
| உசிரிகா Usirika | அம்லா Amla | Phyllantus Emblica | Emblic Myrobalam, Indian Gooseberry |
| கந்தகமு Gandakamu | கந்தக் Gandak | Sulphur Brimstone | Sulphur |
| பேலலு Phelalu | ——— | ——— | ——— |

| நம்பர் No. | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Names |
|---|---|---|---|
| 161 | நேர்வாளம் | 201 | தந்தி, ஜைபால Danthe, Jaipala |
| 162 | பசளை | 72 | உபோதகி Upo Daki |
| 163 | பசும்பால் | 243 | கோக்ஷீரம் Goksheeram |
| 164 | படிக்காரம் | ——— | ஸ்படிகம் Spatikam |
| 165 | பயறு | 236 | முத்க Mudga |
| 166 | பருத்தி | 28 | கார்ப்பாஸ Karpasa |
| 167 | பனை | 237 | தாள Thala |
| 168 | பனை வெல்லம் | 293 | தாளகுடம் Thala Gudum |
| 169 | பாதரசம் | 266 | ரஸம், பாரதம் Rasam, Paradam |
| 170 | பாதிரிவேர் | 73 | பாடலா Patala |
| 171 | பால் துத்தம் | 267 | கர்ப்பர Karpara |
| 172 | பாலை | 75 | ——— |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தின் Latin | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| நேபாளமு Nepalamu | ஜமால்கோட்டா Jamalkottah | Croton Tiglium | Croton Seeds |
| ஆபு பச்சலி, அல்ல பத்ஸலா Aboobacchali, Alla Bathsala | பாயி கா சாக் Payika Sak | Basella Rubra ,, Lucida | Indian Spinach, Malabar Night Shade |
| பாலு Paalu | தூத் Dhoodh | Lactus | Milk |
| படிகா Patike | பட்கரி Phatkari | Hydrargyrum Sulphuratum | Alum |
| பச்ச பெஸலூ Paccha Pesalu | மூங்க் Moongh | Phaseolus Mungo | Green Gram |
| ப்ரத்தி Pratti | கபாஸ் Kapas | Gossypium Indicum, ,, Herbaecium | Indian Cotton |
| தாடீ Thati | தாட் Thadh | Borassus Flabellformis | Palmyra, Palm |
| தாடீ பெல்லமு Thati Bellamu | தாட்குட் Thadh Gudh | Treacle Molasses | Palmyra Jaggery |
| பாதரஸம் Padarasam | பாரா Para | Hydrargyrum | Mercury |
| கலிகொட்டு Kaligottu | பாடலா Padala | Stereospermum Suaveolans | — |
| பால துத்தமு Pala Thuthamu | கபரியா Kapariya | Zinc Sulphide | Black Jack |
| — | — | Periploca Esculenta | — |

| நம்பர் No. | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Names |
|---|---|---|---|
| 173 | பாவட்டை | 74 | பப்பண Pappana |
| 174 | பிரண்டை | 29,122 | வஜ்ரவல்லி, அஸ்தி ஸம்ஹாரி Vajravalli, Asthi Samhari |
| 175 | பிரமிய வழுக்கை | 33 | மண்டூக பர்ணி Mandookaparni |
| 176 | புங்கு | 78,103 | கரஞ்ஜ Karanja |
| 177 | புரசு | 102 | பலாச Palasa |
| 178 | புளி | 104 | திந்த்ரிணி Thinthrini |
| 179 | புளி நரளை | 30 | அம்லபர்ணீ Amlaparni |
| 180 | புன்னை | 77 | புன்னாக Punnaga |
| 181 | பெருங்காயம் | 202 | ஹிங்கு Hingu |
| 182 | பெருங்குமிழ் | 79,154 | காச்மரி Kasmari |
| 183 | பெருஞ்சீரகம் | 203 | ஸ்தூல ஜீரகம் Sthoola Jeerakam |
| 184 | பெரு மருந்து | 80 | ஈச்வர மூலி Iswara Mooli |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தீன் Latin | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| பப்பணமு Pappana | கங்கர் Kankar | Pavetta Indica | ——— |
| நல்லேரு Nalleru | ஹட்ஜோட், ஹர்சங்கர் Hatjood, Harshankar | Vitis Quadrangularis | ——— |
| ஸம்பரேணி Sambareni | பாரம்பீ Barambi | Gratiola Monieri | Gratiola Thyme |
| கானுக Kanuga | கரஞ்ச Karancha | Pongamia Glabra | Smooth Leaved Pongamia |
| மோதுக Moduga | தாரா, டாக் Dhara, Taak | Butea Frondosa | Bastard Teak |
| சிந்தமானு Chinthamanu | இம்லீ Imli | Tamarindus Indica | Tamarind |
| ——— | அமல் வேல் Amal vel | Vitis Lanota ,, Trifolia | Wooly Heart Vina |
| புன்னகமு Punagamu | ஸுல்தான் சம்பா, Sulthan champa | Collophyllum Inophyllum | Alexandrian Laural |
| இங்குவ Inguva | ஹிங்க் Hing | Ferula Narthex | Asafoetida |
| கும்முடு Gummudu | கம்பாரி, குமேர் Kambari, Kumer | Gmelina Aborea | ——— |
| ஸோபு Sopu | ——— | Pimpinella Anisum | Anise Seeds |
| தூலகோவெல, ஈச்வர வேரு Doola Govila, Iswara Veru | ஈச்வர மூல் Iswar mool | Aristolochia Indica | Indian Birthwort |

40

| நம்பர் No | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Name |
|---|---|---|---|
| 185 | பேயம் வாழை | 228 | கதலி, ரம்பா Kadali, Ramba |
| 186 | பேய் கொமட்டி | 204,233,128 | இந்திர வாருணி Indra Varuni |
| 187 | பொட்டிலுப்பு | ——— | வெடியுப்பைப் பார்க்க |
| 188 | பொன்னாங்காணி | 129 | மத்ஸ்யாக்ஷி Mathsyakshi |
| 189 | மஞ்சள் | 205 | ஹரித்ரா, நிசா Haridra, Nisa |
| 190 | மர மஞ்சள் | 206 | தாருஹரித்ரா, தார்வி Daru Haridra, Darvi |
| 191 | மருதார் சிங்கு | 268 | ம்ருதார் சிரிங்க Mrudar Sring |
| 192 | மருள் | 81,148 | மூர்வா Moorva |
| 193 | மல்லி | 207 | தான்யக Dhanyaka |
| 194 | மனோசிலை | 273 | மனச்சிலா Manasila |
| 195 | மாதுளை | 84,123 | தாடிம Dadima |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தீன் Latin | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| அரடி Arati | கேலா Kela | Musa Sapientum | Plantain Tree |
| வெற்றி புத்ஸ சிட்டி பாபரா Verri Putsa, Chitti Papara | இந்திராயன் Indrayan | Citrullus Colocynthis | Colocynth |
| —— | —— | —— | —— |
| பொன்ன கண்டி கூரா Ponnagandi Kura | மசேசி Machechi | Lippia Nodiflora, Alternanthera Sessiles | Purple Lippa |
| பசுபு Pasupu | ஹல்தி Haldi | Curcuma Longa | Turmeric |
| மானி பசுபு Mani Pasupu | தாரு ஹல்தீ Daru Haldi | Berberis Aristata ,, Asiatica | Tree Turmeric |
| முதார சிங்கு Mudarasingu | மர்தோசிங் Mardosing | Plumbi Oxidum | Lead Oxide |
| சாக Chaga | சூரண் ஹார், முரஹரி Churnhar, Murhari | Sansevieria Roxburghiana | —— |
| தனியாலு, கொதிமிரி Daniyalu, Kothimiri | தனியா Dhaniya | Coriandrum Sativam | Coriander |
| மானுசிலா Manusila | மன்ஸில் Mansil | Arsenicum Sulphidum | Realgar |
| தானிம்ம Dhanimma | அனூர் Anar | Punica Granatum | Pomegranate |

| நம்பர் No. | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Names |
|---|---|---|---|
| 196 | மாம் பூ | 208 | ஆம்ர புஷ்பம் Amra Pushpam |
| 197 | மாவிலிங்கு | 82,105 | வரண, குமாரகம் Varana, Kumaraka |
| 198 | மிளகரணை | 83 | காஞ்சனர Kanchanara |
| 199 | மிளகு | 209 | மரிச Maricha |
| 200 | முடக்கொற்ருன் | 36,85 | கர்ணஸ்போடா Karnaspota |
| 201 | முசுமுசுக்கை | 35 | ஐலேயம் Ileya |
| 202 | முட்காவேளை | 34 | சரபுங்கா Sarapunka |
| 203 | முத்தக்காசு | 210 | முஸ்தா Mustha |
| 204 | முதியார் கூந்தல் | 37 | ப்ரஸாரிணீ Prasarini |
| 205 | முருங்கை | 106,130 | சிக்ரு, சோபாஞ்சன Sigru, Sobanjana |
| 206 | முலைப்பால் | 244 | ஸ்தன்யம் Sthanyam |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தீன் Latin & chemical | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| மாமிடி பூலு Mamidi Pulu | ஆம்காபர் Amkaper | Magaifern Indica | Mango-flower |
| உலிமிரி Ulimiri | பர்ணு Barna | Cratæva Roxburghii, Cratæva Religiosa | Three leaved Caper |
| காஞ்சனாரமு Kanchanaramu | ஜாங்லி-காலி -மிர்ச் Jangli-Kali Mirch | Toddalia Aculeata | ——— |
| மிரியாலு Miriyalu | காலி மிர்ச் Kali Mirch | Piper Nigrum | Pepper |
| புட்ட புடுஸர Budda Budusara | கன்போடா Khanphata | ——— | ——— |
| முசுமுசுக்காயா Musumusukaya | ——— | Bryonia Scabra | ——— |
| வெம்பலி Vempali | ஸர்போகா Sarpoka | Calega Purpurea | Purple Tephrosiaea |
| துங்க முஸ்தே Thunga Mustha | மோதா Motha | Cyprus Rotandus | Nut Grass |
| கோரு செட்டு Goru Chettu | ப்ரஸரன் Prasaran | Pædaria Fætida, Convolvulus Tridentatus | ——— |
| முனகா Munaga | ஸஹிஜனு Sahijana | Moringa Pterygosperma | Horse Radish, Drum Stick |
| ஸ்தன்யமு Sthanyamu | ஸ்தன்ய Sthanya | Mummury Lactus | Breast Milk |

| நம்பர் No. | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Name |
|---|---|---|---|
| 207 | முள்ளங்கி | 150 | மூலக Moolaka |
| 208 | முள் முறுக்கு | 86,107 | கிம்சுக, பாரிபத்ரம் Kimsuka, Paribadram |
| 209 | முல்லை | 38 | வார்ஷிகீ Varshiki |
| 210 | மூக்கரட்டை | 87 | புனர்னவா Punurnava |
| 211 | மோர் | 247 | தக்ரம் Thakra |
| 212 | யவசாரம் | 285 | யவக்ஷாரம் Yavaksharam |
| 213 | யானைத்திப்பிலி | 211 | கஜ பிப்பலீ Gaja Pippali |
| 214 | லவங்கப்பட்டை | 213 | லவங்க த்வக் Lavanga Twak |
| 215 | லவங்கப்பத்திரி | 212 | லவங்க பத்ரம் Lavanga Pathram |
| 216 | லிங்கம் | 269 | ஹிங்குள Hingula |
| 217 | செம்பு | 214 | வசா Vacha |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தீன் Latin | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| முல்லங்கி Mullangi | மூலி. Mooli | Raphanus Sativus | Radish |
| பாடிதபு செட்டு Badidapu Chettu | பர்ஹத், பாங்கர் Furrud, Pangar | Erythrina Indica | Indian Coral Tree |
| மல்லெ Mallae | வேலா, மோதியா Velaa, Mothiya | Jasaminum Sambac | The Arabian Jasmine |
| அடிக மாமிடி Atika Mamidi | ஸான்டீ, கதபர்ண Saantti, Gadha Parna | Boerhaavia Diffusa | Spreading Hogweed |
| மஜ்ஜிகா Majjika | சாஞ்ச் Chanch | Whey | Butter-Milk |
| யவக்ஷாரம் Yavaksharam | ஜவாகார் Javakhar | Potassium Carbonate | Carbonate of Potash |
| கஜ பிப்பலீ Gaja Pippali | கஜ் பீபல் Gaj Peepal | Scindapsus Officinalis | Piper Lanceolate |
| லவங்க பட்ட Lavanga Patta | தால்சீனி Dalcheeni | Cinnamonum Zeylanicum | Bark of Cinnamon |
| லவங்க பத்திரி Lavangapathri | தேஜ்பத் Tejpath | Cinnamonum Thamala | Cinnamon leaves |
| இங்கிலிகமு Iangilikamu | ஹிங்குலு, ஸிங்கரப் Hingulu, Singuraf | Sulphatum Hydrargyrum | Sulphate of Mercury, Cinnabar |
| வஸ Vasa | வச் Vach | Acorus Calamus | Sweet-flag |

| நம்பர் No. | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Name |
|---|---|---|---|
| 218 | வட்டத்திருப்பி | 215,88, | பாடா Pata |
| 219 | வளையலுப்பு | 286 | சௌவர்சலம் Sowarchala |
| 220 | வாகை | 89 | சிரிஷ Sireesha |
| 221 | வாயு விடங்கம் | 216 | விடங்க Vidanga |
| 222 | வாலுளுவை | 217 | ஜ்யோதிஷ்மதி Jyothishmathi |
| 223 | வால் மிளகு | 218 | கங்கோலம் லங்கேசம் Kankolam Lankesam |
| 224 | வில்வம் | 229,91 | பில்வம் Bilwam |
| 225 | விழுதி | 90 | ——— |
| 226 | வெங்காரம் | 287 | டங்கணம் Tankanam |
| 227 | வெடியுப்பு | ——— | ஸூர்யக்ஷாரம் Soorya Kshara |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தீன் Latin | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| விஸபொத்தி Visa Boddhi | பாடா, பாட் Pata, Padh | Stephania Nernandi-tolia | —— |
| ஸூருத உப்பு, நல்ல அட்டுப்பு Sooratha Uppu, Nalla Attuppu | சௌஹார் கோடா, ஸோஞ்சர் நோனு Chowhar Kota, Sonchar Nonna | Sodium chloride, Soda Sulph & Caustic Soda | —— |
| திரிஸெனமு Dirisenamu | ஸிரஸ், Siras | Albizzia Lebbeck | Sirissa Tree |
| வாயு விளங்கமு Vayu Vilangamu | வாயு விடங் Vayu Vidang | Embelia Ribes or Robusta | —— |
| மானேருதீக Maneru Theega | மால் கங்குனி Malkanguni | Celastrus Paniculatus | —— |
| தோக மிரியாலு Thoka Miriyalu | கபாப் சீனி Kabab cheeni | Cubebs Officinalis | Cubeb pepper |
| பில்வமு Bilwamu | வேல் Vael | Aegle Marmelos | Bael tree |
| —— | —— | Cleome fruticosa | —— |
| வெலிகாரமு Veligaramu | ஸுஹாகா Suhaga | Sodas Biboras | Borax, Soda Bi carb. |
| பொட்லுப் (Petluppu) | ஸோரா, ஸூர்யாகார் Sora, Surya Khar | Potassium Nitras | Saltpetre, Nitre |

| நம்பர் No. | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Name |
|---|---|---|---|
| 228 | வெட்பாலை | 220,108 | இந்திரயவ Indrayava |
| 229 | வெண்ணெய் | 248 | நவநீத Navaneetha |
| 230 | வெண்ணொச்சில் | 39 | ஸிந்துவார Sinduvara |
| 231 | வெந்தயம் | 221 | மேதிகா Methika |
| 232 | வெல்லம் | 292 | குட Guda |
| 233 | வெள்ளருகு | 92 | கண்டோலீ Gandoli |
| 234 | வெள்ளாட்டுப்பால் | 245 | அஜா க்ஷீரம் Ajaksheeram |
| 235 | வெள்ளி | 270 | ரௌப்யம், ரஜத Rowpyam, Rajatham |
| 236 | வெள்ளீயம் | —— | வங்க, ஸீஸக Vangam, Seesaka |
| 237 | வெள்ளி லோத்ரம் | 109 | லோத்ரம் Lodhram |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தீன் Latin | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| கொடிசே Kodisae | மீடா இந்திர ஜவ் Meeta Indra Jav | Wrightia Tinctoria, Holarrlena antidysentorica | Sweet Indrajao |
| வென்ன Vennah | மக்கன் Makkhan | Butyrum | Butter |
| தெல்ல வாவிலி Thella Vavili | ஸெந்து ஆரி Sendu Aari | Vitex Negundo | White Five leaved chaste tree |
| மெந்துலு Menthulu | மேதி Methi | Trigonella Foenum or groecum | Fenugreek |
| பெல்லமு Bellamu | குட Guda | Treacle Molasses | Jaggery |
| —— | —— | Adenema Hissopifolia | —— |
| மேகபாலு Mekapalu | பக்ரீ தூத் Bakri Dhudh | —— | Goat's Milk |
| வெண்டி Vendii | சாந்தி Chandii | Argentum | Silver |
| சீசமு Seesamu | ஸீஸா Seesa | Plumbum | Lead |
| லொத்துக செட்டு Lodduka Chettu | லோத் Lodh | Symplocus Racemosa | Lodh tree, Lotur Bark |

| நம்பர் No. | தமிழ்ப் பெயர் Tamil Name | குணபாடம் நம்பர் G. Padam No. | ஸமஸ்கிருதப் பெயர் Sanskrit Name |
|---|---|---|---|
| 238 | வெள்ளெருக்கு | 110 | ச்வேதார்க Swetharka |
| 239 | வெள்ளைக்கடுகு | 219 | ச்வேத ஸர்ஷப Swetha Sarshapa |
| 240 | வெள்ளைக்காக்கணம் | 93,134 | சங்கபுஷ்பீ, அபராஜிதா Sankhapushpi, Aparajitha |
| 241 | வெள்ளைச் சாறணை | 131,149 | ச்வேத புனர்னவ Swetha Punurnawa |
| 242 | வெள்ளைப்பூண்டு | 222,132 | ரஸோனம் Rasonam |
| 243 | வெள்ளைப் பாஷாணம் | 274 | சங்க பாஷாணம் Sankha Pashana |
| 244 | வெற்றிலை | 40,133 | நாக வல்லீ Nagavallii |
| 245 | வேம்பு | 111,156 | நிம்பம் Nimba |
| 246 | வேலிப்பருத்தி | 41,135 | இந்தீவர, பலாந்தகா Indiivara, Phalanthaka |

| தெலுங்குப் பெயர் Telugu Name | ஹிந்திப் பெயர் அல்லது உருதுப் பெயர் Hindi or Urudu | லத்தின் Latin | ஆங்கிலம் English |
|---|---|---|---|
| தெல்ல ஜில்லேடு Thella Jilledu | ஸபேத் ஆக் Saphed Aak | Calotropis Perocera | White Mudar |
| தெல்ல ஆவாலு Thella Aavalu | ஸபேத் ராய் Saphed Rai | Sinapis Alba Semina | White Mustard |
| பத்மபுதீக Padmaputhega | சங்க புஷ்பீ Sankha Pushpii | Clitoria Ternatia, Evolvulus alsinoidies | Butterfly Pea, Mazerion |
| தெல்ல கலிஜேரு Thella Ghalijeru | விஷ்கப்ரா Vishkhapra | Trianthema Pentandra | —— |
| வெள்ளுள்ளி, தெல்லகட்டா Vellulli, Thella Gadda | லஹ்ஸன் Lahsan | Allium Sativum | Garlic |
| பாஷாணமு Pashanamu | ஸோமல் Somal | Oxidum Arsenicum | Arsenic Oxide |
| தமலபாகு Thamalapaku | நாகர்வேல், பான் Nagarvel, Pan | Piper Betel | Betel leaf |
| வேப Vepa | நீம் Neem | Melia Azadirachta | Margosa tree |
| ஜுட்டு பாகு Juttu Paku துஷ்டுபுசெட்டு Dushtupuchettu | உத்ரண் Uthran | Daemia Extensa | Hairy flowered cynanchum |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | அடிக் குறிப்பு 1 | இந்த அடிக்குறிப்பில் அடியிற் கண்டதையும் சேர்த்துக் கொள்ளவும்:— "ஸரஸ்வதி மஹால் 90 நெ. சுவடி 262-ம் ஏட்டில் 'பஞ்சாக்னிச் சூரணம்' என்ற மருந்து முறையில் 1. மருளங்கிழங்கு 2. புளிநரளைக்கிழங்கு 3. கொடிவேலி வேர் 4. கருணைக்கிழங்கு 5. பிரண்டை என்ற 5 சரக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகை யால் 'பஞ்சாக்கினி' என்ற சரக்கு வரும் இடங் களில் (உதாரணமாக பக்கம் 7, 11 ல்), இந்த 5 சரக்குகளையும் பொருளாகக் கொள்ளலாம். | |
| 17 | 3 | புடன் மிளகு | மிளகு |
| 26 | 3 | வாயை மரக்கலாலூ | வாயை மாக்கல்லாலூ |
| 31 | 3 | பிலிகை | பீலிகை |
| 44 | 17 | மாயு வலிகுன்ம | வாயு வலிகுன்ம |
| 45 | 5 | நோயிராறு | நோயீராறு |
| 63 | 21 | மூக்கழஞ்சிட்டரை | மூக்கழஞ்சிட்டா |
| 75 | 17 | குடி நீரிர் | குடி நீரிற் |
| 75 | 22 | குடியோகும் விடதங் | குடிபோகுமவுடதங் |
| 87 | 17 | த்ததாமிர | த்தாமிர |
| 89 | 17 | 'வெண்கலப் யாத்திரத்திலிட்டு' என்பதற்குப் பதிலாக 'யவச்சாரம் 1 பலமும் சீனக்காரம் 1 கழஞ்சும் வெண்கலப்பொடி 4 பலமும் கூடச்சேர்த்துக் கல்லுரலிலிட்டு இடித்து உபயோகிக் கவும்' என்று கொள்ளவும். | |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | அடிக் குறிப்பு 1 | இந்த அடிக்குறிப்பில் அடியிற் கண்டதையும் சேர்த்துக் கொள்ளவும்:— "ஸரஸ்வதி மஹால் 90 நெ. சுவடி 262-ம் ஏட்டில் 'பஞ்சாக்னிச் சூரணம்' என்ற மருந்து முறையில் 1. மருளங்கிழங்கு 2. புளிநரளைக்கிழங்கு 3. கொடிவேலி வேர் 4. கருணைக்கிழங்கு 5. பிரண்டை என்ற 5 சரக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் 'பஞ்சாக்கினி' என்ற சரக்கு வரும் இடங்களில் (உதாரணமாக பக்கம் 7, 11 ல்), இந்த 5 சரக்குகளையும் பொருளாகக் கொள்ளலாம். | |
| 17 | 3 | புடன் மிளகு | மிளகு |
| 26 | 3 | வாயை மரக்கலாலு | வாயை மாக்கல்லாலு |
| 31 | 3 | பிலிகை | பீலிகை |
| 44 | 17 | மாயு வலிகுன்ம | வாயு வலிகுன்ம |
| 45 | 5 | நோயிராறு | நோயீராறு |
| 63 | 21 | மூக்கழஞ்சிட்டரை | மூக்கழஞ்சிட்டா |
| 75 | 17 | குடி நீரிர் | குடி நீரிற் |
| 75 | 22 | குடியோகும் விடதங் | குடிபோகுமவுடதங் |
| 87 | 17 | த்ததாயிர | த்தாமிர |
| 89 | 17 | 'வெண்கலப் பாத்திரத்திலிட்டு' என்பதற்குப் பதிலாக 'யவச்சாரம் 1 பலமும் சீனக்காரம் 1 கழஞ்சும் வெண்கலப்பொடி 4 பலமும் கூடச்சேர்த்துக் கல்லுரலிலிட்டு இடித்து உபயோகிக்கவும்' என்று கொள்ளவும். | |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 91 | 13 | பற்பஞ்செய்து பற்பத்தோடு | பற்பஞ்செய்து வகைக்கு ஒரு பலம் பற்பத்தோடு |
| | 18 | இவை யெல்லாம் சேர்த்து 1 பலம் | இவை யெல்லாம் சேர்த்து ½ பலம். |
| 94 | 4 | குளிகை குன்று மணி | குளிகை விராகனிடை |
| 94 | 10 | சிற்றாமணக்கு | சிற்றாமணக்கு, பிஞ்சு, பூ இவற்றையும் உபயோகிக்கலாம். |
| 94 | 24 | கிட்டைதை | க்கிட்டிதை |
| 100 | 18 | சக்தி குன்மங்கள் | சத்தி குன்மங்கள் |
| 107 | 8வது வரிக்குப்பின் 'வசம்பு, பெருங்காயம்' என்பதைச் சேர்த்துக் கொள்ளவும். | | |
| 110 | 21 | லவங்க முரைக்கும் | முரைக்கும் பத்திரி |
| 111 | 17 | சுக்கு 1 பலம் | சுக்கு 2 பலம் |
| | 18 | தாளீசபத்திரி 2 பலம் | தாளீசபத்திரி ¾ பலம் |
| | 19 | கிராம்பு ¾ பலம் | கிராம்பு 1 விராகனிடை |
| | 22 | | லவங்கப்பட்டை 2 விராகனிடை. |
| 112 | 1 | சக்தி குன்மம் | சத்தி குன்மம் |
| | 8 | கூவின் மூல | கூவின மூல |
| | 12 | தூவி திற செவ் | தூவிதிற் செவ் |
| | 27 | கராணி | கிராணி |
| 114 | 16 | முருத்திரப் புணிச் | முருத்திரப் பிணிச் |
| 115 | 14 | துட்டெடை 3 வேளையும் | துட்டெடை வீதம் 3 வேளையும் |
| 120 | 29 | | ஓமம் |
| 123 | 15 | இலக்தை வேர் | இலக்தைப் பட்டை |
| | 27 | 1 கழஞ்சு | 1 பலம் |
| 124 | 1 | சூரணித்து என்ற வார்த்தைக்குப் பிறகு அடியிற் கண்டதைச் சேர்த்துக்கொள்ளவும்:— "மேலே சொன்ன கஷாயத்தோடு கலந்து நீர் சுண்டும் வரையிற் காய்ச்சிச சூரணத்தை எடுத்து" | | |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 125 | 26 | கறுப்பு எள்ளுவேர் | வெள் உகாய் வேர் |
| 128 | 10 | ஒரு பாளே | ஒரு முடா |
| | 31 | யவசாரம் | உப்பு |
| 131 | 25 | சத்துவையிற்கிஞல் | சத்துவையிறகிஞல் |
| 134 | 19, 20 | உப்பு நீரையும் | உப்பை நீரிற் கரைத்துக் |
| 140 | 3 | 2 பங்கு ( 10 கழஞ்சு ) | 2 பங்கு ( 20 கழஞ்சு ) |
| | 5 | சேர்ந்து 2 பங்கு (10கழஞ்சு) | சேர்ந்து 2 பங்கு (20 கழஞ்சு) |
| | 8 | கும் (15 கழஞ்சு) | கும் (30 கழஞ்சு) |
| 145 | 1 | இதற்குச் சமன் | இதனுடன் ஒரு |
| 148 | 30 | 'இவைகளே' என்பதற்குப்பின் 'இடிக்கவேண்டியவற்றை இடித்து' என்று சேர்த்துக் கொள்ளவும். | |
| 154 | 25 | 'மோராக்கியதில்' என்பதற்குப்பின் 'மோராக்கியபின் அதைக்கடைந்து நெய்யைத் தனியே எடுத்துப்பின் அந்த மோரை 4 படி எடுத்து' என்று சேர்த்துக்கொள்ளவும் | |
| 160 | 1 | கோரட்டாசூழி | கோடாசூழி |
| 188 | 15 | மணப்பாடு | மணப்பாகு |
| 209 | 17 | வக்கை வேர் | வாகைவேர் |
| 223 | 2 | கோவை | கோழை |
| XVII | 6 | சுண்ணம் | அண்ணம். |